சித்த மருத்துவச் சுடர்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 142

சரபேந்திரர் சித்தமருத்துவச்சுடர்

(தமிழ்நாடு அரசின் முதல்பரிசு பெற்ற நூல்)

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் :
சித்தமருத்துவக் கலைஞர்
டாக்டர் மு. சௌரிராசன்,
சித்தமருத்துவ ஆராய்ச்சியாளர்
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

2007] [விலை : ரூ. 250 - 00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	: சரபேந்திரர் சித்தமருத்துவச்சுடர்
பதிப்பாசிரியர்	: டாக்டர் மு. சௌரிராசன்
வெளியிடுபவர்	: இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	: 142
மொழி	: தமிழ்
பதிப்பு	: ஐந்தாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	: பிப்ரவரி, 2007
தாள்	: TNPL 18.6 கி. கி
நூல் அளவு	: 21 x 14 செ. மீ.
பக்கங்கள்	: 796
படிகள்	: 1000
எழுத்து	: 12 புள்ளி
அச்சிட்டோர்	: ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	: லேமினேசன் அட்டை
பொருள்	: சித்தமருத்துவம்.
விலை	: ரூ. **250 - 00**

வெளியீட்டாளர் முகவுரை

பாரதநாடு பழம்பெரும்நாடு. உலகிற்கு நம்நாடு தந்த உயர் கலைகளில் சித்த மருத்துவக்கலை சிறந்தகலை (தமிழ் மருத்துவக்கலை) யாகும். "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பெருஉள்ளங் கொண்டு வாழ்ந்த சித்தர் பெருமக்களால் காணப்பட்டது சித்தமருத்துவம்.

சித்தர் பெருமக்களில் ஒருவரென்று எண்ணத்தக்க வள்ளுவப் பெருந்தகையாரும் தாம் படைத்த உலகப் பொதுமறையில் மருந்து என்ற ஓர் அதிகாரத்தைப்படைத்து

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் "

என்று கூறிச் சித்த மருத்துவத்தின் அடிப்படைக்கொள்கையை விளக்கி இருக்கின்றார். இதன் மூலம் தமிழ் மருத்துவக்கலை எத்துணைச் சிறப்பு வாய்ந்தது என்பதை நன்கு உணரலாம்.

இரண்டாம் சரபோஜி மன்னர், கண்ணெனப் பாதுகாத்த சரசுவதி மகாலில் பலப்பல மருத்துவ வல்லுநர்கள் இருந்து ஆராய்ந்து கண்ட உண்மை பலவற்றை மிகச்சிறந்த முறையில் திறம்பட எழுதி வைத்துள்ளார்கள்.

சரபேந்திரர் சித்தமருத்துவச் சுடர் எனும் இந்நூலில் இதன் பதிப்பாசிரியரான டாக்டர். மு.சௌரிராசன் அவர்கள் அனைவருக்கும் பயன் தரும் வகையிலும் புரிந்துகொள்ளும் முறையிலும் இதுபோன்ற நூல்களில் வழக்கமாக உள்ள மறைமுகச் சொற்கள் (பரிபாஷைகள்) ஆகியவற்றை நீக்கியும், நோய்-நோய் நாடல், நாடி-நாடி பார்க்கும் வகை, நாடியின் குணங்கள்-நோயின் காரணங்கள்-அதற்குரிய மருந்துகள், மருந்துண்ணும் காலங்களில் மருந்துக்குரிய காப்பு முறைகள் (பத்தியங்கள்), ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உணவு வகைகள் ஆகியவற்றை மிகத்தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

பொதுக்குறிகுணங்களும், நீர் நிறவேற்றுமைகள் நீர்க் குறிப்புச் சக்கரத்துடன் விளக்கப்பட்டிருப்பதுடன்- நஞ்சு முறிவு எனும் தலைப்பில் தாது, தாவர, சீவ வகுப்புகளினால் ஏற்படக்கூடிய குறிகுணங்களும்- அவற்றிற்கான தடுப்பு மருந்துகளும் கருத்துக்குவியல்களாக யாவர்க்கும் பயன்தரத் தக்க வகையில் இந்நூல் தொகுக்கப் பட்டிருக்கிறது.

சித்த மருத்துவக் கலைஞரான டாக்டர். மு. சௌரிராசன் அவர்கள் தனது முதிர்ந்த அறிவு, தேர்ந்த அனுபவம், திறமை இவைகளால் இந்நூலை முதற்பதிப்பில் இல்லாதனவும், புதியனவுமான பல நோய்கள், அதற்குரிய மருத்துவம் மருந்துகள் யாவற்றையும் ஒருங்கு சேர்த்து மிகச்சிறப்பு வாய்ந்ததாக இந்நூலைப் பதிப்பித்துள்ளார்கள்.

இவ்வைந்தாம் பதிப்பினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலைச் சிறப்புறக் குறுகிய காலத்தில் அச்சிட்ட கணினிப் பிரிவு ஊழியர்களுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) வகிக்கும் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

இச்சிறந்த நூல் சித்த மருத்துவக் கலையைப் பயில ஆர்வமுள்ள மாணவர்கட்கு மட்டுமேயன்றி மருத்துவர் களாகப் பணியாற்றிவரும் மருத்துவர்கள் அனைவர்கட்கும் பயனுடையதான சிறந்த நூலாக விளங்குகிறது என்பது கண்கூடு. இந்நூலை யாவரும் பெற்றுப் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூர்
13-2-2007

சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்

ஆசிரியரின் முன்னுரை

என்னிலே யாவும் தோன்றி என்னறி வாலே நீங்கி
என்னையே யானடைய எனக்குப தேசங்காட்டிப்
பன்னரும் சித்தவித்தைபகர்ந்திட வவதரித்த
தன்னிகர் தானேயாகும் தனி சிவானந்தம் போற்றி

உலகத்திலுள்ள நாடுகளில் மிகுந்த பழம்பெரும் புகழும், நாகரீகமும் பெற்றுள்ள நாடு தமிழ்நாடு என்பது உலகறிந்த உண்மை. இந்நாட்டு மக்கள், "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடிமக்கள்" எனப்பாராட்டப் படுகின்றனர். ஒருநாட்டின் நாகரிகம், அது படைத்துக் கொண்டுள்ள கலைகளின் மூலம் நன்கு விளங்கும் என்பது ஆராய்ச்சியாளர் கண்ட உண்மை. இந்நாடு கொண்டுள்ள கலைகள் பலவற்றுள் முதற்கலை சித்த மருத்துவக்கலை(தமிழ் மருத்துவக்கலை)யாகும். "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பெரு உள்ளங்கொண்டு வாழ்ந்த சித்தர் பெருமக்களால் காணப்பட்டது "சித்தமருத்துவம்".

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்பிலே உத்தமன் கோயில்கொண்டான் என்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே. (திருமூலர்)

உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்ட அப்பெரு மக்கள் உடம்பினை ஓம்புதலின் முக்கியத்துவத்தை மிகச் சிறந்ததெனக் கண்டார்கள். சித்தர் பெருமக்களில் ஒருவரென்று எண்ணத்தக்க வள்ளுவப் பெருந்தகையாரும் தாம் படைத்த உலகப்பொது மறையில் மருந்து என்ற ஓர் அதிகாரத்தைப் படைத்து

" நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் "

என்று கூறிச் சித்தமருத்துவத்தின் அடிப்படைக் கொள்கையை விளக்கி இருக்கின்றார். இதன் மூலம் தமிழ் மருத்துவக்

கலையான சித்த மருத்துவக்கலை எத்துணைச் சிறப்பு வாய்ந்தது என்பதை நன்கு உணரலாம்.

தமிழ் மருத்துவக் கலையில் உடலைப் பற்றிய நோய்கட்கு மட்டும் மருந்து கண்டாரில்லை. உள்ளத்தைப் பற்றிய நோய்கட்கும் மருந்து கண்டுள்ளனர். அது மட்டுமன்று, நோய் வாராதிருக்கும் தடுப்பு மருந்துகளும், மக்கள் நீண்ட நாட்கள் வாழ்வதற்குரிய கற்ப மருந்துகளும் கண்டுள்ளனர் என்பது வியக்கத்தக்கது. இத்தகைய அரும் கலைச்செல்வம் கடல்கோள்களாலும், கரையான் போன்ற வைகளாலும், அழிக்கப்பட்டதோடல்லாமல் வேறு சில காரணங்களாலும் அழிக்கப்பட்டது. இந்நிலையை, எல்லாம் வல்ல இயற்கை, தஞ்சையின் விஞ்சு புகழ் மாமன்னன் சரபோஜி மூலம் மாற்றவேண்டித் திருவுள்ளம் கொண்டு, அம்மன்னனைப் பல கலை வல்லுனனாக, மருத்துவக்கலை போற்றும் தலைவனாக ஆக்கி இந்நாட்டுக்கு மட்டுமின்றி, உலகத்திலுள்ள ஏனைய நாடுகளுக்கும் பேருதவி செய்யப் படைத்தருளினார். அம்மன்னனும் தடையின்றித் தொண்டாற்றியுள்ளான் என்பது அனைவரும் அறிந்த வரலாற்று உண்மை.

இம்மாமன்னர் கண்ணெனெப் பாதுகாத்த சரசுவதி மகாலில் பலப்பல மருத்துவ வல்லுநர்கள் இருந்து ஆராய்ந்து கண்ட உண்மை பலவற்றை மிகச் சிறந்த முறையில் திறம்பட எழுதி வைத்துள்ளார்கள். அவ்வாறு அவர் படைத்துவைத்த நூல்களைக் கற்று, அவர் வழி நின்று, சரசுவதி மகாலுக்கு அருந்தொண்டாற்றி, சரசுவதி மகாலின் காரியதரிசியாகக் குன்றின் மேலிட்ட விளக்காய்த் திகழ்ந்துவரும் தமிழ்ப் பேரறிஞர் திரு நீ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள் மகாலின் சித்தமருத்துவ ஆராய்ச்சிப்பிரிவில் எனக்குப் பணியாற்றும் வாய்ப்பினை அளித்தார்கள். அதோடு மட்டுமல்லாமல் சித்த மருத்துவக் கலையில் பொதிந்து கிடக்கின்ற உண்மைகளை யாவரும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும் என்கின்ற உயர்வான எண்ணமும், அவற்றைத் தொகுத்து மருத்துவக் கலைச் சுடராக வெளியிட்டு மணக்கச்செய்யவேண்டும் என்ற நல்லெண்ணமும் கொண்டவர்கள் என்றால் புகழ்ச்சி யில்லை, உண்மை. அந்தப்பணியை என்னிடம் ஒப்பித்தார்கள்.

இயற்கையின் திருவருளால் பெருந்தகைப் பிள்ளை யவர்களால் தரப்பட்ட எனது பணியை நிறைவேற்ற சரசுவதி மகாலில் உள்ள கையேட்டுப் பிரதிகள், அச்சுப் புத்தகங்கள் ஓலைச்சுவடிகள் முதலியவற்றை ஆதாரமாக வைத்துக் கொண்டும் எங்கள் மூதாதையோர் அனுபவமுறையில் கையாண்டு தொகுத்து வைத்துள்ளவைகளைக் கொண்டும், மிகுந்த முதியோர்களும் பல நூற்றாண்டுகளாகத் தமிழ் நாட்டில் வழங்கிவந்த பயனுடைய செய்முறைகளை அவர்களிடம் நேரில் பயிற்சி பெற்று அறிந்தும் சித்தமருத்துவக் கலையின் வளர்ச்சிக்கு ஒளிதரும் சுடராய் "**சரபேந்திரர் சித்த மருத்துவச்சுடர்**" எனும் நூலை எளியோனாகிய யான் படைத்து உங்கள் முன் வைத்துள்ளேன்.

இச்சுடருள் அனைவருக்கும் பயன்தரும் வகையிலும் புரிந்துகொள்ளும் முறையிலும் இதுபோன்ற நூல்களில் வழக்கமாக உள்ள மறைமுகச் சொற்கள் (பரிபாஷைகள்) ஆகியவற்றை நீக்கியும், நோய் - நோய் நாடல், நாடி-நாடி பார்க்கும் வகை, நாடியின் குணங்கள்-நோயின் காரணங்கள் அதற்குரிய மருந்துகள், மருந்துண்ணும் காலங்களில் மருந்துக்குரிய காப்புமுறைகள் (பத்தியங்கள்) ஏற்றுக் கொள்ளப் படவேண்டிய உணவு வகைகள், கற்ப மருந்துகள், உடலைப்பற்றிய நோய்களுக்கான மருந்துகளாகிய மாத்திரைகள், செந்தூரங்கள், பற்பங்கள், சுண்ணம், தைலம், மெழுகு, சூரணம், நெய், வற்றல், வடகம், குடிநீர் போன்ற மருந்துகள் பலவும், அம்மைநோய், கழிச்சல், கொள்ளை நோய் போன்ற விரைவில் பரவக்கூடிய நோய்களுக்குச் சிறந்ததடுப்பு மருந்துகளும், விடுப்பு மருந்துகளும், நீர்க்குறி, நெய்க்குறி போன்ற சிறுநீரின் இலக்கணம், பொதுக் குறிகுணங்களும், நீர் நிறவேற்றுமைகள், நீர்குறிப்புச் சக்கரத்துடன் விளக்கப்பட்டிருப்பதுடன், நஞ்சுமுறிவு எனும் தலைப்பில் தாது, தாவர சீவக வகுப்புகளினால் ஏற்படக்கூடிய குறிகுணங்களும், அவற்றிற்கான தடுப்பு மருந்துகளும் கருத்துக்குவியல்களாக யாவர்க்கும் பயன்தரத்தக்க வகையில் இந்நூல் தொகுக்கப்பட்டிருக்கிறது.

இந்நூலை வெளியீடாகச் செய்த பெருந்தகைப் பிள்ளை அவர்களுக்கு என் உயிர் உள்ளளவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். இந்நூலுக்குச் சிறப்புரையளித்த மக்கள்

நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க.அன்பழகன், எம்.ஏ., அவர்கட்கும், மதிப்புரையளித்த மத்திய அரசு இந்திய வைத்திய ஆராய்ச்சித்துறைப் பேராராய்ச்சியாளரும், மூதோர் மருத்துவக் கல்விப் பேராசிரியரு மானடாக்டர் மு. வெ. ரமணன், எல்.ஐ. எம்., அவர்கட்கும், அணிந்துரையளித்த அரசினர் இந்தியமுறை மருத்துவக்கல்லூரி முதல்வர் டாக்டர் P. குருசிரோமணி, C.C.I.M, அவர்கட்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உரிய காலத்தில் இந்நூல் நன்கு பதிப்பிக்கப்பட்டு வெளிவருவதற்கு வேண்டிய உதவிகளை அவ்வப்போது மனமுவந்தளித்துதவிய சரசுவதி மகால் முன்னாள் நூலகர் திரு. கோபால அய்யங்கார், எம். ஏ., அவர்களுக்கும், நூலகர் திரு. ம. சீராளன் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்ட குடந்தை ஜெமினி அச்சக உரிமையாளர் திரு. எஸ். எம். சுந்தரம் அவர்களுக்கும், பணியாளர்களுக்கும் என் நன்றியறிதல் என்றும் உரியன.

இந்நூலைக் கண்ணுறும் அன்பர்களும், அறிஞர்களும் ஏதேனும் குறை காணப்படுமாயின் எடுத்துக்கூறித் திருத்த வேண்டுமென்று மிகுந்த வணக்கத்துடன் கேட்டுக் கொள்வதோடு சிறியோனின் இம்முயற்சியில் நிறைவு காணவும் வேண்டுகின்றேன். சித்த மருத்துவத்தை உலகறியச் செய்த மாமன்னர் சரபேந்திரர் அவர்களுக்கு இந்நூலை என் எளிய காணிக்கையாக்கி அவரது பெயரால் சரபேந்திரர் சித்த மருத்துச் சுடர் எனப் பெயரிடப்பட்டுள்ளது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

மு. சௌரிராசன்

2210, மனோசியப்பாவீதி,
தஞ்சாவூர்,
23-03-1970.

பொருளடக்கம்

சித்த மருத்துவமும் தத்துவ விளக்கமும்

	பக்கம்
1. சித்த மருத்துவ வரலாறு	1
2. உலக மருத்துவ நெறிகள்	2
3. சித்தர்கள் பதினெண்மர்	3
4, தொண்ணூற்றாறு தத்துவங்கள்	8
5. தொண்ணூற்றாறு தத்துவங்களின் தொழில்கள்	8
6. ஐந்து பருப்பொருள்கள்	8
7. ஐம்பொறிகள்	9
8. பஞ்ச கன்மேந்திரியங்கள்	10
9. நான்கு கரணங்கள்	10
10. அறிவு	10
11. நாடிகள் பத்து	11
12. வளிகள் பத்து (தசவாயுக்கள்)	11
13. ஆசயம் ஐந்து	13
14. கோசம் ஐந்து	13
15. ஆதாரம் ஆறு	14
16. மண்டலம் 3	16
17. மலம் 3	16
18. திரிநாடிகளின் இயல்	16
19. வாயுப்பொருள்; வாதத்தின் செயல்	24
20. நோயின் அடிப்படையில் வாதம்	26
21. பித்த வன்னியாய்க் காத்து	27
22. சேட்ப சீதமாய்த் துடைத்து	31
23. சன்னி அல்லது முக்குற்ற நிலை	34
24. நாடியின் தத்துவம்	43
25. நாடி	44
26. எண்வகைத்தேர்வு	46

	பக்கம்
27. தசநாடி	50
28. தசவாயுவின் இருப்பிடமும் செயலும்	51
29. இரவில் நாடி அறிதல்	52
30. நாடி தெரியாக்காலம்	52
31. நாடியின் இடங்கள்	52
32. நாடியின் நிறம்	52
33. எண்வகைத் தேர்வு (அட்டவணை)	55
34. நாடியின் காலநிலை	56
35. நாடிகள் நடக்கும் விதம்	59
36. நாடி பார்க்கும் இடங்கள்	59
37. நாடி பார்க்கும் விதம்	59
38. நாடி பார்க்கும் மாத வகைகள்	60
39. நாடி அறியும் விதம்	60
40. நாடி நடக்கும் விதம் (ஆண்கள்)	60
41. நாடி நடக்கும் விதம் (பெண்கள்)	60
42. பஞ்சபூத நாடிகள் இருக்கும் இடத்தின் விவரம்	61
43. ஒரு நிமிடத்திற்கு நாடி நடக்கும் அளவு	61
44. நாடியின் பேதா பேதங்கள்	61
45. மனிதர்களின் வயதின் விவரம்	62
46. சரீரக் கட்டளை விவரம்	62
47. வாத சரீரத்தின் குறிகள்	63
48. பித்த சரீரத்தின் குறிகள்	63
49. கப சரீரத்தின் குறிகள்	63
50. வாத, பித்த கப நிலைகள்	63
51. வாத கப, பித்தத்தின் இயல்புகள்	63
52. வாத, பித்த கப காலங்கள்	64
53. நோயாளியின் தேக முதலான குணங்கள்	64
54. பித்த தேகம், கபதேகம், தொந்த தேகம்	64
55. வாதத்தின் கூறு	64
56. பித்தத்தின் கூறு	65
57. கபத்தின் கூறு	65
58. குருநாடி இருக்கும் இடம்	65

பக்கம்

59. குருநாடியின் குணம் 66
60. நாடிகள் கீழும் மேலும் மீறி ஓடும் விதம் 66
61. நாடியின் தொந்திப்பு 67
62. நாடியின் குறிப்பு 70
63. மரணத்தின் குறிகள் 72
64. மரண காலக் குறிகள் 75
65. பாஷாண சரக்குகளின் சுத்தி முறை 77
66. உணவும் நோயும் 89
67. மருத்துவன் இலக்கணம் 94
68. உற்றவன் வகை நான்கு 95
69. தீர்ப்பான் வகை நான்கு 95
70. மருந்தின் வகை நான்கு 95
71. இயற்றுவான் வகை நான்கு 96
72. மருத்துவர் இயல்பு 96
73. மருத்துவர் இலக்கணம் 98
74. மருத்துவரின் குணம் 98
75. ஐம்பூத பாடாணம் 100
76. ஐம்பூத உபரசம் 100
77. ஐம்பூத உலோகம் 100
78. ஐம்பூதக் காரசாரம் 100
79. ஐம்பூதச் சரக்குகள் 101
80. ஐம்பூதப் பச்சிலை 101
81. நீற்றினத்திற்கு ஆதி 101
82. செந்தூரத்திற்காதி 101
83. உலோக உருக்கினத்திற்காதி 101
84. இரசவாத உபயோகச் சரக்கு 102
85. உருக்கினத்திற்காதி சரக்கு 102
86. பாடாணத்தைக் கட்டும் சரக்கு 102
87. நாகத்தைக் கட்டும் சரக்கு 102
88. தாளகத்தைக் கட்டும் சரக்கு 102
89. வெள்ளீயத்தைக் கட்டும் சரக்கு 102
90. இலிங்கத்தைக் கட்டும் சரக்கு 102

பக்கம்

91. வெடியுப்பைக் கட்டும் சரக்கு 103
92. சாரத்தைக் கட்டும் சரக்கு 103
93. கல்லுப்பைக் கட்டும் சரக்கு 103
94. கெந்தகத்தைக் கட்டும் சரக்கு 103
குழந்தை நோய்களும், உரிய மருத்துவமும் 104
1. கிரந்தி நோய் 105
2. மாந்த நோய் 106
1. வளிமாந்தக் குறிகுணம் 107
2. பித்தமாந்தக் குறிகுணம் 108
3. கபமாந்தக் குறிகுணம் 108
4. திரிதோட மாந்தக் குடிநீர் 108
5. போர்மாந்தக் குறிகுணம் 109
6. சத்திச் சாரணைத் தைலம் 109
7. நொச்சிக் குடிநீர் 109
8. சுரமாந்தக் குறிகுணம் 110
9. சீந்தில் குடிநீர் 110
10. சுரசம் 110
11. கடுக்காய்த் தைலம் 111
12. நீர்மாந்தக் குறிகுணம் 111
13. மிளகுத் தைலம் 112
14. நொச்சியிலை சுரசம் 112
15. செரியா மாந்தம் 112
16. வசம்புக் குடிநீர் 113
17. வேலிப்பருத்தி 113
18. பால் மாந்தம் 114
19. உத்தாமணிக் குடிநீர் 114
20. முக்கு மாந்தம் 114
21. ஊது மாந்தம் 115
22. ஊதுமாந்த மாத்திரை 115
23. ஊதுமாந்த மாத்திரை (வேறு) 116
24. நீர்க்கண மாந்தம் 116
25. அமிர்தாதி மாத்திரை 117

பக்கம்

3. கணம் (கணை) 118
கணம் வரும் விதம் 118
கணங்களின் எண்ணிக்கை 119
குறிகுணம் 119
1. வாதகணத்தின் குறிகுணம் 120
2. பித்த கணத்தின் குணம் 120
3. கப கணத்தின் குணம் 120
4. மாந்த கணத்தின் குணம் 120
5. நீர்க் கணத்தின் குணம் 121
6. பிரளிக் கணத்தின் குணம் 121
7. சூலிக் கணத்தின் குணம் 121
8. மகா கணத்தின் குணம் 121
9. ஊது கணத்தின் குணம் 121
10. சுழி கணத்தின் குணம் 121
11. வரள் கணத்தின் குணம் 122
12. கொதிப்புக் கணத்தின் குணம் 122
13. அந்தகக் கணத்தின் குணம் 122
14. வீக்க கணத்தின் குணம் 122
15. பிறக் கணத்தின் குறிகுணம் 122
16. மந்தார கணத்தின் குறிகுணங்கள் 123
17. எரி கணத்தின் குறிகுணங்கள் 123
18. நீராம கணத்தின் குறிகுணம் 123
19. ஆம கணத்தின் குணம் 123
20. முக்கு கணத்தின் குணம் 123
21. மூல கணம் 123
22. பேராம கணத்தின் குறிகுணம் 124
23. இரத்த கணத்தின் குறிகுணம் 124
24. சிங்கி மாந்த கணத்தின் குறிகுணம் 124
1. மாந்தம் 18க்கும் கணம் 23க்கும்
பொன்னாங்காணி எண்ணெய் 124
2. கணச்சூடு தணிய வல்லாரை எண்ணெய் 127
3. கணம் 24க்கும் சித்திரமூல எண்ணெய் 127

பக்கம்

4. கணங்களுக்கு தும்மட்டிக்காய் எண்ணெய் 130
5. தெற்கத்தி கணத்திற்கு கோடாசுழித்தைலம் 131
6. சகல கணத்திற்கும் இண்டெண்ணெய் 132

4. கரப்பான் நோய் 133

1. வாத கரப்பான் - குறிகுணம் 133
2. பித்த கரப்பான் 134
3. கப கரப்பான் 134
4. அரிகரப்பான் 134
5. ஊது கரப்பான் 134
6. சூலை கரப்பான் 134
7. வெடிகரப்பான் 135
8. மண்டைக்கரப்பான் 135
9. பொரிகரப்பான் 135
10. சட்டை கரப்பான் 135
11. ஓடு கரப்பான் 135
12. கருங்கரப்பான் 135
13. செங்கரப்பான் 136
14. கொள்ளிக்கரப்பான் 136
15. தோடக்கரப்பான் 136
16. வாலை கரப்பான் 136
17. வரள் கரப்பான் 136
18. வீங்கு கரப்பான் 136

1. கரப்பானுக்கு மேற்பூச்சுத் தைலம் 137
2. மேற்பூச்சுத் தைலம் (வேறு) 138
3. உள்மருந்து புங்கம்பூ எண்ணெய் 138
4. மேற்பூச்சு மருந்து சாம்பிராணித் தைலம் 139
5. அச்சு வடுப்பு 140
   அச்சரத்தின் பொதுக்குறிகுணங்கள் 140
   கருஞ்சீரக நெய் 140
6. கக்குவான் நோய் 141
   கக்குவான் தைலம் 141
   ஆமை ஓட்டு பற்பம் 142

பக்கம்

7. நாக்குப்பூச்சி நோய் 143
நாக்குப்பூச்சிக்குப் பலாசு விதைத் தைலம் 143
8. கிரிப்பூச்சி நோய் 144
கிரிப்பூச்சி நோய்க்கு இளநீர் நெய் 144
9. மசரைப்புழு நோய் 145
மசரைப்புழு நோய்க்கு நாயுருவி நெய் 145
10. மலவாத நோய் 146
11. மயக்கநோய் 147

நோய்களும் உரிய மருத்துவமும் 149

1. அம்மை நோய் 149
2. பெரியம்மை 150
மான்கொம்பு பற்பம் 151
3. சிறிய அம்மை 152
முத்து பற்பம் 152
4. தட்டம்மை 153
5. பனைமுகரி அம்மை 153
மாணிக்க பற்பம் 154
தாழை மணப்பாகு 154
6. புட்டாளம்மை 154
பவழ பற்பம் 155
7. சுரம் 156
1. சுரம் தோன்றும் வழி 156
2. சுரத்தின் முற்குறிகள் 156
3. நோயின் எண்ணிக்கை 157
4. தடுப்பு முறை 157
5. அதிவிடய மாத்திரை 157
6. இலிங்கச் செந்தூரம் 158
7. ஆடாதொடைக் குடிநீர் 159
8. வெளுப்பு நோய் (பாண்டு) 159
1. நோய் தோன்றும் வழி 159
2. நோயின் எண்ணிக்கை 160
3. அயச்செந்தூரம் 160

பக்கம்

4. வெள்ளி பற்பம் 161
9. ஊதல் நோய் (சோகை நோய்) 161
1. பசு மூத்திரக் கடுக்காய்ச் சூரணம் 162
2. மண்டூரச் செந்தூரம் 163
10. மஞ்சள் நோய் 163
1. சுகபேதி மருந்து 165
2. குடிநீர் 166
3. கிட்டச் செந்தூரம் 166
11. குன்மம் 168
1. வாந்திக்குடிநீர் 168
2. கழிச்சல் குடிநீர் 169
3. சூரணம் 169
4. குன்ம குடோரி லேகியம் 170
5. செம்புச் செந்தூரம் 170
6. கெந்தகக் கிண்ணம் செய்முறை 171
12. சூலை நோய் 171
1. திருமால் சக்கரம் 172
2. இரச பற்பம் 173
3. அயவீரச் செந்தூரம் 174
4. ஆறுமுகச் செந்தூரம் 174
5. நாதகுரு தைலம் 175
6. வான் மெழுகு 176
7. மயனத்தைலம் (மெழுகுத் தைலம்) 177
8. மஞ்சிட்டித் தைலம் 178
13. மகோதரம் (பெருவயிறு) 178
1. மருத்துவம் 180
2. அயச்செந்தூரம் 183
15. மூக்கடைப்பு நோய் (பீனிசம்) 184
1. நோயின் பொதுக்குணம் 184
2. மருத்துவம் 185
16. தொண்டைக்கட்டு (குரல் கம்மல்) 186
1. மருத்துவம் 186

பக்கம்

2. மாத்திரை 187
17. பெருங்கழிச்சல் 187
18. வாதப் பெருங்கழிச்சல் 188
19. பித்தப் பெருங்கழிச்சல் 189
20. கபப்பெருங்கழிச்சல் 190
21. நிணக்கழிச்சல் 191
1. சூரணம் 191
2. இலிங்க மெழுகு 192
3. அன்னபேதி செந்தூரம் 193
22. கடுப்புக் கழிச்சல் 193
படிக்காரச் செந்தூரம் 194
23. இருமல் நோய் 194
1. ஆடாதொடைக் குடிநீர் 196
2. பவழ பற்பம் 197
3. தாளக பற்பம் 197
4. கோரோசனை மாத்திரை 198
24. இரைப்பு நோய் 199
1. மருத்துவம் 199
2. பேதி மாத்திரை 199
3. முத்துச் சிப்பி பற்பம் 200
25. இளைப்பு நோய் 200
தங்கச்செந்தூரம் 201
26. வாத நோய் (வளி நோய்) 202
1. அகத்தியர் குழம்பு 202
2. வாளத்தின் முளையை நீக்கும் முறை 203
3. உள்மருந்துகள் 204
4. மேற்பூச்சுத் தைலம் 204
27. வெட்டைநோய் 204
28. நீரிழிவு நோய் 206
1. குடிநீர் 207
2. சூரணம் 207
3. தங்க அப்பிரகச் செந்தூரம் 208

பக்கம்

29. குடற்பிடிப்பு நோய் 208
இலிங்க வெள்ளை 209
30. செரியாமை 210
1. எண்வகைச் சூரணம் 211
2. இஞ்சிச் சூரணம் 211
3. படிகக்கல் செந்தூரம் 212
31. வாந்தி நோய் 212
1. குடிநீர் 214
32. விக்கல் நோய் 214
1. மயிலிறகுச் சூரணம் 215
33. சுவையின்மை (அரோசிகம்) 216
34. ஊழிநோய் 217
1. கற்கம் 217
2, ஊழி மாத்திரை 218
3. சண்டமாருதச் செந்தூரம் 218
35. நீர்வேட்கை 219
தாமரை மணப்பாகு 220
36. பெருநோய் 220

கற்பம்

1. மிளகு கற்பம் 224
2. திப்பிலி கற்பம் 225
திப்பிலிச் சூரணம் 225
3. சுக்கு கற்பம் 226
4. சீரக பற்பம் 227
5. வெந்தய கற்பம் 228
6. கடுகு 229
7. வெள்ளைப்பூண்டு 231
8. வசம்பு 232
9. உப்பு 232
10. கற்பூரவல்லி 233
11. சீந்தில் 233
12. இலந்தை 234

பக்கம்

13. பொன்னாங்காணி 235
14. பொற்றலைக் கையாந்தகரை 235
கற்ப மூலிகை உண்பதின் பயன் 237
15. கிச்சிலி 238
16. மாதுளை 238
17. தூதுவளை 240
18. நாரத்தை 240
19. எலுமிச்சை 241
20. அத்தி 241
21. நுணா 242
22. மணத்தக்காளி 242
23. வல்லாரை 242
24. தும்பை 243
25. மூக்குறட்டை 244
26. நன்னாரி 244
27. ஆதொண்டை 244
28. சுண்டை 245
29. சிறுகீரை (சில்லி) 246
30. சூதம் (மாங்கனி) 246
31. சங்கம் 246
32. புங்கு 247
33. வெண்குன்றி 247
34. வெள்ளெருக்கு 248
35. தவசி முருங்கை 249
36. அழிஞ்சில் 249
37. சாரணை 249
38. குப்பைமேனி 250
39. யானை வணங்கி எனும் நெருஞ்சில் 250
40. நிலாவாரை 251
41. கீழ்க்காய் நெல்லி 251
42. துளசி 252
43. தேற்றான் 253

பக்கம்

44. விளா 254
45. களா 254
46. மருது 255
47. நாவல் 255
48. விஷ்ணு கரந்தை 256

உணவு 256

49. பால் 256
50. நெய் 257
51. வெண்ணெய் 257
52. மோர் 257
53. தயிர் 257
54. எருமைப்பால்-தயிர் 257
55. செம்மறிப்பால் 257
56. வெள்ளாட்டின் பால் 258
57. உணவு வகைகள் 258
உணவுப்பொருட்கள் 259
58. பிரண்டை 259
59. கற்றாழை வற்றல் 259
60. முள்ளுக்காய் வற்றல் 260
61. பீர்க்கு 260
62. பூசக்கருணை 260
63. காரவல்லி 260
64. வழுதலைப்பிஞ்சு 260
65. இலுப்பை நெய் 261
66. தேங்காய் நெய் 261
67. ஆமணக்கு நெய் 261
68. முருங்கை 261
69. முந்திரி - வாதுமை 262
70. கந்தி-அவரை- பயற்றங்காய் 263
71. பலாக்கனி 264
72. வாழை 264
73. பரங்கி- பூசணி-சுரை 265

பக்கம்

74. கருணை-முள்ளங்கி 265
75. வேளை 265
76. அறுகீரை- கீரைத்தண்டு 266
77. பசலை - வசலை 266
78. சிறுகீரை 267
79. பிண்ணாக்கு 267
80. வரகு - தினை 267
81. மூங்கிலரிசி 268
82. மலைநெல் 268
83. கம்பு - சாமை 268
84. கேழ்வரகு 269
85. துவரை-அவரை-சோளம்- பயறு 269
86. காராமணி, கொள்ளு, கோதுமை 270
87. எள் 270
88. நெல்லிக்காய், கடுக்காய் 270
89. இஞ்சி 270
90. ஓமம் 271
91. கொத்தமல்லி 271
92. இலவங்கம் 271
93. பேரரத்தை 271
94. அதிமதுரம் 271
95. பரங்கிச்சக்கை 272
96. ஏலம் 272
97. ஆடாதொடை 272
98. கறிசாலை 272
99. ஓரிதழ்த்தாமரை 273
100. வேற்பந்தி 273
101. நீர்வகை 273
102. நோயைத் தடுக்கும் வழி 273
103. நோய் பிறக்கும் வகை 274
104. நோய்களின் தொகுப்பு 275
105. மனித தேகத்தை மூன்றுவிதப் பாகுபாடுகளாக விவரிக்கக் கூடும் 277

பக்கம்

மருந்து

1. அகமருந்து 32-ம் அவற்றின் ஆயுள் அளவும் 279
2. உள்மருந்து அல்லது அகமருந்து 32-ன் செய்முறை 280
1. சுரசம் 280
2. சாறு 280
3. குடிநீர் 281
4. கற்கம் 281
5. உட்கஷி 281
6. அடை 282
7. சூரணம் 282
8. பிட்டு 282
9. வடகம் 282
10. வெண்ணெய் 283
11. நெய் 283
12. மணப்பாகு 283
13. இரசாயனம் 283
14. லேகியம் 284
15. எண்ணெய் 284
16. மாத்திரை 284
17. கடுகு 284
18. பக்குவம் 284
19. தேனூறல் 285
20. தீநீர் 285
21. மெழுகு 285
22. குழம்பு 285
23. பதங்கம் 286
24. செந்தூரம் 286
25. நீறு, வெண்ணீறு அல்லது பற்பம் 286
26. கட்டு 286
27. உருக்கு 287
28. களங்கு 287
29. சுண்ணம் 287

பக்கம்

30. கற்பம் 288
31. சத்து 289
32. குரு. குளிகை 289
3. புறமருந்து 32-ம் அவற்றுள் சிலவற்றின் ஆயுள் அளவும் 290
1. கட்டு 290
2. பற்று 290
3. ஒற்றடம் 290
4. பூச்சு 290
5. வேது 291
6. பொட்டணம் 291
7. தொக்கணம் 291
8. புகை 291
9. மை 291
10. பொடி திமிர்தல் 291
11. கலிக்கம் 292
12. நசியம் 292
13. ஊதல் 292
14. நாசிகாபரணம் 292
15. களிம்பு 292
16. சீலை 292
17. நீர் 293
18. வர்த்தி 293
19. சுட்டிகை 293
20. சலாகை 293
21. பசை 293
22. களி 293
23. பொடி 294
24. முறிச்சல் 294
25. கீறல் 294
26. காரம் 294
27. அட்டைவிடல் 294

பக்கம்

28. அறுவை 294
29. கொம்புகட்டல் 295
30. உறிஞ்சல் 295
31. குருதிவாங்கல் 295
32. பீச்சு 295
4. வைத்தியசாலை விதி 296
5. மட்கலத்தின் இலக்கணம் 297
6. சட்டிகளின் இலக்கணம் 298
7. கல்வங்களின் குணம் 300
8. கல்வம் சுரண்டியின் குணம் 300
9. எரு 301
10. விறகின் வகைகள் 302
11. தீயினளவு 303
12. புடம் 304
13. ஊது முறைக்குத் துருத்திவகை 305
14. நிறைகள் - அளவுகள் 306
15. மருந்து அளவு அட்டவணை 308

மருந்து செய்முறை - மாத்திரைகள் 310

1. அக்கர சஞ்சீவி மாத்திரை 310
2. அக்கினி மாத்திரை 311
3. அங்குச மாத்திரை 312
4. அதிமதுர மாத்திரை 312
5. அதிவிடய மாத்திரை 314
6. அமிர்த சஞ்சீவி மாத்திரை 315
7. அமுதாதி மாத்திரை 316
8. அரிதார மாத்திரை 317
9. ஆனந்த பைரவ மாத்திரை 318
10. இந்திராணி மாத்திரை 318
11. இரச மாத்திரை 319
12. இலவங்காதி மாத்திரை 320
13. இலிங்கமாத்திரை 321
14. ஏலாதி மாத்திரை 322

பக்கம்

15. கஞ்சா மாத்திரை 323
16. கட்டுவாதி மாத்திரை 324
17. கண்ட கோடாலி மாத்திரை 324
18. கஸ்தூரி மாத்திரை 325
19. கபவாத சன்னி மாத்திரை 327
20. கபாட மாத்திரை 328
21. கருவாழை மாத்திரை 329
22. கற்பூர மாத்திரை 330
23. காளிகாதேவி மாத்திரை 330
24. குளிர்காய்ச்சலுக்கு மாத்திரை 331
25. கோரோசனை மாத்திரை 332
26. சத்தி மாத்திரை 333
27. சன்னி மாத்திரை 334
28. சன்னி சிலேட்டுமத்திற்கு சாதிலிங்க மாத்திரை 334
29. சன்னி நாவறட்சி பித்தம் உடல்நோய் கிரிச்சரம்
இதற்கு விஷ்ணு மாத்திரை 335
30. சாதிக்காய் மாத்திரை 336
31. சித்தன் மாத்திரை 336
32. சிராவண மாத்திரை 337
33. சுகசன்னி மாத்திரை 338
34. சுகபேதி மாத்திரை 338
35. சுப்பிரமணியர் மாத்திரை 339
36. சுரக்கோடாலி மாத்திரை 340
37. தண்ட மாத்திரை 340
38. தம்பன மாத்திரை 341
39. திரிதோட மாத்திரை 342
40. தூதுவளை மாத்திரை 343
41. நமன் மாத்திரை 344
42. பஞ்சீகரண மாத்திரை 345
43. பச்சைக்கற்பூர மாத்திரை 346
44. பச்சைக் கற்பூர மாத்திரை (வேறு) 346
45. படர்தாமரை - சக்தி குன்ம மாத்திரை 347

பக்கம்

46. பரசு மாத்திரை 348
47. பாச மாத்திரை 348
48. பூபதி மாத்திரை 349
49. மதன காமேசுவர மாத்திரை 350
50. மன்மத சிந்தாமணி மாத்திரை 351
51. முக்கடுகாதி மாத்திரை 352
52. வச்சிராயுத மாத்திரை 353
53. வருணன் மாத்திரை 353
54. வருணன் மாத்திரை (வேறு) 354
55. வாயு மாத்திரை 355
56. வாய்விளங்க மாத்திரை 356
57. விநாயகர் மாத்திரை 357
58. வீரபத்திரன் மாத்திரை 358
59. வைரவன் மாத்திரை 358

செந்தூரங்கள்

1. அப்பிரகச்செந்தூரம் 360
2. அப்பிரகச் செந்தூரம் (வேறு) 361
3. அயக்காந்தச் செந்தூரம் 362
4. அயச்செந்தூரம் 363
5. அயச்செந்தூரம் (வேறு) 363
6. அயகெந்திச் செந்தூரம் 365
7. அயவீரச் செந்தூரம் 365
8. அயத்தங்கச் செந்தூரம் 366
9. அன்னபேதிச் செந்தூரம் 367
10. ஆறுமுகச் செந்தூரம் 367
11. ஆறுமுகச் செந்தூரம் (வேறு) 368
12. இரசவெள்ளிச் செந்தூரம் 369
13. இரசச்செந்தூரம் 369
14. இரசச் செந்தூரம் (வேறு) 370
15. இராமபாணச் செந்தூரம் 371
16. இலிங்கச் செந்தூரம் 372
17. உப்புக்கட்டுச் செந்தூரம் 372
18. உப்புச் செந்தூரம் 373

பக்கம்

19. கல்யாணச் செந்தூரம் 374
20. களங்குச் செந்தூரம் 375
21. காடிக்காரச் செந்தூரம் 375
22. காந்தச் சத்துச் செந்தூரம் 376
23. காந்தச் செந்தூரம் 377
24. காந்தச் செந்தூரம் (வேறு) 378
25. காளமேக நாராயணச் செந்தூரம் 379
26. கெந்தகச் செந்தூரம் 379
27. கௌரிச் செந்தூரம் 380
28. சண்டமாருதச் செந்தூரம் 381
29. சவர்க்காரச் செந்தூரம் 382
30. சவ்வீரச்செந்தூரம் 382
31. சிங்கிச் செந்தூரம் 383
32. சிடிகை அயச்செந்தூரம் 384
33. சீன வீரவைப்புச் செந்தூரம் 384
34. சூதச் செந்தூரம் 386
35. தங்கச்செந்தூரம் 387
36. தங்கச் செந்தூரம் (வேறு) 388
37. தங்கவங்கச் செந்தூரம் 389
38. தாமிரக்குரு செந்தூரம் 390
39. தாம்பிரச் செந்தூரம் 391
40. தாம்பிரச் செந்தூரம் (வேறு) 392
41. தாம்பிரச் செந்தூரம் (வேறு) 393
42. தாம்பிரச் செந்தூரம் (வேறு) 394
43. தாளகச் செந்தூரம் 395
44. திரிமூர்த்திச் செந்தூரம் 396
45. திரிவங்கச் செந்தூரம் 397
46. துத்தச் செந்தூரம் 398
47. துருசுச் செந்தூரம் 399
48. துருசுச் செந்தூரம் (வேறு) 400
49. நவபாஷாணச் செந்தூரம் 401
50. நாகக் கட்டுச் செந்தூரம் 403

பக்கம்

51. நாகச் செந்தூரம் 404
52. நாபிச் செந்தூரம் 405
53. பஞ்ச சூதச் செந்தூரம் 406
54. பஞ்ச பாடாணச் செந்தூரம் 407
55. பவழச் செந்தூரம் 408
56. பவழ வங்கச் செந்தூரம் 410
57. பூரச் செந்தூரம் 410
58. பூரணச் சந்திரோதய செந்தூரம் 411
59. மிருதார்சிங்கிச் செந்தூரம் 413
60. முத்துச் செந்தூரம் 414
61. லோகச் செந்தூரம் 414
62. வெடியுப்புச் செந்தூரம் 415
63. வெள்ளிச் செந்தூரம் 416
64. வெள்வங்கச் செந்தூரம் 416
65. மகா நீலகண்ட செந்தூரம் 417
66. வீரச் செந்தூரம் 418
67. மகா பாடாணச் செந்தூரம் 418
68. லகு காடிக்காரச் செந்தூரம் 419
69. சுவர்ண அப்பிரகச் செந்தூரம் 420
70. இராஜ மண்டூரச் செந்தூரம் 420
71. நாகச் செந்தூரம் 421
72. தாளகச் செந்தூரம் 422
73. ரசவீரச் செந்தூரம் 422

பற்பங்கள் - சுண்ணங்கள்

1. அப்பிரக பற்பம் 424
2. அப்பிரக பற்பம் (வேறு) 424
3. அய பற்பம் 425
4. அயபற்பம் (வேறு) 426
5. கடல்நுரை பற்பம் 427
6. கரியுப்பு பற்பம் 428
7. கவடி பற்பம் 428
8. கல்நார் பற்பம் 429
9. கல்நார் பற்பம் (வேறு) 430

பக்கம்

10. கல்மதப் பற்பம் 431
11. கற்பூர பற்பம் 431
12. காச குலாந்த பற்பம் 432
13. காச குடோரி பற்பம் 433
14. குங்கிலியப் பற்பம் 433
15. கெந்தகப் பற்பம் 434
16. கொம்பரக்கு பற்பம் 435
17. சலாசத்து பற்பம் 436
18. சங்கு பற்பம் 437
19. சவ்வீர பற்பம் 437
20. சாதிலிங்க பற்பம் 438
21. சூத பற்பம் 439
22. சூத பற்பம் (வேறு) 439
23. தங்க பற்பம் 440
24. தாம்பிர பற்பம் 441
25. தாம்பிர பற்பம் (வேறு) 442
26. துத்த பற்பம் 442
27. துருசு பற்பம் 443
28. நவநீத பற்பம் 443
29. நாக பற்பம் 444
30. படிக்கார பற்பம் 445
31. பவள பற்பம் 446
32. பவள பற்பம் (வேறு) 446
33. பேரண்ட பற்பம் 448
34. மனோசிலை பற்பம் 449
35. மிர்தார்சிங்கி பற்பம் 449
36. முத்து பற்பம் 450
37. முத்துச் சிப்பி பற்பம் 451
38. வங்க சிங்கி பற்பம் 452
39. வெள்ளி பற்பம் 453
40. வெள்ளி பற்பம் (வேறு) 454
41. வெள்வங்க பற்பம் 454

பக்கம்

42. அய பற்பம் 455
43. வங்க பற்பம் 455
44. காந்த பற்பம் 456
45. கல்லுப்பு பற்பம் 456
46. கருவங்க பற்பம் 456
47. மண்டூர பற்பம் 457
48. அஞ்சனக்கல் பற்பம் 458
49. கற்பூர சலாசத்து பற்பம் 458
50. சவ்வீர பற்பம் 458

சுண்ணங்கள்

1. அப்பிரகச் சுண்ணம் 459
2. தாம்பிரச் சுண்ணம் 460
3. முத்துச் சுண்ணம் 461
4. முப்புச் சுண்ணம் 461
5. வங்கச் சுண்ணம் 462
6. கல்லுப்புச் சுண்ணம் 463
7. சவுக்காரச்சுண்ணம் 463
8. கற்பூரச் சுண்ணம் 464
9. முத்துச் சுண்ணம் 464

தைல வகைகள்

1. அரக்குத் தைலம் 465
2. ஆமணக்குத் தைலம் 466
3. ஆதொண்டைத் தைலம் 467
4. ஆயில் மரப்பட்டைத் தைலம் 468
5. இஞ்சித் தைலம் 469
6. இரச கற்பூரத் தைலம் 470
7. உளுந்துத் தைலம் 470
8. எட்டிவேர்த் தைலம் 471
9. எலுமிச்சம்பழத் தைலம் 476
10. கரப்பான் தைலம் 477
11. கருங்காலித் தைலம் 478
12. கழற்சித் தைலம் 479

	பக்கம்
13. காக்கை வலித் தைலம்	480
14. மகாவாதத் தைலம்	480
15. காடித் தைலம்	482
16. காதுவலிக்குத் தைலம்	483
17. கிரந்தி அரையாப்புக்குத் தைலம்	484
18. கிளிஞ்சல் தைலம்	485
19. கீழ்க்காய் நெல்லித் தைலம்	486
20. குடைச்சலுக்குத் தைலம்	487
21. குளிர் தாமரைத் தைலம்	487
22. கையான் தைலம்	488
23. கொழுக்கட்டை மரப்பட்டைத் தைலம்	489
24. சஞ்சீவித் தைலம்	490
25. சன்னிதோட வலிப்பிற்குத் தைலம்	490
26. சித்திரமூலத் தைலம்	492
27. சிற்றாமுட்டித் தைலம்	493
28. சிற்றாமுட்டித் தைலம் (வேறு)	495
29. சிற்றாமுட்டி மடக்குத் தைலம்	496
30. சிறுகுமரித் தைலம்	497
31. சீந்தில் தைலம்	498
32. சீரகத் தைலம்	500
33. சுக்குத் தைலம்	500
34. சுத்த வல்லாதித் தைலம்	502
35. தலைவலித் தைலம்	504
36. தேற்றான் கொட்டைத் தைலம்	504
37. நவச்சாரத் தைலம்	506
38. நுணாத் தைலம்	507
39. நெய்சட்டிக் கீரைத்தைலம்	508
40. பத்துவேர் தைலம்	508
41. பீனிசத்தைலம்	510
42. பெருங்குமரித் தைலம்	511
43. பெருமரப்பட்டைத் தைலம்	512
44. பேய்ப்பீர்க்குத் தைலம்	514

பக்கம்

45. மருதோன்றித் தைலம் 515
46. மணத்தக்காளித் தைலம் 517
47. மிளகுத் தைலம் 517
48. முதியார் கூந்தல் தைலம் 519
49. மெருகன் செடி சமூலத் தைலம் 520
50. மெருகன் கிழங்குத் தைலம் 521
51. மேகம் 21-க்கும் தைலம் 522
52. வல்லாரைத் தைலம் 524
53. வாதகேசரித் தைலம் 526
54. வெண்ணொச்சித் தைலம் 527
55. வெண்ணொச்சித் தைலம் (வேறு) 528
56. வேங்கைப்பட்டைத் தைலம் 530

மெழுகு வகைகள்

1. நந்தி மெழுகு 532
2. நந்தீசர் சண்டமாருத மெழுகு 533
3. நந்தீசர் சஞ்சீவி மெழுகு 534
4. மார்க்கண்டன் மெழுகு 535
5. இரச கெந்தி மெழுகு 536
6. பஞ்ச நவலோக மெழுகு 539
7. பஞ்ச இலவண மெழுகு 540
8. பஞ்ச சூத மெழுகு 541
9. கஸ்தூரி மெழுகு 542
10. வீர மெழுகு 543
11. மேக சிந்தாமணி மெழுகு 544
12. மூசாம்பர மெழுகு 545
13. வாலை ரசமெழுகு 546
14. மிருதார்சிங்கி மெழுகு 547

சூரணங்கள்

1. அதிமதுரச் சூரணம் 549
2. அக்கினிச் சூரணம் 549
3. அட்டச் சூரணம் 550
4. அதிவிடையச் சூரணம் 551

பக்கம்

5. அமுக்கிராச் சூரணம் 552
6. ஆடாதொடைச் சூரணம் 553
7. ஆவாரம் விதைச் சூரணம் 554
8. இஞ்சிச் சூரணம் 555
9. இலவங்காதிச் சூரணம் 556
10. ஏலாதிச் சூரணம் 557
11. ஐங்காயச் சூரணம் 559
12. கபாடச் சூரணம் 560
13. கரிசலாங்கண்ணிச் சூரணம் 561
14. காசுக்கட்டிச் சூரணம் 562
15. குக்குடச் சூரணம் 562
16. குமட்டிக்காய்ச் சூரணம் 564
17. கொடிவேலிச் சூரணம் 565
18. சந்தனாதிச் சூரணம் 566
19. சஞ்சீவிச் சூரணம் 567
20. சிவதைச் சூரணம் 568
21. சுகபேதிச் சூரணம் 569
22. சுரக்கட்டிச் சூரணம் 570
23. சுவாச குடோரிச் சூரணம் 570
24. சூதகச் சூரணம் 571
25. தச தீபாக்கினிச் சூரணம் 572
26. தாளிசபத்திரிச் சூரணம் 573
27. திராட்சை சூரணம் 574
28. நிலவேம்புச் சூரணம் 575
29. நிலவாகைச் சூரணம் 576
30. நீர்பேதிச் சூரணம் 577
31. பஞ்ச தீபாக்கினி சூரணம் 577
32. பறங்கிப்பட்டை சூரணம் 578
33. பூநாகச் சூரணம் 579
34. பேய்க்குமட்டிக்காய்ச் சூரணம் 580
35. மல்லிச் சூரணம் 580
36. மதனகாமேசுரச் சூரணம் 581

பக்கம்

37. முடித்தலைச் சூரணம் 584
38. மேகாதிச் சூரணம் 585
39. வச்சிரவல்லிச் சூரணம் 585
40. வல்லாரைச் சூரணம் 587

லேகியங்கள்

1. அத்திப்பட்டை லேகியம் 588
2. அமிர்தாதி லேகியம் 589
3. அமுக்கிரா லேகியம் 591
4. ஆட்டுத்தலை லேகியம் 592
5. இஞ்சி லேகியம் 593
6. இடிவல்லாதி லேகியம் 594
7. இடி பூரணாதி லேகியம் 596
8. இம்பூரல் லேகியம் 596
9. இரத்த விருத்தி லேகியம் 598
10. எள்ளு லேகியம் 600
11. ஓரிதழ்த் தாமரை லேகியம் 600
12. கடுகு லேகியம் 601
13. கடுக்காய் லேகியம் 602
14. கட்டுவாதி லேகியம் 603
15. கபாட லேகியம் 604
16. கண்டங்கத்திரி லேகியம் 605
17. கரிப்பான் லேகியம் 606
18. காயசித்தி லேகியம் 607
19. குக்கில் லேகியம் 608
20. குமரி லேகியம் 610
21. சஞ்சீவி லேகியம் 612
22. சந்தான லேகியம் 613
23. சண்டமாருத லேகியம் 614
24. சாலாமிசிரி லேகியம் 615
25. சிவதை லேகியம் 616
26. சிற்றரத்தை லேகியம் 617
27. தண்ணீர்விட்டான் கிழங்கு லேகியம் 619

பக்கம்

28. திப்பிலி லேகியம் 621
29. திரிபலாதி லேகியம் 621
30. தும்மட்டிக்காய் லேகியம் 622
31. தேற்றாங்கொட்டை லேகியம் 623
32. நத்தை லேகியம் 624
33. நாரத்தங்காய் லேகியம் 625
34. நெல்லிக்காய் லேகியம் 626
35. பரங்கிப்பட்டை லேகியம் 628
36. பிரண்டை லேகியம் 629
37. பூசணி லேகியம் 630
38. பெருங்காய லேகியம் 631
39. பேரீச்சங்காய் லேகியம் 633
40. மதனகாமேசுர லேகியம் 634
41. மதுமேக லேகியம் 636
42. மன்மத சிந்தாமணி லேகியம் 637
43. மிளகு லேகியம் 638
44. முடக்கத்தான் லேகியம் 639
45. முருங்கைப்பூ லேகியம் 641
46. மெருகன்கிழங்கு லேகியம் 642
47. வண்டுகடி லேகியம் 643
48. வில்வாதி லேகியம் 644
49. வெந்தய லேகியம் 646
50. வெள்ளைப்பூண்டு லேகியம் 647
51. பூரணாதி லேகியம் 648
52. மேகராசாங்க லேகியம் 649
53. சேங்கொட்டை லேகியம் 651
54. சாரணை லேகியம் 652
55. ரோசாப்பூ லேகியம் 653
56. வில்வாதி லேகியம் (வேறுமுறை) 654
57. திக்குவாய் நீங்க லேகியம் 657

பக்கம்

நெய்

1. அதிமதுர நெய் 658
2. அருகவேர் நெய் 659
3. ஆடாதொடை நெய் 660
4. கக்குவான் நெய் 661
5. கடுக்காய் நெய் 662
6. கருணைக்கிழங்கு நெய் 663
7. தண்ணீர்விட்டான் கிழங்கு நெய் 664
8. பிரம்மி நெய் 665
9. பொன்னாங்காணி நெய் 666
10. வல்லாரை நெய் 667
11. தேத்தாங்கொட்டை நெய் 668
12. சேங்கொட்டை நெய் 669
13. கெந்தக நெய் 670
14. குமரி நெய் 670
15. அரசவிதை நெய் 672
16. பூவந்திப்பட்டை நெய் 673
17. வில்வாதி நெய் 673
18. செங்கழுநீர்க்கிழங்குநெய் 675
19. வெண்பூசணி நெய் 675
20. கொடிக்கள்ளி நெய் 677
21. சதுரக்கள்ளி நெய் 678
22. பொற்றலைக் கையாந்தகரை நெய் 679
23. புளியாரை நெய் 679
24. வெள்ளறுகு நெய் 680
25. பூவரசு நெய் 681

வற்றல்

1. பிரண்டை வற்றல் 683
2. பிரண்டை வடகம் 683
3. வாழை வடகம் 683
4. இம்பூரல் வடகம் 684

பக்கம்

குடிநீர்

1. வாதசுரக் குடிநீர் 685
2. பித்த சுரக்குடிநீர் 686
3. கபசுரக்குடிநீர் 686
4. நிலவேம்புக் குடிநீர் 687
5. நெருஞ்சில் குடிநீர் 688

பற்று

1. வலிகளுக்கு பற்று 688
2. வீக்கங்களுக்குப் பற்று 689
3. சுளுக்கிற்குப் பற்று 689
4. நீர்க்கோவைக்கு பற்று 689
5. விட வீக்கங்களுக்குப் பற்று 689
6. கிரந்தி நோயிற்குப் பற்று 689

கண்மை

7. கண்ணிலிடும் மை 690
8. கண் மை 690
9. நசியம் 690
10. ஆவி பிடித்தல் 691

கட்டுகள்

1. இரசக்கட்டு 691
2. மயில் துத்தக்கட்டு 691
3. ஈயக்கட்டு 691
4. நாகக்கட்டு 691
5. தாளகக்கட்டு 691
6. சாரக்கட்டு 691
7. பூ நீர் 692
8. தாளகக்கட்டு 692
9. குருமருந்து 693
10. குளிகை 693
11. மருந்து உட்கொள்ளும் காலத்தில் ஆகாத பொருள்கள் 694
12. படிக்கார நீர் 694

பக்கம்

13. ஓமத்தீநீர் 694
14. சோம்புத் தீநீர் 695
15. சுக்குத் தீநீர் 695

நீர்க்குறி - நெய்க்குறி
நீர்-நிறக்குறி

சிறுநீரின் இலக்கணம் 697
சிறுநீரின் பொதுக்குணம் 697
சிறுநீரின் நிறம் 697
1. மஞ்சள் நிற நீரின் வகைகள் 697
2. சிவப்புநிற நீரின் வகைகள் 698
3. பச்சைநிற நீரின் வகைகள் 699
4. கருப்புநிற நீரின் வகைகள் 699
5. வெண்மைநிற நீரின் வகைகள் 700
6. நோயினால் ஏற்படக்கூடிய நீர்நிற வேற்றுமைகள் 700
7. சிறுநீரின் இலக்கணம் 701
8. அசாத்திய நீர்நிறம் 702

நெய்க்குறி

1. எள்நெய் விட்டுப் பார்க்கும் முறை 705
2. சிறுநீரில் எண்ணெய்விட்டுப் பார்க்கும் நீர்க்குறிப்புச் சக்கரம் 705

நஞ்சு முறிவு

1. இரச நஞ்சு 717
2. வீர நஞ்சு 719
3. பூர நஞ்சு 720
4. இலிங்க நஞ்சு 721
5. கெந்தக நஞ்சு 721
6. தாளக நஞ்சு 722
7. வெள்ளைப்பாடாண நஞ்சு 723
8. கௌரி பாடாண நஞ்சு 724
9. மிருதார்சிங்கி நஞ்சு 725
10. அப்பிரக நஞ்சு 725
11. கண்ணாடி நஞ்சு 726

பக்கம்

தாவர வகுப்பு - II

1. நெய் 727
2. நெய்-தேன் 727
3. குன்றிமணி 727
4. நெல்வேர் 728
5. நேர்வாளம் 728
6. மஞ்சள் அலரி 729
7. அபின் 730
8. கஞ்சா 730

சீவ வகுப்பு - III

1. நச்சுயிர்களின் எண்ணிக்கை 732
2. விஷப்பாம்பின் எண்ணிக்கை 733
3. நல்ல பாம்பின் பிறப்பு 734
4. கடிவாய் மணத்திலிருந்து இன்ன பாம்பு கடித்ததென அறிதல் 734
5. பாம்புக்கடியால் தீய குணத்தை உண்டாக்கும் இடங்கள் 735
6. பாம்புக் கடியால் தீயகுணத்தை உண்டாக்கும் அவையவங்களும், நேரமும் 735
7. தீராத விஷக்குறி குணம் 736
8. நாகங்களில் ஆண் பெண் அறிதல் 736
9. பாம்பு கடிப்பதற்குரிய காலங்கள் 736
10. விஷப்பற்கடிகளை அறிதல் 737
11. பற்கடி விஷங்களில் தீரக்கூடியதும் தீராத குறிகளும் 737
12. மண்டலி 738
13. எலி 738
14. மூஞ்சூறு, பெருச்சாளி, அணில் 740
15. செய்யான்கடி 740
16. பூரான்கடி 741
17. சிலந்திப்பூச்சி வகைகள் 741
18. சிலந்திப்பூச்சிகளிடமிருந்து உண்டாகும் விஷங்கள் 743
19. ஓணான் கடி 745

பக்கம்

20. தவளைக்கடி 745
21. பல்லிக்கடி 745
22. வண்டுகடி 746
23. மீன்கடி 747
24. அரணை நக்கலும் அதற்குரிய மருத்துவமும் 747
25. குரங்குக்கடி 748
26. பூனைக்கடி 748
27. நாய்க்கடி 749
28. வெறிநாய்க்கடிக்கு மருந்து 750
29. தேள்கடி 750
30. நட்டுவாக்களி கடிக்கு மருந்து 751
31. தீராத விஷங்களெல்லாம் தீருவதற்கு விஷக்குழம்பு 752
32. விஷ ராஜாங்க மை 752

சித்த மருத்துவமும், தத்துவ விளக்கமும்

சித்தமருத்துவம்

சித்தமருத்துவ வரலாறு

நம்நாடு தொன்மை சான்றது. மக்கள் முன் தோன்றி பண்பட்டு வாழ்ந்த காலத்திய பழமையுடையது. இதன் மொழிச்சிறப்பும், நாகரீகமும் உலகறிந்தவை. அக் காலத்திலேயே சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்ட மருத்துவமே சித்த மருத்துவமாகும்.

மக்களின் உள நோயையும், உடல் நோயையும் நீக்கும் முறையை உலகில் முதலில் கண்டுபிடித்தவர்கள் தமிழர்களே ஆவர். மனிதன் நோய்வாய்ப்பட்டால் அவனையும், அவன் உடலையும் நன்கு ஆராய்ந்து நோய் இன்னதெனத் தெரிந்து அந்நோயை நீக்குதற்குரிய மருந்தையும் அறிந்து செய்து கொடுத்து குணமாக்கிய பெரியோர்கள் முற்றும் துறந்த முனிவர்களாகவும், முக்காலமும் உணர்ந்த மேதைகளாகவும் இருந்ததால் அவர்களை அக்கால மக்கள் சித்தர்களென அழைத்தனர். சித்தம் - அறிவு. சித்தர்-அறிஞர்.

இத்தகைய சித்தர்கள் பல கலைகளிலும் புலமை நிரம்பியவராகத் திகழ்ந்து செயற்கருஞ் செயல்களைச் செய்து கைவரப்பெற்றுத் தாம் அடைந்த அந்நிலைமையை உலக மக்களும் "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் ஒரு கருணை நோக்கால் அவைகளை நூல்களாக எழுதி வைத்துள்ளார்கள். அவைகளே சித்த நூல்களென வழங்கப்படுகின்றன.

சித்த மருத்துவநூல் வழிவந்த வாதம், யோகம், ஞானம், காலம், மருத்துவம், மந்திரம், கணிதம் (சோதிடம்), வர்மம் முதலாய பல துறைகளும் கலந்துள்ளன. எனவே விரிவுள்ள தெளிவான அடிப்படைகளை ஆராய்ந்து உள்ளங்கை நெல்லிக்கனி போன்று காட்டவல்லன.

இம்மருத்துவக்கலை மேனாட்டு நாகரீகம் தோன்றுவதற்கு பன்னெடுங்காலத்திற்கு முன் அதாவது துவாபரயுகம் இரண்டாயிரத்து ஒன்பதுக்கு (அதாவது நூற்று தொண்ணூற்றைந்து கோடியே ஐம்பது நூறாயிரத்து பதினோராயிரத்து எழுபத்துமூன்று ஆண்டுகட்கு) முன் தோன்றியதாக வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகையால் நம்நாட்டு சித்தமருத்துவம் உலக மருத்துவத்திற்கே மூலகர்த்தாவாகும்.

குறிப்பு: துவாபரயுகம் வருடம் 2009க்கு, 195 கோடியே 50லட்சத்து 18ஆயிரத்து 9ஆண்டுகள் என வரையறுக்கப் பெற்றுள்ளது.

உலக மருத்துவ நெறிகள்

ரோமர் மருத்துவம்	கி.பி.முன்னூறிலும்
யுனானி மருத்துவம்	கி.பி. அறுநூறிலும்
கிரேக்க மருத்துவம்	கி.பி.தொள்ளாயிரத்திலும்
அஷ்டாங்கஹிருதயம்	கி.பி.தொள்ளாயிரத்திலும்
சாரங்கதர ஸம்ஹிதை	கி.பி.ஆயிரத்துமுன்னூறிலும்
பாவப்பிரகாசம்	கி.பி.ஆயிரத்துஅறுநூறிலும்
அலோபதி என்னும் ஆங்கில ஆங்கில மருத்துவம்	கி.பி.ஆயிரத்து எழுநூற்று எழுபத்தைந்திலும்

தோன்றியதாக அறிஞர்கள் முடிவெடுத்துள்ளனர். எனவே சித்தமருத்துவம் மேறகூறப்பெற்றவைகளிலிருந்து மிகத் தொன்மையானது என்பது தெளிவு.

சித்தர்கள் பதினெண்மர்

ஆதிகாலத்திலே தில்லையில் திருமூலர் அழகர்மலை இராமதேவர்
அன்புடைய அனந்த சயனத்திலே கும்பமுனி அருணையில் இடைக்காடர்
வாத வைத்தீசுவரன் கோயிலில் தன்வந்திரி வான்மீகர் எட்டு குடியில்
மருதாசலத்திலே பாம்பாட்டியும் திருமாயீரமாம் குதம்பை
பாத செங்கழனி ஆரூரிலே கமலமுனி பழனிமலை போகநாதர் பராபரன்
குன்றிலே மச்சமுனியும் திருப்பதியில் கொங்கணவரும்
சேதுஇராமேசுரந் தன்னிலே பதஞ்சலி, திகழ்காசி நந்திதேவர் செப்பரிய
கருவூரில் காங்கேயரும், பெருமைசேர் பொய்யூர் கோரக்கரும்
சோதிரங்கத்திலே சட்டமுனி மதுரையில் சுந்தரானந்ததேவர்-தூல
சூக்குமமுடன் காரணமறிந்துமே துவாதசாந்தத்தின் வெளியில்
நீதிமயமாகவே இத்தலங்களும் இவர்கள் நிட்டைபுரிகின்ற தலமாம் நீடுழி
வாழ் அன்பர் முத்திக்கு வித்தாய் நிறைந்திருக்கின்ற தலமே.

இவர்களுள் போகர், புலிப்பாணி, இராமதேவர் (யாக்கோபு) முதலியவர்களைத் தவிர ஏனைய சித்தர்கள் அனைவரும் தமிழர்களே. ஆதலின் சித்தமருத்துவம் தமிழ்நாட்டுக்கே உரியதாகும். ஏனெனில் சித்தர்கள் இயற்றிய நூல்கள் அனைத்தும் தமிழ் நூல்களாகவே உள்ளன. சித்தமருத்துவம் சிவ, சக்திகளின் அருளால் ஆக்கப்பெற்றது. தொன்மைக்காலத்தில் சித்தமருத்துவ நெறி அநேக சித்திகளைப் பெற்றிருந்தது.

உலகில் வழங்கும் எல்லா தந்திரத் தொழில்களிலும் வித்தை நூற்களிலும், விஞ்ஞான வளர்ச்சிகளிலும் சித்தர்கள் மேற்கொண்ட முறைகளில் அறிவும், திறனும் வியப்படையக் கூடியதாய்க் கலந்துள்ளன. சித்தர்கள் மருத்துவமுறையைக் கையாண்ட காலத்தை சித்த மருத்துவத்தின் பொற்காலம் என்று கூறலாம்.

சித்தமருத்துவ முறைகளில் கையாண்ட பொருள்களைப் பற்றிய வினாக்கட்கு எளிதில் விடை கூற இயலாது. சித்தர் முறைகள் ஆன்மசக்தி அடைந்தபிறகு, பொருள் தெளிவாகத் தெரிந்தபின்பு அவர்களின் மெய்ஞ்ஞான அறிவின் விளக்கத்தாலும், அனுபவத்தாலும் வரையப் பெற்றவை.

இந்நூல்கள் உண்மைப் பொருளையே அடிப் படையாகக்கொண்டகாரணத்தால் இதனைக் குறைகூறி ஒருவராலும் மறுக்க இயலாது. ஒருவன் மிக்க ஆர்வத்தோடு சித்தமருத்துவ நூல்களைக் கற்று அனுபவத்தோடு இணைத்துப் பொருட்களை உணரவேண்டும் என்று உண்மையாகவே முயற்சித்தாலன்றிப் பல்வேறு பொருட்கள் அவனுக்குப் புலப்படாது. அதனால் ஒரு இரகசிய வித்தையெனவே தோன்றும். ஆதலின் ஒருவரும் இம்முறையைப் பற்றிக் குறை கூற இயலாது. சித்தர்கள் மறைமொழியில் கூறியுள்ள பொருள்களை அவர்தம் நூல்களை முற்றும் செவ்வையாகக் கற்றவர்களே கூறவியலும்.

சித்தர் நூல்கள் சித்தர்களின் மத்தக அறிவால் நோய் நீக்கமுறையிலும், காயகற்ப முறையிலும் மிக்க தேர்ச்சிபெற்ற பயனுள்ள செய்திகளைக் கூறும் நூல்கள் எனக்கருத வேண்டும். அதில் எவ்வளவு சுருக்கமாக மறைபொருளாகக் கூறி இருந்தாலும் அதனை உயர்ந்த கொள்கையாகவே கருதவேண்டும். ஏனெனில் நுட்பமான பல அறிவியல் கருத்துக்களை அந்நூல்களுள் காணலாம்.

நம் நாட்டில் மேலைநாட்டு நாகரீகம் எவ்வாறு பரவிக்கலந்துள்ளதோ அதுபோல மேலைநாடுகளில் நம்நாட்டு ஞானமார்க்கம் ஒன்றுபடுமானால், நமது நாட்டு மருத்துவமுறைக்கும், மேலைநாட்டு மருத்துவமுறைக்கும் இடையில் இருக்கும் பேதங்கள் மறைந்துவிடும். ஆனால் இவ்வாறு நிகழ நெடுங்காலம் ஆகுமென எண்ண வேண்டாம்!!

இம்மருத்துவத் துறையில் மிக்க திறமைவாய்ந்த மருத்துவர்கள் தங்களுடைய மேன்மை பெற்ற அறிவின் தேர்ச்சியையும், தாம் கண்ட உண்மைகளையும் வெளிக் காட்டிக்கொள்ளாமல் மறைவாகவே வைத்திருக்கிறார்கள்.

சிலர் தங்கள் மக்கட்குக்கூட தாம் கண்டறிந்த உண்மைகளையும் மருந்துகளையும் பயிற்றுவிக்காமல்

இறந்தொழிந்தார்கள். போதிய தெளிவோடு சித்தமருத்துவ நூல்கள் அச்சேறி எல்லோருக்கும் கிடைத்தற்கு வாய்ப்பில்லாமையாலும், புதிய ஆங்கில மருத்துவத்தில் மோகம் மிகுதியாக ஏற்பட்டதாலும், சித்தமருத்துவக்கலை இடைக்காலத்தில் வளர்ச்சியுறாது குன்றிற்று.

சித்த மருத்துவம்: தமிழ் மருத்துவம் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே நாடெங்கிலும் நன்கு பரவி இருந்தது. இம்மருத்துவ முறையைத் தமிழ் மருத்துவர்கள் மூதாதையர் களிடமிருந்து வழிமுறை வழக்காகப் பயிற்சியும், தேர்ச்சியும் பெற்று வளர்த்து வந்திருக்கின்றார்கள். அவர்களைப் பண்டைக்கால மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்கள் பேராதரவு தந்து பேணி வந்தனர் என்பதைப் பல இலக்கியங்களாலும், கல்வெட்டுக்களாலும் நன்கு அறியலாம். தற்காலத்திலும் அச்சேறப்பெறாத பல்லாயிரக்கணக்கான ஏட்டுச்சுவடிகள் இருந்துவருகின்றன. அவைகளைத் தொகுத்து வெளியிட நம் பாரதப்பேரரசு முன்னுக்கு வந்து செயலாற்றுவது போற்றற்குரியதாகும்.

மக்கள் தங்களைச் செம்மையுறப் பேணிக்கொண்டு வாழ்நாட்களைப் பெருக்குவதற்கு ஆதாரமானவை சித்தமருத்துவ நூல்களே. இந்நூல்கள் முதன்முதலாக அம்மையாருக்கு அரனும் பின்னர் முறையே முருகனார், நந்திதேவர், அகத்தியர் ஏனைய சித்தர்கட்கும் போதிக்கப் பெற்று வழிவழி வரலாயின. இவர்களனைவரும் தொன்மைத்தமிழ் மரபினரேயாவர்.

சித்தமருத்துவம் சித்த மருத்துவர்களால் மன்பதை வாழவேண்டுமென்ற பெருங்கருணை நோக்கால் எளிய பாடல் உருவில் இயற்றப்பெற்றுள்ளன. அவை அக்கால மக்கள் நன்கு அறிந்த சொற்களிலேயே அமைந்துள்ளன. ஏனைய மருத்துவக் கொள்கைகளைப் போலல்லாமல் சித்தர்முறையில் உண்மையான நெறியில் தோற்றுவிக்கப் பட்டுள்ளன. இத்தமிழ் முறையில் மட்டுமே

பழவினைகளைப் பற்றிய கொள்கைகள் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. இப்பழவினை நம்பிக்கை ஒன்றைத்தவிர ஏனையவைகளைத் தற்காலத்திய மேனாட்டு மருத்துவர் எவராலும் குறைகூற இயலாத சிறப்பினையுடையது. ஆனால் பழவினைகள் மேனாட்டு மருத்துவத்திற்கும், பரிசோதனைக்கும் இன்றுவரை புலனாகாத நிலையில் இருந்துவருகின்றன. இவ்விடைக் காலத்தில் மேனாட்டு மருத்துவமுறை பேரளவில் பரந்திருந்தாலும் அவர்களால் தீர்க்கவியலாத பல நோய்கள் பேரூர்களிலும், சிற்றூர்களிலும் பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் சித்தமருத்துவர்களால் குறைந்த செலவில் சிகிச்சை செய்யப்பெற்று குணமடைந்து வருதல் கண்கூடு.

இவ்வாறு சித்தமருத்துவம் தமிழ்நாட்டில் மட்டும் பரவி இருப்பதல்லாது பர்மா, இலங்கை, பினாங்கு, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா முதலான அயல் நாடுகளிலும், கீழைத்தீவுகளிலும், மடகாஸ்கர், பிலிப்பைன்ஸ் முதலிய பல இடங்களிலும் பரப்பப்பட்டுள்ளது.

சித்தமருத்துவ முறை இவ்வுலக வாழ்வை அடிப்படையாக் கொண்டதாகும். ஆகவே அண்டமும், பிண்டமும் ஒன்றே எனும் கருத்து இதனுள் அடங்கி உள்ளது. இன்றைய மேனாட்டு அறிவியல் கொள்கையும் சித்தமுறையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந் திருக்கிறது. மேலும் சித்தர் முறைப்படி அண்ட பிண்ட கோட்பாடுகளினால் சித்தமருத்துவத்திற்கும், கணித நூலாகிய சோதிடத்திற்கும் தொடர்புள்ளது. ஆகையால் ஒவ்வொரு சித்தமருத்துவரும் கணித நூலாகிய சோதிடத்தில் சிறிதேனும் அறிவுபெற்றிருத்தல் வேண்டுமென்பது மிக இன்றியமை யாததாகும்.

சித்தமருத்துவம் வாதம், வைத்தியம், யோகம், ஞானம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டது. இவற்றுள் வாத வைத்தியம் யோக ஞானத்திற்கு அடிப்படையாக உள்ளது.

சித்தர்களில் ஒருவரைப் போலவே மற்றையோரும் வாதத்தை வைத்தியத்துடன் பிணைத்துக் கூறி உள்ளனர். ஏனெனில் தாம் கொண்ட கருத்திற்கிணங்க இறுதியில் பேரின்பம் அடைவதற்காகவே மேற்கூறிய வாதம் வைத்தியம் இரண்டிற்கும் ஏம வைத்தியம் (காப்பு மருத்துவம்) என்றும், ஏனை யோக, ஞானம் இரண்டிற்கும் "பிர்ம வைத்தியம்" என்றும் பெயர். தன்னைத் தானே காத்துக்கொள்ள வாதம் இன்றியமையாததாலால் அவன்கொண்ட குறிக்கோளை நிறைவுசெய்ய உதவும் வகையில் வாதம் ஏற்படுத்தப் பெற்றுள்ளது. ஆனால் மருத்துவனோ நோய்களைத் தகுந்தவாறு போக்கவும் தடுக்கவும் வேண்டிய காலமட்டும் தன்னுடலை நிலைக்கச் செய்யவும் வாய்ப்பாயிருக்குமாறு ஏற்படுத்தப்பெற்றுள்ளது. சித்தர்கள் இதனைத் தம் முதல் நோக்கமாகக்கொண்டு நோய் தங்களை தாக்காதிருக்கவும், மரணத்திற்கு அஞ்சாதிருக்கவும் வழிகளை வகுத்துக் கொண்டனர். அடுத்து மூப்புத் தன்மையுறாவண்ணம் உலோகங்களனாலாய வைப்புச்சரக்காகிய பற்பம், செந்தூரம், சுண்ணம் முதலாகிய மருந்துகளை உண்டு காயத்தை (உடலை) அழியாது உறுதிப்படுத்தியும் ஆன்மாவை ஒருமைப்படுத்தியும் கொண்டனர்.

சித்தர்கள் யோக சாதனையினால் தங்கள் ஆயுளைப் பெருகச்செய்துகொண்டு தன்னைத் தானறிந்து அச்சாதனையினால் சித்திபெறுதற்கு ஈடுபட்டனர். சித்தர்கள் நூல் முழுவதும் அவர்கள் சித்தி அடைந்தபிறகு, தாம் யூகத்தினால் கண்டறிந்த கருத்துக்களைத் தங்களுக்கே உரிய மறைமொழிகளில் எழுதலாயினர். இச்சித்தர்களுடைய வாத வைத்தியமானது கிரேக்கர்களுடைய நால்வகை ஞான போதனை சாதனைகட்கும், அறுவகையான இந்திய ஞானசபைகட்கும் ஆதாரமுள்ளதாகத் தற்காலத்தில் கருதப்படுகின்றன.

வாதமானது தாது, தாவர, சீவ வர்க்கங்களின் உதவியைக்கொண்டு இரும்பு, செம்பு ஆகிய

உலோகங்களைப் பல்வேறு வழிகளில் பொன்னாக மாற்றக்கூடிய நெறிகளை விளக்கமாகக் கூறும் வைப்புச்சரக்கு முறையின் ஒருபகுதி ஆகும்.

இதனால் உலோகம் முதலிய பொருட்களின் தன்மையைப் பிரிக்கவும், மறுபடி ஒன்றுசேர்க்கவும் "Alchemy" இரசவாதமுறை வன்மையான முறையாகும். சித்தநூலின் வழி இவ்வாதமுறை ஆன்ம சக்தியை மூலமாகக்கொண்டது. ஆகவே மனிதனுக்கு இயல்பாகவே அமைந்த ஞான அறிவிற்கு இதைப் பொன்னிழைக்கும் உரைகல்லெனக் கருதலாம். வாதத்தில் ஈடுபடுபவன் முதலாகக் கிரகங்களின் அமைப்புக்குத் தக்கவாறு பிறந்து பிறவியிலேயே வாதியாயிருக்கவேண்டும்.

தொண்ணூற்றாறு தத்துவங்கள், பல்வேறு கொள்கைகள், தொழில்கள்

உடற்கூற்றை ஆராயுங்கால் பூதம் ஐந்து, பொறி ஐந்து, புலன் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கரணம் நான்கு, அறிவு ஒன்று, நாடி பத்து, வாயு பத்து, ஆசயம் ஐந்து, கோசம் ஐந்து, ஆதாரம் ஆறு, மண்டலம் மூன்று, மலம் மூன்று, தோடம் மூன்று, ஈடனை மூன்று, குணம் மூன்று, வினை இரண்டு, விகாரம் எட்டு, அவத்தை ஐந்து எனத் தத்துவங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும்.

96 தத்துவங்களின் தொழில்கள்

1. ஐந்து பருப்பொருள்கள்: (ஐம்பூதங்கள்)

(அ) **மண்(பிருதிவி)** உடலில் எலும்பு, தோல், ரோமம், நரம்பு, தசை, உரத்துத்தரித்தல், வடிவம்-நாற்கோணம், நிறம்-பொன்மயமான மஞ்சள் நிறம், தேவதை-பிரமன், சூக்கும பஞ்சாட்சரம்-அகரம்.

(ஆ) **நீர் (அப்பு)** ஓடுநீர், குருதி, வெந்நீர், மூளை, கொழுப்பு, குளிர்ந்து பதஞ்செய்தல், வடிவம்-இருகோணம், நிறம்-வெண்மை, தேவதை விட்டுணு, சூக்கும பஞ்சாட்சரம்-உகாரம்

(இ) **தீ (தேயு)** உணவு, தூக்கம், அச்சம், சேர்க்கை, சோம்பல், சுட்டொன்றுவித்தல், வடிவம்-முக்கோணம், நிறம்-செம்மை, தேவதை-உருத்திரன், சூக்கும பஞ்சாட்சரம்-மகாரம்.

(ஈ) **வளி (வாயு)** ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல், சலித்துத்திரட்டல், வடிவம்-அறுகோணம், நிறம்-கருமை, தேவதை-மகேசுரன், சூக்கும பஞ்சாட்சரம்-விந்து.

(உ) **விண் (ஆகாயம்)** இன்பம், உட்பகை, ஈயாமை, பெருவேட்கை, கொழுப்பு, நிரந்தரமாய் இடங்கொடுத்தல், வடிவம்-வட்டம், நிறம்-புகை, தேவதை-சாதசிவன், சூக்கும பஞ்சாட்சரம்-நாதம்.

2. ஐம்பொறிகள் (ஞானேந்திரியங்கள்)

(அ) **செவி (சுரோத்திரம்)** விண்ணின் கூறாக நின்று செவியைப் பொருந்தி ஒலியை அறியும்.

(ஆ) **மெய் (துவக்கு)** வளியினிடமாய் நின்று உடலைப் பொருந்தி ஊற்றை அறியும்.

(இ) **கண் (சட்சு)** தீயின் கூறாக நின்று கண்ணைப் பொருத்தி உருவத்தை அறியும்.

(ஈ) **நாக்கு (சிங்குவை)** நீரின் கூறாக நின்று உருசியை அறியும்.

(உ) **மூக்கு (கிராணம்)** நீரின் கூறாக நின்று உருசியை அறியும்.

3. ஐந்துதொழில்உறுப்புகள் (பஞ்சகன்மேந்திரியங்கள்)

(அ) **வாய் (வாக்கு)** விண்ணின் கூறாக நின்று வசனிக்கும்.

(ஆ) **கால் (பாதம்)** வளியின் கூறாக நின்று நடக்கும்.

(இ) **கை (பாணி)** தீயின் கூறாக நின்று இடுதலும் ஏற்றலும் செய்யும்.

(ஈ) **எருவாய் (பாயுரு)** நீரின் கூறாக நின்று மலத்தைக் கழிக்கும்.

(உ) **கருவாய் (உபத்தம்)** மண்ணின் கூறாக நின்று சுக்கிலத்தைக் கழித்து மகிழும்.

4. நான்கு கரணங்கள்

1. **மனம்:** இது வாயுவின் கூறாக அலைந்து விஷயங்களை நினைக்கும்.

2. **புத்தி:** இது தேயுவின் கூறாக ரூப பேதங்களைத் தெரிவிக்கும்.

3. **அகங்காரம்:** இது பிருதிவியின் கூறாக விஷயங்களை கொண்டெழுப்பும்.

4. **சித்தம்:** இது அப்புவின் கூறாக விஷயங்களைப் பற்றச்செய்யும்.

அறிவு

அறிவு: விண்ணின் கூறாக உச்சியில் நின்று நல்வினை, தீவினை எனப் பகுத்தறியும்.

இதுவரையில் கூறப்பெற்றுள்ள 30 தத்துவங்களும் ஆத்மதத்துவம் எனப்படும்.

நாடிகள் பத்து (தசநாடிகள்)

1. ***இடகலை:*** வலக்காற் பெருவிரலினின்று கத்தரிக்கோல் போல மாறலாக இடமூக்கைப்பற்றி நிற்பது.

2. ***பிங்கலை:*** இடக்காற்பெருவிரலினின்று கத்தரிக்கோல் போல மாறலாக வலமூக்கைப் பற்றி நிற்பது.

3. ***சுழுமுனை:*** மூலாதாரத்தைத் தொடர்ந்து எல்லா நாடிகளுக்கும் ஆதாரமாக நடுநாடியாய் சிரசளவு முட்டி நிற்பது.

4. ***சிங்குவை:*** உண்ணாக்கில் நின்று சோறு தண்ணீர் இவைகளை விழுங்கப்பண்ணுவது.

5. ***புருடன்:*** வலது கண்ணனவாய் நிற்பது.

6. ***காந்தாரி:*** இடக்கண்ணளவாய் நிற்பது.

7. ***அத்தி:*** வலக்காதளவாய் நிற்பது.

8. ***அலம்புடை:*** இடக்காதளவாய் நிற்பது.

9. ***சங்கினி:*** குறியின் அளவாய் நிற்பது.

10. ***குரு:*** அபானத்தளவாய் நிற்பது.

வளிகள் பத்து (தச வாயுக்கள்)

1. ***பிராணன்:*** மூலாதாரத்திலிருந்து தோன்றி மூக்கின் வழியாய் மூச்சு விடலாற் பன்னிரண்டு அங்குலதூரம் சென்று மீண்டு எட்டங்குலம் உள்ளுக்குப்பாய்ந்து, நாலங்குலம் வீணாகும். விடுதலும், வாங்குதலும் செய்தல், உண்ணும் பல்வேறு உணவுகளையெல்லாம் சீரணிக்கச்செய்யும், நீல நிறமாயிருக்கும். இதற்கு கடவுள் சந்திரன் நாழிகை ஒன்றுக்கு முன்னூற்றறுபது சுவாசமாக நாளொன்றுக்கு இருபத்

தோராயிரத்து அறுநூறு சுவாசம் உண்டாய், அவற்றில் பதினாலாயிரத்து நானூறு சுவாசம் இழுப்பதனால் உள்ளுக்கு வந்து, ஏழாயிரத்திநூறு சுவாசம் வெளியே சென்று பாழாகும்.

2. அபானன்: சுவாதிட்டானத்திலிருந்து வெளிப்பட்டுக் கீழ்நோக்கி மலசலத்தைத் தள்ளும். பச்சை நிறமுள்ளதாகும். ஆசனவாயைச்சுருக்கும். அன்ன சாரத்தைச் சேரவேண்டிய இடங்களில் சேர்ப்பிக்கும். இதற்கு கடவுள் வரதராசன்.

3. வியானன்: தோலிலிருந்து எழுபத்தீராயிரம் நரம்பிலும் சென்று, இவ்வுடலில் உள்ள அசையும் பொருள், அசையாப்பொருள் என்னுமிரண்டிலிருந்தும் உறுப்புக்களை நீட்டவும், முடக்கவும் செய்து, பரிசங்களையறியும், உண்ணும் உணவின் சாரத்தை அவ்விடங்களில் நிறைப்பித்து, உடலைக்காக்கும்; பால் நிறமுள்ளதாகும். இதற்கு இயமன் கடவுளாம்.

4. உதானன்: உதாரக்கினியிலிருந்து தோன்றி உணவின் சாரத்தைக் கூடியிருந்து அதை ஆங்காங்கே நிறுத்தும். அதை வெளிப்படுத்தியும், கலக்கியும் வருதல் செய்யும். மின்னல் நிறம் உள்ளதாகும். இதற்கு கடவுள் அக்கினித்தேவனாகும்.

5. சமானன்: நாபியிலிருந்து கால் வரையிலும் சீராகப் பரவிப்பாய்ந்து, மற்ற வாயுக்களை மீறவொட்டாமல் ஒழுங்குபெறச் செய்யும்; அறுசுவைகளையும் தண்ணீர் அன்னம் ஆகியவற்றையும் சீரிபெறச்செய்து, உடலில் எல்லாம் சேருமாறு செய்யும்; புட்பராக நிறமுள்ளதா யிருக்கும். இதற்கு கடவுள் சூரியன்.

6. நாகன்: கலைகளனைத்தையும் கற்குமாறு அறிவை எழுப்பும்; நல்ல பண்புகளைப் பாடுவிக்கும்; கண்களைத் திறக்குமாறு செய்யும்; மயிர்களை சிலிர்க்கச்செய்யும்; பொன்னிறமுள்ளதாய் இருக்கும்; இதற்கு கடவுள் அனந்தன்.

7. கூர்மன்: மனத்திலிருந்து தோன்றி கண்ணிலிருந்து இமையைக் கொட்டுவிக்கும்; கொட்டாவி உண்டுபண்ணும்;

வாயை மூடச்செய்யும்; பலத்தை உண்டுபண்ணும்; கண்களைத் திறக்கவும், மூடவும் பண்ணும்; உலகில் உள்ள தோற்றங்களனைத்தையும் கண்களுக்குக் காண்பிக்கும்; கண்களினின்றும் நீரை விழச்செய்யும். வெண்மை நிறமுள்ளதாக இருக்கும். இதற்குக் கடவுள் திருமால்.

8. கிருகரன்: நாவிலிருந்து நாவிற் கசிவையும், நாசியிற் கசிவையும் உண்டாக்கும் காரியத்தைச் செய்யும்; ஒன்றையே நினைத்து இருக்கச்செய்யும்; போதற்றொழிலைச் செய்யும்; தும்மலையும்; இருமலையும் உண்டாக்கும்; கருமைநிறம் உடையதாயிருக்கும். இதற்குக் கடவுள் சிவன்.

10. தனஞ்செயன்: மூக்கினின்று தடித்து உடல் முழுதும் வீங்கச்செய்யும்; காதில் கடல்போன்றிரைச்சலிட்டு இறந்துவிடின் காற்றெல்லாம் வெளியேறிய பின்னர் மூன்றாம் நாளில் தலைவெடித்தபின் இறந்துபோகும். நீல நிறம் உள்ளதாயிருக்கும். இதற்குக் கடவுள் தன்வந்தரி.

ஆசயம் ஐந்து

1. **இரைக்குடல்** *(அமர்வாசயம்):* உண்ட அன்னசாரம் அமரும் இடம்.

2. **செரிகுடல்** *(பகிர்வாசயம்):* அன்னம் பகருமிடம்.

3. **நீர்க்குடல்** *(சலவாசயம்):* நீர்க்குழி.

4. **மலக்குடல்** *(மலவாசயம்):* மலக்குழி.

5. **வெண்ணீர்க்குடல்** *(சுக்கிலவாசயம்):* வெண்ணீர்ப் பிரியுமிடம்.

கோசம் ஐந்து

1. **உணவுடம்பு** *(அன்னமயகோசம்):* ஏழு உடற்கட்டினால் ஆக்கப்பட்ட உடல் *(அன்னமயகோசம்)*

2. வளியுடம்பு (பிராணமயகோசம்): பிராணனும், கன்மேந்திரியமும் கூடியது.

3. மனவுடம்பு (மனோமயகோசம்): மனமும் ஞானேந்திரியமும் கூடியது.

4. அறிவுடம்பு (விஞ்ஞானமயகோசம்): அறிவும் ஞானேந்திரியமும் கூடியது.

5. இன்ப உடம்பு (ஆனந்தமயகோசம்): பிராணவாயுவும் சுழுத்தியும் கூடியது.

ஆதாரம் ஆறு

மூலாதாரம் (மூலம்): கால் எலும்பு இரண்டும், கதிர் எலும்பும் கூடிய இடம் குய்யம், குய்யத்திற்கும், குதத்திற்கும் (எருவாய்க்கும்) (கருவாய்க்கும்) குண்டலி வட்டமாய், அவ்வட்டத்தின் நடுவே திரிகோணமாய், அந்தத் திரிகோணத்திற்கு நடுவே நாலிதழுடைய ஒரு புட்ப வட்டமாய், கடம்பப்பூ போன்று இருக்கும். அந்தப் பூவிற்கு நடுவில் ஓங்காரவெழுத்து நிற்கும், அந்த ஓங்காரத்திற்கு நடுவில் கணபதியும் வல்லபை சக்தியும் எழுந்தருளி யிருப்பார்கள் மாணிக்க நிறமுள்ளது.

சுவாதிட்டானம் (கொப்பூழ்): மூலாதாரத்திற்கு இரண்டுவிரக்கடைக்கு மேலிருப்பது. இது நாற்சதுரமும் அச்சதுரத்தினடுவே ஆறிதழ்களையுமுடைய ஒரு புட்ப வட்டமும், அதன் மத்தியிலே லிங்க பீடமும், வீணாத்தண்டின், அடியுமாயிலங்கி அதனடுவிலே நகார எழுத்து நிற்கும். அந்த நகாரத்தின் நடுவில் பிரம்மாவும், சரசுவதியும் வீற்றிருப்பார்கள். இது பிருதிவியின் கூறாகும்; பொன்னிறமாம்.

மணிபூரகம் (மேல்வயிறு): சுவாதிட்டானத்திற்கு மேல் எட்டுவிரல் பிரமாணத்தில் இருப்பது மணிபூரகம். இது கோழிமுட்டையைப் போன்று 1008 நரம்பு நாடிகளும் சூழ்,

நாடிகளுக்கெல்லாம் வேர் போன்றுள்ளது. இதை அக்கண்ணுள்ளோர் உந்திக்கமலம் என்றும் கூறுவர். இது கெக்பபூழுக்கு நேரில் அப்பு ஸ்தானத்தில், ஏழாம்பிறைக்கு இணங்கி இருக்குமாம். இதனடுவே பத்து இதழுடைய ஒரு புட்ப வட்டமாய் இருக்கும். அந்த புட்பத்தினடுவே மகாரவெழுத்து நிற்கும். அந்த மகாரத்தின் நடுவில் மகாவிட்டுணுவும், மகாலெட்சுமியும் எழுந்தருளியிருப் பார்கள். அது பச்சை நிறமுள்ளது.

அனாகதம் (நெஞ்சம்): மணிபூரகத்திற்கு பத்து விரற்கடைப் பிரமாணமுள்ள இடத்திற்கு மேல் உள்ளது. அனாகதமாம், இஃது இருதய கமலமாம். தேயுத்தானத்தில் முக்கோணமாய் இருக்கும் அந்த முக்கோணத்தின் நடுவில் பன்னிரண்டு இதழுடைய ஒருபுட்ப வட்டமாய் இருக்கும். அந்த புட்பத்தின் நடுவில் சிகாரவெழுத்து நிற்கும். அந்த சிகாரத்தின் நடுவில் உருத்திரனும் பார்வதியும் அமர்ந்திருப்பார்கள். அக்கினி நிறத்தை உடையது.

விசுத்தி (மிடறு): அனாகதத்திற்கு பத்துவிரற்கடை பிரமாணமுள்ள இடத்திற்கு மேல் உள்ளது விசுத்தியாம். இது கண்டதானத்திலே வாயுத்தானத்தில் உள்ளது. அறுகோணமா யிருக்கும். அந்த அறுகோணத்தின் நடுவில் பதினாறு இதழை உடைய ஒரு புட்ப வட்டமிருக்கும். அந்த புட்பத்தின் நடுவில் மகோசுரனும், மகேசுவரியும் எழுந்தருளியிருப்பார்கள். கருநிறத்தினையுடையது.

ஆக்கினை (புருவநடு): இது விசுத்திக்குப் பன்னி ரண்டு விரற்கடைப் பிரமாணமுள்ள இடத்திற்குமேல் ஆக்ஞை, லலாட பீடத்தில் இருக்கின்றது. வீணாதண்டின் முடியுமாய், ஊடுருவிப் பொன்போன்ற வடிவமுற்று நிற்கும். நெற்றிப் புருவத்தின் வெளியாய் ஆகாயத்தானத்தில் மூன்றிதழுடைய ஒருபுட்பத்தின் நடுவே யகார எழுத்தோடிணங்கி நிற்கும். அந்த யகாரத்தின் நடுவே சதாசிவமும் மனோன்மணியும் எழுந்தருளியிருப்பர். படிக நிறத்தை உடையது.

மண்டலம் - 3

1, **அக்கினிமண்டலம்:** இது மூலாதாரத்திற்கு இரண்டு விரற்கடைக்கு மேல் சுவாதிட்டானத்திற்குக் கீழே முச்சுடராய்த் தோன்றும்.

2. **சூரியமண்டலம்:** இது மணிபூரகத்திற்கும், அனாகதத்திற்கும் இடையில் உந்திக்கு நான்குவிரற்கடைக்கு மேல் வட்டமாகத் தோன்றும்.

3. **சந்திரமண்டலம்:** இது விசுத்திற்கு மேலே ஆக்ஞைக்குக் கீழே சிரசின் மத்தியில் தோன்றும். இது மிகவும் பிரகாசமாக இருக்கும். இதனை அமுதகலை என்றும் கூறுவர்.

மலம் - 3

1. ஆணவம்: இது செம்பில் களிம்பேறுவதைப் போல ஆத்மாவிற்குக் களங்கம் தோற்றுவித்து, யான் என்னும் அறியாமையைப் பிறப்பித்துதான், தன் மனைவி மக்கள் என்றே உழலச்செய்யும்.

2. காமியம்: இது பார்வையில் கண்டவைகளை எல்லாம் இச்சித்து இதாகிதத்தில் புண்ணிய பாவங்களை உண்டாக்கும்.

3. மாயை: இது தனதல்லாததைத் தனதென்று பாவித்து மற்றவர்களுக்கு இடையூறு விளைவிக்கச் செய்யும்.

திரிநாடிகளின் இயல்

வாதமாய்ப் படைத்து

உலகம் என்ற சொல் இந்த மண்ணுலகை மட்டும் குறிக்கும் சொல்லாகப் பயன்படுகிறது. பேரண்டமானது இவ்வுலகும், சூரியனும், திங்களும் இன்னும் அண்ட வெளியில் கண்ணுக்குத் தெரிபவையும் தெரியாதனவுமாக

எண்ணற்ற கோள்களை உள்ளடக்கியிருக்கின்றது. இக்கோள்களெல்லாம் எப்போது உண்டானவை என்று கூற எவராலும் இயலவில்லை. அப்படி என்றோ இனம் தெரியாத காலத்தில் படைக்கப்பட்ட கோடிக்கணக்கான கோள்களில் இவ்வுகலகம் ஒன்று. ஆராய்ச்சியாளர் கூற்றுப்படி, சூரியனிலிருந்து சிதறிவிழுந்த ஒரு துண்டம்தான் இந்த உலகம். எனினும், அந்தச் சூரியன் எப்போது உண்டாயிற்று என்று அறுதியிட்டுக் கூற இயலவில்லையன்றோ? எனவே இவ்வுலகு உண்டான பின் அதில் உயிர்த்தோற்றம் எப்போது ஆரம்பமானது என்பதையும் அறுதியிட்டுக் கூறவியலாது.

பூமி, வெறும் நெருப்புக்கோளமாக இருந்தபோதும் அதனைச் சுற்றியுள்ள வெளியில் காற்றுமண்டலம் இருந்திருக்கிறது. இப்போதும் அக்காற்று மண்டலம் இருக்கிறது. இந்தக்காற்று மண்டலத்தில் உள்ள வாயுதான் கோளங்கள் தோன்றவும் மற்றும் அனைத்து ஆக்கப்பாடுகளுக்கும் காரணமாயிருந்திருக்கிறது. பூமியானது நெருப்புப் பிழம்பாயிருந்தபோது என்ன நிகழ்ந்ததென்று அறுதியிட்டுக் கூற முடியாவிட்டாலும் அது குளிர்ந்து இறுகியபின், பல மாற்றங்கள் அடைந்திருப்பதைக் காண்கிறோம். மேல்பாகம் மட்டுமே குளிர்ந்திருக்கிறது. உள்ளே இன்னும் அந்த நெருப்புக் குழம்பி இருப்பதால்தான் பல பூகம்பங்கள் உண்டாகின்றன. எனவே பூமியின் மேல்பாகம் குளிர்ந்து இறுகியபின், பூமியைச் சுற்றிலுமுள்ள காற்று மண்டலத்திலுள்ள வாயுக்களின் கூட்டுறவால் பலவித ரசாயன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கக்கூடும்.

நவீன விஞ்ஞானக் கூற்றுப்படி பூமியைச் சுற்றிலுமுள்ள வெளியில் பலவிதவாயுக்கள் கலந்திருப்பதாக அறிகிறோம். அவற்றில் மிக முக்கியமானவை பிராணவாயு (Oxygen), நீதுருசவாயு (Nitrogen), நீர்வாயு (Hydrogen), கரியமிலவாயு (Carbon-di-oxide) என்பனவாகும்.

உயிருக்கும் உயிர் இயக்கத்திற்கும் ஆதாரமான வாயு, பிராணவாயு ஆகும். தாயின் கருப்பையிலிருந்து வெளியே வந்து பிறந்துவிட்ட குழந்தை, நிலத்தில் விழுந்தவுடன், தாயினின்றும் பிரிக்கப்படுகிறது. அப்படிப் பிரிக்கப்பட்ட பின் அது வாய்திறந்து அழுகிறது. அது அழாவிட்டால் இறந்துவிடும் என்பது அனுபவம். அதுவரை தாயின் வாயிலாகப் பெற்றுவந்த பிராணவாயுவை தன் வாயின் வாயிலாகப் பெற்றாக வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகி விட்டது. அதனால் அது வாயைத்திறந்து அழும்படியாக, இயற்கை அமைந்துள்ளது. வாயைத்திறந்து அழும்போது அண்டவெளியின் காற்று குழவியின் வாய்வழியாகச் சென்று புப்புசக் கண்ணறைகளில் நிரம்பி, நெஞ்சறையை விரிக்கிறது. விதானம் தாழ்ந்து உயர்கிறது. இதயம் சுருங்கி விரிகிறது. குருதி உடல் முற்றும் பரப்பப்படுகிறது. ஒருமுறை இந்த இயக்கம் ஆரம்பமானவுடன், இறைவனால் அக்குழந்தையின் உடம்பில் தரிக்கச் செய்யப்பட்ட உயிர் தொடர்ந்து அவ்வியக்கத்தைக் கைக்கொள்ளுகிறது. இதிலிருந்து அண்ட வெளியிலுள்ள காற்றும் அதில் நிரைத்திருக்கும் பிராணவாயுவும் உயிரியக்கத்திற்கு எவ்வளவு இன்றியமையாதது என்பது விளங்கும்.

அண்டத்திலுள்ல இவ்வாயுதான் படைப்புக்கு ஆதாரமானது என்பது சித்தர் கொள்கை. அதனாலேயே தேரர் என்ற சித்தர் "வாதமாய் படைத்து பித்த வன்னியாய்க் காத்து சேட்ப சீதமாய்த் துடைத்து" என்று கூறியிருக்கிறார். இக்கருத்தை நவீன விஞ்ஞானக் கூற்றுப்படி ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஒரு உயிர் ஒரு ஒற்றைவிலம் (Cell) உள்ள உடம்பில் இயங்கவேண்டுமானாலும், மேலே கூறிய பிராணவாயு, நீதுருசு வாயு, நீர்வாயு, கரியமிலவாயு ஆகிய நான்கும் இன்றியமையாதன என்பது விஞ்ஞானத்தின் முடிவு.

சித்தர்களின் முடிவுப்படி வாதம் என்பதே படைப்புக்கு ஆதாரமாகும். வாதம் என்பது ஆகாயமும் அதிலுள்ள வாயுவும் சேர்ந்த கூட்டாகும். எனவே நவீன விஞ்ஞானக்

கூற்றுப்படியும் "வாதமாய்ப்படைத்து" என்பது நிரூபிக்கப் படுகிறது.

இனி, ஐம்பூதக் கொள்கை பற்றி நோக்குவோம். எல்லாவற்றிற்கும் இடந்தருவதாகிய வெளி ஆகாயம் என்று சொல்லப்படுகிறது. இந்த வெளியில் சதா சலனமுற்றுக் கொண்டேயிருப்பது காற்று. இந்தக் காற்றிலிருந்து தோன்றுவதே தீயும் நீருமாகும். எவ்வாறு? உலகிலுள்ள எந்தப்பொருளும் எரியவேண்டுமாயின் அது பிராண வாயுவின் துணையின்றி எரியமுடியாது. நீர்வாயு (Hydrogen) இயற்கையாக வெடித்து எரியும் தன்மையுடைய வாயுவாகும். எனவே, இவையிரண்டையும் தீயின் கூறானவை எனக்கூறுதல் பொருந்தும்.

தண்ணீர் உண்டாக வேண்டுமானால் நீர்வாயு இரண்டு பங்கும், பிராணவாயு ஒருபங்கும் சேர்ந்துதான் உண்டாக வேண்டும். எனவே மேலே கூறிய நான்கு பூதங்களுக்கும் ஆதாரம் ஆகாயமும் காற்றும் என்பது தெளிவாகிறது. ஐம்பூதங்கள் பற்றிய புறநானூற்றுப் பாடல் ஒன்றை ஆராய்ந்தால் ஐம்பூதங்கள் கொள்கையின் விஞ்ஞானக் கூறு நன்கு புரியும் அப்பாடல்,

"மண்டினிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
வளித்தலையிய தீயும்
தீ முரணிய நீருமென்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல"

என்பது. இதன் பொருளை நுணுகிப்பார்த்தால் அறிவியல் கொள்கை அதியற்புதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

"மண்டினிந்த நிலன்" என்ற தொடரை எடுத்துக் கொள்வோம். மண் என்பதே பருப்பொருளைக் குறிக்கும். பருப்பொருள் மேலும் மேலும் அடர்த்தியாகத்

திணிக்கப்பட்டது போன்றது. இந்த நிலனாகிய மண்ணுலகம் என்பது பொருளாகிறது. எனவே, மண் என்பது பருப்பொருளையும், மண் அல்லது பிருதிவி என்ற மூலக்கூறு பருமையையும் குறிப்பனவாகும். அதாவது, உலகிலுள்ள பொருள்களின் திண்மை, செறிவு, கனம், பருமை ஆகியவற்றிற்குக் காரணமான மூலக்கூறு மண் அல்லது பிருதிவியாகும்.

அண்டவெளியினின்று தோன்றும் ஐந்து மூலக் கூறுகளில் மண் என்ற மூலக்கூறுக்கு ஆதாரமானதும் அண்டவெளியிலுள்ள வாயுவேயாகும், என்பதனையும் எடுத்துக்காட்டுகளால் நிரூபிப்போம்.

தாவரங்கள் ஒளிச்சேர்க்கையின் மூலம் மாவுப்பொருள் தயாரிப்பதற்குரிய பொருள் கரியமிலவாயு. அதேபோல், தாவரங்களின் வளர்ச்சி, செறிவு, திண்மை ஆகியவற்றிற்கு இன்றியமையாதது நீதுருச வாயுவாகும். மக்களுக்கும் விலங்குகளுக்கும் உருவத்தைக் கொடுப்பது தசை. இத்தசைக்கு ஆதாரமானதும் நீதுருச வாயுவேயாகும். அதாவது 'Amine Acids' என்ற அமிலங்களுக்கு ஆதாரம் நைட்ரஜன் என்ற வாயு. புரதச்சத்துக்கு ஆதாரம் 'AmineAcids' என்ற அமிலங்கள். தசை வளர்ச்சிக்கு ஆதாரம் புரதச்சத்து, எனவே மண்ணின் கூறுடைய தசைக்கு ஆதாரம் நைட்ரஜன் என்ற வாயு என்பது பெறப்பட்டது.

"நிலனேந்திய விசும்பு" என்ற சொற்றொடர், நிலனாகிய இம்மண்ணுலகு ஏந்திக்கொண்டிருப்பது போல் தோற்ற மளிக்கிறது ஆகாயம் என்பதைக் குறிக்கும்.

"விசும்புவதை வருவளியும்" என்ற சொற்றொடர், ஆகாயமாகிய வெளி உதைத்து வருவது காற்று என்ற பொருளைக் கொடுக்கிறது. அதாவது ஆகாயத்திலிருந்து காற்று சலனமுறுகிறது என்பதைக் காட்டுகிறது.

பிராண வாயுவையும் அயச்செந்த வளத்தையும் (Haemoglobin) சுமந்து செல்லும் குருதிச் சிவப்பணுக்களின் (Red Blood Corpuscels) தோற்ற ஒடுக்கங்களுக்கு இருப்பிடமாயிருப்பது பித்தம் வாழுமிடங்களில் ஒன்றாகக் கருதப்படும் ஈரல் ஆகும். உடலின் இரசாயனக்கூடம் என்று சொல்லப்படுவது ஈரலாகும். இராசயனக்கூடத்தில் தேவைப்படுவது வன்னியாகிய அனல். உடலில் உண்டாகின்ற எல்லா இரசாயன மாறுதல்களும் (Biochemical Changes) உடலை இயற்கையாகக் காப்பதற்கேயாகும். அக்காப்புத் தொழிலில் தடை ஏற்பட்டால் படிப்படியாக அது உடலையும் பின்னர் உயிரையும் பாதிக்கும். எனவே காப்பது பித்தமாகும்.

பித்தமானது அதிகரித்தால் அது உடம்பு முழுவதையுமே தான் தாக்கும். உடம்பு முழுவதுமே எரிச்சலை உண்டுபண்ணலாம். அல்லது பலவீனமான பாகத்தை மட்டும் தாக்கலாம். வறட்சியை உண்டுபண்ணலாம். உடம்பு எப்போதும் இயற்கை வெப்பநிலையைவிட அதிகமாக இருப்பதுபோல் உணர்வுண்டாகும். பித்தம் வயிற்றைத் தாக்கினால் அதிக பசி, வயிற்றில் எரிச்சல், புளித்த ஏப்பம், ஓக்காளம், வாந்தி முதலியவற்றை உண்டாக்கலாம். பித்த நீரை அதிகமாகச் சுரக்க வைக்கலாம். காமாலை நோயை உண்டாக்கலாம். சுரத்தை உண்டாக்கலாம். இன்சுலின் என்ற நொதியை அதிகம் சுரக்கச் செய்யலாம். வயிற்றிலுள்ள செரிமான நீர்கள் அதிகம் சுரக்கலாம்.

சேட்ப சீதமாய்த் துடைத்து

எப்பொருளும் நீரின் உதவியின்றிச் சுவையூட்ட வியலாது. எனவேதான் சுவைக்கு, இருப்பிடமாகிய உமிழ்நீர் சுரக்கின்ற நாவைக் கபத்தின் தன்மை பொருந்தியது என்றனர் சித்தர்.

ஒரு மண்கட்டியை நீரில் போட்டால் அதன் உருச் சிதைந்து நீரில் கரைந்து போகிறது. சீனியை நீரில்போட்டால்

அது நீரில் கரைகிறது. அது நுண் பகுதிகளாகப் பிரிவதுதான் பொருளுக்கு அழிவு. நாம் உட்கொள்ளும் உணவு, பற்களால் அரைக்கப்பட்டாலும். மேலும் நுண்மை பெறுவதற்கும், எடுத்துச் செல்வதற்கும் வாய்ப்பாயிருப்பது உமிழ்நீர். அப்படி எடுத்துச் செல்லப் பட்ட உணவு பல மாற்றங்களையடைவதற்கு வாதமும், பித்தமும் கபமுமாகிய மூன்று சக்திகளும் காரணமாகும்.

செரிமாணம் முடிந்த இறுதியில் கழிவுப்பொருள்கள் வெளியேற்றப்படுகின்றன. இவை பெரும்பான்மையும், சிறுநீர், வியர்வை, மலம் ஆகியவையாக வெளியேற்றப் படுகின்றன. கபத்தின் தன்மையுடைய நீரே இவற்றிற்கு வாய்ப்பாக உள்ளது. மலத்தின் மூலமாக வெளியேற்றப்படும் போது. நீர்த்துவமே இல்லாவிட்டால் மலம் சூரணமாக வந்து விழும். சிலருக்கு மலச்சிக்கல் ஏற்படுவதற்கும் இது காரணம். கபம் என்ற தத்துவம் 1¼ மாத்திரையிலும் குறைந்து விட்டது என்பது பொருள். அக் கபம் தன் இயற்கையளவில் குறைவதற்குக் காரணமாக பித்தம் அல்லது வாதம் என்ற தத்துவங்களாகவும் இருக்கலாம்.எவ்வாறெனில் வாதம் என்ற தத்துவம் தன்னியிற்கையளவில் மீறி வேற்று நிலை வளர்ச்சியடைந்தால் வாதத்திற்கே இயற்கையான வறட்சியுண்டாக்கும் தன்மையினால் கபத்தைக் குறைக்கலாம். எனவே கபம் என்ற தத்துவம் தன்னளவில் மிகவும் குறையவும் வாத பித்தங்களும் காரணமாக இருக்கலாம். ஆனால் கபம் என்ற தத்துவம் தன்னளவில் மிகவும் குறையவும் வாத பித்தங்களும் காரணமாக இருக்கலாம். ஆனால் கபம் என்ற தத்துவம் தன் இயற்கையளவான ¼ மாத்திரையில் செயல்படும்போது, அதன் தன்மையாகிய நீரின் உதவிக்கொண்டு அழித்தலாகிய கழிவு வேலையைச் செய்கின்றது. சுருங்கக் கூறின், உடம்பிலுள்ள கழிவு மண்டலம் (Excretory System) கபத்தினாலேயே நடைபெறுகின்றது.

உடம்பில் கழிவு வேலையானது சீராக ¼ மாத்திரை அளவில் நடந்துகொண்டேயிருக்கும்போது உடல் சீராக இருக்கிறது. கபம் என்ற தத்துவம் எக்காரணத்தாலாவது மாத்திரையில் குறைந்தால், கழிவு வேலைகள் தடைபடுகின்றன. அவ்வாறு தடைபடும்போது, கழிக்கப்பட வேண்டிய பொருள்கள் குருதியிலேயே தங்கி உடம்பில் நச்சுத்தன்மை அதிகரிக்கும். அதேபோல், கபம் என்ற தத்துவம் தன்னைவிட மிகுந்தாலும் அதற்குரிய குறிகுணங்களுள்ள நோய்கள் உண்டாக ஏதுவாகலாம். இதன் விரிவைப் பின்னர் பார்ப்போம்.

மனிதனின் உடல், அவனுடைய வயதின் நிலைக்கேற்ப உள்ளது. மனிதனின் ஆயுளை மூன்றாகப் பிரித்து, முதல் பகுதி, வாத காலமாகவும், இரண்டாவது பகுதி பித்த காலமாகவும், மூன்றாவது பகுதி கப காலமாகவும் சித்தமருத்துவம் கூறுகிறது. ஒரு மனிதன் இயற்கையோடியைந்த நல்வாழ்வு வாழ்ந்தவரின் வாத காலமான முதற்பகுதியில் எல்லாத்தத்துவங்களும் வளரும். இரண்டாம் பகுதியான பித்தகாலத்தில் வளர்ந்த தத்துவங்கள் பாதுகாக்கப்படும். மூன்றாம் பகுதியாகிய கப காலத்தில் எல்லாத்தத்துவங்களும் சிறிது சிறிதாக குறைய ஆரம்பிக்கும். தத்துவங்கள் குறையக்குறைய, அவ்வுடம்பில் செயல்பட்டு வரும் ஆன்மா, அவ்வுடம்பில் செயல்பட முடியாத நிலையை அடைகின்றபோது செயல்படாது அடங்கிவிடும். இதனையே மரணம் என்று சொல்லுகிறார்கள். இறுதியில் உயிர் அடங்கும்போது, தொண்டையில் கபம் கட்டி, பிராணவாயு உட்செல்லவும், வெளிச்செல்லவும் வழியின்றித் திணரச்செய்து விடுகிறது. அதனால் உயிர் அடங்கிவிடுகிறது. இந்த வகையிலும் கபம் அழிவுக்கு காரணம் என்று சொல்லப்படுகிறது.

பெருங்குடலானது, மலத்திலுள்ள மிகுதியான நீரை நன்கு உறிஞ்சமுடியாத நிலையில் அபான வாயுவும், தன் அளவில் மிகுந்தால் அதிசாரம் என்ற நோய் உண்டாகிறது.

உணவிலுள்ள சாரம் உடலுக்குச் சேராமல் நீராகக் கழிந்தால் அதிசாரம் கிரகணி போன்ற கழிச்சல் நோய்கள் வருகின்றன. உடம்பிலிருந்து மிக அதிகமான நீர் வெளியேறிவிடின் மரணம் உண்டாகக்கூடும். இந்த நிலையில், உணவின் சாரத்தை வெளிக்கொணரும் கருவியாக உள்ளது. இயற்கையாகச் செயல்படும் அபானவாயு அதனை வெளியேற்றுகிறது. இயற்கைக்கு மாறுபட்டு, அதிகப் படியான நீர் இருப்பதால், அபானவாயு அதனை வெகுவேகமாக வெளியேற்றுகிறது. எனவே இங்கும் நீரின் கூறாகிய கபம் அழித்தலுக்கு ஆதாரமாயிருக்கிறது.

சன்னி அல்லது முக்குற்றநிலை

முக்குற்ற நோயில் உடல் மிகவும் குளிர்ந்துபோய்த்தான் இறுதிநிலை உண்டாகும், எனச்சொல்லப்படுகிறது. இந்நோயாளர்க்கு உடல் குளிர்வதும் குளிர்ச்சியான வியர்வை உண்டாவதும் மரணக் குறியாகச் சொல்லப்படுகிறது. குளிர்ந்த வியர்வையை மரணவியர்வை என்றே சொல்வது வழக்கம். முக்குற்றத்தில் உடல் குளிர்ந்தால் உடனடியாகப் பித்தத்தை ஏற்ற, உடலில் சூடு உண்டாக்குதல் மரபு. அப்படிச் சூடுண்டாக்காவிடில் மரணம் உண்டாகலாம். எனவே வியர்வையும் உடலின் சில்லிட்ட நிலையும் கபத்தின் மிகுதியையே காட்டும்.

வளி, அழல், ஐயம் ஆகிய மூன்று உயிர்த்தாதுக்களும் தங்கள் இயற்கை அளவில் ஒரே நேரத்தில் மிக அதிகமாயினும் மிகக்குறையினும் முக்குற்றநிலை அல்லது சன்னி என்று சொல்லப்படுகிறது.

இம்முக்குற்ற நிலைக்கு முதற்காரணமாயிருப்பது கபம் என்ற தத்துவம் என்பது சித்தர் கொள்கை. ஏதாவது அகப்புறக் காரணங்களால் அழித்தல் சக்தியாகிய கபம் தன்னிலை வளர்ச்சியடைந்து பின்வேற்றுநிலை வளர்ச்சியடையும் போது அதனை சீராக்க பித்தமும் எழும். துணைக்கு வாதமும்

எழும். இதுவே இயற்கை. ஆகவே முக்குற்றநிலைக்கு மூலகாரணம் கபம்.

உடல் முழுவதும் எப்போதும் பரவி ஓடிக் கொண்டிருப்பது குருதி. இது நீர்த்துவமானது. இதன் ஓட்டம் எக்காரணத்தாலாவது தடைபட்டால் தகனம் என்ற இரசாயனக் கிரியை நின்று போகும். அது நின்று போனால் உடலின் இயற்கைச்சூடு குறையும். உடற்சூடு குறைய ஆரம்பித்தால் கபத்தின் ஆதிக்கம் அதிகமாகிறது. கபத்தின் ஆதிக்கம் அதிகமானால் உடல் குளிர்ந்து விறைத்துப் போகலாம். எந்த சிகிச்சையும் செய்யவில்லை என்றாலும் அன்றி சிகிச்சைக்கு வசப்படாவிட்டாலும், உயிர் அடங்கிவிடும். எனவே கபமே அழிவுக்குக் காரணம் என்று தெளிவாகிறது.

வயிற்றிலுள்ள சீரண நீர்களெல்லாம் பித்தத்தின் தொழிலையும் கபத்தின் தொழிலையும் புரிகின்றன. உணவுப்பொருள்களை நீர்துவமாக நின்று பகுதிகளாகப் பிரிக்கும் வேலையில் கபத்தின் செயலையும் இரசாயன முறையில் பக்குவப்படுத்தும்போது பித்தத்தின் வேலையையும் செய்கின்றன. குருதியில் வாத, பித்த, கபம் என்னும் மூன்று தத்துவங்களும் உள்ளன. உயிர்த் தத்துவங்களாகிய இம்மூன்றும் உடல்முழுவதும் 1, ½, ¾ என்ற விகிதத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குருதியானது நீர்த்துவமாயிருப்பதால் கபத்தின் தன்மையையும், அதில் பிராணவாயு கலந்து, எல்லாவிடங்களுக்கும் ஓடிச்செல்வதால் வாயுத் தன்மையையும், சிவப்பு அணுக்களைத் தாங்கிச் சென்றவிடங்களில் தகனக்கிரியை (Oxidation) செய்து வெப்பம், சக்தி ஆகியவற்றைக் கொடுப்பதால் பித்தம் என்ற தன்மையையும் பெறும். எனினும் உடற்சூடு ஒரே சீராக இருப்பதற்கும், உடலைக் காப்பதற்கும் ஆதாரமா யிருப்பதால் பித்தம் வாழுமிடமாகக் கொள்ளப்பட்டது.

குருதியுளுள்ள வெள்ளை அணுக்கள் பாதுகாப்புக்காகப் போராடி அழிந்து வெண்மையான சீழாக வெளிவரும்போது

கபத்தின் தன்மை அங்கே பிரதிபலிக்கிறது. தற்காலம் பேசப்படும் குருதிப்புற்றுநோய (Leukaemia)க்குக் காரணமா யிருப்பது இயற்கையளவுக்கு அதிகமான வெள்ளை அணுக்களேயாகும் என்று கூறப்படுகிறது. வெள்ளை யணுக்கள் அளவோடிருக்கும்போது அவையே பாதுகாப்புப் படையாக உள்ளன. அளவுக்கதிகமாகும்போது அழிவை அவையே உண்டாக்குகின்றன. கபத்தின் இறுதித்தன்மை அங்கே பிரதிபலிக்கிறது.

தூய்மைக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் வெண்மை அழிவுக்கும் ஆதாரமாகவுள்ளது மருத்துவத்தில். கழிவு மண்டலம் என்று உடல் தத்துவத்தில் சொல்லப்படுவது கபத்தின் செயலேயாகும். இங்கே, தேவையற்ற பொருள்கள் வெளியேற்றப்பட்டு உடல் தூய்மை செய்யப்படுகிறது. வியர்வை, சிறுநீர் ஆகியவற்றின் வாயிலாகத் தேவையற்ற பொருள்கள் வெளியேற்றப்படுகின்றன. அந்தந்த உடல் வன்மைக்கும், செரிமானத் திறனுக்கும் ஏற்றார்போல உண்ணப்படும் உணவிலுள்ள சாரங்கள் கிரகிக்கப்படு கின்றன. மீதியுள்ளவை கழிவுப் பொருளாகக் கழிகின்றன. அதே கழிவுப்பொருள் தாவரங்களுக்கு உணவாக்கப் படுகிறது. இதிலிருந்து தெரிவது நம்மால் செரிக்கப்பட முடியாத பொருள்களும், தேவையற்ற பொருள்களும், கழிவுப்பொருள்களாக வெளியேற்றப்படுகின்றன. இதனாலேயே "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்ற பழமொழி ஏற்பட்டது போலும்.

வள்ளலாரின் அருள் வாக்குப்படி விந்துவே ஒரு கழிவுப்பொருளாகும். மணவாழ்வில் ஈடுபட்டோர்க்கு, பதினைந்து நாட்களுக்கொருமுறை விந்து கழிக்கப்பட வேண்டும். சித்த மருத்துவத்தின்படி, விந்து மிகுந்தால் அதனால் நோயுண்டாகும். மலம் கழிவுப் பொருளாக வெளியேறுவதற்கு நீர் மிக முக்கிய பங்கேற்கிறது. உடல் மலங்களாகக் கருதப்படும் மூக்குச்சளி, கண்பீளை, வியர்வை, சிறுநீர் முதலியனவும், கபத்தின் தன்மையாகிய

நீர்த்துவத்தன்மைகொண்டு, வெளியேற்ற வேண்டியவற்றை வெளியேற்றிச் சுத்தப்படுத்துகின்றன. இந்தக் கழிவு வேலை மாத்திரையளவுக்கு மிகுந்தாலும், குறைந்தாலும் நோயுண்டாகும்.

எடுத்துக்காட்டாக கபத்தை அதிகமாக்கும் தன்மையுள்ள உணவாதி செயல்கள் இச்சாதி செயல்களாலும் அண்டத்தின் மாற்றத்தாலும் ஒருவனுக்கு முதலில் லேசாக மூக்குநீர் பாய்தல் உண்டாவதாக வைத்துக்கொள்வோம். அம்மனிதரின் உடற்கட்டுகளின் வன்மையை பொறுத்து, எதிர்ப்புச் சக்தி யிருந்தால் தானாகச் சரியாகிவிடலாம் அல்லது மருத்துவம் செய்தால் சரியாகிவிடலாம். மருத்துவம் செய்யாமல் விட்டுவிட்டபின் மேன்மேலும் கபம் விருத்தியாகும்படியாக உணவாதி செயல்கள் அமைந்து இயற்கை எதிர்ப்பு வன்மையும் குறைந்துவிட்டால் வேறு கோளாறுகளும் தொடரலாம். காய்ச்சல், தலைவலி முதலியனவும் உண்டாகலாம். நாள் செல்லச்செல்ல, மூக்கில் நீராகப் பாய்ந்துகொண்டிருந்தது தடித்து மூக்குச்சளியாக மாறலாம். அந்தச்சளி, புப்புசங்களிலும் இறங்கி நெஞ்சுச் சளியாக மாறலாம். மூக்கிலும், நெற்றியிலும் சளிக்கட்டி பீனசமாக மாறலாம். மருத்துவம் செய்யாமல் விட்டாலோ, நெஞ்சுச் சளியாக உள்ளது இரைப்பிருமல் (சுவாசகாசம்) நோயாக மாறலாம். இறுதியில் உடல் வன்மை மிகவும் குறைந்தபோது, கபத்தின் அழித்தல் தன்மைக்கு உட்பட்டு இளைப்பு நோயாக (சயம்) மாறலாம்.

கபம் என்ற தத்துவம் அதிகமாகும்போது மற்ற இரு உயிர்த்தாதுக்களும் கபத்தைத் தன்னிலைக்குக் கொண்டுவர முயலும் என்று முன்பே கூறினோம். பித்தம் தன் வெப்ப சக்தியால் கபத்தைக் குறைக்கவும். வாதம் தன் வறட்சித் தன்மையால் கபத்தைக் குறைக்கவும் முயலும் இம்மூன்று குற்றங்களின் மிகுதியைத் தாங்கும் வல்லமை உடம்பிற்கு இல்லாதுபோனால். நோய் வலுப்படுகிறது. மிகுந்த அழலினால் அதிகச் சுரமும், வாதத்தினால் மிகு உடம்பு

வலியும், தசைகளின் வலியும், கபத்தினால் புப்புசத்திலும் மூச்சுக்குழல்களிலும் தொண்டையிலும் மூக்கிலும் அதிக சளியுண்டாதலுமாகிய குறிகுணங்கள் உண்டாகலாம். இரு புப்புசங்களுக்கிடையிலுள்ள இதயம் சளியின் பாரம் கொண்ட புப்புசத்தினால் அழுத்தப்படும். உயிர்க்கால், புப்புசங்களுக்கு வந்து நிறைகின்ற வாய்ப்புக் குறைகிறது. அதனால் குருதியின் தூய்மையாகும் நிலை பாதிக்கப்படுகிறது. குருதியில் கழிவுப்பொருள்கள் அதிகமாகி அதனை நஞ்சாக்குகின்றன. இதயமும் திணறுகிறது. தகனம் என்ற இரசாயனக்கிரியை தடை படுகிறது. அதனால் காக்கும் பித்தமாகிய வன்னி குறைந்து கபத்தின் ஆதிக்கம் அதிகமாகி உடல் குளிர்ந்து போகும். மருத்துவம் செய்யின் குறிகுணங்கள் மாறி உடல்நிலை மாறலாம். இல்லையேல் கபத்தின் அழிவுத் தன்மையால் உயிர் அடங்கிவிடக்கூடும். எனவே, மூன்று உயிர்த் தாதுக்களில் அழிவுக்கு உரியது ஐயமாகிய கபமாகும்.

கபமானது ஐந்துவகையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கபமானது தனது நீர்த்துவத்தன்மையால் ¼ மாத்திரைக் குண்டான அளவு கழிவாகிய அழிவு வேலையைச் செய்து கொண்டிருக்கும்போது உடல் நன்னிலையில் இருக்கும். கழிவு வேலை மிகுந்தாலும் , குறைந்தாலும் கபதத்துவம் பாதிக்கப்பட்டதாகப் பொருள். எனவே, அதற்குரிய குறிகுணங்களைக் காட்டி நோயுண்டாக்கும் மூட்டுகளில் உள்ள நீர்ப்பொருள் கபத்தின் பாற்பட்டதாகும். அந்த நீர் எக்காரணத்தாலாவது குறையும்போது மூட்டுக்களில் வறட்சி யுண்டாகி மூட்டுகளை மடக்கவும், நீட்டவும் இடைஞ்சலுண்டாகும். அந்த நீர் அதிகமானாலும் வலியும் நீட்ட மடக்க இடைஞ்சலும் உண்டாகும். நாவில் சுரக்கின்ற உமிழ்நீர் தேவையானபோது தேவையான அளவு சுரந்தால் செரிமானம் நன்றாயிருக்கும். வறட்சியுண்டானால் சுவை தெரியாமற் போகலாம். செரிமானத்திற்கும் இடையூ றுண்டாகும். அதேபோல் உமிழ்நீர் அதிகமானாலும் சுவை மாறித் தோன்றும். நா வழுவழுப்புண்டாகும். ஏற்கனவே

பித்தம் அதிகமானதால் அதனைச் சரிக்கட்டுவதற்காக உயர்ந்து குற்றமடைந்த நீராகவும் அவ்வுமிழ்நீர் இருக்கலாம். அன்றி வேறு காரணங்களால் அதிகமாகச் சுரக்கின்ற நீராகவும் இருக்கலாம். எனவே, அச்சமயம், பித்தத்திற்குரிய ஓக்காளம், வாந்தி முதலியன உண்டாகலாம்.

வியர்வை, அதிகம் உண்டாயினும் நோயேயாம். சாதாரண காலத்தில் மிக அதிக வியர்வையுண்டாவது கபத்தின் மிகுதியையே காட்டும். வியர்வை அறவே அற்றுப் போயினும் நோயாம்.

சிறுநீர் அளவுக்கு அதிகமாயினும் குறையினும் நோயாம். சுக்கிலம் குறைந்தாலும் கூடினாலும் நோயாம்.

கபம் என்பது உடலில் ஆங்காங்கே நீர்ப்பசையையும், நெய்ப்புப்பசையையும் தேவையான அளவு தந்து கொண்டிருப்பது. கபத்தின் கூறான கொழுப்பு குருதியில் மிகுந்தால் இதய நோயை உண்டாக்கி மரணத்தைத் தரும். உடலின் பாகங்களில் மிகுந்தால் அதிதூல ரோகத்தை உண்டாக்கும். குருதி அழுத்தத்தை உண்டாக்கி மரணத்தையும் உண்டாக்கலாம்.

கொழுப்புக் குறைந்த உடல் ஒல்லியாக வறட்சியோடு வெப்பத்தோடு கூடிய உடலாகத் தெரியும். கபம் குறைந்ததால் பித்தத்தின் ஆதிக்கம் அதிகமுள்ள உடம்பாக இருக்கும். வாத உடம்பும் வறட்சியோடு கூடித்தெரிந்தாலும் நிறம் கருமையாயிருக்கும்.

கப உடம்பு மினுமினுப்போடு தசைப்பிடிப்போடு தொட்டால் சில்லென்றிருக்கும்.

உமிழ்நீரில் தொடங்கி வயிற்றிலும் குடல்களிலும் ஈரல், மண்ணீரல், கணையம் ஆகியவற்றிலும் உற்பத்தியாகும் நொதிகளான சீரண நீர்கள் எல்லாம் கபத்தின்பாற்பட்டவை. உணவுப் பொருளைப் பகுதிகளாக்க அவை உதவுகின்றன.

அவற்றினால் இரசாயன மாறுபாடுண்டாகும் போது பித்தமாகச் செயல்படுகின்றன. நீர்த்துவம் கபத்தன்மையையும் ரசாயன மாற்றமுண்டாக்கும் தன்மை பித்தம் என்ற தன்மையையும் கொண்டுள்ளன.

மூளை, மூக்கு, வாய், தொண்டை, வயிறு ஆகியவற்றில் நீர்த்துவமுள்ளசவ்வுகள் உள்ளன. இவை சளிச்சவ்வுகளாகும். இச்சவ்வுகள் அளவான தடிப்போடு இருக்கும்போது அதனதன் இயற்கைச் செயல்கள் ஒழுங்காக நடைபெறும். இன்றேல் நோயாம்.

மூக்கிலுள்ள சளிச்சவ்வு தடித்தாலோ அன்றி ஒவ்வாமையினால் அழற்சியுண்டானாலோ, நீர்ப்பாய்ச்சலும், மூக்கு அடைப்பும் வர ஏதுவுண்டு. தொண்டையில் தடிப்பேற்படில் குரற்கம்மல், இருமல் ஆகியவை உண்டாம். வயிற்றின் உட்சுவர்களிலுள்ள சளிச்சவ்வுகளில் தடிப்பேற் பட்டால் மந்தமுண்டாம். சீரண நீர்கள் உற்பத்தியாவது தடைப்படும். அதனால் மந்தமுண்டாம். அசீரண முண்டாகும். வயிற்றுவலியுண்டாகலாம். இதுவே கபகுன்மம் எனப்படும். செரிமானத்திற்கு இன்றியமையாத செரிமான நீர்கள் சரிவரச் சுரக்காததினால் அரைகுறையாகச் செரிமானம் செய்யப்பட்ட உணவு வெளிதள்ளப்படும்போது அசீரணபேதி (செரியாக் கழிச்சல்) உண்டாகும்.

மதுமேகம் என்ற நோயில், சிறுநீரில் சர்க்கரைச் சத்து சேர்ந்து வெளியாகிறது. சர்க்கரை இனிப்புச்சுவை யுண்மையால் அது கபத்தின் பாற்பட்டது. கபத்தின் பாற்பட்ட சர்க்கரைச் சத்து கபத்தின் கூறாகிய சிறுநீரின் வாயிலாக வெளியேற்றப்படுகிறது. இந்த நிலைக்குக் காரணம் பித்தத்தின் கூறாகிய கணையநீர் (இன்சுலின்) என்ற நொதியின் சுரப்புக் குரைந்தோ அல்லது முழுமையாகவோ இல்லாமல் போய்விடுவதாகும்.

மதுமேக நோயினால் உடம்பின் சத்து நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. சிகிச்சைக்கு வசப்படா

விட்டால், மதுமேகத்தின் பத்து அவத்தை நிலைகளுக்கும் ஆளாக்கி இறுதியில் மரணத்தை விளைவிக்கும்.

இளைப்புநோய் கபத்தின் மிகுதியால் உண்டாவதாகும். கபத்தை விருத்திசெய்யும் உணவாதி செயல்களால் கபமானது புப்புசம், மூட்டுகள் ஆகிய இடங்களைப்பற்றி உறுப்புச் சேதத்தை உண்டாக்கி இறுதியில் கொல்லவும் செய்கிறது.

புற்றுநோய் எனப்படும் நோய்க்குக் காரணமாகவுள்ளது வாதமும், கபமுமாகும். கபத்தின் அழித்தல் சக்தியால் அழிவுற்று இரண்டுங் கெட்டான் நிலையிலுள்ள விலங்கள் (Cells) வாதத்தின் மிகுதியால் விரைந்து வளர்வதே புற்றாகும். இப்புற்றுநோய் உயிர்கொல்லியாகும் கபத்தினால் உண்டான புற்று கபத்திற்கேயுரிய அழித்தல் தன்மையைப் பெற்றிருப்பது காண்க.

குருதிப்புற்றுநோய் என்பது (Leukaemia) குருதியின் வெள்ளையணுக்கள் அதிகமாகி அதனால் உண்டாவது. அளவோடிருந்தால் காப்புப் படையாக உதவும் வெள்ளையணுக்கள் அளவுக்கு மிஞ்சும்போது அழிவை உண்டாக்குகின்றன. கபத்திற்குரிய நிறத்தின்படி வெள்ளையணுக்கள் கபத்தின் பாற்பட்டன.

எந்த நோயுமில்லாமல் இயற்கையாய் மரணம் அடைபவர்கள், தொண்டையில் இறுதிக்கபம் கட்டி, மூச்சுநின்று உயிர் அடங்குகிறது. அதற்குமுன் சில்லிட்ட வியர்வை உண்டாகிறது. உயிர் அடங்கியபின் உடல் குளிர்ந்து கபத்தின் ஆதிக்கம் வந்துவிடுகிறது. குளிர்ந்த அவ்வுடல் வெகுவிரைவில் கெட்டு அழிந்துவிடும். அதுவரை காத்தல் சக்தியைப் பெற்றிருந்த உயிர் காத்து வந்தது போய், உயிர் செயல்படாமல் அடங்கிவிடுவதால் காக்கும் சக்தியும் போய்விடுகிறது. எனவே, கபத்தின் அழித்தல் ஆதிக்கம் வந்துவிடுகிறது.

இயற்கையாக ¼ மாத்திரையில்செயல்படும் கபம், உடலிலுள்ள கழிவு மண்டலத்திற்கு உறுதுணையாகிறது. சிறுநீர், மலம், வியர்வை ஆகியவற்றின் வாயிலாகத் தேவையற்ற பொருள்களை வெளியேற்றும் பணியைச் செய்கிறது. இப்பணியில் குறைவேற்படின் அன்றாடம் கழிக்கப்பட வேண்டிய கழிவுப்பொருள்கள் குருதியுடன் சேர்ந்து குருதியை நச்சுத்தன்மை அடைய வைக்கிறது. (Uraemia) என்ற நோயில் முறையாகச் சிறுநீரில் கழிக்கப்படவேண்டிய யூரியா என்ற உப்பு குருதியில் கலந்து வெளியேறாமல் நிற்கிறது. இது மரணத்தை எளிதில் உண்டுபண்ணும் வியாதியாம்.

கை, கால் ஆகிய உறுப்புகளில் பெரியகாயம் ஏற்பட்டு அவை நச்சுத்தன்மை அடைகின்றபோது, கபத்தின் தன்மையுடைய சீழே அங்கு நஞ்சாகிறது. அச்சீழ் உற்பத்தி அதிகமாக ஆக நச்சுத்தன்மை அதிகமாகிறது. இதுவே மரணத்தையும் உண்டாக்கலாம்.

எல்லாத் தாவரங்களுக்கும் வளர்வதற்கு நீர் அவசியம். நெல்லுக்கு நீர்நிறைந்து ஓடிக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் பல தாவரங்கள் நீர் அதிகமாக நின்றால் வேர் அழுகி கெட்டுப்போகின்றன. எனவே கபமாகிய நீர் ஒவ்வொரு உயிருக்கும் குறிப்பிட்ட அளவே தேவை.

கபத்தின் கூறாகிய சுக்கிலம் அளவுடன் கழிந்தால் நோயில்லை. அளவுக்கு மிஞ்சினாலும், கழியாமலே இருந்தாலும் நோயுண்டாகும். எலும்பிலுள்ள மூளை அதிகம் விரையமானால் எலும்புருக்கி என்னும் உயிர்கொல்லி நோயாகக் கருதப்படுகிறது. உடம்பிலுள்ள நீர்த்துவம் எவ்வகையில அதிக அளவில் சேர்ந்தாற்போல் குறைந்தாலும் நல்லதல்ல. அதிகமான குருதி. குறுகிய நேரத்தில் வெளியேறினால் மரணமுண்டாகலாம். அபானத்தின் வழி அதிக பேதியாகி, நீர்த்துவம் மிக அதிகமாக குறைந்தாலும் ஊழிநோய், சீதபேதி ஆகியவற்றாலும் பெருங்கேடு உண்டாகலாம்.

வாந்தியின் மூலம் அதிக நீர்த்துவம் வெளிப்படினும் கேடாகும்.

எனவே வாதகாலத்தில் வளர்ந்து, பித்தகாலத்தில் காத்து, கபகாலத்தில் கொஞ்சங் கொஞ்சமாகத் தேய்வுற்று இறுதியில் இயற்கைநிலை அடைகிறது மனித உடலும் மற்றெல்லா உயிரினங்களின் உடல்களுமாம். இதிலிருந்து அறியப் படுவது, அழிவுக்குக் காரணமாயிருப்பது கபம் என்ற தத்துவமாகும்.

நாடியின் தத்துவம்

உயிருக்கு ஆதாரமானவையெல்லாம் வாயு உருவத்தில் அண்ட வெளியிலே இருப்பதாக முன்பு சொன்னோம். அவற்றினின்று வாத, பித்த, கபமாகிய தத்துவங்கள் தோன்றுவதாகவும் சொன்னோம். அண்டவெளியிலுள்ள அத்தத்துவங்களில் ஒன்றாகிய ஐம்பூதங்கள் நுண்மை நிலையிலிருந்து பருமைநிலையடைகின்றபோது அது ஒரு பொருளாகிறது என்பது சித்தாந்தக் கொள்கை. அண்ட வெளியிலுள்ள அவ்வைம்பூதங்களே உடலாகப் பரிணமிப்பதால், அவையே வாதபித்த கபமாகவும், பரிணமிக்கின்றன.

பதியாகிய பேரறிவின் சங்கற்பத்தால் பசுவாகிய ஆன்மாக்களில் ஒன்று, அவ்வுடம்பில் செயல்பட ஆரம்பிக்கிறது. ஐம்பூத அணுக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள தத்துவங்கள் 96ல், அமைந்த உடலுக்கேற்ப 96 தத்துவங் களுமோ அல்லது குறையவோ, கூடவோ அமையும். அவை வெளிப்படையாகப் பிரதிபலிக்கும்.

மேற்கூரிய ஐந்து மூலக்கூறுகளால் உண்டான உடம்பாதலால் இம்மூலக்கூறுகள் பதியின் சங்கற்பத்தால் பிண்டமாகப் பரிணமிக்கும்போது மேற்குறித்த மூலக் கூறுகளின் தன்மை அப்பிண்டத்திலும் அமைகிறது. அதனால் வாத, பித்த, கப தத்துவங்கள் உண்டாகின்றன எனக்

கண்டோம். இவ்வாறு பரிணமித்த இவை உயிர்த்தாதுக்கள் என்று சொல்லப்படுகின்றன. தாது என்றால் சக்தியென்று பொருள்படும். எனவே, இவை உயிரின் மூன்று சக்திகளாகின்றன.

நாடி

உலகிலுள்ள எந்த மருத்துவமுறையும் நோய்க் கணிப்புக்கும் நோயாளியின் அப்போதைய நிலையை அறியவும், நாடியை ஒரு முறையாகக் கொண்டுள்ளது. சித்தமருத்துவ நாடிக்கணிப்பு முறை மிக நுணுக்கமும் உயர்ந்ததுமாகும். சித்தமருத்துவ நோய்க்கணிப்பு முறை களாகிய எண்வகைத் தேர்வுகளில் இறுதியானதும் உறுதியானதும் கூட. மற்ற ஏழுவகைக் கணிப்புக்களில் கண்டவற்றை நாடியுடன் ஒப்பிட்டுப் பார்த்து நோயை உறுதிசெய்ய முடியும். ஆனாலும் நாடியை மட்டுமே கொண்டு ஒருவர் இன்ன நோய்வாய்ப்பட்டிருக்கிறார் என்றும், இத்தனை மணி நேரத்தில் இறந்துவிடுவார் என்று அறுதியிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு நாடி விஞ்ஞானத்தில் மேம்பட்ட சித்தமருத்துவர்கள் இருந்திருக்கிறார்கள். இப்போதும் இருக்கக்கூடும். ஆனால் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குள் அந்த நாடி விஞ்ஞானத்தில் தேர்வுபெறுவது இயலாததொன்றாகும். பல்லாண்டுகள், பல்லாயிரக் கணக்கான பிணியாளரின் நாடிகளை மிக நுணுக்கமாக ஆராய்ந்து ஆராய்ந்து, சித்தர்கள் கூறிய நாடி நிலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து அனுபவம் பெற்றாலொழிய நாடி விஞ்ஞானத்தில் முழுத்தேர்ச்சி அடைவது இயலாது. இதற்கு, நாடியில் தேர்ச்சி பெற்ற ஆசிரியரின் துணையும் வேண்டும். இவ்வளவு சிறப்பு வாய்ந்த நாடி விஞ்ஞானம் பற்றி சித்தர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போம். ஒருசித்தர் சொல்கிறார்:-

நாடியென்றால் நாடியல்ல நரம்பில்தானே
நலமாகத்துடிக்கின்ற துடி தானுமல்ல
நாடியென்றால் எழுபத்தீராயிரமுமல்ல

நாடியென்றால் வாதபித்த சிலேற்பனமுமல்ல
நாடியென்றால் அண்டபகிரண்டமெல்லாம்
நாடியுறும் பொருள் தெரிந்து நாடுவாரே.

என்று கூறுகிறார்.

இதனை ஆராய்வோம்.

நாடி என்று சொல்லப்படுவது, உடம்பிலுள்ள ரத்தக்குழல்களில் உண்டாகும் துடிப்பு மட்டுமல்ல; அது எழுபத்தீராயிரம் என்று கூறுவார்கள். அதுமட்டுமல்ல; நாடி என்பது வளி, அழல், ஐயம் என்ற மூன்றுமட்டுமல்ல பின் எது?

இப்பேரண்டம் முழுவதும் பரந்து கிடக்கின்ற அணுவுக்குள் அணுவாக மறைந்துறையும் பேரறிவுப் பொருளாம்பதிக்கு இருப்பிடமாய் அமைந்த உயிராகிய ஆன்மாவின் இயக்கமே நாடியாகும்.

எனவே, நாடி என்பது, ரத்தக்குழாய்களில் உண்டாம் துடிப்புகளின் எண்ணிக்கையோ (Rate) துடிப்புகளின் தாள அமைதியோ(Rhythm) எழும்பும் பரிமாணமோ(Volume), அழுத்தமோ(Tension) மட்டுமல்ல, அது ஒவ்வொரு உடம்பிலும் செயல்படும் உயிரின் முழு இயக்கமாகும். இந்த உயிரின் இயக்கம் உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் செயல்படுகிறது. சிறப்பாகப் பத்து இடங்களில் ரத்தக் குழாய்களின் ரத்த அழுத்தத்தில் வெளிப்படையாகப் பிரதிபலிக்கிறது. இதனையே, நாடியை உடம்பில் பத்து இடங்களில் பார்க்கலாம் என்று சித்தர்கள் கூறியுள்ளார்கள். இந்தப் பத்து இடங்களிலும், எளிதாக யாருக்கும் எந்த நேரத்திலும் பார்க்கின்ற இடமாக வாய்ந்தது கைகள். ஆணுக்கு வலது கையிலும், பெண்ணுக்கு இடதுகையிலும் பார்க்கவேண்டியது விதி.

நாடி பார்க்கும்முன், பிணியாளரின் கைவிரல்களை நெட்டை வாங்கி, உள்ளங்கைகளில் சூடு பறக்கத் தேய்த்தபின் மூன்று விரல்களால் அழுத்தியும் விட்டும் மாறி மாறிப் பார்க்கும்போது வளி, அழல், ஐயம் ஆகியவற்றின் நிலைவேறுபாடுகளை விரல்களால் உணரமுடியும். அவ்வேறுபாடுகளுக்குத் தகுந்தாற்போல் மருத்துவம் செய்யவேண்டியது வைத்தியரின் கடமையாகும். நாடியை முறையாகப் பயில ஆசிரியரின் துணையோடு ஆரம்பித்து அதன்பின் அனுபவத்தால் ஆற்றல் பெறுக.

எண்வகைத்தேர்வு

சித்தமருத்துவ முறைப்படி நோயைக்கணிப்பதற்கு எட்டுவிதமான அணுகுமுறைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றையே எண்வகைத் தேர்வு என்பர். ஆயுர்வேதத்தில் கூறப்படும் அஷ்டவிதப்பரீட்சைகளுக்கும் சித்த மருத்துவத்தில் கூறப்படும் எண்வகைத் தேர்வுக்கும் சிறிது வேறுபாடுண்டு. சித்தமருத்துவத்தில் கூறப்படும் எண்வகைத் தேர்வுகளாவன:-

1. நா, 2. நிறம், 3. மொழி, 4. விழி, 5. தொடு உணர்வு, 6.மலம், 7. சிறுநீர், 8. நாடி என்பன.

நா: நோயாளியின் நாக்கைப் பரிசோதிக்க வேண்டும். நாக்கு இயற்கையாக இருக்கிறதா? சிவந்து தாபிதமடைந் திருக்கிறதா? கறுத்து வறட்சியுடன் காணப்படுகிறதா? வெண்மையாக மரிப்படிந்து காணப்படுகிறதா என்பதை அறியவேண்டும். நோயாளி, சுவையை இயற்கையாக அறிகிறாரா என அறிதல் வேண்டும். எடுத்துக்காட்டாக, கைப்பு, புளிப்புச் சுவையை உணர்வதாகவோ, மழுமழுவென்று சுவையை அறியமுடியாமல் நீர் சுரந்துகொண்டிருக்கிறதா? என்பவற்றை அறிந்தால் மிகுந்த குற்றம் வாதமா, பித்தமா, கபமா என்பதை அறியமுடியும்.

நிறம்: நோயாளியின் இயற்கையான நிறம் என்ன? அதிலிருந்து அவர் நிறம் மாறுபட்டிருக்கிறதா? என்பதனை அறியும்போது, வளி, அழல், ஐயங்களில் எது மாறுபாடடைந் துள்ளது, எனக் கணிக்கலாம்.

மொழி: நோயாளியின் இயற்கைக் குரலிலிருந்து ஒலி மாறுபாடுண்டாகியிருக்கிறதா? பேச்சுத் தடுமாற்றம் இருக்கிறதா, ஒலி உரத்துக் காணப்படுகிறதா? மெலிந்து காணப்படுகிறதா? ஒலியே இல்லையா? இவற்றை அறியும்போது ஐம்பூதங்களில் ஆகாயக்கூறு பாதிக்கப் பட்டிருக்கிறது என அறியலாம். வெளியிலே, வாயு சலனமுற்றுத்தான் ஒலி உண்டாகிறது. எனவே வளியானது பாதிக்கப்பட்டிருக்கிறது என அறியலாம்.

விழி: கண்ணின் பார்வை நிறம், தாபிதம் இமைத்தலில் கோளாறுகள் நீர்பாய்தல் ஆகியவற்றைக்கொண்டு வளி, அழல், ஐயங்களின் மாறுபாடுகளைக் கணிக்கலாம்.

தொடு உணர்வு: நோயாளியின் மேனியில் தொட்டால் உணர்வு உள்ளதா? கூச்சம் உள்ளதா? வலி உள்ளதா? எரிச்சல் உள்ளதா? நாம் தொடும்போது உடல் வறட்சியுடன் சூடாகவுள்ளதா? எரிச்சல் உண்டாகிறதா? உடம்பு குளிர்ந்து காணப்படுகிறதாஎன்பனவற்றை அறியும்போது வளி, அழல், ஐயம் ஆகியவற்றின் தன்னிலை வளர்ச்சி, வேற்றுநிலை வளர்ச்சிகளை அறிய இயலும்.

மலம்: கழிக்கின்ற மலத்தின் நிறம் அதனுடன் குருதி, சளி போன்றவை காணப்படுகிறதா? மலம் கொஞ்சம் கொஞ்சமாகக் கழிகிறதா? நிறைய மலம் போகிறதா? கட்டியாகப் போகிறதா? நீர் நீராகப்போகிறதா? நாற்றம் இருக்கிறதா? காற்றுடன் சேர்ந்து வெளிப்படுகிறதா? நுரையுடன் சேர்ந்து வெளிப்படுகிறதா என்று வேறு பாடுகளைக் கண்டறிந்தால், வளி, அழல், ஐயம் ஆகியவற்றின் வேறுபாடுகளைக் கண்டறிய முடியும்.

சிறுநீர்: நோயாளியின் சிறுநீரின் நிறம் அளவு, நுரை, எஞ்சல்(அடியில் தங்குவது) சிறுநீர் கழிக்கும் தடவைகள், கழிக்கும்போது உண்டாகும் உணர்வுகள் ஆகியவற்றை அறியவேண்டும்.

நாடி: மேற்கூரிய ஏழுவகைத் தேர்வுகளிலும் கண்ட உண்மைகளை ஒழுங்குப்படுத்தி அதன்பின் நாடியோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

மொத்தத்தில் அனைத்துத் தேர்வுகளினால் கண்டறிந்த குறிகுணங்களை ஒன்றுசேர்த்துப் பார்த்தால் சித்தமருத்துவம் என்ற நூலில் சொல்லப்பட்ட நோய்களில் ஏதாவது ஒன்றில் அடங்கும். அதற்குத் தகுந்த மருத்துவம் செய்யவேண்டியது வைத்தியரின் கடமை.

ஓதொரு நாடி மூன்றி லொவ்வொன்றும் நன்னான்காகும்
வாதமுன் னடந்தால் வெட்டைவளரும் பின் பித்தவாயு
ஏதமில் வலத்தில் சூலை இடந்தனி லிசைந்தால் குன்மம்
ஈதொரு நாடி பார்த்து எடுத்துரை புவியுள்ளோர்க்கே. (1)

வாதநாடியின் முன் பாய்ச்சல் வெட்டைச்சூட்டையும் அதனாலுண்டாகும் நோய்களையும், பின்பாய்ச்சல் பித்தத்தின் துணையை நாடியிருப்பதால் வாத பித்தமும் அதனாலுண்டாகும் நோய்களையும், வலப்பாய்ச்சல், வாதசூலையையும், இடப்பாய்ச்சல் வாத குன்மத்தையும் குறிக்குமென்பதாம்.

பித்தமுன் னடக்குமாயின் பிறந்திடும் மேகவாயு
மெத்தபின் கதிக்குமாகில் மேவிடும் சுவாசகாசம்
எத்திட வலத்தில் சூலை இடந்தனிலிசைந்தால் குன்மம்
இத்தகை நாடிபார்த்து இயம்புவாய் பிணியாளர்க்கே... (2)

பித்தநாடியின் முன்னியக்கம் பித்தவாயுவையும் அதனாலுண்டாகும் நோய்களையும் மேகவாய்வு முதலியவைகளையும், பின்னியக்கம் கபத்தின் துணையை

நாடுவதாக இருப்பதால் பித்தகபத்தால் உண்டாகும் நோய்களையும், சுவாச காசம் போன்றவைகளையும், வல இயக்கம் பித்த சூலையையும் இட இயக்கம் பித்த குன்மத்தையும் குறிக்கும்.

ஐயமுண் டடைக்கம் போது அறிந்திடு கபமேயாகும்
பையபின் கதித்துமீறில் பற்றிடுஞ் சிலேத்மரோகம்
பொய்யல்ல வலத்திலேக்கம் புகலிடஞ்சரியிற் சாவாம்
கையதை யூன்றிப் பார்த்துக் கருத்தினிற்றெளிந்துகூறே... (3)

கபநாடியின் முன்னியக்கம் கப பித்தத்தாலுண்டாகும் பிணிகளையும் கூடியம் முதலியவைகளையும், பின்னியக்கம் கபத்தைக் குறிப்பிடுவதால் கப சம்மந்தமான பல பிணிகளையும், வல இயக்கமும் இட இயக்கமும் அசாத்திய நிலைகளையும் முக்கியமாக இட இயக்கம் மரணத்தையுங் குறிக்குமென்பர்.

இடகலை யென்ற வாத நாடியானது வலதுபாத பெருவிரலினின்று கிளம்பி மூலாதாரத்தின் மார்க்கமாய் இருதயஸ்தானத்திற்கு இடதுபுறமாய்க் கண்டம் வரையிலோடிக் கத்தரிக்கோல் மாறலென மாறி சிரசிலுள்ள சந்திரமண்டலத்தை அடைந்து இடது நாசியின் வழியாகச் சென்று இடக்கரத்தில் பாயுமென்றும்.

பிங்கலை யென்ற பித்தநாடியானது இடதுபாத பெருவிரலினின்றி கிளம்பி மூலாதாரத்தின் மார்க்கமாய் இருதய ஸ்தானத்திற்கு வலப்புறமாகக் கண்டம் வரையிலோடிக் கத்தரிக்கோல் மாறலென மாறி சிரசிற்கேறி அங்குள்ள சந்திரமண்டலத்தை அடைந்து வலது நாசியின் வழியாகச் சென்று வலக்கரத்தில் பாயுமென்றும்.

சுழுமுனை யென்ற கப நாடியானது இவை இரண்டிற்குமிடையே மூலாதாரத்தினின்று உச்சிவரை ஓடிச் சூரியமண்டலத்தை அடைந்து வலது இடது நாசித்துவாரங் களுக்கு இடையே இயங்கி நிற்குமென்றும், வாதத்திற்கு

ஆதாரம் அபானவாயுவென்றும் பித்தத்திற்கு ஆதாரம் பிராணவாயுவென்றும் கபத்திற்கு ஆதாரம் சமான வாயுவென்றும் அறியக்கிடக்கின்றது.

நாடிகள் என்றால் நரம்புகள். இவற்றில் 72000 உண்டு. அதில் விசை நரம்பென ஒன்றுண்டு. அதைத்தான் திரிநாடி எனக்கூறுவர். அந்த விசை நரம்பு ஒன்றில்தான் திரிநாடி இயங்கும்.

காலையில் நடக்கும் நடை - வாதம் (வளி)
பகலில் நடக்கும் நடை - பித்தம் (அழல்)
மாலையில் நடக்கும் நடை - சிலேத்துமம் (ஐயம்)
வாதநடை கோழியின் நடையைப் போன்றியங்கும்
பித்தநடை ஆமையின் நடையைப் போன்றியங்கும்
சிலேத்துமம் பாம்பின் நடையைப் போன்றியங்கும்
வாதநாடி - நாபிஸ்தானத்திலும்
பித்தநாடி - கண்டத்திலும்
சிலேத்தும நாடி - உச்சியிலும் குடியிருக்கும்

நமது வலக்கரத்தின் மணிக்கட்டில் ஓர் அங்குலம் விட்டு மேலே தள்ளி விசை நரம்பை நமது மூன்று விரல்களாலும் அழுத்திப்பார்க்க வீணையின் விகுவாக நமது விரல்களைத் தூக்கிக் குறிப்பு காட்டும். அவ்வாறு காட்டும் குறிப்பினால் இன்ன நாடியென அறிதல் வேண்டும். மேற்கூறிய இடத்தில் மூன்று விரல்களால் அழுத்திப்பார்க்க ஆட்காட்டிவிரல் வாதம், நடுவிரல் பித்தம், மோதிரவிரல் சிலேத்துமத்தையும் குறிக்கும்.

தசநாடி

சுழிமுனை இடகலை பிங்கலை காந்தாரி
தூயத்தி சிங்குவை யலம்புடை புருடன் தானும்
நெழுகுருவன் சங்கினியோ டுரைந்தாக
நின்றதச நாடிபத்தும் நிலைத்தநாமம்.

தசவாயுவின் இருப்பிடமும் செயலும்

பிராணன்	சமானன்
அபானன்	கூர்மன்
வியானன்	நாகன்
உதானன்	தேவதத்தன்
கிருகரன்	தனஞ்செயன்

1. பிராணன்: உந்தி இடத்தில் தோன்றி இருவிழிகளில் நின்று நாசி வழியாக நாழிகை ஒன்றுக்கு 360 சுவாசத்தை உண்டாக்கும்.

2. அபானன்: உந்திஸ்தானத்தின் அடியிலிருந்து மலங்களைப் பிரவித்தி செய்யும்.

3. வியானன்: உடலில் தோலிலிருந்து அழகையும், வெப்பத்தையும் உண்டுபண்ணும்.

4. உதானன்: உண்ட ஆகாரத்தை நரம்புகளில் பரவச்செய்யும்.

5. கிருகரன்: உடலை வளர்க்கும்.

6. சமானன்: மற்ற வாய்வுகளை மீறாதவாறு பாதுகாக்கும்.

7. கூர்மன்: இருவிழிகளிலிருந்து பார்க்கவும். இமைகளை மூடவும் செய்யவும்.

8. நாகன்: கொட்டாவி, விக்கல் உண்டு பண்ணும்.

9. தேவதத்தன்: இரு கால்களையும் நடக்கவும், மடக்கவும் செய்விக்கும்.

10. தனஞ்சசெயன்: வார்த்தைகளை நாவினிடத்திலிருந்து வருவிக்கும். புருவம், உச்சி, கண்டம், நெஞ்சு, கரங்கள், கால்களின் பெருவிரல், கால்களின் மணிக்கட்டு, முழங்கை, முழங்கால் ஆகிய இடங்களில் தசநாடி இயங்கும்.

இரவில் நாடி அறிதல்

1. **வாதம்**: மாலை 6மணி முதல் 10 மணி வரை.

2. **பித்தம்**: இரவு 10 மணி முதல் விடியற்காலை 2 மணி வரை.

3. **சிலேத்துமம்**: விடியற்காலை 2 மணி முதல் காலை 6மணி வரை, என அறிதல் வேண்டும். மேற்கூறியவாறே பகலிலும் நடக்கும்.

நாடி தெரியாக்காலம்

எண்ணெய் ஸ்நானம் செய்தபோதும், உடல் நனைந்துள்ளபோதும், உணவு உட்கொண்ட உடனேயும், இன்ப உணர்ச்சியிலாழ்ந்துள்ள போதும், நடந்துவந்த உடனேயும் லாகிரிவஸ்து உட்கொண்டபோதும், விடமருந்தியபோதும், பயமுற்றபோதும், விரதமிருந்தவர், விக்கல், வாந்தி, பேதி, வன்மையாக உள்ளவர்கட்கும், அடிபட்டவர், அதிர்ச்சி அடைந்தவர், மிக்க இரத்தப்போக்கு அடைந்தவர், இரத்தம் மிகவும் குறைந்து காணப்படுவார்கள். சுவாசத்தை அடக்குபவர் முதலியோர்க்கு நாடி எளிதில் காணவியலாது.

நாடியின் இடங்கள்

அறிந்திடும் வாதம் அடங்கும் மலத்தினில்
பிறந்திடும் பித்தம் பேறாஞ் சலத்தினில்
மறந்திடும் ஐயம் வாசிக்கும் விந்துவில்
உறைந்திடும் மூன்றுக் குறவாந் தலமிதே.

நாடியின் நிறம்

உறவாங் கறுப்புஞ் சிவப்பிலும் நல்வாதம்
குறைவான பச்சைப் பசுமைக் கொடும் பித்தம்
நிறைவான வென்மையாய் நின்றது நல்லையம்
அறைவான வர்ணம தாகுந் தலமிதே.

ஈடணைகள் - 3 *(முப்பற்றுகள்)*

1. தாரோஷணை: இது பெண்ணாசையைக் குறிக்கும்.

2. புத்திரேஷணை: இது புத்திர வாஞ்சையைக் குறிக்கும்.

3. அர்த்தேஷணை: இது பொருளாசையைக் குறிக்கும்.

குணம் - 3

1. **சத்துவமாவது:** அருள், ஐம்பொறி அடக்கல், ஞானம், தவம், பொறை, மேன்மை, மோனம் (மௌனம்) வாய்மை முதலிய நற்குணங்களில் நாட்டங்கொண்டிருப்பது, அடக்கம், அன்பு விவேகமுடையது.

2. **இராசதமாவது:** ஊக்கம், ஞானம், வீரம், அறம், தவம், ஈகை, கல்வி, கேள்வி ஆகிய எண் குணங்களுடையது.

3. **தாமதமாவது:** ஒழுக்கமின்மை, காமம், சினம், கொலை, சோம்பல், நீதிவழுவல், நெடுந்துயில், பேருண்டி, பொய், மறதி, வஞ்சகம் முதலிய தீக்குணங்களுடையது.

வினை - 2

1. நல்வினை: தர்மம் முதலிய புண்ணியங்களைச் செய்தல்.

2. தீவினை: கொலை, களவு முதலிய பாவங்களைச் செய்தல்.

விகாரம் - 8

காமம் - அதிக ஆசை
குரோதம் - பிணக்கு
லோபம் - ஈயாமை, பிடிவாதம்
மதம் - கர்வம், பிறரை மதியாமை

மோகம் - பிறமாதர் இச்சை
மாச்சர்யம் - மனதில் விரோதங்கொள்ளல்
இடும்பை - உதாசீனம் (இகழ்தல்)
அசூயை - பொறாமை (அகங்காரம்)

அவத்தை - 5

1) சாக்கிரம் லலாட ஸ்தானக் கருவியில் லயப்பட்டது.

2) சொப்பனம்: கண்ட ஸ்தானக் கருவியில் லயப்பட்டது.

3) சுழுத்தி: கண்ட ஸ்தானக் கருவியில் லயப்பட்டது.

4) துரியம்: நாபிக் கமலக் கருவியில் லயப்பட்டது.

5) துரியாதீதம்: குதஸ்தானக் கருவியில் லயப்பட்டது.

எண்வகைத்தேர்வு

	நாடி	நடை	முகம்	கண்நிறம்	நாவின்நிறம்	தந்தநிறம்	மலநிறம்	நீர்நிறம்	தேகபரிசம்
1	வாதம்	கோழி	கறுப்பு	கறுப்பு	வெளுத்துத் தடித்திருத்தல்	வெண்மை	கறுப்பு	கறுப்பு	குளிர்ச்சி
2	பித்தம்	ஆமை	மஞ்சள்	மஞ்சள்	மஞ்சள் துர்க்கந்தம்	ம்ஞ்சள்	மஞ்சள்	மஞ்சள்	உஷ்ணம்
3	சிலேத்துமம்	பாம்பு	வெண்மை	வெண்மை	வெண்மை வழவழப்பு	அதி வெண்மை	வெண்மை	வெண்மை	வியர்வை

நாடியின் காலநிலை

விரல்	நடை	நேரம்	மாத்திரை	நோயின்விபரம்
ஆட்காட்டிவிரல்	கோழி	காலை 6-10	2	வாதத்தில் வாதம்
,,	கோழி	6-10	1	வாதம்
,,	ஆமை	6-10	¼	வாதத்தில்பித்தம்
,,	பாம்பு	6-10	½	சிலேத்துமம்

2

விரல்	நடை	நேரம்	மாத்திரை	நோயின் விபரம்
நடுவிரல்	ஆமை	பகல் 10-2	1	பித்தத்தில் பித்தம்
,,	ஆமை	10-2	½	பித்தம்
,,	பாம்பு	10-2	¼	பித்தத்தில் சிலேத்துமம்
,,	கோழி	10-2	1	பித்தத்தில் வாதம்

3

விரல்	நடை	நேரம் மாலை	மாத்திரை	நோயின் விபரம்
மோதிரவிரல்	பாம்பு	2-6	½	சிலேத்துமத்தில் சிலேத்துமம்
,,	பாம்பு	2-6	¼	சிலேத்துமம்
,,	கோழி	2-6	1	சிலேத்துமத்தின் வாதம்
,,	ஆமை	2-6	½	சிலேத்துமத்தின் பித்தம்

4

விரல்	நடை	நேரம்	மாத் திரை	நோயின் விபரம்
ஆள்காட்டி விரல்	ஆமை	6-10	¼	விஷசன்னி
நடுவிரல்	பாம்பு	10-2	¼	பித்தத்தில் சன்னி
மோதிரவிரல்	பாம்பு	2-6	1/8	சிலேத்துமத்தில் சன்னி

வாதத்தில் வாதமானால்: உடல் மெலிந்து வீங்கி வாடும். மனமானது பதறும். உடம்பு துடிக்கும். நித்திரை வராது.

வாதநோயானால்: வயிறு மந்தம், மூட்டுகள் தோறும் வலி உண்டாகும். தாது நட்டமடையும். சிறுகச்சிறுக நீர் இறங்கும். மலம் தடைப்படும். மலம் கருகிக் காணும். நாவறட்சி உண்டாகும்.

வாதத்தில் பித்தமானால்: வாய்குளறும், புத்தி தடுமாற்றமடையும். கை, கால்கள் குளிர்ச்சி அடையும். வீக்கமுண்டாகும். வயிற்றில் புண் ஏற்பட்டுக் குடலைப் புரட்டும்.

சிலேத்தும நோயானால்: சரீரமானது சீதளமடைந்து வியர்க்கும். நாவில் நச்சு (விஷம்) போன்ற நீர் சுரந்து துர்க்கந்தமாய் ஈளை விழும்.

பித்தத்தில் பித்த நோயானால்: சரீரத்தில் கிறுகிறுப்பு உண்டாகும். வாயில் நீர் ஊறும். இளைப்பு உண்டாகும். உடம்பு வியர்வையுண்டாகி வாடும். பிறகு வீக்கமடையும்.

பித்தநோயானால்: கண்சிவந்து சீதளமடையும். சிறுநீர் கருத்துவிழும். இந்நீர் துணிகளில் கறைபிடிக்கும். இந்நீரானது சிவந்து இருக்கும். மயக்கம் உண்டாகும். நா உலர்ந்து வரும்.

பித்தத்தில் சிலேத்தும நோயானால்: வாய் குளறும், வாயில் நீரூறி வழியும். எழுந்து ஓடித்திரிவான். வயிற்று வலியும், வாந்தியும், கழுத்தில் வலியும் உண்டாகும்.

பித்தத்தில் வாத நோயானால்: கழுத்து, கை, கால்கள், உடம்பு முதலியனவற்றில் வலி உண்டாகும். ஒவ்வொரு நரம்பும் விகுவாயிருக்கும். மனம் பதறும், உடம்பு வாடும், சுரம் உண்டாகும் புத்தி தடுமாற்றமடையும்.

சிலேத்துமத்தில் சிலேத்தும நோயானால்: திமிரடியாகவும், ஆத்மாவானதும், புத்தியும் செயல்படாமல் விழிகள் வட்டமிட்டு மேல்மூச்சு வாங்கும். இதுவே அசாத்திய நோயாகுமெனலாம். சாகும்நிலை ஏற்படக்கூடிய குறையும், குணங்களும் இதுவே ஆகும்.

சிலேத்துமத்தில் வாதநோயானால்: நரம்புகள் முறுக்கேறி நிற்கும். முகத்தில் வலி உண்டாகி மேல்விழி, கீழ்விழியாகி மிரள மிரள விழிக்கும். நாக்குளறவும் செய்யும்.

சிலேத்துமத்தில் பித்தமாகில்: வாய் கசந்து காணும். நாக்கு பலவித சுவையைத்தரும். பேசும் சொற்களில் திடமிராது. கோபமுண்டாகும். கண்களில் அழுக்குடன் நீர்வடியும். குரல் வேற்றுமையை அடையும்.

நாடிகள் நடக்கும் விதம்

இருதயம் விரியவும், சுருங்கவும், நாடி நரம்புகள் விரியவும், சுருங்கவும் செய்யும். இருதய நடைக்கு நாடி நடை ஒத்திருப்பதால் உடலில் இருக்கின்ற நோய்களை இருதயம் அறிந்து நாடிகள் வழியாய் தெரிவிக்கின்றது.

நாடி பார்க்கும் இடங்கள்

கை, கண்டம், காலின் பெருவிரல், கணுக்கால், கண்ணிச்சுழி ஆகிய இவைகளில் கையைப்பார்த்து சொல்வதே உத்தமம் எனப்படும்.

நாடிபார்க்கும் விதம்

கையின் பெருவிரல் பக்கமாய் ஓடும் நாடியை மணிக்கட்டிற்கு ஒரு அங்குலம் மேலாக மூன்று விரல்களால் அழுத்தியும், தளர்த்தியும், சமமாகவும் மாறி, மாறி பார்த்தால் நாடியின் நடையை அறியலாம்.

ஆண்களுக்கு வலது கையையும், பெண்களுக்கு இடது கையையும் பார்க்கவேண்டும். சில சமயங்களில் இரண்டு கைகளையுமே பார்ப்பது உண்டு.

நோயாளியை படுக்க வைத்தாவது, உட்காரவைத்தாவது நாடியை பார்க்கவேண்டும்.

நாடிபார்க்கும் மாத வகைகள்

சித்திரை, வைகாசி-உதயத்திலும் (காலையில்), ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை-மதியத்திலும் (நண்பகல்), மார்கழி, தை, மாசி-அஸ்தமனம் (மாலையில்), பங்குனி, ஆவணி, புரட்டாசி-இரவிலும் பார்க்க நாடி நன்கு தெளிவாய்த் தெரியும்.

நாடி அறியும் விதம்

நாடியைப் பார்க்கும்போது முதல் விரலுக்கு கீழ் வாதநாடியும், நடுவிரலுக்குக் கீழ் பித்தநாடியும், கடைவிரலின் கீழ் கப நாடியும் நன்கு தெரியும்.

நாடி நடக்கும்விதம் (ஆண்கள்)

வாதநாடி: குயில், அன்னம், கோழி, மயில் போன்றவற்றின் நடையைப்போல் நடக்கும்.

பித்தநாடி: ஆமை, அட்டை ஆகியவைபோல் நடக்கும்.

கபநாடி: பாம்பு, தவளை போன்று நடக்கும்.

நாடி நடக்கும் விதம் (பெண்கள்)

வாத நாடி: சர்ப்பம்போல் நடக்கும்

பித்தநாடி: தவளை போல் நடக்கும்.

கபநாடி: அன்னம்போல் நடக்கும்.

பஞ்சபூத நாடிகள் இருக்கும் இடத்தின் விபரம்

பெருவிரல்	:	பூதநாடி
ஆள்காட்டிவிரல்	:	வாதநாடி
நடுவிரல்	:	பித்தநாடி
பவுத்திரவிரல்	:	கபநாடி
சுண்டுவிரல்	:	பூதநாடி
குருநாடி	:	ஐந்துள்ளும் சேர்ந்து நிற்கும்.

உடலில், வாத, பித்த, கபம் இருக்கவேண்டிய அளவுகள்: உடலில் கபம் 1 பங்கும், பித்தம் 2 பங்கும், வாதம் 4 பங்கும், இருக்குமாயின் நோய் இல்லையென அறியலாம்.

ஒரு நிமிடத்திற்கு நாடி நடக்கும் அளவு

பருவம்		துடிப்பு
குழந்தை பிறந்தவுடன்	:	140
பால்யத்தில்	:	120 முதல் 130 வரை
குழந்தையில்	:	100 முதல் 130 வரை
யௌவன பருவம்	:	90 முதல் 130 வரை
சம்பூர்ண பருவம்	:	70 முதல் 75 வரை
சம்பூர்ண பருவ ஸ்ரீகளி	:	75 முதல் 80 வரை
சீன பருவத்தில்	:	70 முதல் 80 வரை
விருதாபிய பருவம்	:	75 முதல் 80 வரை
உட்கார்ந்திருக்கும்போது	:	40
நிற்கும்போது	:	70
படுக்கும்போது	:	67

இவ்விதமாய் நாடி நடக்கும்.

நாடியின் பேதா பேதங்கள்

1) நடந்து சரீரம் அயர்ந்திருந்தாலும், சாப்பாடு சூடான உணவுகள், சாராயம் முதலிய போதைப்பொருட்கள், புகையிலை, வெயில், சுரம், மனச்சஞ்சலம், அதிக பலவீனம், இரத்தம் வடிதல் முதலியவைகளினாலும் நாடி நடை தீவிரமாயும், படபடவென்றும் ஓடும்.

2) பசி, மனசஞ்சலம், அதிக குளிர் அதிக நித்திரை முதலானதுகளினால் நாடி நடை குறையும்.

3) வயோதிகர், பாலர், கபநோயாளிகள், சிற்றின்பம் செய்த பேர்கள், தண்ணீரில் மூழ்கிய பேர்கள் இவர்களின் நாடி நடை உண்மை தெரியாது.

4) நாடி பார்க்கும் இடத்திற்கு மேல் யாதொரு கட்டிகள் இருந்தாலும், பூமியில் கைகளை ஊன்றிக்கொண்டிருந்தாலும் கால்களை கட்டிக்கொண்டிருந்தாலும் நாடி நடை தெரியாது.

மனிதர்களின் வயதின் விவரம்

30 வயது வரை உடல் வளரும். அதற்கு மேல் முகத்தில் ஒளி குன்றும். 40 வயதிற்குமேல் அழகு கெடும். 50 வயதிற்கு மேல் கண்ணொளி மங்கும். நடக்கும்போது திகைப்பு உண்டாகும். 70 வயதிற்கு மேல் அறிவு குறையும். 80 வயதிற்குமேல் சுவாசம் மேல்நோக்கி வெளியில் செல்லும். 90 வயதிற்குமேல் ஐம்புலன்களும் பொறிகளும் ஒடுங்கி நூறுவயதில் மரணம் அடைவர்.

சரீரக் கட்டளை விவரம்

நமது சரீரம் மண், நீர், நெருப்பு, காற்று, வெளி என்று சொல்லக்கூடிய பஞ்சபூதங்களும் சரீரத்திற்கு ஆதாரமாய் இருக்கின்றன.

வாதம்: வாயு (காற்று)வின் தன்மையை ஒத்திருக்கும்.

பித்தம்: தேயு (நெருப்பு)வின் தன்மையை ஒத்திருக்கும்.

கபம்: அப்பு (நீர்) வின் தன்மையை ஒத்திருக்கும்.

சிரோனிதத்துடன் சுக்கிலம் சேரும்போது வாத, பித்த, கபங்களில் எது அதிகரிக்கிறதோ அது குழந்தைகளை பற்றி

வாத சரீரம், பித்த சரீரம், கபசரீரம் என்ற மூன்றுவகை சரீர கட்டளைகள் இருக்கின்றன.

வாத சரீரத்தின் குறிகள்

நாடி மெதுவாக நடக்கும், சரீரம் அசதியுள்ளதாயும், புத்தி மந்தமாயும் இருக்கும். உற்ற காரியங்களையும் மெத்தனமாகவே செய்வர். உடல் குளிர்ந்து பருத்திருக்கும்.

பித்த சரீரத்தின் குறிகள்

நாடிகள் விரைவாய் நடக்கும், திடமும், தீர்க்கமும், கடினமான காரியங்களை சந்திக்கும் சக்தியும் உண்டாகும். இளமையில் நரைக்கும், கடைக்கண் சிவப்பாய் இருக்கும். பேசும்சொற்கள் அமிர்தமாய் இருக்கும். காம குரோதாதிகள் அதிகரிக்கும். உடல் உஷ்ணமாய் இருக்கும். மெய், பொய் அறியும்படி பல நூல்களை ஆராயும் திறன் உடையதாய் இருக்கும்.

கபசரீரத்தின் குறிகள்

நாடிகள் அதிகம் தாழ்ந்தும், துர்பலம் உள்ளதாயும் இருக்கும். உடல் வியர்க்கும். சன்மார்க்கத்தில் இச்சை உண்டாகும். தோகையரின் இன்பமும், பொய் கனவுகளும் விலகியிருக்கும். தலைமுடி நீண்டு வளர்ந்து காட்டும்.

வாத, பித்த, கப நிலைகள்

அனுபானம் முதல் உந்திவரை வாதநிலை, உந்தியின் மேல் மார்பு மட்டும் பித்தநிலை, மார்பு முதல் உச்சிவரை கபநிலை.

வாத, கப பித்தத்தின் இயல்புகள்

வாதம், வாயு, புளிப்பு, குளிர்ச்சி, நிறம், கருமை, பித்தம், கசப்பு, வெதுப்பு, பசுமை, பச்சை, கபம், இனிப்பு, வியர்வை, வெண்மை.

வாதம் எழும்பிடில் புளிப்பு நாவில் ஏறும்
பித்தம் எழும்பிடில் கசப்பு நாவில் ஏறும்
கபம் எழும்பிடில் இனிப்பு நாவில் ஏறும்

சரீரம் குளிர்ந்தால் வாதம்
சரீரம் சுட்டால் பித்தம்
சரீரம் வியர்த்தால் கபம்

வாத, பித்த, கப காலங்கள்

1 முதல் 40 வயது வரை	வாதகாலம்
40 முதல் 80 வயது வரை	பித்தகாலம்
80 முதல் 100 வயது வரை	கபகாலம்

நோயாளியின் தேக முதலான குணங்கள்

வாத தேகம்: உடல் குளிர்ந்து, முகம், பல், விழி, மலம் கருத்திருக்கும். கண்களில் நீர் வடியும். நாக்கு கருத்து, வரண்டு முள்முள்ளாய் இருக்கும். சிறுநீர் பொறுமி கடுத்து, சிறுத்து இறங்கும்.

பித்ததேகம்: உடல் சூடாகவும், முகம், விழி, நாக்கு, பல், மலம் மஞ்சளாய் இருக்கும். நீர் மஞ்சளாயும், சிவப்பாயும் இறங்கும்.

கபதேகம்: உடல் வியர்க்கும், முகம், விழி, பல், நாக்கு, மலம் வெளிப்பாய் இருக்கும். கண்களில் பீளை கட்டும்.

தொந்த: நோயாளியின் உடல், முகம், விழி, பல், நாக்கு, மலம் பல நிறமுடையதாய் இருக்கும்.

வாதத்தின் கூறு

வாதம் மீறினால் வாயுவினால் உடல் முழுதும் குத்தும், கால், கை, சந்து, பொருத்துக்கள் உளையும், கால், கை

ஒருபக்கத்தில் முடங்கும். குனிந்தால் நிமிர ஒட்டாது. திமிர் உண்டாகும். உடல் பொருமும், குடல் புரட்டும், உணவு செல்லாது. வயிறு மந்திக்கும், பொருமும், மலம், மூத்திரம் தடைபடும். அபானன் சுருங்கும். நாவு புளிக்கும். தாது நட்டப்படும். கழிச்சல் உண்டாகும்.

பித்தத்தின் கூறு

பித்தம் மீறினால் உடலில் காந்தலும், வரட்சியும் ஏற்பட்டு நடுக்கம் உண்டாகும். மண்டைக்குத்து, நாவரட்சி, கசப்பு, பசியின்மை, தாகம், வாந்தி, விக்கல், மூர்ச்சை, கிறுகிறுப்பு, காதடைப்பு, அயர்வு, சோபம், வயிறு காந்தல், நெஞ்செரிவு, அக்கினி மந்தம், குளிர்சுரம், விடாசுரம், நடுக்கல் சுரம், அஸ்தி சுரம், பாண்டு, காமாலை, சோகை, மயக்கம், பிரமேகம், பித்தவெட்டை முதலியன உண்டாவதுடன், விழிகள் சுழன்று குழிவிழுந்து இருண்டு வரும். நீர் மஞ்சளாகவும், சிவப்பாயும் இறங்கும்.

கபத்தின் கூறு

சிலேத்துமம்(கபம்) மீறினால் உடல் காயும், சரீரம் வற்றி வெளுத்து குளிர்ந்து நடுங்கும். உணவு செல்லாது. விக்கல், வாந்தி, இருமல், மேல்மூச்சு, திகைப்பு, வியர்வை, சயம், ஈளை, இளைப்பு முதலியவை உண்டாகி நெஞ்சும் விலாவும் வலிக்கும். இரத்தம் கக்கும். நாக்கு வழுவழுத்து இனிக்கும். வாயில் நீர் ஊறும். சிறுநீர் சிறுத்திறங்கும்.

குருநாடி இருக்கும் இடம்

குருநாடி எப்போதும் பித்தத்தின் முன்னே நிற்கும். அது திசைநாடி பத்திற்குந் திறமாய் நிற்கும். உடற்குயிராய் நின்ற குருநாடி வாத பித்தத்திற்கு நடுவில் இருப்பதைப் பார்க்கில் அது மூவிரலுந்தாண்டி மூல முதலுரவிப் பாய்ந்து விசை நரம்பு ஊடே சேர்ந்து சந்திரமண்டலம் போய்ச்சேர்ந்து, பின்பு பம்பரம்போல் கிறுகிறு என்ற வாத, பித்த ஜயமென்ற நாடி

முதலாடியோடி மண்டலங்கள் மூன்றுஞ் சுத்திக் கத்தரிக்கோல் மாறலெனக் கட்டிச் சேர்ந்து வாத, பித்த நடுவிலிருந்து வாதத்தில் கோழி, அன்னம், மயில் போலும் நடக்கும். பித்தத்தில் ஆமைபோலும், அட்டை போலும் நடக்கும். கபத்தில் பாம்புபோலும், தவளை போலும் இயல்பாய் நாடி நடக்கும்.

குருநாடியின் குணம்

1. குருநாடி வாதத்தில் அட்டைபோல் புரண்டுவரின் வாய்வு அதிகமாகும். இருமல், திணவு, சொறி மிகுதியாக உண்டாகும். உடல் வாடும்.

2. குருநாடி பித்தத்தில் ஆமை போல் நடந்தால் சுரம் காயும். வாய்நீர் ஊறும், வியர்க்கும்.

3. குருநாடி கபத்தில் சங்கம் போல் சீறி நின்றால் சன்னி தோன்றும்.

4. குருநாடி கபத்தை ஊடுருவி அமருமாகில் அசாத்திய மரண குறிகள் உண்டாகும்.

5. குருநாடி குன்றிப்போனால் வயிறு கழியும், கடுப்பெடுக்கும். கை, கால் வீங்கும்.

6. குருநாடி பக்கம் பாயில் கபம் எதிரே மோதும்.

7. குருநாடி பின் வாங்கில் அசாத்தியங்கள் உண்டாகும்.

8. குருநாடி ஐயத்தில் விட்டிலைப் போல் கிடக்கில் மரணம்.

நாடிகள் கீழும் மேலும் மீறி ஓடும் விதம்

சந்திரன்-வாதநாடி; சூரியன்-பித்தநாடி; சுழுமுனை-கபநாடி; வியாழன்- சிலேத்தும நாடியும், சனி, செவ்வாய்,

ஞாயிறு ஆகிய கிழமைகளில் பித்தநாடியும் திங்கள், புதன், வெள்ளி இக்கிழமைகளில் வாதநாடியும் மீறி ஓடும்.

சனிக்கிழமை வாதம் ஓடில் சீதளமும், சன்னியும் உண்டாகும். ஞாயிறில் வாதம் ஓடில், சளி, இருமல், இரைப்பு உண்டாகும். செவ்வாயில் வாதம் ஓடில் சுரம் உண்டாகும். வியாழனில் வாதம் ஓடில் விலா முதல் உடம்பெல்லாம் வலி உண்டாகும். திங்களில் பித்தம் ஓடில் ஜலதோஷம் உடனே காணும். புதனில் பித்தம் ஓடில் நீர் ஏற்றம், தலைவலி உண்டாகும். வெள்ளியில் பித்தம் ஓடில் கண், காது, நோய்கள் உண்டாகும். வியாழனில் பித்தம் ஓடில், கபசுரமும், தலைவலியும் காணும்.

நாடியின் தொந்திப்பு

1. வாதத்தில் வாதமாகில் உடல் நொந்து நெகிழ்ச்சியாய் சுருங்கும், உடல் பதறும், உணவு செல்லாது.

2. வாதத்தில் பித்தமாகில் வாய் குழறிப்பேசும். கால் குளிரும், வீக்கம் உண்டாகும்.

3. வாதத்தில் கபமாகில் உடல் வீங்கும். வலிக்கும், தலைவலிக்கும், குணங்கள் வெவ்வேறாய்த் தோன்றும். உடல் வெளுக்கும். உணவு செல்லாது. நாளுக்குநாள் வீக்கம் அதிகமாகும்.

4. பித்தத்தில் பித்தமாகில் பிதற்றும், கிரு கிருக்கும், வாந்தி செய்விக்கும், உடல் இளைத்து உலர்ந்து, வற்றி, வெளுக்கும். பிறகு வீக்கம் உண்டாகும்.

5. பித்தத்தில் வாதமாகில் பிடறி, கை, கால்கள் குத்தும், உடல் குறுகி பதறும். சுரம் காயும், புத்தி தடுமாற்றம் ஏற்பட்டு பொருமை நீங்கி கோபம் உண்டாகும்.

6. பித்தத்தில் கபமாகில் வாய் குழறும், பிதற்றும் வாந்தி ஏற்பட்டு வாந்தி நீர் ஒழுகும், தலைசுற்றும், வயிறு நோகும். பித்தமாக வாந்தி வரும். பிடறி வலிக்கும்.

7. கபத்தில் வாதமாகிய நரம்பெல்லாம் வலித்து நிற்கும். பிடறி குன்றி வலிக்கும்.

8. கபத்தில் பித்தமாகில் உண்பது கசப்புண்டாகும், நாவு கசக்கும், இனிக்கும், பேச்சு தடுமாறும், கபம் கட்டும், குரல் வேறுபடும். கண்களில் பீளை சாடும்.

9. கபத்தில் கபமாகில் கண்கள் வட்டங்கொள்ளும் உயிர் பிரியும்.

10. வாதத்தில் கபம் சேரில், ஜன்னிதோஷம், மயக்கம், கோபம், மூர்ச்சை, சோகை, பாண்டு உண்டாகும்.

11. பித்தத்தில் வாதம் சேரில் பீனிசம், மண்டைக்குத்து, வலி, பவுத்திரம், அரையாப்பு, நவமூலங்கள் ஆகிய இவைகள் உண்டாகும்.

12. பித்தத்தில் பித்தம் சேரில், பாண்டு, காமாலை, நீராம்பல், மகோதரம், கௌசி, (வயிற்றுக்கட்டி) வெப்புக்கட்டிகள் உண்டாகும்.

13. கபத்தில் பித்தம் சேரில் வாயூரல், சுரம், பேதி, வாந்தி உண்டாகும். வாதம் இரண்டு பங்கும், பித்தம் ஒருபங்கும் ஓடில் வாத பித்த தொந்த நோய்கள் வாய்ப்பு மிகுந்து உதிரம் அதிகப்படும். வலிக்கும், மாதரை இச்சிக்கும், சிந்தை மிகும்.

14. பித்தம் இரண்டு பங்கும், வாதம் ஒருபங்கும் ஓடில், பித்த, வாத, தொந்த நோய் என அறியவும். உஷ்ணம் அதிகம் மிகுந்த உடலில் கண் எறியும். பசித்தாகம் உண்டாகும்.

15. வாதம் இரண்டு பங்கும், கபம் ஒருபங்குமாகில் வாத கப தொந்த நோய்கள் ஏற்பட்டு வயிறு பொருமி வலிக்கம். உணவு செல்லாது.

16. பித்தம் இரண்டு பங்கும், கபம் ஒருபங்கும் ஓடில், பித்த கப தொந்த நோய்கள் ஏற்பட்டு தலை வரண்டு பிடறி நோகும். உடல் முழுவதும் தினவு உண்டாகும். வயிறு எரியும், மந்தமேற்பட்டு வயிறு பொருமும்.

17. கபம் இரண்டு பங்கும், வாதம் ஒருபங்கும் ஓடினால் கபவாத நொந்தநோய் ஏற்பட்டு சன்னி உண்டாகும். தலைவலி ஏற்பட்டு, வாய்தித்திக்கும். உணவு செரியாது.

18. கபம் இரண்டு பங்கும் பித்தம் ஒருபங்கும் ஓடினால் கபபித்த தொந்தநோய்கள் ஏற்பட்டு உடல்குளிர்ந்து கூசும்.

19. வாதம் இரண்டு மாத்திரையும், பித்தம் ஒரு மாத்திரையும் ஆனால் கொடும் சுமை தலையில் கொண்டு தாழ்வுற நடப்பது போல் நாடி நடக்கும். வாத பித்த தொந்த நோய் ஏற்பட்டு உதிரம் சூடேறி வலி ஏற்பட்டு உணவு செல்லாது.

20. பித்தம் இரண்டு மாத்திரையும், கபம ஒரு மாத்திரையுமாகில் பிள்ளை தொட்டிலின் நடுவில் அசைவது போல் நாடி நடக்கும் பித்த சிலேத்தும தொந்தநோய் ஏற்படும். பசி இராது. அடிக்கடி இரத்த அழுத்தம் ஏற்பட்டு பிதற்றும். கண்கள் மஞ்சள் போல் இருக்கும்.

21. கபம் இரண்டு மாத்திரையும், வாதம் ஒருமாத்திரையு மாகில் புணர்ச்சியின் போது நாடி நடப்பது போல் நடக்கும். கப வாத தொந்த நோய் ஏற்பட்டு கபம் ஓடும். இனிப்பில் விருப்பம் ஏற்பட்டு பசி அதிகரிக்கும்.

22. வாதம் இரண்டு மாத்திரையும், கபம் ஒரு மாத்திரையுமாகில் வெட்டுண்ட அரணை வால் துடிப்பது போன்று நாடி துடித்து வாத கப தொந்த நோய் உண்டாகும். உடல் வலிக்கும், கை, கால் திமிராய் இருக்கம். வயிறு பொருமும்.

23. பித்தம் இரண்டு மாத்திரையும், வாதம் ஒரு மாத்திரையுமாகில் வீணை அடித்தால் போல் நாடி அடிக்கும். பித்த வாத தொந்த நோய் ஏற்படும். உடல் வலிக்கும். கண்கள் எரியும். நெஞ்சும், நாவும் வரளும், நீர் சிறுத்து இறங்கும்.

24. சிலேத்துமம் இரண்டு மாத்திரையும் பித்தம் ஒரு மாத்திரையுமாகில் வண்டிச்சக்கரம்போல் நாடி சுழலும், கப பித்த தொந்த நோய்கள் ஏற்பட்ட சன்னி உண்டாகும். உச்சி வலிக்கும். செவி கேளாது, நாவு இனிக்கும். வயிறு மந்திக்கும்.

நாடியின் குறிப்பு

1. வாயுவுக்கும் மந்தத்திற்கும் மூன்று நாடிகளும் அமர்ந்து தளர்வாய் ஓடும்.

2. பசித்திருக்கும்போது மூன்றுநாடியும் தூங்கிவிடும்.

3. பாம்பு விஷத்திற்கு மூன்று நாடியும் அடங்கியிருக்கும்.

4. வயிற்று வலிக்கு 3 நாடியும் உள்ளுணர்வாய் வாங்கி ஓடும்.

5, கிரந்தி நோய்க்கு கரை உடைந்த அருவியைப்போல் ஓடும்.

6. புண்புரைக்கு வாதமும், பித்தமும், பீனிசத்திற்கு பித்தமும், கபமும், சூலைக்கு கபமும், பித்தமும் சுழன்று காணும்.

7. கற்பவதிக்கு வாதமும், பித்தமும் தொந்தித்து காணும்.

8. கிராணி அதிசாரத்திற்கு வாதமும், பித்தமும் தளர்ந்து காணும்.

9. நீர்மேகத்திற்கு நாடி எல்லாம் பலம் குறைந்து நெருப்பில் விழுந்த புழுபோல் சுருண்டு காணும்.

10. மேகம் அதிகப்பட்டால் வாதமும், பித்தமும் பின்னித் துடிக்கும்.

11. சன்னிக்கு மூன்று நாடியும், படபடத்து ஓடும்.

12. விக்கலும், கபமும், வாதமும், கலங்கி காணும்.

13. சுரத்திற்கு வாதமும், பித்தமும் கலங்கி காணும்.

14. கனக்காச்சலுக்கு பித்தமும், வாதமும் கலங்கி காணும்.

15. விஷநீர், பாண்டு, சோகை இம்மூன்றிற்கும் கணை போல் மீட்டும். தலை வலிக்கும்.

16. காசநோய்க்குப் பித்தம் மட்டும் கலங்கிக் காணும்.

17. இளநீர், நெய், பால், இறைச்சி, பழங்கள் முதலியவற்றிற்கு வாதம் கதிக்கும்.

18. கோழி இறைச்சி, கோபம், புணர்ச்சி இவைகளுக்கு வாதத்தைத் தாண்டும்.

19. புணர்ச்சி நாடி புழுபோல் நிமிர்ந்து வலித்து நின்று வாங்கும்.

20. பித்த சன்னிக்கு வாதமும், கபமும், அமர்ந்து பித்தம் விடுவெடுத்து மீறி நிற்கும்.

21. மரண சன்னிக்கு உட்குத்து, புறவீச்சு ஏற்படும்.

22. சிசுவிற்கு வாதமும், கபமும் அழுத்திக் காணும்.

மரணத்தின் குறிகள்

1. இரண்டு தினம் பிங்கலையில் நாடி பாய்ந்தால் மூன்று ஆண்டுகளில் மரணம்.

2. மூன்று தினம் இடகலையில் நாடி பாய்ந்தால் இரண்டு மாதங்களில் மரணம்.

3. பத்து தினம் உபயத்தில் நாடி நடந்தால் ஒரு மாதத்தில் மரணம்.

4. மூக்கு வழியாக சுவாசிக்காமல் வாய் வழியாக சுவாசித்தால் மூன்று நாட்களில் மரணம்.

5. கப நோயினால் இளைத்த உடல் வீங்கிடில் ஒரு மாதத்தில் மரணம்.

6. பித்தநோய்களினால் உடல் இளைத்து வீங்கிடில் ஆறுமாதத்தில் மரணம்.

7. கபம் வெள்ளம்போல் மடமடவென சுருக்கமாய் ஓடினால் மறுநாள் மரணம்.

8. பித்தம் சிதறி ஓடினால் மூன்று நாட்களில் மரணம்.

9. வாதம் சிதறி ஓடினால் எட்டு நாட்களில் மரணம்.

10. வாத பித்தம் இரண்டு நிலை தப்பி தவறினால் ஐந்து நாட்களில் மரணம்.

11. வாத பித்த கபம் மூன்றும் கூடி நிலை தப்பி தவறினால் நாற்பத்தெட்டு நாட்களில் மரணம்.

12. வாத, பித்த, கபம் ஒன்றாய்க் கூடி தேள் கொடுக்கைப் போல் ஆடி ஓடம் போல் நடந்தால் ஒரு மாதத்தில் மரணம்.

13. நாடிகள் போத்து போல் புறந்துடித்து மாதம் ஒன்றில் நோய் நீங்காவிடில் பத்து மாதத்தில் மரணம்.

14. கபநாடி நிமிர்ந்து நின்றால் (குதிரைபோல்) மாதம் ஒன்றில் மரணம்.

15. காலையில் கபநாடியும், உச்சியில் பித்தநாடியும், மாலையில் வாதநாடியும் வகை தப்பி ஓடினால் நாலைந்து நாட்களில் மரணம்.

16. கபநாடி மயில்போலும், அட்டைபோல் பதறி நின்றிடில் 7 நாட்களில் மரணம்.

17. துணிச்சீலையை நெய்யில் நனைத்து மணிக்கட்டில் சுற்றி மூன்றே முக்கால் நாழிகை சென்று அவிழ்த்து பிரிக்கையில் வாதநாடி குதித்து வாங்கினால் அதே நேரத்திலும் நல்லரவு (அரவு) போல் நெளிந்து ஓடினால் 22 நாட்களில் மரணம்.

18. உதைத்து துடித்தால் ஒன்பது நாளில் மரணம்.

19. அட்டைபோல் நடந்தால் மூன்று நாட்களில் மரணம்.

20. தந்திபோல் சுண்டினால் அதே நேரத்திலும், பக்கமொன்று எதிர்த்து நடந்தால் முப்பது நாட்களில் மரணம்.

21. இளைப்பு, விக்கல் தோன்றி உடம்பெல்லாம் குளிர்ந்து விழி இருண்டால் மூன்றுநாட்களில் மரணம்.

22, பிடரி நெற்றி கழுத்தின் உட்புறம் குளிர்ந்து கண்கள் நீலநிறமாகி நெஞ்சில் கபம் தட்டினால் மூன்று நாட்களில் மரணம்.

23. ஒருநாசியும், முழங்கை பள்ளமும் குளிர்ந்திட உள்ளகால் சூடாகி தொண்டை கரகரத்தால் 5 நாட்களில் மரணம்.

24. அடித்தொண்டையும், இரண்டு உள்ளங்காலும் குளிர்ந்து இருசெவியும் விறைத்து நின்றால் 5 நாட்களில் மரணம்.

வலது உள்ளங்கால் சுட்டு, இடது உள்ளங்கால் குளிர்ந்து உச்சி வியர்த்து உடம்பெல்லாம் கனலாய் இருந்தாலும், புருவம், நெற்றி, இடது உள்ளங்கை சுட்டு உச்சி குளிர்ந்தாலும் வலது நாசியும் வலது உள்ளங்காலும் வெதும்பி இடது நாசியை தேய்க்கும்போது சிவந்தாலும் உடல் ஆதி அந்தமும் சூடேறினாலும் நோய் நீங்கும்.

விழி, மூக்கு, காது, உச்சி, உந்தி, உள்ளங்கால், கைகள் வெளுத்து பாதம் குளிர்ந்தால் 5 நாழிகையில் மரணம்.

வாதமும் பித்தமும் அடங்கி கபம் கதித்து உடல் வெளுத்து மார்பு குளிர்ந்திடில் 96 கடிகைகளில் மரணம்.

கபநாடியெழுந்து வீழ்ந்திடில் இரண்டு நாழிகையில் மரணம்.

பித்தம் அடங்கி வாதமும், கபமும் மேலிட்டு கண்டத்தில் கபம் அடைத்து விழி மயங்கி சுழன்று தண்ணீர் வடித்தால் 5 நாழிகையில் மரணம்.

முகம் நீண்டு உடம்பெல்லாம் நரம்பு தோன்றி பாசி போல் கண் பஞ்சடைந்து இருள் மூடினாலும் விசை நரம்பு குளிர்ந்து , தளர்ந்து நெருநெருவென பற்களை கடித்து நடுக்கம் உண்டானாலும் வாத பித்த கபம் விட்டிலைப்போல் துடித்தாலும் மரணம் சம்பவிக்கும்.

வாத பித்த கபம் மூன்றும் வெட்டுப்பட்ட அரணைவால் போல் துடித்தும், உடல் வேறுபட்டு குளிர்ச்சி காணும் கைகளால் முகத்தை தடவவும். மனிதரை ஆவலாய் நோக்கிப் பார்த்தும் ஏங்கிப் பெருமூச்சு செய்து இரண்டு விலாவும் இறைக்கும், தொண்டையில் கபங்கட்டி

இளைப்பு(சரணை) ஏற்படும். கண்ணில் நீர்வடியும், உடல் மயங்கும். மூக்கு நீளும், வியர்வை காணும். கண்களும், பல்லும் கருத்து கபம் மேலாடி மூச்சு திணறி கண்சுழன்று பல பேச்சுக்கள் ஏற்பட்டு ஜீவன் மயங்கி மரணம் சம்பவிக்கும்.

நாடி முற்றிற்று.

மரண காலக்குறிகள்

1. உடல் கருத்து பிறகு சிவப்பானால் இரண்டு ஆண்டில் மரணம்.

2. உடல் அழகு குறையத் தொடங்கினால் ஒன்றரை ஆண்டில் மரணம்.

3. உள்நாக்கு கருத்தால் ஒன்றரை ஆண்டில் மரணம்.

4. உள்ளங்கையில் விட்டநீர் ஒட்டாதிருப்பின் ஓர் ஆண்டில் மரணம்.

5. மார்பில் பூசிய சந்தனம் உடனடியாக உலர்ந்தால் பதினோறு மாதங்களில் மரணம்.

6. உமிழ்நீர் உமிழ்ந்தவனின் கண்களுக்கு தெரியா விட்டால் ஒன்பது மாதங்களில் மரணம்.

7. விழியின் ஒளி நன்கு தெளிவாகி திடீரென்று மங்குமானால் எட்டு மாதங்களில் மரணம்.

8. பருத்தவர் இளைத்தாலும், இளைத்தவர் பருத்தாலும் ஆறுமாதங்களில் மரணம்.

9. பகலில் அருந்ததி, துருவன் போன்ற விண்மீன்களைக் கண்டால் ஆறு மாதத்தில் மரணம்.

10. வாய்கசந்து நஞ்சுபோல் சுவை மாறினால் ஐந்து மாதங்களில் மரணம்.

11. அடிக்கடி வியர்வையும், தடுமாற்றமும் ஏற்பட்டால் நான்கு மாதங்களில் மரணம்.

12. எதிரில் உள்ள மனிதரை விலங்கெனக் கண்டால் நான்கு மாதங்களில் மரணம்.

13. சூரியனைப் பார்த்து சந்திரன் என்றும் சந்திரனைப் பார்த்து சூரியன் என்றும் கூறினால் மூன்று மாதங்களில் மரணம்.

14. புளித்த காடியை பானகம் என்று கருதிக் குடித்தாலும் பாலினை காடி என்று குடித்தாலும் இரண்டு மாதங்களில் மரணம்.

15. நெருப்பு குளிர்ச்சியாக உள்ளது என்றும் குளிர்ச்சியை நெருப்பு என்றும் கூறினால் இரண்டு மாதங்களில் மரணம்.

16. தாளம், பேரிகை, சங்கின் நாதம் முதலிய ஒலியைக் கேட்டு பறவைகளின் குரல் என்று கூறினால் ஒருமாதத்தில் மரணம்.

17. இடைவிடாது காதில் இரைச்சல் சத்தம் உண்டானால் 22 நாட்களில் மரணம்.

18. இனிப்பை வெறுத்தாலும் 22 நாட்களில் மரணம்.

19. தின்பண்டங்களில் ஆர்வம் மிகுந்தாலும், ஆர்வம் குறைந்தாலும் 15 நாட்களில் மரணம்.

20. வயிறு பருத்தால் 10 நாட்களில் மரணம்.

21. நடக்கும்பொழுது பாதங்களில் முட்கள் தைத்ததைப்போல் உணர்ச்சி ஏற்பட்டால் 5 நாட்களில் மரணம்.

22. கை, கால் உணர்ச்சியற்று துவண்டாலும் சொல், தடுமாற்றம் ஏற்பட்டாலும் 3 நாட்களில் மரணம்.

23. தொப்புள் உப்பி, மேல்மூச்சு ஏற்பட்டு உள்மயக்கம் தோன்றி உடல் வியர்த்தால் 15மணி நேரத்தில் மரணம்.

24. கண் சுழன்று, விக்கல் ஏற்பட்டு, உடல் துடித்து, மேல்மூச்சு வாங்குமானால் 6மணி நேரத்தில் மரணம்.

25. கிணற்றிலிருந்து பேசுவதுபோல் குரல் மெலிந்தாலும், குரல் விகாரமாக இருந்தாலும் 1 நாழிகையில் மரணம்.

இத்தகைய குறிகுணங்களை அறிந்துகொள்வது மருத்துவரின் கடமையாகும்.

பாஷாணச் சரக்குகளின் சுத்திமுறை

இரசம்: (அ) 35 கிராம் இரத்தைக் கல்வத்திலிட்டு அதனுடன் 70 கிராம் மஞ்சள் தூளிட்டு நன்கு அரைக்க, மஞ்சள்தூளானது கருநிறமடையும். இவ்வாறு கருநிறமாகாது மஞ்சள் தூளானது மஞ்சள் நிறத்துடன் இருக்கும்வரை மேற்கூறியவாறு கல்வத்திலிட்டு அரைத்தெடுக்க இரசம் சுத்தியாகும்.

(ஆ) 35 கிராம் இரசத்தை மண்சட்டியிலிட்டு அதனுடன் மண்ணெண்ணையைவிட்டு மண்ணெண்ணையை தீப்பற்ற வைக்கவேண்டும். தீ எரிந்து அடங்கிய பின்னர் மறுபடியும் தீப்பற்றவைக்கவேண்டும். இவ்வாறு 10 முறை எரிக்க வேண்டும்.

கெந்தகம்: (அ) 35கிராம் கெந்தகத்தை பசுவின் நெய்யிற்போட்டு உருக்கிப் பின்னர் உருகிய கெந்தகத்தைப் பசுவின் பாலில் ஊற்றவேண்டும். இவ்வாறு 7முறை சுத்திக்க கெந்தகம் சுத்தியாகும்.

(ஆ) ஒரு வாயகன்ற சட்டியில் பசுவின் பால் 2 லிட்டர் சட்டிக்கு மேல் சல்லடைக்கண் போன்றுள்ள ஒரு தட்டை வைத்து தட்டின்மேல் துணியைப் போட்டு அதில் 35 கிராம் கெந்தகத்தை வைத்து, எரிக்கப் பால் காய்ந்து ஆவியில் கெந்தகமானது உருகிப் பாலில் இறங்கிவிடும். இவ்வாறு 5முறை சுத்திக்க கெந்தகம் சுத்தியாகும்.

மனோசிலை: ஒரு சட்டியில் 2 லிட்டர் வெள்ளாட்டு மூத்திரத்தை விட்டு அதில் 35 கிராம் மனோசிலைக் கட்டியை ஒரு நூலால் கட்டி மனோசிலையானது, பானையில் உள்ள மூத்திரத்தில் நனையாதவாறு தொங்கவிட்டு மேற்படி பானைக்குத் தீயிட்டெரிக்கவும். இவ்வாறு 3 முறை செய்தபின் பசுவின்பாலில் அவித்து எடுக்க மனோசிலையானது சுத்தியாகும்.

தாளகம்: நீற்றினசுக்கான்கற்கள்8லிட்டர்வாங்கிவந்து ஒரு வாயகன்ற சட்டியினுள்ளே 4 லிட்டர் சுக்கான் கல்லைப்போட்டுப் பரப்பி அதன்மேல் 35 கிராம் தாளகக்கட்டியை வைத்து அதற்கு மேலும் 4 லிட்டர் சுக்கான் கற்களைப்போட்டு கழுதை நீர் அல்லது தென்னங்கள் இவைகளில் ஏதேனும் ஒன்றை ஊற்றி அடுப்பிலேற்றி நன்கு எரித்து ஆறியபின் தண்ணீர்விட்டுக் கழுவி எடுத்துக்கொள்ள, தாளகம் சுத்தியாகும். தாளகத்தின் நிறம் கறுமையாக இல்லாவிடில் மறுமுறையும் இவ்வாறு செய்து எடுக்க சுத்தியாகும்.

லிங்கம்: 35 கிராம் லிங்கத்தை குழந்தைப்பாலில் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும். அல்லது கட்டிச்சூடம் 17½கிராம், சாம்பிராணி 17½ கிராம் இரண்டையும் நன்றாக நெகிழ அரைத்து வெண்மையானதுணியில் தடவி லிங்கத்தின் மேல் சுற்றி கொளுத்திவிட வேண்டும். தீயெரிந்து ஆறியபின் எடுக்க லிங்கம் சுத்தியாகும்.

இவ்வாறு சுத்திசெய்த லிங்கத்தை அரிசியெடையில் பாதி அளவு தேனில் சிறு குழந்தைகட்குக் கொடுக்கச் சுரம் நீங்கும்.

பாடாண சுத்தி: ஒரு வாயகன்ற சட்டியில் எருமையின் சாணத்தைக் கரைத்துக் கொதிக்கவைத்து 35 கிராம் பாடாணத்தை கொம்பு பாகற்காயைக் கீறி அதற்குள் வைத்து கொதிக்கும் சாணத்திலிட்டு தீயெரிக்கவும். இவ்வாறு 30முறை, 30 பாகற்காயில் வைத்தெடுத்து பிறகு துணியிற் சுற்றி வெள்ளாவியின் அடியில் வைத்தெடுக்க பாடாணம் நன்றாகச் சுத்தியாகும்.

அப்பிரகம்: 35 கிராம் அப்பிரகத்தைப் பசுவின் மூத்திரத்தில் 2 நாட்கள் ஊறவைத்து அடுப்பிலேற்றி 3ல் 2பங்காகும் வரை மூத்திரமானது வற்ற எடுத்துக் கழுவி எடுத்துக் காடியில் வைத்தெடுத்துப் பிறகு துணியிற் சுற்றி வெள்ளாவியின் அடியில் வைத்தெடுக்கப் பாடாணம் நன்றாய்ச் சுத்தியாகும்.

பூரம்: 35 கிராம் பூரத்தைச் சட்டியிலிட்டு அதனுடன் மண்ணெண்ணையை ஊற்றி தீப்பிடிக்கச் செய்யவேண்டும். இவ்வாறு 7 முறைகள் எரித்து எடுத்து 3நாட்கள் தாய்ப்பாலில் ஊறவைத்தெடுக்க பூரம் சுத்தியாகும்.

வீரம்: ஒருசட்டியில் நான்கு அல்லது ஐந்து இளநீரை ஊற்றி அதில் 35 கிராம வீரத்தை நூலால் கட்டி கட்டிய வீரமானது இளநீரில் நனையாதவாறு தொங்கவிட்டு இளநீர் வற்றுமட்டும் தீயிட்டெரிக்கவும். இவ்வாறு மூன்றுமுறைகள் எரித்தெடுக்க வீரம் சுத்தியாகும்.

அயம்: ஒரு இருப்புச்சட்டியில் 35 கிராம் அயத்தூளைப் போட்டு அதனுடன் நல்லெண்ணெய் விட்டு அடுப்பிலேற்றி எண்ணெய் வற்றுமட்டும் வறுத்தெடுக்கவும். வறுத்தெடுத்த அயத்தூளை ஓர் இரவு காடியில் ஊறவைத்தெடுத்து, மறுநாட்காலை நன்கு கழுவி எடுத்து மேற்படி தூளை வாழைப்பூச்சாற்றில் கொட்டி இரண்டு சாமம் வேகவைத்து எடுக்க அயம் சுத்தியாகும்.

தாமிரம்: தாமிரத்தை 35 கிராம் சிறுதுண்டுகளாகச் செய்து 20 அல்லது 30 குமட்டிப் பழங்களைப் பானையிலிட்டுப் பிசைந்து அதனுடன் தாமிரத் துண்டுகளை 48 நாட்கள் ஊறவைத்தெடுத்துக் கழுவி எலுமிச்சம்பழச்சாற்றில் ஒரு வாரம் ஊறவைத்தெடுத்துப் பிறகு 2 சாமம் எலுமிச்சம்பழச் சாற்றில் சுருக்குக் கொடுத்து ஆடுதீண்டாபாளை இலையை அரைத்து சுவசம் செய்து புடமிட்டெடுக்கத் தாமிரம் சுத்தியாகும்.

கருவங்கம்: கருவங்கத்தை உருக்கிப் பத்துமுறை இலுப்பெண்ணெயிலும், எலுமிச்சம்பழச்சாற்றிலும், சாணிப்பாலிலும் உருக்கிச் சாய்த்தெடுக்க வங்கம் சுத்தியாகும்.

வெள்வங்கம்: மேற்கூறியவாறே செய்ய வெள்வங்கம் சுத்தி ஆகும்.

நாகம்: மேற்கூறியவாறே செய்ய நாகம் சுத்தியாகும்.

காந்தம்: அயத்தை சுத்தி செய்தவாறு செய்துகொண்டு காந்தத்தை 4 சாமம் குமரிச்சாற்றால் சுருக்குக் கொடுக்க காந்தம் சுத்தியாகும்.

பவழம்: பவழத்தை எலுமிச்சம்பழச் சாற்றில் ஐந்துநாட்கள் ஊறவைத்துக் கழுவ சுத்தியாகும்.

அன்னபேதி: 35 கிராம் அன்னபேதியைத் தண்ணீர் விட்டுக் கழுவி எலுமிச்சம்பழச் சாற்றில் ஊறவைத்தெடுக்க அன்னபேதி சுத்தியாகும்.

சிலாசத்து: 35 கிராம் சிலாசத்தை 3 தினங்கள் கிளிஞ்சல் சுண்ணாம்பு நீரில் ஊறவைத்தெடுத்துக் கழுவ சிலாசத்து சுத்தியாகும்.

தங்கத்தூய்மை: தங்கத்தகடுகளுக்கு செம்மண்ணை நன்கு நெகிழ அரைத்து மேற்பூசி பத்துமுறை காய்ச்சி எடுக்க சுத்தியாகும்.

வெள்ளியின் தூய்மை: வெள்ளித் தகடுகளைக் காய்ச்சி பழுபாகக் கிழங்கு அல்லது கருடன் கிழங்குச் சாறுகளில் ஏதாவது ஒன்றில் ஏழுதடவை துவைத்தால் சுத்தியாகும்.

மண்டூரத் தூய்மை: வெள்ளாட்டு நீர், பசுமூத்திரம் இவைகளில் மும்மூன்று நாட்கள் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

கௌரி படாணம்: பன்றிப் பாலில் அரைத்து எடுக்க சுத்தியாகும்.

குதிரைப் படாணம்: உமிழ்நீரில் 24மணி நேரம் ஊறப்போட்டு எடுக்க சுத்தியாகும்.

கெருடக்கல்: கற்றாழைச்சாற்றில் (குமரிச்சாற்றில்) மூன்று மணிநேரம் கிளிகட்டி காய்ச்சி எடுக்கச் சுத்தியாகும்.

தொட்டிப் படாணம்: கருங்குறுவை நெல்லில் கிளிக்கட்டி அவித்து எடுக்க சுத்தியாகும்.

பால் துத்தம்: குழந்தைகளின் சிறுநீரில் ஒருவாரமும், பசுவின்பாலில் ஒரு நாளும் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

துருசு: தும்பைச்சாற்றில் ஒரு நாள் ஊறப்போட்டு பிறகு 3 மணி நேரம் அடுப்பிலிட்டு எரித்து எடுக்க சுத்தியாகும்.

அஞ்சனக்கல்: புளியாரைச்சாற்றில் இரண்டு தினங்கள் ஊறப்போட்டு எடுக்கச் சுத்தியாகும்.

பொன் நிமிளை: காடியில் மூன்றுநாட்கள் காய்ச்சி எடுக்கச் சுத்தியாகும்.

கல்மதம்: சிறுநீரில் நான்கு மணி நேரம் ஊறவைத்து எடுக்கச் சுத்தியாகும்.

மிருதார்சிங்கி: பனங்கள்ளில் கிளிகட்டி 3 மணி நேரம் எரித்து எடுக்க சுத்தியாகும்.

சாஸ்திரபேதி: நாரத்தங்காய்ச் சாற்றில் ஊறப்போட்டு எடுக்க சுத்தியாகும்.

இரசச்செந்தூரம்: உத்தாமணி இலையை அரைத்து அதற்குள் வைத்து குக்குட புடமிட்டெடுக்க சுத்தியாகும்.

உருக்கு: வெள்ளாட்டின் மூத்திரத்தில் உருக்கை சிவக்கக் காய்ச்சி 21 தடவை தோய்க்க சுத்தியாகும்.

முத்து: சங்கம் பழச்சாறு அல்லது பவழமல்லிகைப் பூச்சாற்றில் இரண்டு நாட்கள் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

மான்கொம்பு: மான்கொம்பை கத்தியால் சீவி குப்பைமேனிச் சாற்றில் இரண்டு நாள் ஊறவைத்தெடுக்க சுத்தியாகும்.

நாபி: எருமை மூத்திரத்தில் இரண்டுநாள் ஊறவைத்து எடுத்து நன்கு கழுவி, பிறகு எருமை மூத்திரத்திலேயே வேகவைத்து எடுத்து ஒருநாள் எலுமிச்சம்பழச்சாற்றில் ஊறவைத்து உலர்த்திக்கொள்ள சுத்தியாகும்.

கஞ்சா: கஞ்சாவை தண்ணீரில் 3 மணி நேரம் ஊறவைத்துக் காய்ச்சி கசக்கிப் பிழிந்து எடுக்கவும். இவ்விதம் மூன்று முறை செய்து உலர்த்தி எடுக்க சுத்தியாகும்.

சிவனைதவேர்: இதை பசும்பாலில் அவித்து எடுக்க சுத்தியாகும்.

அழுக்கிராக் கிழங்கு: பாசும்பாலில் வேகவைத்து எடுத்து உலர்த்திக்கொள்ள சுத்தியாகும்.

சீனாக்காரம்: இதை மூன்று மணி நேரம் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

வெங்காரம்: எருமைச் சாணிப்பாலில் ஊறவைத்து எடுக்கச் சுத்தியாகும்.

குக்கில்: எருமைச் சாணிப்பாலில் 5 நாழிகை ஊறப்போட்டு எடுக்கச் சுத்தியாகும்.

கல்நார்: கழுதை மூத்திரத்திலாவது அல்லது கல்சுண்ணாம்பு நீரிலாவது 1 மணி நேரம் வேகவைத்து எடுக்கச் சுத்தியாகும்.

சங்கு: இதை பசும்பாலில் வேகவைத்து எடுக்க சுத்தியாகும்.

ஆமை ஓடு: கல் சுண்ணாம்பு நீரில் 1மணி நேரம் வேகவைத்து எடுக்க சுத்தியாகும்.

சுத்தி முறைகள்

பாடாணச் சுத்தி

சுண்ணங் கரைத்துமதிற் றோரைந்திங் கட்டி
முன்னமிரு சாம மெரி.

முறை: கற்சுண்ணாம்பைத் தாளித்துத் தண்ணீரிற் கரைத்து ஒரு பாத்திரத்தில் இட்டு, அதில் வெள்ளைப் பாடாணமாவது சங்கு பாடாணமாவது போலாந்திரம் கட்டி இரண்டு சாமம் வரையில் எரித்து எடுக்க சுத்தியாகும். இதற்கு முறிப்பு மிளகு, கத்தரிப்பிஞ்சு.

கௌரிப் பாடாணச் சுத்தி

முலைப்பால் கரண்டியிட்டு முற்கௌரி வைத்தெரிக்க
நிலைப்பால் சுண்டியெடு.

முறை: கரண்டியில் கௌரிப்பாடாணக் கட்டியை பொடிசெய்து வைத்து முலைப்பால் விட்டுவிட்டு இரண்டு ஜாமம் சுருக்கேற்றவும். சுத்தியாகும். இதைப் பலவித மருந்துகள் செய்வதற்குப் பயன்படுத்தலாம். யாதொரு கொடூரத்தையும் செய்யாது.

சவ்வீரச் சுத்தி

வாழைத்தண்டுகள் வைத்து சுட்டெரிக்க வீரமதை
ஆடிச் சுண்டக் காய்ச்சிடு.

முறை: இளம் வாழைத்தண்டை வில்லை வில்லையாய் நறுக்கி எடுத்து ஒரு குடுவையிற் பாதி போட்டு அதன்மேல் சவ்வீரக் கட்டியை வைத்து மேலிலும் பாதி வில்லைகளைப் போட்டு இரண்டொரு ஆவியில் எரித்து எடுக்கச் சுத்தியாகும்.

ஜாதிலிங்க சுத்தி

மாதர்முலைப்பாலதனில் வைத்ததூரச் சாதிலிங்கம்
ஏதமுற நாற் சாமமே.

முறை: சாதிலிங்கத்தை மாதர்களின் முலைப்பாலில் போட்டு 30 மணிநேரம் ஊறவைத்தெடுக்க சுத்தியாகும். இதைப் பல மருந்துகளிலும் சேர்க்க யாதொரு துன்பத்தையும் உண்டாக்காது.

இரசகற்பூர சுத்தி

முன்போல் முலைப்பாலில் முற்றிரசக் கற்பூரங்
கண்போல விலக்காமல் வை.

முறை: முன்னர் கூறியபடியே முலைப்பாலில் இரசக் கற்பூரத்தைப் போட்டு முப்பது நாழிகை ஊறவைத்தெடுக்க சுத்தியாகும். இதை பல மருந்துகளிலும் சேர்க்கலாம்.

நாபி சுத்தி

வெறுநாபிமேதி தயிர்விட்டூறவைத்தெடுப்
பாரு நாபியே சுத்திபார்.

முறை: எருமைத்தயிரில் நாபியை ஊறவைத்து எடுக்கச் சுத்தியாகும். இந்நாபியாகிய வசம்பை 12 வருடம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற் பெயர்ந்து நட்டுவைத்து முளைப்பதில் அதற்கு நஞ்சுண்டாகும்.

கருநாபி சுத்தி

மேதிசிறுநீர தனில் விட்டூற முக்கடிகை
ஆதி கருநாபி சுத்தியாம்.

முறை: எருமை மூத்திரத்தில் கருநாபியை மூன்று மணி நேரம் ஆவிகாட்டி எரிக்கவும் சுத்தியாகும். இக்கரு நாபியாகிய வசம்பை முன்போலவே 12 வருடம் 12 இடத்தில் சேராங்கொட்டையைத் துணித்து மண்ணிற் கலந்து பாத்திகட்டி அதுகளில் நட்டு விளைவதுதான் கருநாபி.

இரு விஷம் சிறு விஷ சுத்தி

இருவிஷங்கோ மூத்திரத்தி லிருவிஷமாய் பாலினிலுந்
துருவிஷமே யவிக்கத்தோடு.

முறை: இருவிஷமானதைக் கோமியத்திலும், நிறவிஷமானதைப் பசும்பாலிலும், அவித்தெடுக்க சுத்தியாகும். இவ்விரண்டையும் தனித்தனியாவது அல்லது ஒன்றாகச் சேர்த்தாவது பல மருந்துகள் செய்ய எவ்வித தீங்கையும் ஏற்படுத்தாது.

தாளகச் சுத்தி

தாளகத்தைக் கள்ளிமரந்தன்னிற் றுளைத்து வைத்து
நாளத்தில் மண்டலஞ்சென்றெடு.

முறை: சதுரக்கள்ளி மரத்தில் துளை செய்து அதன் மத்தியில் தாளகத்தை வைத்து அத்தூளால் அதன் துளையை அடைத்து, சாணியால் பூசி ஒருமண்டலம் பொறுத்து எடுக்கவும்.

நேர்வாளசுத்தி

வாளாம்புளியிலை யில்வைத்தவித்து நஞ்சோடு
மீளப் பொடி முளையுமெடு.

முறை: நேர்வாளத்தை துணியில் முடிந்து புளியிலையிற் போட்டு தண்ணீர்விட்டு இரண்டு கொதி வரும்படியாக எரித்து உள் உள்ள முளைகளை நீக்கிவிட்டு ஏடுகளைப் போக்கி அப்பருப்பை விளக்கெண்ணை அல்லது நெய்விட்டு வறுத்துவிடச் சுத்தியாகும். இவ்வாறு எருமைச் சாணியில் செய்யவும் சுத்தியாகும்.

கெந்தக சுத்தி

கெந்தி விளக்கெண்ணையிற் கிண்டிறக்கி முன்னிறஞ்சாய்த்
துந் திரளவங் கெடுக்கச் சுத்தி.

முறை: கெந்தகத்தை உருக்கி விளக்கெண்ணையில் மூன்று தரம் சாய்த்து எடுக்க சுத்தியாகும். அல்லது பசும்பாலில் ஒருநாள் ஊறவைத்தெடுக்கவும் சுத்தியாகும்.

படிக்காரம்-வெங்காரம்-இரசம் சுத்தி

படிக்காரம் வெங்காரம் பற்று நெருப்பிற் பொரிக்கத்
துடிகாரஞ் சூதஞ் செங்கல்.

முறை: படிக்காரத்தையாவது,வெண்காரத்தையாவது, பொரித்து எடுத்துக்கொள்ள சுத்தியாகும். இரசத்தை செங்கல் மாவு அல்லது சர்க்கரை, உப்பு ஏதாவது ஒன்றில் மைய அரைத்து எடுக்கவும் சுத்தியாகும்.

நாகம் - மனோசிலை சுத்தி

வெள்ளெருக்கன் பாலினிலே விட்டு மனோசிலை மூணா
ளுள்ளருக்க நாகமேன் நெய்.

முறை: வெள்ளெருக்கன் பாலில் மனோசிலையை மூன்றுநாள் ஊறவிட்டு வைத்தெடுக்க சுத்தியாகும்.

நாகமானதை பன்றி நெய்யில் மூன்றுதினம் அல்லது இலுப்பை நெய்யில் 21 தினம் உருக்கி சாய்க்க சுத்தியாகும்.

அபிரேகம்-கிரஷ்ணாபிரேகஞ் சுத்தி

அபிரேகங் காடியில் மூன்று நாளூறவை கிருஷ்ணா
வபிரேகங் காடியில் காச்சித் தோய்.

முறை: வெள்ளைய பிரேகத்தை காடியில் மூன்று நாட்கள் ஊறவைத்தெடுக்கச் சுத்தியாகும்.

கிருஷ்ணாபிரேகத்தை காடியில் மூன்றுநாட்கள் காய்ச்சித் தோய்த்தெடுக்க சுத்தியாகும். இதில் வெண்மை நிறத்தை பற்பத்திற்கும் கருமை நிறத்தைச் செந்தூரத்திற்கும் பயன்படுத்தலாம்.

வங்கம் கருவங்கஞ் சுத்தி

வங்கம் புன்னைக்கா நெய்யில் மட்டுருக்கிச் சாய்க்க கரு
வங்கம் எண்ணையிற் காச்சித் தோய்.

முறை: வெள்வங்கத்தை புன்னைக்கொட்டை எண்ணையில் மூன்றுநாட்கள் உருக்கிச் சாய்த்தெடுக்க சுத்தியாகும்.

கருவங்கத்தை விளக்கெண்ணையில் மூன்றுநாட்கள் உருக்கிச் சாய்த்தெடுக்க சுத்தியாகும்.

இவைகளை மூலிகைகளின் சாறுகளில் உருக்கித் தெரியாமல் சாய்த்திடின் அது சீறி வெடித்து அபாயத்தை விளைவிக்கும்.

தாம்பிரம்-நீரடிமுத்து சுத்தி

தாம்பிரம் நீர்மேனெருப்புற் றன்சாற்றிலுருக்கிச் சாய்
தாம்பிரம் நீர்முத்து தயிர்சாய்.

முறை: தாம்பிரத்தை நீர்மேல் நெருப்புச் சாற்றில் உருக்கி மூன்று தடவைகள் சாய்த்தெடுக்க சுத்தியாகும்.

நீரடிமுத்தானதை புளித்த தயிரில் ஊறவைக்கச் சுத்தியாகும்.

துருசு - மிர்தார்சிங்கி சுத்தி

துருசு பழச்சாற்றூரச் சுத்தியாம் நார்த்தன் பழத்
திரசமதிற் சிங்கியை வை.

முறை: துருசை எலுமிச்சம்பழச் சாற்றில் 3 நாள் ஊறவைக்கச் சுத்தியாகும்.

மிருதார்சிங்கியை நார்த்தம்பழச் சாற்றில் 3 நாட்கள் ஊறவைத்தெடுக்கச் சுத்தியாகும். இது ஒவ்வொன்றையும் மும்மூன்று நாட்கள் சரியாய் வைக்கவும். கரையுமாகில் அதை நிழலிலுலர்த்தி பயன்படுத்தவும்.

சிவதைவேர் - சேங்கொட்டை சுத்தி

சிவதைவே ராப் பாலிற் சேங்கொட்டைப் புளியிலையிற்
கவிதை போலாய்க் காச்சிடு.

முறை: சிவதை வேரானதை பசும்பாலில் போட்டு வேகவைக்கவும். சுத்தியாகும்.

சேராங்கொட்டையை ஓர் பாண்டத்திற் புளி யிலையைப்போட்டு தண்ணீர் விட்டு இரண்டொரு ஆவி வேகவைத்தெடுக்கச் சுத்தியாகும். அப்போது அதன் விஷம் மாறிவிடும்.

கற்பூரசிலாசத்து சுத்தி

கற்பூர சிலையிற் கற்சுண்ணங் கவசித்த
திற்பூர முலர்த்தியெடு.

முறை: கற்பூரசிலாசத்தைக் கட்டியாகயெடுத்து கற்சுண்ணம் நீற்றிய சுண்ணாம்பிற்குள் வைத்து அல்லது மேலே குழம்பாய்த் தளும்பப் பூசி வெய்யிலிலுலர்த்தி அதை மறுபடி எடுத்து சுண்ணத்தை உதிர்த்துவிட்டு சிலாசத்தை உபயோகிக்கவும்.

சூரணங்களின் சுத்தி

பொடித்த தூளாய் புட்டாவிக் கட்டித் தீ
வடித்த போதிறக்கியும் வை.

முறை: கடை மருந்துகளைப் பொடித்துச் சூரணஞ் செய்து அதில் பசும்பால்விட்டுப் பிசைந்து ஓர் சட்டியிற் புட்டாவி கட்டி அதன்மேல் வைத்து மேல்சட்டி ஒன்று போட்டு மூடி அடுப்பேற்றி எரித்து எடுத்து அதை உலர்த்தி அதோடு சேர்க்கவேண்டியதைச் சேர்த்து அனுபானங்களிலிட சுத்தியாகும்.

உணவும் நோயும்

"மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று" *(1)*

இதன்பொருள்: ஒருவன் தான் உண்ணும் உணவும், செய்யும் செயல்களும் அவன் தகுதிக்கு ஏற்ற அளவில் இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் அதனில்

மிகுமானாலும், குறையுமானாலும், வைத்திய நூலோரால் சொல்லப்படும் வாதம்(வாயு) பித்தம் (சூடு), கபம் (குளிர்ச்சி) என்னும் மூன்றும் அவனுக்கு நோயை உண்டாக்கும்.

விளக்கவுரை: ஒருவனுக்கு இரண்டுவித காரணங்களால் நோய் வரும். 1. முற்பிறப்பில் செய்த தீவினையால் வருவது. 2. உணவும், செயலும் அவன் தகுதிக்கு ஒவ்வாமையால் வருவது.

முன்வினைப்பயனால் வரும் நோய் தெய்வச் செயலாலன்றி தீராதாகையால் இப்பிறப்பில் ஒருவனின் உணவு, செயல்கள், ஒவ்வாமை ஆகிய இரண்டு காரணங்களால் வரும் நோய்களைத் தீர்க்கும் மருந்து முறை மட்டும் இங்கு கூறப்படுகின்றது. அதாவது உணவு அறுசுவைகளின் வீரியங்களாலும், அளவாலும் பொருந்தி இருத்தல் வேண்டும். (மனம், மொழி, மெய்களால் செய்யும் செயல்கள் அவ்வாறு பொருந்துதல் இன்றி மிகுதல் குறைகள் ஏற்படுமானால் அவை தம்தம் நிலையில் இல்லாமல் உடலை வருத்தும் என்பதாம். எனவே உடலில் இயல்பாய் அமைந்துள்ள வாயு, (காற்று), சூடு, (தீ), நீர், (குளிர்ச்சி) ஆகிய மூன்றும் அதற்குரிய அளவோடு இருக்கவேண்டும் என்பதும், அதில் மிகுதல் குறைதல் ஏற்படுமாயின் நோய் ஏற்படும் என்றும், சித்தர் மரபில் தோன்றிய திருவள்ளுவர் கூறுகின்றார்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருத்திய
தற்றது போற்றி யுணின்" (2)

இதன் பொருள்: ஒருவன் தான் முதலில் உண்டது நன்கு சீரணமாகி விட்ட தன்மையை அதன் அறிகுறிகளால் தெரிந்த பின்பு மேற்கொண்டு உண்பானாயின் அவனுக்கு நோய் இல்லையாதலால், மருந்தென்று வேறு வேண்டியதில்லை என்றவாறு.

விளக்கவுரை: மலச்சிக்கல் இல்லாமலிருத்தல், உடல் உறுப்புகள் நொய்மையாய் இருத்தல், உடல் உறுப்புகள்

தொழில் செய்வதற்குத் தகுதியுடையவனாக இருத்தல், பசி மிகுதல் முதலிய அறிகுறிகளே உண்ணுகின்ற உணவு நன்கு சீரணமாகி இருப்பதைக் காட்டும். இதனால் நோய் வராமல் தடுக்கும் உபாயம் கூறப்பட்டது.

"அற்றால ளவறித்துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு" (3)

இதன் பொருள்: முதலில் உண்டாகும் நன்கு சீரணமாகிவிட்டால் பின்னர் உண்பதனை சீரணிக்கும் அளவை அறிந்து அவ்வளவே உண்ணவேண்டும். அதுவே பெறுவதற்கரிய இம்மானிடப் பிறப்பைப் பெற்ற ஒருவன் நெடுங்காலம் வாழ்ந்து காயசித்தி பெறுவதற்கும் வழியாகும்.

விளக்கவுரை: அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்றார் ஔவையார். ஐந்து அறிவுடைய விலங்குகளைப் போல் வாழ்ந்து உடல் அழிந்துபடாமல் ஆறாவது அறிவாகிய பேரறிவைப்பெற்ற மனிதனின் இம்மையில் காயசித்தி பெற்று, மறுமையில் வீடுபேறு அடையவேண்டுமென்பதே நோக்கமாகும். அந்நோக்கம் நிறைவேறுவதற்கு நீண்டகாலம் உயிர்வாழும் நெறியை இங்கு வள்ளுர் கூறியுள்ளார்.

"அற்ற தறிந்து கடைபிடித்து மாறல்ல
துய்க்கத்துவரப் பசித்து" (4)

இதன்பொருள்: முன் உண்ட உணவு நன்கு சீரணமாகிய தன்மையை உணர்ந்து அதனால் மிகவும் பசி ஏற்பட்ட பின்னர் மேலும் உண்ணத்தொடங்க வேண்டும். அவ்வாறு உண்ணும் போது மாறுபாடு இல்லாத உணவையே உண்ணவேண்டும் என்பதாம்.

விளக்கவுரை: உண்ட உணவு சீரணமாகிவிட்ட போதிலும் பசி ஏற்படாமல் வயிறு மந்தமாக இருக்கலாம். ஆதலாலும் பசி ஏற்பட்ட பின்னரேதான் உண்ண வேண்டும்

என்று இங்கு வலியுறுத்தியுள்ளார். மாறுபாடு கொள்ளாத உணவு என்ன என்பது சிந்திக்கத்தக்கது. உண்பவன் உண்ணும் வழக்கத்தில் மாறுகொள்ளாமையும், கால இயல்போடு மாறுகொள்ளாமல் இருத்தலும், உணவின் சுவை வீரியங்களால் தம்முள் மாறுகொள்ளாமையும் முதலியன. குடிக்கும் தண்ணீரும் உணவாதலால் அதுவும் தூய்மையுடன் இருக்கவேண்டும் என்பது இதனால் பெறப்படும். வாதம் (வாயு), பித்தம் (சூடு), கபம் (நீர்) ஆகிய மூன்றுக்கும் பொருந்தாத உணவை உண்பதும், ஆறுவகைக் காலங்களின் நுட்பத்தை அறிந்து, அந்தந்தக் காலத்திற்கு ஒவ்வாத உணவை உண்பதும், தேனும் நெய்யும் ஒருங்கு சேர நஞ்சாவது போல தம்முள் ஒவ்வாத அறுசுவை உணவை உட்கொள்வதும், நோய் வருவதற்கு ஏதுவாகும். ஆதலால் மனம் போனபடி வாய்க்குச் சுவையுள்ள உணவுகளை உண்ணக்கூடாது என்பது இதனால் விளக்கப்பட்டது. மாறுபாடு இல்லாத உணவு ஆகியவை களின் விரிவு பற்றி சித்தர் நூல்களிலும் பிற வைத்திய நூல்களிலும் காணலாம்.

"மாறுபா டில்லாத வுண்டி மதித்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு" (5)

இதன் பொருள்: மேற்கூறியபடி உடல் இயல்பு, காலஇயல்பு, உணவின் சுவையியல் ஆகிய மூன்றிலும் மாறுபாடில்லாத உணவை ஒருவன் தன்மனம் விரும்பிய அளவினாலன்றி நோய்வரா அளவினால் உண்ணுவானாயின், அவனுடைய உயிர்க்கு நோய்களால் துன்பம் ஏற்படுதல் இல்லை என்றவாறு.

விளக்கவுரை: மேற்கூறிய மூன்றிலும் மாறுபாடு இல்லாவிட்டாலும், உட்கொள்ளும் உணவின் அளவு குறைவாக இருத்தலே நல்லது என்று விளக்கப்பட்டது. உண்டி சுருங்கில் உபாயம் பல உள என்று திருமூலர் என்னும் சித்தர் தலைவர் கூறி இருப்பதும் காண்க. இந்நான்கு பாட்டாலும் உணவின் தன்மை, உணவின் அளவு, காலம், பயன் ஆகிய நான்கும் கூறப்பட்டன.

"இழிவறிந் துண்பான் கணின்பம் போனிற்குங்
கழி பேரிறையான் கணோய்" (6)

இதன் பொருள்: குறைந்த அளவு உண்பது நல்லது என்று அறிந்து அவ்வாறே உண்பவன் ஆரோக்கிய நிலையில் இருப்பதால் அவ்விடத்தில் இன்பம் நீங்காமல் நிலை நிற்பதைப் போல, அளவுக்குமேல் தீனியை விழுங்கு பவனிடத்தில் நோய் நீங்காது நிலை நிற்கும்.

விளக்கவுரை: இன்பமாவது உடலில் வாயு, சூடு, நீர்த்தன்மை (வாத பித்த கபம்) ஆகிய மூன்றும் தம், தம் நிலையில் மாறுபடாமல் இருத்தலினால் உடல் உறுப்புக்களால் செய்யும் செயல்கள் இனிமையாக நடப்பதால் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் அடையமுடியும் என்பது இதன் கருத்து. அளவில்லாமல் தின்று வருந்தும் விலங்குபோல் விழுங்குபவன் நோயால் வருந்துவான் என்பதை வள்ளுவர் பெருமான் இரை (தீனி) என்னும் சொல்லால் விளக்கினார்.

"தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயள வின்றிப் படும்" (7)

இதன் பொருள்: தன்னுடைய உடல் இயல்பையும், அதற்குத் தகுதியான உணவையும், உண்ணும் காலத்தையும் சிறிதும் சிந்திக்காமல் கிடைத்த உணவை காலமில்லாக் காலத்தில், பசி இல்லாத போது குறிப்பிட்ட அளவிற்கு மிஞ்சி ஒருவன் பெரிதும் உண்பானாயின் அவனிடத்தில் நோய்கள் எல்லையில்லாமல் மேன்மேலும் வளரும். என்றவாறு.

விளக்கவுரை: மேற்கூறிய இரண்டு பாடலாலும் அளவுக்குமேல் உண்பவன் நோய்களால் பீடிக்கப்பட்டு வருந்துவான் என்று கூறப்பட்டது. இதனால் நோய் வரும் வழியும், நோய் வராமல் தடுப்பதும், அளவோடு உண்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதும், இவ் வுண்மையை உணர்ந்தவர் என்பதும் கூறப்பட்டது.

மருத்துவன் இலக்கணம்

"நோய்நாடி நோய்முத நாடியது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (8)

இதன்பொருள்: நோயாளியின்கண் ஏற்பட்டுள்ள நோயை அதன் அறிகுறிகளால் இன்னதென்று மருத்துவர் ஆராய்ந்து தெளிந்த பின்னர் அது வந்த காரணத்தையும் ஆராய்ந்து தெளிந்து பின்னர் அந்நோயை நீக்கும் மருந்து முறையும் அறிந்து அதனைச் செய்யும்பொழுது முன்னோர் செய்த வைத்தியமுறையில் சிறிதும் தப்பாமல் செய்து குணப்படுத்த வேண்டும் என்றவாறு.

விளக்கவுரை: முற்கூறியபடி உணவு செயல், ஒவ்வாமை ஆகிய இரண்டின் நிதானம் அறிந்து நோயின் அறிகுறிகள், அதுவந்த காரணம் அதை நீக்கும் வழி ஆகிய மூன்றையும் ஐயம் அறத்தெளிந்த பின்னரே மருந்து கொடுத்தல் வேண்டும். சித்த மருத்துவ நூல்களில் கூறி உள்ள அகமருந்து 32ம், புறமருந்து 32ம், இதில் அடங்கும் என்பது-அது தணிக்கும் வாய் என்பதால் விளக்கப் பட்டுள்ளது.

"உற்றானளவும் பிணியவுளங் காலமுங்
கற்றான் கருதிச் செயல்" (9)

இதன்பொருள்: உடல் இயல்பு, உணவுமுறை, நோய் வரும் வழி, மருந்து முறை ஆகியவைகளில் கைதேர்ந்த மருத்துவன் நோய் தீர்க்கும் உபாயம் அறிந்து செய்யும் பொழுது நோயாளியின் அளவினையும் அவனிடத்தில் உள்ள நோயின் அளவினையும் தன்செயலுக்கேற்ற காலத்தினையும் மருத்துவநூல் நெறியின்படி நோக்கி அவற்றோடு பொருந்தும்படி செய்யவேண்டும்.

விளக்கவுரை: பிணியாளன் இயல்பு, வயதின் அளவு, நோயின் அளவு முதலியவைகளையும், நோயின் தொடக்கம்,

நடுநிலைமை, முடிவு நிலைமை ஆகிய இயல்புகளையும், தீரும் நோய், தீராநோய் என்னும் குறிப்பினையும், நோயாளியின் குழந்தைப்பருவம், வாலிபப்பருவம், முதுமைப்பருவம் முதலியவைகளையும் நோய் ஏற்பட்டுள்ள கால நிலையையும் மருத்துவன் ஆராய்ந்துபார்த்து முன்னோர்கள் வைத்திய நூலில் கூறியபடி தவறில்லாமல் மருந்து கொடுத்து குணப்படுத்தவேண்டும் என்பதை விளக்கும் பொருட்டு கற்றான் கருதிச் செயல் என்றார்.

"உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்லானென்
றப்பானாற் கூற்றே மருந்து" *(10)*

இதன்பொருள்: நோயுற்றவன் அதனைத்தீர்க்கும் மருத்துவன், அதற்குரிய மருந்து, அதனைத் தவறாமல் செய்பவன் என்று நான்கு வகையாகச் சொல்லப்படும்.

விளக்கவுரை:

உற்றவன் வகை நான்கு: *1. செல்வமுடைமை, 2. மருத்துவன் கூறியபடி நடத்தல், 3. நோயின் நிலையை யெடுத்துக் கூறும் திறமை, 4.மருந்து உண்பதால் வரும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்வது.*

தீர்ப்பான் வகை நான்கு: *1. மருத்துவன் நோயைக்கண்டு அஞ்சாமல் இருத்தல், 2.குருவினிடமிருந்து கற்றுக்கொண்ட வைத்தியக் கல்வியில் நுண்ணிய அறிவுடையவனாக இருத்தல், 3. பலமுறை நோய்களைக் குணப்படுத்திய அனுபவம் பெற்றிருத்தல், 4.மனம், மொழி, மெய், தூய்மையாக இருத்தல்.*

மருந்தின் வகை நான்கு: *1. பல பிணிகளுக்கும் ஏற்கக்கூடிய மருந்து, 2. சுவை, வீர்யம், விளைவு, ஆற்றல்களால் மேம்பட்ட மருந்து, 3.எளிதில் கிடைக்கும் மருந்து, 4. நோயாளியின் உடல் இயல்புக்கு பொருந்திய மருந்து.*

இயற்றுவான் வகை நான்கு: 1. நோயாளிகளிடத்தில் அன்பு, 2. மனம், மொழி, மெய், தூய்மையாய் இருத்தல், 3.சொல்லியபடி செய்யும் திறமை, 4. குறிப்பறிந்து நடக்கும் அறிவு மேற்கூறிய நான்கும் ஒன்றுபட்டால் அல்லாமல் நோய் நீங்காது. ஆதலால் இந்த நான்கையும் மருந்து என்று கூறினார் வள்ளுவர். இந்த நான்கில் மாறுபாடு ஏற்படுமானால் நோய் தீருவது அசாத்தியமாகும். எனவே நோய் தீருவதற்குரிய எல்லாவற்றையும் தொகுத்து இங்கு கூறப்பட்டுள்ளன.

மருத்துவர் இயல்பு

கருப்பொருள், நிகண்டு, சூத்திரம் முதலியவைகளைக் கற்றுத்தேர்ந்து அவைகளைக் கருத்தில் நன்கு உணர்ந்து மணி, மந்திரம், மருந்து இவைகள் மூன்றையும் கவனத்தோடு தவறு ஏற்படாவண்ணம் செய்யும் வல்லமை உடையவர்களே மருத்துவர் ஆவார்.

பொறுமை, சன்மார்க்கம் ஆகிய அரும்குண நலன்களைப் பெற்றவரும் மண்ணுலகில் பிறந்தவர் என்றாலும் விண்ணவர் என மதிக்கத்தக்க குல நலமுடைய வரும், மண்ணுயிர்களின் மீது இரக்கம் காட்டும் அருள் நெஞ்சம் கொண்டவரும் வாசியோகத்தில் கடவுளை நாளும் வழிபடும் நல்லதோர் கொள்கையில் இருப்பவரும், வைத்தியம் செய்யக்கூடிய முறையில் பலரும் வியப்படையக் கூடிய மேம்பட்ட நிபுணராக விளங்கக் கூடியவரும் மனதில் தோன்றும் ஆசையை அடக்கி அமைதியாக வாழும் வகையைக் கடைபிடிக்கும் ஆண்மையுடையவரும், பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர் என்றாலும் உலகியலை ஒட்டி நடக்கும் ஒழுக்கம் உடையவரும் மருத்துவர் ஆவர்.

நோயறிந்து, நோய் வரக்கூடிய காரணத்தையும் அறிந்து தக்க மருந்தைக் கொடுப்பதில் வல்லவர்களே உத்தமமான வைத்தியர் என யாவராலும் போற்றப்படுவர்.

நோய் நீக்கும் மருந்து , துணைமருந்து, கைமுறை, செய்முறை, பத்தியமுறை ஆகியவைகளை எப்பொழுதும் நினைவில் வைத்திருப்பவரும் இவைகளில் மாறுபாடு ஏதேனும் ஏற்பட்டாலும் அதைக்கண்டு மனம்தளராது முடிக்க வல்லவர்களும் மருத்துவர் ஆவர். நோயுற்றோரின் குணம், குரல், நாடி, சகுணம் இவைகளைக் கொண்டு நோய் தீரும் தீராது என்று அறிந்து துணிவோடு கூறக்கூடியவரும் எதையும் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று விளக்கமாக எடுத்து உரைப்பவரும் மந்தம், சோம்பல், மறதி, தூக்கம் ஆகியவைகள் இல்லாமல் நிலைமையை உணரக்கூடியவரும் மருத்துவர் ஆவர்.

ஆரம்பத்தில் பெரிய மருந்துகளைச் செய்து கொடுப்பதற்கு முன்னதாக சிறிய மருந்துகளைக் கொடுத்து நோயை நீக்கக்கூடிய வல்லமை உடையவர்களும், பெரிய மருந்துகளைச் செய்து நோயாளிகளுக்குக் கொடுக்குமுன் தானே அதனை உட்கொண்டு அதன் தகுதியை அறிபவர்களும், காமம், வெகுளி, ஆணவம், உலோபம், மோகம், பொறாமை ஆகிய தீக்குணங்கள் இல்லாதவரும், கால தேச வட்டமானம் முதலியவற்றை நன்கு அறிந்தவரும் அன்னப்பறவை நீரைப் பிரித்து பாலைப் பருகுவதைப்போல நோயாளியின் பல நோய்களையும் ஆராய்ந்து நல்லது கெட்டது இது என அறியும் வல்லமை உடையவர்களும் மருத்துவர் ஆவர்.

யானையைப்போல யாருக்கும் வணங்காத வாழ்க்கையை உடையவரும், குலத்தினால் கர்வம் கொண்டவரை தனது மருந்தினால் அடக்கக்கூடிய வல்லமை பெற்றவரும், மந்திர நெறிமுறைகளை நாடிய மகான்களை ஒற்றவரும், மன்னர் மதிக்கக்கூடிய மதிப்பைப் பெற்றவரும், மருத்துவ நூல்களுக்கு உரை விளக்கம் செய்யும் ஆற்றல் பெற்றவரும் மேகத்தைக்கண்டு ஆடும் மயிலைப்போல் நோயாளியை வசியப்படுத்தும் வல்லமை உடையவரும், மருத்துவ வரன்முறைகளை தவறாது செய்யும் மாண்புடை

யோரும், பன்னாடையைக்கொண்டு கள்ளை வடிகட்டுவது போல் நூல்களில் உள்ள நுட்பங்களை அறிந்து செய்யும் வல்லமை உடையவர்களும், பருத்திப் பொதிக்கொரு நெற்பொறி போல கற்றநூல்களில் மாறுபாடு இருக்குமாயின் அவைகளைத் தன்மதி நுட்பத்தால் நீக்கக்கூடிய வன்மை உடையவர்களுமே மருத்துவ இயல்பை உடைய மருத்துவப் புலவர்களாவர்.

மருத்துவர் இலக்கணம்

மருத்துவர்கள் தம் மாணாக்கர்களுக்கு மருந்துப் பொருள்களின் பண்பு, அளவு, எரிப்புத்திட்டம், உருக்கும் முறை, மருந்துகள் செய்முறை, உண்ணும் கால அளவு, நாள் அளவு முதலியவைகளைக் கற்பிக்கவேண்டும். மேலும் மக்கள் நீடூழி காலம் வாழ வழிமுறைகளைக் கற்பிக்க வேண்டும். மேலும் மருத்துவர்கள் பொறுமை, ஞானம், மனத்திடம், ஈகைக்குணம், நுட்பம், துணிவு, ஆண்மை முதலிய நல்ல குணங்களைக் கடைப்பிடிக்கவேண்டும். மேற்கூறப்பெற்ற குணநலன்களால் மக்கள் யாவரும் இனிமையாக விரும்பத்தக்க மருத்துவராக இருப்பதே மருத்துவரின் இலக்கணம்.

மருத்துவரின் குணம்

நோயாளியின் முகம் குறிகுணம், மூச்சு, நடை, சிறுநீர், உமிழ்நீர், மலம், உணவு, குடிக்கும் நீரின் தன்மை முதலியவைகளைப் பற்றி மருத்துவன் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும்.

நோயாளியின் முகம் சூரியவட்டம் போன்று ஒளியுடன் விளங்கினால் வாதக்குற்றம் என்றும், வெய்யிலில் உலர்ந்த தாமரையைப் போல் நாளுக்க நாள் கருநிறமடைந்தால் பித்தக்குற்றமென்றும், வெண் தாமரை சுருங்கினாற்போல் வெளுப்பாக இருந்தால் சுபகுற்றம் என்றும் அறியவும்.

1. நாடியின் நடை பிறழாமல் இருந்தால் வாதத்தின் நடையாகும்.

2. மற்றைய நாடி நடையாயும், தவறி நடந்தாலும் அது பித்தநாடி நடையாகும்.

3. நாடி மிகுந்து விரைவாய் ஓடினால் அது கப நாடியாகும்.

இதனை விரித்துக் கூறுவோமேயானால் நாடி மந்தமாக இருந்தால் வாதம் எனவும் வேகமாக ஓடினால் பித்தம் எனவும், இரண்டும் கலந்திருக்குமேயானால் கபம் எனவும் கொள்ளலாம்.

மேலும் அதிக அசதி இருக்குமேயானால் வாதத்தின் தன்மை என்றும் ஏற்றத்தாழ்வு இருக்குமானால் பித்தத்தின் தன்மை எனவும் கொள்ளலாம்.

குரல் கம்மல் இருந்தால் கபம் என்றும், குரல் விபரீதமாக இருந்தால் வாதம் என்றும், கிணற்றுக்குள்ளிருந்து போசுவது போலிருந்தால் பித்தம் என்றும் கொள்ளலாம்.

வாதம் மேலிட்டிருந்தால் உடல் கருப்பாகவும், பித்தம் மேலிட்டிருந்தால் உடல் சிகப்பாகவும், கபம் மேலிட்டிந்தால் உடல் வெளுப்பாகவும் இருக்கும்.

உடலில் வாதம் மேலிட்டிருந்தால் நோயாளியின் சிறுநீர், தேன் போலவும், பித்தம் மேலிட்டிருந்தால் எண்ணெய் போலவும், கபம் மேலிட்டிருந்தால் சிறுநீர் மோர் போலவும் வெண்மையாகவும் இருக்கும்.

வாத நோயாளியின் உமிழ்நீர் நீர்த்தன்மை பாயும் இயல்பான அளவும் இருக்கும்.

பித்தநோயாளியின் உமிழ்நீர் வரட்சியாகவும் மிகுந்த அளவும் இருக்கும்.

இத்தன்மைகளெல்லாம் அறிந்திருப்பது மட்டுமின்றி பருவகால தட்பவெட்ப நிலைகள் நாட்டின் பண்பு, நடப்பு ஆகியவைகளை அறிந்து நோய் நாடி அது வந்த விதம் நாடி, அது தணிக்கும் வழி நாடி, தக்க மருந்துகளை நாடி வழங்குபவரே மருத்துவர் ஆவர். இவ்வணிகலன்களைப் பெற்றிருப்பதே மருத்துவரின் குணமாகும்.

ஐம்பூத பாடாணம்

பிரிதிவி	-	கெந்தகம்
அப்பு	-	வீரம்
தேயு	-	கௌரிபாடாணம்
வாயு	-	துரிசு
ஆகாசம்	-	லிங்கம்

ஐம்பூத உபரசம்

பிரிதிவி: சலாசத்து, அப்ரகம், காந்தம், பூநாகம்.

அப்பு: சங்கு, கோழிமுட்டை, நாகரவண்டு, கிளிஞ்சல், நண்டு.

தேயு: எலும்பு, இந்திரகோபப்பூச்சி, மயிலிறகு, நிமிலை, வெங்காரம்.

ஆகாசம்: வைக்கிராந்தம், துத்தம், ரசபாடாணம், சுக்கான்.

ஐம்பூத உலோகம்

பிரிதிவி	-	தங்கம்
அப்பு	-	காரீயம்
தேயு	-	செம்பு
வாயு	-	இரும்பு
ஆகாசம்	-	நாகம்

ஐம்பூத காரரசம்

பிரிதிவி	-	வெடியுப்பு
அப்பு	-	கல்லுப்பு

தேயு	-	வலையலுப்பு
வாயு	-	சீனம்
ஆகாசம்	-	பூநீறு

ஐம்பூதச் சரக்குகள்

பிரிதிவி	-	மிருதார்சிங்கி
அப்பு	-	வெள்ளைப்பாடாணம்
தேயு	-	வீரம்
வாயு	-	லிங்கம்
ஆகாசம்	-	சூதம், இரசம்

ஐம்பூதப் பச்சிலை

பிரிதிவி	-	செம்பாளை, புளியாரை
அப்பு	-	திராய், பீநாறிச்சங்கு, (பீச்சங்கு)
தேயு	-	சிவகரந்தை, குமரி
வாயு	-	கவிழ்தும்பை, காசான்லிங்கம்
ஆகாசம்	-	காஞ்சொறி, சங்கன்செடி

நீற்றினத்திற்காதி

எளிதில் பற்பமாகக்கூடிய மருந்துகள்: புனுகு, வீரம், குருவண்டு, உரம், ரசம், சவர்க்காரசுண்ணம், கார்முகில் பாடாணம், பச்சைகற்பூரம்.

செந்தூரத்திற்காதி

மருந்துகளைச் செந்தூரமாக்கும் மருந்துகள்: பாஷாணங்கள், நவலோகங்கள், காரம், ரசம், உபரசங்கள், அரிதாரம், மனோசிலை, கெந்தகம், அவுரி, அப்பிரகம், துத்தம், வெடியுப்பு, கல்லுப்பு, தாகம், தங்கம், எருக்கம்பால், உபாச பாஷாணங்கள், பொற்றலைக் கையாந்தகரை, கருந்துளசி.

உலோக உருக்கினத்திற்காதி: 1. நத்தைச்சூரி, 2. இரத்தமண்டலி, 3. செவ்வகத்தியிலை, 4. மாதுளை, 5. அரிதாரம், 6. காட்டாமணக்கு.

இரசவாத உபயோகச்சரக்கு: 1. உப்பு, 2. நாகம், 3. தங்கம், 4. உபரசம், 5. நிமிளை, 6. சூதம், 7. கௌரி.

உருக்கினத்திற்காதி சரக்கு: வெங்காரம், வெள்ளை கிலுகிலுப்பை,கருங்கொள், வெள்ளை ஆமணக்கு, சர்க்கரை, மொச்சை, சவ்வாது, சல்லறம், முப்பூ, குக்கில், நத்தைச்சூரி, தாளகம், வெள்ளைப் பாடாணம், வெள்ளைக்குன்றிமணி, தேன், புறாஎச்சம், வெல்லம்.

பாடாணத்தைக்கட்டும் சரக்கு: நறுங்குறிஞ்சி, வேளை, ஆகாசக்கருடன், பேய்க்கொம்மட்டி, பேய்த்தும்மட்டி, வெள்ளை நீர்முள்ளி, கடம்பு, மான்செவிக்கள்ளி, அந்திமந்தாரை, பத்திராட்சம், கள்ளி, முந்திரிப்பழச்சாறு, கழுதைமான் புள்ளி, திலகவிருட்சம்.

நாகத்தைக்கட்டும் சரக்கு: ஆடுதீண்டாப்பாலை, பேய்த்தும்மட்டி, புனல்முருங்கை, நீர்க்கடம்பு, நறுமுருங்கை, சிறியாநங்கை, நன்முருங்கை, கற்கடகசிங்கி, செம்பருத்திச்சாறு, சருகு, கருங்காளான், இரும்பிலிவேர், கிலுகிலுப்பை, வெண்கருங்காலி, பொன்னாவாரை, மயூர்ச்சிகை, நாகசிங்கி, கொட்டிக்கிழங்கு, கல்லாமை.

தாளகத்தைக் கட்டும் சரக்கு: வெண்பாதிரி, காயவேர், புளியம்பட்டைச் சாம்பல், தும்பைச்சாறு, தழுதாளையிலைச்சாறு, தேவதாரி, சுரபுன்னை, திருநீற்றுப்பச்சிலை.

வெள்ளீயத்தைக் கட்டும் சரக்கு: மிளகு, தக்காளி, நரிமாமிசம், பூநாகம், கழுதைமான் புள்ளி, வெண்சுக்கான் சத்து.

இலிங்கத்தைக்கட்டும் சரக்கு: பேய்த்தும்மட்டி, ஐவிரலி, ஆற்றலரி, ஐங்கோவை விதை, பழுபாகல், பிரமதண்டு.

வெடியுப்பைக் கட்டும் சரக்கு: கொடுக்காய்புளி, யானை தந்தம், மான்கொம்பு, அப்பளங்காய், புவிநரளை, கலாவிழுது.

சாரத்தைக்கட்டும் சரக்கு: வெள்ளெருக்குத் தைலம், காட்டுத்துளசி, வனமிரட்டி, ஆட்டெலும்புச் சுண்ணம்.

கல்லுப்பைக் கட்டும் சரக்கு: குப்பைமேனி, வன்னிப்பட்டை, கடல்நீர், கட்டுக்கொடி, சீவகமூங்கில், நீர்மேல் நெருப்பு, பழம்புளி.

கெந்தகத்தைக் கட்டும் சரக்கு: மணத்தக்காளி, காக்கை முட்டை, கருஊமத்தை, சிறுவாலுழுவை, கவிழ்தும்பை, சின்ன முள்ளங்கி, தொழுகண்ணி, அழுகண்ணி, வில்வம், குமரி.

குழந்தை நோய்களும் உரிய மருத்துவமும்

உலகத்தில் குழந்தை பிறந்த நாளிலிருந்தே அக்குழந்தைக்கு உண்டாகும் நோய்களுக்குக் காரணம் அதன் தாய், தந்தையர் ஆவார்கள். அந்நோய்களில் குறிப்பிடத் தக்கவை மாந்தம், கணம் (கணை), கரப்பான், கிரந்தி முதலியவை.

மேலும் குழந்தை பிறந்தவுடன் குழந்தைகளுக்குச் சில நோய்கள் வருவதுண்டு. அவையாவன.1. சீறிச்சீறி அழுதுல், 2.விக்கல், 3. பொருமல், 4. வயிறு வீங்குதல், 5. பால் எதிர் எடுத்தல், 6. கொட்டாவி விடுதல், 7. பால் குடியாமை, 8. வயிற்றுநோய், 9. மலக்கட்டு, 10. நீர்க்கட்டு, 11. தோடம் என்பனவாகும்.

மருத்துவம்

சீறிச்சீறி அழுதல், விக்கல், பொருமல் : ஆகிய நோய்களுக்கு கண்டு பரங்கி(சிறுதேக்கு), சிறுதிப்பிலி ஆகிய இரண்டையும் சம எடை எடுத்து தாய்ப்பால்விட்டு நன்கு நெகிழ அரைத்து தாயின் மார்பகங்களில் தடவி பாலுண்ணச் செய்ய நீங்கும். குறிப்பாக விக்கலுக்கு மட்டும் மயில் இறகு சுட்டு கரியாக்கி, தேனில் குழைத்து நாக்கில் தடவ உடன் நிற்கும்.

வயிறு வீங்குதல்: அதிமதுரப்பொடியை காடியில் அரைத்து வயிற்றில் பூச அவ்வீக்கம் அடங்கும்.

பால் எதிர் எடுத்தல், கொட்டாவி விடுதல்: உரித்த பூண்டுபல் மூன்றைச் சட்டியிலிட்டு, பொன் வறுவலாக வறுத்து அதனுடன் ஐந்து கிராம் ஓமத்தைப் போட்டு அவை வெடித்து அடங்கிய பிறகு 100 மில்லி தண்ணீரை ஊற்றி 50மில்லியாகும் வரையில் எரித்து எடுத்து வடிகட்டி ஒரு சங்கு கொடுக்க குணமாகும்.

பால் குடியாமை: அதிமதுரத்தைப் பொடிசெய்து தாய்ப்பாலில் குழைத்து தாயின் மார்பகங்களில் பூசி குழந்தைக்குப் பால் உண்ணச் செய்தால் குழந்தை நன்கு பால் குடிக்கும்.

வயிற்றுநோய்: வசம்பை சுட்டு கிரியாக்கி பொடி செய்து அதனுடன் முருங்கையிலை, உப்பு இவ்விரண்டையும் சேர்த்துக் கசக்கிச் சாறுபிழிந்து சேர்த்துக் குழைத்து அடிவயிறு மற்றும் தொப்புளைச் சுற்றிலும் தடவ வயிற்றுநோய் நீங்கும்.

மலக்கட்டு: கொட்டை திராட்சையில் ஐந்து எடுத்த, 100மில்லி தண்ணீர்விட்டு, எட்டுக்கொன்றாகக் காய்ச்சி வடிகட்டிக் கொடுக்க மலம் போகும்.

நீர்க்கட்டு: வெள்ளரி விதை, எலிப்புழுக்கை ஆகிய இரண்டையும் தண்ணீர்விட்டு நன்கு நெகிழ அரைத்து, குழந்தையின் அடிவயிற்றில் தடவ நீர் பிரியும்.

1. கிரந்திநோய்

இந்நோய் குழந்தைகள் பிறந்த நாள் முதல் வருவதாகும். இதனைக் கரப்பான் எனவும் சிலர் கூறுவர். அது முற்றிலும் தவறு. குழந்தை பிறந்த நாள் முதல் மூன்று மாதங்கள் வரை வருவது இந்நோய்.

இந்நோய் செங்கிரந்தி, கருங்கிரந்தி என இருவகைப் படும். இவற்றில் செங்கிரந்தி செவ்வாப்பு எனவும், கருங்கிரந்தி, கருப்பான் என்றும் சொல்லப்படுவனவாகும். இந்நோய்கள் இரண்டும் அறையிலேயே காணப்படும் நோய்களாகும்.

இவைகளில் செவ்வாப்பானது குழந்தையின் உடல்முழுவதும் சிவந்த நிறம் மூடிக்கொள்வது தவிர அத்துடன் சிறுசிறு கொப்புளங்களும் காணப்படும்.

கருங்கிரந்தி (கறுப்பான்) குழந்தை பிறந்தது முதல் ஐந்துநாட்களுக்குள் தொண்டைக்கட்டு உண்டாகிவரும்.

செம்மை, கருமை என்னும் கிரந்திகள் யாவும் அதிகப்படியான முக்குற்ற தொந்தத்தாலேயே வெளிப்பட்டு வருவன என்று கூறுவர்.

செங்கிரந்தியின் குறிகுணங்கள்

இந்நோய் ஏற்பட்டது முதல் (அதாவது குழந்தை பிறந்தவுடன் விடாமல் ஒரே அழுகையாக அழுது, பிறகு அழமுடியாதபடி தொண்டைக்கட்டிக்கொண்டு, மெதுவாக பூனைக்குரல்போல் ஒலிகாட்டி நீரையும், மலத்தையும் கட்டி வயிறு ஊதி, கை, கால்களில் துள்ளி, உடல் முழுமையும் சிவப்புநிறம் அதிகம் ஏற்பட்டு, அசைவற்றுப் படுத்திருக்கச்செய்யும்.

2. மாந்த நோய்

வரும் வழி: இந்நோயானது குழந்தை பிறந்த முதல் ஆண்டு முடிவதற்குள் எருமைப்பால் எருமைத்தயிர், எருமைமோர், எருமை நெய், வாழைப்பழம், மாம்பழம், தேங்காய், கடலை, வெல்லம், மொச்சை, புளியங்கொட்டை, பருப்புருண்டை, மாவினால் செய்யப்பட்ட அதிரசம் போன்ற தின்பண்டங்கள் இவைகளை உட்கொள்வதாலும், மேலும் உளுவைமீன், வாளைமீன், கெண்டைமீன், கெளுத்தி முதலியன கொழுப்புச் சத்துள்ள மீன்களை உணவுடன் தாயானவள் சேர்த்துக்கொள்வதாலும், மலச்சிக்கல் ஏற்பட்டு தாய்ப்பாலின் தன்மை கெடுதலடைகிறது. இப்பாலை குழந்தை அருந்துவதாலும் சிறுகுழந்தையுள்ள பெற்றோர்கள் கலவி இன்பத்தில் ஈடுபடுவதால் தாயின் உடல் வெப்பமுற்று தாய்ப்பால் கெடுதலாலும் இந்நோய் உண்டாகிறது.

குறிகுணம்: குழந்தையின் உடல் கனத்தால், உடல்வலி, வேர்த்தல் சோர்வடைதல், இடைவிடாது காய்ச்சல் காணல்,

வெப்பு நாற்றம் உண்டாதல், மயக்கமுறல், கண்கள் சிவந்திருந்தால் கண்கள் சுழலல், கண்கள் குழிவிழுதல், வாயுலர்தல், தாய்ப்பாலறுந்த மறுத்தல், வாந்தியுண்டாதல், பசியின்மை, பல நிறங்களுடன் பேதியாதல், சீதங்கலந்தும். திரிந்தபால் போன்றும், திருகியதேங்காய்ப்பூவைப் போன்றும், தண்ணீர் போன்றும், கழிதல், கைகால் குளிர்ந்து காணல், தாங்கமுடியாது அழுதல், துள்ளல் முதலான குறிகுணங்களுண்டாகும். இந்நோயானது 23 வகைப்படும். அவை:

வளிமாந்தம்	எரிமாந்தம்
அழல்மாந்தம்	துலை மாந்தம்
ஐய மாந்தம்	தலைமாந்தம்
விட மாந்தம்	கண மாந்தம்
போர் மாந்தம்	வலிப்பு மாந்தம்
வாலை மாந்தம்	சுழி மாந்தம்
சுர மாந்தம்	முக்கு மாந்தம்
நீர் மாந்தம்	சந்தி மாந்தம்
செரியா மாந்தம்	ஊது மாந்தம்
கட்டு மாந்தம்	வீக்க மாந்தம்
பால் மாந்தம்	நீர்கண மாந்தம்
பேய் மாந்தம்	

என 23 வகைப்படும். இவற்றுள் ஒன்பது வகைகள் மட்டும் கீழே விளக்கப்பட்டுள்ளன.

1. வளி மாந்தக் குறிகுணம்

வளி மாந்தத்தில் குழந்தைகளின் கை, கால்கள் குளிர்ச்சியடைந்து, வயிற்றில் இரைச்சல் உண்டாகி கண்களில் நீர்வரும், உடல் வியர்க்கும், வயிற்றில் வலியுண்டாகித் துடிக்கும். கொட்டாவி விடும். மூக்குத்துவாரங்களில் இரணம் ஏற்படும்.

2. பித்தமாந்தக் குறிகுணம்

அழல் மாந்தத்தில் குழந்தைகள் அடிக்கடி வாந்தியும், பேதியும் காணும். மூர்ச்சை உண்டாகும். குரல் கம்மும், உடல் மஞ்சள் நிறமாக இருக்கும். உடல் வியர்க்கும். உடல் கருத்து உடல் முழுவதும் வலியுண்டாகும். உடல் குளிர்ந்து காணுதல் மயக்கமுண்டாதல் ஆகியவை பித்த மாந்தத்தின் குறி குணங்களாகும்.

3. கபமாந்தம் குறிகுணம்

ஐய மாந்தத்தில் குழந்தைகளின் உடல் குளிர்ந்து சிலிர்த்துக்காணும், நாக்கு வெளுத்து, காய்ச்சலுடன் வயிறு பொருமிக் கழியும்.

திரிதோட மாந்தக் குடிநீர்

சிற்றாமணக்கெண்ணெய்	250 மில்லி
கஞ்சாங்கோரை இலை	3½ கிராம்
பிரமி இலை	,,
துளசி இலை	5 கிராம்
நிலவிளாவிலை	,,
வல்லாரை இலை	,,
சீந்தில் சமூலம்	,,
தூதுவளை இலை	,,
வசம்பு	,,
கடுகுரோகிணி	,,
வெள்ளைப்பூண்டு	,,

மேற்கூறியவற்றில் சிற்றாமணக்கெண்ணெய் தவிர மற்ற சரக்குகளனைத்தையும், வெந்நீர்விட்டரைத்து சிற்றாமணக் கெண்ணெயுடன் கலந்து அடுப்பிலேற்றி சிறு தீயிட்டெரித்துப் பக்குவமானபின் இறக்கி கஸ்தூரி, கோரோசனை இவைகளைச் சேர்த்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: துட்டெடை (காலை, மாலை, இருவேளை)

துணை மருந்து: ஓமம், வெற்றிலை இரண்டும் அரைத்த சாறு.

தீரும் நோய்: திரிதோட மாந்தம்.

4. போர் மாந்தக் குறிகுணம்

வயிறு பொருமிக்கழிதல், வயிற்றில் வலியுண்டாதல், தாய்ப்பால் உண்ணாது மயங்குதல், அடிக்கடி மிரளல், கண்கள் குழி விழுதல், நாவறளல், உடல் இளைத்தல், மார்பு துடித்தல், தலையசைத்தல், நோய்கண்டு இரண்டு மூன்று தினங்கழித்து சுரம் உண்டாதல், உடலை உருக்கி மிகுந்த பேதியாதல் முதலியன இந்நோயின் குறிகுணங்களாம்.

சத்திச்சாரணைத் தைலம்

சத்திச்சாரணைச்சாறு	200 மில்லி
ஆமணக்கெண்ணெய்	,,
ஆமை ஓட்டுப்பற்பம்	5 கிராம்
அன்னபேதிச் செந்தூரம்	,,
பூண்டு	,,
வசம்பு (சுட்டது)	,,

மேற்கூறிய சரக்குகளனைத்தையும் நன்றாக அரைத்து ஆமணக்கெண்ணெயில் கலந்து காய்ச்சி வடித்திறுக்கத் தைலமாகும்.

அளவு: ½ தேக்கரண்டி (காலையில் மட்டும்)

தீரும்நோய்: போர்மாந்தம்.

பத்தியம்: குழந்தையின் தாய் இச்சாபத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

நொச்சிக்குடிநீர்

நொச்சி ஈர்க்கு, நுணா ஈர்க்கு, மாவிலை ஈர்க்கு, புளியிலை ஈர்க்கு, வேப்பீர்க்கு, கொடிவேலி ஈர்க்கு, பொடுதலை சமூலம் வகைக்கு 1பிடி, துளசி, திப்பிலி, துட்டெடை, மேற்கூறியவைகளை சிறுதுண்டுகளாக நறுக்கி ஒரு மண்பாத்திரத்தில் 4படி தண்ணீர் விட்டு அடுப்பிலேற்றி ½படியாகும்வரைக் காய்ச்சி வடித்திறுத்தெடுக்க குடிநீராகும்.

அளவு: சங்களவு (காலை, மாலை இருவேளை 3 நாள்)
தீரும்நோய்: போர்மாந்தம்.
பத்தியம்: குழந்தையின் தாய் இச்சாபத்தியம்.

5. சுரமாந்தக் குறிகுணம்

உடலும், முகமும் மினுமினுப்படைதல், அதிக சுரங்காணல், பாலுண்ண மறுத்தல், சிறுநீர் சிவந்திருத்தல், இமைகொட்டாது பார்த்தல், மலம்தடைபடல், மயக்கமுறல், பாதங்கள் குளிர்ச்சியடைதல் ஆகி.ய குறிகுணங்களைப் பெற்றிருக்கும்.

சீந்தில் குடிநீர்

சீந்தில்கொடி	1 வராகனெடை
களிப்பாக்கு	,,
சிவதைவேர்	,,
கடுக்காய்த்தோல்	,,
தோல் நீக்கிய சுக்கு	,,
கடுகுரோகிணி	,,

மேற்கூறிய சரக்குகளை ஒன்றிரண்டாக நறுக்கி ஒரு மண்பானையில் போட்டு 250 மில்லி தண்ணீர்விட்டு எட்டிலொரு பங்காகும் வரை காய்ச்சி வடித்து இறுத்துக்கொள்ள குடிநீராகும்.

அளவு: சங்களவு, காலை, மாலை இருவேளை.

தீரும்நோய்: சுரமாந்தம்.

பத்தியம்: தாய் இச்சாப் பத்தியம்.

சுரசம்

தும்பை	நாயுருவி
உத்தாமணி	சாணக்கி
துளசி	பேய்மருட்டி
வெதுப்படக்கி.	விஷ்ணுக்கரந்தை

மேற்கூறிய மூலிகைகளில் ஒவ்வொன்றிலும் 10 துளிகள் வீதம் கசக்கிச் சாறெடுத்து ஒன்று சேர்த்து அதனுடன் குன்றியளவு ஆமையோட்டுப் பற்பம், அன்னபேதிச் செந்தூரம் இரண்டையும் கலந்து காலை, மாலை இரண்டு வேளையாக மூன்று நாள் கொடுக்க சுரமாந்தம் குணமாகும்.

கடுக்காய்த்தூள் தைலம்

கடுக்காய்த்தோல்	18 கிராம்
கஸ்தூரி மஞ்சள்	,,
கருடன் கிழங்கு	,,

மேற்கூறிய மூன்று சரக்கினையும் தனித்தனியே இடித்துத் தூள்செய்து வடிகட்டி எடுத்து ஒருபடி நல்லெண்ணெயில் கலந்து நன்றாகக் காய்ச்சி வடித்திறுத்துக் கொள்ள தைலமாகும்.

அளவு: துட்டெடை, காலை, மாலை.

தீரும்நோய்: சுரமாந்தம்.

பத்தியம்: தாய் இச்சாப்பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

6. நீர்மாந்த குறிகுணம்

இந்நோய் அநேகமாக எல்லாக் குழந்தைகட்கும் உண்டாகும். இந்நோய் கண்டால் உடல் குளிர்ந்து சிலுர்த்துக்காணல். தலைவலித்தல், முகம் மினுமினுத்தல், காய்ச்சல் காணல், நாவில் நீர்ஊறுதல், ஒக்காளத்துடன் வாந்தியுண்டாதல் உடல்முழுவதும் தினவெடுத்தல், குரல்கம்மல், உறக்கத்தில் சிரித்தல், பாலருந்த மறுத்தல், வயிறு சிறுகச்சிறுகப் பொருமலுடன் கழிதல், நீர்த்தாரையில் புண் உண்டாதல், வேர்வை அடிக்கடி உண்டாதல், வயிற்றில் வலி உண்டாதல் முதலான குறிகுணங்கள் ஏற்படும்.

மிளகுத் தைலம்

மிளகிலைச்சாறு அல்லது மிளகிலைக் குடிநீர் 100மில்லி
ஈறுள்ளிச் சாறு ,,
மூக்கரட்டைச்சாறு ,,
விளக்கெண்ணெய் ,,

மேற்கூறிய சாறு வகைகளையும், எண்ணெயையும் ஒரு இருப்புச் சட்டியிலிட்டு மெழுகு பதமாகும்வரை எரித்து வடித்திறக்கத் தைலமாகும்.

அளவு: ½ தேக்கரண்டி (காலையில் மட்டும்)

தீரும்நோய்: நீர்மாந்தம்.

நொச்சியிலைச் சுரசம்

நொச்சியிலை நுணாயிலை
குப்பைமேனியிலை பேய்மிரட்டியிலை
வேளையிலை தும்பையிலை

இவைகளை வகைக்கு ஒருபிடி எடுத்து வெதுப்பிச்சாறு பிழிந்து 35 கிராம் சாறெடுத்துக்கொள்ளவும். பிறகு மிளகு, வெள்ளுள்ளி, சுட்டவசம்பு, ஓமம் வகைக்கு இரண்டு குன்றியெடை எடுத்து நொச்சிச்சாறு விட்டரைத்து முன்னெடுத்து வைத்துள்ள மூலிகைச்சாற்றில் கலந்து கொதிக்க வைத்து வடித்திறுத்தெடுத்து காலை, மாலை இருவேளையும் கொடுக்க நீர்மாந்தம் குணமாகும்.

இக்சுரசத்துடன் ஆமையோட்டுப் பற்பம் 1 குன்றியெடை சேர்த்தும் கொடுக்கலாம்.

7. சீரியா மாந்தம்

குறிகுணம்: இந்நோய் கண்டால் சுரம் மிகுதியாகக் காணல், தலைவலித்தல், வயிறு பொருமி நொந்து அழுதல், மாக்கரைத்தாற்போல் அடிக்கடி கழிதல், ஒருபுறமாய்ப்

படுத்து அரைக்கண்துாக்கம் கொள்ளல், சோர்வடைதல், பால் போல் கழிதல், உடல் வீக்கமடைதல், குளிர்தல், சோகமுறல், வாந்தியுண்டாதல் முதலான குறிகுணங்களைப் பெற்றிருக்கும்.

வசம்புக்குடிநீர்

வசம்பு (சுட்டது)	1 வராகன்
சடாமாஞ்சில்	,,
பூண்டு	,,
சுக்கு	,,
மிளகு	,,
அரிசித்திப்பிலி	,,
ஓமம்	,,
கருஞ்சீரகம்	,,
ஆமையோட்டுக்கரி	,,

மேற்கூறிய சரக்குகளில் வெள்ளைப்பூண்டின் திரிகளைச் சிவக்க வறுத்தும், ஓமம், கருஞ்சீரகம் இரண்டையும் சிவக்க பொரித்து மற்றவைகளை நறுக்கியும், மொத்த சரக்கினெடைக்கு எட்டு பங்கு தண்ணீர்விட்டு ஒரு பங்காகும்வரைக் காய்ச்சி வடித்திறுத்தெடுக்க குடிநீர் ஆகும்.

இக்குடிநீரில் சங்களவு காலை, மாலை கொடுத்துவர செரியா மாந்தம் குணமாகும்.

வேலிப்பருத்தி

உத்தாமணி இலையைப் பிட்டவியலாக்கி அதிலிருந்து எடுத்த சாறு தேக்கரண்டி அளவெடுத்து அதனுடன் மிளகு, சுட்டவசம்பு, பூண்டு இவைகளை தனித்தனியே தூளாக்கி குன்றியளவு சேர்த்து சிறிதுநெய் சேர்த்துக் கொடுக்க, செரியாமாந்தம் குணமாகும். இத்துடன் பெருந்தும்பைச்சாறு, இஞ்சிச்சாறுகளையும் கூட்டிக்கொடுக்கலாம்.

8. பால்மாந்தம்

இந்நோய் கண்டால் கண் குழிதல், அறிவு மயங்குதல், கோழை உண்டாதல், வயிறு புண்போல் வலித்தல், புளித்த நாற்றத்துடன் பேதியாதல், வயிறு உப்பலுடன் பால் போன்றும், திரிந்த பால் போன்றும் பேதியாதல், அருந்திய பாலைப் பாலாகவே வாந்தி எடுத்தல், தலை தூக்கமுடியாது மயக்கமுறல், முக்கம் வேறுபாடடைதல் முதலாகிய குறிகுணங்களைப் பெற்றிருக்கும்.

உத்தாமணிக் குடிநீர்

உத்தாமணி இலை	1 பிடி
குட்டிவிளா இலை	,,
சுக்கு	5 கிராம்
வசம்பு	,,
பூண்டு	,,
மிளகு	,,
சடாமாஞ்சில்	,,

மேற்கூறிய சரக்குகளில் உத்தாமணி இலை, குட்டிவிளா இலை இரண்டையும் குறுக அரிந்து சட்டியிலிட்டுச் சிவக்க வறுத்து மற்றையசரக்குகளைச் சிறுக நறுக்கித் தண்ணீர்விட்டு எட்டிலொரு பங்காகும்வரைக் காய்ச்சி வடித்திறுக்கக் குடிநீராகும். இக்குடிநீருடன் ஆமைவோட்டுப் பற்பம் நோய்க்குத் தக்கவாறு கால் முதல் அரைகுன்றி எடை கூட்டி 3அல்லது 5 நாட்கள் காலை, மாலை கொடுக்கக் குணமாகும்.

9. முக்கு மாந்தம்

இந்நோய் கண்டால் சீழும் மலமுமாக முக்கி முக்கிக் கழிதல் தீடீரென சுரங்காணல், கணுக்கால் வீக்கமடைதல், சோர்வுடன் தசை, தோல், எலும்பு, நரம்பு, விதும்பி உருகி உடலை உருக்கல் முதலாகிய குறிகுணங்களைப் பெற்றிருக்கும்

ஓமம்	35 கிராம்
திப்பிலி	,,
மிளகு	,,
வெள்ளுள்ளி	,,

மேற்கூறியவைகளைப் பொன்னிறமாக வறுத்து நன்றாக இடித்துத் தூளாக்கி வடித்த சூரணத்துடன் ஆமை ஓட்டுப் பற்பம், அன்னபேதி செந்தூரம் இவைகளை சமனெடை எடுத்து வெள்ளைத் துணியில் முடிந்து சட்டியிலிட்டு நாழி நீர்விட்டு எட்டிலொரு பங்காகும்வரைக் காய்ச்சி பிறகு அம்முடிச்சை அவிழ்த்து இக்குடிநீரையே விட்டரைத்து காலை, மாலை கொடுத்துவர மாந்தநோய் குணமாகும்.

ஆமையோட்டுப் பற்பம், அன்னபேதிச் செந்தூரம் இரண்டையும் சமனெடை எடுத்துத் தேன்விட்டுக் குழைத்து மூன்று தினங்கொடுக்க மாந்தநோய் குணமாகும்.

கோழிமுட்டைத் தைலத்தில் தேன்விட்டுக் குழைத்து மூன்றுதினங்கொடுக்க மாந்தநோய் குணமாகும்.

10. ஊது மாந்தம்

இந்நோய் கண்டால் உடல் முழுவதும் பெருத்துக் காணல், வாந்தியுண்டாதல், கழிச்சலுண்டாதல், மூடல் இரைதல் தொடையில் வலியுண்டாதல், சுரங்காணல், உடல் கடுத்தல் முதலான குறிகுணங்களைப் பெற்றிருக்கும்.

ஊதுமாந்த மாத்திரை

பொரித்த வெங்காரம்	17½ கிராம்
கடுகுரோகிணி	
கருஞ்சீரகம்	

மேற்கூறிய சரக்குகளை நன்றாக இடித்துத் தூள்செய்து வடிகட்டிக் குழி அம்மியிலிட்டுத் தாய்ப்பாலைவிட்டு மெழுகு

பதமாகும்வரை நெகிழ அரைத்து மிளகளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: *1* மாத்திரை காலை, மாலை.

துணை மருந்து: தாய்ப்பால்.

தீரும்நோய்: ஊதுமாந்தம்.

பத்தியம்: (குழந்தையின் தாய்) இச்சாபத்தியம்.

ஊதுமாந்த மாத்திரை (வேறு)

நொச்சிக்கொழுந்து	17½ கிராம்
நேர்வாளம் (சுத்திசெய்தது)	,,
கடுக்காய்த்தோல்	,,
மிளகு	,,
ஓமம்	,,

மேற்கூறிய சரக்குகளை குழியம்மியிலிட்டு நன்றாக நெகிழ மயனமாகும் வரை அரைத்து நொச்சிச் சாறுவிட்டு மீண்டும் அரைத்து உளுந்தளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: *1* முதல் *2* மாத்திரை (காலையில் மட்டும்)

தீரும்நோய்: மாந்த நோய்கள்.

பத்தியம்: குழந்தைக்கு ஒன்றிரண்டு முறை பேதி கண்டதும் தாய் சுடுகஞ்சி அருந்த வேண்டும்.

11. நீர்க்கண மாந்தம்

இந்நோய் கண்டால் இருமலுண்டாதல், மூக்கில் நீர்வடிதல், விட்டுவிட்டுச் சுரம் காணுதல், வயிறு பொருமலுடன் இரைதல், பலவிதமாக பேதியாதல், கண் சொருகுதல், உடல் சோர்தல், மயக்கம் உண்டாதல் முதலான குறிகுணங்களைப் பெற்றிருக்கும்.

அமிர்தாதி மாத்திரை

அதிமதுரம்	9 கிராம்
சண்பகப்பூ	,,
ஏலரிசி	,,
கோரோசனை	,,
வெட்டிவேர்	,,
கோஷ்டம்	,,
சாதிப்பத்திரி	,,
மாசிப்பத்திரி	,,
விலாமிச்சம்வேர்	,,
இலவங்கம்	,,

மேற்கூறிய சரக்குகளில் கோரோசனை நீங்கலாக மற்றவைகளைச் சுத்தப்படுத்தி உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி குழியம்மியிலிட்டு அதனுடன் கோரோசனையும் சேர்த்து ஆதொண்டை இலைச்சாறுவிட்டு 12 மணி நேரம் நன்றாக நெகிழ அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: 1 முதல் 2 மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

தீரும்நோய்: நீர்க்கண மாந்தம் முதல் எண்வகை மாந்தம், குடற்படுவன், நீர்ப்பாடு, கர்ப்பப்பாடு, நாவறட்சி, சூலையெரிவு, தோடம் ஆகியன.

துணை மருந்து: தேன், தாய்ப்பால்.

பத்தியம்: (குழந்தையின் தாய்) இச்சா3. பத்தியம்.

3. கணம் [கணை]

கணம் (கணை) என்றால் கற்பச்சூடு என்பது பொருள். இந்நோய் குழந்தைகள் பால் குடித்து உணவு உட்கொள்ளும் குழந்தைப் பருவநோய். இந்நோயானது குழந்தைகளின் 3-வது ஆண்டு முதல் (3வயது) 7 ஆண்டுகள் வரைக்கும் கொடுமைப்படுத்தக்கூடிய நோய்.

கணம் வரும் விதம்: மிதமிஞ்சிய சூட்டினால் கபம் அதிகமாகச் சேர்ந்தும், துயரமடைந்தும் பல தண்ணீர்களைக் குடித்தும், நீர்க்கோர்வை ஏற்பட்டும், (ஜலதோஷம் அணுகியும்) பசியுடன் இருக்கும் தாயின் பாலை உட்கொண்ட குழந்தைகளுக்கும் இந்நோய் வரும்.

சில தாய்மார்கள் மிதமிஞ்சிய கலவியினால் தாய்ப்பால் கேடடைந்து போகிறது. அந்தப்பாலைக் குழந்தைகள் உட்கொள்வதாலும் இந்நோய் வரும்.

கணங்கட்பேர் விரித்தறையக் கேள் நன்றாகக்
கணவாத கணம்பித்த கணங் குளிர்ந்த
மணமான சேத்மகணம் பிள்ளைகட்கு
மாந்தகணம் அதிற்பிரிவு ஐந்தாம் இப்பால்
துணமாநீர்க் கணம்பிரளிக் கணமு நல்ல
சூலி கணஞ் சுழிகண மகா கணந்தான்
குணமான ஊதுகணம் வரட்க ணந்தான்
கொதிப்புகணம் வீக்ககணம் இன்னங் கேளே,
கேளே நீ பிறக்கணமும் அந்த கன்தன்
கண மும்மந் தார கணம் எரிக ணந்தான்
மூளே நீ ராமகணம் ஆமகண மந்த
முக்குகணம் மூலகணம் போரா மத்தின்
வாளேசிங் கியோடிரைத்த கணமாம் எல்லாம்
வகுத்தரைத்த திருபஃது நான்கு மாகக்
கோளேது இவைதானே மருந்து நூலின்
குறிப்பறிந்தார்க் கல்லாமல் மற்றோர்க் கேதே.

கணங்களின் எண்ணிக்கை: கணமானது 1, வாதகணம் 2, பித்தகணம் 3, சேத்துமகணம் 4, மாந்தகணம் 5, நீர்க்கணம் 6, பிரளிக்கணம் 7, சூலிகணம் 8, சுழிகணம் 9, மகாகணம் 10, ஊதுகணம் 11, வரள்கணம் 12, கொதிப்புக் கணம்13, வீக்கக்கணம் 14, பிறக்கணம் 15, அந்தகக்கணம் 16, மந்தாரக்கணம் 17, எரிகணம் 18, நீராமகணம் 19, ஆமகணம் 20, முக்குகணம் 21, மூலகணம் 22, பேராமகணம் 23, இரத்தகணம்24, சிங்கிமாந்தகணம் என இருபத்தி நான்குவகையாகும்.

இக்கணையானது 12 ஆண்டுகள் வரை குழந்தைகளுக்கு வரும்.

இந்நோயானது குழந்தைகள் மாந்த நோயால் பலமுறை வருந்தி, அம்மாந்தம் குணமாகாததால் அது முதிர்ந்து உடலில் சேர்ந்து சுற்றிக்கொண்டே இருத்தலினால் இந்நோய் உண்டாகிறது.

குறிகுணம்: குழந்தைகள் உடல் கனத்து, புகைந்து இருமும். இரைப்பு, நாவரட்சி, தாகம், சுரம், பசிமாந்தம், நீர்ச்சுருக்கு ஏற்பட்டு மலம் கழியும், கண்களின் நிறம் இயற்கை நிறத்திற்கு மாறி இருத்தல், கண்விருண்டு பார்த்தல், உச்சியில் குழிவிழுதல், தொண்டைக் கம்மலாய் பேசுதல், முகத்தில் அற்பவேர்வை உண்டாகி பேதியாகும்.

இந்நோயானது பித்தம் அதிகரித்து வாயுவைத் தழுவி அழுத்திக்கொள்ளும். அதனால் பித்தம் தணிய வழி இல்லாமல் குழந்தைகளுக்கு சூடு ஏற்பட்டு உடல் கணகணப்பு காணும். இதனால் குழந்தை தாயை விட்டு விடாமல் பிடித்துக்கொள்ளுதல், வாய் உலர்தல், நீர்வேட்கை, பேதி உண்டாகி மலம் எண்ணெய் கசிவுள்ளதாக இருத்தல், ஊனைக் கழுவின நீரின் நிறம் போலவும், மலவாயிலில் நீர் கசியும்.

சில குழந்தைகளுக்கு மேற்சொல்லப்பட்ட பேதியாத லன்றி சீதமாயும், இரத்தமாயும், இரண்டும் கலந்தும் பேதியாகும். சில குழந்தைகளுக்கு திரிந்துபோன பால் போன்று மலம் கழியும். கைகள், கால்கள், முகம் இவைகள் கருத்து சிலசமயம் எரிந்தும், குளிர்ந்தும், சூடு ஏற்பட்டு இருமல் முதலியவை உண்டாகும்.

இந்நோயில் குழந்தைகளின் உடம்பு சுரமடித்தாற்போல் அனல் வீசும். அதுவும் உட்சுரமாக வீசும். இச்சுரத்தினால் மலமானது உள் தங்கி மார்பு கூடுபோல் எழும்பி, முகம் மிகவும் வற்றி வாய் அதிக நாற்றம் ஏற்பட்டு மலம் தீய்ந்து நீர்ச்சுருங்கி சுரம் காயும். இக்குறி குணங்களால் குழந்தைகளுக்கு மயக்கமுண்டாகி நாவரட்சி ஏற்பட்டு பசித்தீ குறைந்து உட்சுரம் காய்ந்து பன்னிரண்டாண்டுகள் வரை தொடரும்.

1.வாத கணத்தின் குணம்: உடல் கனத்துக் குழந்தை புகைந்து இருமும், இரைப்பு, நாவரட்சி, நீர்வேட்கை, சுரம், பசிமந்தம், நீர்ச்சுருக்கம் ஏற்பட்டு மலம் கழியும்.

2. பித்த கணத்தின் குணம்: குழந்தை மஞ்சளாக கழியும். நாக்கும் கடைவாயும் புண்ணாகும். உடல் எரிச்சல், சுரம், தலை கிறுகிறுப்பு, மயக்கம் காணும்.

3. கப கணத்தின் குணம்: சரீரத்தில் தினவும், சொரியும், கை கால்களில் வீக்கம் தோன்றும். வாய் நாற்றம் உண்டாகும். சுரம் காயும், மேல்வாய், கீழ்வாய் இரண்டும் வெடித்து புண் ஏற்படும்.

4. மாந்த கணத்தின் குணம்: குழந்தையின் உடல் இளைக்கும், வயிறு பொருமல், வாந்தி வாய் நீர் ஊறல், தலைச்சுற்றல், வயிறு இரைச்சலுடன் பச்சையாக பேதி காணல், விழி சுழன்று, நாக்கு உலர்ந்து, நடப்பதில் அசதி ஏற்பட்டு வருந்தும். இந்நோய் முதல் நான்கு நாட்கள் கொடுமையாக இருக்கும்.

5. நீர்க்கணத்தின் குணம்: குழந்தை இருமும், மூக்கில் நீர்வடியும், இடையில் சுரம் ஏற்பட்டு, வயிறு பொருமி, இரைந்து பலவிதமாகக் கழிச்சல், தலைப்புரட்டல் ஏற்பட்டு உடம்பு, முகம், கண் சோர்வடையும்.

6. பிரளிக் கணத்தின் குணம்: வயிறு பொருமி ஏப்பம் உண்டாகும். உடல் புண்போல் நொந்து குழந்தை துடித்து ஏங்கி அழும். மாவுபோல் மலம் கழியும். மலம் கட்டி வயிறு பொருமி அடிக்கடி முக்கும். குடலைப் புரட்டி வலிக்கும். முலை உண்ணாது. வாயுலரும், மேல்மூச்சு இளைப்பு காணும். முத்து முத்தாக மூக்கில் நீர் வடியும். முகத்தில் மஞ்சள் மணக்கும்.

7. சூலி கணத்தின் குணம்: நெஞ்சு, வாய், தொண்டை, நாக்கு இவைகளில் புண் ஏற்பட்டு இருமல், சுவாசம், வயிற்றுப்பொருமல் கண்டு குழந்தை பால் குடிக்காது. முகம் மாறும்.

8. மகாகணம்: குழந்தைகளின் முகம் புறங்கால், புறங்கை மினுமினுப்புடன் கண்கள் வெளுத்து, உடல் வெதும்பும், நாக்கு, உதடு புண்ணாக இருக்கும். குழந்தை மயங்கும்.

9. ஊது கணத்தின் குணம்: ஊதுகணத்தில் குழந்தையின் உடல் கண், கால் வீக்கம் ஏற்பட்டு புண்ணாகி சுரம் காயும். உணவு தண்ணீர் செல்லாது, கால், கை சேர்ந்து சுவாசம் மிகும்.

10. சுழி கணத்தின் குறிகுணம்: தளிர்சுரம், சுவாசம் காணும். கண் பஞ்சடைந்து உச்சி குழியும், நெஞ்சும் எரியும். உடல் நொந்து குழந்தை அலறும், வேறு சுவசம், இருமல் காணும், முகம், மார்பு, புடைத்துக் காணும். வயிறு, நெஞ்சு, நாக்கு, தொண்டை வெந்து புண்ணாகும். குழந்தை பால் உண்ணாது அலறி அழும், கால் குளிரும், வயிறு பொருமும்,

சுரங்காயும், கண்சொருகும், நாக்கு வரளும், நெஞ்சில் கபங்கட்டி இருமல், இளைப்பு, மயக்கம் ஏற்பட்டு வாயில் நுரைதள்ளும், வாந்தி, ஏற்படும். சுரங்காயும், முகம் சுழித்து மஞ்சள்போலிருக்கும். தலைவலி முதலிய குறிகுணங்களைப் பெற்றிருக்கும்.

11. வரள் கணத்தின் குணம்: உடல் முழுவதும், வெதும்புதும், நெஞ்சு துடிக்கும், குழந்தை புகைந்து இருமும், நாக்கு சுரக்கும், வயிறு இரையும், நாக்கு மஞ்சளாகவும், வெண்மையாகவும், இருப்பதுடன் அதன் நடுவில் முட்களும், வெடிப்பும் தோன்றும்.இருமல், சளி மிகுந்து தூக்கம், மயக்கம் காணும். முகம் மஞ்சள் பூத்திருக்கும். உடல் வற்றும்.

12. கொதிப்புக் கணத்தின் குணம்: கொதிப்பு கணத்தில் நெஞ்சும், விலாவும் கொதிக்கும், நெற்றி வியர்க்கும், கண்கள் வெளுத்து பஞ்சுபோல் இருக்கும்,இருமல், தலைவலி ஏற்பட்டு குழந்தையின் குரல் கம்மும்.

13. அந்தகக் கணத்தின் குணம்: மூளையில் சூடு ஏறி உடல் வெதும்பி நாக்கு உலர்ந்து, விழிகள் வெளுத்து, முகம் மஞ்சள் நிறமாக இருக்கும்.

14. வீக்கக் கணத்தின் குறிகுணம்: உடல் முழுமையும், அதிகமாகக் காய்ந்து, உடம்பில் சிலவிடங்களில் சிவந்து காணும், செரியாமல் மலம் கட்டும், சூட்டினால் உடல் முழுமையும் வீக்கம் ஏற்படும் என்பவைகளே வீக்க கணத்தின் குறிகுணங்களாகும்.

15. பிறக்கணத்தின் குறிகுணம்: மலம் பச்சையாகவும், தயிர்போல் வெள்ளைநிறமாகவும், கட்டியும் நீருமாகவாவது வயிறு உப்பி, உப்பி பேதியாகும். தூக்கம் அதிகமாகி பால் உண்ணும். ஆனால் குடித்த பாலை உடனே கக்கிவிடும். உடல் காய்தல், கண் சொருகுதல், கை கால்கள்

சில்லென்றிருத்தல், தலை புரட்டுதல் என்னும் இக்குறி குணங்களைப் பெற்றிருக்கும்.

16. மந்தாரக்கணத்தின் குறிகுணங்கள்: மந்தாரக் கணத்தில் வயிறு ஊதி சரம், மயக்கம் ஏற்பட்டு சுவாசம் காணும்.

17. எரிகணத்தின் குறிகுணங்கள்: உடல் முழுமையும் எரியும், வாய் வழியாக சுவாசம் போகும். வாயில் நீர் வடியும். குழந்தை அலறி அழும், நித்திரை கொள்ளாது.

18. நீராம கணத்தின் குணம்: தண்ணீரும், சீதமாயும், பச்சையும், மஞ்சளாயும் குழந்தை கழியும்.கண்ணில் நீரும், பீளையும் வடியும் மயக்கம் ஏற்படும். கடுப்பு காணும்.

19. ஆமகணத்தின் குணம்: ஒவ்வொரு சாமத்திலும் குழந்தையின் உடல்வெதும்பி நாளுக்கு நாள் சரீரம் வற்றி தாகம் அதிகமாகும். பசி மந்திக்கும், வயிறு பொருமி இரைந்து கழியும், சுவாசம் மிகும். கால் குளிரும், குழந்தை கண் விழியாது அயரும், திடுக்கிட்டெழுந்து சீறியழும், மூக்குலரும், புருவஞ் சுழிக்கும்.

20. முக்குக் கணத்தின் குணம்: குழந்தை அடிக்கடி வாந்தி பண்ணும், முலையுண்ணாது சோர்வடையும், மலத்தில் இரத்தம் விழும். நாக்கு வேகும், சுரம், தலைவலி, நடுக்கம், வாந்தி, நாவரட்சி தாகங்காணும், சந்துப் பொருத்தங்கள் உளையும்,முக்கிச் சீதமும், மலமுமாய்க் கழியும். ஆசனவாய்க்கடுத்து தீப்போல எரியும். அடித்தள்ளும், சரீரம் கருத்து வற்றும்.

21. மூல கணம்: வாதமும், பித்தமும் அதிகரித்து குழந்தை சீதமும், இரத்தமுமாய்க் கழியும், ஆசனம் கருத்து உளையும், காய்ச்சல், வயிற்றிரைச்சல், விடாத்தலைவலி ஏற்பட்டு முகம் கருத்து சிவக்கும். அடித்தள்ளும்.

22. பேராம கணத்தின் குறிகுணம்: பேராம கணத்தில் குழந்தைகளின் கை, கால் குளிரும், கண் வளையமாகும், சுரம் காயும், வாந்தியுண்டாகும். திடுக்கிட்டு ஏங்கும். வயிறு பொருமிக் கழியும், சோறும், முலையும் உண்ணாது, சீறி வெருவிப் பார்க்கும்.

23. இரத்த கணத்தின் குணம்: குழந்தை அடிக்கடி இருமும், கழிச்சல், இரத்தங்கடுப்புக் காணும். இடுப்பும், துடையும் உளையும், சுரங்காயும், நாடி அயர்ந்து உடல் வாடும், ஆகாரம் செல்லாது, நாடி அயர்ந்து உடல் வாடும். ஆகாரம் செல்லாது.

24. சிங்கி மாந்த கணத்தின் குறிகுணம்: உந்தியிலிருந்து ஒருவகை அனல் மேலெழும்புவதால், ஈரல் வெந்து புண்பட்டு அதனால் கடினமாக மேல் சுவாசமும், இழுப்பும் உண்டாகி சரீரம் வரட்சி அடைந்து, சுரம் வீசும். சுவாசத் தடங்கல் ஏற்பட்டு மயக்கம் வரும். இந்நோயானது குழந்தைகளை பதிமூன்று வயது வரையிலும் வதைக்கும்.

மாந்தம் 18க்கும், கணம் (கணை) 28க்கும்

பொன்னாங்காணி எண்ணெய்

1. பொன்னாங்காணியிலைச்சாறு	50 மில்லி
2. துளசியிலைச்சாறு	,,
3. தகரையிலைச்சாறு	,,
4. கீழ்க்காய்நெல்லியிலைச்சாறு	,,
5. வெண்ணொச்சியிலைச்சாறு	,,
6. சின்னியிலைச்சாறு	,,
7. நாயுருவியிலைச்சாறு	,,
8. அம்மான் பச்சரிசியிலைச்சாறு	,,
9. கருநொச்சியிலைச்சாறு	,,
10. நாவல் கொழுந்தின் சாறு	,,
11. ஆவாரைக் கொழுந்தின் சாறு	,,
12. வேப்பங்கொழுந்தின் சாறு	,,

13. சூரைக்கொழுந்தின் சாறு	50 மில்லி
14. முடக்கொற்றான் கொழுந்துச்சாறு	,,
15. முருங்கையிலைச்சாறு	,,
16. புங்கன் இலைச்சாறு	,,
17. ஓரிதழ் தாமரைச்சாறு	,,
18. புளியாரைச்சாறு	,,
19. வல்லாரைச்சாறு	,,
20. சிறுபுள்ளாடிச்சாறு	,,
21. நரிபயற்றங்கொடிச்சாறு	,,
22. இண்டந்தண்டுச்சாறு	,,
23. முசுமுசுக்கைச்சாறு	,,
24. அகத்திப் பழுப்பின் சாறு	,,
25. சீந்தில்கொடிச் சாறு	,,
26. ஆடாதொடையிலைச்சாறு	,,
27. ஆடுதின்னாப்பாளைச்சாறு	,,
28. விட்ணுகரந்தைச்சாறு	,,
29. முக்காவேளைச்சாறு	,,
30. நல்லவேளைச்சாறு	,,
31. வெள்ளைகாக்கரட்டான் சாறு	,,
32. வெற்றிலைச்சாறு	,,
33. ஆவாரை வேர்	35 கிராம்
34. விடதாரிவேர்	,,
35. நிலக்குமிழ் வேர்	,,
36. சிறுகீரைவேர்	,,
37. வில்வவேர்	,,
38. உத்தாமணிவேர்	,,
39. மிளகு தக்காளிவேர்	,,
40. தைவேளைவேர்	,,
41. நாய்வேளை வேர்	,,
42. சங்கன்வேர்	,,
43. கண்டங்கத்திரிவேர்	,,
44. தூதுவளைவேர்	,,
45. குட்டிவிலாவேர்	,,
46. சுங்கன்குப்பி வேர்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் ஒன்று முதல் முப்பத்திரண்டு வரையிலுள்ள சாறுகளை ஒரு பாத்திரத்திலிட்டு வைத்துக்கொள்ளவும்.

33 முதல் 46 வரையிலுள்ள சரக்குகளை ஒன்றிரண்டாக நன்கு சதைத்து ஒரு பாத்திரத்திலிட்டு (16)பதினாறு லிட்டர் தண்ணீர் விட்டு அடுப்பிலிட்டு எரித்து 2 லிட்டராக வற்றவைத்து வடிகட்டி மேற்படி சாற்றுடன் கலந்து வைக்கவும்.

ஆமை ஓடு	5 கிராம்
ஓமம்	,,
கடல் நுரை	,,
சீரகம்	,,
திப்பிலி	,,
கடுகுரோகிணி	,,
கிராம்பு	,,
கருஞ்சீரகம்	,,
பாப்படாகம்	,,
மணிப்புங்கள் என்னும் பூந்திக்கொட்டை	,,
வசம்பு	,,
பெருங்காயம்	,,
செங்கத்தாரிப்பட்டை	,,

இவைகளை உரலிலிட்டு நன்கு இடித்து தூள்செய்து சாற்றுடன் கலந்து விளக்கெண்ணெய் 2 லிட்டர் சேர்த்து அடுப்பிலிட்டு சிறுதீயிட்டு எரித்து மெழுகு பதத்தில் காய்ச்சி வடித்து பத்திரப்படுத்தவும்.

அளவு: இரண்டு துட்டெடை (காலை மாலை இருவேளை) பத்து நாட்களுக்கு ஒருமுறை 5 முதல் 7நாட்களுக்குத் தொடர்ந்து சரீரவன்மைக்கேற்ப கொடுக்கவும்.

தீரும்நோய்கள்: சகலவிதமான (கண்ணை) கணமும் நோய்களும் குணமாகும்.

பத்தியம்: மீன், கருவாடு, இறைச்சி, புளி, கரப்பான், பண்டங்கள், வாயு பண்டங்கள் நீக்கி மிளகு ரசம் சோறு சாப்பிட குணமாகும்.

கணச்சூடு தணிய வல்லாரை எண்ணெய்

சிற்றாமணக்கு எண்ணெய்	2 லிட்டர்
வல்லாரைச்சாறு	,,
பசுவின்பால்	,,
வெந்தயம்	,,
உரித்த பூண்டு	50 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளின் எண்ணெயையும், சாற்றையும் ஒன்றாகக் கலந்து வைத்துக்கொண்டு வெந்தயத்தையும், பூண்டையும், பசுவின்பால் விட்டரைத்து சாற்றுடன் கலந்து பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி சிறுதீயிட்டெரித்து மெழுகு பதத்தில் பக்குவமாகக் காய்ச்சி வடித்து 200 கிராம் சர்க்கரை சேர்த்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: இரண்டு துட்டெடை (காலையில் மட்டும்) 5 முதல் 10 நாட்கள் கொடுக்கவும்.

தீரும்நோய்: குழந்தைகளுக்கு ஏற்படும் கணச்சூடு யாவும் குணமாகி உடல் வன்மையுறும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவும்.

கணை (கணம்) 24-கிற்கும்

சித்திரமூல எண்ணெய்

சித்திரமூலவேர்ப்பட்டை	26 கிராம்
குன்றிவேர்	,,
சங்கன்வேர்ப்பட்டை	,,
முல்லைவேர்	,,
முன்னைவேர்	,,
சிற்றாமல்லிவேர்	,,

பேராமல்லிவேர்	26 கிராம்
காட்டகத்திவேர்	,,
ஆவாரைவேர்	,,
பொன்னாவாரைவேர்	,,
மணத்தக்காளி வேர்	,,
கொள்ளுக்காய் வேளைவேர்	,,

மேற்கூறப்பெற்றவைகளை மூன்று நாட்கள் உலர்த்தி பொடிசெய்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 லிட்டர் தண்ணீர் ஊற்றி எட்டொன்றாகக் காய்ச்சி வடித்து எடுத்த நீருடன்,

புனல் முருங்கைச்சாறு	100 மில்லி
நத்தைச் சூரிசாறு	,,
நாய்வேளைச்சாறு	,,
சிறுகுறிஞ்சாச்சாறு	,,
பெருங்குறிஞ்சாச்சாறு	,,
நரிபயற்றங்கொடிச்சாறு	,,
நன்னாரிச்சாறு	,,
நீர் பிரம்மிச்சாறு	,,
தும்பைச்சாறு	,,
பொன்னாங்காணிச்சாறு	,,
முசுமுசுக்கைச்சாறு	,,
வேலைச்சாறு	,,

இச்சாறுகளை முன்னெடுத்த நீரில் ஊற்றி

வால் மிளகு	10 கிராம்
சடாமாஞ்சில்	,,
அக்ரகாரம்	,,
செண்பகப்பூ	,,
செவ்வியம்	,,
அதிமதுரம்	,,
கடுக்காய்த்தோல்	,,
சாதிக்காய்	,,
கிராம்பு	,,
கடுக்காய்ப்பூ	,,
சாதிக்கோஷ்டம்	,,

கர்க்கட சிங்கி	10 கிராம்
தோல்சீவின சுக்கு	,,
தான்றிக்காய்த்தோல்	,,

இவைகளை நன்கு இடித்துத் தூள்செய்து வடிகட்டி முன்பு வைத்துள்ள நீருடன் கலந்து விளக்கெண்ணெய் 4 லிட்டர் சேர்த்து அடுப்பிலேற்றி அதனுடன்,

தாளக பற்பம்	10 கிராம்
கந்தகப்பற்பம்	,,
வீர பற்பம்	,,
நேர்வாளம் (சுத்தி செய்தது)	,,
நாபி	,,
அப்பிரக செந்தூரம்	,,
சிலாசத்து பற்பம்	,,

புனுகு, கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் வகைக்கு இரண்டு கிராம் மேற்படி எண்ணெயுடன் சேர்த்து மெழுகு பதத்தில் காய்ச்சி வடித்த பத்திரப்படுத்தவும்.

அளவு: 6 குன்றி எடை (பெரியவர்களுக்கு) காலை ஒருவேளை மட்டும்.

பத்தியம்: இச்சாபத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

முக்கியம்: மேற்கூறப்பெற்றுள்ள எண்ணெயை குழந்தையின் தாய்க்குக் கொடுத்து மறுநாள் புளியை சுட்டு, உப்பை வறுத்து சேர்க்கவேண்டும்.

மருந்தின் அளவு: ஒருகுன்றி முதல் 2 குன்றி எடை.

மேலும் குழந்தையின் உடல் வன்மைக்கேற்ப கூட்டியும் குறைத்தும் கொடுக்கலாம்.

தீரும்நோய்: கணைச்சூடு யாவும் குணமாகும்.

கணைகளுக்கு (கணங்களுக்கு)

தும்மட்டிக்காய் எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய்	2 லிட்டர்
தும்மட்டிக்காய்ச்சாறு	250 மில்லி
மணித்தக்காளிச்சாறு	,,
வெங்காயச்சாறு	,,
நல்லவேளைச்சாறு	200 மில்லி

இவைகள் யாவற்றையும் ஒன்றுசேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு

வால் மிளகு	10 கிராம்
கஸ்தூரி மஞ்சள்	,,
வெந்தயம்	,,
சிற்றரத்தை	,,
பேரரத்தை	,,
கருஞ்சீரகம்	,,
சன்ன லவங்கப்பட்டை	,,
பெரிய லவங்கப்பட்டை	,,

ஆகியவற்றை இடித்துத் தூள்செய்து வடிகட்டி அதனுடன் சேர்த்து மெழுகு பதத்தில் எரித்து வடிகட்டி பத்திரப்படுத்தவும்.

தைலத்தை வடித்து கோரோசனை 2 கிராம் சேர்த்து வைக்கவும்.

அளவு: ½ முதல் 1 தேக்கரண்டி (காலையில் மட்டும்) 5 முதல் 7 நாட்கள் கொடுக்கவும்.

தீரும் நோய்: சகலவிதமான கணங்களும் நீங்கும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

தெற்கத்தி கணத்திற்கு

கோடாசுழித் தைலம்

வேப்பெண்ணெய்	1 லிட்டர்
வசம்பு	10 கிராம்
ஓமம்	10 கிராம்
வெள்ளுள்ளி	,,
பெருங்காயம்	,,
கிராம்பு	2 கிராம்
வேளைப்பூ	10 கிராம்
வெள்ளைக்காக்கரட்டான்வேர்	,,
வெற்றிலைச்சாறு	,,

மேற்கூறப்பெற்றுள்ள சரக்குகளில் 2 முதல் 8 வகையில் உள்ளவைகளை வெற்றிலைச் சாறுவிட்டு நன்கு நெகிழ அரைத்து வேப்பெண்ணெயுடன் சேர்த்து அடுப்பிலிட்டு சிறு தீயாக எரித்து மெழுகுபதத்தில் இறக்கி ரவி புடத்தில் ஆறுநாள் கடுகுடன் வைத்து எடுத்து வடித்து பத்திரப்படுத்தவும்.

அளவு: குழந்தைகளின் உடல் வன்மைக்கேற்ப அரை முதல் 1 பொட்டுக்கரண்டி (காலை, மாலை இருவேளை)

தீரும்நோய்: தெற்கத்தி கணை, மாந்தம் யாவும் குணமாகும்.

பத்தியம்: தாய்க்கும், குழந்தைக்கும் புளியில்லா ரசம், சாதம் கொடுக்கவேண்டும்.

சகல கணத்திற்கும் (கணைக்கு)

இண்டெண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய்	2 லிட்டர்
வெள்ளண்டுச்சாறு	½ லிட்டர்
தூதுவளைச்சாறு	அரை லிட்டர்
சங்கங்குப்பிச்சாறு	,,
வேலிப்பருத்திச்சாறு	,,
பூவரசம் பட்டைச்சாறு	,,
குப்பைமேனிச்சாறு	,,
ஆடாதொடைச்சாறு	,,
சாரணைச்சாறு	,,
பூலாவின்சாறு	,,
பிரம்மிச்சாறு	,,
வேளைச்சாறு	,,
கற்றாழைச்சாறு	,,
வெள்ளைக்காக்கரட்டான்சாறு	,,
சதப்பூ இலைச்சாறு	,,

மேற்கூறப்பெற்ற சாறுகளையும், எண்ணெயையும் ஒன்று சேர்த்து ஓர் பாத்திரத்திலிட்டு, கருஞ்சீரகம், ஓமம், உரித்தபூண்டு, சண்பகப்பூ, வசம்பு, சாதிக்காய், தான்றிக்காய் வகைக்கு 17½ கிராம் எடுத்து தண்ணீர்விட்டு நன்கு நெகிழ அரைத்துப்போட்டு அடுப்பிலிட்டு மணல் பருவத்தில் காய்ச்சி வடித்து கோரோசனை, குங்குமப்பூ, புனுகு ஒவ்வொன்றும் 2 கிராம் சேர்த்து பத்திரப்படுத்தவும்.

அளவு: ஒரு பொட்டுக்கரண்டி (நாள் ஒன்றுக்கு காலையில் ஒருவேளை மாத்திரம்) 7 முதல் 10 தினங்கள் தொடர்ந்து கொடுக்கவேண்டும்.

தீரும்நோய்: குழந்தைகளுக்கு ஏற்படும் சகலவிதமான கணங்களும் மாந்தமும் குணமாகும்.

4. கரப்பான் நோய்

வரும்வழி

கரப்பான் நோயை கர்ப்ப ஊறல் நோய் எனக்கூறுவர். மேலும் பெண் போகத்தாலும், மேகநோயினாலும், சோளம், கம்பு, வரகு, கார் அரிசி, வாழைக்காய், கத்திரிக்காய், மீன், கறி போன்ற உணவுப்பொருட்களை உண்பதாலும் இந்நோய் வரும்.

குறிகுணங்கள்

உடம்பின் தோலைப்பற்றிய நோய், சாதரணமாக குழந்தைகளுக்கு மூன்று முதல் ஏழு வயது வரைக்கும் உண்டாகக்கூடியது இந்நோய்.

கரப்பான் நோயினால் உடலில் திமிர், தினவு, சொறி, புண், தடிப்பு, வெடிப்பு, நீர்க்கசிவு போன்ற குறிகுணங்களை உண்டாக்கி, உடலின் இயற்கை நிறத்தை வேறுபடுத்தும்.

கரப்பான் நோய் 18 வகைப்படும். 1. வாதகரப்பான், 2. பித்தக்கரப்பான், 3. கபக்கரப்பான், 4. அரிகரப்பான், 5. ஊதுகரப்பான், 6. சூலைகரப்பான், 7. வெடிக்கரப்பான், 8. மண்டைக்கரப்பான், 9. பொரி கரப்பான், 10. சட்டை கரப்பான், 11. ஓடு கரப்பான், 12. கருங்கரப்பான், 13. செங்கரப்பான், 14. கொள்ளிக்கரப்பான், 15. தோடகரப்பான், 16. வாலை(பாலை) கரப்பான், 17. வரள் கரப்பான், 18. வீங்கு கரப்பான் ஆகியவைகளாகும்.

வாதகரப்பான் – குறிகுணம்: உடலில் ஆங்காங் குள்ள நரம்புகளிற் சில திடீரெனத்தெறித்தல், உடல் முழுவதும் வீங்குதல், அடிக்கடி உடம்பைத் திமிர்த்து முறுக்குதல், கடுத்தல் இவை பொறுக்கமுடியாமல் அழுதல், உடல்மேல் நெற்பொரியை இரைத்தாற்போல் தலைவிரித்த புண்கள் உண்டாதல், சில நாட்கள் அப்புண்கள் வெடித்து

இரத்தமும், சீதமுமாய் பொங்கும் நாக்கு வரண்டு பேசவும், உண்ணவும் முடியாதபடி வலியை உண்டாக்கும். இக்குறிகுணங்கள் ஏற்படின் வாத கரப்பான் என அறிதல் வேண்டும்.

குறிப்பு: இந்நோயுற்ற குழந்தைகளுக்கு மலச்சிக்கல் ஏற்பட்டு மலம் கழியாது. ஆகையால் குழந்தையை அடிக்கடி கண்காணித்து மலத்தைக் கழிப்பதற்கு வேண்டிய உபாயங்களைச் செய்தல்வேண்டும்.

பித்தகரப்பான்–குறிகுணம்: இந்நோயுற்ற குழந்தைகளுக்கு தலைநோய், சுரம், அரிப்பு, வாந்தி காணும், உடல் சிவந்து காணும், நீர் சிவந்து இறங்கும்.

கப கரப்பான்–குறிகுணம்: சேத்தும கரப்பான் பீடிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மார்பிலும், நெஞ்சிலும் புண் ஏற்பட்டு பேசமுடியாமல் தினமும் தலை அசைந்து கொண்டே இருக்கும். வாய் பேசமுடியாதபடி புண்கள் உண்டாகி நீர் கசியும்.

அரிகரப்பான்–குறிகுணம்: இந்நோயானது குழந்தைகளின் மர்ம இடங்களில் ஆறாத விரணங்கள் ஏற்பட்டு அரிப்பு உண்டாகி, உடல் உருவத்தை மாற்றிவிடும். இருதொடைகளின் இடையிலும் மிகுந்த விரணம் உண்டாகி அதில் நீர்வடியும், நாட்பட இருந்து தசை கரைந்து வலி உண்டாகி உடல் வாடும்.

ஊதுகரப்பான்–குறிகுணம்: ஊது கரப்பானில் குளிர் காய்ச்சல் ஏற்பட்டு கட்டிகள் உண்டாகும். உடல் பூதம்போல் வீங்கி மூக்கில் புண் உண்டாகி அரிப்பு ஏற்பட்டு உடல் செயலற்று காணும்.

சூலைகரப்பான்–குறிகுணம்: இந்நோயில் குழந்தைகளின் முகம் வாடி உடலின் பலவிதமான வெடிப்புகள் ஏற்பட்டு துடிக்கும். கை, கால், விரல்களை

நீட்டவும், மடக்கவும் முடியாது. மேலும் மயக்கமும் உண்டாகும்.

வெடிகரப்பான்-குறிகுணம்: இந்நோயில் உடல் முழுமையும் வீங்கும். அசைவுள்ள கீல்கள் தோறும் வீங்கி அதில் வெடிப்புகள் ஏற்பட்டு சுரம் காயும். நமைச்சல் தலைவலி முதலியவை ஏற்படும்.

மண்டைக்கரப்பான் -குறிகுணம்: மண்டையில் ஊறல் உண்டாகி அதைச்சொரிந்தவுடன் புண்ணாதல், காதில் அடிக்கடி சீழ் வடிந்து ஆறிவிடுதல், மூக்கில் நீர் பாய்தல், மூக்கில் நீர்வடிதல், குரல்வளையில் தினவெடுத்தல் முதலியன உண்டாகும்.

பொரிகரப்பான்-குறிகுணம்: உடம்பு முழுவதும் சிவந்த தடிப்புகளுண்டாதல் அவை நாள் செல்லச்செல்ல வெடித்தல், வெடித்தலில் அனல் வீசுதல், குளிர்தல், நீர்வேட்கை முதலிய குறிகுணங்கள் உண்டாகும்.

சட்டைக்கரப்பான்-குறிகுணம்: மூட்டுக்களில் வலி அதன் பிறகு உடம்பு முழுமையும் படர்ந்து நீர் கசிதல், தலைவலி, மலச்சிக்கல், உணவில் விருப்பமின்மை போன்ற குறிகுணங்களை உண்டாக்கும்.

ஓடுகரப்பான்-குறிகுணம்: மூட்டுக்களில் வீக்கம் ஏற்பட்டு பலத்த நோயுடன் நீட்டவும், மடக்கவும் முடியாமற் போதல், நரம்பு மண்டலம் முற்றும், வலி கரணல், மலச்சிக்கல், உடலில் தடிப்பு ஏற்பட்டு அரித்தல், பின்னர் வீங்கிக் காணல் முதலிய குறிகுணங்களை உண்டாக்கும்.

கருங்கரப்பான்-குறிகுணம்: சுரம்காய்தல், மார்பில் பால் நிரம்பி இருப்பினும் பால் உண்ணாமை, உடல் பலநிறமாக மாற்றம் அடைந்து பின்னர், கறுத்து காணல். உடலை முறுக்குதல், முகமும் பாதங்களும் ஊதிக்காணல் போன்ற குறிகுணங்களை உண்டாக்கும்.

செங்கரப்பான்–குறிகுணம்: உடல் கடுத்து, ஊதுதல், சுரம் இல்லாதிருந்தாலும், உடல் கனத்திருத்தல், உடல் முழுதும் தினவெடுத்துக் காணல், உடல் முழுதும் வியர்வை காணல், முகங்கறுத்துக்காணல், உடல் சிவந்து காணல் முதலிய குறிகுணங்களை உண்டாக்கும்.

கொள்ளிக்கரப்பான்–குறிகுணம்: வயிறு வீங்கிக் காணல், மலச்சிக்கல், இளைப்பு, விக்கல் முதலியன உண்டாகும். இந்நோயால் பீடிக்கப்பட்ட குழந்தைகள் பிழைப்பது அரிதாகும்.

தோடக்கரப்பான்–குறிகுணம்: உடல் நடுக்கத்துடன் காய்ச்சல் உண்டாதல், உடல் முழுவதும் புண்போல் வலி காணல், வாயில் கள் மணம் உண்டாதல், கழலைகள் கண்டு பூதம்போல் உடல் வீங்கிக் காணல், மூக்கில் அரிப்பு காணல் போன்ற குறிகுணங்கள் காணும்.

வாலை(பசலை)கரப்பான்–குறிகுணம்: கால்கள் கடுத்துக் காணல், கீல்கள், கண்டம், இவ்விடங்களில் வெடித்துப் புண்ணாதல், அதில் நீர்வடிந்து நாற்றம் காணல், குழந்தை இளைத்துக் காணல் போன்றவையாகும்.

வரள் கரப்பான்–குறிகுணம்: உடல் முழுவதும் கொப்புளங்கள் உண்டாகி தினமும் வெடித்து நீர் கசிந்து அரிப்பை உண்டாக்கும். தூக்கமின்மை.

வீங்கு கரப்பான்–குறிகுணம்: உடலில் துண்டு துண்டாக பிறகு அவைகள் புண்ணாகி நெருப்புப்பட்டால் எரிவது, பின்னர் குளிர்வது போன்ற குறிகுணங்களைக் காட்டிப் பின்னர் அதிலிருந்து நீர்வடியும்

மருத்துவம்

கரப்பானுக்கு மேற்பூச்சுத் தைலம்

நல்லெண்ணெய்	1 லிட்டர்
விடதாரி இலைச்சாறு	அரை லிட்டர்
இலைக்கள்ளிச்சாறு	,,
திறுகுக் கள்ளிச்சாறு	,,
சதுரக்கள்ளிச்சாறு	,,
மாவிலிங்க இலைச்சாறு	,,
சங்கு இலைச்சாறு	,,
கொம்மட்டிச்சாறு	,,
அவுரிச்சாறு	,,
குப்பைமேனிச்சாறு	,,
பொடுதலைச்சாறு	,,
நிலக்கடம்புச்சாறு	,,
ஆமணக்கு இலைச்சாறு	,,
சீரகம்	35 கிராம்
கடுகு	,,
கோரைக்கிழங்கு	,,
சுக்கு	,,
மிளகு	,,
திப்பிலி	,,
தேவதாரம்	,,
கருஞ்சீரகம்	,,
கார்போகரிசி	,,
குந்திருக்கம்	,,
குக்கில்	,,

மேற்கூறப்பட்ட சாறுகளையும், எண்ணெயையும் ஒன்றுசேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு, மற்றைய சரக்குகளை தண்ணீர்விட்டு நன்கு நெகிழ அரைத்து அதனுடன் கலந்து அடுப்பிலிட்டு சிறு தீயாக எரித்து மணல் பக்குவத்தில் இறக்கி, வடித்து பத்திரப்படுத்தவும்.

இத்தைலத்தை சகலவிதமான கரப்பான் நோய்களுக்கும் மேற்பூசி ஒருமணிநேரம் கழித்து, இலுப்பைப் புண்ணாக்கு, பச்சை மஞ்சளும் அரைத்து குளிக்கச் செய்ய நோய் தீரும்.

மேற்பூச்சுத் தைலம்

நல்லெண்ணெய்	1 லிட்டர்
வெற்றிலைச்சாறு	அரைலிட்டர்
மிளகு தக்காளிச்சாறு	,,
எருக்கம் பழுப்புச்சாறு	,,
வேளைச்சாறு	,,
சுக்கு	35 கிராம்
மிளகு	,,
திப்பிலி	,,
வசம்பு	50 கிராம்
விளாமிச்சம்வேர்	,,

மேற்கூறப்பட்ட சாறுகளையும், எண்ணையையும், ஒன்றுசேர்த்து ஒருபத்திரத்தில் இட்டு, மற்றைய சரக்குகளை தண்ணீர்விட்டு நன்கு நெகிழ அரைத்து அதனுடன் கலந்து அடுப்பிலிட்டு சிறு தீயாக எரித்து மணல் பருவத்தில் இறக்கி, வடித்து பத்திரப்படுத்தவும்.

இத்தைலத்தை சகலவிதமான கரப்பான் நோய்களுக்கும் மேற்பூசி ஒருமணி நேரம் கழித்து இலுப்பைப் பிண்ணாக்கு, பச்சை மஞ்சளும் அரைத்து குளிக்கச்செய்ய நோய் தீரும்.

உள்மருந்து புங்கம்பூ எண்ணெய்

புங்கம்பூ	15 கிராம்
புளிநரளை	15 கிராம்
வசம்பு	15 கிராம்
பூண்டு	15 கிராம்
கருஞ்சீரகம்	15 கிராம்
பாலைப்பட்டை	15 கிராம்
பசும்பால்	1 லிட்டர்

நன்னாரிவேர்	15 கிராம்
ஆமணக்கெண்ணெய்	1 லிட்டர்

ஒன்றுமுதல் ஏழுவரை சரக்குகளை பசும்பால்விட்டு நன்கு அரைத்து எடுத்து, பசும்பால் 1 லிட்டரையும், ஆமணக்கெண்ணெய் 1 லிட்டரையும் சேர்த்து அரைத்த கற்கத்தை அத்துடன் ஒன்றாகக் கலந்து பாத்திரத்தில் இட்டு எரித்து பதத்தில் வடித்து எடுத்துக்கொள்ளவும்.

காலையில் ஒரு உச்சிக் கரண்டி வீதம் மூன்று நாட்கள் கொடுத்துவர கரப்பான் தீரும்.

மேற்பூச்சு மருந்து - சாம்பிராணித் தைலம்

தேங்காய் எண்ணெய்	1 லிட்டர்
பாராத்து சாம்பிராணி	50 கிராம்
கட்டிக் கற்பூரம்	50 கிராம்
வேம்பாடம்பட்டை	10 கிராம்

மேற்கூறப்பட்ட சரக்குகளில் முதலில் சாம்பிராணியை எடுத்து குழி அம்மியில் இட்டு நன்கு நெகிழ அரைத்து, அதனுடன் தேங்காய் எண்ணெயை கொஞ்சம் கொஞ்சமாக விட்டு அரைக்கவும். பிறகு கட்டிக் கற்பூரத்தை பொடித்து மேற்படி குழி அம்மியில் இட்டு எல்லா தேங்காய் எண்ணெயையும் விட்டு அரைத்து ஒரு பாத்திரத்திலிட்டு வேம்பாடம் பட்டையைத் தூள்செய்து போட்டு வேடுகட்டி வெய்யிலில் நான்கு தினங்கள் வைத்து எடுத்துப் பத்திரப்படுத்தவும்.

இத்தைலத்தை மேற்பூசி ஒரு மணிநேரம் கழித்து இலுப்பைப் புண்ணாக்கு, பச்சை மஞ்சளை அரைத்துப் பூசி தேய்த்துக் குளிக்க கரப்பான் நோய்கள் தீரும்.

5. அச்சர வகுப்பு

குழந்தைகளுக்கு அச்சரம் என்றும் அக்கரம் என்றும் சொல்லப்படும் இந்நோயானது மூலாதாரத்தில் கிளம்பும் சூடானது நாவில் ஏறி, வேக்காளத்தை உண்டாக்கி, மாவைப்போல நீறுபூத்து அதன் காரணமாக குழந்தைக்கு பல துன்பங்களை நிலைக்கச்செய்து, உண்ணும் பால் முதலியவற்றை உண்ணவொட்டாமல் தடுக்கும் தன்மையுடையது. இந்நோய் மூன்று வகைப்படும் என்று சிலரும், ஏழுவகைப்படும் என்று சிலரும் கூறுவர்.

அச்சரத்தின் பொதுக்குறிகுணங்கள்

இந்நோயில் தலைவலி ஏற்பட்டு நாடி நடைத்துடிப்பு மிகவும் வேகமாகக் காணும். குலை வேக்காடு, நாவேக்காடு, குளிர்ந்து குளிர்ந்து உடல் வாடல், வாயிலிருந்து சொள்ளு வடிதல், நாக்கு வெளுத்தல், கண்டத்தின் உட்பாகங்கள் யாவும் வேக்காளமடைந்து தண்ணீர் குடித்தாலும் கூட எரிச்சல் ஏற்படுதல்.

மேலும் இந்நோயினால் நாக்கில் முட்கள் ஏற்பட்டு வாய் திறந்து பேசினாலே துர்நாற்றம் வீசவைக்கும்.

மருத்துவம்

கருஞ்சீரக நெய்

கருஞ்சீரகம்	17½ கிராம்
கடுகுரோகணி	,,
கடுக்காய்த்தோல்	,,
காட்டுமல்லிகை வேர்	,,
வெள்ளை வெங்காயம்	100 கிராம்
மணித்தக்காளி	50 கிராம்
சிற்றாமணக்கு நெய்	250 மில்லி
தாய்ப்பால்	100 மில்லி

மேற்கூறப்பெற்ற கடைச்சரக்குகளை உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி சிற்றாமணக்கு நெய்யுடன் சேர்த்து வெங்காயத்தையும், மணித்தக்காளி இலையையும் நன்கு நெகிழ அரைத்துக் கலந்து தாய்ப்பாலையும் ஊற்றி அடுப்பிலேற்றிச் சிறுக எரித்து பக்குவ பாகத்தில் வடித்து அதில் கோரோசனை 2 கிராம், குங்குமப்பூ 1 கிராம் சேர்த்து பத்திரப்படுத்தவும்.

அளவு: உச்சிக்கரண்டி (காலையில் மட்டும் ஒருவேளை) 10 நாட்கள் உண்ண வேண்டும்.

பத்தியம்: தாயும், சேயும், புளி, காரம் நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

தீரும்நோய்கள்: அச்சரத்தினால் வயிற்றில் உண்டாகும் வேக்காடு, நாவேக்காடு, நாவில் ஏற்படும் முட்கள், வாய் துர்நாற்றம் முதலியவை குணமாகும்.

6. கக்குவான் நோய்

இந்நோய் சளியுடன் கூடிய கேவல் உண்டாகி கேவல் மிகுதியாக இருமல் ஏற்படும். பல்லைக் கடிக்கும். கபம் இளகியும், கெட்டிப்பட்டும் வெளிவரும். இடைவிடாத இருமலுண்டாகிக் கோழை வரும்.

குழந்தைகட்கு ஏற்படும் கக்குவான் நோயில் ஆண்குழந்தைகட்கு ஏற்படுதலை மிகவும் கவனித்து உடனடியாக நோயைத் தவிர்க்கவேண்டும்.

கக்குவான் தைலம்

தூதுவளைச்சாறு	250 மில்லி
நல்லெண்ணெய் (பந்தம் போடாதது)	,,
கொக்குமீன்	1
கோஷ்டம்	10 கிராம்
கஸ்தூரி	1 குன்றி எடை
கோரோசனை	,,

மேற்கூறிய சரக்கில் தூதுவளைச்சாறு, நல்லெண்ணெய் இரண்டையும் ஒருஇருப்புச் சட்டியிலிட்டு கொக்கு மீன் வயிற்றைக் கிழித்து உள்ளிருக்கும் பித்த நீர்ப்பை, குடல் இவைகளைப் போக்கி சுத்தம் செய்து அம்மியில் வைத்து நன்றாக அரைத்து மேற்கூறிய நல்லெண்ணெய், தூதுவளைச் சாறு இவைகளுடன் கலந்து கோஷ்டத்தையும் அரைத்துப் போட்டு அடுப்பேற்றிக் காய்ச்சிப் பதத்தில் இறக்கும்பொழுது கஸ்தூரி கோரோசனை இரண்டையும் தூள்செய்து அதனுடன் கலந்து ஆறவைத்து இறக்கி வடித்துக்கொள்ள சிறந்த தைலமாகும்.

அளவு: ½ தேக்கரண்டி (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: கக்குவான்.

பத்தியம்: சிறுகுழந்தைகளின் தாயானவள் புளி, பழையசோறு, கிழங்குவகை இவைகளை நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும். அவ பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

ஆமை ஓட்டுப் பற்பம்

ஆமை ஓடுகளைச் சிறுசிறு துண்டுகளாக்கி சோடா உப்புக்கலந்த தண்ணீரில் கொதிக்கவைத்தெடுக்க சுத்தமாகும். பிறகு தூதுவளையை சமூலத்துடன் கொண்டு வந்து இடித்து விழுதாக்கி வைத்துக்கொள்ளவும். விழுதை ஒருபானையில் போட்டு அதன் நடுவே ஆமை ஓட்டுச்சில்லை சொருகிச் சீலைமண் செய்து நன்றாகக் காய்ந்தவுடன் 20 எருவில் புடமிட்டுப் புடம் ஆறியதும் எடுத்து மேற்படி மருந்தை நன்றாக அரைத்தெடுக்க பற்பமாகும்.

அளவு: 1 முதல் 5 நெல்லெடை (காலை, மாலை இருவேளை)

துணைமருந்து: தேன்.

தீரும்நோய்: கக்குவான்.

பத்தியம்: முன்கூறிய தைலத்திற்கான பத்தியமுடன் இருத்தல் வேண்டும்.

7. நாக்குப்பூச்சி நோய்

நோயின் குணம்: வயிறு பெருத்து, தொப்பூழ் மலர்ச்சி அடைந்து காய்ச்சல், ஏற்பட்டு ஓக்காளம் ஏற்பட்டு வாந்தி உண்டாகும். வயிற்றுவலியும் இருக்கும். சிலநேரம் தாங்கொணாத வயிற்றுவலியும் இருக்கும். சரீரம் இளைத்துக் காணும். மேற்கூறிய குறிகளிலிருந்தால் நாக்குப்பூச்சி நோய் என அறிந்துகொள்ள வேண்டும்.

நாக்குப்பூச்சிக்குப் பலாசு விதைத் தைலம்

ஆமணக்கு எண்ணெய்	50 கிராம்
பாகல்சாறு	50 கிராம்
கழற்சிச்சாறு	50 கிராம்
புரசவிதைக்குடிநீர்	50 கிராம்
சுக்கு	9 கிராம்
கடுக்காய்த்தோல்	,,
நிலஆவாரை	,,
வசம்பு	,,
ஒருதலைப்பூண்டு உரித்தது	,,
ரசகற்பூரம்	10 கிராம்

ஒரு இருப்புச்சட்டியில் ஆமணக்கெண்ணெய், சாறுகள் யாவற்றையும் ஊற்றி வெய்யிலில் வைக்கவேண்டும்.

புரச விதையைத் தண்ணீரில் முதல் நாள் ஊறவைக்க வேண்டும். மறுதினம் மேற்படி ஊறிய விதையைக் கையினால் நன்கு கசக்கினால் தோல் நீங்கிவிடும். பிறகு கழுவி எடுத்து ஒன்றிரண்டாக இடித்துத் தூள்செய்து 2 படி தண்ணீரில் போட்டு அடுப்பிலேற்றி காய்ச்சி ½ படியாக வற்றுமளவு, காய்ச்சி வடிகட்டி எடுத்துத் தண்ணீரும் மேற்படி சாரும் கலந்த எண்ணையுடன் சேர்க்கவேண்டும். பிறகு பூரத்தைத் தனித்து எடுத்துக்கொண்டு மற்றைய மருந்துகளை அரைத்து (தண்ணீர்விட்டு) மேற்படி எண்ணெயுடன் கலந்து அடுப்பேற்றிக் காய்ச்சி வடித்து பிறகு பூரத்தை சேர்த்தரைத்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: சங்களவு (காலையில் மட்டும்.)

தீரும்நோய்: வயதிற்கேற்ப அளவுகளை மாற்றியமைத்துக் கொடுத்துவர நாக்குப்பூச்சிகள் யாவும் மலத்துடன் வெளியாகி நோய் குணமாகும்.

குறிப்பு: மருந்து கொடுக்குமுன் பேதிக்குக் கொடுத்து மருந்து கொடுத்தால் விரைவில் குணம் கிடைக்கும்.

8. கீரிப்பூச்சி நோய்

நோயின் குறிகுணம்: குழந்தைகளின் வயிற்றில் கீரிப்புழு இருந்தால், அடிக்கடி பால்போலக் கழியும், உடம்பு இளைத்துக் காட்டும். மார்பிலும், விலாவிலும் கட்டிக் கொண்டு தடுமாறிப் பேசும். சிலவேளை மலத்துடன் பூச்சிகளும் கலந்து வெளிவரும். மேற்கூறிய குணங்களைப் பெற்றிருக்கும்.

கீரிப்பூச்சி நோய்க்கு இளநீர் நெய்

பசுநெய்	250 மில்லி
இளநீர்	250 மில்லி
எலிக்காதுக் கீரைச்சாறு	125 மில்லி
முருங்கையிலைச்சாறு	125 மில்லி
முருங்கைப்பட்டை வேர்	9 கிராம்
கடுக்காய்த்தோல்	9 கிராம்
தான்றிக்காய்த்தோல்	9 கிராம்
நெல்லிவற்றல்	9 கிராம்
இலவங்கம்	7 கிராம்
சாதிக்காய்	,,
சாதிப்பத்திரி	,,
அதிமதுரம்	,,
ஓமம்	,,
சுக்கு	,,
ஏலரிசி	,,

வாசனை கோஷ்டம்	9 கிராம்
வாய் விளங்கம்	,,

நெய், இளநீர், சாறுகள் யாவற்றையும் ஒரு இருப்புச் சட்டியிலிட்டு மற்றைய மருந்துகளைத் தண்ணீர்விட்டு நன்கு நெகிழ அரைத்து கலந்து சட்டியை அடுப்பேற்றி மெழுகு பதத்தில் காய்ச்சி வடித்து பத்திரப்படுத்தவும்.

அளவு: உச்சிக்கரண்டி அளவு, காலை மாலை இருவேளை.

தீரும் நோய்: நோயின் வன்மைக்கேற்பக் கூட்டியும் குறைத்தும் கொடுத்துவர கீரிப்பூச்சி நோய் குணமாகும்.

குறிப்பு: மருந்து கொடுக்குமுன் பேதிக்குக் கொடுத்து மருந்து கொடுத்தால் விரைவில் குணம் கிடைக்கும்.

மசரைப்புழு நோய்

நோயின் குறிகுணம்: இந்நோய் ஏற்பட்ட குழந்தைகள் சில வேளை சீதமாகவும், சிலவேளை இரத்தமாகவும், சிலவேளை மலமாகவும், சிலவேளை நீராகவும், சிலவேளை எல்லாம் கலந்ததாகவும் கழிதல் அதிகச் சோர்வுடன் குழந்தைகள் கிடத்தல், மலமாய் வெளிவருதல், வயிற்றுவலி காணல், கருமையும், செம்மையும் கலந்த நிறத்தைப் போன்று கழிசல் போன்ற குறிகுணங்களை மசரைப்புழு நோய் பெற்றிருக்கும்.

மசரை நோய்க்கு நாயுருவி நெய்

பசுநெய்	200 மில்லி
நாயுருவி இலையை அரைத்த விழுது	1 கொட்டைப்பாக்களவு
குப்பைமேனி இலை	,,
கொழிஞ்சி இலை	,,
தூதுவளை இலை	,,

குறுந்தக்காளி இலை 1 கொட்டைப்பாக்களவு
பலாசுவிதை மேல்தோல் நீக்கி ,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை ஒரு இருப்புச் சட்டியிலிட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக்கொள்ளவும்.

அளவு: உச்சிக்கரண்டி அளவு (காலை, மாலை, இருவேளை) வயதிற்கு தக்க அளவில் கொடுக்கவேண்டும்.

தீரும்நோய்: இந்நெய்யை வயதிற்கு தக்க அளவில் காலை, மாலை இருவேளை கொடுத்துவர மசரைப்புழு நோய் குணமடையும்.

பத்தியம்: கஞ்சி உணவு உட்கொள்வது சாலச்சிறந்தது.

10. மலவாத நோய்

மலவாதத்தின் குறிகளாவன: கண்ணின் புருவத்தைக் குவித்தல், நாக்கு, கைகள், கால்கள் இவைகளைக் குவித்தல், கண்கள் விண்ணைப் பார்த்தல், உந்தியின் அடியில் வாயு தங்கி மேல் வயிற்றையும் வலிப்பித்தல், தூங்காமை, அடிக்கடி கொட்டாவி விடுதல், உடல் மஞ்சளித்தல், தாயின்பாலை விரும்பிக் குடியாமை என்பவைகளாகும்.

மருத்துவம்: இலைக்கள்ளி வேர்ப்பட்டை 17½ கிராம்
பூண்டு 5 கிராம்
மிளகு ,,
சுக்கு ,,
கடுக்காய்த்தோல் ,,

மேற்கூறியவற்றை அரைத்து அடைசுட்டுக்கொடுக்க குழந்தைகளுக்கு ஏற்படும் மலசலக்கட்டு நிவர்த்தியாகும்.

சித்தாதி எண்ணெயை வயது, உடல் வன்மை இவற்றிற்கேற்ப 2 முதல் 10 சொட்டுகள் வரையில் கொடுக்க மலக்கட்டு நிவர்த்தியாகி நல்லகுணத்தை ஏற்படுத்தும்.

11.மயக்கநோய்

இந்நோய்க்கு களைப்புநோய், மூச்சடைப்பு நோய், மூர்ச்சை நோய் எனப் பல பெயர்கள் உண்டு.

இயல்: இந்நோயானது திடீரெனக் கண்ணிருண்டு, சுரணையற்று, அறிவழிந்து மயக்கமுற்று, மூச்சடைத்து மரம்போல விழச்செய்யும் குணமுடையது. தன்னுடைய நிலைமை இழந்து கிடக்கச் செய்யும் என்றும் கூறலாம்.

நோய்வரும்வழி: செரிக்கக் கூடாத உணவுகளை உட்கொள்ளுவதால், உடல் வன்மை கெட்டு, இரத்தம் குறைந்து, தகாத செயல்களால் நாடி, நரம்புகள் தளர்ந்து சத்துவ குணம் அடங்கி, தமோ குணம் உண்டாகி, சிறுநீர், எரு இவைகளை வெளியாக்காமல் அடக்குவதாலும் இந்நோய் பிறக்கிறது.

மேலும் சிலருக்கு இரத்தத்தின் மணத்தை நுகர்வதாலும், இரத்தத்தைப் பார்ப்பதாலும் சிலருக்கு மயக்கம் வருவதுண்டு, மற்றும் சிலருக்கு சற்று சூடான தண்ணீரில் குளித்தாலும் அல்லது காற்றில்லாது மூடி வைத்திருந்த அறையில் நுழைந்தாலும் மயக்கம் உண்டாவதுண்டு.

குணங்கள்: இந்நோயில் தலைசுற்றல், வாய் குமட்டல், வாய் நீரூறல், கொட்டாவி விடல், கை கால்கள் சோர்வடைதல், தன்னை மறந்து அறிவழிதல் தமரகம் துடித்து, முற்குறிகுணங்களைக் காட்டிக் கீழே விழுந்து மயக்கமாகும்.

நோயின் எண்ணிக்கை: இந்நோய் குற்ற அளவாக நான்கும், குருதி (இரத்தம்) அளவாக ஒன்றும், நஞ்சு (விஷம்) காரணமாக ஒன்றும் சேர்ந்து ஆறுவகை மயக்க நோயாகக் கூறுவர்.

வளிமயக்க நோய் அழல்மயக்கநோய்
ஐய மயக்கநோய் முக்குற்ற மயக்கநோய்
குருதி மயக்கநோய் நஞ்சு மயக்கநோய்

பொதுக்குறிகுணங்கள்: இந்நோய் பெரும் பான்மையும் சிறு வயதிலிருந்தே தொடர்வதாகும். ஆண்களுக்கு பதினெட்டு வயதிற்கு மேலும் பெண்களுக்கு பதினைந்து வயதிற்கு மேலும் இந்நோய் இருப்பதில்லை இருப்பினும் சிலருக்கு ஆயுள் பூராவும் (வாழ்நாள் முழுமையும்) தொடர்வதுண்டு.

நோய்வருவதற்கு முன்பே அடிவயிற்றில் யாதொன்றும் இல்லாதது போலத் தோன்றும். மனத்திற்கு ஒருவித துன்பத்தை உண்டாக்கும். வாய்நீர் சுரத்தல், தலைவலி, மயக்கம் இவற்றை உண்டாக்கி, கண்கள் இருண்டு, மூச்சுத்திணறி, அறிவை இழக்கச்செய்து, படுக்கையில் கிடக்கச் செய்துவிடும். மூச்சு மெலிந்து காணும்.

தீரக்கூடியதும் தீராதவைகளும்: ஐய மயக்கம், முக்குற்ற மயக்கம், பெருமயக்க நோய் ஆகிய மூன்றும் எளிதில் தீராது. மற்றவை தீரக்கூடியனவாம்.

நோய்களும் உரிய மருத்துவமும்

1. அம்மை நோய்

இந்நோய் பூமியில் எழுந்த வெப்பம் உடலைத் தாக்கி வெப்பத்தை அதிகப்படுத்தி மூலத்திலும், மூளையிலும், எலும்பிலும், கொதிப்பேறி மனநிலையைக் கெடுத்து, அறிவை மயக்கிப் பித்தத்தை அதிகப்படுத்தி, தாதுக்களுக்கு அதிக வெப்பத்தை உண்டாக்கி அவ்வெப்பம் உடலில் தங்கி, எலும்புகளுக்கு உள்ளிருக்கும் கொழுப்பைக் கொதிப் படையச்செய்து, அக்கொழுப்பு எலும்பை ஊடுறிவிப் பாய்ந்து கபத்தை அதிகப்படுத்தி வெளியில் விசிறி நீர்க்கொப்புளங்களைப் பிறப்பித்துச் சீழ்கொள்ளச் செய்து அம்மை என்னும் பெயரை உண்டாக்குகின்றது.

இந்நோய்க்குக் குருநோய், மாரி, வைசூரி எனப் பல பெயர்கள் உண்டு.

இந்நோய் 14 வகைப்படும். இவைகளில் நம்நாட்டில் பெரியம்மை, சிறியம்மை, தட்டம்மை, புட்டாளம்மை, பனைமுகரி என்பவை அதிகம் ஏற்படுகின்றன.

அம்மை நோயின் பொதுக்குறிகுணங்கள்

இந்நோயில் திடீரென சுரங்காய்ச்சும், உடல்வலி, தலைவலி, இடுப்புவலி, தலைகனம், உடம்பெல்லாம் எரிதல், கண்சிவத்தல், தும்மல், வாந்தி, மூக்கில் நீர்வடிதல், மலம் தண்டப்படல் முதலியவை ஏற்பட்டு பிறகு நோய் உண்டாகும்.

2. பெரியம்மை

இது சிறியவர்கள் முதல் பெரியோர்கள் வரை வரக்கூடிய நோயாகும். எளிதில் மற்றவர்கட்கு உண்டாகக்கூடிய தொற்றுநோய் எனவும் கூறலாம்.

இந்நோய் வருமுன் தலைவலி, தும்மல், பூட்டுகள் நோதல், முதுகுவலி, வாய் குமட்டல், வாந்தியாதல், மலம் தடைப்படல் ஆகிய குணங்களை உடையது.

முதலில் அடிவயிறு, தொடை, இடுப்பு, கழுத்து, மார்பு, தொப்புள் முதலிய இடங்களில் வேர்க்கருவைப் போல் சிவந்து காணும். மூன்று நாட்கள் சுரம் விடாமல் காய்ந்து நான்காவது நாள் சிறுவேர்க்கூறுகள் முகத்தில் ஏற்பட்டு பிறகு மற்றைய பாகங்களில் உண்டாகும்.

முதலில் வேர்க்குரு போன்று உண்டாகி அவைகள் நாளுக்குநாள் பருத்தும், பழுத்தும் அதனுள் சீழ்கோர்த்தும் காணப்படும். ஏழாவது நாளில் மீண்டும் சுரம் காயும், குளிர் உண்டாகும். நா வறட்சி ஏற்படும். இவ்வாறு ஏற்பட்டக் கொப்புளங்கள் ஏழாவது நாளிலிருந்து இறக்கம் கொடுத்து கொப்புளங்கள் வாடி, சுரம் நின்று கொப்புளங்களில் தோல் உரித்து, 15, 16 நாட்களில் குணமடையும்.

குறித்த காலத்திற்குள் அம்மை இறங்காவிடில் உடலின் சக்தி குறைந்து நோய் அதிகமாகி வெப்பத்தை அதிகரிக்கச் செய்து இரத்தத்தைக் கேடு அடையச்செய்து, பல இன்னல்களை விளைவித்து மயக்கம், மூர்ச்சை வறட்சி இவைகளை உண்டாக்கி மரணத்தையும் உண்டாக்கும்.

கண்களில் அம்மை கொப்புளங்கள் ஏற்பட்டால் சிலருக்குக் கண் குருடாகிப் பூ விழுந்து பார்வை இழக்க நேரிடும். கர்ப்பமுற்றவர்களுக்கு அம்மை கண்டால் வயிற்றில் உள்ள குழந்தையையும் பாதிக்கும். சிலருக்குக் கரு அழியும்.

பெரியம்மை கண்டிருப்பவர்களுக்குச் சுரத்தின் வேகம் மிகுதியாகக் கண்டால் சுரத்தின் வேகத்தைக் குறைக்கக்கூடிய குடிநீர், பற்பம் ஆகியவற்றின் மூலம் குணப்படுத்தலாம்.

குடிநீர்: சிற்றாமுட்டி, பேராமுட்டி, பேய்ப்புடல், வெட்டிவேர், விலாமிச்சைவேர், செஞ்சந்தனம், கண்டங்கத்திரி, துளசி, ஆடாதொடை வகைக்கு 35 கிராம், சிற்றரத்தை, இலவங்கம் வகைக்கு 17 ¾ கிராம், நீர்முள்ளி வித்து, வெள்ளரிவித்து, சுரக்கொடி வகைக்கு 8¼ கிராம், மேற்கண்ட சரக்குகளை ஒரு மண் பானையில் இட்டு, 2லிட்டர், தண்ணீர் விட்டு எட்டிலொரு பங்காகக் காய்ச்சி வடிகட்டி, காலை, மாலை கொடுக்கவும். இவ்வாறு நான்கு அல்லது ஐந்து தினங்கள் கொடுக்க அம்மை நோயில் காணும் சுரம் வாந்தி, போக்கு, கபக்குற்றம் முதலியன நீங்கி சுரத்தின் வேகம் குறையும்.

மான்கொம்பு பற்பம்

35 கிராம் மான்கொம்பைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி பசுவின் நீரில் நான்கு தினங்கள் ஊறவைத்து நன்றாகக் கழுவி எடுக்க சுத்தியாகும். பிறகு வேலிப்பருத்தி இலையை மயனமாக அரைத்து மான்கொம்புத் துண்டுகளை மேற்படி கலக்கத்தில் பொதிந்து மூன்று சீலைமண் செய்து 10 எருவில் புடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும்.

அளவு: பணவெடை, காலை, மாலை இருவேளை.

துணை மருந்து: பசு வெண்ணெய், நெய்.

குறிப்பு: மேற்படி நோயுற்றவர்கட்கு சிறுநீர் கழிக்கும்பொழுது இரத்தம் கண்டால் மேற்படி பற்பத்துடன் படிகாரச்செந்தூரம் அரிசி எடை கலந்து கொடுக்க குணமாகும்.

3. சிறிய அம்மை

இந்நோயை விளையாட்டு அம்மை என்றும், சிச்சிறுப்பை என்றும் கூறுவது உண்டு. இந்நோய் வருவதற்குமுன் தலைவலி, சுரம், சோம்பல், முதுகுவலி முதலியவை ஏற்பட்டு மூன்றாவது நாள் வேர்க்குருக்கள் தோன்றும், முதலில் கொப்புளங்களாக மினுமினுப்புடன் அதன்பாகம் சிவந்து சீழ்கோர்த்து காணப்படும். 5-வது நாளிலிலிருந்து இறக்கம் கொடுத்து, 7-வது நாளுக்குள் கொப்புளம் வறண்டு, தோல் உரியும். பிறகு தோல் தன் பழைய நிறத்தை அடையும்.

சிறிய அம்மை கண்டவர்களுக்குப் பெரிய அம்மை நோயில் கூறப்பெற்ற குடிநீரையே கொடுத்துவர நல்ல குணம் கிடைக்கும்.

முத்து பற்பம்

முத்து	35 கிராம்
நொச்சிச்சாறு	70 கிராம்
நிலப்பனங்கிழங்குச்சாறு	70 கிராம்
ஆடாதொடைப்பட்டைச்சாறு	70 கிராம்

மேற்படி முத்தை முறைப்படி சுத்திசெய்து குழி அம்மியிலிட்டு, மேற்கூறிய சாறுகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கொடுத்து நன்றாக நெகிழ அரைத்து வில்லைதட்டி வெய்யிலிலுலர்த்தி அகலில் வைத்து மேலகல் வைத்து சீலைசெய்து 50 எருவில் புடமிட்டெடுக்க பற்பமாகும். இப்பற்பத்தை மேற்கூறிய சாறுகளிட்டு 2 அல்லது 3 முறை புடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும்.

அளவு: ½ முதல் 1 நெல்லெண்ட் (காலை, மாலை இருவேளை)

துணைமருந்து: தேன், நெய்.

தீரும்நோய்: பதினான்கு வகை அம்மை நோய்களையும் குணப்படுத்தும்.

4. தட்டம்மை

இந்நோய் முதலில் இருமல், தும்மல், கண்சிவத்தல், கண்எரிதல் முதலிய குறிகுணங்களுடன் சுரமும் உண்டாகும். மூன்றாவது நாள் சுரம் குறைந்து தட்டையான வேர்க்கூறுகள் காதின் அடியிலும், கழுத்தின் இருபுறங்களிலும், முகத்திலும் தோன்றி பிறகு உடல் பூராவும் பரவும்.

இந்நோயில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மார்பில் கோழைக்கட்டி, வாய் ஓயாத இருமல், சுரம், வாய் வேக்காளம், உணவு உட்கொள்ள முடியாமை, சளி வடிதல், கண்கள் சிவந்து திறக்க முடியாமை, பேதியாதல், சரீரம் இளைத்தல் போன்ற குறிகுணங்களைக் காட்டும்.

இப்பருக்கள் அதிகமாகி, ஒன்றோடொன்று சேர்ந்து திட்டுத் திட்டாய் திரண்டு சிறிது தடித்தும் காணப்படும்.

இந்நோய் கண்ட ஏழுநாட்களில் இறக்கம் கொடுத்து சில தினங்களில் தோல் உரிந்து, கருத்திருக்கும். தோல் பிறகு மாறிவிடும்.

தட்டம்மை மருத்துவம்

இந்நோய்க்கு முன்னர் கூறிய பெரிய அம்மை, சிறிய அம்மை ஆகியவைக்குக் கூறிய மருந்துகளையே முறைப்படி கொடுக்க குணமடையும்.

5. பனைமுகரி அம்மை

சுரம் மிதமாகக் காயும் சரீரம் பூராவும் வலி ஏற்படும். கண்கள் சிவந்திருக்கும். கண்டத்தில் வீக்கம், வாய் பிதற்றல், நீரில் இரத்தம் வரும். பெண்களாயின் பெரும்பாடு காணும். மேலும் பித்தம் அதிகமாகி சன்னியே ஏற்படும். உடல் மெலிந்து நோய் அதிகரிக்கும்.

மாணிக்கப் பற்பம்

மாணிக்கம் 10 கிராம் எடுத்து நன்கு சுத்திசெய்து குழி அம்மியிலிட்டு வெள்ளெருக்கின் பால்விட்டு, நன்கு நெகிழ அரைத்து வில்லைதட்டி, வெய்யிலிலுர்த்தி, அகலில் வைத்து மேலகல் மூடி சீலைமண் செய்து மூன்றுமுறை புடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும்.

அளவு: அரிசி எடை, காலை, மாலை இருவேளை.

துணை மருந்து: நெய், தேன்.

இவ்வாறு 5 தினங்கள் கொடுக்க பனைமுகரி அம்மை இறக்கம் கொடுத்து விரைவில் குணமடையும்.

தாழை மணப்பாகு

தாழை விழுது	1 கிலோ
தண்ணீர்	20 லிட்டர்

தாழைவிழுதை சிறு துண்டுகளாக நறுக்கி நையத்தட்டிப் பானையில் தண்ணீர்விட்டு நறுக்கிய தாழை விழுதைப் போட்டு நன்றாகத் தீயிட்டெரித்து 10 லிட்டராக சுண்டும் வரைக் காய்ச்சவும். பிறகு ¾ கிலோ சீனி கலந்து நன்றாகத் தேன் பதத்திலாகும்வரை காய்ச்சி இறுத்து எடுத்து மேற்கண்ட நோயுற்றவர்கட்கு தண்ணீர் வேட்கை ஏற்படும் நேரத்தில் கொடுக்க நோயின் வன்மையைக் குறைத்து நல்ல குணத்தைக் கொடுக்கும்.

6. புட்டாளம்மை

இந்நோய் தாடை (தாள்) கீல்(பூட்டு) இவை வீங்கி உண்டாகும்.

இந்நோய் அம்மைநோய் போன்ற தொற்றும் வகையைச் சார்ந்தது. இந்நோய்வாய்ப்பட்டவர்க்கு மூன்று

நாட்கள் இலேசான சுரம் கண்டு நான்காவது நாள் தான் நன்கு வீங்கி சிவந்து காணும். வீக்கமானது இரண்டு புறங்களிலும் காணும் சிலருக்கோ வாய் திறக்கமுடியாது. தாங்கொணாத வலி இருக்கும்.

சிலருக்கு தாள் வீங்குவதுடன் விரை வீங்குவதுமுண்டு, சிலருக்கு காதுவலி ஏற்பட்டு சீழ்வடிந்து காது செவிடாவதும் உண்டு.

பெண்களுக்கு இந்நோய் கண்டால் ஸ்தனங்கள் வீங்குவதுமுண்டு. இந்நோயினால் உண்டாகும் வீக்கங்களில் அம்மைநோய் போன்று சீழ் பிடிப்பதில்லை.

மேலும் இந்நோயானது பெரும்பாலும் 7 வயது முதல் 25 வயதிற்குட்பட்டவற்கே அதிகமாக உண்டாகிறது.

பவழ பற்பம்

நற்பவழம் 35 கிராம் எலுமிச்சம்பழச்சாற்றில் மூன்று நாட்கள் ஊறவைத்துக் கழுவியெடுத்து குழியம்மியிலிட்டு ஆட்டுப்பித்து நீர்விட்டு நன்றாக நெகிழ அரைத்து வில்லைதட்டி வெயிலில் உலர்த்தி வில்லைகட்குக் கீழும் மேலும் நுணா இலையை அரைத்துக் கவசம் செய்து ஓட்டிலிட்டு ஓடு மூடிச்சீலைசெய்து 20 எருவில் புடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும்.

அளவு: அரிசி எடை, காலை, மாலை இருவேளை.

துணை மருந்து: தேன், நெய், வெண்ணெய் சர்க்கரை.

தீரும்நோய்: அம்மை நோய்கள்.

குறிப்பு: ஆடாதொடைக் குடிநீர் வைத்தும் கொடுக்கலாம்.

இந்நோயுற்றவர்கட்கு பச்சை மஞ்சளும், வேப்பிலை யையும் நன்றாக அரைத்து வீக்கம் கண்ட இடத்தில் தடவலாம். ஒருசிலர் இந்நோயை பொன்னுக்கு வீங்கி என்று பொன்னாலாகிய நகைகளை அணிவதும் உண்டு.

7. சுரம்

இரைப்பையில் சீதம் பெருகி அதன் செய்கையால் வெப்பு மிகுந்து உண்டாகும் நோய் சுரமென வழங்க லாயிற்று. இதற்கு வெம்மை, வெப்புநோய், காந்தல், காங்கை, காய்ச்சல், சூடு, அனல் எனப் பல்வேறு பெயர்களும் உண்டு.

சுரம் தோன்றும் வழி

மலம் தடைப்படலாகிய நாட்பட்ட ஐயம், உணவினால் ஏற்படும் கேடுகள், அளவுக்கு மீறிய கலவி, தூக்கமின்மை, சுவையுள்ள பொருள்களை மிகுதியாக உண்ணல், கடும்வெய்யிலில் நடத்தல், தாங்கொணாப் பசியைப் பொறுத்தல், உண்டிமேல் உண்டி உண்ணல், தாங்கமுடியா சுமைசுமத்தல், (உடலில் எழுகின்ற பதினான்கு வேகங்களை அடக்குதல்.) எண்ணெய் தேய்த்து நீராடிய நாளில் கலவி கொள்ளல், பசியில் அளவுக்கு மீறிய உணவை உட்கொள்ளல் ஆகிய காரணங்களால் சுரநோய் உண்டாகும்.

சுரத்தின் முற்குறிகள்

உடல் சிலிர்த்தல், தலைநோய், எந்தச்செயலிலும் அறிவு செல்லாமை, களைப்பு, கை, கால், இடுப்பு முதலியன நோதல், செரியாமை, நாவறட்சி, உடல் கனத்தல், சிவந்த நிறமாகவும், மஞ்சள் நிறமாகவும், குழம்பாகவும், சிறுநீர் இறங்குதல், நாடி படபடத்து ஓடல் ஆகிய குறிகுணங்களைப் பெற்றிருக்கும்.

நோயின் எண்ணிக்கை

சுரத்தின் பிரிவு பல வகைப்பட்டதாக இருப்பினும், சுரத்தின் அனைத்தும் வளி, அழல், ஐயம் ஆகிய முக்குற்றங்களில் ஒடுங்கி தனிக்குற்ற அளவாகவும், கலப்புக் குற்றங்களின் அளவாகவும், அறுபத்துநான்கு வகையாகப் பிரிக்கப்பெற்றிருக்கின்றன.

இதில் வாத சுரம் இருபது, பித்தசுரம் இருபத்துநான்கு, கபசுரம் இருபது என பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் வாதத்தில் எட்டும், பித்தத்தில் பத்தும், கபத்தில் ஒன்பதும், எளிதில் தீராதனவாம். இவைகளில் தன்வழிப் பிறத்தல், ஐம்பத்திரண்டு, பிறவழிப் பிறத்தல் பன்னிரெண்டெனவும் கூறுவர்.

தடுப்புமுறை

தன்னிலை திரிந்த குற்றங்களை தத்தம் வழி மீண்டும் நிகழச்செய்ய வேண்டும். பின்னர் குடிநீர், மருந்துப்பொடி, மாத்திரை, பற்ப, செந்தூரங்கள் கொடுத்து சுரங்களை நிறுத்தலாம்.

மருந்துகள்

அதிவிடய மாத்திரை

அதிவிடயம்	10 கிராம்
சுத்திசெய்த கெந்தகம்	10 கிராம்
இலவங்கம்	10 கிராம்
சுத்திசெய்த நேர்வாளம்	10 கிராம்

மேற்கூறப்பெற்ற நான்கு மருந்துகளையும், குழியம்மியிலிட்டு கம்மாறு வெற்றிலைச்சாறு விட்டு நாற்பத்தெட்டு மணிநேரம் நன்கு நெகிழ அரைத்துக் குன்றிமணியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காய வைக்கவும்.

அளவு: ஒன்றுமுதல் இரண்டு மாத்திரை, காலை, மாலை இருவேளை.

துணைமருந்து: இஞ்சிச்சாறு, துளசிச்சாறு, சுக்கு, குடிநீர், நிலவேம்புக் குடிநீர்.

தீரும்நோய்கள்: சகலவிதமான சுரங்களும் குணமாகும்.

பத்தியம்: சுரம் குணமடையும் வரை கஞ்சி அருந்துதல் சாலச்சிறந்ததாகும்.

இலிங்கச் செந்தூரம்

இலிங்கம்	35 கிராம்
ஓமம்	100 மில்லி
வேப்பெண்ணெய்	250 மில்லி

ஓமத்தை ஒரு வெள்ளைத்துணியில் கொட்டி அதன் நடுவே இலிங்கக்கட்டியை வைத்து முடித்து பிறகு ஒரு சட்டியில் வேப்பெண்ணெய் விட்டு மேற்கூறிய இலிங்கக் கட்டி வைத்துள்ள கிழியை வேப்பெண்ணெயிலிட்டுக் கிழியின் திரியைக் கொளுத்திவிடவும். எண்ணெய் வற்றி ஓமம் பொரிந்து ஆறின பிறகு இலிங்கத்தை எடுத்துக் குழி அம்மியிலிட்டு நன்றாக நெகிழ ஆறுமணி நேரத்திற்கு குறையாது அரைத்து எடுக்கச் செந்தூரம் ஆகும்.

அளவு: ஒன்றுமுதல் மூன்று அரிசி எடை வரை, காலை, மாலை இருவேளை.

துணை மருந்து: தேன், இஞ்சிச்சாறு, சர்க்கரை, சுரகுடிநீர்.

தீரும் நோய்: சகலவிதமான சுரங்கள்.

பத்தியம்: சுரம் குணமடையும்வரை கஞ்சி அருந்துதல் சாலச்சிறந்ததாகும்.

ஆடாதொடைக்குடிநீர்

ஆடாதொடை இலை	சீந்திற்கொடி
கோரைக்கிழங்கு	சுக்கு
பேய்ப்புடல்	விஷ்ணுகிரந்து
வெள்ளருகு	பற்பாடகம்
சிறுகாஞ்சோறிவேர்	

மேற்கூறப்பெற்ற ஒன்பது சரக்கினையும் வகைக்கு பத்து கிராம் எடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து ஒருபடி தண்ணீர்விட்டு அடுப்பில் வைத்து எட்டிலொரு பாகமாகும்வரை எரிக்கவும். பிறகு இக்குடிநீரை முறையே உட்கொண்டுவர சுரங்களனைத்தும் நீங்கும்.

8. வெளுப்பு நோய் (பாண்டு)

நோய் தோன்றும் வழி

இந்நோயானது இரத்தத்தின் வன்மையை குறைக்கக் கூடிய உப்பு, புளிப்பு ஆகிய பொருள்களை மிகுதியாக உட்கொள்ளுதலாலும், இரத்தத்தை அதிக அளவில் வெளியாக்கும் குருதிக் கழிச்சல், மூலம், இரத்தவாந்தி ஆகிய நோய்கட்குட்படுவதாலும், உடலில் வெட்டுப்பட்டு இரத்தம் மிகுதியாக வெளிப்படுதலாலும் இந்நோய் வருகிறது. மற்றும் வயிற்றுப்புழுநோய், இளைப்புநோய், நிணக்கழிச்சல், ஈரல்நோய் ஆகியவற்றாலும் வெற்றிலை, பாக்கு, புகையிலை, மண், திருநீறு, சற்பூரம் இவைகளை உட்கொள்ளுதலாலும் இந்நோய் உண்டாவதுடன் உணவு முதலிய வேறுபாடுகளால் தீக்குற்ற மிகுந்து இரத்தத்தின் நிறத்தையும், எடையையும் குறைத்து சரீரத்தை வெளுக்கச் செய்யும். பின்னர் சிறிது தொலைவு நடந்தாலும் கை, கால் ஓய்ந்து போதல், பெருமூச்சு விடுதல், வாய்க்குமட்டல், தலைசுற்றல், கண் இருளடைதல், மயக்கமுறல், மார்பு துடித்தல், உடல் இளைத்தல் ஆகிய குறிகுணங்களை இந்நோயுற்றவர்கள் பெற்றிருப்பார்கள்.

நோயின் எண்ணிக்கை

இந்நோயானது வளிவாதப் பாண்டு, தீபித்த பாண்டு, ஐயப்பாண்டு, முக்குற்றப்பாண்டு, நச்சுவிடப்பாண்டு என ஐந்துவகைப்படும்.

மருத்துவம்

இந்நோயுற்றவர்கள் தன்னிலைத் திரிந்த குற்றங்களை தன்னிலைப் பெறச்செய்து கழிச்சல் மருந்துகளைக் கொடுத்து பிறகு பசியைத்தூண்டும் மருந்துடன் இரத்தத்தைப் பெருக்கக்கூடிய மருந்தினையும் கொடுக்கவேண்டும்.

அயச்செந்தூரம்

அயம்	50 கிராம்
வீரம்	25 கிராம்

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு படிக்காரத் திராவகம் விட்டரைத்து மெழுகானபின் வில்லைத்தட்டி வெய்யிலில் நன்றாக காயவைத்து காய்ந்தபின் வில்லையைப் பார்க்க உலர்ந்திருக்கும். மறுமுறை வில்லையைக் குழி அம்மியிலிட்டு வெண்ணாவற்பட்டைச்சாறு, பொற்றலைக் கரப்பான் சாறு, மொந்தன் வாழைப்பழச்சாறு இவைகளை முறையே 250 மில்லி சாறு வீதம் ஒன்றன்பின் ஒன்றாக விட்டு நன்றாக அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து சட்டியில் வைத்து மேல் அகல் மூடி ஏழு சீலைமண் செய்து காய்ந்தபின் 1½ முழ உயரத்திற்கு எருவடக்கிப் புடம்போட்டு ஆறினபின் பிரித்துப் பார்க்க உயர்ந்த செந்தூரமாக இருக்கும். இதைக் குழி அம்மியிலிட்டு நன்றாக அரைத்து சீசாவில் பத்திரப் படுத்தவும்.

அளவு: அரிசி எடை, காலை, மாலை இருவேளை.

துணை மருந்து: தேன்.

தீரும் நோய்: பாண்டுநோய் குணமடைந்து நல்ல பசியை உண்டுபண்ணி நரம்புகட்கு வலுவைக்கொடுத்து தாதுவிருத்தியை அதிகப்படுத்துவதுடன் சகல நோய்களையும் குணமாக்கும்.

வெள்ளி பற்பம்

50 கிராம் சரிகை வெள்ளியை நன்கு சுத்திசெய்து எடுத்துக்கொண்டு வெள்ளிக்கு மகிழம்பூச் சாறுவிட்டு 5தினங்கள் நன்றாக அரைத்து வில்லைதட்டி ஓட்டில் வைத்து ஓடுமூடி சீலைமண் செய்து 50 எருவில் புடமிட பற்பமாகும். மறுமுறை நாகமல்லிச்சாற்றிலும், ஆடாதொடைப்பட்டைச் சாற்றிலும் 3 புடமிட்டெடுக்க வெள்ளி பற்பமாகும்.

அளவு: 1 முதல் 2 நெல்லெடை, (காலை, மாலை இருவேளை)

துணை மருந்து: வெண்ணெய், நெய், தேன்.

தீரும் நோய்: பாண்டு நோய்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

ஊதல்நோய் (சோகை நோய்)

வேறு பெயர்கள்: தொம்மை நோய், சோகை நோய், சோபை நோய்.

நோய்வரும் வழி: முற்கூறிய வெளுப்பு (பாண்டு) நோயின் தொடர்பாலும், ஊதல் நோய் பிறப்பதுண்டு. அன்றியும் நச்சுப்பொருள்களை உட்கொள்வதாலும், உணவுகளின் வேறுபாட்டாலும், குளிர்க்காற்றால் தாக்குண்டதாலும், குருதி கேடடைந்து குற்றங்களைத் தூண்டி, பரவுவதால் நன்றொழிலிற் பிறழ்ந்து இந்நோய் உண்டாகும். அன்றியும் சன்னி நோயாலும் சிறப்பாகச்

சித்தப்பிரமை சன்னியாலும், பாம்புகடியாலும், சில்லிடக் கடியாலும், ஊறலாலும், சிறையிருந்தலாலும், மலைவாசத்தாலும், நீர் நிலைகளின் தரைகளில் வசித்தலாலும், சாம்பல் மண், தவிடு போன்ற பொருள்களை உண்பதாலும் இந்நோய் பிரக்கும்.

இந்நோயைக் குற்ற அளவாக வளி, அழல், ஐயம் எனவும், முக்குற்ற ஊதல் நோயெனவும் நான்குவகை ஊதல் நோயாக ஒரு சாரரும், குற்ற அளவாக மூன்றும் இரு குற்றக்கலப்பால் மூன்றும், முக்குற்றத்தால் ஒன்றும், நஞ்சால் ஒன்றும், அடிபட்டு வீங்குவதால் ஒன்றும், கூடி ஒன்பதென மற்றொரு சாராரும் கூறுவர். முதற்கூறிய நான்கு வகையை ஈண்டுரைப்போம். நஞ்சால் வரும் நோயை நஞ்சு நூலிலும், அடிபடுவதால் வரும் நோயை அறுவை மருத்துவத்திலும் கூறப்படும்.

மருத்துவம்: இந்நோயில் பிறந்த குற்றத்தைத் தணித்து உடலிலூறிய நீரை வெளிப்படுத்தவேண்டும். குருதியின் வன்மையைப் பெருக்கி உடற்கு ஊட்டத்தைத் தரக்கூடியதும் சிறுநீரைக் கழிக்கக்கூடியதும், மலக்கட்டை ஒழிக்கக் கூடியதுமான குடிநீர், பற்பம், சிந்தூரம் இவைகளை வழங்கல் வேண்டும்.

பசுமூத்திரக் கடுக்காய்ச் சூரணம்

கடுக்காய்த்தோல்	350 கிராம்
இந்துப்பு	87½ கிராம்

மேற்கூறிய கடுக்காய்த்தோலை ஒரு பாத்திரத்திலிட்டு கடுக்காய்த்தோல் முழுகும் அளவில் பசுமூத்திரத்தை விட்டு, வெய்யிலில் வைத்து உலர்த்தி நீர்வற்றச்செய்ய வேண்டும். இவ்வாறு மூன்று முறை பசு மூத்திரத்தைவிட்டு உலர்ந்தபின் உரலிலிட்டு நன்றாக இடித்துத் தூளாக்கி வடிகட்டி இந்துப்பையும் தூள்செய்து, இரண்டையும் கலந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடி அளவு, காலை, மாலை இருவேளை.

அனுபானம்: வெந்நீர் அல்லது நீரைப் பிரிக்கக் கூடிய குடிநீர்கள்.

தீரும் நோய்: ஊதல் நோய்.

மண்டூரச் செந்தூரம்

மண்டூரம் 175 கிராம் எடுத்து முறைப்படி சுத்திசெய்து குழி அம்மியிலிட்டு சிறுகாஞ்சொறிச்சாறு விட்டு நன்கு நெகிழ பனிரண்டு மணி நேரம் அரைத்து வில்லைதட்டி, உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலைசெய்து 50 எருவில் புடமிட உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: நெல்லெடை, காலை, மாலை இருவேளை.

அனுபானம்: தேன், குடிநீர்.

தீரும்நோய்: ஊதல்நோய்.

குறிப்பு: இந்நோய்க்கு வேறு சில செந்தூரங்களையும், பற்பங்களையும் கொண்டு குணப்படுத்தலாம். அவை, அயச்செந்தூரம், அயவீரச்செந்தூரம், வெடியுப்புச் சுண்ணம், நண்டுக்கல் பற்பம்.

மஞ்சள்நோய்

இந்நோயிற்கு பித்துநோய், மஞ்சள்காமாலை, காமாலை எனப் பல பெயர்கள் உண்டு.

இந்நோய் பீடிக்கப்பட்டவர்களின் சிறுநீர், கண், நாக்கு, உடல், நகம் இவைகள் யாவும் மஞ்சள் நிறத்தைப் பெற்றிருக்கும்.

இந்நோயானது பித்தத்தைப் பெருக்கக்கூடிய செயலினாலும், அளவிற்கு மிஞ்சிய உணவுப்பொருட்களை உட்கொள்வதாலும், பித்தம் கேடடைந்து இரத்தம் கெட்டு, பித்தநீரை இரத்தத்திலும் உடல் உறுப்புகளாகிய சதை, தோல், கண், நாக்கு இவைகளில் தங்கச்செய்து நோயை உண்டாக்குகிறது.

இந்நோய் வருமுன் வாயில் நீர் ஊறுதல், வாய் குமட்டல், உணவில் வெறுப்பு, உட்கொண்ட உணவு செரியாமை இவைகளைப் பெற்றிருக்கும். இந்நோயை 13 வகைகளாகப் பிரித்துள்ளனர். அவை, 1) வாதகாமாலை, 2)பித்தகாமாலை, 3) கபகாமாலை, 4) வாதகப காமாலை, 5)பித்த கப காமாலை, 6) முக்குற்ற காமாலை, 7) ஊது காமாலை, 8) வறட்டுகாமாலை, 9) பெருகாமாலை, 10)அழுகுக்காமாலை, 11) கும்பகாமாலை, 12) குன்ம காமாலை, 13) செங்கமல காமாலை எனப் பதின்மூன்று வகைப்படும்.

மேற்கூறிய 13 காமாலைகளில் ஏழு காமாலை நோய் தக்க மருத்துவத்தில் எளிதில் குணமாகும். மற்றைய ஆறு காமாலை நோய்களும் எளிதில் குணமாகாது.

இந்நோய் வருவதற்கு முன்பாகவே கண்ணின் வெள்ளை விழியும், முகம், கழுத்து, உடல் முதலியன மஞ்சளாக இருக்கும். நோய் அதிகமாகும்போது நாக்கு வாயின் மேல்பாகம், உதடு, சிறுநீர், நகம் இவைகள் மஞ்சள் நிறத்தை அடைந்துகொண்டு வரும். நோய் மேலும் அதிகப்படுமாயின் மூக்கு, பற்களின் ஈறு, வாய் இவைகளிலிருந்து இரத்தம் கசியும், சிறுநீர் மஞ்சள் நிறமாக இருக்கும். வியர்வை மஞ்சள் நிறமாக இருக்கும். இந்நோய் தொடங்குவதற்குமுன் சரீரத்தில் வறட்சியேற்பட்டு நமைச்சல் உண்டாகி, சரீரத்தின் தோல் சிறிது தடிப்புற்று காணப்படும். நாடி நடைகள் தளர்ந்து தூக்கம் இருக்காது.

இந்நோய் பித்தம் அதிகமாகி பித்தத்தைத் தனக்குத் துணையாகக்கொண்டு, வாதத்தின் தொழிலைக் கெடுத்து இரத்தத்தின் அழுத்தத்தைக் கேடு அடையும்படி செய்து இந்நோய் உண்டாகிறது. இந்நோயில் தன்னளவிற்கு அதிகமான பித்தத்தைத் தணித்து பித்தநீரை வெளியாக்கி மலத்தை வெளியாக்கி மருந்து கொடுத்தல்வேண்டும்.

வாந்தி எடுப்பதற்கும், மலத்தை வெளிப்படுத்துவதற்கும் உள்ள மருந்து,

சுகபேதி மருந்து

சுத்தித்த வாளம்	35 கிராம்
முற்றிய தேங்காய்	1

மேற்கூறப்பெற்ற சுத்தித்த வாளத்தை தேங்காயின் கண் திறந்து உள்ளிருக்கும் நீர்போக்கி அதனுள் வைத்து ஆப்புவைத்து மூடி அதன் ஓரங்களில் மெழுகுவைத்தடைத்து, குப்பை எருவில் ஒருமுழ ஆழத்திற்குக் கீழ் புதைத்து வைத்து 8ஆம் நாள் எடுத்து சிறட்டைப்போக்கி மருந்தையும், தேங்காயையும் குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ அரைத்து வழித்தெடுத்து ஒரு பீங்கானில் ஒரு புறமாகத் தட்டிவைத்து சூரிய ஒளியில் வைக்க தைலம் இறங்கும். இத்தைலத்தை பாட்டிலில் பத்திரப்படுத்தவும்.

மேற்படி தைலத்தை ஒரு மல்லிகைப் பூவில் குச்சியால் எடுத்துத் தடவி முகர்ந்து கொண்டிருந்தால் பேதியாகும்.

பேதி அதிகமானால் மோர்சாதம் சாப்பிட்டு, சந்தனம் வயிற்றில் பூச பேதி நின்றுவிடும்.(அனுபவம்: சரபேந்திரர் முறை)

குறிப்பு: பூவை எத்தனைமுறை நுகருகிறோமோ அத்தனைமுறை பேதியாகும்.

குடிநீர்

கீழ்க்காய்நெல்லி (சமூலத்துடன்)	1 பிடி
நீர்முள்ளிவிதை	17½ கிராம்
கடுக்காய்த்தோல்	,,
நெல்லிக்காய்த்தோல்	,,
தான்றிக்காய்த்தோல்	,,
சந்தனம்	8¾ கிராம்
சிவனார்வேம்பு	17½ கிராம்
பொற்றலைக் கரப்பான் (சமூலத்துடன்)	1 பிடி
பொன்னாவாரை	17½ கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகள் அனைத்தையும் ஒரு உரலிலிட்டு ஒன்றிரெண்டாக சிதைத்து பாத்திரத்திலிட்டு, 2லிட்டர் தண்ணீர்விட்டு அடுப்பில் வைத்து 1/8 படியாக சுண்டவைத்து இறக்கி ஆறவைத்து கையினால் நன்கு பிசைந்து வடிகட்டி எடுத்துக்கொள்ளவும்.

அளவு: 50 மில்லி (வேளைக்கு) நாளொன்றுக்கு மூன்றுவேளை.

பத்தியம்: உப்பு, புளி, காரம் இவைகளை நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

தீரும் நோய்: சகலவிதமான காமாலை நோய்களும் குணமாகும்.

கிட்டச்செந்தூரம்

கிட்டம் 35கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்தை முறைப்படி சுத்திசெய்து குழி அம்மியிலிட்டு சிறுகாஞ்சொறி சமூலத்துடன் இடித்து

எடுத்த சாற்றுடன் நன்கு நெகிழ 12 மணிநேரம் அரைத்து வில்லைதட்டி, வெய்யலில் உலர்த்தி அகலில் வைத்து, மேல் அகல்மூடி சீலைசெய்து, 10 எருவில் புடமிட்டெடுக்க செந்தூரிக்கும். இச்செந்தூரத்தை குழியம்மியிலிட்டு பொற்றலைக் கரப்பான்சாறு, கீழ்க்காய் நெல்லிச்சாறு, நாவல்பட்டை குடிநீர் ஒவ்வொன்றும் முறையே 4 மணிநேரம் கொடுத்தரைத்து வில்லைதட்டி, உலர்த்தி 15 எருவில் புடமிட்டெடுக்க உயர்ந்த செந்தூரமாக இருக்கும்.

அளவு: 1 முதல் 3 குன்றிமணியெடை (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: செந்தூரத்தைத் தேனில் குழைத்து உட்கொண்டு கீழ்காய் நெல்லி குடிநீர் மேற்கூறிய அளவுப்படி சாப்பிடவேண்டும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும். எண்ணெய், நெய், வெண்ணெய் போன்ற கொழுப்புப் பொருட்களையும் நீக்கவேண்டும்.

முடிந்தால் பாலன்னம் உட்கொள்வதே சாலச்சிறந்த தாகும்.

தீரும்நோய்: மேற்கூறியபடி இச்செந்தூரத்தை உட்கொண்டு வந்தால் 13வகை காமாலையும் தீரும் என கூறப்படுகிறது. (சரபேந்திரரின் வைத்தியமுறை)

இந்நோய்க்கு சலாசத்து பற்பம், வெடியுப்புச் சுண்ணம், வெடியுப்புச் செந்தூரம், அயச்செந்தூரம், கிட்டச்செந்தூரம், அன்னபேதிச் செந்தூரம் முதலிய மருந்துகளையும் அளவிட்டு தக்க துணைமருந்துகளுடன் கொடுக்க நோய் எளிதில் தீரும். இந்நோயுற்றவர்களை உடனடியாகக் கவனிக்காவிடில் உயிருக்கு ஆபத்தேற்படும்.

குன்மம்

வாயுகுன்மம்	வலிகுன்மம்
பித்த குன்மம்	எரிகுன்மம்
சூலை குன்மம்	சத்தி குன்மம்
சன்னிகுன்மம்	ஐய குன்மம்

இந்நோய் செரியாமை, வயிற்றில் எரிச்சல், வாந்தி, உடல் வன்மை குறைதல், உடல் இளைத்தல், மனம் குன்றல் ஆகிய குணங்களை உடைய நோயாகும்.

இந்நோய் பெரும்பாலும் ஆண்களுக்கு 25 வயது முதல் 45 வயது வரையில் வரக்கூடிய நோயாகும். சிறுபான்மை பெண்களுக்கும் வருவதுண்டு. முதிர்ந்தவர்கட்குத் திடீரென பசியில்லாமல் வாய் குமட்டல், வாந்தி, செரியாமை, புளி ஏப்பம் முதலியன உண்டாக்கி நோயை வன்மையுறச் செய்யும். வயிறு பளுவாக எப்பொழுதும் தோன்றும். வயிறு புரண்டு வலிக்கும். வலியின் கொடுமை தாங்கமுடியாது. வாந்தி எடுத்தால் சற்று குணமாவது போல் தோன்றும்.

இந்நோய்க்கான மருத்துவத்தின் முதற்கண் தன்னிலை திரிந்த குற்றங்களையும், வாயுவையும் தன்னிலைப் படுத்துவதற்காக வாந்தி, கழிச்சல் முதலானவற்றை எழச்செய்து பின் நோய்க்கான மருந்துகளைக்கொடுத்து நோயைத் தவிர்க்க வேண்டும்.

இந்நோயுற்றவர்கள் முதலாவதாக உட்கொள்ளும் உணவை அளவுடன் உட்கொள்ள வேண்டும்.

வாந்திக்குடிநீர்

வசம்பைத் தட்டி முறைப்படி குடிநீர் வைத்து அதில் 1 சங்களவு உட்கொண்டால் வாந்தியுண்டாகும்.

கழிச்சல் குடிநீர்

கொட்டைத் திராட்சை, சீரகம், ஓமம், நில் ஆவாரை, அதிமதுரம், கடுகுரோகிணி, சுக்கு, கடுக்காய்த்தோல், பனங்கற்கண்டு இவைகளை சமனெடையாக எடுத்து குடிநீர் வைத்து எட்டிலொரு பங்கான பின் இறக்கி வைத்துக்கொண்டு 100 மில்லி குடிநீர் அருந்த கழிச்சலை உண்டுபண்ணும்.

சூரணம்

1. இஞ்சித்தோலை நீக்கிக் குறுக அரிந்து வெய்யிலில் உலர்த்தி நெய்விட்டு இளவறுப்பாக வறுத்து இடித்து வடிகட்டிய பொடி 350 கிராம்.

2. பிரண்டையை மோரிலிட்டு உப்பிட்டு வற்றலாக்கிய பொடி 175 கிராம்.

3. கொத்துமல்லி	17½ கிராம்
4. சீரகம்	,,
5. சிறுதேக்கு	,,
6. சிற்றரத்தை	,,
7. பெருஞ்சீரகம்	,,
8. குரோசாணி ஓமம்	,,
9. அரிசி திப்பிலி	,,
10. மிளகு	,,

மேற்கூறிய 3 முதல் 10 வரையுள்ள கடைச்சரக்குகளை இளவறுப்பாக வறுத்து இடித்துத் தூள்செய்து வடிகட்டி இஞ்சிப்பொடி, பிரண்டைப்பொடி எல்லாவற்றையும் கலந்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: ஒருதேக்கரண்டி, மூன்றுவேளை.

துணைமருந்து: தேன், சர்க்கரை, தண்ணீர், மோர்.

தீரும்நோய்: எண்வகை குன்மம்.

குன்ம குடோரி இலேகியம்

இந்துப்பு	கல்லுப்பு
சோற்றுப்பு	உவர்மண் உப்பு
வளையலுப்பு	வெங்காரம்
வெடியுப்பு	கம்பிச்சாரம்
சுக்கு	மிளகு
ஓமம்	கிராம்பு
கோட்டம்	காயம்
அரிசி திப்பிலி	

மேற்கூறிய 15 சரக்குகளையும் வெய்யிலில் நன்றாக உலர்த்தி இடித்துத் தூள்செய்து வடிகட்டி எடுத்து குழியம்மியிலிட்டு அதனுடன் பனைவெல்லம், தோல் நீக்கிய பூண்டு வகைக்கு 175 கிராம் சேர்த்து குன்மகுடோரி இலையை நிழலில் உலர்த்தி தூள்செய்தது 70 கிராம் எல்லாவற்றையும் மறுமுறை 12 மணி நேரம் நன்றாக நெகிழ அரைத்து அதனுடன் 175 கிராம் தேனைவிட்டுப் பிசைந்து எடுக்க சிறந்த லேகியமாகும்.

அளவு: சுண்டைக்காயளவு, காலை, மாலை, இருவேளை.

தீரும்நோய்: சூதகவாயு, குன்மம், பித்தவாயு, மந்தம், செரியாமை.

செம்புச் செந்தூரம்

செம்பை முறைப்படி சுத்திசெய்து ஆட்டுத்தும்மட்டிக் காய் 25 இடித்துப் பானையிலிட்டு செம்பை அதனுடன் 48நாள் ஊறவைத்து எடுத்து, ஆடுதீண்டாப்பாலையை சமூலத்துடன் அரைத்து அதற்குள் செம்பைப் பொதிந்து ஓட்டிலிட்டு மேலோடு மூடி சீலைமண் செய்து 25 எருவில் புடமிட்டெடுக்க செம்பு களங்காகும். இதைக் குழியம்மியிலிட்டு வெள்ளெருக்கின் பால்விட்டு நன்றாக நெகிழ மெழுகு பதத்தில் அரைத்து வில்லைதட்டி உலர்த்தி இரண்டு

கெந்தகக் கிண்ணங்கள் செய்து அதனுள் செப்பு வில்லையை வைத்து கந்தக மயனத்திலேயே சந்துவாய் பொதிந்து சீலைசெய்து 100 எருவில் புடமிட்டெடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: அரிசி எடை, காலை, மாலை இருவேளை.

துணை மருந்து: நெய், தேன், வெண்ணெய்.

பத்தியம்: புளி, புகை, போகம்.

தீரும்நோய்: எண்வகைக் குன்மம்.

கெந்தகக்கிண்ணம் செய்முறை

நெல்லிக்காய் கெந்தகத்தை குழியம்மியிலிட்டு தைவேளைச்சாறுவிட்டு 5 நாட்கள் அரைத்து நமக்குத் தேவையான அளவில் கிண்ணங்கள் செய்துகொள்ளலாம். (நெருப்பிற்கு நிற்கும்) அனுபவமுறை.

சூலைநோய்

சூலம் என்னும் கருவியால் குத்துங்கால் உண்டாகும் வலியையொத்த வியாதிக்கு சூலைநோய் எனப்பெயர் உண்டாயிற்று. இந்நோய் பதினைந்து வகைப்படும்.

மேகசூலை
வாத சூலை
சிலேற்றும சூலை
உக்கார சூலை
உலர்த்து சூலை
கணச்சூலை
பக்கசூலை
தூரசூலை
முறிச்சூலை
பித்த சூலை
ஆம சூலை
குன்மசூலை
நிதம்பச்சூலை
சுரச்சூலை
கர்ப்பசூலை

இந்நோயானது மிகச்சூடான உணவுகளை உட் கொள்ளல், துவர்ப்புப் பொருள்களை அதிகமாக உட்கொள்ளல், மனச்சலிப்புக் கொள்ளல், புகைபிடித்தல், அளவுக்கு மீறிய கலவி, கலவிக்குப்பின் குளிர்ந்தநீர் அருந்தல், மனச்சோர்வடைதல் முதலான காரணங்களால் சூலைநோய் பிறக்கிறது.

இந்நோயானது கை,கால் கடுத்து; குடைச்சல் ஏற்பட்டுக் கீல்கள் சிவந்து வீங்கி குத்தலுடன் வலி ஏற்பட்டு உடலுறுப்புக்களை நீட்ட மடக்க முடியாத நிலைமை உண்டாக்கும். மேலும் சுரம் ஏற்பட்டு மலம் தடைபடல், உடலில் எரிச்சல் உண்டாதல், உதடு சிவந்து காணல் முதுகுத்தண்டில் வலி உண்டாதல். வயிற்றில் எரிச்சல், அறிவு மயங்கல் முதலான காரணங்களாலும் மற்றும் குன்ம நோய்களுக்குத் துணை நோயாகவும் இந்நோய் பிறப்பதுண்டு.

மேற்கூறிய சூலைநோய் பதினைந்தில் 9 வகை நோய், எளிதில் குணமாகும். ஏனைய 6வகைச் சூலைநோய் குணமாகாது.

இந்நோயைப் போக்குவதற்கு மாத்திரை, மெழுகு, பற்ப செந்தூரங்களைக்கொண்டும், தைலம், பூச்சி, ஒற்றடம் ஆகிய புற மருந்துகளைக் கொண்டும் குணப்படுத்த வேண்டும்.

1. விஷ்ணுச்சக்கரம், 2. நந்திமெழுகு, 3. இரசபற்பம், 4.அயச்செந்தூரம், 5. ஆறுமுகசெந்தூரம், 6. பிண்டத்தைலம், 7. மயனத்தைலம், 8. ஒற்றடம் (புறா எச்சம்)

திருமால் சக்கரம் (விஷ்ணு சக்கரம்)

இரசம்	35 கிராம்
சாதிலிங்கம்	,,
நாபி	,,

பச்சைக்கற்பூரம்	35 கிராம்
பொன்னிதாரம்	35 கிராம்
காந்தம்	,,
மனோசிலை	,,

மேற்கூறிய மருந்துகளை முறைப்படி சுத்திசெய்து குழியம்மியிலிட்டு ஒன்றன்பின் ஒன்றாக நெகிழ அரைத்து பின் வேப்பம் பழத்தின் சாறுவிட்டு 4 சாமம் (10 மணிநேரம்) மீண்டும் அரைத்து குன்றிமணி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: 1 முதல் 3 மாத்திரை, காலை, மாலை இருவேளை.

துணை மருந்து: திரிகடுகு சூரணம், தேன், இஞ்சிச்சாறு.

தீரும்நோய்: வாதநோய், சுரம், சன்னி.

இரச பற்பம்

35 கிராம் இரசத்தை முறைப்படி சுத்திசெய்து வெள்ளைமுள் முருக்கன்பூச்சாறுவிட்டு 4 சாமம் (10 மணி நேரம்) நன்றாக நெகிழ அரைத்து சிறு வில்லைகளாகத் தட்டி வெய்யிலில் உலர்த்தி, உலர்ந்த வில்லைகளை ஓட்டிலிட்டு மேலோடுகொண்டு மூடி சீலைமண் செய்து 5 எருவில் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

அளவு: அரிசி எடை,காலை, மாலை இருவேளை.

துணை மருந்து: திரிகடுகு, சூரணம், தேன், பனை வெல்லம்.

தீரும் நோய்: சூலை நோய்கள்.

அயவீரச் செந்தூரம்

இரும்புத்தூள்	35 கிராம்
இரசம்	,,
விரம்	,,
கம்பிச்சாரம்	,,

மேற்கூறிய சரக்குகளை முறைப்படி சுத்திசெய்து குழியம்மியிலிட்டு நன்றாக நெகிழ 3 நாள் அரைத்து, எடுத்து ஒரு அடி கனமுள்ள சட்டியில் போட்டு அடுப்பேற்றி சிறு தீயிட்டு புதிய தென்னந் துடைப்பங்கொண்டு வறுத்து எடுக்கச்செந்தூரமாகும்.

அளவு: அரிசி எடை, காலை, மாலை இருவேளை.

துணைமருந்து: தேன், திரிகடுகு சூரணம், பனை வெல்லம்.

தீரும்நோய்: சூலை, குட்டம், வாதநீர் விடக்கடிகள், பாரிசவாதம், வாதக்குடைச்சல்.

ஆறுமுகச் செந்தூரம்

இரசம்	25 கிராம்
காந்தம்	35 கிராம்
கெந்தகம்	45 கிராம்
வெங்காரம்	40 கிராம்
இந்துப்பு	20 கிராம்
அயப்பொடி	60 கிராம்

மேற்கூறிய சரக்குகளனைத்தையும் முறைப்படி சுத்திசெய்து கற்றாழம்பால் விட்டு 5 நாட்களும், செம்பருத்திப்பூ அல்லது செம்பருத்தி இலைச்சாறு விட்டு 3நாட்களும் நன்றாக நெகிழ அரைத்து சிறு வில்லைகளாகத் தட்டி ஓர் வாயகலமான சட்டியிலிட்டு மேல் சட்டியால் மூடி 20 மணிநேரம் கமலாக்கினி, தீபாக்கினி, காடாக்கினியாக முறையே எரித்தெடுத்துப் பார்க்க மாதுளம்பூ நிறத்தில்

வில்லைகள் சிவந்திருக்கும். இந்த வில்லைகளை கல்வத்திலிட்டு நன்றாக நெகிழ அரைத்து எடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: அரிசி எடை, காலை, மாலை இருவேளை.

துணை மருந்து: திரிகடுகுச் சூரணத்துடன் தேன்கலந்து உட்கொள்ளவேண்டும்.

பத்தியம்: புளி நீக்கிய உணவு.

தீரும்நோய்: அரைவாதம், விரைவாதம், மூலம், எரிகுன்மம், வெரட்சி, அனல்வெடி, சூலை, மார்சூலை, கர்ப்பச்சூலை, பாண்டு, சோகை, கிரந்தி, குடல்வாதம், அதிசாரம், கண்டமாலை.

நாதகுரு தைலம்

நெல்லிக்காய் கெந்தி	175 கிராம்
வெடியுப்பு	70 கிராம்
கம்பிச்சாரம்	7 கிராம்
பொன்னரிதாரம்	9¾ கிராம்
வீரம்	11¼ கிராம்
பூரம்	3½ கிராம்

மேற்கூறிய சரக்குகளை குழி அம்மியில் ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்த்து அரைத்து பிறகு பசுவின் நெய்விட்டு 120மணி நேரம் (ஐந்து நாள்) அரைத்து குழித்தைலமாக இறக்கிக்கொள்ளவும். இத்தைலத்திற்கு நாதகுருத் தைலம் என்று பெயர்.

அளவு: 5 முதல் 10 சொட்டுகள், காலை, மாலை இருவேளை.

துணைமருந்து: தவிடு, சர்க்கரை, திரிகடுகுச் சூரணம்.

தீரும் நோய்கள்: சூலை குட்டம், விடக்கடிகள், பாரிசவாதம், இளம்பிள்ளை வாதம், உடலில் சுரக்கும் உப்புநீர் முதலிய நோய்கள் குணமடையும்.

குறிப்பு: இத்தைலம் சரும நோய்களுக்கும், சரீரத்தில் சுரக்கும் உப்புநீர் போன்ற நோய்க்கும் கைகண்டதாகும்.

வான் மெழுகு

இரசம்	3½ கிராம்
இரசசெந்தூரம்	,,
நெல்லிக்காய் கெந்தி	,,
வீரம்	,,
கௌரி	,,
வெள்ளைப்பாடாணம்	,,
மிருதார்சிங்கி	,,
பூரம்	,,
வெள்ளி	,,
லிங்கம்	,,
அபின்	,,
சுத்திசெய்த வாளம்	,,
காந்தம்	,,
சாம்பிராணி	,,
சூடம்	,,
தங்கம்	,,

மேற்கூறிய பதினாறு சரக்குகளை குழியம்மியிலிட்டு நன்றாக நெகிழ அரைத்துத் தூள்செய்து நாதகுருத் தைலம் விட்டு 72மணி நேரம் நெகிழ அரைத்து எடுக்க மெழுகாகும்.

அளவு: உளுந்து பிரமாணம், காலை, மாலை இருவேளை.

துணை மருந்து: பனை வெல்லம்.

தீரும்நோய்: கபவாதம், சன்னி, சுரம், எண்வகை காசநோய், குட்டநோய்கள், விரைவாதம், சூலை, இரணம், ஈழை, தோடம், எண்வகை குன்மம், நெஞ்சுவலி, மாரடைப்பு, சூதகம், மகோதரம், சோகை, மஞ்சட்காமாலை, வாந்தி, கல்லடைப்பு, பவுத்திரம், தலைவலி, கிரந்தி, கண்டமாலை, நீரிழிவு முதலிய நோய்கள் குணமாகும்.

மயனத்தைலம் (மெழுகுத்தைலம்)

மஞ்சள்மெழுகு	1400 கிராம்
சக்கிக்கல்	1400 கிராம்
சோற்றுப்பு	1400 கிராம்
மணல்	700 கிராம்
ஓமம்	175 கிராம்
கஸ்தூரிமஞ்சள்	175 கிராம்
சடாமாஞ்சில்	87½ கிராம்

மேற்கூறிய சரக்கில் மெழுகை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி வைத்துக்கொள்ளவும். பிறகு சக்கிக்கல் மஞ்சள் இவைகளை தனித்தனியே நன்றாக இடித்துத் தூளாக்கி ஒன்றுசேர்த்து கழுத்து நீண்டு வாய் குறுகலான பானையிலிட்டு மற்றொரு கழுத்து நீண்ட சிறிய பானையில் மேற்படி பானையைப் பொருத்தி 7 சீலைமண் செய்து சிறிய பானையின் வயிற்றில் துவாரமிட்டு அடுப்பில் பானையை சாய்வாக வைத்தெரிக்கத் துவாரத்தின் வழியாகத் தைலம் இறங்கும்.

உபயோகம்: நோயுற்ற இடங்களில் தேய்த்துத் தடவி ஒற்றடம் கொடுத்துவர குணமாகும்.

தீரும்நோய்: குழந்தைகளுக்கு ஏற்படும் இசிவு, வீக்கம், பாரிசவாயு, வெட்டுக்காயம், அண்டவீக்கம், நரிதலை வாதம், நரம்புத்தளர்ச்சி முதலியன.

மஞ்சிட்டித் தைலம்

தண்ணீர்	4 லிட்டர்
நல்லெண்ணெய்	1 லிட்டர்
மஞ்சிட்டி	75 கிராம்
நன்னாரி	75 கிராம்

மேற்கூறிய மஞ்சிட்டி நன்னாரி இரண்டினையும் தயிர் வடிகட்டிய நீர்விட்டு நன்றாக நெகிழ அரைத்து பிறகு நல்லெண்ணெய், தண்ணீர் இரண்டையும் ஒரு பானையிலிட்டு அடுப்பேற்றி சிறுதீயிட்டு மெழுகு பதத்தில் காய்ச்சி இறக்கும்போது தேன்மெழுகு 50 கிராம், வெள்ளைக் குங்கிலியம் 50 கிராம், இரண்டையும் சேர்த்துக் கொதித்தவுடன் வடித்திறுத்தெடுத்துக் கொள்ள உயர்ந்த தைலமாகும்.

இத்தைலத்தை நோயுற்ற பாகத்தில் தடவி பீச்சங்கு இலையைக் கொண்டுவந்து துணியில் பரப்பி அதன்மேல் கூட்ட செங்கல்லை வைத்து ஒற்றடம் கொடுக்க குணமாகும்.

வேறுமுறை: இத்தைலத்தை தேய்த்து புறாவின் எச்சத்தில் நீர் தெளித்து வறுத்து ஒத்தடம் கொடுக்க குணமாகும்.

மகோதரம்

இந்நோயைப் பெருவயிறு, பெரும்பண்டி எனவும் கூறுவர்.

இந்நோய் நாம் உட்கொள்ளும் உணவுப் பொருட்களில் உமி, கல், மண், மயிர் இவைகள் கலந்த உணவை உட்கொள்ளுவதாலும், போதைப் பொருட்களை அதிகமாக உட்கொள்ளுவதாலும், அசீரணத்தாலும், கெட்டநீர்களை (காய்ந்த இலைகள், சருகுகள் விழுந்து அழுகிய நிலையில் உள்ள நீர்,) உட்கொள்ளுதலினாலும் இந்நோய் உண்டாகிறது.

இந்நோயை 32 வகைகளாகப் பிரித்துள்ளனர்

வாதமகோதரம்	பித்தமகோதரம்
கப மகோதரம்	வாத கப மகோதரம்
பித்த கப மகோதரம்	மகாமகோதரம்
முக்குற்ற மகோதரம்	கல் மகோதரம்
வில் மகோதரம்	வலுவை மகோதரம்
நழுவை மகோதரம்	நீராம்பல் மகோதரம்
ஊராம்பல் மகோதரம்	வெப்புப்பாவை மகோதரம்
குலைமுட்டி மகோதரம்	கீழ்க்கவிச்சை மகோதரம்
பழுகவிச்சை மகோதரம்	சூழ்மகோதரம்
வல்லைமகோதரம்	நஞ்சுமகோதரம்
சோகை மகோதரம்	காமாலை மகோதரம்
ஆமை மகோதரம்	பாண்டு மகோதரம்
உதிர மகோதரம்	சுர மகோதரம்
பெருவயிறு மகோதரம்	குன்ம மகோதரம்
நீர் மகோதரம்	சதை மகோதரம்
மேல்கவிச்சை மகோதரம்	பக்க கவிச்சை மகோதரம்

என 32 ஆக நூல்கள் கூறுகின்றன.

மேற்கூறிய 32 மகோதரங்களில் 16 வகை மகோதரங்கள் தக்க மருத்துவத்தில் குணமடையும் ஏனைய 16 நோய்களும் குணமாவது கடினமாகும்.

இந்நோயில் வயிறானது முன்புறமாக பெருத்துக் கொண்டே வந்து நீர் பெருகப்பெருக மேல் நோக்கி மார்பு வரையும் வயிற்றின் இரு பக்கங்களிலும் முட்டிப்பெருக்கும். தோல் விரிந்து, வெளுத்து, கோடுகோடாகக் காணப்படும். தொப்புளும் மெலிந்து தோலோடு தளதளத்து காணும் மேலும் தொடை, கை, கால், விரை ஆண்குறி இவைகளில் நீர் சுரந்து பளபளத்துக் காணும். மேல் மூச்சும் எழும்.

இந்நோய் வருவதற்கு முன் பித்தமும், வாதமும் கூடி உதான வாயுவைத் தூண்டி புளி ஏப்பம் வாந்தி, வாய் குமட்டல், சுவையின்மை ஆகியவற்றை உண்டாக்கி

உட்கொண்ட உணவு செரிக்காதவாறு உணவின் சாரத்தையும், இரத்தத்தையும் பரவ ஒட்டாதவாறு செய்து இரத்தத்தைக் கேடடையச் செய்து உடலின் வன்மை, மை முதலியவற்றைக்கெடுத்து சரீரம் வீங்கும். இக்காற்றானது வயிற்றுக்குள் சென்று பல துன்பங்களை விளைவிக்கும்.

இந்நோயுற்றவர்களுக்கு அதிகப்படியான குற்றங் களைத் தன்னிலைப்படுத்துவதற்கான மருந்துகளைக் கொடுத்து வாயுக்களினால் கட்டுப்பட்ட மலம், நீர் இவைகளை வெளியாக்கி கெட்டுப்போன இரத்தத்தின் தன்மை, நிறம் முதலியவைகள் திரும்பப்பெறவும் வைத்தியம் செய்யவேண்டும்.

மருத்துவம்

மலம், நீர் இவைகளை வெளிப்படுத்துவதற்கு

நேர்வாளக் கொட்டையை உடைத்து முளையை எடுத்து சுத்திசெய்து எருமைப்பால் விட்டு மை போலரைத்து ஒருபடி பாலில் கலந்து காய்ச்சி பிரைக்குத்தி கடைந்து வெண்ணெய் எடுத்து உருக்கி நெய்யை பத்திரப்படுத்தவும். நெய்யை மேற்படி ரோஜாப்பூவில் தடவி முகர பேதியாகும். பேதி அதிகமானால் மோர் சாதம் சாப்பிட்டு, சந்தனம் வயிற்றில் பூச பேதி நிற்கும்.

வீக்கமுற்றிருக்கும் சரீரத்தின் குடிநீர்

வெள்ளைக் காக்கரட்டான்வேர்	35 கிராம்
நெருஞ்சிமுள்	17½ கிராம்
சுரக்கொடி	,,
நீர்முள்ளி வித்து	,,
அவுரிவேர்	,,
மாமாலைத் தண்டு	35 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளை ஒரு பாத்திரத்திலிட்டு 2 லிட்டர் தண்ணீர்விட்டு 100 மில்லியாக வற்றவைத்து

வற்றவைத்த குடிநீரை தினம் மூன்று வேளை கொடுக்க வீக்கம் வாடும்.

தேங்காய் மெழுகு

ஜாதிலிங்கம்	17½ கிராம்
ரசம்	,,
பூரம்	,,
இந்துப்பு	,,
கல்லுப்பு	,,
வளையலுப்பு	,,
அட்டுப்பு	,,
கரியுப்பு	,,
மூங்கிலுப்பு	,,
கம்பிச்சாரம்	,,
பூநீர் உப்பு	,,
பிரண்டை உப்பு	,,
குமட்டியுப்பு	,,
உரித்த பூண்டு	52½ கிராம்
சுத்தித்த வாளம்	17½ கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளை குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ அரைத்து முற்றிய தேங்காயின் கண் திறந்து நீர் போக்கி அரைத்த மருந்தை உள்வைத்து ஆப்பிட்டு மூடி சிவந்த பசுவின் சாணத்தில் பொதிந்து புடமிட்டு சாணி கருகி சிரட்டையில் நெருப்பு பற்றும் சமயத்தில் தேங்காயை வெளியிலெடுத்து சிரட்டையைப் போக்கி, இருப்புச் சட்டியை அடுப்பில் வைத்து சிறுதீயிட்டு மேற்படி மருந்தை சட்டியில் இட்டு சிறிதளவு விளக்கெண்ணெய் ஊற்றி நன்றாக கிளறி மெழுகு பதத்தில் இறக்கி பத்திரப்படுத்தவும்.

அளவு: துவரம்பருப்பளவு, காலை, மாலை இருவேளை, மேற்கூறிய மகோதர நோய்கள் யாவற்றிற்கும் சரீர வன்மைக்கேற்ப மருந்தை அளவிட்டுக் கொடுக்க குணமடையும்.

பத்தியம்: வெந்நீரும் சோறும், உப்பை வறுத்துக் கூட்டிகொள்ளவும். பசுவின்பால், பசுமோர், சிறுகீரை, முருங்கைப்பிஞ்சு, கத்திரி, அவரை, பாசிப்பயறு முதலியன சேர்த்துக்கொள்ளவும்.

பசு மூத்திர நில ஆவாரைச் சூரணம்

ஈனாத கிடேரியின் பசுமூத்திரம்	2 லிட்டர்
கடுக்காய்த்தோல்	350 கிராம்
சுக்கு	175 கிராம்
நில ஆவாரை	175 கிராம்

மேற்கூறப்பெற்ற கடுக்காய்த்தோல், சுக்கு, நில ஆவாரை யாவற்றையும் பசுநீரில் 15 தினங்களுக்கு குறைவில்லாமல் ஊறவைத்து வெய்யிலில் உலர்த்தி இடித்து தூள்செய்து எடுத்துக்கொண்டு இதன் எடையில் கால்பாகம் பொறித்த இந்துப்புவை சேர்த்து ஒன்று கலந்து பத்திரப்படுத்தவும்.

இச்சூரணத்தை தக்க அனுபானங்களில் வேளைக்கு ½ தேக்கரண்டி அளவு கொடுக்க நோய் எளிதில் குணமடையும்.

குறிப்பு: இதற்குறிய (இந்நோய் குணமடைவதற்குரிய) மருந்துகளாகிய லோகமண்டூரம், வங்கபற்பம், காந்தச்செந்தூரம், வெடியுப்புச் சுண்ணம், நவச்சார சுண்ணம் முதலியவைகளை மருந்து செய்முறைகளைக் கொண்டு அறிக.

குமரக நோய்

இந்நோய்க்கு மார்புநோய், இருதயநோய் என வேறு பெயர்கள் உண்டு.

இந்நோய் மார்புவலி, பெருமூச்சு, மூக்கடைப்பு, இளைப்பு, களைப்பு, கை, கால் வீக்கம் முதலிய குறிகுணங்களை உண்டாக்கும்.

இந்நோயானது வாயுவை உண்டாக்கும் உணவுகளை உட்கொள்ளுதலாலும், முறைதவறிய நடத்தைகளாலும், அளவிற்கு மீறிய சேர்க்கையாலும் வாதம் மிகுந்து வாயுக்கள் தன்னளவில் மிகுதலாகும் இந்நோய் பிறக்கின்றது. அன்றியும் தாய், தந்தையர்களின் வழியிலும் சில நோய்களின் துணை நோயாகவும் வருதலுண்டு.

இந்நோயை ஐந்து வகைகளாப் பிரித்துள்ளனர். இந்நோயானது வாதத்தமரகம், பித்தத்தமரகம், கபத்தமரகம், முக்குற்றத்தமரகம், புழுத்தமரகம் என ஐந்து வகைப்படும்.

மருத்துவம்

தன்னளவிற்கு மிகுதியான குற்ற வேறுபாடுகளைத் தன்னிலைப்படுத்தற்கான மருந்துகளைக் கொடுத்து இரத்தத்தை மிகச்செய்து உடலுக்கு வன்மையளிக்கும் பற்பம். செந்தூரம் முதலான மருந்துகளைக் கொடுக்கவேண்டும்.

அயச்செந்தூரம்

அயம்	50 கிராம்
வீரம்	25 கிராம்

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டுப் படிக்காரத் திராவகம் விட்டு நன்றாக மெழுகுபதமாகும் வரை அரைத்து சிறுவில்லைகளாகத் தட்டி வெய்யிலில் நன்றாகக் காயவைத்து மீண்டும் அவ்வில்லைகளைக் குழியம்மியிலிட்டு வெண்ணாவல்பட்டைச்சாறு, பொற்றலை கரப்பான் சாறு, மொந்தன் வாழைப்பூச்சாறு இவைகளை முறையே 200மில்லி சாறு வீதம் ஒன்றன்பின் ஒன்றாகவிட்டு நன்றாக அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து அகலில் வைத்து மேல்அகல் மூடி 7 சீலைமண் செய்து சீலை காய்ந்தபின் 1½முழ உயரத்திற்கு எருவடுக்கி புடமிட்டெடுக்க உயர்ந்த செந்தூரமாகும். இதைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்தெடுத்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: அரிசி எடை, காலை, மாலை இருவேளை.

துணைமருந்து: தேன், லேகியம்.

தீரும்நோய்: நரம்புத்தளர்ச்சி, தமரகநோய் முதலியவற்றை குணப்படுத்தும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

மூக்குஅடைப்பு நோய் [பீனிசம்]

இந்நோயுற்றவர்கட்கு மூக்கில் ஒருவகை எரிச்சலும், நமைச்சலும் தாங்கமுடியாதவாறு உண்டாவதால், மூக்கின் துவாரங்கள் சிவந்து, கண்கள் சிவந்து, தும்மல், நீர்வடிதல், தலைவலி, சளி, சீழ், இரத்தம் வடிதல் முதலியன ஏற்படும்.

இந்நோய் ஒன்பது வகைப்படும் என நூல்கள் கூறுகின்றன.

உணவு முதலியனவை உடலுக்கு ஒவ்வாத நிலையில் உடலானது வெப்பமடைந்து பித்தம் அதிகமாகி ஐயத்தைப் பெருக்கக்கூடிய செய்கைகளால் ஐயம், பித்தத்துடன் சேர்ந்து இந்நோய் உண்டாகிறது. மேலும் மூலச்சூடு அதிகமாவதாலும் இந்நோய் தோன்றும்.

இந்நோயின் பொதுக்குணம்

மூலாதாரத்தில் வெப்பம் மிகுதியாகி கபாலத்தில் நீரை ஏற்றி ஒரு நாசி அடைத்து ஒரு நாசியில் நீர்வடியும். அடிக்கடி தும்மல் உண்டாகும். பிடரியும், தலையும் கனத்து வலிக்கும். வாரந்தோறும் கபாலம் வறண்டு நீர் திரண்டு நாறும். தேகத்தில் வதுப்புக்காணும். நாக்கில் ருசியும், நாசியில் மணமும் கெடும். சிரசுநீர் நெஞ்சில் இறங்கிக் கட்டும்.

நிலக்கடம்புச்சாறு	1 லிட்டர்
ஆதொண்டைச்சாறு	500 மில்லி
குரட்டைப்பழச்சாறு	500 மில்லி
வெற்றிலைச்சாறு	,,
நெல்லிக்காய்ச்சாறு	,,
எலுமிச்சம்பழச்சாறு	,,
நாரத்தம்பழச்சாறு	,,
முசுமுசுக்கைச்சாறு	,,
நல்லெண்ணெய்	2 லிட்டர்

மேற்கூறிய சாறுகளையும், எண்ணெயும் கலந்து ஒரு பாத்திரத்திலிடவும்.

மிளகு	8¾ கிராம்
அதிமதுரம்	17½ கிராம்
கோஷ்டம்	,,
சண்பகப்பூ	,,
நற்சீரகம்	,,
வாய்விளங்கம்	,,
மல்லி	,,
வால்மிளகு	,,
இலவங்கம்	,,
தாளிசபத்திரி	,,
இலவங்கப்பட்டை	,,
கோரோசனை	,,
பச்சைக்கற்பூரம்	1 கிராம்
கஸ்தூரி	1 கிராம்

மேற்கூறிய 1 முதல் 11 வரையுள்ள கடைச்சரக்குகளை உரலிலிட்டு நன்றாக இடித்துத் தூள்செய்து அதனுடன் பசும்பால்விட்டு நன்றாக நெகிழ அரைத்து மேலே பாத்திரத்திலுள்ள தைலத்தில் கலந்து சிறுதீயாக எரித்து மெழுகுபதத்தில் வடித்திறக்கவும்.

இத்தைலத்தை வாரம் இருமுறை தலைமுழுகி வந்தால் பீனிசநோய் நீங்கி பூரண குணம் உண்டாகும்.

பத்தியம்: 1. தைலம் தேய்த்து வெந்நீரில் முழுகவேண்டும். (சூரிய உதயத்திற்குமுன்) 2. புளிநீக்கி உணவு உட்கொள்ளவேண்டும். 3. போகம் நீக்கவேண்டும்.

தொண்டைக்கட்டு [குரல் கம்மல்]

இந்நோய் நாம் பேசும் பேச்சொலி தாழ்ந்த குரலில் எழும். சிலசமயம் சப்தம் இல்லாமலும், கீச்சுக்குரலாகவும் மற்றைய நோய்களை அடிப்படையாகக்கொண்டும் வரும்.

இந்நோய் மிகுந்த குளிர்காற்றில் அலைந்து திரிவதாலும், அதிக குளிர்ச்சி பொருந்திய பொருட்களை உட்கொள்வதாலும் அதிக சூடுடைய வெந்நீர், காபி, டீ இவைகளை உட்கொள்ளுவதாலும், தொண்டையின் இருபக்கங்களிலும் சதை வளர்வதாலும், தொண்டை வீக்கமடைவதாலும், தொண்டையில் புண்கள் உண்டாவதாலும் இந்நோய் உண்டாகிறது. இந்நோய் 6 வகைப்படும். இதில் 3 வகை நோய்கள் எளிதில் தீராது.

மருத்துவம்

இந்நோயுற்றவர்கட்கு முதலில் மலத்தை வெளியாக்குவதற்கான பேதி மருந்து கொடுக்கவேண்டும்.

சுக்கு	35 கிராம்
கடுக்காய்	35 கிராம்
நிலஆவாரை	35 கிராம்
கொட்டை திராட்சை	35 கிராம்

மேற்கண்ட சரக்குகளை ஒரு பானையிலிட்டு ½ படி தண்ணீர்விட்டு 1\16 படியாக வற்றும்வரை நன்றாகக் காய்ச்சி வடித்திறுத்துக் காலையில் அல்லது இரவு படுக்குமுன் உட்கொள்ள இரண்டு மூன்றுமுறை பேதியாகும்.

மாத்திரை

லிங்கம்	17½ கிராம்
மிளகு	17½ கிராம்
திப்பிலி	8¾ கிராம்
கோஷ்டம்	8¾ கிராம்
தாளிசபத்திரி	17½ கிராம்
இலவங்கம்	8¾ கிராம்
அதிமதுரம்	8¾ கிராம்
கோரோசனை	3½ கிராம்
குங்குமப்பூ	,,
பச்சைக்கற்பூரம்	3½ கிராம்

மேற்கண்ட முதல் 7 சரக்கினையும் குழியம்மியிலிட்டு கம்மாறு வெற்றிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்துக் கொண்டு பிறகு 8 முதல் 10 வரை கூறிய சரக்கினையும் சேர்த்து 2நாள் அரைக்கவும். இவ்வாறே தாய்ப்பாலில் இரண்டு நாளும் இஞ்சிச்சாற்றில் இரண்டு நாளும் நன்றாக நெகிழ அரைத்து பயறளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: 1 முதல் 2 மாத்திரை, காலை, மாலை இருவேளை.

துணைமருந்து: வெற்றிலைச்சாறு, தேன், தாய்ப்பால்.

தீரும்நோய்: சுரம், கபகாசம், தாகம், சிறுநீர்நோய், தும்மல், குரல் கம்மல், தொண்டை அழற்சி முதலிய நோய்கள் குணமாகும்.

பெருங்கழிச்சல்

இந்நோய்க்கு மிகுக்கழிச்சல், அதிசாரம் என வேறு பெயர்களும் உண்டு.

நாம் உட்கொள்ளும் உணவு செரித்தும், செரியாமலும் கழிவதாகும். கீழ்க்குடலில் அழற்சி மிகுதலால் அங்கு தாங்கமுடியாமல் உடனே கழிந்துவிடும். உடலின் வன்மை குறைந்து உடல் மெலிவடையும்.

வயிற்றில் மந்தம் இருக்கும் காலத்தில் மாப்பண்டம் புலால் நெய் எண்ணெய் முதலியவைகளை அதிகமாக உட்கொள்ளுதலாலும், வயிற்றில் வாயுவானது தன்னளவில் மிகுதியாக உள்ளபொழுது பெண்களோடு சேர்தலாலும், பசித்தீகெட்டு வாத பித்தம் இரண்டும் கேடுறுதலால் அபானவாயு தூண்டப்பெற்று பெருங்கழிச்சல் உண்டாகின்றது.

வாதப்பெருங்கழிச்சல்

இந்நோயில் வயிற்றில் இரைச்சலுடன் வலியுண்டாகி காற்றுக்கூடி நீரிறங்காது. அடிக்கடி கழிச்சலுண்டாகும். செரியாமை, வாந்தி, மயக்கம், நாவறட்சி ஏற்பட்டு கழிச்சலானது நுரையும் கருமை நிறம் பொருந்தியதாகவும், கெட்டநாற்றத்தையும் பெற்றிருக்கும். அடிக்கடி புளித்த ஏப்பமும் உண்டாகும்.

இந்நோய்க்கு	பெருமரத்துப்பட்டை	8¾ கிராம்
	அதிவிடயம்	8¾ கிராம்
	கோரைக்கிழங்கு	8¾ கிராம்
	ஓமம்	8¾ கிராம்
	குழப்பாலைப்பட்டை	8¾ கிராம்

மேற்கூறிய சரக்குகளனைத்தையும் நன்றாக நெகிழ அரைத்து தயிர், காடி அல்லது பழச்சாறு இவைகளில் ஏதேனும் ஒன்றில் கலந்து கொடுக்க கழிச்சல் நிற்கும்.

சூரணம்

ஒருபலம் சீரகத்தை சுத்தமாக்கிக்கொண்டு ஒரு பீங்கானிலிட்டு சீரகம் முழுகுமாறு பொடுதலைச் சாற்றை ஊற்றி வெய்யிலில் உலர்த்தவும். பிறகு பொற்றலைக் கரப்பான் சாற்றில் ஊறவைத்துலர்த்தவும். மீண்டும் எலுமிச்சம்பழச்சாற்றில் ஊறவைத்து உலர்ந்தபின் எடுத்து நன்றாக இடித்துத் தூள்செய்து வடிகட்டிக்கொள்ள சூரணமாகும்.

அளவு: *1 தேக்கரண்டி, நாளொன்றுக்கு மூன்று வேளை.*

துணை மருந்து: *தேன், மோர், தண்ணீர்.*

பித்தப்பெருங்கழிச்சல்

இந்நோயில் சிலநேரம் சிவந்த நிறத்துடனும் பசுமையாகவும், மலம் கழியும். சில நேரங்களில் சீதத்துடன் இரத்தம் வீழும். ஆசனவாய்க் கடுத்து வலிக்கும். பசியிருக்காது. ஆகாரத்தை தள்ளும். வாந்தி, வியர்வை முதலியன உண்டாகும்.

மிளகு	17½ கிராம்
அதிவிடயம்	,,
சாதிக்காய்	,,
சாதிப்பத்திரி	,,
சாத்திரபேதி	,,
இலவங்கப்பட்டை	,,
கோரைக்கிழங்கு	,,
இந்துப்பு	,,
நற்சீரகம்	,,
காசுக்கட்டி	,,
மாதுளம் பிஞ்சு	,,
வில்வக்காய்ப்பிஞ்சு	,,
பெருமரத்துப்பட்டை	,,
ஆத்திப்பூ	,,

மேற்கூறிய சரக்குகளை சிறிது நேரம் வெய்யிலில் உலர்த்தி இடித்துத் தூள்செய்து வடிகட்டி எடுக்கச் சூரணமாகும்.

அளவு: தேக்கரண்டி நாளொன்றுக்க மூன்றுவேளை.

துணைமருந்து: தேன்.

பத்தியம்: கஞ்சி போன்ற உணவுகளையே உட்கொள்ள வேண்டும்.

கபப்பெருங்கழிச்சல்

இந்நோயில் மலம் வெண்மையும்,சீதமும், நுரையும் விழும், ஆசன்வாய் கடுக்கும். இரைச்சலுடன் வயிற்றில் வலி உண்டாகும். உணவைத் தள்ளும் இருமல் உண்டாகும்.

மாத்திரை

மாங்கொட்டைப்பருப்பு	10கிராம்
அபின்	,,
கருநாவி	,,
கஞ்சாவித்து	,,
அதிவிடயம்	,,
சாதிக்காய்	10கிராம்

மேற்கூறிய சரக்குகளை முறைப்படி சுத்திசெய்து கல்வத்திலிட்டு சீந்தில் குடிநீர்விட்டு நன்றாக நெகிழ அரைத்து சிறுபயறளவான மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தியெடுக்க சிறந்த மாத்திரைகளாகும்.

அளவு: 1 முதல் 3 மாத்திரை, காலை, மாலை இருவேளை.

துணைமருந்து: தேன்.

நிணக் கழிச்சல்

இந்நோய்க்கு ஊன்கழிச்சல், கொடிய கழிச்சல், நாறும் கழிச்சல், கிராணி பேதி எனப்பல பெயர்கள் உண்டு. இதில் பதினோரு வகைக் கழிச்சலுண்டு.

1. வாத நிணக்கழிச்சல், 2. பித்த நிணக்கழிச்சல், 3. அய்ய நிணக்கழிச்சல், 4. முக்குற்ற நிணக்கழிச்சல், 5. அழற்கால் நிணக்கழிச்சல், 6. குடற்கால நிணக்கழிச்சல், 7. கீழ்வாய்க் கழிச்சல், 8. குன்மக்கழிச்சல், 9. சூல் நிணக்கழிச்சல், 10. ஓட்டு நிணக்கழிச்சல். 11. எரிச்சல் நிணக்கழிச்சல்.

இந்நோய்கள் பெரும்பான்மையும் செரியா உணவாலும், மற்றைய வேறுபாடுகளாலும் உண்டாகும். இவை எளிதில் குணமடையாது. நீண்ட நாட்கள் உடலில் தங்கி வாட்டும். மேலும் ஆசனத்தில் ஏற்படும் புண், வெப்பு, முளை இவைகளாலும் இந்நோய் உண்டாவதுண்டு மற்றைய நோய்களாகிய சுரக்கழிச்சல், இளைப்பு நோய், வெளுப்பு நோய், ஈரல் நோய், பெருவயிறு முதலான நோய்களுக்குத் துணை நோயாகவும் வருவதுண்டு.

இந்நோய் உணவில் விருப்பம் இல்லாமை, செரியாமை, புளித்த ஏப்பம், அடிவயிற்றில் காற்று சேர்ந்து வயிறு ஊதி இரைதல், வயிறு வலித்தல், அடிக்கடி கழிதல் ஆகியகுணங்களைப் பெற்றிருக்கும்.

சுக்கு	35 கிராம்
மிளகு	,,
திப்பிலி	,,
அதிவிடயம்	,,
சிறுநாகப்பூ	,,
இலவங்கப்பட்டை	,,
சாதிக்காய்	,,
சாதிப்பத்திரி	,,

ஓமம்	35 கிராம்
சுண்டவற்றல்	17½ கிராம்
காயம்	35 கிராம்
உலர்ந்த பிரண்டை	70 கிராம்

மேற்கூறிய சரக்குகளனைத்தையும் உலர்த்தி நன்றாக இடித்து வடிகட்டிப் பத்திரப்படுத்தவும்.

அளவு: *1 சிட்டிகை, 3 வேளை.*

துணை மருந்து: தண்ணீர், புளித்தமோர்.

இலிங்க மெழுகு

இலிங்கம்	17½ கிராம்
கஞ்சா	,,
அபின்	,,
சாதிக்காய்	8¾ கிராம்
சாதிப்பத்திரி	,,
அதிவிடயம்	,,
சிறுநாகப்பூ	,,
வில்வப்பழச்சோறு	,,
இலவம்பிசின்	,,
ஊமத்தன் விதை	,,

மேற்கூறிய 1 முதல் 3 சரக்கினை முறைப்படி சுத்திசெய்து குழியம்மியிலிட்டு நன்றாக அரைத்துக்கொண்டு பிறகு மற்றைய கடைச்சரக்குகளையும் இடித்து தூளாக்கி முதலாவதாக அரைத்த தூளுடன் சேர்த்து வாழைப்பூச் சாறுவிட்டு நன்றாக நெகிழ அரைத்து புளிமாதுளைப் பிஞ்சுகளைத் துளைத்து அதனுள் அரைத்த கலவையை வைத்து வாயை மூடி எருமைச் சாணத்தால் சீலைசெய்து மாதுளம் பிஞ்சுகள் வேகுமாறு புடமிட்டெடுத்து மாதுளம் பிஞ்சுகளை எடுத்து மீண்டும் கல்வத்திலிட்டு எருமைத்தயிர் வடிகட்டிய நீர்விட்டு மூன்றுநாட்கள் மெழுகுபோல் அரைத்து எடுக்க இலிங்கமெழுகாகும்.

அளவு: குன்றியளவு, காலை, மாலை இருவேளை.

துணை மருந்து: நோய்க்கேற்ற துணைமருந்து.

தீரும் நோய்: கழிச்சல் நோய்கள்.

அன்னபேதிச செந்தூரம்

அன்னபேதி	100 கிராம்
எலுமிச்சம்பழம்	12 கிராம்

மேற்கூறிய அன்னபேதியை பழச்சாறுவிட்டு ஊறவைத்து எடுத்து நன்றாக அரைக்கவும். பிறகு வெய்யிலில் வைத்து உலர்ந்தபின் பொற்றலைக் கரப்பான் சாறு, பொடுதலைச்சாறு இவைகளில் ஒவ்வொன்றிலும் முறையே 3 மணிநேரம் நன்றாக அரைத்து அகலிலிட்டு 7 சீலைமண் செய்து 20 எருவில் புடமிட்டு எடுக்கச் செந்தூரமாகும்.

அளவு: அரிசி எடை, காலை, மாலை இருவேளை.

துணைமருந்து: தேன்.

தீரும் நோய்: கிராணி நோய், நிணக்கழிச்சல்.

கடுப்புக் கழிச்சல்

இந்நோய்க்குச் சீதபேதி, சீதக்கழிச்சல் என வேறு பெயர்கள் உண்டு.

இந்நோயானது அதிக காரம், புளிப்பு, செரிக்கக்கூடாத உணவு, காரமிக்க மருந்துகளை உட்கொள்ளல், குளிர்காற்றில் வசித்தல் ஆகிய காரணங்களால் உண்டாகிறது. வயிறு கடுத்துக் கழிதலுடன் சீதமும், இரத்தமும் வெளியாகிறது. சிலருக்கு தாங்கொணாத வயிற்றுவலியும் ஏற்படும். இந்நோயால் உடலின் வன்மை குறைந்து கை, கால் வீக்கமும் ஏற்படுகிறது.

1. மாசிக்காய், பிஞ்சுக்கடுக்காய் இரண்டையும் சிறிது சிறிதாக நறுக்கி மோரில் மூன்று தினங்கள் ஊறவைத்து உலர்த்தி எடுத்து உரலிலிட்டுத் தூள்செய்து வடிகட்டி, சிட்டிகையளவு தேன் சேர்த்து உட்கொள்ள இந்நோய் நீங்கும்.

2. மாதுளை, இளம்பிஞ்சுகளை நன்றாக அரைத்து தயிரில் கலந்து காலை, மாலை இரண்டு வேளையும் உட்கொள்ள மூன்றுநாட்களில் குணமாகும்.

3. முன்னர் நிணக்கழிச்சலுக்க கூறிய இலிங்க மெழுகை தேன்விட்டுக் குழைத்து குன்றி எடை வீதம் கொடுக்க இந்நோய் நீங்கும்.

4. தொட்டால் சிணுங்கியைச் சமூலத்துடன் கொண்டு வந்து இடித்துச் சாறுபிழிந்து வெள்ளாட்டுப் பாலுடன் உட்கொள்ள குணமாகும்.

படிக்காரச் செந்தூரம்

பொரித்த படிகாரம், பூங்காவி இரண்டும் சமனெடை எடுத்துக் குழியம்மியிலிட்டு நன்றாக நெகிழ அரைத்து சிட்டிகை அளவு தினம் மூன்றுவேளை தேன், மோர், தயிர் இவைகளில் கொடுக்கக் கடுப்புக் கழிச்சல், நிணக்கழிச்சல் முதலான நோய்கள் நீங்கும்.

பத்திய உணவு: கழிச்சல் நிற்கும் வரை காரமிக்க உணவுகளைத் தவிர்க்கவேண்டும். தயிர், மோர், சவ்வரிசிக் கஞ்சி மற்றும் வெந்தயக்கீரை முதலியன சேர்த்துக் கொள்ளலாம்.

இருமல்நோய்

இந்நோயினால் கபம் தொண்டையிலும், மார்பிலும் சேர்ந்து உண்டாக்கி அக்கபத்தை வெளிப்படுத்துவதற்கும், பித்தமாகிலும், கபமாகிலும் தொண்டை, மூக்கு, உள்நாக்கு,

நுரையீரல் முதலிய இடங்களில் சேருவதால் அவ்விடங்களில் புண் ஏற்பட்டு அப்புண்களிலிருந்து கசியும் கோழை, நிறைநீர், சீழ், சளி முதலியவை வெளியாவதற்கு உண்டாகும். உடலின் இயற்கை எழுச்சியால் உண்டாகும் ஒலியே இருமல் எனப்படும்.

இந்நோயிற்கு ஈளை, காசம் என வேறு பெயர்களும் உண்டு.

இந்நோய் 12 வகைப்படும் எனப்பிரித்துள்ளனர். நம்நாட்டில் இந்நோய் குறுகிய காலத்தில் அதிக அளவு பரவியுள்ளது.

அவை மந்தாரகாசம் இரத்தகாசம்
பக்கமந்தரைஇருமல் ஐயஇருமல்
சுடர் இருமல் பீனிசை இருமல்
வளி இருமல் வளியழல் இருமல்
தீ இருமல் அழலை இருமல்
சுவாச இருமல் முக்குற்ற இருமல்

இந்நோயானது திடீரென ஏற்படும். குளிர்ந்த காற்று வீசுவதாலும், பனிசுரம், அம்மைநோய், இருமலையும், தும்மலையும் உண்டாக்கும் புகைகள், தூசுகள் இவைகளால் கபம் அதிகமாகி மூக்கு, தொண்டை, மூச்சுக்குழாய் இவைகளில் வெப்பத்தை உண்டாக்கி மூக்கில் நீர்வடிதல், கண்சிவத்தல், தொண்டைக்கட்டல், சுரம் காய்தல், தலைகனத்தல் என்னும் முற்குறிகளை உண்டாக்கி மார்புவலி ஏற்பட்டு கபம் கட்டி இருமலை வருவிக்கும். நோய் ஏற்பட்ட சிலநாட்கள் வரையில் கபம் சிறிதளவு விழும். பிறகு நாட்கள் அதிகமாக அதிகமாக கபமும் அதிகமாக வரும். இந்நோயில் சளி இளகியும், நுரைத்தும் காணும். ஆனால் தகுந்த மருந்துகளினால் விரைவில் குணமடையச் செய்யலாம்.

இந்நோய் மீண்டும், மீண்டும் வருமாயின் நாள்பட்ட இருமலாகி கபம் கடினமாகி நுரையுடன் வெளிவரும். இதனால் படுக்கமுடியாமை மூச்சுத்திணறல், உடலின்

வன்மை குறைதல் போன்ற நிலைமைகள் ஏற்பட்டு முகம் கருத்து உதடுகள் நீலநிறமாகிக் காணும். மார்பின் நடுபாகம் பருத்து, குறுகிக்காணும். மூச்சுவிட முடியாமல் திணறி உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும்.

இந்நோய்களுள் 1) மந்தாரகாசம், 2) பக்க மந்தார இருமல், 3) சுடர் இருமல், 4) தீ இருமல், 5) சுவாச இருமல், 6) இரத்தகாசம், 7) பீனிச இருமல் இவைகள் ஏழும் தக்க மருத்துவத்தால் குணமாகும். ஏனைய ஐந்தும் அசாத்திய நோய்களாகும்.

மருத்துவம்

இருமல் நோய்க்குக் காரணமாகிய ஐய மிகுதியைத் தன்னிலைப்படுத்தவும். இந்நோயால் எழுந்த கோழையை வெளிப்படுத்தவும், தக்க மருத்துவம் புரிதல் வேண்டும்.

இருமல் நோயுற்றவர்களுக்கு முதற்கண் ஐயத்தின் வன்மையைக் குறைக்கக் கூடிய குடிநீர், பற்பம், மாத்திரை போன்ற மருந்துகளைக் கொடுத்தல் வேண்டும்.

ஆடாதொடைக்குடிநீர்

ஆடாதொடைப்பட்டை	35 கிராம்
துளசிவேர்	,,
தூதுவளைவேர்	,,
சிறுகாஞ்சொறிவேர்	,,
சுக்கு	8¾ கிராம்
சித்தரத்தை	,,
கண்டத்திப்பிலி	,,
அரிசித்திப்பிலி	,,
அதிமதுரம்	,,
கடுக்காய்த்தோல்	,,
நிலாவாரை	,,
ஓமம்	,,
பனங்கற்கண்டு	35 கிராம்
கொட்டைத் திராட்சை	70 கிராம்

மேற்கூறிய சரக்குகளனைத்தையும் 1 பானையிலிட்டு ஒருபடி தண்ணீர்விட்டு 1/8 படியாக வற்றுமளவு தீயிட்டெடுத்து வடித்தெடுத்துக்கொள்ளவும். இக்குடிநீரை நாளொன்றுக்கு மூன்றுவேளை கொடுக்கவும்.

பவழ பற்பம்

நற்பவழம்	35 கிராம்
எலுமிச்சம்பழம்	5 கிராம்

மேற்கூறப்பெற்ற பவழத்தை ஒரு அகலிலிட்டு பழச்சாறு விட்டு 2 தினங்கள் சாறு வற்றுமளவு வெய்யிலில் வைத்தெடுத்து பவழத்தை நன்றாக கழுவி குழியம்மியிலிட்டு முயல்இரத்தம் (காட்டுமுயல்)விட்டு நான்கு சாமம் நன்கு நெகிழ அரைத்து வில்லை தட்டி வெய்யிலில் உலர்த்தி அகலில் வைத்து மூடி 7 சீலைசெய்து 20 எருவில் புடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும்.

அளவு: அரிசி எடை, காலை, மாலை இருவேளை.

துணைமருந்து: நெய், தேன், வெண்ணெய், குடிநீர்.

தீரும் நோய்: இருமல், ஈழை, இரைப்பு முதலியன குணமாகும்.

குறிப்பு: நோயின் வன்மை மிகுதியாக இருந்தால் நாளொன்றுக்கு மூன்றுவேளை கொடுக்கவும்.

தாளக பற்பம்

தாளகம் 35 கிராம் கட்டியாக எடுத்து மெல்லிய வெள்ளைத்துணியில் முடிந்து ஒருபானையில் பாதியளவு கல்சுண்ணாம்பைக் கொட்டி அதனடுவே முடிந்த தாளகக் கட்டியை வைத்து மேலும் சுண்ணாம்புக்கல்லைக் கொட்டி தென்னங்கள் பானையில் ஊற்றி நன்றாக கொதிக்கவைத்து எடுக்கத் தாளகம் சுத்தியாகும்.

சுத்திசெய்த தாளகத்தை குழியம்மியிலிட்டு பிரம்ம தண்டுச்சாறு விட்டு நான்கு சாமம் நன்கு நெகிழ அரைத்து சிறுவில்லைகளாகத் தட்டி வெய்யிலில் காயவைத்து மேற்படி இலையை மயனமாக அரைத்து வில்லைகளுக்குக் கவசம் செய்து 5 எருவில் புடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும்.

அளவு: அரிசி எடை, காலை, மாலை இருவேளை.

துணை மருந்து: தேன், நெய்.

தீரும்நோய்: இருமல், ஈழை, இரைப்பு முதலான ஐயத்தாலுண்டாகிய நோய்கள் அனைத்தும் குணமாகும்.

கோரோசனை மாத்திரை

அதிமதுரம்	35 கிராம்
சிற்றரத்தை	,,
கோரோசனை	1 பணவெடை
கஸ்தூரி	½ பணவெடை
பச்சைக்கற்பூரம்	¼ பணவெடை

மேற்கூறப்பெற்ற சிற்றரத்தை, அதிமதுரம் இரண்டு சரக்கினையும் நன்றாக இடித்துத் தூள்செய்து வடிகட்டி எடுத்துக்கொண்டு குழியம்மியிலிட்டு மற்ற மருந்துச் சரக்குகளையும் சேர்த்து ஆடாதொடைக் குடிநீர்விட்டு நன்கு நெகிழ அரைத்து மெழுகு பதத்தில் வழித்து பயறளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்துவைத்துக் கொள்ளவும்.

அளவு: 1 முதல் 3 மாத்திரை கொடுக்கவும். காலை, மாலை இருவேளை.

துணை மருந்து: தேன், இஞ்சிச்சாறு, தாய்ப்பால்.

தீரும்நோய்: இருமல், ஈழை, கபநோய்கள்.

இரைப்பு நோய்

இந்நோய்க்கு இழுப்பு நோய், சுவாசம், தொய்வு, ஈளை, சுவாசகாசம் எனப் பல பெயர்கள் உண்டு.

இந்நோய் கபத்தை தன்னளவில் மிகுதியாக்கும் உணவுப்பொருள்களை உட்கொள்ளுவதாலும் முறை தவறிய பழக்கங்களினாலும் நெல், அரிசி, கேழ்வரகு, கம்பு, சோளம் முதலானவைகளின் சுனைகளாலும், மேலும் குளிர்ந்த காற்றில் இருத்தல், மலைச்சாரல்களில் வாழ்தல், பனியில் நடத்தல் போன்ற காரணங்களினாலும் உண்டாகிறது.

மருத்துவம்

இந்நோயில் தன்னளவில் மிக்க ஐயத்தை தன்னிலைப் படுத்தி நோயின் வன்மையைக் குறைத்து பேதி மருந்துகளைக் கொடுத்து நோயைக் குணப்படுத்த வேண்டும்.

மூக்கரட்டைவேர்	8¾ கிராம்
காக்கரட்டான் வேர்	,,
சிவதைவேர்	,,
சூரத்தாவரை	,,
கடுக்காய்த் தோல்	,,

ஒருபானையில் 2 லிட்டர் தண்ணீர்விட்டு மேற்கூறிய சரக்குகளைப் போட்டு அடுப்பேற்றி சிறுதீயிட்டு எரித்து வடித்தெடுத்து வைத்துக்கொள்ளவும். இக்குடிநீரை நோயுற்றவர் உடல் வன்மைக்கேற்றவாறு கொடுக்க பேதியாகும்.

பேதி மாத்திரை

நொச்சிக்கொழுந்து	10 கிராம்
நேர்வாளம்	,,
கடுக்காய்த்தோல்	,,
மிளகு	,,
ஓமம்	,,

மேற்கூறிய சரக்கில் நேர்வளத்தை முறைப்படி சுத்தி செய்து மற்ற சரக்குகளையும் கல்வத்திலிட்டு நொச்சிச்சாறு விட்டு நன்றாக நெகிழ அரைத்து, உளுந்தளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்து எடுத்து வைத்துக்கொள்ளவும்.

இம்மாத்திரையில் ஒன்றை மேலே கூறிய குடிநீருடன் கொடுக்க 2, 3 முறை நன்கு பேதியாகும், பிறகு பவழம், முத்து, வெள்ளி, முத்துச்சிப்பி, தாளகம், செம்பு இவைகளில் ஏதேனும் ஒரு பற்பத்தைக் கொடுக்கலாம்.

முத்துச்சிற்பி பற்பம்

முத்துச்சிப்பிகளில் ஆண், பெண் என இருவகையுண்டு. இரண்டிலும் சமனெடையாக எடுத்து முறைப்படி சுத்தி செய்துகொண்டு குழியம்மியிலிட்டு நிலப்பனங்கிழங்குச் சாறுவிட்டு நன்றாக நெகிழ அரைத்துச் சிறுவில்லைகளாகத் தட்டி வில்லைகள் நன்றாக உலர்ந்த பிறகு நிலப்பனங் கிழங்கை அரைத்து வில்லைக்கு கவசம் செய்து புடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும்.

அளவு: அரிசி எடை, காலை, மாலை இருவேளை.

துணை மருந்து: நெய், தேன்.

இளைப்பு நோய்

இந்நோய்க்கு ஈளைநோய், கபநோய், கூடியநோய் எனப் பல பெயர்கள் உண்டு.

இந்நோயானது ஐயத்தின் நடை இயங்கும். காலை, மாலை இருநேரங்களில் சுரம் தோன்றி, உடல் தாதுக்களின் வன்மை குறைதலால் உண்டாகிறது. மேலும் மூலத்தில் வெப்பமிகுந்து கபாலத்தைத் தாக்கி தாதுக்களின் வன்மையைக் குறைத்து இரத்தம் வற்றிக் காய்ச்சலுண்டாகி சரீரத்தை இளைக்கச் செய்வதுடன் குரல் கம்மி, உடல் கறுத்து

பேதியுண்டாகி, நாற்றத்துடன் கூடிய இரத்தம், கோழையுடன் வெளிப்பட்டு, தலை, மூக்கு, கண் இவ்விடங்களில் வியர்த்து, கண் மேற்பார்வையுண்டாக்கி வட்டமிடுதல் ஆகிய குறிகுணங்களுடன் இந்நோய் ஏற்படுகிறது.

இந்நோய் ஏழு வகைப்படும். இதில் கப இளைப்பு, பித்த இளைப்பு இரண்டையும் எளிதில் தக்க மருந்துகளினால் குணப்படுத்தலாம். ஆனால் ஏனைய 5 வகை இளைப்பு நோய்களும் எளிதில் தீராது.

இந்நோயை நீக்குதற்கு வீரியச்சத்துள்ள இரசச் செந்தூரம், தங்கபற்பம், வெள்ளிபற்பம், தாளக பற்பம், தங்கச் செந்தூரம் போன்ற மருந்துகளைக் கொடுத்து உடலை வன்மை பெறச்செய்து நோயை நீக்கவேண்டும்.

தங்கச்செந்தூரம்

சுருள் தங்கம்	10 கிராம்
பொன்னிமிளை	10 கிராம்

பொன்னிமிளையைக் குழியம்மியிலிட்டு, எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நன்றாக அரைத்து தங்கத்தின் மேல் கவசம் செய்து சீலை செய்து அகலிலிட்டு 100 எருவில் புடமிட்டெடுக்க செந்தூரமாகும்.

இதில் இலேசான கரிசல் நிறம் இருந்தால் மறுமுறை மேற்படி செந்தூரத்தைக் குழியம்மியிலிட்டு உப்பிலாங் கொடிச்சாறு விட்டு மூன்றுமணி நேரம் நன்கு நெகிழ அரைத்து வில்லைதட்டி, உலர்த்தி அகலிலிட்டு 100 எருவில் புடமிட்டெடுக்க உயர்ந்த செந்தூரமாக இருக்கும்.

அளவு: உளுந்தெடை, காலை, மாலை இருவேளை.

தீரும்நோய்: ஈழை இளைப்பு, நரம்புத்தளர்ச்சி முதலிய நோய்கள் நீங்கி உடலுக்கு வீரியத்தைக் கொடுக்கும்.

வாதநோய் (வளிநோய்)

இந்நோயானது உடலில் குத்தல், குடைச்சல், நோதல் ஆகியவை வாயுவின் மிகுதியால் உண்டாகி பலவித நோய்களைப் பிறப்பிக்கக் காரணமாகிறது.

இந்நோயில் உடல் நோதல், குத்தல், பிளத்தல் போல ஏற்பட்டு நரம்பு குன்றி, நடுக்கல், இறுக்கல், நீர்ப்பசை யின்மை, தசை நரம்புகள் இளைத்து அடிபட்டதுபோல் வலியுண்டாதல் கைவிரல்கள் விட்டுப்போதல், பூட்டு நழுவுதல், உறுப்புக்கள் தளர்ந்துபோதல், சிறுநீரும், மலமும் கட்டுப்பட்டு இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை மலம் கழிதல், எலும்புகளின் பூட்டுகள் வீங்கிக்காணல், கை, கால் முதலிய உறுப்புக்கள் நீட்டவும், மடக்கவும், அசைக்கவும் முடியாதிருத்தல், உடல், கண், எரு முதலியன கருத்துக் காணல் ஆகிய குறிகுணங்கல் வாயுக்குற்றத்தின் மிகுதியால் அதிகமாகவும் தெரியும். இந்நோய் ஒன்பது வகைப்படும்.

வாயு மிகுதியால் தோன்றிய இந்நோய்களைப் போக்குதற்கு இரச, கெந்தக, பாடாணங்களாகிய மருந்துகளைக் கொடுத்து நீக்கவேண்டும்.

அகத்தியர் குழம்பு

பெருங்காயம்	4 ½ கிராம்
கடுகு	,,
இந்துப்பு	,,
இரசம்	,,
வெங்காரம்	,,
நாபி	,,
மனோசிலை	,,
ஓமம்	,,
அரிதாரம்	,,
கருஞ்சீரகம்	,,

சுத்திசெய்த வறுத்த நேர்வாளம்	12 கிராம்
பச்சை நேர்வாளம்	,,

1.வேர்வாளம் வறுத்தது பாதி

நேர்வாளத்தை முறைப்படி சுத்திசெய்து முளைநீக்கி உலர்த்தி ஆமணக்கு நெய்யில் வறுத்து மருந்தில் சேர்க்கவும்.

2. நேர்வாளம் பச்சைபாதி

நேர்வாளத்தை பச்சையாகச் சேர்ப்பது எத்தகைய தீங்கை விளைவிக்கும் என்பதை யாவரும் அறிவார்கள் ஆதலால் இங்கு நுட்பமாக அறியவேண்டிய செய்தி ஒன்றுள்ளது. பச்சையாகச் சேர்க்கவேண்டிய வாளத்தின் முளைகளை நீக்கிவிட்டால் அதிலுள்ள நச்சுத்தன்மை நீங்கி விடும் என்பது ஒரு இரகசிய வைத்தியமுறை.

வாளத்தின் முளையை நீக்கும் முறை

செம்மண்ணைப் பரப்பி அதன்மேலே வாளக் கொட்டைகளைப் பரவலாக வைத்து மேலும் செம்மண்ணிட்டு, அடிக்கடி தண்ணீர் தெளித்துவர இரண்டு மூன்று தினங்கழித்து முளைகள் கிளம்பும், முளைகள் நன்றாகக் கிளம்பினவுடன் முளையின் கீழ் உள்ள பருப்பு பிளவுகளை எடுத்து நன்றாக கழுவி வெய்யிலில் உலர்த்தி பின் மற்றைய சரக்குகளுடன் சேர்க்கவேண்டும்.

குறிப்பு: 1. மேற்கூறிய எடுத்த வாளத்தை சிறிது வறுத்துச் சேர்த்தால் மிகவும் நல்ல பலனைத்தரும்.

2. நேர்வாளத்திலுள்ள விஷம் முளையோடு வெளிவர வேண்டுமென்றால் செம்மண்ணில் பரப்பி வைத்தெடுப்பதே சிறந்தமுறை. சிலர் மணலைப்பரப்பி வாளத்தை முளைக்க வைக்கலாம் என்று நினைப்பது முற்றிலும் தவறு என்பது இங்கு அறிய வேண்டியதாகும்.

மேற்கூறியவாறே வறுத்தும் பச்சையுமாக எடுத்த வாளத்தைக் குழியம்மியிலிட்டு அரைத்துத் தனித்தனியாக இடித்துத் தூளாக்கி வடிகட்டிய மருந்துகளுடன் சேர்த்து நன்றாக 24 மணி நேரம் மெழுகு பதத்தில் அரைத்து வழித்து பத்திரப்படுத்தவும்.

அளவு: குன்றியளவு. காலை.

துணை மருந்து: தேன், இஞ்சிச்சாறு, சர்க்கரை.

தீரும் நோய்: சுரம், வாதநோய்கள்.

பத்தியம்: பசுநெய், முருங்கைப்பிஞ்சு, வாழைக்கச்சல், நாரத்தங்காய், தூதுவளை இவைகளைச் சேர்த்துக்கொள்ளவும்.

உள்மருந்துகள்

1. அயவீரச்செந்தூரம், *2.* சண்டமாருதம், *3.* தங்கச் செந்தூரம், *4.* ஆறுமுகச் செந்தூரம், *5.* காளமேகச் செந்தூரம், *6.* தங்கரசச் செந்தூரம், *7.* வான்மெழுகு, *8.* நந்தி மெழுகு, *9.* இரசகெந்தி மெழுகு, *10.* வீரமெழுகு, *11.* வெள்வங்கச் சுண்ணம்.

மேற்பூச்சுத் தைலம்

வாதகேசரித் தைலம்	சடாமாஞ்சில் தைலம்
எட்டியெண்ணெய்	மெழுகுத்தைலம்
சூக்கிவ் தைலம்	உளுந்துத் தைலம்

வெட்டை நோய்

இந்நோய்க்கு வெள்ளைநோய், வெட்டைநோய், பிரிமியம், சீழ்மேகம் எனப் பல பெயர்கள் உண்டு.

சிறுநீர் கழிவதற்கு முன்பு அல்லது பின்பு வெண்ணிறத்துடன் சீழ்போல வெளிவருதல், நீர்துவாரத்தில் ஒருவித நமைச்சலும், எரிச்சலும், கடுப்பும் உண்டாகும்.

இந்நோய் பல்வேறு பெண்களின் சேர்க்கையாலும், பிணியுற்றாரிடம் கலவி புரிதலாலும், இடைவிடாது கலவி புரிதலாலும், மூலத்தில் வெப்பம் மிகுந்து, தாது கேடடையும். மேலும் மிகுந்த பட்டினி கிடத்தல், காரமிக்கப் பொருள்களையும், உப்பு, துவர்ப்பு, கைப்பு, புளிப்பு ஆகியவைகளை அளவுக்கு மீறி உட்கொள்ளல் ஆகிய காரணங்களாலும் உண்டாகும்.

பித்தம் தன்னளவில் மிகுந்து முள்ளந்தண்டுக் கோர்வையைப் பற்றி நாபி, குய்யம், மூலாதாரம் இவைகளில் கனல் மிகுந்து, அய்யத்தை எழச்செய்து நாடி, நரம்பு, இரத்தக்குழல்கள் மூலமாக எலும்பைப் பற்றியும், சுக்கில சுரோணிதத்தில் கலந்தும், நீர்ப்பை, நீர்த்துவாரம் இவற்றில் வேக்காளத்தையும் ரணத்தையும் உண்டாக்கி சீழ் பிடித்து வலியுண்டாகி ஒழுக்கு ஏற்படும். இவ்வாறு தோன்றுதலே வெள்ளையென்னும் வெட்டை நோயாகும்.

இந்நோய்க்கு உடனடியாக மருத்துவம் செய்யாவிடில் இந்நோய் உடலில் ஊறி சீழ்வறண்டு, நீர்த்துவாரம் புண்பட்டு சிறுநீர் அடிக்கடி தாங்கொணாத வலியுடன் இறங்கும். மேலும் ஆண்குறியில் குத்தல் ஏற்பட்டு சிறுநீர் கழிக்கும் போது சொட்டுச் சொட்டாக இறங்கும்.

இந்நோயின் காரணமாக நீர்ச்சுருக்கு, நீர்க்கட்டு, ஆண்குறிப் பாகங்கள் அழுக, கட்டிகள் முதலியன உண்டாவதோடு கீழ்வாயு, நரித்தலைவாயு, தமரகவாயு, மலட்டுத்தன்மை, கண்ணோய் ஆகிய துணை நோய்களும் உண்டாகிறது. இந்நோய் 21 வகைப்படும்.

குடிநீர்

மூக்கரட்டைவேர்	18கிராம்
புங்கன்வேர்ப்பட்டை	,,
ஏலரிசி	,,
நெருஞ்சில்	,,
சுரைக்கொடி	,,

மேற்கூறிய சரக்குகளனைத்தையும் ஒருபானையில் போட்டு 2 லிட்டர் தண்ணீர் வைத்து எட்டிலொரு பங்காகும் வரைக்காய்ச்சி வடித்திறுத்தக்கொள்ளவும்.

அளவு: 50 முதல் 100 மில்லி காலை, மாலை இருவேளை.

தீரும்நோய்: வெட்டைநோய் குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

குறிப்பு: இந்நோயிற்கு பூர பற்பம், முத்துப்பற்பம், சிலாசத்துப் பற்பம், குங்கிலிய பற்பம் முதலிய பற்பங்களையும் உட்கொள்ள விரைவில் நோய் குணமாகும்.

நீரிழிவு நோய்

இந்நோய்க்கு மதுமேகம், இனிப்பு நீர் என இருபெயர்கள் உண்டு.

இந்நோயானது அளவு கடந்த கலவியால் மேகத்தைத் தொடரச்செய்து வரும் நோய் எனக்கொள்ளலாம் அன்றி யும் அதிக உணவு, சோம்பித்திரிதல், மனக்கலக்கம், தாய், தந்தையின் வழியிலும் வரக்கூடும் என்றறிய வேண்டும். இதுமட்டுமல்லாது நெய், பால், கள், இறைச்சி, மிக்க சுவைமிக்க மீன்கள், இனிப்புச்சுவை பொருந்திய உணவுகள், வெறுப்பைத் தரக்கூடிய உணவுகள் ஆகிய இவைகளெல்லாம் நோய் வருவதற்கான வழிகளாகும்.

சிறுநீர் தெளிந்த நீர்போல் அடிக்கடி படிக்கணக்கில் வரும். உடல் வன்மை நாளுக்குநாள் குறையும். நாவரட்சி ஏற்படும்.

இந்நோயினால் முக்குற்றங்களும், வாயுக்களும், உடற்கட்டுகள் ஏழும் வேற்றுமையடைவதால் அவைகளைத் தன்னிலைப்படுத்தும் பொருட்டு, உடற்கட்டுகளை

வண்மைப்படுத்தி தன்னளவில் மிகுந்த குற்றங்களையும், வாயுக்களையும் நீக்கவேண்டும். மேலும், இந்நோய் மேகநோயால் பிறப்பதால் மேகத்திற்கான மருந்தை முதன்மையாகக் கொள்ளவேண்டும்.

குடிநீர்

ஆவாரைத் துளிர்	கல்மதம்
கொன்றைவேர்	

மேற்கூறிய மூன்று சரக்குகளையும் சமனெடை எடுத்து நன்றாக அரைத்து மோரில் கலக்கி உட்கொள்ளலாம்.

சூரணம்

நாவல் விதையின் பருப்பு	100கிராம்
விலாமிச்சைவேர்	,,
வெட்டிவேர்	,,
இலவங்கம்	,,
அக்கரகாரம்	,,
கொன்றைப்பூ	,,
ஆவாரம்பூ	,,
தேற்றான்கொட்டை	,,
சிறுகுறிஞ்சா சமூலம்	500கிராம்
சீந்தில் சர்க்கரை	100கிராம்

மேற்கூறிய சரக்குகளனைத்தையும், தனித்தனியாக நன்றாக இடித்துத் தூளாக்கி ஒன்றுசேர்த்து வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

அளவு: தேக்கரண்டி, காலை, மாலை இருவேளை.

தீரும்நோய்: மதுமேகம், மேகம்.

தங்க அப்பிரகச் செந்தூரம்

சுருள் தங்க... 5கிராம்

திருஷ்ணை அப்பிரகம் 35கிராம்

மேற்கூறிய இரண்டினையும் முறைப்படி நன்றாக சுத்திசெய்து குழியம்மியிலிட்டு மாசிப்பசைச் சாறுவிட்டு நன்று நெகிழ 12 மணிநேரம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி அகல்பில் வைத்து மேல் அகல் மூடி சீலைசெய்து 100 எருவில் புடமிட்டெடுக்கவும். இவ்வாறு 5 முறை புடமிட்டெடுக்க செந்தூரமாகும். இச்செந்தூரத்தை குழியம்மியிலிட்டு உப்பிலிக்கொடிச்சாறு விட்டு நன்றாக நெகிழ அரைத்து முன்போலவே மீண்டும் 5 முறை புடமிட்டு எடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: ½ அரிசி எடை. காலை, மாலை.

துணை மருந்து: நெய், தேன், லேகியம் ★

தீரும் நோய்: மதுமேகம், மேகம்.

குறிப்பு: இந்நோயிற்கு தங்கரசச் செந்தூரம், நாகரசகெந்திச் செந்தூரம், மதுமேகச் சூரணம் இவைகளை உட்கொண்டு வந்தால் பூரண குணத்தைக்கொடுக்கும்.

குடற்பிடிப்பு நோய்

இந்நோய்க்கு அநாகத நோய் என்று வேறு பெயர் உண்டு.

இந்நோய் தன் வன்மைக்கு மிகுந்த உழைப்பு, விரைவாக ஓடுதல், எளிதில் செரிக்கக்கூடாத உணவுகளை உண்ணல், பல நாட்கள் உண்ணாமல் இருந்து பின் வயிறு நிறைய உண்ணல். வயிற்றின்மேல் அடிபடல் ஆகிய

★பேரீச்சை, குமரி லேகியம்

இவைகளால் இந்நோய் உண்டாகிறது. மேலும் வயிறு, குடல் இவைகளில் உண்டாகிய புண் குடலைத் துளைத்தாலும், குடல் ஏற்றம், குடல் தாபிதம் முதலியவைகளாலும் இந்நோய் உண்டாகிறது.

இந்நோயை நான்கு வகைகளாகப் பிரித்துள்ளனர். அவை: 1) அட்டிலம், 2) பிரதியட்டிலம், 3) துநி, 4) பிரதிதுநி என நான்காக வகுத்துள்ளனர்.

இந்நோய் வருவதற்குமுன், வயிறு இரைந்து இரைந்து நோதல், வயிறு ஊதுதல், வயிற்றுள் தாங்கமுடியாத நோய் உண்டாதல், குடல் புரட்டல், மூச்சுவிட முடியாமை, வயிற்றை இழுத்துப்பிடித்து நிமிரவொட்டாதவாறு செய்தல், வாந்தி, ஏப்பம் உண்டாதல், விரும்பியது கொள்ளாமை, எருவை (மலத்தை)க் கழியச்செய்வதற்காகக் கொடுக்கும் எண்ணெய், பீச்சு முதலியவை பயன்தராமை ஆகியவைக்கு மருத்துவம் செய்தல் வேண்டும்.

மருத்துவம்:

இலிங்க வெள்ளை

இலிங்கம் 35 கிராம்

மேற்கூறப்பெற்ற இலிங்கத்தை குழந்தைப்பாலில் 5தினங்கள் ஊறவைத்து கழுவி எடுத்து உலர்த்தி ஓட்டில் வைத்து (பிண முருங்கை) கசப்பு முருங்கைப்பூவின் சாறு 1லிட்டருக்கு குறையாது எடுத்து சுருக்குக்கொடுத்து மேற்படி பூவை அரைத்து இலிங்கத்திற்கு கவசம் செய்து 2 எருவில் புடமிட்டெடுக்கவும். பிறகு ரஸ்தாளி வாழைப்பழ ஜெயநீர் எடுத்து இலிங்கத்திற்கு மீண்டும் சுருக்குக்கொடுக்கவும். சுருக்குக்கொடுத்த இலிங்கத்திற்கு நீர்மேல் நெருப்பு இலையை அரைத்துக் கவசம் செய்து 5 எருவில் புடமிட்டெடுக்கவும். புடத்தில் இலிங்கம் வெளுக்க வில்லையேல் ஓட்டில் வைத்து கொல்லன் உலையில் துருத்திகொண்டு ஓடு பழுத்து உருகும் அளவுவரை ஊதி எடுக்க உயர்ந்த சுண்ணமாகும்.

அளவு: ½ முதல் 1 அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

துணை மருந்து: தேன், பனைவெல்லம்.

தீரும்நோய்: குடற்பிடிப்புநோய், தீராக்குன்மம், வெண்குட்டம் முதலிய நோய்களைக் குணப்படுத்தும்.

குறிப்பு: 1. இம்மருந்து கொடுத்த ஒருவேளையிலேயே குடற்பிடிப்பு நோய் குணமாவது தெரியும். இதைத்தொடர்ந்து 4 அல்லது 5 வேளை கொடுக்க அறவே நீங்கும்.

2. இந்நோய்க்கு இரசச்சுண்ணம் வெள்ளைப்பாடாணச் சுண்ணம் போன்ற சுண்ணங்களினாலும் உயர்ந்த பற்ப, செந்தூரங்களினாலும் நோயின் தன்மை அறிந்து நோயைக் குணப்படுத்தலாம்.

செரியாமை

இந்நோயானது அசீரணம் என்றும் கூறுவதுண்டு.

இந்நோயானது எளிதில் சீரணமாகாத உணவுகளாகிய கொழுப்புச்சத்து பொருந்திய ஆகாரங்களை உட்கொள்வதாலும், மாவுப்பொருள்களை அதிகமாக உட்கொள்வதாலும், வயிற்றில் புளிப்பு அதிகமாகி பசி குறைந்து உட்கொண்ட உணவு சீரணமாகாமலும், நேரம் தவறிய நேரங்களில் உட்கொள்ளல், நிலம் குளிர்ச்சியடைதலால் வயிறு மந்தமடைதல், தூக்கமின்மை இவைகளினால் வயிறு உப்பி வயிற்றில் காற்று சேர்ந்து இரைச்சலுண்டாகி அடிக்கடி ஏப்பமுண்டாகி, வயிற்றிலுள்ள ஆகாரங்களை எதிரெடுத்தல், விக்கல் முதலியன உண்டாதலே இந்நோய்க்கு காரணமாகும். இந்நோயில் வாயு அதிகமாகிப் பசி கெட்டுப் பித்தம் அதிகரித்து கபத்தின் தன்மையில் பசி குறைந்து நோய்களைப் பிறப்பிக்கின்றது.

இந்நோய்க்கு பசியைத் தூண்டக்கூடியதான சூரணம் இலேகியம், செந்தூரம் முதலியவைகளைக் கொடுத்து குணப்படுத்தவேண்டும்.

எண்வகைச் சூரணம்

சுக்கு	50 கிராம்
மிளகு	,,
திப்பிலி	,,
ஓமம்	,,
காயம்	,,
இந்துப்பு	,,
சீரகம்	,,
கருஞ்சீரகம்	,,

மேற்கூறிய சரக்குகளை தனித்தனியே பொன்னிறமாக வறுத்து நன்றாக இடித்துத் தூள்செய்து வடிகட்டி நாளொன்றுக்கு மூன்றுவேளை உணவு உட்கொண்டபின் வெருகடியளவு உட்கொள்ள நல்ல பசியை உண்டுபண்ணும். வாதகுன்மத்தை நீக்கும்.

இஞ்சிச்சூரணம்

இஞ்சி	50 கிராம்
திப்பிலி	20 கிராம்
மிளகு	20 கிராம்
ஏலரிசி	10 கிராம்
சீரகம்	30 கிராம்
சிறுநாகப்பூ	10 கிராம்
சுக்கு	10 கிராம்
கிராம்பு	10 கிராம்
இலவங்கப்பத்திரி	10 கிராம்
தாளிசப்பத்திரி	10 கிராம்

மேற்கூறிய சரக்குகளில் இஞ்சியைத் தோல்நீக்கி வறுத்து உலர்த்தித் தூள்செய்து கொள்ளவும். மற்ற சரக்குகள்

அனைத்தையும் பொன்னிறமாக வறுத்து நன்றாக இடித்து துணியில் வடிகட்டி எடுத்துக்கொள்ளவும். இச்சூரணத்தை நாளொன்றுக்கு மூன்றுவேளை ஆகாரத்திற்குமேல் வெருகடியளவு உட்கொள்ள செரியாமை, வாயு, சுவையின்மை முதலியன குணமாகும்.

படிகக்கல் செந்தூரம்

படிகக்கல்	100 கிராம்
சோடா உப்பு	50 கிராம்
வெங்காரம்	50 கிராம்

மேற்கூறிய படிகக்கல்லை தூளாக இடித்த சோடா உப்பு, வெங்காரம் இரண்டையும் சேர்த்து பசும்பால் விட்டரைத்து இவற்றை மூசையிலிட்டு மேலோடு மூடிசீலை மண்செய்து உலையில் வைத்து ஊதி எடுக்க உருகி ஒரே மணியாக இருக்கும். இம்மணியோடு சமனெடை நெல்லிக்காய் கெந்தகம் சேர்த்து பழச்சாறு விட்டரைத்து மறுமுறை மூசையிலிட்டுச் சீலைமண் செய்து உலையில் வைத்து மூசை அழிய ஊதி எடுத்து ஆறவைத்து உரைத்துப் பார்க்க செந்தூரமாயிருக்கும்.

அளவு: அரிசி எடை. (காலை,மாலை இருவேளை)

துணை மருந்து: நெய், வெண்ணெய்.

தீரும் நோய்: செரியாமை மற்றும் பல நோய்கள்.

பத்தியம்: இச்சா பத்தியம்.

வாந்தி நோய்

வாந்தி, சத்திப்பு, வாந்தியெடுத்தல், வாயிலெடுத்தல் என்று பெயர்.

இந்நோயானது நாம் உட்கொண்ட உணவு அருந்திய நீர் இவைகள் செரித்தாலும், செரிக்காவிடினும் விரைவாக

மேல்நோக்கி வெளியாவதற்கே வாந்தி என்பர். இந்நோயில் வாயில் நீருறல் வாய்க்குமட்டல், மயக்கம், ஒக்காளம், நாக்கு தடுமாற்றமடைதல், வயிறு இரைந்து வலித்தல், அடிக்கடி ஏப்பம் உண்டாதல். விக்கலுண்டாதல், மார்பு படபடத்தல் முதலான குறிகளுண்டாகி வாந்தியுண்டாகும். சில நேரங்களில் மயக்கமுண்டாகிக் கண்களிருண்டு வாந்தி ஏற்படும். இந்நோயைப் பதினோறு வகைகளாகப் பிரித்துள்ளார்கள். அவையாவன:

1. வாத வாந்தி, *2.* பித்தவாந்தி, *3.* கபவாந்தி, *4.* முக்குற்ற வாந்தி, *5.* புழு வாந்தி, *6.* செரியா வாந்தி, *7.* தாகவாந்தி, *8.*கர்ப்ப வாந்தி, *9.* மல வாந்தி, *10.* இரத்த வாந்தி, *11.* வெறுப்பு வாந்தி.

இந்நோயில் முக்குற்ற வாந்தியும், மல வாந்தியும் குணமடையாது.

இரத்த வாந்தி நாட்பட்டு குணமாகும். ஆனால் மற்றைய வாந்திகள் மருத்துவத்தில் நீங்கும்.

இந்நோயில் மலமும், நீரும் தடைபட்டு உடல் முழுவதும் வியர்வையுடன் கையும், காலும் வீங்கிக் காண்பதாலும் வயிறு பொருமி நாவறண்டு மூச்சு தடைபட்டு இளைப்பு, விக்கல், மயக்கம் முதலிய குறிகள் கண்டு வாந்தி உண்டானால் மரணக்குறி என்றறியவும்.

இந்நோய் உணவின் வேற்றுமையாலும், நம்முடைய நடத்தை வேறுபாடுகளினாலும் பித்தம் தன்னளவில் குறைந்து கபத்தைப் பசியைக்கெடுக்கும். கேடடைந்த குற்றத்தின் அளவில் மேல்நோக்கியும், கீழ்நோக்கியும் உண்ட உணவு சீரணமாகாதவாறு, புளி ஏப்பத்தோடு வயிற்றைப் புரட்டி வலித்து வாந்தியுண்டாகும். சிலவேளை கழிச்சலும் ஏற்படும்.

குடிநீர்

வேப்பம் ஈர்க்கு	10 கிராம்
எலுமிச்சை ஈர்க்கு	,,
நாரத்தை ஈர்க்கு	,,
பன்னீர்ப்பூ	,,
கொத்துமல்லி	,,
சீரகம்	,,
கொட்டைத் திராட்சை	,,
அதிமதுரம்	,,
குரோசாணி ஓமம்	,,

மேற்கூறிய சரக்குகளை ஒரு பானையிலிட்டு படி தண்ணீர்விட்டு எட்டிலொரு பாகமாகும் வரை காய்ச்சி வடித்திறுக்கக் குடிநீராகும். இக்குடிநீரை இரண்டு மூன்றுவேளை கொடுக்க வாந்தி நிற்கும்.

வேறுமுறை

அரிசித்திப்பிலி	35 கிராம்
அக்கரகாரம்	,,
வசம்பு சுட்ட சாம்பல்	,,
சீரகம்	,,

இதையும் முன்கூறியவாறு குடிநீர் வைத்துக்கொடுக்க வாந்தி நிற்கும்.

வேறுமுறை: மயிலிறகு தேங்காய்நார், மண்புழு இவைகளைச் சாம்பலாக்கித் தேனிற்குழைத்துக் கொடுக்க வாந்தி நிற்கும்.

விக்கல்நோய்

இந்நோய் விக் என்னும் சத்தத்துடன் எழுவதால் இதற்கு விக்கல் என்னும் பெயர் வந்தது.

இந்நோயில் தொண்டை வறண்டுபோதல், நாக்கு வறளல், வாயில் கைப்பு உண்டாகுதல், நாவறட்சி,

கண்சிவத்தல் போன்ற குறிகளைக்காட்டி விக்கல் வருகிறது. மேலும் அதிக காரம், இனிப்பு, கைப்பு ஆகிய பொருட்களை உட்கொள்ளுவதாலும், வயிற்றினுள் புளிப்பு ஏற்பட்டு வாயுவைப் பெருக்கி கபத்தை அதிகமாக்கி இந்நோய் வருகிறது என்று கூறுகின்றனர்.

இந்நோய் ஐந்து வகைப்படும். இந்நோயானது தனித்தும் மற்றைய நோய்களுக்குத் துணை நோயாகவும் வரும்.

மேலும் வாதத்தினால் ஏற்படும் விக்கல், பித்தத்தினால் ஏற்படும் விக்கல், செரியாமையினால் ஏற்படும் விக்கல் ஆகிய மூன்றையும் தக்க மருந்துகளினால் குணப்படுத்தலாம். ஆனால் கபத்தினால் ஏற்பட்ட விக்கலும், வாத, பித்த, கப தொந்தத்தினால் ஏற்பட்ட விக்கலும் தீராது. மரணத்தை உண்டாக்கும்.

நாம் உட்கொண்ட உணவுகளினால் கபம் அதிகரித்து வாயுக்களைத் தூண்டி விக்கல் உண்டாகிறது.

மருத்துவம்

அதிகமாகிய கபத்தையும், வாயுக்களையும் சமன் செய்து பேதி மருந்துகளை முதலில் கொடுத்து மற்றைய மருந்துகளைப் பிறகு கொடுத்து குணப்படுத்த வேண்டும்.

மயிலிறகுச் சூரணம்

மயிலிறகுக்கரி	1 பங்கு
அரிசித்திப்பிலித்தூள்	2 பங்கு
எலுமிச்சம்பழ விதை (கருக்கியது)	1 பங்கு
சீரகத்தூள்	3 பங்கு
ஏலக்காய்த்தோல் தூள்	1 பங்கு

இவ்வைந்தையும் ஒன்றாகக் கூட்டித் தேனில் குழைத்துக் கொடுக்கக் குணமாகும்.

சுக்கை மேல் பிராணி சீவி உப்பை நன்கு அரைத்து அதன்மேல் அப்பி சிறிது நேரம் வெய்யிலில் உலர்த்தி பிறகு நெருப்பிலிட்டுச் சுட்டு அதனுடன் பாதி அளவு மயிலிறகு சுட்ட சாம்பல் சேர்த்து வெருகடியளவு தேனில் கலந்து கொடுக்க எந்தவித விக்கலும் குணமாகும். (சரபேந்திரர் அனுபவமுறை)

சுவையின்மை (அரோசிக நோய்)

இந்நோயை சுவை கெடாதல், ருசி இன்மை, அரோசிகம் என்றும் கூறுவர்.

இந்நோயானது முக்குற்றத்தின் அளவாகவும் மனக் கலக்கம், பீதி அதிகப்படியான சந்தோஷம் முதலிய வேறுபாடுகளால் உண்டாகிறது. இந்நோயில் முக்குற்றங் களாகிய வாத, பித்த, கப தொந்தத்தினால் ஏற்பட்டவை மருந்துகளின் மூலம் குணமாகும். ஆனால் மனத்தின் வேறுபாடுகளால் உண்டாகியவை வேறுபாடுகள் நீங்கினால் தான் குணமடையும்.

இந்நோய் பீடிக்கப்பட்டவர்கள் பித்தத்தை தன்னிலைப் படுவதற்கான மருந்துகளையும் கொடுத்து சுவைகளை மாறச்செய்து வாத, கப தொந்தங்களை தன்னிலைப் படுத்துவதற்கான மருந்துகளையும் கொடுத்த குணப்படுத்தி மன மாறுதல்கள் நிவர்த்தியாவதற்கு வேண்டிய உபாயங்களைச் செய்யவேண்டும்.

சுக்கு, கடுக்காய், சூரத்தாவரை, சமனெடை குடிநீர்.

மேலும் இந்நோயை

மாதுளை மணப்பாகு பிரண்டைச் சூரணம்,
பிரண்டை வடகம் தாளிசாதி வடகம்

முதலிய மருந்துகளாலும் குணப்படுத்தலாம்.

ஊழி நோய்

இந்நோயிற்கு வாந்திபேதி, கசப்பு, விடபேதி, கொள்ளைநோய், நட்புநோய், நீர்க்கொம்பன், காலரா எனப் பல பெயர்கள் உண்டு.

இந்நோயானது புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்கள் வரையில் நிலைக்கும். ஆனி, ஆடி மாதங்களில் சூரிய வெப்பத்தால் நிலம் வறட்சி அடைந்து வெப்பமடைந்து இருக்கும்போது சிறுமழையால் திடீரென பூமி அடையும் மாறுபாட்டால் வெப்பம் அதிகமாகி அய்யக்குற்றத்தை அதிகப்படுத்தி பசியைக் குறைக்கும். அதுபோது நாம் உட்கொண்ட உணவு சீரணம் அடையாமல் வாந்தியையும், புளியேப்பம், வாய் ஊறுதல், வயிறுநோதல், வயிறு இரைதல் போன்ற குறிகளைக்காட்டி உட்கொண்ட உணவை அடிக்கடி வாந்தியெழச்செய்தும், கழிச்சலையும் உண்டாக்கும்.

இந்நோயில் வாந்தி மயக்கம், உடல் குளிர்ந்து வியர்வை விடல், விக்கல், உடல்நோதல், குரக்குவலி, வயற்றுவலி, நீர்வேட்கை என்னும் குறிகளையும் காட்டி முக்குற்றங்களும் ஒன்றுகூடி கைகால் சில்லிட்டு, உடல் பிசுபிசுத்தது, நாடி தளர்ந்து 30 நாழிகைக்குள் மரணத்தை உண்டாக்கும்.

மருத்துவம்: இந்நோய் கண்டவுடனேயே மருத்துவம் செய்தல் வேண்டும்.

கற்கம்	மிளகாய் காம்பு நீக்கியது	35 கிராம்,
	கடுகு	35 கிராம்,
	கற்பூரம்	35கிராம்

இம்மூன்றையும் பழச்சாற்றில் நன்கு நெகிழ அரைத்து மணிக்கொரு தடவை சுண்டைக்காயளவு தரவேண்டும்.

உணவு: பார்லித் தண்ணீரில் குளுகோஸ் சேர்த்துக் கொடுக்கவேண்டும். வேறு எந்த உணவுகளையும் கொடுக்கக்கூடாது.

ஊழி மாத்திரை

இரசகற்பூரம்	17½ கிராம்
கூடம்	,,
பெருங்காயம்	,,
நெல்லிவற்றல்	,,
சாதிக்காய்	,,
மிளகு	,,
இலவங்கம்	,,
வெந்தயம்	,,
வேலம்பிசின்	,,
அபின்	,,

இவைகளை முறைப்படி சுத்திசெய்து கஞ்சா குடிநீர் விட்டு 6 மணிநேரம் நன்கு நெகிழ மெழுகு பதத்தில் அரைத்து குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

அளவு: ஒன்று முதல் நான்கு வேளைக்கு ஒரு மாத்திரை நிலைமைக்குத் தக்கபடியும், உடலின் வன்மைக்குத் தக்கபடியும் கொடுக்கவேண்டும்.

அனுபானம்: தேன், சர்க்கரை.

தீரும்நோய்: ஊழிநோய்கள், பெருங்கழிச்சல், நிணக்கழிச்சல், கடுப்புக்கழிச்சல், கிராணி முதலிய நோய்கள் குணமாகும்.

சண்டமாருதச் செந்தூரம்

இலிங்கம்	100 கிராம்
பூரம்	50 கிராம்
வீரம்	25 கிராம்
கெந்தகம்	25 கிராம்
ரசசெந்தூரம்	25 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளை குழியம்மியிலிட்டு தாய்ப்பால் விட்டு நன்கு நெகிழ 12 மணி நேரம் அரைத்து உலர்ந்தபின் பத்திரப்படுத்தவும்.

அளவு: அரிசியெடை, கானல, மாலை இருவேளை.

அனுபானம்: வெல்லம், சுக்கு.

தீரும்நோய்: முக்குற்றத்தால் ஏற்படும் பிணிகள் யாவும் குணமாகும்.

குறிப்பு: தாய்ப்பால் போதிய அளவு கிடைக்கா விட்டால் பசும்பால் சேர்த்து அரைத்துக்கொள்ளலாம்.

நீர்வேட்கை

இதற்கு நாவறட்சி, தாகநோய் என்றும் கூறுவர்.

இந்நோயானது உணவின் வேற்றுமையினாலும், சில நோய்களுக்குத் துணை நோயாகவும், எளிதில் சீரணம் ஆகாத உணவுகளை உட்கொள்ளுவதாலும், அவ்வுணவு சீரணமாகும்வரை தாக வறட்சி இருக்கும். மேலும் பித்தம் அதிகப்படுவதால் வரும் நோய்களினாலும், உடலில் அதிகமாக வறட்சி உண்டாகி பேதி, வாந்தி, நீரிழிவு முதலியவைகளினாலும் நீர்வேட்கை ஏற்படும்.

மேலும் பித்தம் அதிகமாகி மற்றைய குற்றங்களைத் துணைகொண்டு அக்குற்றங்களில் இரசமும், இரத்தமும் கெடும்.

மருத்துவம்

இந்நோய்க்கு மேற்கூறிய குற்றங்களால் உண்டான நீர்வேட்கையைப் போக்க குளிர்ந்த நீரையும், அக்குற்றங்களைச் சமப்படுத்தும் குடிநீர்களையும் உட்கொள்ள குணம் ஏற்படும்.

தாமரை மணப்பாகு

செந்தாமரைப்பூ 100, ஏலரிசி 50, சீரகம் 50 கிராம், மல்லி 50 கிராம் இந்நான்கினையும் ஒரு பானையிலிட்டு 8 லிட்டர் தண்ணீர் ஊற்றி 2 லிட்டராக வற்றவைத்து, எடுத்து அதனுடன் 1 கிலோ ஜீனி சேர்த்துப் பாகு பதத்தில் இறக்கிப் பாட்டிலில் பத்திரப்படுத்தவும்.

அளவு: அரை அவுன்ஸ் மூன்றுவேளையில் (காலை, பகல், மாலை) நீர் வேட்கை நிவர்த்தியாகும்.

பெருநோய்

குறைநோய்: அழுகல்நோய், குட்டநோய், தொழுநோய்.

இயல்: இந்நோயால் உடல் மினுமினுத்தல், படைகள் உண்டாதல், கழலை கண் காணுதல், கை கால்களின் விரல் அழுகுதல் அல்லது அவைகள் வளைந்து குறைதல் ஆகிய இயல்புகள் உண்டாகும்.

நோய்வரும் வழி: அழுகிய மீன், நண்டு, நத்தை இவைகளை மிகுதியும் உண்ணல், வேகா உணவைக் கொள்ளல், வயிறு நிறைய உண்டபின் போகநிலையில் நிற்றல், இந்நோயுற்றவரிடம் நெருங்கி இருத்தல், அவர்கள் படுக்கையில் படுத்தல் ஆகியவைகளாலும், தன்வினை, பழவினைகளாலும், தாய்,தந்தை வழியாலும் இந்நோய் வரும். அன்றியும்

வியாதியுள் மூவாறு விளங்கிய குட்டங்கேள்
கயாதிக் கிரந்தி கழன்மேகத் தாலும்
பயாதி மண்ணுளிப் பலவண்டி னாலெட்டு
நியாதிப் பழநாலாம் நின்றதிக் குட்டமே

இப்பதினெட்டு நோயில் கழலை(கிரந்தி) நோய் களாலும் எண்வகைப்பட்ட பெருநோய்களாலும்,

மண்ணுளிப் புழுக்களாலும் வண்டு முதலிய பூச்சிகளாலும், தொத்துநோயாக பதினெண்வகைப்பட்ட பெருநோய்கள் பிறக்குமென அறிதல் வேண்டும்.

படர்தாமரைருகுட்டம்	வலிப்பெருநோய்
கொப்புரை பெருநோய்	சொறிப்பெருநோய்
சிரங்குப்பெருநோய்	செங்குட்டம்
யானைத்தோல் பெருநோய்	பன்றித்தோல் பெருநோய்
காதுப்பெருநோய்	தோல்வெடிப்பு பெருநோய்
தோற்பெருநோய்	தடிப்புப் பெருநோய்
கருபெருநோய்	அத்திக்காய் பெருநோய்
நாப்பெருநோய்	வளையப்பெருநோய்
புரைப்பெருநோய்	வெண்படை

(வெண்குட்டம்)

தீரும்நோய்கள்:

குட்டந்தான் பதினெட்டில் சாத்தியந்தான்
கூறக்கேள் விச்போடம் பாமாக்குட்டம்
கிட்டந்தான் கசசருமகுட்டமோடு
கிருட்ணகுட்ட மவுதும்பர குட்டந்தானும்
திட்ட மாந்தத்துருக் குட்டமோடு
செய்சித்மா குட்டங்கி டபகுட்டந்
தட்டந்தான் மிகுந்தசா தாருகுட்டம்
சமகிருட்ணகுட்டம் சாத்தியமாமென்னே
ஆமென்ற பத்துந்தான் சாத்தியமாகு
மாசாத்தியமது தானெட்டு அறிந்துபாரு
போமென்ற பூர்வத்தின் கன்மத்தாலும்
புவிதனக்கும் மிகுகன்மஞ் செய்தபாவம்
பாமென்ற பெரியோர்கள் சாபத்தாலும்
பாதகங்கள் மனதறியப் பண்ணும்பேர்க்கும்
கோமென்ற குட்டமாம் ரோகம்வந்து
கூடுமென்று யூகிமுனி கூறினேனே.

கொப்பிளப்பெருநோய்	விட்போடிகக்குட்டம்
கருப்புப்பெருநோய்	கிருட்ண குட்டம்
யானைத்தோல் பெருநோய்	கசகுட்டம்
அத்திக்காய் பெருநோய்	அவுதும்பா குட்டம்
தடிப்புப் பெருநோய்	தத்துருக்குட்டம்
நாப்பெருநோய்	சித்மாக்குட்டம்
பன்றித்தோல் பெருநோய்	கிடீபக்குட்டம்
போணுப்பெருநோய்	சதாருக்குட்டம்
தோல்பெருநோய்	சர்மக்குட்டம்
தோல்வெடிப்புப் பெருநோய்	சர்மதலக்குட்டம்

ஆகிய இப்பத்துப் பெருநோய்களும் தீராவாம். மற்றவைகள் தக்க மருத்துவத்தாலும், உடலையும், மனதையும், தூய்மைப்படுத்தலாலும் தீரக்கூடியனவாம்.

பொதுக்குறிகுணம்; இந்நோயால் பொதுவாக உடல் நிறம் வேற்றுமை அடைதல், தோல் மரத்துப்போதல், கழலைகள் போல் தடித்துப் புண்ணாகி எளிதில் உலராது, அழுகிக் குறையச்செய்தல் என்னும் குறிகளைப் பெறுவது தொத்து நோயாகும்.

நோயை அறியுமுன்பே முகம், மார்பு, தொடை இவைகளின் இயற்கை நிறம் வேறுபாடாகி, அவ்விடங்களில் மிகுதியாக வியர்த்தல், உடல் கற்றாழை நாற்றமடித்தல் என்னும் குறிகளைக் காட்டி உடலைப் பருக்கச் செய்யும். பின்பு உடல் நிறம் மாறிய இடத்தில் புடைகள் போல தடித்தேனும் அல்லது விளிம்புகள் சற்று உயர்ந்தேனும் தோன்றி அவ்விடத்தில் ஊசியால் கீறினும், குத்தினும், சுடினும், உணர்ச்சியிராது. இதனோடு சிறு கொப்புளங்கள் போல் உடல் முழுமையும் படை படையாக பிறந்து சிவந்து காண்பதுமுண்டு. அல்லது வெண்மையான வெண்குட்டம் போல் படைகள் வருவதுமுண்டு; அல்லது நெற்றி, புருவம், காது, மூக்குத்தண்டு இவைகளின் தோல் கருத்து மினு மினுப்போடு சிறு கழல்களைப் போல் பிறந்து அடிகனத்துப்

பெருத்துக்கொண்டே வரும். நோய் முற்ற, முற்றக்கை, கால் விரல்களின் நரம்புகளைக் குறுகச் செய்தாகிலும், இவைகளில் புண்ணுண்டாகி எலும்புவரையிற் பாய்ந்து அழுகச் செய்தாகிலும் குறையச்செய்யும். ஆதலின் இந்நோய் குறைநோய். அழுகுநோய் என கூறப்பெற்றது போலும். இந்நோயினை வினைப்பயனால் உண்டாகக் கொண்டமையால் நோயினில் விளைந்த வினையொழியுமட்டும் வாட்டி வினை தீர்ந்தபின் கொல்லுவதுபோல் நோய் நீடித்து வாட்டிக்கொல்லும்.

மருத்துவம்

இந்நோய் மருத்துவத்தில் முதலாகக் கேடடைந்த வளிக்குற்றத்தை தன்னிலைப் பெறுதற்கான கழிச்சல் மருந்துகளைக் கொடுத்து உடற்கட்டுகளை வன்மைப் படுத்துவதற்கான மருந்துகளையும் நோய்க்கான பெருமருந்துகளையும் உள்ளுக்கும் வெளிக்கும் கொடுத்தல் வேண்டும்.

குடிநீர் பொடிவகை, குழித்தைலம், நெய்வகைகள், எண்ணை வகைகள், மாத்திரை, பற்பசெந்தூரங்கள், மேல்பூச்சு மருந்து ஆகியவற்றின் மூலம் குணப்படுத்தலாம்.

இந்நோய்க்கு தாம்பிரச்சுண்ணம், தாம்பிரச்செந்தூரம், இரசச்செந்தூரம், கெந்தகச்சுண்ணம், தங்கச்சுண்ணம், தங்கரசச் சுண்ணம், வங்கச்சுண்ணம், வங்கச்செந்தூரம், நவபாடான தைலம் போன்ற மருந்துகளினால் நோயின் தன்மையறிந்து நோயைக் குணப்படுத்தலாம்.

கற்பம்

1. மிளகு கற்பம்

மிளகை 48 நாட்கள் (ஒருமண்டலம்) கற்ப முறையில் உண்ணவும். அதாவது முதல் ஒரு வாரம் 1,2,3,4,5,6,7 என்ற அளவில் ஒவ்வொரு நாளும் உயர்த்தி உண்ணவும். மறுவாரத்தில் உயர்த்திய ஏழு எண்ணிலிருந்து முன்போல் குறைத்தும் ஒரு மண்டலம் (48 நாட்கள்) உண்டுவந்தால், உடல் ஒளியும், வலிமையும் பெறும். நன்கு பசி ஏற்படும். மேலும் மிளகைப் பொடியாக்கி நெய்யுடன் குழைத்து உட்கொண்டுவந்தால், தொண்டைக் கரகரப்பு நீங்கப்பெற்று குரலினிமையடையும். 1 சிட்டிகை அளவு மிளகுப் பொடியுடன் போதுமான சர்க்கரை சேர்த்துக் குழைத்து உட்கொள்ளின் கடும்பசி ஏற்படும். அழல் (பித்தம்) சார்பான நோய்களும் நீங்கும். மிளகைக் குடிநீராகக் காய்ச்சிப் பருகி வந்தால் முக்குற்றங்களாகிய வளி, அழல், ஐயநோய்களையும் மற்றும் பல கொடும் பிணிகளையும் தீர்க்கும்.

மேலும் 3½ கிராம் எடை மிளகைத் தட்டி ஒரு குடுவையிலிட்டு ½லிட்டர் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து 125 மில்லியாக காய்ச்சி வடிக்கட்டி, உள்ளுக்குக் கொடுக்கச் சுரம் தணியும். அசீரணம், மந்தம் முதலியவைகளை நீக்கும். மேலும் இரசம், கெந்தகம், வீரம் முதலிய இரசவாடை உள்ள மருந்துகளின் வீரிய சக்தியை அடக்கும். சில விஷக் கடிகளையும் போக்கும்.

மாத்திரை: மிளகு, பெருங்காயம், அபினி வகைக்கு குன்று எடை 5. இம்மூன்றையும் குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ அரைத்து 12 மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி வைத்துக்கொண்டு பெரியவர்களுக்கு ஒரு மாத்திரையும், சிறியவர்களுக்கு ½, ¼ மாத்திரை வீதம் வயதிற்கேற்ப 1மணிக்கு ஒருமுறை கொடுத்துவர (தேனில் குழைத்து) எத்தகைய அசாத்தியமான வாந்தி பேதியையும்

குணப்படுத்தும். பேதி நின்றுவிட்டால் மருந்தை நிறுத்திவிட வேண்டும்.

இது வாதரோகங்களையும், சீழ் மூலத்தையும் குணப்படுத்தி பசி தீவனத்தையுண்டாக்கி மந்தத்தை நீக்கும். தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரும்.

2. திப்பிலி கற்பம்

திப்பிலியைப் பொன்மேனியாக வறுத்து இடித்துச் சூரணம் செய்து போதிய அளவு தேன் அல்லது சர்க்கரை ஏதேனும் ஒன்றைக்கலந்து வைத்துக்கொண்டு, காலை, மாலை இருவேளையும் ஐந்து முதல் பத்து குன்றியெடை 48 நாட்களுக்கு உட்கொண்டு வந்தால் தொண்டைக்கம்மல், நாட்பட்ட இருமல், வீக்கம், சயித்தியம், அக்கினிமந்தம், காதுநட்டம் முதலியவைகளைக் கண்டித்து இரைப்பைக்கும், ஈரலுக்கும் பலத்தைக்கொடுக்கும்.

இந்தச் சூரணத்துடன் கம்மாறு வெற்றிலைச்சாறும், தேனும் கூட்டி பெரியவர்களுக்குக் கொடுக்க சயித்தியம், கப சம்பந்தமான சுரம் தேமல் முதலியவை குணமாகும்.

இச்சூரணத்தைக் குழந்தைகளுக்கு ஒன்று முதல் ஒன்றரை குன்றியெடை, சரீர வன்மைக்கேற்ப தேனில் குழைத்துக் கொடுக்க வயிற்றிலுள்ள புளிப்பைக் கண்டிக்கும்.

திப்பிலிச்சூரணம்

திப்பிலி, திப்பிலிமூலம், மிளகு, மேல்தோல் சீவிய சுக்கு முதலியவைகளைச் சமனெடையாக எடுத்து, பொன்மேனியாக வறுத்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு நோயின் வன்மை, மென்மைக்கேற்றவாறு ஐந்து முதல் பத்து குன்றி எடை தினம் இரண்டுவேளை தேனில் குழைத்து உட்கொண்டுவர நாட்பட்ட சலதோடம், தொண்டைக்கம்மல், வயிற்றுவலி, இருமல், வயிற்றுப்

பொருமல், கப சம்மந்தமான உபத்திரவங்கள் முதலியவைகளைக் குணப்படுத்தும். இதனை விசேஷமாக லேகியங்களிலும், சூரணங்களிலும் சேர்ப்பது உண்டு.

இதனால் தீரக்கூடிய நோய்கள்: காசம், கபகுன்மம், சுவாசம், கோழை, பாண்டு, அரோசிகம், வயிற்றுப்புசம், வாயு, மூர்ச்சை, நீரேற்றம், பீலிகநோய், அதிசாரம், பெருவயிறு, திரிதோஷம், நடுக்கல் சுரம், மேகக்கட்டி, மூலரோகம், மார்புநோய்கள், பீனிசம், விழிநீர்க்கம்மல், கர்ணநாதம், முகத்தில் எழும்புகின்ற கருத்தமச்சம், கறுமை செம்மை நிறமுள்ள மச்சம் இவைகளைக் குணப்படுத்துவதுடன் நீர்த்துப்போன சுக்கிலத்தை இறுகிக்கட்டச் செய்யும்.

3. சுக்கு கற்பம்

1. சுக்கினைப் பொடிசெய்து, சிட்டிகை அளவு தேக்கரண்டி கருப்பஞ்சாறு அல்லது தேன் ஏதேனும் ஒன்றில் கலந்து காலை, மாலை இருவேளை உட்கொண்டு வந்தால் வயிற்றில் உண்டாக்கிய எரிச்சல் தீரும்.

2. ஒரு சிறிய சுக்குத்துண்டை மேல்தோல் சீவி வாயிலிட்டு மென்று அடக்கி வைக்க சீதளத்தாலுண்டான பல்வலி நீங்கும்.

3. சுக்கைப் பஞ்சுபோல் நறுக்கி ஒரு சிறிய சீலையில் முடிச்சுப்போட்டு காதில் சொருகி வைக்க, காதடைப்பு, வாயு முதலியவை நீங்கும்.

4. சுக்கைத் தாய்ப்பாலில் ஊறவைத்துத் தாய்ப்பால் விட்டு இழைத்து நெற்றிக்குத் தடவி சாம்பிராணிப் புகைச்சல் பிடிக்க தலைவலி நீங்கும்.

5. சுக்கின் மேல்தோலைச்சீவி அதன்மேல் அரைத்த உப்பை தழும்பப்பூசி சிறிது உலர்த்தி கும்பிச்சாம்பலுக்குள்

சொறுகி வைத்துக்கொண்டு வேளைக்கு கால் முதல் அரைவிராகனிடை தேனில் குழைத்து உட்கொண்டால் தீராத விக்கல் குணமடையும்.

6. இச்சூரணத்தை மேற்கூறப்பெற்ற அளவுபடி காலை, மாலை இருவேளை ஆகாரத்திற்கு முன் புளித்த மோரில் போட்டுக் கொடுக்க உஷ்ணபேதி, வயிற்றுப்பொருமல், வயிற்றிரைச்சல் முதலியவைகள் குணமாகும்.

7. மேல் தோல் சீவிய கால் பலம் சுக்கைப் பஞ்சுபோல் நறுக்கி ஒரு பழகின குடுவையில்போட்டு ½ லிட்டர் தண்ணீர்விட்டு ¼ லிட்டர் ஆகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் மூன்று வேளையாகக் கொடுக்கலாம். இதனால் வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், பேதி, குன்மம், அக்கினிமந்தம், இருமல், இருதயநோய், வீக்கம், வாந்திபேதி, குமட்டல், அரோசகம், சுரம், நரம்பு சம்மந்தமான பிணி முதலியவை நீங்கும்.

சுக்கின் பொதுக்குணம்: அசீரணம், மார்பெரிச்சல், முத்தோஷ குணம், புளியேப்பம், வெப்பம் ஆசனநோய், சுவாசம், காசம், நீரேற்றம், பேதி, வாத குன்மம், வாதநோய், வயிற்று உப்பிசம், செவிக்குத்தல், முகநோய், சுரநோய், குலைவலி, சீதபேதி, வயிற்றுக்குத்தல், விலாக்குத்தல் முதலிய நோய்களைக் குணப்படுத்தும்.

சுக்கைப் பிரதானமாகக்கொண்டு பல மருந்துகள் செய்வதுண்டு.

4. சீரக கற்பம்

1. போசனக்குடாரி என்னும் சீரகத்தை கற்பமுறையில் நாள்தோறும் சிட்டிகை அளவு கற்கண்டுத்தூள், தேன் அல்லது பால் இவைகளில் ஏதேனும் ஒன்றில் கலந்து தினம் காலை, மாலை இருவேளை உட்கொண்டு வந்தால் நோய்கள் வராமல் தடுக்கும் பித்தம், வாயு, உதிரச்சிக்கல், சீதபேதி, அசீரணபேதி முதலியவை குணமாகும்.

2. இச்சூரணத்தை வெல்லத்துடன் சேர்த்துக்கொடுக்க விக்கல் குணமாகும்.

இச்சூரணத்தைத் தனியாக உபயோகப்படுத்துவதை விட எலுமிச்சம்பழச்சாறு இஞ்சிச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, பொற்றிலை கரப்பான்சாறு இவைகள் ஒவ்வொன்றிலும் ஐந்துதினங்களுக்குக் குறைவில்லாமல் ஊறவைத்து உலர்த்தி இடித்து வடிகட்டிய சூரணத்தை மேற்கூறிய அனுபானங்களில் உட்கொண்டுவந்தால் பித்தம், தேககாங்கை, அசீரணம், அரோசகம், மயக்கம், கண்ணெரிச்சல், வயிற்றுவலி, மூலக்கொதிப்பு, சீதபேதி, சீதரத்தக்கிராணி முதலிய நோய்களைக் குணப்படுத்தி சரீரத்திற்கு உறுதியையும், கண்களுக்கு குளிர்ச்சியையும் உண்டாக்கும்.

5. வெந்தய கற்பம்

1. வெந்தயத்தைத் தோசையாக ஊற்றி, புசித்து வந்தால் உடல் வலிமை பெறுவதுடன், வளர்ச்சியும் அடையும். உடலிலுள்ள வலியையும் நீக்கும். வெந்தயத்தைக் கருணைக்கிழங்குடன் கலந்து சமைத்தோ அல்லது லேகியமாகவோ உட்கொண்டால் உடல் வலிமை பெற்று பருக்கும்.

2. அரை அல்லது ஒரு தோலா எடை வெந்தயத்தை நெய்விட்டு வறுத்து சிறிது உப்பும், சோம்பும் சேர்த்து அரைத்து உள்ளுக்குக் கொடுக்க பேதி கட்டும்.

3. வெந்தயம் அரை தோலா எடையை நெய்விட்டு வறுத்துப் பொடிசெய்து கொதிக்கின்ற தண்ணீரில் போட்டு ஆறவிட்டு வடித்துச் சாப்பிட சீதபேதி குணமாகும்.

4. அரை தோலா வெந்தயத்தை நன்றாக வேகப்போட்டு, கடைந்து தேன் கூட்டி சாப்பிடப் பெண்களுக்கு (பாலூட்டும் தாய்மார்களுக்கு) பால் சுரப்புண்டாகும்.

5. சிறிது புளியையும், சீமை அத்திப்பழத்தையும் தண்ணீர்விட்டுக் கரைத்துப் பிழிந்து, எடுத்தச்சாற்றில் அரைதோலா எடை வெந்தயத்தை வேகப்போட்டுக்கடைந்து தேன்விட்டு சாப்பிட மார்பு வலி, மூர்ச்சை முதலியன குணமாகும்.

6. வெந்தயத்தைச் சிறிது தண்ணீர் விட்டு அரைத்து, களிபோல் கிண்டி, கட்டிகளுக்கு வைத்துக்கட்ட கட்டிகள் உடைத்துக்கொள்ளும்.

7. நெருப்பு, கொதிக்கின்ற எண்ணெய், கொதிக்கின்ற தண்ணீர் முதலியவை பட்ட வேக்காட்டிற்கு வெந்தயத்தைத் தண்ணீர்விட்டு அரைத்து மேற்பூச எரிச்சல் தணிந்து இரணம் ஆறும்.

வெந்தயத்தின் பொதுக்குணம்: வெந்தயத்தினால் கணமாந்தம், அஸ்திசுரம், மேகம், பிரமேகம், சீதக்கழிச்சல், பேதி, ரத்தபித்தம், உட்சூடு முதலிய பிணிகள் நீங்கி நிரந்தரமாக சுக்கிலத்தை அதிகரிக்கச் செய்யும்.

6. கடுகு

1. இதைச் சாதாரணமாக கறி, காய், பதார்த்தங்களைத் தாளிதம் செய்வதற்காக உபயோகப்படுத்துவது உண்டு. இதனால் பதார்த்தங்களுக்கு ஒரு விதமான மணமும் விரைவில் சீரணமாவதற்குரிய குணமும் இதற்கு உண்டு. இதைச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, அரைக்கால் குன்றியளவு தேனிற் கலந்து உட்கொண்டு வந்தால் தலை, மூளை, உள்ளுறுப்பு இவைகளில் இருக்கும் மாசுகளையும், குண்டிக்காய், நீர்க்காய் இவைகளில் உண்டாகும் கற்களையும் அகற்றும். இன்னும் வாத சீதளத்தினால் உண்டான சகல வலிகளையும் நீக்குவதுடன் ஞாபக சக்தி, பசி, தீவனம் முதலியவற்றை உண்டாக்கும்.

2. இதை நன்றாய் அரைத்துக் கால் குடைச்சல், முழங்கால், கணுக்கால் வலி, வீக்கம், நரம்புகளின் இழுப்பு முதலியவைகளுக்குப் பற்றுப்போட நோய் குணமாகும்.

3. கபமிகுதியால் கஷ்ட சுவாசம் உள்ளபோது மார்புக்கும், முதுகு பக்கமுள்ள தோள்பட்டைகளின் நடுவிலும் பற்றுப்போட குணமுண்டாகும்.

4. கடுகின் நெய்யால் குன்மம், இரத்தபித்தம், உஷ்ணம், மகாவாதம், மூலமுளை இரணம் முதலிய பிணிகள் நீங்கும்.

5. கடுகு நெய்யுடன் ஐந்து பங்கு சிற்றாமணக்கு எண்ணெய் கலந்து சிறிது கற்பூரமும் கூட்டி மார்பு நோய், கை, கால்களில் ஏற்படும் வலி முதலியவைகளுக்கு விரலால் தொட்டு இலேசாகத் தடவி வைக்க வலி நிவர்த்தியாகும்.

6. கடுகு, மிளகு, இந்துப்பு மூன்றையும் ஒரு நிறையாக எடுத்துப் பொடித்துத் தேனில் கலந்து தினமும் விடியற்காலையில் மட்டும் சிறிதளவு தண்ணீருடன் உட்கொண்டு வந்தால் வலி, அழல், ஐயம் ஆகிய முக்குற்றங்களின் வேறுபாட்டினாலுண்டாகும் வலிகளைப் போக்கும். இம்மூன்றையும் பச்சடி முதலிய கறிகளோடு சேர்த்து உட்கொண்டுவரின் உடலுக்கு ஏற்படக்கூடிய பிணிகள் அற்றுப்போகும்.

7. சுத்தப்படுத்தி எடுத்தக் கடுகு 35 கிராம், பூச்சூடம் 35கிராம் இவ்விரண்டையும் குழியம்மியிலிட்டு மெழுகாகும் வரையில் நன்கு நெகிழ அரைத்து மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டி பத்திரப்படுத்தவும்.

இம்மாத்திரைகளைக் காலரா என்னும் வாந்திபேதி நோய் கண்டவர்களுக்கு ஒரு மணிக்கு மூன்று மாத்திரை வீதம் கொடுக்க குணமாகும்.

இம்மாத்திரைகளையே மேற்கூறப்பெற்ற நோய் வராமலிருக்கத் தடுப்பு மருந்தாகவும் உபயோகப்படுத்தலாம்.

கடுகின் பொதுக்குணம்: அக்கினி மந்தம், முக்குற்ற தோஷம், கிராணி, வயிற்றுவலி, வாயு, இரத்தபித்தம், மூலமுளை, விரணம், குத்தல் முதலிய பிணிகள் நீங்கும். சுகப்பிரசவத்தையும் தரும்.

வடநாட்டிலுள்ளவர்கள் காய்கறி பதார்த்தங்களை அவரவர்களின் பழக்க வழக்கங்களுக்கேற்றவாறு, கடுகு, நெய்யைக்கொண்டு தாளிதம் செய்து கொள்ளுகின்றனர். இதை அளவுக்கு அதிகமாகச் சேர்த்தால் வாந்தியை உண்டாக்குவதுடன் ரணத்தையும் உண்டாக்கும். இதில் சிறுகடுகு, செங்கடுகு, வெண்கடுகு எனப் பல வகைகள் உள்ளன.

7. வெள்ளைப்பூண்டு

1. வெள்ளைப்பூண்டை உரித்து 12 கிராம் எடையைப் பசும்பாலில் போட்டு வேகவைத்து கடைந்து தினமும் இரண்டுவேளை உட்கொண்டு வந்தால் சுவாசநோய், வயிற்றுப்புசம், மார்புநோய், நீரேற்றம், வயிற்றுவலி, வயிற்றிலுள்ள விரணம் முதலியவைகள் குணமாகும்.

2. பூண்டை அரைத்துக் கட்டி, பரு முதலியவற்றிற்கு மேல் பூச்சாகப் போட உடைத்துக்கொள்ளும்.

3. அரைக்கால் ரூபாய் எடை உரித்த பூண்டை 2 அவுன்சு நல்லெண்ணெய்க்கூட்டி, பதமுறக் காய்ச்சி வடித்துக் கொண்டு இரண்டு மூன்று துளிகள் காதில் ஊற்றி வந்தால் காதுகளில் ஏற்படும் சூலைநோய் குணமாகும்.

4. வெள்ளைப்பூண்டுச் சாற்றைக் கைவிரலில் தொட்டுக்கொண்டு உள்நாவின் வளர்ச்சிக்குத் தடவ உள்நாக்கு சுருக்கமடைந்து குணமடையும்.

8. வசம்பு

வசம்பைச் சுத்தப்படுத்தி, சீவல்போல் சீவி பொன் வறுவலாக வறுத்து இடித்து வடிகட்டி வைத்துக்கொண்டு காலை, மாலை இருவேளையும் மூன்று முதல் ஐந்து குன்றி எடை தேனில் குழைத்து உட்கொண்டுவந்தால் கபத்தையும், வாயுவையும் நீக்கும். நல்ல பசி தீபனத்தை உண்டாக்கும். சுவாச காசத்தைக் குணப்படுத்தும். விடசுரம், விடபேதி முதலியவைகளை வரவொட்டாமல் தடுக்கும். இச் சூரணத்தைத் தொடர்ந்து 48 நாட்கள் உட்கொண்டு வந்தால் தெற்றுவாய் (நாபிறழ்ச்சி) நீங்கிவிடும்.

வசம்பை சுட்டுக் கறியாக்கி, அதில் முருங்கை யிலையும், உப்பையும், வைத்துக் கசக்கி சார்பிழிந்து, பிழிந்த சாற்றை வசம்பு சுட்ட கரியுடன் குழைத்து குழந்தைகளின் தொப்பிளைச் சுற்றித் தடவ வாயு, வயிற்று உப்புசம், வயிற்றுவலி முதலியவைகளைப் போக்கி நீரைப் பிரித்துவிடும்.

இதன் கரியை தேனில் குழைத்து நாக்கில் தடவ வாந்தி, ஓக்காளம் முதலியன குணமாகும். நேர்வாளம் கொடுத்ததின் பயனாக நேர்ந்த தோஷங்களையும் குணப்படுத்தும்.

வசம்பின் பொதுக்குணம்: சில விஷங்கள், விரணம், வலிகள், குன்மம், இரத்தபித்தம், வாய்நாற்றம், சரீரநாற்றம், சூலை, சன்னி, காசம், கயிறுபோல் நீண்ட மலக்கிருமி ஆகியவைகள் போம்.

9. உப்பு

உப்பை இளவெந்நீரில் கரைத்துப் பருகினால் மலச்சிக்கலைப் போக்குவதுடன் உடல் வலியையும் நீக்கும்.

10. கற்பூரவள்ளி

கற்பூரவள்ளி இலைச்சாற்றைக் குழந்தைகளுக்கு கால், அரை தேக்கரண்டியளவு தாய்ப்பாலோடு சேர்த்துக் கொடுக்க, குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய இருமல், நெஞ்சில் கபம் கட்டியிருத்தல் உள்நாக்கு அழற்சி (டான்சில்) நீர்க்கோர்வை, மாந்தம், கணை முதலான நோய்கள் அகன்றொழியும்.

இத்துடன் நல்ல கஸ்தூரி அல்லது கோரோசனை மாத்திரை சேர்த்துக்கொடுத்தல் சாலச்சிறந்தது.

கற்பூரவள்ளி இலையை முறைப்படி நிழலில் உலர்த்தி, சூரணம் செய்து வைத்துக்கொண்டு பெரியவர்களுக்குத் தேனில் சிட்டிகை அளவு கொடுத்துவர மேற்கூறப்பெற்ற நோய் வியர்வையை உண்டாக்கி தேகத்தின் கொதிப்பைத் தணியச்செய்யும்.

இதன் பொதுக்குணம்: கற்பூரவள்ளியினால் காசம் என்கிற பொடி இருமல், அம்மைக்கொப்புளம், கபதோடம், மார்புச்சளி, வாதக்கடுப்பு ஆகியவைகள் போம்.

11. சீந்தில்

சீந்தில் என்னும் **அமுதவல்லிக்** கொடியைப் பொடிசெய்து சீனி சேர்த்துத் திரிகடி பிரமாணம் காலை, மாலை இருவேளை உட்கொண்டு வந்தால் தீபனம் போன்று துன்புறுத்தக் கூடிய மேகநோய், (வெட்டைச்சூடு) எலும்புருக்கி சுரம் நீங்கும்.

அமுதவள்ளிக்கொடி அக்காரம் என்பது சீந்தில் சர்க்கரை இது சித்த மருத்துவர்களிடையே வழங்கும் வழக்கு.

சீந்தில் சர்க்கரையைத் தனியாக உபயோகப்படுத்துவ தில்லை. இதனுடன் சில சரக்குகளைக் கூட்டி மருந்தாக முடித்துக்கொடுப்பதுண்டு.

பொதுக்குணம்: சீந்தில் சர்க்கரையால் இடைவிடாத பெருந்தாகம், எலும்புருக்கிநோய், இரத்தவாந்தி நோய், மேகம், மதுமேகம்,(நீரிழிவு) தேககாங்கை முதலிய பிணிகள் குணமாகும். மேலும் சில நூல்களில் சர்வமேகங்களையும், சர்ப்பவிடங்களையும், பித்தகணம், மாந்தசுரம் முதலியவைகளை குணப்படுத்தி பசி தீபனத்தையும் உண்டாக்கும் எனக்கூறப்பட்டுள்ளது.

12. இலந்தை

இலந்தைப்பழத்தை பகல் ஆகாரத்திற்குப் பிறகு உண்பது நலம். இதனால் உட்கொண்ட உணவு சீரணமாவதுடன், பித்தமும், கபமும் சாந்தப்படும். அதிக அளவு உண்பவர்களுக்கு மறுநாள் மலம் இளகலாகப் போகும்.

புழுக்கள் இல்லாத சுத்தமான பழத்தைக் கொட்டைகளை நீக்கி பிசைந்து போதிய அளவு உப்பு, மிளகாய்த்தூள் கூட்டி வடைதட்டிக் காயவைத்து உபயோகப்படுத்துவதுண்டு.

இதனால் வாந்தி, பித்த அரோசகம், அக்கினி மந்தம், கபக்கட்டு இவைகளைப் போக்கி நல்ல பசி தீபனத்தை உண்டாக்கும்.

இதன் பொதுக்குணம்: இலந்தைப் பழத்தால் பித்த மூர்ச்சை, அரோசகம், முக்குற்றத்தினால் ஏற்படும் வாந்தி, வலிவாதம் இவைகள் நிவர்த்தியாகும்.

இலந்தை மரவேரினால் அயர்ச்சி நீங்கும். தீபாக்கினியை உண்டாக்கும். இலைக்குச் சீழ்மூலம், இரத்த அதிசாரம், தேக எரிச்சல்,வயிற்றுக்கடுப்பு, பித்தமேகம் ஆகியவைகளைக் குணப்படுத்தும்.

13. பொன்னாங்காணி

சீதை எனும் பொன்னாங்காணிக்கீரையை நாடோறும் முறைப்படி உண்டுவர நோய்கள் பல (கண்நோய், உட்சூடு) நீங்கும். மேனி நிறம் பெறும். பொன்-ஆம்-காண்-நீ. நீ இதையுண்டால் பொன்மேனியாக காண்பாய் என்பதே இதன் பெயரினால் விளங்கும் பொருள்.

இதனைக் கூட்டு, துவட்டல் போன்றவற்றை பாகப்படி சமைத்து உணவுடன் உட்கொண்டுவர உட்சூடு, மூலம், மேகநோய் முதலியவைகள் குணமாகும். நீடித்துச்சாப்பிட சரீரத்துக்கு நல்ல அழகைக் கொடுக்கும். கண்களுக்கு ஒளியும் உண்டாக்கும். இதன் இலையை நெய்விட்டு வதக்கி இளம்சூட்டில் கண்களுக்கு வைத்துக்கட்ட வாத, கப சம்மந்தமான கண்நோய்கள் குணமாகும்.

இதன் இலையை அரைத்து நீர் நிறைய உள்ள புதுப்பானையின்பேரில் தட்டிவைத்து மறுநாள் வடித்தெடுத்துக் கண்களுக்கு வைத்துக்கட்ட பித்த சம்மந்தமான கண் வியாதிகள் குணமாகும். இதனைத் தைலங்களிலும், நெய்களிலும் சேர்த்து உபயோகப் படுத்துவதுண்டு. இதனால் தேகத்தின் வெப்பம் தணியும்.

பொதுக்குணம்: பொன்னாங்காணியினால் வளியைப் பற்றிய வாதகாசம், பித்தகாசம், வாததோடம், தேகசூடு, மூலரோகம், மயக்கம், உட்சூடு, மேகம் முதலிய நோய்கள் குணப்படுவதுடன் சரீரத்திற்குப் பொன்நிறத்தை உண்டாக்கும்.

14. பொற்றலைக் கையாந்தகரை

இது எல்லா இடங்களிலும் பயிராகும் கொடி வகுப்பைச் சேர்ந்தது. இதில் நீலம், சிவப்பு, மஞ்சள் என மூன்று உண்டு. சிவப்பும், நீலமும் உள்ள பூக்களோடு கூடியது கிடைப்பதில்லை.

மேற்கூறப்பெற்ற மூலிகையில் மஞ்சட்பூவோடு கூடிய கையாந்தகரை சிறந்ததெனச் சித்தர்கள் கூறியுள்ளனர். இது எல்லா காலங்களிலும், எல்லா இடங்களிலும் கிடைக்கக் கூடியது. இதை ஒவ்வொரு வீட்டிலும் வைத்துப் பயிர் செய்யலாம்.

உட்கொள்ளும் முறை: தற்கால நாகரீக பற்பசைகளையும், சீமைச்சுண்ணாம்புகளால் தயாரிக்கப் பட்ட பற்பொடிகளையும் உபயோகித்துப் பற்களையும், ஈறுகளையும் நாசமுறச் செய்யாமல் மேற்கூறப்பெற்ற பொற்றலைக் கையாந்தகரை இலையில் இருபது, 20 இலை களுக்கு குறைவில்லாமல் எடுத்து வாயில் போட்டு நன்றாகமென்று விரலினால் பற்களை நன்கு தேய்த்து வாய் கொப்பளிக்கவேண்டும். இவ்வாறு செய்வதனால் பற்களுக்கு உறுதியையும், முகத்திற்கு வசீகரத்தையும் கொடுப்பதுடன், தொண்டையிலுள்ள கபத்தையும் போக்கி உற்சாகத்தை அளிக்கிறது.

பல் விளக்கியவுடன் மேற்கூறப்பெற்ற இலையில் ஐந்து பறித்து அதனுடன் இரண்டு நல்ல மிளகு சேர்த்து நன்கு மென்று சுவைத்து விழுங்கிடவேண்டும். இதேபோல் காலை, மாலை இருநேரமும் சாப்பிடவேண்டும். மேலும் ஒவ்வொரு நாளும் இரண்டு இலைகள் வீதம் அதிகப்படுத்தி அவரவர் கையினால் 1 பிடி இலை சாப்பிடக்கூடிய அளவு வந்தவுடன் தினமும் காலையிலும், மாலையிலும் ஒவ்வொரு பிடி சாப்பிடவேண்டும்.

ஆகையால் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு தொட்டியில் வைத்துப் பயிர் செய்யவேண்டும். இக்கீரையை சமையலில் சேர்த்துப் பொரியலாகவும், கூட்டாகவும் சமைத்துச் சாப்பிடலாம். இதை ஒவ்வொரு வீட்டிலும் வாரம் இருமுறை சமைத்தாலே சாலச்சிறந்ததாகும்.

கற்ப மூலிகை உண்பதின் பயன்

"பொற்றலைக்கை யாந்தகரைப் பொன்னிறமாக்
கும்முடலை
சுத்தமுறக் காக்குஞ்சுகங்கொடுக்குஞ்-சிற்றிடையாய்
சிந்தூ ரங்கட் காகுஞ் சிந்தை தனைத்துலக்கும்
உந்திவளர் குன்ம மொழிக்கும்"

உடலிற்குப் பொன்னிறச் சாயலையும், கண்களுக்கு ஒளியையும், புத்திக்குத் தெளிவையும் உண்டாக்கும். குன்மக்கட்டியைப் போக்கி குருதியைச் சுத்தப்படுத்தும் இவ்வரிய கற்பமூலிகை. இதனால் பலவித சிந்தூரங்கள் செய்யவும் உதவும்.

5வயது முதல் 90 வயது வரை ஆண், பெண்கள் இதை எவ்வித பத்தியமும் இல்லாமல் சாப்பிட்டு வரலாம்.

1. ஒருமாதத்தில் வாக்கு சுத்தியாகும்.

2. இரண்டு மாதங்களில் உடல் நிறம் மாறும்.

3. மூன்றுமாதங்களில் உடலிலுள்ள குருதியைச் (இரத்தத்தை) சுத்தப்படுத்தி சீவனுக்கு எமனாக இருக்கும் கபத்தைப் போக்கி சுவாசத்தைப் பலப்படுத்தும்.

4. நான்காவது மாதத்தில் சுக்கில சுரோணிதங்களை விருத்தியடையச் செய்யும்.

5. ஐந்து மாதங்களில் அழகையும், முகத்திற்கு வசீகரத்தையும் உண்டாக்கும்.

ஓர் ஆண்டுக் காலத்தில் வாக்கு பலிதம் ஏற்படும். ஐந்து ஆண்டு காலம் சாப்பிட்டால் மாறாத இளமையையும், நீண்ட ஆயுளையும் உண்டாக்கும். இந்த ஒரே மூலிகையைத் தொடர்ந்து சாப்பிடுபவர்கள் வைத்தியரிடத்தில் போகும் தேவை ஏற்படாது. அதாவது எந்த நோய்க்கும் உள்ளாகாமல்

உடல் பலத்துடனும், மனோபலத்துடனும் விசாலமான புத்தியுடனும், நீண்ட ஆயுளுடனும் வாழலாம்.

ஐந்து ஆண்டு காலங்கள் தொடர்ந்து சாப்பிடுபவர்களுக்குப் பல நோய்கள் நீங்கும்.

மேலும் மூத்திரத்தில் இரத்தம் வருதல், விந்து வருதல், மூலவியாதிகள், கல்லீரல், மண்ணீரல் நோய்கள், சுவாச காசம், காசம், சரும வியாதிகள் ஆகியவை குணமடைவதுடன் சரீரத்திற்கு எந்தவித தீங்கும் ஏறபடாமல் பூச்சிகளை வெளிப்படுத்தி கிருமிகளால் ஏற்பட்ட கோளாறுகளையும் குணப்படுத்தும் உயர்ந்த கற்ப மூலிகையாகும்.

இம்மூலிகையை எந்த வயதினரும் சாப்பிட்டுவர வேறு எதனாலும் பெறமுடியாத நற்பலன்களையும் பெறலாம்.

15. கிச்சிலி

"கிச்சிலி " எனும் கொழிஞ்சி நாரத்தம்பழத்தை விருப்பத்துடன் தின்று வந்தால் பித்தத்தாலுண்டாகிய நோய்கள் நீங்கும். சூடு தணியும். அப்பிஞ்சினை ஊறுகாயாகச் செய்து, உணவுடன் சேர்த்து புசித்துவரின் உண்ட உணவைச் செரிக்கவைப்பதுடன், வாந்தி, செரியாமை, சுவையின்மை முதலான நோய்கள் நீங்கும். பசியை உண்டாக்கும்.

பொதுக்குணம்: இது கசப்பும், புளிப்பும் கலந்த சுவையுடையதாதலால் வயிற்றிலுள்ள கிருமிகளை மலத்தின் மூலம் வெளியாக்கும். வாந்தி, மயக்கம், அரோசிகம், அக்கினிமந்தம் போன்ற நோய்களையும் குணப்படுத்தும்.

16. மாதுளை

மாதுளம்பூ, கனி, வித்து, தோல் முதலியவைகளை உட்கொண்டு வந்தால் சுக்கிலதாதுப் பலப்படும் என்று மருத்துவ வல்லுனர்கள் கூறுவர்.

மாதுளம்பூ: மாதுளம்பூ, மாதுளம்பிஞ்சு, மாதுளம் துளிர் இவைகளைத் தனித்தனியாகாவாவது அல்லது ஒருமிக்கச் சேர்த்தாவது அரைத்துத் தயிரில் கலக்கிக்கொடுக்க இரத்தபேதி, சீதபேதி முதலியவைகள் குணமாகும்.

மாதுளம்பூ, பித்தவாந்தி, வயிறு உளைதல், வெப்பம், இரத்தமூலம் இவைகளைப் போக்கும். இரத்த புஷ்டியையும் பலத்தையும் தரும்.

மாதுளம் பழம்: பெருமை பொறுந்திய மாதுளம் கனிகளுக்குச் சந்தேகம் நீங்க, நினைப்பினையும், பேச்சையும் ஒழுகின்ற சந்யாசநோய், வாந்தி, கபம், மிகுதாகம் பித்த நோய் ஆகிய இவை விலகும். மலட்டு வியாதி போகும். மேலும் அப்பழத்தைத் தின்பதினால் வாய்நீர் சுரப்பு, கசப்பு, வாந்தி, விக்கல், மாந்தம் ஒழியும். இப்பழரசத்தைப் பிழிந்து, வடிகட்டி போதிய அளவு கற்கண்டைச் சேர்த்து உட்கொள்ள மிகு உஷ்ணம் குறையும். சரீரம் முழுதும் குளிர்ச்சி அடையும்.

மாதுளைவித்து: இதனை பசுவின்பால் விட்டு அரைத்து பாலில் கலக்கிச் சாப்பிட மேகக்கடுப்பு சுக்கில நஷ்டம் முதலியவற்றைப் போக்குவதுடன் இது சுக்கிலத்தை இறுக்குவதும் தவிர அதில் உள்ள குற்றத்தையும் பிரமேக சுருக்கையும் நீக்கும்.

மாதுளம்பழத்தின் ஓடு: மாதுளம்பழத்தின் தோலை இடித்து ஒருரூபாய் எடை சூரணத்தை ஒரு மட்குடுவையில் போட்டு அரைப்படி தண்ணீர்விட்டு வீசம்படியாக கொதிக்கவைத்து, வடிகட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு ஒன்றுமுதல் ஒன்றரை அவுன்ஸ் வீதம் தினம் மூன்றுவேளை உள்ளுக்குக் கொடுத்துவரச் சீதபேதி, இரத்தபேதி, வாய்ப்புண் முதலியவைகள் குணமாகும். இதன் நீரைக்கொண்டு வாய் கொப்பளித்துவர மருந்துகளின் வீரியத்தினால் உண்டான வாய்வேக்காடு முதலிவைகளும் குணமாகும்.

17. தூதுவளை

தூதுவளைக் கீரையைக் கறியாகப் பக்குவப்படுத்தி நாடோறும் உட்கொண்டு வந்தால் உடலில் ஏற்படும் காசம், ஈளை, இளைப்பு, அக்கினிமந்தம், காதுமந்தம், நமைச்சல், விந்து நட்டம் ஆகியவைகள் நீங்கும்.

தூதுவளைக்கீரையை நெய்விட்டு, வதக்கி, உப்பு, புளி, காரம் கூட்டி துவையலாகச் செய்து உணவுடன் உட்கொண்டு வர அதிதீபனத்தை உண்டாக்கும் வாயுவைக் கண்டிக்கும்.

இதன் பழத்தைச் சாப்பிட சரீரத்திலுள்ள முக் குற்றங்களையும் சமனப்படுத்தி கபத்தைக் கரைக்கும். இதனால் இறுகிய மார்புச்சளி, காசம், இழுப்பு போன்ற நோய்களை நிவர்த்திக்கிறது.

இதன் பூக்களை ஆய்ந்து நெய்விட்டு வதக்கி சாப்பிடத் தாது விருத்தியுண்டாகும். சரீரத்திற்கு அழகைக் கொடுக்கும் சுக்கிலத்தைப் பலப்படுத்தி சரீரத்தைப் பலப்படச் செய்யும்.

தூதுவளங்காய்களை நெய்விட்டு வதக்கி, குழம்பு களிலும், கூட்டுகளிலும் சேர்த்துப் பக்குவப்படி சமைத்து உபயோகப்படுத்துவதுண்டு. இதனால் வாத பித்த, கப தொந்தங்களைப் பிரித்து சமனப்படுத்தி கபநோய், பித்தநோய், அரோசகம், பித்தவாதம், மலபந்தம் ஆகிய நோய்களைக் குணப்படுத்தும்.

இதன் வேரை, குடிநீர்களுடன் சேர்த்து குடிநீராக உட்கொண்டு வந்தால், முக்குற்றத்தையும் போக்கும்.

18. நாரத்தை

நாரத்தங்காய் ஊறுகாயை நாள்தோறும் உணவுடன் சேர்த்து உட்கொண்டு வந்தால், வாந்தி, பசியின்மை, சுவையின்மை ஆகியவைகளைப்போக்கும்.

இதன் பொதுக்குணம்: இதன் பழத்தினால் பித்த குன்மம் நீங்கும். சுக்கில விருத்தியுண்டாகி இரைப்பைக்குப் பலத்தையும் கொடுக்கும்.

சாராயத்தின் வெறியையும் முறிக்கும். இதனால் வாத நோயும், குன்மமும், வாலுள்ள மலக்கிருமிகளும் நீங்கும்.

19. எலுமிச்சை

எலுமிச்சையிலை, காய்,கனி இவைகளை முறைப்படி உட்கொண்டுவர பித்த மீறுவதால் ஏற்படுகின்றதும், இழிவைத் தரத்தக்கதுமான பைத்திய நோய் படிப்படியாகக் குறையும்.

சாதாரணமாக ஊறுகாய் இடுவதற்கு எலுமிச்சங்காயே சிறந்தது. பழத்தை ஊறுகாய் இடுதல் சிறந்ததன்று.

பழமையான ஊறுகாயைத் தினந்தோறும் சாப்பாட்டுடன் உபயோகப்படுத்த வாத, பித்த, கபத்தைக் கண்டிக்கும். இடுமருந்தை முறிக்கும். சீரண சக்தியை கொடுத்து வாந்தியை நிறுத்தும்.

இதன் பழத்தினால் தாகம், யானைக்கால், உன்மத்தம், பித்தம், கண்ணோய், காதுவலி, வாந்தி இவைகளை நீக்கும்.

20. அத்தி

அதிகமாக முற்றாத காய்களைப் புதிதாகக் கொண்டு வந்து தனியாகவாவது அல்லது துவரம்பருப்பு, பாசிப்பருப்பு முதலியவற்றுடன் கூட்டியாவது பாகப்படி சமைப்பது உண்டு. இதனால் பிரமேகம், உட்சூடு, விக்கல், மலச்சிக்கல், தாகம் முதலியவைகளைக் குணப்படுத்தும்.

அத்திப்பட்டை: அத்திப்பட்டைக்கு ஆசனக்கடுப்பு, உதிரப்போக்கு, சீதரத்தபேதி, இரணம், பிரமேகம் முதலியவைகள் குணமாகும்.

அத்திப்பழம்: அத்திப்பழமானது நித்திய மலபந்தத்தையும், சரீர உஷ்ணத்தையும், பித்த வேகத்தையும், சுரவெப்பத்தையும் போக்கி சரீரத்திற்கு ஆரோக்கியத்தையும் இரத்த விருத்தியையும் தரும்.

அத்திப்பால்: காரமும், உஷ்ணமும் உள்ள அத்திப்பால் பித்தம், அதிநீர், கீல்பிடிப்பு, இரத்த மூத்திரக் கிரிச்சரம் இவைகளைக் குணப்படுத்தும்.

21. நுணா

மஞ்சணத்தி எனும் நுணாவின் காயை ஊறுகாய் செய்து உணவோடு உட்கொண்டு வந்தால் காணாக்கடி, நச்சுத்தன்மை முதலியவை உடலிலிருந்து படிப்படியாக நீங்கும். உடல் நலமுண்டாகும்.

நுணா இலை நடுவிலிருக்கின்ற ஈர்க்குகளை எடுத்து அதனுடன் துளசி, கரப்பான், மிளகு, சுக்கு முதலியவற்றைச் சேர்த்து குடிநீரிட்டு குழந்தைகளின் வயதிற்கேற்ப கால், அரை சங்களவு கொடுத்துவர குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், மந்தம், மேகம், கரப்பான், கபசுரம், புண், கிரந்தி முதலிய நோய்கள் குணமாகும். மாந்தபேதி நிற்கும்.

22. மணத்தக்காளி

இந்தக்கீரையைப் பாகப்படி சமைத்து உட்கொள்ள உட்சூடு, வாய் ரணம், ஆசனக்கடுப்பு, நீர்ப்பைக் கொதிப்பு, தாகம், கணச்சூடு, இருமல் ஆகிய நோய்கள் நீங்கும்.

இதன் சாற்றினால் வெள்ளீயம் கட்டும். பலவித செந்தூரங்கள் செய்வதற்கும் உதவும்.

23. வல்லாரை

வல்லாரைக் கீரையை நிழலில் உலர்த்தி (பசுமை போகா வண்ணம்) உரலிலிட்டு இடித்துச் சூரணம் செய்து வைத்துக்

கொண்டு வேளைக்கு ஒரு சிட்டிகை அளவு காலை, மாலை இருவேளையும் தேனில் குழைத்து 48 நாட்கள் உட்கொண்டு வந்தால் மேகநோய், பைத்தியம், குட்டம், கண்டமாலை, மேகரணம், கட்டி, பல்லீறுகளிலுண்டாகும் விரணம், சூதகவாயு, மேகவாயுப்பிடிப்பு, கணுச்சூலை, ஞாபகசக்திக் குறைவு முதலியவைகள் குணமாகும்.

இக்கீரையின் சாற்றின்மூலம் தைலம், லேகியம் போன்ற மருந்துகளை செவ்வனே செய்து முடித்து உட்கொண்டு வந்தால் சரீரமே கற்பமாகும். விந்துகட்டுப் பட்டு சரீரத்திற்கு வனப்பையும், அழகையும் கொடுக்கும். சக்தி வாய்ந்த மூலிகை.

இதன் குணம்: வல்லாரை மலக்கழிச்சல், இரத்தக்கிராணி, சுடுப்புக் கழிச்சல், மேகம், பைத்தியம், ஞாபகமின்மை போன்ற நோய்களை எளிதில் குணப்படுத்தக் கூடியது.

24. தும்பை

ஐம்முகன் வெற்றி என்னும் தும்பையினிலையைக் கறியாகப் பக்குவப்படுத்தி உட்கொண்டுவரின் துன்புறுத்தக் கூடிய கபநோய் நீங்கும்.

தும்பை இலையை அரைத்து பாம்புக்கடிக்கும் சிறங்குகளுக்கும் போடுவது உண்டு. இதன் சாற்றை நசியமிட தீராத தலைவலி, ஜலதோடம், பைத்தியம், பாம்புவிடம் முதலியன குணமாகும்.

தும்பைப் பூவினால் வறட்சி, சன்னிபாதமும், நேத்திரத்தைப் பற்றிய நோய் முதலியன குணமாகும்.

குணம்: தும்பை இலையால் பாம்பு விடங்கள், வாதநோய், தலைவலி, கபநோய், அக்கினிமந்தம், பிரமேகம் ஆகியவைகள் நீங்கும்.

25. மூக்குறட்டை

மூக்குறட்டை இலையைக் கற்பமுறையாக உட்கொண்டுவரின் உடலிலுண்டாகின்ற வாதநோய்கள், வயிற்றுக் கோளாறுகள், சூதகநோய், சிறுநீர் நோய், மேகம், மகோதரம் ஆகியவை பெட்டிப்பாம்பு போல அடங்கிவிடும். இது சாரணை வகையைச் சார்ந்தது.

இது அழகையும், பேதியையும், பித்தப்பிணியையும் உண்டாக்கும்.

26. நன்னாரி

"காமவல்லி" என்னும் நன்னாரியின் வேரை ஊறுகாயாகப் பயன்படுத்திவர உடலில் உண்டாகின்ற பித்தநோய் (உட்சூடு) மேகநோய் ஆகியவை உடலை விட்டு நீங்கும்.

சுகந்த வாசனையையுடைய நன்னாரி வேர்ப்பட்டையை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு அரை முதல் ஒரு விராகனிடை காய்ச்சிய பசும்பாலில் போட்டு கற்கண்டுத்தூள் கூட்டி தினம் இரண்டுவேளை உட்கொண்டுவர நீர்ச்சுருக்கு நீர் எரிச்சல் சிவந்த நிறமுடன் குறைந்த அளவாக போகும். நீர்க்கொதிப்பு முதலியவைகள் குணமாகும்.

குணம்: நன்னாரிவேரை அரைத்துத் தேனில் மத்தித்து உட்கொண்டால் அதிபித்தம் தீரும். அதைக் கற்றாழைச் சாற்றுடன் உண்ண வண்டுகடி போகும். மேலும் கிரமப்படி உபயோகிக்க நீரேற்றம், பித்தநோய், தாகம், வாய் நீர்ச்சுரப்பு, புணர்ச்சியின் சூடு, மதுமேகம், கிரந்தி, சுரவேகம், வெள்ளை முதலியவை தீரும்.

27. ஆதொண்டை

ஆதொண்டைக்காயைக் கறியாகச் சமைத்தாவது அல்லது வேகவைத்து உலர்த்தி வற்றலாகவாவது உபயோகப்

படுத்திவந்தால், இரைப்பையின் தாபனம், வாந்தி, மார்புவலி, அக்கினிமந்தம் முதலிய நோய்களைப் போக்குவதுடன் கபநோய்கள் அனைத்தும் குணமடையும். மேலும் 35 கிராம் முதல் 52½ கிராம் ஆதொண்டைவேர், பட்டை இரண்டையும் பஞ்சுபோல் நறுக்கி ஒரு மட்கலயத்தில் போட்டு 1 லிட்டர் தண்ணீர் விட்டு ½லிட்டர் ஆகக் காய்ச்சி, வடிகட்டி வேளைக்கு 1 முதல் 1½ அவுன்ஸ் வீதம் தினமும் இரண்டு மூன்றுவேளை கொடுத்தால் கபாலநோய், வாதப்பீனிசம், வாதக்குடைச்சல், நெஞ்சில் ஏற்படும் கபாதிக்கம் முதலியவை குணமடையும்.

ஆதொண்டைப்பொதுக்குணம்: ஆதொண்டையினால் கபாலநோய், வாதபீனிசம், வாதக்குடைச்சல், நெஞ்சில் ஏற்படும் கபாதிக்கம், மார்புவலி, வாந்தி, அக்கினிமந்தம் முதலிய நோய்கள் குணமாகும்.

28. சுண்டை

சுண்டைக்காயை பாகப்படி சமைத்து உட்கொண்டு வந்தால் வாதநோயைக் கண்டிக்கும். வயிற்றிலுள்ள கிருமிகளை நீக்கும். கபத்தையறுக்கும்.

காய்ந்த சுண்டைக்காயை உப்பிட்டு மோரிலிட்டு பலதடவை பிசரி உலரவைத்து வற்றலாக்கி நெய்யிலாவது, எண்ணெயிலாவது வறுத்து ஆகாரத்துடன் உட்கொள்வதுண்டு. மேலும் வறுத்த சுண்டைக்காயை நன்கு பொடிசெய்து உப்பிட்டு அன்னத்தில் கலந்தும் சாப்பிடுவது உண்டு. இதனால் பித்த வாயுவினாலுண்டாகும், வலிகளெல்லாம் அகலும். உஷ்ணபேதியை நிறுத்தும், வாயுவைப் போக்கும்.

சுண்டைக்காயின் பொதுக்குணம்: இதனால் மார்புச்சளி, கிருமிநோய், வாதம், பித்த அரோசகம், மலக்கிருமி, கிராணி, சீதக்கட்டு முதலிய நோய்கள் குணமாகி பசியுண்டாகும்.

29. சில்லி

சில்லி என்னும் சிறுகீரையை பாகப்படி சமைத்து உணவோடு உட்கொண்டுவர பித்தம் என்னும் உள் அழல் நோய் தணியும்.சரீரத்திலுள்ள நீர்க்கோர்வை நீங்கும்.

இதன் வேரைக் கியாழமிட்டுக் கொடுக்க நீர் தாராளமாக இறங்கும். இது பத்தியத்திற்கு ஆகாது. இது எவ்வித மருந்துகளின் வீரிய சக்தியையும் முறித்துவிடும்.

சில்லியின் பொதுக்குணம்: இதனால் காசம், படலம், பாதரசவேகம், விரணம், மூத்திரக்கிரிச்சரம், வீக்கம், பித்தநோய், நாவி போன்ற பாடாண விடங்களின் வீரிய சக்தி ஆகிய இவைகள் போகும். ஆனால் சரீரத்திற்கு அழகையும் வனப்பையும் உண்டாக்கும்.

30. சூதம்

சூதம் என்னும் "மாங்கனியைச்" சாறு எடுத்து முறைப்படி அளவோடு குடிக்க மனத்தளர்ச்சியும், பலக்குறைவும் நீங்கும். (மாங்கனியை உண்டபின் பால் பருகுவது முறையாகும்) ஆனால் பச்சைக்காயையுண்ணப் பல தீமைகள் உண்டாவதுடன் இரத்தமும் கெடும்.

மாங்கனியின் பொதுக்குணம்: இதனால் சுக்கிலநாசம், மிகுவாயு, சிரங்கு, தேகம் வடித்தலோடு ஆராத இரணம், பற்கள், கூந்தல் இவைகள் உண்டாகும். பசியுண்டாகும்.

31. சங்கம்

சங்கம் பட்டையை பொடிசெய்து வெருகடியளவு (பூனையின் காலடி அளவு) காலை, மாலை இருவேளை உட்கொண்டுவர, உள் அழற்சி, வாய் வேக்காடு, வண்டுகடி, ஆரம்பக்குட்டம், சொறிசிரங்கு, தேமல், வெட்டை, சூலை, கரப்பான், நமைச்சல், இரணம் முதலியவை குணமாகும்.

குணம்: இதன் வேருக்கும், இலைக்கும், சோகை, கரப்பான், விரணம், குன்மம், பல்வீக்கம், வாதகோபம், வாதப்பிரமேகம், கர்ப்பத்தில் உண்டாகிற கருங்கிரந்தி, தவளைச்சொறி, வறட்டிருமல், இரத்தக்கிருமி இவை குணமாகும். கண்துலக்கமும், மிகுபசியும், இரத்தவிருத்தியும் உண்டாகும்.

இதன் வேர்ப்பட்டையை சந்தனக்கல்லின்மீது தண்ணீர் விட்டு அரைத்து ஒரு சுண்டைக்காய்ப் பிரமாணம் வழித்து வெள்ளாட்டுப்பாலில் கலக்கிக் கொடுக்க பாண்டுநோய் குணமாகும்.

32. புங்கு

புங்கம் பட்டையையும் மேற்கூறியவாறு சூரணம் செய்து வெருகடியளவு சாப்பிட்டுவரின் இருமல், ஈளைவலி, பிடிப்பு, ரணம் முதலியவை குணமாகும்.

குணம்: இதனால் முக்குற்ற மூர்ச்சை, தாபசுரம், வாயுகுன்மம், இரத்த தாதுவினால் பிறக்கின்ற நோய்கள், புரையோடல், சர்ப்பவிடம் ஆகியவைகள் குணமாகும்.

புங்கின் நெய்யினால் அழகும், ஒளியும் உண்டாகும். கரப்பான், படை, கிரந்தி, கீல்களைப்பற்றிய வாயு முதலிய நோய்களும் குணமாகும்.

33. வெண்குன்றி

"விடாரி" எனும் வெள்ளைக்குன்றிமணி வேரை வெள்ளாட்டுச் சிறுநீரில் ஊறவைத்து எடுத்து உலர்த்தி வைத்துக்கொண்டு பாம்புக்கடி, தேள்கடி முதலான கொடிய நஞ்சைப் போக்குவதற்குப் பயன்படுத்தலாம். எனவே இதன் பெயர் "விடாரி" யாகும்.

அளவு: திரிகடிப்பிரமாணம்.

பத்து பலம் வெண்குன்றிப்பருப்பை ஒருநாள் முழுதும் வெள்ளாட்டுப்பாலில் ஊறப்போட்டு மறுநாள் வெய்யிலில் உலர்த்தவும். இவ்வாறு ஏழுமுறை செய்து குழித்தைலம் வாங்கி அதில் இரண்டு மூன்று துளி வீதம் தினம் இரண்டு வேளை சர்க்கரையில் உட்கொண்டுவர தாதுவிருத்தியாகும்.

இதன் குணம்: வெண்குன்றி விதை சுக்கிலத்தை விருத்தி உண்டாக்கும். வேர் தாகத்தையும், இலை சுளுக்கையும், காய், கொடி பைசாசங்களையும் நீக்கும்.

சுளுக்கு நேர்ந்த இடத்தில் சிற்றாமணக்கெண்ணெய் தடவி இதன் இலையை மேல் அப்பிவைக்கச் சுளுக்கு வாங்கும்.

34. வெள்ளெருக்கு

வெள்ளெருக்கின் வேரை வெள்ளாட்டுச் சிறுநீரில் ஊறவைத்து எடுத்து உலர்த்தி வைத்துக்கொண்டு செந்தேள், கருந்தேள் முதலான தேள்கடி அனைத்திற்கும், திரிகடிப் பிரமாணம் கொடுக்கத் தேள்கடி நிவர்த்தியாகும். (வெள்ளெருக்குக் கிடைக்காதபோது) எங்கும் கிடைக்கும் நீல எருக்கின் வேரையும் மேற்கூறியவாறே பயன்படுத்தலாம்.

இதன் உலர்ந்த பூவை சுத்தப்படுத்தி சூரணம் செய்து வைத்துக்கொண்டு அரை முதல் ஒருகுன்றி எடை அளவு சர்க்கரையுடன் கூட்டி சிலநாள் கொடுக்க ஆரம்பக்குட்டம், மேகரணம், முறைசுரம், பீனிசம், சுவாசகாசம், கழுத்து நரம்பு இசிவு இவைகள் குணமாகும். ஆனால் இதை உட்கொள்ளும் காலத்தில் பசும்பால் உணவைத் தவிர்த்து வேறு எதுவும் உட்கொள்ளக்கூடாது.

குணம்: ஐவகை வலியின் வன்மை, சுளுக்கு, மகாவதம், சன்னிபாதம், எலிவிஷம், குளிர்சுரம் இவைகள் போம்.

35. தவசி முருங்கை

தவசி முருங்கைக் கொழுந்தை அரைத்து புன்னைக் காயளவு தயிரில் குழைத்து உட்கொண்டுவரின் எலிக்கடியா லுண்டாகிய நஞ்சு நீங்கும்.

இது தேகத்தின் வெப்பத்தைத் தணிப்பதுடன் மலத்தை இளகலாகப் போகச்செய்யும். பெரும்பாலும் இதன் சாற்றை அம்மைகண்டு இறங்குமுகமாக இருக்கும்பொழுது குழந்தைகளின் பருவத்திற்கேற்றவாறு அரை முதல் ஒரு தேக்கரண்டி அளவு தினமும் இருவேளை கொடுத்துவர அதிக நன்மையைத் தரும்.

குணம்: இதன் இலைக்கு வாதபீனிசம், வாதநோய், தொந்தநோய், கபம், சுவாசகாசம், இருமல் முதலிய நோய்கள் குணமாகும்.

36. அழிஞ்சில்

"ஐங்கோலம்" எனும் அழிஞ்சின்வேரை வெள்ளாட்டுச் சிறுநீரில் ஊறவைத்தெடுத்து இடித்துத் தூள்செய்து வடிகட்டி வைத்துக்கொண்டு காயவைத்து செம்பூரான் முதலான நச்சுக் கடிகளுக்கு திரிகடிப்பிரமாணம் கொடுத்தால் நஞ்சு நீங்கும்.

குணம்: இதனால் ஜீவ ஜந்துக்களின் பற்கடியால் நேர்ந்த எல்லா விடக்கடிகளும் தோடங்களும் பேதிகிரந்தி விரணம் ஆகியவைகளும் போம். மேலும் வாதகோபம், கபதோடம், சீழ்வடியும் பெருநோய் இவைகளை குணப்படுத்தும்.

37. சாரணை

சாரணைவேர், இலை, பட்டை இவைகளைப் பொடிசெய்து திரிகடிப்பிரமாணம் உட்கொண்டுவரின் நோய்களுக்கு அடிப்படையான மலக்கட்டு நீங்கும்.

இதன் முற்றினவேரில் ஒருகுன்றி எடையில் ஆரம்பித்து ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு குன்றின் எடை அதிகப்படுத்தி நாற்பத்தெட்டு நாட்கள் வரையில் உட் கொண்டு பிறகு படிப்படியாக ஒவ்வொரு குன்றி னெடையாகக் குறைத்துக்கொண்டு வந்து விட்டுவிட எந்த மருந்துகளினாலும் குணப்படாத வாதரோகங்களும் குணப்படும். மேலும் நெறிகட்டிவரும் சுரம், யானைக்கால் வீக்கம், பீனிசநோய் முதலியவை தீரும்.

குணம்: இதனால் நீரேற்றம், தேமல், தடிப்பு, குன்மம், வாதவலி, சிரங்கு, பிரமேகம், இருமல் முதலிய நோய்கள் குணமாகும்.

38. குப்பைமேனி

"காந்திமெய்" எனும் குப்பைமேனி இலையைக் கறியாகச் சமைத்து விருப்பமுடன் உணவுடன் சேர்த்து உட்கொண்டுவரின், உடலிலேற்படுகின்ற திமிர்வாத முதலாகிய வாதநோய்கள் தீரும்.

இதனை சுத்தமாக ஆய்ந்து, உலர்த்தி இடித்துச் சூரணமாக வைத்துக்கொண்டு வேளைக்கு திரிகடிப் பிரமாணம் காலை, மாலை இருவேளை உட்கொண்டுவர மூலம், பவுத்திரம் முதலியநோய்கள் குணமாகும்.

குணம்: இதனால் தந்தமூல ரோகம், தீச்சுட்டப்புண், தாவர சங்கம விஷங்கள், வயிற்றுவலி, வாதநோய், இரத்தமூலம், நமைச்சல், குத்தல், இரைப்பு, பீனிசம் ஆகிய நோய்களை குணப்படுத்தும்.

39. யானை வணங்கி எனும் நெருஞ்சில்

1. யானை வணங்கி எனும் நெருஞ்சில் வேருடன் கற்கண்டு சேர்த்துப் பொடித்து திரிகடிப் பிரமாணம் உட்கொண்டுவரின் சொறி, சிரங்கு, ஈளை, இருமல் ஆகிய நோய்கள் நீங்கும்.

2. யானை நெருஞ்சிலின் சமூலத்தைக் கொண்டுவந்து வெண்ணெய்போல் அரைத்து ஒருபாக்களவு எருமைத் தயிரில் கலக்கி தினம் ஒருவேளை காலை நேரத்தில் மூன்றுநாட்கள் சாப்பிட நீர்கட்டு, நீர்எரிச்சல், வெள்ளை, தேக எரிச்சல் இவைகள் போம்.

குணம்: குளிர்ச்சியையுடைய யானை நெருஞ்சியில் வெள்ளைவிழல், வெண்குட்டம், தேகஎரிவு, உழலை, தாகம், பித்த மயக்கம் ஆகிய நோய்கள் குணமாகும்.

40. நிலாவாரை

நிலாவாரை வேர், இலை, பட்டை, பூ இவற்றைப் பொடிசெய்து வெந்நீருடன் பருகிவரின் மலச்சிக்கல் அகலும். (அரைத்தேக்கரண்டி அளவு)

குணம்: நில ஆவாரையினால் பற்பல மூல வாயுக்கள், சுரம், சீழ்ச்சிரங்குகள், வயிற்றுவலி முதலிய நோய்கள் குணமாகும்.

41. கீழ்க்காய் நெல்லி

புலாமலி என்னும் கீழ்க்காய் நெல்லியை அரைத்துக் கொட்டைப்பாக்களவு உண்டுவர காமாலை, நோய்கள் நீங்கும். காலை, மாலை ஒருவாரம் உண்ணவும்.

இதன் சமூலத்தை அரைத்து ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் பசுவின்பாலில் கலக்கிச் சாப்பிட்டுவரச் சோகை காமாலை, பாண்டு, வாத பித்த நோய்கள், கண்நோய்கள் முதலியன குணமாகும்.

ஆங்கில மருத்துவமுறையினால் குணமாக்க முடியாத மஞ்சட்காமாலைக்கு உலகத்திலேயே சிறந்த மருந்தாக இது கருதப்படுகிறது.

இதனை அரைத்து கற்பமாகவாவது இதர சரக்குகளுடன் கூட்டி கியாழமாகவாவது நல்லெண்ணெயுடன் கூட்டி தைலமாகவாவது செய்து உபயோகப்படுத்துவதுண்டு.

காமாலைக் குடிநீர்: கீழ்க்காய்நெல்லி, கரிசலாங் கண்ணி, பேய்ப்புடல், வெள்ளை மிளகு, சோம்பு, வில்வவேர் வகைக்கு ¼பலம் எடுத்து இடித்து ஒரு குடுவையிலிட்டு 1லிட்டர் தண்ணீர் விட்டு ½லிட்டர் ஆகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினமும் 3 வேளை உட்கொள்ளவும். இவ்வாறு 3 முதல் 5 நாட்கள் உட்கொள்ள காமாலை, பாண்டு, சோகை முதலிய நோய்கள் குணமாகும். இதனைக் கொடுக்கும்போது அயம், காந்தம், மண்டூரம் போன்ற செந்தூரத்தில் ஏதாவது ஒன்றைச் சேர்த்துக்கொடுத்து வந்தால் உயர்ந்த குணத்தை கொடுக்கும்.

குணம்: கீழ்க்காய் நெல்லிக்கு ஆமக்கட்டு நோய்கள் சங்கைதோஷம், இரத்த அதிசாரம், மதுப்பிரமேக மூத்திரம், மஞ்சட்காமாலை, பலவகைப்பட்ட சுரம், சருமதாது, வெப்பம், நாட்பட்ட மேகப்புண், பாண்டு, சோகை முதலிய நோய்கள் குணமாகும்.

42. துளசி

துளசி இலைச்சாற்றை பெரியவர்களுக்கு அரை ரூபாய் எடையாகவும், குழந்தைகளுக்கு கால், அரை தேக்கரண்டி அளவாகவும் காலை, மாலை இருவேளை கொடுக்க சுரநோய்கள் அற்றுப்போகும்.

இதைச்சூரணமாக இடித்து வைத்துக்கொண்டு, திரிகடிப் பிரமாணம் தினம் 2 வேளை உட்கொண்டுவர இருதயத் திற்கும், ஈரலுக்கும் பலத்தைக் கொடுப்பதுடன் தீபனத்தை உண்டாக்கும். கபத்தை ஒழிக்கும். பெண்களுக்கு முலைப்பால் சுரப்புண்டாகும். உதிரச்சிக்கலை நீக்கும். இதன் இலையைக் கசக்கி முகர நாசியடைப்பு நீங்கும். இதன் சாற்றுடன் காடி கலந்து நாசியில் இரண்டொரு துளிவிட

பீனிசநோய் போகும். இதன் இலைச்சாற்றை மார்பு வீக்கத்திற்குப் பூச வீக்கத்தைக் குறைக்கும். இதன் சாற்றை காது வலிகளுக்கு காதிலிட, காதுவலி குணமாகும்.

இதன்வேரை குடிநீராக்கி கொடுக்க சுரம், கணமாந்தம் முதலியன குணமாகும்.

இதன் சமூலத்தை சூரணம் செய்து வைத்துக்கொண்டு நீண்ட நாட்கள் உட்கொண்டு வந்தால் குட்டரோகம் குணமாகும்.

நல்ல துளசியைவிட கரும்துளசிக்கு காரம் அதிகம், மருந்து பாகங்களில் அதிக நன்மையைத் தரும்.

45. தேற்றான்

தேற்றான்கொட்டையை எந்த முறையிலேனும் பக்குவப்படுத்தி சிட்டிகை அளவு காலை, மாலை உண்டுவரின் கொடுமை மிக்க வாயு நோய், இரைப்பு, மலக்கட்டு, முக்குற்ற நோய்கள் யாவும் குணமாகும்.

இந்தக்கொட்டையை சந்தனக்கல்லில் இழைத்து தண்ணீரில் கலந்துவிட்டால் தண்ணீரில் உள்ள அசுத்தங்களை யெல்லாம் பிரித்து தெளிவாக்கிவிடும்.

இந்தக்கொட்டையை அரை முதல் 1வரையில் சந்தனக் கல்லில் இழைத்து பசுவின் மோரில் கலக்கி ஒருவாரம் காலை, மாலை இருவேளை உட்கொண்டுவர நாட்சென்ற அதிசார பேதிகளும் குணமாகும்.

இதை லேகியமாக செய்து உட்கொண்டு வந்தால் சரீர வலிமையையும், வனப்பையும் கொடுத்து விந்துவைக் கட்டும்.

குணம்: தேற்றான்கொட்டைக்குப் பிரமேகம், வெள்ளை, வெட்டை, உட்சூடு, வயிற்றுக்கடுப்பு, மூத்திர

எரிச்சல், உள்விரணம், வாதஇருமல், இரைப்பு, மலக்கட்டு முதலிய நோய்களைக்குணப்படுத்தும்.

44. விளா

விளாங்காய், விளாம்பழம் இவைகளை உண்டு வருவதால் பித்தத்தால் ஆகியமே நாய்கள் குணமாகும்.

இதன் பூ, வேர், பட்டை, பழம் இவற்றையும் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து, வேளைக்கு 3½ கிராம் வீதம் சர்க்கரை அல்லது தேன் விட்டுக் குழைத்து உட்கொண்டு வந்தால் பித்தம், பசியின்மை, பேதி, சீதபேதி, வாய்நீர் ஊறல் ஆகியவை குணமாகும்.

இதன் பழத்தை சர்ப்பத்தாகக் காய்ச்சி அரை முதல் 1அவுன்ஸ் வீதம் இருவேளை சாப்பிட உட்சூடு, பித்தம், மயக்கம், வாய் இரணம் முதலியவை குணமாகும்.

விளாம்பழத்தின் ஓட்டைக் குடிநீராகக் காய்ச்சி குடிக்க இருமல், பித்தம் இவைகள் போகும். இதன் பிசின் தாது விருத்தியை உண்டாக்கும்.

இதன் குணம்: இதனால் சுவாசம், காசம், கபாதிக்கம், பித்ததாகம் இவை விலகும். உடலுக்கு சுகமும், நல்ல பசியும் உண்டாகும்.

45. களா

களாப்பழத்தை உண்டுவரின் உடலிலேற்படும் வலி நீங்கும். மேலும் உடலை மலைபோல் உறுதியடையச் செய்யும்.

இப்பழத்தை அதிக பசியில் சாப்பிட சீத இரத்தமும், அதிமந்தத்தில் தின்றால் நல்ல பசியையும் உண்டாக்கும். தொண்டைவலியும் தலைக்கனமும் நீங்கும்.

இதன் காயைச் சுத்தமாக அலம்பிச் சிறு துண்டுகளாக அரிந்து உப்பிட்டு ஊறவைத்து உட்கொள்ள பித்ததோஷம் நீங்கும். இதை எலுமிச்சங்காய் ஊறுகாயோடு கூட்டி நன்றாய் உப்பும், புளிப்பும் ஊறினபின் உணவு உட்கொள்ளும்போது உபயோகப்படுத்துவதும் உண்டு. இது நாவிற்கு நல்ல ருசியையும், பசியையும் உண்டாக்கும். பித்தத்தை நீக்கும்.

குணம்: இப்புளிப்புள்ள களாவிற்கு காதடைப்பு, தாகம், பித்ததோடம், வாந்தி, அரோசகம், இரத்தப்பித்தம் இவைகள் குணமாகி தீவிரமான பசியையுண்டாக்கும்.

46. மருது

மருதம்பட்டையைப் பொடிசெய்து (காலை,மாலை தேக்கரண்டி அளவு) தேன் சேர்த்து உண்டுவரின் உடலைப் பற்றியுள்ள மூர்ச்சை, வாயு, இரத்தபேதி, சீதபேதி,தலைபாரம் முதலியவைகளை குணப்படுத்தும். இருதய சம்பந்தமான பல வியாதிகள் குணமாகும்.

குணம்: இதனால் வெகுமூத்திரம், பிரமியம், மயக்கம், தாகம், நீங்காத சுரத்தினால் ஆயாசம், பெருவியாதி, கிருமி நோய், உதிரநோய், வரச்சூலை முதலியன குணமாகும்.

47. நாவல்

இனிப்புள்ள நாவல் பழத்தை உண்ண இரைப்பைக்கு பலத்தைக் கொடுக்கும். இருதயத்தில் தாக்கிய சூட்டைத் தணிக்கும். மலத்தையும் நீரையும் கட்டும். மதுமேகம், வாயு, கொதிப்பு, உடற்கடுப்பு ஆகியவைகள் குணமாகும்.

இதன் பட்டையை சூரணம் செய்து ஒரு தோலா எடை சூரணத்துடன் ½ லிட்டர் கருங்குருவை அரிசிமாவு கூட்டி சர்க்கரை,நெய் போதிய அளவு சேர்த்து தண்ணீர் விட்டுப் பிசைந்து பிட்டவியலாகவாவது, அடைபோலவாவது சாப்பிட பெரும்பாடு, இரத்தக் கழிச்சல், சீதபேதி, தொண்டைப்புண் முதலியவைகள் போம்.

பொதுக்குணம்: இதனால் அக்கினி மந்தம், சரீரக்கடுப்பு, கடுவன் இவைகள் உண்டாகும். மதுமேகம், பெரும்பாடு, இருமல், தாகம், ஈளை, கரப்பான் ஆகிய இவைகள் தீரும்.

48. விஷ்ணுக்கரந்தை

நிலாப்பூவுடைய கரந்தையைப் (விஷ்ணுகரந்தை) பொடிசெய்து தண்ணீருடன் சேர்த்துப் பருகிவரின் பெண்களுக்கு கருத்தரிக்கும்.

இதை முறைப்படி சூரணம் செய்து (சமூலத்தையும்) வேளைக்கு அரை ரூபாய் எடை வீதம் காலை, மாலை இருவேளையும் காய்ச்சிய பசுவின்பாலில் கலக்கிக் கொடுக்க சீதபேதி சுரம், மேகம், காசம், இருமல், வாத பித்த நோய்கள் அனைத்தும் தீரும். மேலும் கண்களுக்கு பிரகாசத்தை அளிக்கும்.

கபநோய்களுக்கு சிறிது சிற்றரத்தை துளசி கூட்டி குடிநீரிட்டு, காலை, மாலை உட்கொள்ள கபநோய்களையும் சுரத்துடன் கூடிய கபத்தையும் போக்கும்.

குணம்: விஷ்ணுகரந்தை, கபம், உட்சூடு, இருமல், வாத சம்பந்த நோய் ஆகியவைகளை குணப்படுத்தும்.

உணவு

49. பால்

இனி உணவின் வகையைக் கூறத்தொடங்குகிறோம். வெண்ணிறப் பசுவின் பால் உடற்களைப்பைப் போக்கும். காராம் பசுவினுடைய பால் தாகத்தைத் தணிக்கும் செந்நிறப் பசுவின் பால் கபநோய்களைப் போக்கும். காய்ச்சாத பசுவின்பால் மிக்க பசியை உண்டாக்கும். காய்ச்சிய பசுவின் பால் உடலிலேற்படுகின்ற வெப்பத்தைத் தணிக்கும்.

50. நெய்

நெய் சேர்ந்த உணவு உண்ண மணத்தோடும், குணத்தோடும், உடலில் நேருறக் கலந்து உடலை மேருமலை போன்று வலிமையுடையதாகச் செய்யும்.

51. வெண்ணெய்

வெண்ணெயை நாள்தோறும் உட்கொண்டுவரின், அது விந்துவைப் பெருக்குவதுடன், உடலைக் குளிர்ச்சியுடைய தாகவும், வலிமையுடையதாகவும் ஆக்கும்.

52. மோர்

மோரை நாள்தோறும் பருகிவரின் முக்குற்றங்களை மிகாமலும், குறையாமலும் ஒழுங்குபெறச்செய்து உடலை ஒவ்வொரு நாளும் ஆதரித்து வளர்த்து வரும்.

53. தயிர்

தயிரை நாள்தோறும் உட்கொண்டுவரின் பித்தத்தா லாகிய நோய்களை ஒழித்து உடலுக்கு உறுதியையும், இன்பத்தையும் உண்டாக்கும்.

54. எருமைப்பால்-தயிர்

எருமைப்பால், தயிர் ஆகியவை உடலுக்கு வலிமை தருவதாக இருப்பினும் அவை நோய் பல தோன்றுவதற்கு அடிப்படையாகுமென்று மருத்தவ நூல் வல்லார் கூறுவர்.

55. செம்மறிப்பால்

செம்மறியாட்டின் பால் உடலுக்கு வலிமையைத் தரும்.

பொதுக்குணம்: செம்றியாட்டின் பால் பித்த, கப, தொந்தம், வயிற்று உப்புசம், மேற்சுவாசம் இவைகளை யுண்டாக்கும். ஆதலால் உபயோகப்படுத்தாதிருத்தலே மிகச் சிறந்தது.

56. வெள்ளாட்டின் பால்

வெள்ளாட்டின் பால் முக்குற்றங்களாகிய வளி, அழல், ஐய வேறுபாடுகளால் உண்டாக்கிய நோய்களை எல்லாம் நீக்கும். இந்தப்பாலில் சிறிது தண்ணீர் கலந்து காய்ச்சி கற்கண்டுத் தூளிட்டு காலை, மாலை இருநேரமும் உட்கொள்ளகப சம்பந்தமான நோய்கள் குணமாகும். பாண்டு காமாலை, சோகை முதலிய நோய்களுக்கு மருந்து சாப்பிடும் காலத்தில் காய்ச்சிய வெள்ளாட்டுப் பாலை உணவுடன் சேர்த்து பத்தியமாக உட்கொண்டுவர நோய்கள் விரைவில் குணமாகும்.

பொதுக்குணம்: வெள்ளாட்டுப்பாலினால் வாத, பித்த, தொந்தம், சுவாசநோய், சீதபேதி, இரத்தபேதி, விரணம், வாதத்தாலுண்டாகிய வீக்கம் முதலிய துன்பங்கள் நீங்கும். நல்ல பசியுண்டாகும்.

57. உணவு வகைகள்

உணவு வகைகளைக் கூறுங்கால் புழுங்கலரிசிச் சோறு அழலையை(பித்தம்) உண்டாக்கும். பொங்கற் சோறானது வாயுவை உண்டாக்கும். கஞ்சி, அமுது, புளித்த பழஞ்சோற்று நீர் இம்மூன்றும் நன்மையைத் தருவனவாம், தவிட்டுடன் கூடிய அரிசிச்சோறு மேகநோயைப் போக்கும், ஆனால் சிறிது வாயுவை உண்டாக்கும். தோசை, இட்லி நன்மையைத் தரும். கொழுக்கட்டை, உடலுக்கு நலத்தையும், உறுதியையும் தரும். அரிசிமாவும், நெற்பொறிமாவும் உடலுக்குச் சிறந்த மருந்தாகும். களி உடலுக்கு வலிமையையும், கூழ் உடலுக்கு குளிர்ச்சியையும், பாயாசம் உடலுக்கு உறுதியையும் தரும். வாயுவைத் தரக்கூடிய பிட்டு முக்குற்ற வேறுபாட்டினை உண்டாக்கி நோயை உண்டாக்கும்.

இட்டிலி முக்குற்றத்தை ஒழுங்குறச் செய்யும்.மோர்க் குழம்பும் அவ்வாறே ஒழுங்குறச் செய்யும். பாற்குழம்பு, பாற்சோறு ஆகியவைகளும் முக்குற்றத்தைத் தன்னிலைப் படுத்தும். உடலுக்கு நன்மையைத் தரும்.

உணவுப்பொருட்கள்

58. பிரண்டை

வச்சிரவல்லி என்னும் பிரண்டையை வடகமாக்கி உண்டுவரின் கபத்தாலாகிய பிணிகளைப் போக்குவதற்கு சிறந்த மருந்து ஆகும். பிரண்டை வடகத்தைப் பற்றிக் கூறுவேன். அவ்வடகத்தை நாள்தோறும் உண்டுவரின் மந்தத்துடன் கூடிய வாயு, பெருவயிறு, வயிற்றுவலி, இவைகள் மிக விரைவில் அகன்றொழியும். நெஞ்சுவலி, உளைவு, கடுத்தல் முதலியன நீங்கும். உடல்வன்மையுறும், பச்சையாக பிரண்டையை நறுக்கிப் பிரண்டை முழுகுமாறு ஒரு பாண்டத்திலிட்டு பசுவின் மோர் விட்டு அதிலுள்ள பசை போகுமாறு இரண்டு நாள் சூரியவெப்பத்தில் வைத்துலர்த்திப் பிறகு அதை 350 கிராம் நிறுத்து கடுக்காய், சுக்கு, கொள்ளு, உளுந்து, மஞ்சள், மிளகு, வெள்ளைப்பூண்டு, சீரகம், வாய்விளங்கம், இந்துப்பு ஆகியவை வகைக்கு 35 கிராம் ஒரு பாண்டத்திலிட்டு புளித்தகாடி விட்டு அரைத்து மோரிலிட்டுக் காயவைத்துக் கொள்க. பிரண்டையைக்கொண்டு செய்யப் பெற்ற வடகத்தை நெய்யில் வறுத்து உண்பது கறிமுறைப் பக்குவமாகும். வறுக்காமல் உட்கொள்வது மருந்து முறையாகும். இவ்விரண்டு முறைகளில் எம்முறையில் கொண்டாலும் இவ்வடகம் நன்மையைத் தரும்.

59. கற்றாழை வற்றல்

கற்றாழையை மேற்கூறியவாறு வற்றலாக்கி உட்கொண்டுவரின் வாதமேகம், மூலம், உள்சூடு ஆகிய நோய்களைப் போக்கும்.

இம்மூலிகையானது மேகநோய்களுக்கு மிகச்சிறந்தது. அயக்காந்தம், மண்டூரம் முதலியனவற்றைச் செந்தூரமாக்குவதற்கும், கந்தகத்தை பற்பமாக்குவதற்கும் இதனைவிடச் சிறந்த மூலிகை கிடையாது எனக்கூறலாம். இதனைக் கொண்டு குளிர்ச்சியான தைலம் காய்ச்சுவது உண்டு.

60. முள்ளுக்காய் வற்றல்

முள்ளுக்காயை மேற்கூறியவாறு உட்கொண்டுவரின் கபநோயைப் போக்கும்.

61. பீர்க்கு

பீர்க்கங்காயை மேற்தோல் சீவி கறியாகப் பக்குவப் படுத்தி உணவோடு உண்டுவரின் அனைவர்க்கும் பத்திய உணவாகும். ஆனால் சீதளமும், பித்தமும் தன் மாத்திரைக்கு மேல் மூன்று பங்கு அதிகரிக்கும்.

62. பூசக்கருணை

பூசக்கருணையை கறியாகப் பக்குவப்படுத்தி உணவோடு உண்ணலாமாயினும் மேற்கூறிய பீர்க்கன் கறிக்கு ஈடாகாது.

63. காரவல்லி

"காரவல்லி" எனும் பாகற்காயைக் கறியாகப் பக்குவப் படுத்தி உணவோடு உண்டுவரின் பித்தத்தை(உட்சூடு) உண்டாக்கும். மேலும் வாயுவையும் மிகுவிக்கும் தன்மையது. இதன் காயை வற்றலிட்டு வறுத்தும் உண்பதுண்டு. இதனால், மூலம், காமாலை, குட்டம், மண்ணீரல், கல்லீரல், தோடங்கள் குணமாகும்.

குறிப்பு: இதனால் நீரிழிவு நோயைக் குணப்படுத்தலாம்.

64. வழுதலைப்பிஞ்சு

"வழுதலை" எனும் கத்தரிப்பிஞ்சை கறியாகப் பக்குவப் படுத்தி உணவோடு உண்டுவரின் யாதொரு தீங்குமில்லை. மேலும் அது பத்தியக் கறியுமாகும். இதனால் முக்குற்றமும் விலகும்.

65. இலுப்ப நெய்

இலுப்பநெய்யை முறைப்படி பயன்படுத்திவரின் பித்தத்தையும், வாயுவையும், உண்டுபண்ணுமெனினும் கரப்பான், கடிவிஷம், சிரங்கு, விரணம், வன்மை பொருந்திய இடுப்புவலி இவைகள் போகும். இன்னும் நரம்புகளுக்கு நன்மையைத்தரும்.

66. தேங்காய் நெய்

தேங்காய் நெய், எள் நெய்யைப் போலவே தீமைகளை உண்டாக்குமாதலால் மிகையாகப் பயன்படுத்தாதிருப்பதே நன்று.

பொதுக்குணம்: தேங்காய் நெய்யினால் விரணம், மூலநோய், படர்தாமரை, சிரங்கு ஆகியவைகள் குணமாகும். நன்கு முடிவளரும்.

67. ஆமணக்கு நெய்

ஆமணக்கு நெய் உடலுக்குச் சிறந்ததொரு குணத்தைத் தரும்.

இதனால் கோரவாதம், குன்மம், குடலேற்றம், தேகம், கண், மூக்கு, செவி, வாய் இவைகளிலுண்டாகின்ற எரிச்சலும் நீங்கும். பொன் நிறமும் தாது விருத்தியும் உண்டாகும்.

68. முருங்கை

முருங்கைக்காய், முருங்கையிலை, முருங்கைப்பூ, முருங்கைவேர் இவைகளை உணவு முறையாகப் பயன் படுத்தி உண்டுவரின் உடலுறுதியாகும் (விந்து கட்டும்) எனவே நோய்கள் வராமல் தடுக்கும்.

பொதுக்குணம்: முருங்கைக்காயினால் குடலுக்கு பலம் ஏற்படும். இது வயிற்றிலுள்ள வாயுவை நீக்கும். விந்துவைக் கட்டும். கபத்தை ஒழிக்கும்.

முருங்கை இலையால் அக்கினி மாந்தம், உட்சூடு, சுபாலநோய்கள், பித்தமூர்ச்சை, கண்ணோவு ஆகியவை குணமாகும்.

முருங்கைப் பூவினால் பித்த தோடங்களும், அரோசகமும் நீங்கும். கண்களுக்கு குளிர்ச்சியும் உண்டாகும். இதைப் பசும்பாலில் போட்டுக் காய்ச்சிக் கற்கண்டுத்தூள் சேர்த்து உட்கொள்ள சுக்கில விருத்தியுண்டு. இதை விசேடமாக தாதுவிருத்திக்கான லேகியங்களில் சேர்ப்பதுண்டு.

முருங்கைவேரிலுள்ள பட்டையைத் தண்ணீர்விட்டு வேகவைத்து எடுத்த குடிநீரில் புளி, மிளகாய், உப்பு முதலியவைகளைத் திட்டமாகப் போட்டு பாகப்படி பக்குவப்படுத்தி ரசமாக வைத்து சாப்பாட்டிலேனும், தனியாகவேனும் சாப்பிடப் பாரிசவாயு, குளிர்சுரம், காக்கைவலி, சூதகச்சன்னி இவைகள் போம்.

இந்தப் பட்டையுடன் கடுகு சேர்த்தரைத்துக் கீழ் வாதங்களுக்கு பற்றுப்போடக் குணமாகும். பற்றிட்ட சிறிது நேரத்தில் எரிச்சலுண்டாகும். முடிந்த அளவு எரிச்சலைத் தாங்கிக்கொள்ள வேண்டும். எரிச்சல் அதிகமாக இருந்தால் பற்றிட்ட இடத்தைக் கழுவிவிட்டு சிறிது தேங்காய் எண்ணெயைத் தடவிவிட எரிச்சல் நின்றுவிடும்.

குறிப்பு: முற்றின முருங்கைப் பட்டையும், சிறிது உப்பும் சேர்த்து இடித்து சார் எடுத்து பசும்பாலுடன் சேர்த்து பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய்க் காலங்களில் 3 நாட்களும் அதிகாலையில் கொடுக்க கருத்தரிக்கும். (பால்+சமனெடை 3 நாட்களும் புளிநீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.)

69. முந்திரி - வாதுமை

முந்திரிப்பருப்பையும், வாதுமைப் பருப்பையும் முறையாக உண்டுவரின் தாதுவிருத்தியை உண்டுபண்ணி உடலை உறுதிப்படுத்தும்.

பொதுக்குணங்கள்: மிகுந்த உருசியுள்ள முந்திரிப் பருப்பைத் தின்றால் பித்த வாத தொந்தம், அக்கினி மந்தம் இவைகளை நீக்கி தாதுவிருத்தி ஆகிய இவைகள் உண்டாகும். போக உணர்ச்சியை அதிகப்படுத்தும்.

வாதுமைப்பருப்பின் குணம்: வாதுமைப் பருப்பினால் விழிப்படலமும், விரணக் கொடுமையும் நீங்கும். உள்ளுறுப்புகள் சுத்தப்படுவதுடன், உள்ளழலையும் சாந்தப்படும். சரீரம் கொழுமையடையும். இதனால் மார்பு எரிச்சல், இருமல், உள்வறட்சி, சுவாசம், சூலை, உதிரச்சிக்கல் முதலியவை போம். தலை, மூளை, கண் முதலியவற்றிற்கு நல்ல பலம் உண்டாகும். விந்து இருகி கலவியில் (போகத்தில்) அதிக விருப்பத்தை உண்டாக்கும்.

70. கந்தி - அவரை - பயற்றங்காய்

பாக்கைப் பச்சையாகத் தின்றுவரின் கபக்கட்டை அறுக்கும். அவரைக்காயைக் கறியாகப் பக்குவப்படுத்தி உட்கொண்டுவரின், உடலுக்கு வன்மையைக் கொடுக்கும். அவ்வாறே பயற்றங்காய்க் கறியும் உடலுக்கு நன்மையைக் கொடுக்கும்.

கந்தி: "கந்தி" எனும் பாக்கை பச்சையாக உண்பதால் கபக்கட்டைப் போக்கி, மலத்தையும் வெளியாக்கும். மலப்பையிலுள்ள கிருமிகளையும் நீக்கும். இதைச் சுட்டுக் கரியாக்கி பல்துலக்க பற்கள் உறுதிப்படும். இதை அதிகமாகத் தின்றால் சோகை, பாண்டு முதலிய நோய்கள் உண்டாகும்.

அவரை: இதனால் கிராணி, மூலக்கடுப்பு, ஆசன எரிச்சல், சொறி, சிரங்கு முதலிய நோய்கள் குணப்படும். மதுமேகநோய் குணமாகும்.

பயற்றங்காய்: இது உண்பதற்கு உருசியாக இருக்கும். தீபனத்தையும், பலத்தையும் கொடுப்பதல்லாமல் கப ஆதிக்கம் இரத்தவாத குன்மம் முதலியவற்றைக் குணப்படுத்தும்.

71. பலாக்கனி

"பன்சம்" எனும் பலாக்கனியைத் தின்றால் அது பித்தத்தாலகிய நோய்களை உண்டாக்கும். பலாக்காயைக் கறியாகப் பக்குவப்படுத்தி உட்கொள்ளுவதால் வாயுவை உண்டு பண்ணுமென்று மருத்துவநூல் வல்லார் கூறுவர். (முக்கனிகளில் இதுவும் ஒன்று; எனவே, அளவோடு பயன்படுத்துதல் நன்று) இதன் இலையினால் பெருவயிறும், குன்மமும் நீங்கும்.

பொதுக்குணம்: இதனால் அக்கினி மந்தம், வாதகோபம், ஆயாசம், சுவாசம், சுக்கிலவிருத்தி ஆகிய இவைகள் உண்டாகும்.

72. வாழை

வாழைக்காயின் பிஞ்சையும், பழுத்த பழங்களையும் உணவில் பயன்படுத்துதல் நன்று.

வாழைப்பிஞ்சுகளின் மேற்றோலை நீக்கி பொரியலாக வாவது, வறுவலாகவாவது பாகப்படி சமைத்து உட்கொள்ள மூலநோயினாலுண்டான உதிரப்போக்கு, பேதி, பெரும்பாடு, இரத்தக்கடுப்பு, இரத்தமூலம், அதிமூத்திரம், விரணம் முதலிய நோய்களை குணப்படுத்தும்.

வாழைப்பழம்: நன்றாகப் பழுத்த பழங்களை இரவு உணவிற்குப் பிறகு ஒன்று அல்லது இரண்டு உட்கொள்வது மிகவும் நல்லது. இதனால் மலம் நன்றாக வெளியாகும். மேலும் உடம்பை வெளுக்கச் செய்கின்ற சோகை நோய், பித்தநோய்கள், மூர்ச்சை முதலியவைகள் குணமாகும்.

வாழைப்பழங்கள் நோயாளிகளுக்கு ஆகாதென சித்தர்கள் கூறியுள்ளனர். பொதுவாக வாழைப்பழம் வாததேகிகளுக்கு ஆகாது. ஆனால் பித்த, கபதேகிகளுக்கு இது அதிக நன்மையைத் தரும்.

73. பறங்கி - பூசணி - சுரை

பறங்கிக்காய் வெப்பநோய்களையும், வெண்பூசணிக் காய் குளிர்ச்சியையும் உண்டாக்கும். சுரைக்காய் கபத்தாலாகிய நோய்களையும் உண்டாக்கும். ஆயினும் இம்மூன்றினது கீரையைப் பக்குவப்படுத்தி உட்கொண்டு வரின் உடலுக்கு நன்மையைத் தரும்.

74. கருணை - முள்ளங்கி

கருணைக்கிழங்கினையும் மணம் பொருந்திய முள்ளங்கிக் கிழங்கினையும் கறிமுறையாகப் பக்குவப் படுத்தி உண்டுவரின் உடலுக்கு மிக்க நன்மையென்று கூறுவர்.

பொதுக்குணம்: இதனால் கபநோய், வாதநோய், இரத்தமூலமுளை, அக்கினி மந்தம் போன்ற நோய்கள் குணமாகும். அதிக பசியை உண்டாக்கும்.

முள்ளங்கியின் பொதுக்குணம்: இதனால் வாதநோய், கரப்பான், வயிற்றெரிச்சல், குத்தல், குடல் விருத்தி நோய், இருமல், கபநோய், தலைவலி, நீரேற்றம், பல்நோய், பல் அரணை, பல் சிலந்தி, குன்மம், சுவாசம், மூலக்கடுப்பு, தொண்டைக்கம்மல், கல்லடைப்பு, நீரடைப்பு, மலக்கட்டு, சூதகக்கட்டு ஆகிய இவைகள் குணமாகும்.

குறிப்பு: இதன் சாற்றினால் குழந்தைகளுக்கு ஏற்படும் கட்டி குணமாகும்.

75. வேளை

"முதுபூமி " எனும் வேளைக்கீரை, பூ, வேர், சமூலத்தினையும் கறிமுறையாகப் பக்குவப்படுத்தி புசித்து வரின் அவ்வுணவு வாத நோய்களைப் போக்கிடும். கபநோயையும் நீக்கும்.

இதை (இதன் கீரையை) வற்றல் குழம்பாகவும், துவட்டலாகவும், பாகப்படி சமைத்து உணவுடன் உட்கொண்டுவர வாத சம்பந்தமான நோய்கள், கப சம்பந்தமான நோய்கள் குணமாகும்.

பொதுக்குணம்: நீரை வறட்டும், வயிறு நொந்து பழ மலங்களை வெளியாக்கும். பெண்களுக்குத் தடைப் பட்டுள்ள உதிரத்தை வெளியாக்கும். மார்புவலி, இருமல், சுரம், அக்கினிமந்தம் முதலியவைகளைக் குணப்படுத்தும்.

இதன் பூவைப் பிட்டவித்து அல்லது கசக்கிப் பிழிந்தெடுத்த சாற்றை வடிகட்டி குழந்தைகட்கு 10 முதல் 15துளி வீதம் கஸ்தூரி அல்லது கோரோசனை மாத்திரைகளில் ஏதேனும் ஒன்றை உரைத்து மத்தித்துக் கொடுக்க மாந்தம், மார்புச்சளி, சுரம், கணை போன்ற நோய்கள் குணமாகும்.

76. அறுகீரை - கீரைத்தண்டு

"அறுகீரை"யைக் கறி முறையாகப் பக்குவப்படுத்தி உண்டுவரின் அது பத்தியத்திற்கான சிறந்த கறியாகும். ஆனால் கீரைத்தண்டினைப் பக்குவப்படுத்தி உண்டுவரின் அது வாத சீதள நோய்களை உண்டாக்கும்.

77. பசலை - வசலை

"பசலை"க்கீரையைக் கறி முறையாகப் பக்குவப்படுத்தி உண்டுவரின் உடலிலுண்டாகிய மேகநோய்கள் நீங்கும். "வசலை"க்கீரையை (பருப்புக் கீரை) மோர்க்குழம்பாகச் செய்து உணவுடன் உண்டுவர நன்மையை உண்டுபண்ணும். வெப்பநோய், உட்சூடு முதலியவை நீங்கும்.

பசலையின் குணம்: மூத்திரக்கடுப்பு, மூத்திரக்கிரிச்சரம், மூத்திர ஒழுக்கு, வெள்ளை, வெட்டை, வாந்தி, நீர்க்கட்டு இவைகளைப் போக்கி நல்ல இரத்தத்தை உண்டாக்கி சரீரத்திலுள்ள வெப்பத்தைத் தணிக்கும்.

சரீரத்திற்கு பலத்தைக் கொடுக்கும். மலத்தை இளகலாக வெளித்தள்ளும். இது கபதேகிகளுக்கு ஆகாது.

வசலையின் குணம்: இது வாய்க்கு ருசியாக இருக்கும். சிறுநீரை அதிகப்படுத்தும். மலத்தை இளகலாகப் போக்கும். கண்களுக்கு ஒளியைத் தரும். இது அதிகக் குளிர்ச்சியை உண்டு பண்ணுமாதலால் கப தேகிகளுக்கு ஆகாது. இக்கீரையினால் கரப்பானும், கிருமியும் உண்டாகும். ஆகையால் இதைப் பழக்கமாக உட்கொள்ளக்கூடாது.

78. சிறுகீரை

சிறுகீரையைக் கறி முறையாகப் பக்குவப்படுத்தி உண்டுவரின் உடலிலுள்ள நோய்களை (சிறுநீர் எரிவு, வீக்கம், நச்சுக்கடி முதலியவை நீங்கும்) நீக்கி உடலை வலிமையுற்றதாக ஆக்கும். இக்கீரைக் கறியால் குரல் இனிமை பெறும்.

குணம்: இக்கீரையினால் மேற்கூறப்பெற்ற நோய்கள் குணமானாலும் கூட இது பத்தியத்திற்கு ஆகாது. மருந்துகளின் வீரிய சக்தியைக் குறைத்து முறித்துவிடும்.

79. பிண்ணாக்கு

எள்ளுப்பிண்ணாக்கைப் பிட்டுப்போன்று பக்குவஞ் செய்து உட்கொண்டுவரின் சீதளத்தாலாகிய நோய்கள் இலகுவாக உடலை விட்டு ஓடிவிடும்.

குணம்: இதனால் பல நோய்கள் உண்டாகும். ஆனால் சில நோய்கள் குணமாகும். முக்கியமாக இதனால் வெகு மூத்திரத்தை குணப்படுத்தக்கூடிய சிறப்புக்குணம் உண்டு.

80. வரகு - தினை

வரகரிசியை உணவாக்கி உண்டுவரின் அவ்வுணவினால் உடலின்கண் (கப, பித்த) நோய்கள் மிகும். (சொறி சிரங்கு

தொடரும்) தினைமாவைப் பக்குவப்படுத்தி உண்டுவரின் உடலுக்கு நல்ல வலிமையை உண்டாக்கும். (இது வாத தேகிகளுக்கு சிறந்த ஆகாரமாகும்) வீரிய விருத்தியை உண்டாக்கி வீக்க தோஷங்களை ஒழிக்கும்.

81. மூங்கிலரிசி

மூங்கிலரிசியை பசுவின்பாலில் வேகவைத்து சர்க்கரை கலந்து பாயாசமாகப் பக்குவப்படுத்திப் பருகிவரின் உடலின்கண் ஏற்படும் பல பிணிகளும் (இரத்தப் பித்த நோய், விடாக் காய்ச்சல், கண்நோய், உட்சூடு, விபரீத சுரம்) நீங்கும்.

82. மலை நெல்

மலை நெல்லரிசியை மாவாக்கி நெய் சேர்த்து தின்பண்டங்களாகச் செய்து உண்டுவர இளைத்த உடல் மலையைப்போல் உறுதிபெறுவதுடன் வளர்ச்சியுமடையும்.

மேலும் இவ்வன்னத்தால், விரண குஷ்டத்தையும் சிற்சில விடத்தையும் போக்கி போக சக்தியைத் தரும்.

83. கம்பு - சாமை

கம்பை மாவாக்கி கூழாகக் காய்ச்சிப் பருகிவரின் உடலில் குருதிக்குழல் அழற்சி நீங்கும் (உடல் குளிரும்) வேகவைத்த சாமையின் சோற்றை உண்டுவரின் அது உடல் வலியை நீக்கும்.

கம்பு அரிசியின் குணம்: இதனால் நமைச்சலையும், சிரங்குகளையும், வீரிய விருத்தியையும் அதிகப்படுத்தும். சரீர வெப்பத்தை (சூட்டை) நீக்கும்.

சாமை அரிசியின் குணம்: சரீரம் அழகுபெறும். தேக வலிமையுண்டாகும். பித்த தோஷங்களை நீக்கும்.

84. கேழ்வரகு

கேழ்வரகு மாவைப் பக்குவப்படுத்தி உட்கொண்டு வரின் உடலோடு சேர்ந்து உடலை நன்கு வளர்த்து வருமென்றாலும், பழிக்கத்தக்க பித்தத்தலாகிய (உட்சூடு) கொடிய நோய்களை உண்டுபண்ணும். (எனவே கேழ்வரகு மாவை உணவாகப் பயன்படுத்தும்போது நெய் சேர்த்துக் கொள்வது நல்லது.)

85. துவரை - அவரை - சோளம் - பயறு

துவரம்பருப்பை உணவில் சேர்த்துண்ண உத்தமமாகும். அவரைப்பயறை உணவில் சேர்த்துண்ண மத்திமமாகும். சோளக்கஞ்சியும், புல்லரிசியும், மத்திம உணவாகும். பாசிப்பயற்றை உணவில் சேர்த்துண்ண உடலுக்கேற்ற சம குணமுடைய உணவாகும்.

துவரை: சக்தி இல்லாமல் மெலிந்தவர்களுக்கு இது பெரிதும் உதவும்.

அவரை: இது (பயறினால்) பலவித தோஷங்களை உண்டாக்கும்.

சோளம்: இதனால் தினவு, விரணம், கரப்பான் போன்ற நோய்கள் அதிகரிக்கும். நல்ல மருந்துகளின் வீரியத்தைக் கெடுக்கும்.

பயறு: பச்சைப்பயறு பித்த, கப நோய்களைப் போக்கும். அரோசகத்தைப் போக்கும். ஆனால் வாயுவைத்தரும். சீதளத்தை உண்டாக்கும். இதன் மாவைத் தண்ணீர் விட்டு, களிபோல் கிளறி பால்கட்டு உண்டான பெண்களுக்கு மார்பில் வைத்துக்கட்ட நோய் நீங்கி எளிதில் பால் சுரப்பு உண்டாகும். இதனால் தாது விருத்தியும் உண்டாகும்.

86. காராமணி - கொள்ளு - கோதுமை

காராமணியை பக்குவப்படுத்தி உண்டுவரின் வாயு நோயை உண்டு பண்ணும். ஆனால் சுர நோயால் வருத்தப் பெற்ற உடலுக்கு மிக்க வன்மையைத் தரும். காணப்பயற்றை (கொள்ளு) உணவில் சேர்த்துக்கொள்ள கபநோய்களை யமனைப்போன்று விரட்டிவிடும். கோதுமையும் வலிமையைத் தரத்தக்க உடலுக்கேற்ற உணவாகும்.

87. எள்

எள்ளுடன் கூடிய உணவு உடலுக்கேற்றதாகவும், வலிமை தரத்தக்கதாக இருப்பினும், அது பத்திய உணவிற்கு ஏற்றதாகா. எனவே அது உடலுக்கு நன்மையைத் தருவதாக கொள்ளக்கூடாது.

88. நெல்லிக்காய், கடுக்காய்

நெல்லிக்காயை ஊறுகாயாகப் பக்குவப்படுத்தி உணவுடன் முறையாக உண்டுவரின் பித்தத்தாலாசிய நோய்கள் அனைத்தும் உடலைவிட்டு நீங்கும். அவ்வாறே கடுக்காயையும் முறையாக உண்டுவரின் வாத நோய்க ளனைத்தும் நீங்கும். கடுக்காயைப் பொடித்துக் குடிநீராக்கிப் பருகி வந்தாலும் வாயு நீங்கும்.

89. இஞ்சி

இஞ்சியுடன் அளவோடு கறியுப்பினைச் சேர்த்து உண்ண முக்குற்ற நோய் சீர் அடைந்து உடலை நன்னிலைப் படுத்தும். இஞ்சியை ஊறுகாயாகவும், துவையலாகவும், பச்சடியாகவும் இன்னும் பல்வேறு வகையாகவும் பக்குவப்படுத்தி உட்கொண்டு வர உடல் பல வகையிலும் நன்மை அடையும்.

90. ஓமம்

ஓமம் ஒரு பங்கிற்கு கால் பங்கு கறியுப்பினைச் சேர்த்து நன்றாக முறைப்படி உட்கொண்டுவரின் வயிற்றுநோய் நீங்கும். ஓமத்தைக் குடிநீராகச் செய்து பருகி வந்தாலும் குன்மநோய் தீரும்.

91. கொத்தமல்லி

கொத்தமல்லி இலையைத் துவையலாகச் செய்து நாள்தோறும் ஓரளவாக உட்கொண்டுவரின் உடலைப் ற்றிய முக்குற்ற நோய் தன்னிலை அடையும். கொத்தமல்லி வித்தினைக் குடிநீராகச்செய்து பருகி வந்தாலும் நோய் மிகாமல் தடுக்கும்.

92. இலவங்கம்

இலவங்கத்தினை தேனிலிழைத்து உட்கொண்டுவரின் உடலிலுண்டாகிற முக்குற்ற நோய் நீங்கி உடல் தன்னிலை அடையும்.

93. பேரரத்தை

பேரரத்தையைத் தூள்செய்து சிட்டிகை அளவு நிறையத் தேன் விட்டுக் குழைத்து உட்கொண்டுவரின் அஞ்சத்தக்க முக்குற்றநோய் நீங்கி உடல் தன்னிலை அடையும்.

94. அதிமதுரம்

"சுகாங்கு" எனும் அதிமதுரத்தைப் பொடித்துத் தனித்து சிட்டிகை அளவு தின்றுவரின் நன்மையாம்; தேனோடு கலந்து பருகிவரின் உடலுக்கு ஊக்கத்தையும், வலிமையையும் உண்டாக்கும்.

95. பறங்கிச் சக்கை

பறங்கிச்சக்கையைப் பொடித்து, தனித்து திரிகடி அளவு உட்கொண்டுவரின் மேகத்தாலாகிய நோய்களனைத்தும் நீங்கும். அதனோடு தேன் கலந்து உட்கொள்வது அரசுக்கு அமைச்சன் துணை என்ற மருத்துவ நூல் வல்லார் கூறுவர். சூரணமாகவோ, லேகியப் பக்குவமாகவோ, குடிநீராகவோ, நெய் முறையாகவோ செய்து உட்கொண்டு வந்தால் உடலுக்கு நல்ல பயனைத்தரும். இதனை மருத்துவர் மேககாரி (மேகநோயின் பகை) என்று கூறி புகழ்வர்.

96. ஏலம்

"துடி" எனும் ஏல அரிசியை நன்கு பொடிசெய்து சிட்டிகை அளவு தேனுடன் கலந்து உட்கொண்டுவரின் பித்தத்தாலாகிய நோய்களனைத்தும் தீரும். துர் நீரால் துன்புறச் செய்கின்ற, சிரங்கு, சொறி ஆகியநோய்களும் நீங்கும். இது உண்மையாம்.

97. ஆடாதொடை

ஆடாதொடை இலையை இட்டுக் காய்ச்சிய நீரால் வாய் கொப்பளிப்பதை வழக்கமாகக் கையாண்டால் நாவிலுண்டாகும் சுவை இன்மை நீங்கும்.

98. கறிசாலை

கையாந்தகரையை வாயுவிட்டு குதப்பிச் சாற்றைப் பருகிவரின் உடல் மிக்க வலிமை அடையும். மஞ்சப்பூவை உடைய பொற்றலைக் கையாந்தகரையை கற்ப முறையில் உண்டுவர ஈரல் பலப்படும். சுவாசகாசம் நாளடைவில் நீங்கும்.

99. ஓரிதழ்த்தாமரை

ஓரிதழ்த் தாமரை இலையை மேற்கூறியவாறு உட்கொண்டுவரின் உடல் வலிமையுறும். மேலும் மேகநோய் சார்பான நோய்களும் அகலும். உட்சூடு தணிந்து விந்து பலப்படும்.

100. வெற்பேத்தி

மலைதாங்கி எனும் வெற்பேத்தியைப் பொடியாகச் செய்து முறைப்படி சிட்டிகை அளவு உண்டுவர உடல்மேனி ஓர் அழகைப்பெற்று பொன்னிறமாக விளங்கும்.

101. நீர்வகை

தண்ணீரின் குணங்களைச் சொல்கிறோம். தண்ணீரைப் பருகினால் உடலுக்கு தனிப்பட்டதொரு உறுதியைத்தரும். வெந்நீரைப் பருகினால் உடலுக்குக் குளிர்ச்சியை அளித்திடும். மேலும் உடல் நலமாக இருக்கும். ஆற்றுநீர் உடலுக்கு குளிர்ச்சி தரும். அருவி நீர் வெப்பத்தைத்தரும். ஊற்றுநீர் மத்திமமாகும். இலை, தழை, சருகு முதலானவைகள் ஊறியநீர் தீமை தரும். ஏரி நீர் வெப்பத்தை அடக்கும். கிணற்றுநீர் சூட்டைத்தரும். சேற்று நிலத்திலுள்ள நீர் வாத நோயை உண்டுபண்ணும். குளத்துநீர் சன்னிநோயை உண்டாக்கும்.

102. நோயைத் தடுக்கும் வழி

நல்வாழ்விற்குரிய வழிகளை முறையாகச் சொல் இன்றேன். நீரைக்காய்ச்சியும், நெய்யை உருக்கியும், மோரை நல்ல தண்ணீருடன் அளாவியும், பருகுக. கிழங்கு வகைகளை உண்ணக்கூடாது. உறக்கத்தையும் பகற்போதில் பெண்ணோடு சேர்வதையும் தவிர்க்கவும். தழை, சருகு முதலியவை ஊறிக்கிடக்கின்ற தண்ணீரைப் பருகாது தவிர்க்கவும். கடும் வெய்யிலிலும், காலை வெய்யிலிலும்

தலையைக்காட்டக்கூடாது. ஆற்றிலும், மழையிலும், இரவிலும், நிலவிலும், நள்ளிரவிலும், உறக்கம் விழித்தவுடனும், எண்ணெய் தேய்த்து முழுகுவதைத் தவிர்க்கவும். வெந்நீரில் எள்நெய் தேய்த்து அரப்பை தேய்த்து முழுகிவருக. மூழ்கிய பின்னர் பத்திய உணவை உட்கொள்ளுதல் நல்வாழ்விற்கு வழிகோலுவதாகும். மேலும் மருத்துவ முறைப்படி என்னென்ன செய்யத்தக்கன என்பதை அறிந்து செய்க. பழைய கறிவகைகள் அமுதம் போன்று உள்ளன என்றாலும் உட்கொள்ள நினையாதீர். அவை நஞ்சாகும். இம்முறைகளைக் கையாண்டு வந்தால் கொடுங்கூற்றுவன் இவர்களிடம் நெருங்க அஞ்சுவான்.

103. நோய் பிறக்கும் வகை

நோய் உண்டாகும் வகைகளைச் சொல்கிறேன். நோய்களுக்கெல்லாம் அடிப்படையாகிய வளி, அழல், ஐயம் ஆகிய மூன்றின் வேறுபாடேயாகும். இம்மூன்றையும் முறையே அரசன், அமைச்சன், சேனைத்தலைவன் என்று கூறலாம். இவை மூன்றும் உடலாகிய கோட்டையின் கண் இருந்து "ஆதிபுரம்" என்ற அரசு முறையைச் செலுத்துகின்றன. ஆதலால் உடலை அறிவுடையோர் பழங்கோட்டை என்று கூறுவர். மேலும் அந்த அரசிற்கு பரிவாரங்களாக இருப்பவை நோய்க் கூட்டங்களே. அவைகள் பேய்களைப் போல் உருவமெடுத்து அக்கோட்டையாகிய உடலை அழிக்க முற்படும். அவை யாவையெனில் பெரும் பசி, தாகம், வெய்யிலிலும், மழையிலும், வழிநடைக்கொள்ளுதல், தண்ணீரில் மிகவும் நனைதல், மிக்க சோம்பல், மிக்க சினங்கொண்டு பேசுதல், இயற்கையாகத் தூக்கம் வந்த நேரத்தில் தூங்காது விழித்திருத்தல், முறையின்றிப் பெண்களைக் கூடுதல், அதிக வீரத்தனங்காட்டுதல், மிக்க கனமுள்ளவற்றை சுமத்தல், மலசலங்களை அடக்குதல் ஆகிய இவற்றால் நோய்கள் உண்டாகும்.

104. நோயைத் தடுக்கும் வழி

வளி, அழல், ஐயம் இம்மூன்றினால் ஏற்படக்கூடிய நோய்களின் தொகுப்பு

1. வாதநோய்	84
2. பித்தநோய்	48
3. கபநோய்	96
4. தனுர்வாயு நோய்	300
5. காசநோய்	7
6. பெருவயிறுநோய்	8
7. சூலைநோய்	200
8. பாண்டு நோய்	10
9. கண் நோய்	90
10. சிலந்தி நோய்	60
11. குன்ம நோய்	8
12. சன்னிநோய்	76
13. ஏப்பநோய்	95
14. சுரநோய்	85
15. மகோதர நோய்	7
16. தலைவீக்க நோய்	5
17. உடம்புவீக்க நோய்	16
18. பிளவை நோய்	10
19. படுவன் நோய்	11
20. தொப்புள் நோய்	7
21. பீலி நோய்	8
22. வசிய நோய்	5
23. கரப்பான் நோய்	90
24. கெண்டை நோய்	10
25. குட்ட நோய்	20
26. கதிர்வீச்சுநோய்	3
27. பல்லீறு நோய்	5
28. சோகை நோய்	16
29. இசிவு நோய்	6
30. மூர்ச்சை நோய்	7

31. குலை நோய்	46
32. மூல நோய்	9
33. கழல் நோய்	10
34. பீனிச நோய்	10
35. கடி விட நோய்	76
36. நாக்கு, பல்நோய்	76
37. கிராணி நோய்	25
38. மாலைக்கண் நோய்	20
39. அதிசார நோய்	25
40. கட்டி நோய்	12
41. கிருமி நோய்	6
42. மூட்டு நோய்	30
43. மூட்டுத் தொடர் நோய்	20
44. வாந்தி நோய்	5
45. கல்லடைப்பு நோய்	80
46. வாயு நோய்	90
47. திமிர்நோய்	10
48. விப்புருதி நோய்	18
49. மேத நோய்	21
50. நீர் நோய்	5
51. விட நோய்	16
52. காது நோய்	10
53. விக்கல் நோய்	10
54. அரோசிக நோய்	5
55. மூக்கு நோய்	10
56. கடிதோட நோய்	500
57. காயம், குத்து, வெட்டுநோய்	700
58. கிரந்தி நோய்	48
59. பொறிவிட நோய்	800
60. நீர்க்கோர்வை	200
61. துடிநோய்	100
62. குழந்தை நோய்	100
	4,482

மேற்கூறப்பட்ட நோய்களின் விபரம் நாடி நூல், ஆத்ம சாரசங்கிரகம், பரராச சாகரம், யூகி சிந்தாமணி, வைத்திய பெருநூல் காவியம் ஆகிய நூல்களிலிருந்து தொகுக்கப் பெற்றது.

மேற்கூறிய கணக்கின்படி 34 நோய்கள் அதிகம் தெரிவதில் வாதநோய்-4, பித்தநோய்-6, சுரநோய்-21, வாயு நோய்-3 ஆக 34 குறைந்தால், 4,448 நோய்களாகக் கணக்கிடலாம். பற்பல நூலாசிரியர்கள் மற்றும் பல கணக்காகவும் வகுத்துள்ளனர்.

எப்படி இருப்பினும் தற்கால நிலைமைக்கேற்றவாறு எழுதியுள்ள சிறந்த மருத்துவ நூல்களில் காணப்படும் நோய்களின் தொகுப்பை அறிந்து, அவற்றின் குறிகுணங்களை எண்வகைத் தேர்வுகளால் அறிந்து சிறந்த வழிமுறைகளைக் கையாள்வது சிறந்த சாதனமாகும். இன்னநோய் என்பதை எளிதில் அறிந்து நோயிற்கு ஏற்ற மருத்துவம் செய்வது வசதியாயிருக்கும்.

105. மனித தேகத்தை மூன்றுவிதபாகுபாடுகளாக விவரிக்கக் கூடும்

அவையாவன: 1. தூல தேகம், 2. சூட்சம தேகம், 3. காரண தேகம் என்று மூன்று வகைப்படும்.

1. தூல தேகம்: சப்த தாதுக்களை ஆதாரமாகக் கொண்ட பிண்ட தத்துவ நிலையில் விளங்குவது.

2. சூட்சம தேகம்: தசநாடிகளையும்-தச வாயுக்களையும் ஆதாரமாகக் கொண்டு சராசர தத்துவ நிலையில் விளங்குவது.

3. காரண தேகம்: பஞ்ச பூதங்களை ஆதாரமாகக் கொண்ட அண்ட தத்துவ நிலையில் விளங்குவது.

தூல தேகத்தில் தோன்றும் உடற்பிணிகள்: சுகாதாரப் பிசகால் உண்டாகும் சுரம், நீர்க்கோர்வை, சிரங்கு, வெட்டு, குத்து காயம், முன்னிலை தத்துவ சீதோஷ்ண பேதங்களால் உண்டாகும் சில குணக்கேடுகள் பசி முதலியன உடற்பிணிகள்.

சூட்சம தேகத்தில் தோன்றும் உடற்பிணிகள்: சன்னி, சயம், குட்டம், நீரிழிவு, வாதம் முதலியன உற்பிணிகள்.

காரண சரீரத்தில் தோன்றும் பிறவிப்பிணிகள்: நரை, திரை, மூப்பு, பயம், சாக்காடு எனும் பிறவி நோய்கள்.

மேற்கூறப்பட்ட மூவித சரீரத்திலும் தோன்றக்கூடிய முப்பிணிகளுக்கும் தமிழ் சித்த மருத்துவ தத்துவ முறைப்படி சிகிச்சையும் மூன்றுவிதமாக முறைப்படி பிரிக்கப் பட்டுள்ளது.

மருந்து

அகமருந்து, புறமருந்து, வைத்தியசாலை விதி, எடை, அளவு, விறகின் குணம், எரிப்புத்திட்டம், புடம்.

மருந்து: மருந்து எனப்படுவது இரு வகைப்படும். அவை அகமருந்து, புற மருந்து என்பன. இவ்விரு வகை மருந்துகளும் தத்தம் வகையில் முப்பத்திரண்டு வடிவுடையன.

அகமருந்து 32-ம், அவற்றின் ஆயுள் அளவும்

சுரசம், குடிநீர், சாறு, கற்கம், உக்களி, அடை: இவை மூன்றுமணி நேர ஆயுளை (வன்மையை) உடையது. ஆகையால் இவைகளில் எது செய்வதாயிருந்தாலும் அவ்வப்போது புதிதாகத் தயார் செய்து மூன்று மணி நேரத்திற்குள் கையாண்டுவிட வேண்டும். இல்லையேல் விஷத்தன்மை அடைந்துவிடும்.

சூரணம், பிட்டு, வடகம், வெண்ணெய்: இவை அனைத்திற்கும் மூன்றுமாதங்கள் வரை வன்மையுடையது ஆகையால் மூன்று மாதங்களுக்கு மேல் வேறு மருந்துகளை தயார் செய்து கொள்ளவேண்டும்.

மணப்பாகு, நெய், இரசாயனம், இளகு: இவை யனைத்தும் ஆறுமாதங்கள் வன்மையை உடையது.

எண்ணெய், மாத்திரை, கடுகு, பக்குவம், தேனூறல், தீநீர்: இவை ஓர் ஆண்டு வன்மையுடையனவாம்.

மெழுகு, குழம்பு: இவை ஐந்தாண்டு வன்மையுள்ளன.

பதங்கம்: இதற்கு ஆயுள் அளவு, பத்தாண்டுகள்.

சிந்தூரம்: இஃது எழுபத்தைந்து ஆண்டுகள் வன்மையுடையது.

பற்பம், கட்டு, உருக்கு, களங்கு: இவை நூறு ஆண்டுகள் வன்மையுள்ளனவாய் இருக்கும்.

சுண்ணம், கற்பம், சத்து, குருகுளிகை: இவை அனேக ஆண்டுகள் வன்மையுள்ளனவாய் இருக்கும். ஆகையால் இம்மருந்துகளை அந்தந்தக் கால அளவிற்கு மேல் பயன்படுத்தல் கூடாது.

உள்மருந்து அல்லது அகமருந்து 32-ன் செய்முறை

1. சுரசம்

இது இலை, வேர், பட்டை, பூ, காய், கிழங்கு போன்ற சரக்குகள் ஆகிய இவற்றுள் ஒன்றைப் பழுதுபடாததாய் எடுத்து அதை இடித்தோ, கல்லிலிட்டு அரைத்தோ, துணியிலிட்டு பிழிந்தோ எடுத்த சாற்றையாவது, சுக்கு முதலிய உலர்ந்த பொருட்களை இடித்துப் பொடியாக்கி தண்ணீர் விட்டரைத்து பிழிந்த நீரையாவது ஒரு மண்சட்டியில் வார்த்து கொதிக்கவைத்து முறித்து எடுத்துக்கொள்வதாகும்.

2. சாறு

இது, இலை, வேர், பட்டை, பூ, காய் முதலிய ஐந்து உறுப்புகளுள் ஏதாவது ஒன்றையாவது அல்லது ஐந்தையு மாவது இடித்துப் பிழிந்தோ, அரைத்துப் பிழிந்தோ இடித்துப் பிட்டவித்துப் பிழிந்தோ வந்த சாற்றை எடுத்துக் கொள்வதாகும்.

3. குடிநீர்

இது மருந்து நீர், உண்ணீர், வாய் குடித்திடும் புனல் என்னும் பேர்களாலும் வழங்கப்படும். இதைக் கஷாயம் எனவும் கூறுவர்.

இது உலர்ந்த பொருட்களையாவது, ஈரமாயுள்ள இலைகளையாவது இடித்து அதற்குச் சொல்லப்பட்டுள்ள அளவின்படி தண்ணீர்விட்டு நான்கில் ஒன்று, ஆறுக்கொன்று எட்டுக்கொன்று அல்லது பதினாறுக்கொன்றாகவாவது காய்ச்சி வடிகட்டி எடுத்துக்கொள்வதாகும்.

4. கற்கம்

இது ஈரமாயுள்ள சரக்குகளையாவது, உலர்ந்த சரக்குகளையாவது, தூய்மை செய்த இரும்புத்தூள், இரும்புச் சிட்டத்தூள் என்னும் இவற்றில் ஏதாவதொன்றைச் சில இலைகளோடாவது கல்லோடு கல்லாய் ஒட்ட அரைத்துக் கெட்டியாய் எடுத்துக்கொள்வதாகும்.

5. உட்களி

உள்ளே களிப்பும், மேலே சிறு வறட்சியுமடைவதால் இதற்கு இப்பெயர் வழங்கலாயிற்று.

இது பச்சரிசியையாவது, புழுங்கலரிசியையாவது வறுத்து மாவரைத்தும், உளுந்து மாவரைத்தும், விதைகளைப் பொடியாக இடித்தும், அப்பொடிக்குத் தக்க நீர்விட்டுப் பிசைந்தும் அதற்குத் தக்க சர்க்கரையையாவது வெல்லத்தை யாவதுச் சேர்த்துக் கரைத்து, ஒரு மண்சட்டியில் ஊற்றி, அடுப்பேற்றிக் களிப்புப்பதம் வருகிறவரையும் வேகவிட்டுக் கிளறி கொஞ்சம் நெய்விட்டு கைகளில் ஒட்டாத பக்குவமாகச் செய்து எடுத்துக்கொள்வதாகும்.

6. அடை

அரிசிமாவுடன் சில பச்சிலைகளைக் கூட்டியரைத்து இரும்புச்சட்டியை அடுப்பில் வைத்து அதிற் கொஞ்சம் நெய் தடவி, அதில் மேற்படி அரைத்தமாவை அடையாய்த் தட்டி வெந்தபின் எடுத்துக்கொள்வதாகும்.

7. சூரணம்

இது உலர்ந்த சரக்கானால் மீண்டும் காயவைக்காமலும் ஈரச்சரக்கானால் உலர்த்தியும், தூயனவும், புதியனவுமாக எடுத்து இளவறுப்பாக வறுத்து (வறுக்கவேண்டியவைகளை மட்டும் வறுத்து) மற்றவைகளை வறுக்காமலும் தனித் தனியாக இடித்து துணியில் வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

மேற்கூறியபடி செய்யப்படும் ஒவ்வொரு சூரணத்தையும் தூய்மை செய்யவேண்டும்.

8. பிட்டு

முதலில் சுத்தம் செய்யப்பட வேண்டிய மருந்துகளை சுத்தம் செய்து தனித்தனியாக இடித்து வடிகட்டி எடுத்து சூரணத்தை ஒரு சட்டியில பசுவின்பால் விட்டு அதன்மேல் வேடுகட்டி பிட்டு சுடுவதற்கு மாவை வைப்பதுபோல் வைத்து மேலே ஒரு சட்டியால் மூடி, ஓர் ஆவி வெளிக்கிளம்பும் வரைக்கும் எரித்து, அப்பிட்டை எடுத்து ஒரு தட்டிலிட்டு சர்க்கரை சேர்த்து பிசைந்து எடுத்துக்கொள்வதாகும்.

9. வடகம்

இது சரக்குகளைத் தனித்தனியாக இடித்து துணியில் வடிகட்டி ஒவ்வொன்றும் சேர்க்கவேண்டிய எடை எடுத்துக் கலந்து அத்துடன் சர்க்கரை சேர்த்து வைத்துக்கொண்டு மண் சட்டியில் பசுவின்பாலும் தண்ணீரும் சரியளவு கலந்து ஊற்றி, சட்டி வாய்க்குத் துணிகட்டி அந்தத் துணியின்மேல்

இப்பொடியைப் போட்டு வேறு சட்டி கொண்டு மூடி பால் வற்றும்வரை எரித்து, எடுத்துப் பிறகு உரலிலிட்டு இடித்து வேண்டுமளவில் உருட்டி உலர்த்திக்கொள்ளவேண்டும்.

10. வெண்ணெய்

இதற்கு வேண்டிய சரக்குகளை நிறுத்து எடுத்து நன்கு பொடிசெய்து சட்டியிலிட்டு சரக்கு எடைக்கு இரண்டு பங்கு பசுவின் நெய் சேர்த்து காய்ச்சி பிறகு அதை தண்ணீரில் ஊற்றி மத்திட்டு கடைந்து வைத்துக்கொள்வதாகும்.

11. நெய்

பசுவின் நெய்யுடன் இலைச்சாறுகள் அல்லது கிழங்குச் சாறுகளும், கற்பங்களும் சேர்த்தவாறு ஒரு சட்டியில் ஊற்றி அடுப்பேற்றி எரித்து நெய் பக்குவத்தில் காய்ச்சி, இறக்கி, வடிகட்டி வைத்துக்கொள்வதாகும்.

12. மணப்பாகு

இது சில சரக்குகளையாவது, வேர், பூ, பழம் கொடிகளையாவது தனித்தனி குடிநீர் செய்து, அதற்குத் தகுந்த கற்கண்டு, சர்க்கரை ஏதாவது ஒன்றை எடைப்படி சேர்த்து எரித்து மணப்பாகு பதத்தில் எடுத்து வைத்துக்கொள்ளவும்.

13. இரசாயனம்

சரக்குகளை சூரணம்செய்து சர்க்கரையும், நெய்யும் எடைப்படி சேர்த்து இளகலாக பிசைந்து எடுத்துக் கொள்ளவும்.

இதை குழம்புப் பாகத்தில் செய்து கொள்வதும் உண்டு.

14. லேகியம்

சில குடிநீர் வகைகள், சாறு வகைகள் ஆகியவைகளை அளவுப்படி தனித்தனியாக கலந்து வைத்துக்கொண்டு சேர்க்கவேண்டிய அளவு சர்க்கரை சேர்த்து, அடுப்பேற்றி சிறுதீயாக எரித்து சாறுவற்றி மணம் வரும்போது சூரணம் செய்து வைத்துள்ள பொடியை சிறுகச்சிறுகத்தூவி விட வேண்டிய தோனை முன்னதாக விட்டு பிறகு நெய்விட்டு கிளறி லேகிய பக்குவத்தில் எடுத்துவைத்துக்கொள்ளவும்.

15. எண்ணெய்

எள்+நெய் என்பது எண்ணெய் என்றானதால் எள்ளிலிருந்து எடுக்கப்படும் நெய்யே எண்ணெயாம்.

16. மாத்திரை

இது சில சரக்குகளை இடித்துத் தூள்செய்து வடிகட்டி எடுத்து சில இலைச்சாறுகளினாலாவது, குடிநீர்களினாலாவது அரைத்து பல அளவுகளாய் உருட்டி உலர்த்தி எடுத்து வைத்துக்கொள்வதாகும். இதற்கே மாத்திரை எனப்படும்.

17. கடுகு

சில மருந்துச் சரக்குகளை நெய் முதலிய தைலப் பொருள்களுடன் சேர்த்துக் காய்ச்சி, அச்சரக்குகள் திரண்டு வரும் போது எடுத்து அக்கடுகை உள்ளுக்கு உட்கொண்டு அத்தைலத்தை மேலுக்கும் பூசுவதாகும்.

18. பக்குவம்

இது பக்குவம் செய்யவேண்டிய கடுக்காய் போன்றதை பச்சரிசி கழுவிய கழுநீரிலாவது ஊறப்போட்டு அது மென்மையான பின் மோர், பழச்சாறு, இஞ்சிச்சாறு இவைகளுடன் சில கடைச்சரக்குகளின் பொடியையும் கூட்டி பக்குவப்படுத்துவதேயாகும்.

19. தேனூறல்

இது இஞ்சி, நெல்லிக்காய், கடுக்காய் முதலியவற்றை நீரில் ஊறவைத்து, மேற்புறத்தில் ஊசியிலாவது, முள்ளினாலாவது பல துவாரங்கள் செய்து சர்க்கரைப்பாகில் அல்லது தேனில் ஊறவைத்து எடுத்துக்கொள்வது.

20. தீ நீர்

இது இரண்டு வகைப்படும்:- 1. சரக்குகளைச் சேர்த்து வாலையிலிட்டுத் தண்ணீர் சேர்த்து அடுப்பேற்றி எரித்து இறக்குவது. இது தீ நீர் எனப்படும்.

2. உப்பு வகைகளை வாலையிலிட்டு எரித்து இறக்குவது மற்றொன்று. இது "புகைநீர்" எனவும் திராவகம் எனவும் சொல்வதுண்டு.

21. மெழுகு

இது இரண்டு வகைப்படும்:- 1. அரைப்பு மெழுகு, 2.கருக்கு மெழுகு.

1. அரைப்பு மெழுகு: சில இரசக்கலப்புள்ள சரக்குகளைத் தனித்தாவது, அவற்றுடன் சில கடைச் சரக்குகளைச் சேர்த்தாவது உப்புகளைத் தனித்தாவது, அவற்றுடன்சாறுகள் அல்லது தேன்விட்டு மெழுகு பதத்தில் அரைத்துக்கொள்வது.

2. கருக்கு மெழுகு: சில சரக்குகளையாவது, பாஷாணங்களையாவது மூலிகைச்சாறு, தைலங்களினாலாவது சுருக்குக்கொடுத்து குழியம்மியில் இட்டு பக்குவமாய் அரைத்து எடுத்து வைத்துக்கொள்வதாகும்.

22. குழம்பு

இது சில சாறுகளைக் கலந்தாவது தனிச் சாறாகவாவது சர்க்கரை கூட்டி சில சரக்குகளைப் பொடிசெய்து துணியில்

வடிகட்டி, அதிலிட்டு குழம்பு பருவத்தில் காய்ச்சி எடுத்துக்கொள்வதாகும்.

23. பதங்கம்

இஃது இரசத்தை மாத்திரம் தனியாகவாவது அதனுடன் இரசக்கலப்புள்ள மருந்துகளைக் கலந்தாவது ஒரு மண் சட்டியில் உப்பும், செங்கல் தூளும் இட்டு, அதன் மேற்கூறிய பொருளைப் போட்டு மேலே உப்புமூடி சட்டியைக் கவிழ்த்து சீலைமண் செய்து அடுப்பேற்றி அதற்கு சொல்லப்பட்டுள்ள தீயின் அளவாயும் எரித்து அசையாமல் கீழிறக்கி பிரித்து மேல் சட்டியில் ஏறியிருக்கும் மருந்துகளை பக்குவமாய் எடுத்து வைத்துக்கொள்வதாகும்.

24. செந்தூரம்

உலோகங்களையாவது, பாஷாணங்களையாவது, சில இலைச்சாறுகளையாவது, உப்புப்புகை நீரினாலாவது அரைத்து வில்லைதட்டி வெய்யிலில் உலர்த்தி புடம் போட்டாவது, எரித்தாவது, வறுத்தாவது அரைத்து வெய்யிலில் வைத்தாவது சிவக்கும்படி செய்து எடுத்துக் கொள்வது.

25. நீறு, வெண்ணீறு அல்லது பற்பம்

உலோகங்களையாவது, பாஷாணங்களையாவது, உபரசங்களையாவது, சில இலைச்சாறுகளினாலாவது, உப்புகை நீரினாலாவது, செயநீரினாலாவது அரைத்து புடம்போட்டாவது, எரித்தாவது, ஊதியாவது வெளுக்கும்படி செய்து எடுத்துக்கொள்வதற்கே பற்பம் எனக்கூறுவர்.

26. கட்டு

பாடாணங்களை தனித்தனியாகவாவது இரண்டு, மூன்றைக் கலந்தாவது சில சரக்குகளுடன் சேர்த்தாவது

வெடியுப்பு, செயநீர், அறுவகை செயநீர், பூநீர் போன்ற நீராலும், இலை, பூச்சாறுகளினாலும், குடிநீர்களினாலும், தேன், தாய்ப்பால் இவைகளினாலும் பாடாணங்களுக்கு கருக்குக்கொடுத்து கட்டிக்கொள்வதற்கே கட்டுகள் என்று கூறுவர்.

27. உருக்கு

இது தவிர சில பாடாணங்களை பற்ப செந்தூரங்கள் செய்து சாறுகள் விட்டு அரைத்து உருட்டி உலர்த்தி வைத்திருப்பர். இவைகளை கட்டு மாத்திரைக்கல் எனவும் வழங்குவதுண்டு.

பாடாணங்களையும், உலோகங்களையும் கட்டி மருந்து சரக்குகளை சேர்த்து மூசையிலிட்டு மேலே மூடி சீலை செய்து உலையில் வைத்து ஊதி இளகச்செய்து ஆறவிட்டு எடுப்பதே உருக்கு எனப்படும்.

28. களங்கு

இரசம் போன்ற உயிர்ச்சரக்குகளுக்கு இலைச்சாறு, புகைநீர், செயநீர் போன்றவைகளை சுருக்கு கொடுத்து புடம்போட்டு கட்டி மணியாக்கி எடுத்து உருக்கி தங்கமும், நாகமும் கூட்டி ஆறவைத்து எடுத்துக்கொள்வதே களங்காகும்.

29. சுண்ணம்

பாடாணங்களையும், உலோகங்களையும் தனியாக வாவது, கலந்தாவது குழியம்மியிலிட்டு இலைச்சாறுகள், பூ நீர், செயநீர் போன்ற நீர்களை விட்டு அரைத்து வில்லை தட்டி வெய்யிலில் உலர்த்தி அகல் அல்லது மூசையிலிட்டு உலையில் வைத்து மூசை அழியும் அளவிற்கு ஊதி எடுத்து ஆறவைத்து பூத்தபின் எடுத்துக்கொள்ளவேண்டும்.

30. கற்பம்

கற்பம் எனப்படுவது இலை, வேர், கடைமருந்து, உலோக உபரசச் சத்துக்களையாவது அவற்றிற்கு கூறப் பட்டுள்ள பத்தியமுறைப்படி உட்கொண்டு வருவதுண்டு.

சித்தர்கள் கற்பநூலின்படி நீடுழி காலம் சரீரத்தை நிறுத்தவேண்டி சாப்பிடும் மூலிகைகளுக்கு கற்ப மூலிகைகள் என அழைத்தனர்.

அதாவது நரை மூப்பு, பிணி முதலியவைகளினால் அழியாதபடி உடம்பை பலப்படுத்தி நீண்டகாலம் வரை உயிரோடு இருக்கச் செய்யும் மருந்து.

"பாரப்பா வெகுகோடி காலமட்டும்
பண்பாக சடத்தோடே இருப்பதற்கு
நேரப்பா கற்பமது கொள்ள வேணும்
நேர்மையுடன் பத்தியமாய் இருக்கவேணும்
காரப்பா உப்புவகை கட்டவேணும்
கருத்துடனே குருமுடித்துக் கொள்ள வேணும்
சீரப்பா இவையாவும் முடித்தோன் சித்தன்
செகத்திலே நெடுநாள் தான் இருப்பான் பாரே"

(கருவூரார்-வாதகவி)

"கற்பத்தை யுண்டால் காயமழியாது
கற்பத்தினாலே காணலாம் கைலையை
கற்பத்தினாலே காணலாம் சோதியை
கற்பத்தினாலே காலையும் கட்டிடே"

சித்தர் நூல்களில் சொல்லியுள்ள காய கற்பத்திற்குரிய பலவிதமான மூலிகைகள் அவை 108 என கொள்ளப்படும்.

நூத்தியெட்டு கற்ப மதும் அரிந்து
நுணுக்க முடனே தானும்
நேத்தியுடனே கொண்டால் சடலம்
நிலைத்துவிடுத்ந் தப்பாது

31. சத்து

இது காந்தம், இரும்புத்தூள் மற்ற உபரசம் முதலியவைகளோடு சேர்த்து, வெண்கரு செயநீரால் அரைத்து உலர்த்தி மூசையிலிட்டு சீலைசெய்து மூன்றுமுறை ஊதி எடுக்கவரும் சத்துக்களோடு தங்கமும், இரசமும், கந்தகமும் சேர்த்து அரைத்துக் குப்பியிலிட்டு எரித்து செந்தூரம் ஆக்கிக்கொள்வது.

32. குருகுளிகை

வாலை இரசத்தை சில சரக்குகளால் கட்டி மணியாகச் செய்து சேர்த்துக்கொள்வது.

மேற்கூறப்பெற்ற முப்பத்திரண்டு மருந்துகளும் அவற்றின் ஆயுள் அளவும் கீழ் கூறப்பட்டுள்ள செய்யுளில் அடங்கும்.

"உள்மருந்தே சுரசஞ்சாறு குடிநீர் கற்க
முக்களியடை யோர் சாமம்
உயர்சூரணம் பிட்டு வடகம் வெண்ணெய் நான்கி
னுயிர் மூன்று திங்களாகும்
விள் மணப்பாகு நெய்ர சாயன மிளகநால்
மேவு மறுதிங்களெண்ணெய்
விரவிடுமுயர்ந்த மாத்திரை கடுகு பக்குவம்
மிளிர் தேனினூறல் தீ நீர்
கொள்ளாறு மோராண்டு மெழுகொடு குழம்பைந்து
கோப் பதங்கம் பத்ததாம்
குருதி பொடியெழுபா னோடைந்தாண்டு நீறுகட்-
டுருக்குக் களங்கு நானூறு
றெள்ளிடாச்சுண்ணம் ஐந்நூறு கற்பஞ்சந்து
குருகுளிகை மிக்காயுளென்
றெவரு மகிழ்சித்தர் முப்பத்திரண்டாக மருத்
திசைத்த வாயுள்ளவாறே."

புற மருந்து 32-ம் அவற்றுள் சிலவற்றின் ஆயுள் அளவும்.

1. மை, கலிக்கம், நசியம், பசை, பீச்சு இவை ஓர் ஆண்டு வீரியம் உடையது.

2. நாசிகாபரணம், நீர், வர்த்தி, பொடி இவை மூன்று மாதங்கள் வன்மையுடையது.

3. களிம்பு, சிலை இவை ஆறு மாதங்கள் வன்மையுடையது.

1. கட்டு

சில இலைகளையாவது, பட்டைகளையாவது நைய இடித்தோ, அரைத்தோ, வதக்கியோ, அணலில் வாட்டியோ, புளித்த நீர் அல்லது காடி இவைகளில் வேகவைத்தோ கட்டுதலுக்கு "கட்டு" எனப்படும்.

2. பற்று

இலைப்பட்டை, வேர் இவற்றின் சாற்றையாவது, அரைத்த கற்கத்தையாவது, நோயிற்கேற்ப சுட வைத்தும், சுடவைக்காமலும் நோயுற்ற இடங்களில் இலேசாகத் தடவி விடவேண்டும். இதற்கே பற்றிடுதல் என்று கூறுவர்.

3. ஒற்றடம்

தவிடு, மணல், செங்கற்பொடி, சாணம், சில இலைகள் முதலியவற்றுள் ஏதாவது ஒன்றை வறுத்துத் துணியில் முடிந்து நோயுள்ள இடங்களில் ஒற்றுதல்.

4. பூச்சு

கொதிக்கவைத்த சில இலைகளின் சாற்றையாவது, தைலங்களையாவது நோயுள்ள இடங்களில் பூசுவது.

5. வேது

வெந்நீரில் நொச்சித்தழை, பழுத்த செங்கல், சில எண்ணெய்கள் விட்டு அதனின்று கிளம்பும் ஆவியை பிடிப்பதற்கு வேது பிடித்தல் என்பதாகும்.

வேது பிடிக்கும்போது முக்காடிட்டு ஆவியை உள்ளே வாங்கி வியர்வையை உண்டாக்கிக் கொள்ளவேண்டும்.

6. பொட்டணம்

சூடம், சாம்பிராணி, பூண்டு, வெற்றிலை, எருக்கம்பூ போன்ற சில சரக்குகளை இடித்து முடிச்சு கட்டி வேப்பெண்ணெயிலோ, தைலங்களிலோ, சுடவைத்து முடிச்சை அதில் நனைத்து நோயுற்ற இடங்களில் ஒற்றடம் கொடுப்பது.

7. தொக்கணம்

முக்குற்றங்களில் ஏற்படும் உடல் வலியை நீக்குவதற்கு உடலை பிடிப்பதும், தைலங்கள் தடவி பிடிப்பதும் தொக்கணம் எனப்படும்.

8. புகை

மஞ்சள், சீரகம், மிளகு, மயிலிறகு முதலியவற்றில் ஏதாவது ஒன்றை பொடிசெய்து துணியில் திரியாக திரித்துக் கொளுத்தி அதிலிருந்து ஏற்படும் புகையைப் பிடித்தல், நாசியிலும் இழுப்பது உண்டு.

9. மை

அஞ்சனக்கல் முதலியவற்றோடு சேர்த்து, இலைச் சாறுகள் விட்டு உலர, உலர அரைத்து உலர்த்தி பிறகு தேன்விட்டு மைபோல் அறைத்துக்கொள்வதும், சில குடிநீர்களில் சில சரக்குகளையும், காளாப்பூச்சாறு முதலியவைகளையும் சேர்த்து தேன்விட்டு காய்ச்சிக் கொள்வதுமாம்.

10. பொடி திமிர்தல்

இது கொள்ளுமா, மஞ்சள்பொடி இவைகளைச் சூடனோடு சேர்த்தாவது, தனியாகவாவது சில இலைகளை அரைத்தாவது உடம்பில் தேய்த்து உருட்டி உதிர்த்தல்.

11. கலிக்கம்

சில சரக்குகளைச் சில சாறுகளால் அரைத்து உருட்டி மாத்திரையாக்கி தேனிலாவது, வேறு சாற்றிலாவது உரைத்துக் கண்ணிற்போடுவது.

12. நசியம்

சில மருந்துச் சரக்குகளை சாறுகளால் அரைத்து மாத்திரையாக்கி,வேண்டும்போது அதை தாய்ப்பால் அல்லது வேறு சாறுகளிலாவது ஊறவைத்து வடிகட்டி மூக்கில் பிழிவது. இதேபோன்று சில பூக்களையும், இலைகளையும் கசக்கி சாறு எடுத்து மூக்கில் பிழிவதுண்டு. இதற்கே நசியமிடுதல் என்று கூறுவர்.

13. ஊதல்

சில இலைகள் அல்லது உப்புச் சரக்குகளில் ஏதாவதொன்றை வாயிலிட்டு மென்று காதில் ஊதுவது. இதற்கே ஊதுதல் என்று கூறுவர்.

14. நாசிகாபரணம்

சில மருந்து சரக்குகளையும் வேர்களையும் பால்களிலும் சில சாறுகளிலும் ஊறவைத்து நிழலில் உலர்த்தி இடித்து துணியில வடிகட்டி மூக்கிலிடுவது.

15. களிம்பு

சில பாடாணங்களைத் துவர்ப்புள்ள காய்ச்சுக்கட்டி போன்ற சரக்குகளுடன் பொடியாக்கிப் பசுவெண்ணெய் சேர்த்து நன்றாய் அரைத்து வைத்துக்கொள்வது.

16. சீலை

சில நச்சு சரக்குகளைத் தண்ணீரிலாவது, சாறுகளிலாவது அரைத்துக் குழம்பாக்கி, அதில் துணித் துண்டைத் தோய்த்து விரணங்களுக்கு உபயோகிப்பது.

17. நீர்

விரணங்களை கழுவுவதற்குச் சில சரக்குகளை நீரில் ஊறவைத்தாவது, குடிநீராகக் காய்ச்சியாவது, சில நச்சு சரக்குகளை அதிக நீரில் அரைத்துக் கலந்தாவது நீர் மயமாய் வைத்துக்கொள்ளுதலாம்.

18. வர்த்தி

சில நச்சு சரக்குகளைப் பொடிசெய்து சில சாறுகளால் அரைத்துக் குழம்பாக்கி, அதில் சீலையை நனைத்தாவது சில சரக்குப்பொடிகளைத் துணித்துண்டில் வைத்தாவது திரித்து ஆறாத விரணங்கட்கும் புரை ஓடும் விரணங்கட்கும் வைப்பது.

19. சுட்டிகை

இது சுடுகை எனவும், சுட்டிகை எனவும் கூறப்படும். இதுவே சூடு போடுதலாகும். மண், மரம், ஊசி முதலியவற்றைக் கொளுத்திச் சூடேற்றி நோயுள்ள இடங்களில் இழுப்பது.

20. சலாகை

இஃது ஒரு சிறு மெல்லிய கருவி, இதனைக்கொண்டு புரையோடும் புண்களின் ஆழத்தை அறியலாம்.

21. பசை

இது குங்கிலியம் போன்ற மருந்துகளுடன் மெழுகு சேர்த்து சிறிது ஆமணக்கு நெய்யுடன் சேர்த்து உருக்கிப் பசையாக வைத்துக்கொள்வது.

22. களி

இஃது ஆளிவிதை போன்ற விதைகளை அரிசிமாவுடன் கூட்டி ஆட்டுப்பால் அல்லது நீர்விட்டு அரைத்து கரண்டியிலிட்டுக் கிளரி கட்டுவதற்குக் களிபோலச் செய்துகொள்வது.

23. பொடி

இது வெங்காரப்பொடி அல்லது சில துவர்ப்புள்ள சரக்குகளின் பொடி இவைகளை விரணத்தின் மீது தூவுதலாம்.

24. முறிச்சல்

கை, கால் முதலிய உறுப்புகளுள் ஏதாவது பிறழ்ந்து சரியான நிலையில் இல்லாமல் மாறி இருந்தால் அதைச் சரியாகத் தள்ளுவதற்குத் தெரிந்து செய்யும் ஒரு தொழில்.

25. கீறல்

இது கட்டி, பரு, கொப்புளம் முதலியவற்றில் தங்கியுள்ள சீழ், இரத்தம், நீர் முதலியவற்றை நீக்கி அதனால் ஏற்படும் வருத்தத்தை நீக்குவதற்காகச் செய்யப்படுகின்ற கீறும் தொழில்.

26. காரம்

இது விரணத்தை ஆற்றுவதற்காவது, தோற்றுவிக்க வாவது உபயோகப்படுத்துகின்ற சில நச்சு மருந்துகளும் அவைகளின் கூட்டுகளுமாம்.

27. அட்டை விடல்

நோயுற்று வீங்கின இடத்தில் இரத்தத்தை வெளியாக்க வேண்டியிருந்தால் அட்டையை அவ்விடத்தில் உற்றும்படி விடின், அது கடித்து உள்ளிருக்கும் தீய இரத்தத்தை குடித்து விழுத்துவிடும். வீக்கமும் வாங்கிவிடும். இதுவே அட்டைவிடல் எனப்படும்.

28. அறுவை

இரத்து அறுத்து செம்மைப்படுத்த வேண்டிய இடங்களில் அறுக்கும் கருவிகளைக் கொண்டு அறுத்துக் கெடுதிகளையெல்லாம் நீக்கிவிட்டு தைத்துவிடல்.

29. கொம்பு கட்டல்

இது நோயாளியின் உடலில் எவ்வுறுப்பு உடைந்து போகிறதோ, அவ்வுறுப்பை இணைந்து மீண்டும் ஒட்டிக் கொள்ளும்படி செய்வதற்கு அவ்வுறுப்புக்களில் கொம்பு (மரச்சட்டம்) வைத்து கட்டுதலாகும்.

30. உறிஞ்சல்

இரணங்களில் உள்ள சீழ், இரத்தம் முதலியன வெளியாகாவிடின் அவைகளை வெளிப்படுத்தக் கருவிகளை வாயில் வைத்து உறிஞ்சி எடுத்தலாகும்.

31. குருதிவாங்கல்

இது சில நோயாளிகளின் உடம்பில் அதிக இரத்தம் இருக்குமானால் அதை குறைப்பதற்கு ரத்தக்குழாயை கீறி இரத்தத்தை வெளிப்படுத்தலாகும்.

32. பீச்சு

இது மலம் வெளிப்படாவிடில் அதை வெளிப்படுத்தக் குழாய் வழியாக நீரையாவது, வழுவழுப்பான நீர்ப்பொருளை யாவது பீச்சுதலாம்.

மேற்கூறப்பெற்றுள்ள வெளி மருந்துகள் முப்பத்தி ரண்டும் கீழ்க்கூறப்பட்ட செய்யுளில் அடங்கும்.

"வெளிவருந்தேகட்டு பற்றொற்றடம் பூச்சு
வேது பொட்டணந்தொக்கணம்
மென் புகை மை பொடி திமிர்தல் கலிக்க நசியமுதல்
மேவு நாசி காபரணமும்
களிம்பு சீலை நீர்வார்த்தி கட்டிகை சலாகைபசை
களிபொடி முறிச்சல் கீறல்
காரமட்டை யறுவை கொம்புறிஞ்சல் குருதி
கண்டு வாங்குதல் பீச்சிவை

வெளிமருந்து முப்பத்திரண்டென்றனர்
விண்ணுலகவு சித்தராமல்
மேலவழ்றிற்பசை பீச்சுமை நசியமும்
மென்கலிக்கங் களோராண்
டொளிவர்த்தி பொடியுநீர் நாசிகாபரணமிவை
யொரு மூன்று திங்களாகும்
உயர்சீலைகளிம் பிவைகளறு திங்களாகுமென்
றோதினா ராயுளு மரோ"

வைத்தியசாலை விதி

வைத்தியசாலைக்காக உள்ள பூமியில் வடக்கு முகமாக நின்றுகொண்டு ஒரு சதுரப்பூமி மத்தியில் ஒருமுழ ஆழமும் சதுரத்திற்குச் சதுரம் அகல நீளமுள்ள ஒரு குழியை மண்வெட்டியினால் வெட்டி, வெட்டிய மண்ணை அந்தக் குழியில் நிரப்ப அது அதிகமானாலும், அந்நிலமே தெற்கும், மேற்கும் உயர்ந்திருந்தாலும் அந்த மண்ணை நாவிலிட இனித்தாலும், அந்நிலத்தைத் தென்பரிசத்திலிருந்து கொத்தி சோதிக்குமிடத்தில் நற்சகுனங்களாகிய பொன், தானியம், இரத்தினம், செங்கல், தவளை, பசுமாட்டுக்கொம்பு, அரணை, நண்டு, நன்னீர் ஊற்று ஆகிய இவ்வொன்பது வகைகளுள் ஏதேனும் ஒன்று தோன்றினாலும் அது உத்தம பூமியாகும்.

மேற்கூறப்பெற்ற இடத்தில் சிற்பநூல் விதிப்படி இல்லம் அமைத்து அதில் வாயுதிக்கில் மருத்துவத்திற்கு ஆதி கருத்தாவாகிய வைத்தியநாதர் கிடமும், தருமசாந்திச் சாலையும் அமைக்கவேண்டும்.

1. இந்திரத்திக்கில் - நீராடுதல், உப்பு வைத்தல்.

2. இயமதிக்கில் - உண்பதற்குரிய இடமளித்தில்.

3. நிருதித் திக்கில் - பல சாத்திர நூல்கள் வைத்தல்.

4. வருணத்திக்கில் - சயனத்திற்கும், வைத்தியன் வசிப்பதற்கும்.

5. குபேரத்திக்கில் - வைத்தியன் இருப்பதற்கும், சிகிச்சை செய்வதற்கும், மருந்துகள் வைப்பதற்கும்.

6. ஈசான்ய திக்கில் - தவம் செய்வதற்கும்.

7. ஆக்கினித் திக்கில் - தெளிவு நீர்க்கேணியும், அலமாரியும் கட்டி, மருந்துகள் செய்வதற்கான தனித்தனி இடங்களையும் அமைத்து செவ்வையாகக் கட்டவேண்டும்.

மட்கலத்தின் இலக்கணம்

உப்பும், சவரும் இல்லாத நன்னீரையுடைய இடத்தில் பாண்டங்கள் செய்து வருபவரிடத்திற்குச் சென்று அவர் பாண்டங்கள் செய்யும்போது கையில் உள்ள மண்ணையுருவி எடுத்து போடும்போது அதை தனியாக போடச் சொல்லி அதற்கு நான்கில் 1 பங்கு மணலைக் கலந்து நாள்தோறும் மிதித்து அந்த மண்ணில் அடிகனமுள்ளதாய் தேவையான மட்பாண்டங்களை செய்யச்சொல்லி சுட்டு எடுக்கவும்.

குடிநீர் (கஷாயம்) தீ நீர் பானைகட்கு அகட்டினது குறுக்களவின் அங்குலம் 24 ஆகவும், உயரம் 27 அங்குலமும் வாயின் அகலம் 8 அங்குலமாகவும் இருக்கவேண்டும்.

நெய், எண்ணெய், மெழுகுத்தைலம், திராவகம் முதலிய மருந்துகளுக்கு வாயானது குறுகலாக இருக்க வேண்டியதே விதியாகும். அன்றியும் சிந்தாமல் ஊற்றுகின்ற பொருள்களைத் தாங்குகின்ற பாத்திரங்களுக்கு எல்லாம் அவைகளின் வயிற்றைப் பார்க்கிலும் வாயை விரிவாய்ச் செய்வது விதியாகும்.

சட்டிகளின் இலக்கணம்

கலத்தைப் போலச் சுற்றிலும், வரம்புள்ளதாய் இருக்கில் அது வறுக்கின்ற பொருள்களுக்கு உதவும் சட்டியாகும். மல்லையைப்போல் ஆழமுள்ளதாயிருக்கில், அது அருந்துகின்ற குடிநீர் சுரசம் முதலியவைகளுக்கு உதவும் சட்டியாகும். மல்லையைப்போல் ஆழமுள்ளதாயிருக்கில், அது அருந்துகின்ற குடிநீர் சுரசம் முதலியவைகளுக்கு உதவும் சட்டியாகும்.

புரிமனை: இது தூய்மையான ஆண் தருப்பை, பச்சைக்கொடி, தேங்காய்நார், வாழைநார், பிரப்பங்கோரை, தாழைவிழுது, ஆலம்விழுது முதலியவைகளால் வட்டமாக செய்து அடித்தூரை சுமக்கும். இதை பூமியிற்படாமல் செய்யவுமான புரிமனை செய்வார்கள்.

குடிநீர், தைலம், நெய் முதலியவைகளைக் காய்ச்ச மட்கலங்களே சாலச்சிறந்ததாகும்,. வளி, அழல், ஐய வேறுபாடுகளினால் ஏற்படும் முக்குற்ற நோய்களுக்கு தங்கம், செம்பு, வெண்கலம் போன்ற பாத்திரங்களில் காய்ச்சலா மென்று கூறுவர். அவை மூவகை உடலினர்க்கும் மருந்தூட்கலங்களேயல்லாமல் காய்ச்சு வகைக்கு ஆகாது. ஆகையால் மட்கலமே சாலச்சிறந்ததாகும்.

ஒரு தைல பாத்திரம் மற்றொரு தைலத்திற்காகாது: ஒரு தைலங்காய்ச்சிய பாத்திரத்தில் மற்றொரு தைலத்தை காய்ச்சினால் ஒப்பற்ற அப்பெரிய தைலத்தினது நற்குணங்கள் கெடுவதோடு மட்டுமல்லாமல் நோயாளியின் உடலும் மருத்துவன் புகழும் மருத்துவ நூலின் உண்மையும் கெட்டுவிடும்.

பாத்திரம் பழக்கும் விதி: எந்த வகைத் தைலங்களுக்கும் பழகிய பாத்திரமிராது. ஆகையால் எந்தவித தைலம் காய்ச்சுகிறோமோ அந்த நெய்யில் நனைத்து அதில் தண்ணீர்விட்டு விட்டுக் காய்ச்சி ஊற்றிவிட்டு கருமையான

நிறம் அடியில் பிடிக்காவண்ணம் அதை அப்போதைக்கப் போது கழுவி காயவைத்து அதில் விடுகின்ற நெய்வகைகளை குடிக்கவொட்டாமல் பழக்கிக்கொள்ள வேண்டும்.

உரல் வகையும் உலக்கை வகையும்: கருங்கல், இரும்பு ஒளிபொருந்திய வெண்கலம் என்னும் இவற்றால் தனித்தனியே உரல்களும், ஒருமுனை பலா முட்களைப் போலப் பற்களையுடையதாகவும், ஒருமுனை சமமாக உள்ள இருப்புலக்கையும் செய்வதே நலம். வைரம் பொருந்திய மரத்தினால் உலக்கை, உரல் செய்து கொள்ளலாம்.

தைலம், மருந்து, நெய்கள்: ஆகியவை காய்ச்சும்போது அடுப்பின் பின்பக்கங்களில் முக்கியமாய் இருக்கவேண்டிய கருவிகள்

1. கொதியடக்க விசிறி.

2. தைலத்தில் தீப்பிடித்தால் அணைப்பதற்கு அந்த தாழி வாய்க்குச் சரியான ஒரு சட்டி.

3. அகப்பைக்குள் பற்றிக்கொள்கிற சுடுகையில் உள்ள கற்கம் வழிப்பதற்கு இருபுறமும் கூர்மையுள்ள சிறிய கத்தி.

4. பதி விளக்கு.

5. அடியில் சுடுகையுள்ள குந்தனை.

6. துழாவுகின்ற அகப்பை வைப்பதற்கு ஒரு சட்டி.

7. அடுப்பிலிருக்கிற பாண்டத்திற்கு அபாயம் நேரிடுங்கால் மாற்றுவதற்கு மற்றொரு பாண்டம்.

8. விளக்குமாறு முதலியனவாம்.

கல்வங்களின் குணம்

கருப்புக்கல்: இதனை நன்னிக்கல் கல்வம் என்று சொல்வதுண்டு. இக்கல்வம் மருந்துடன் கலவாததால் இதில் மருந்தரைத்தல் உத்தமம்.

இதில் அரைக்கப்படும் மருந்துகள் உடலுக்கு இன்பத்தைத் தரும்.

சீலப்புக்கல்: இது எல்லா இடங்களிலும் கிடைப்பது அரிது. இதில் அரைக்கப்படும் மருந்துகள் சன்னிபாத நோய்களையும், தோடங்களையும் போக்கும். இதில் மருந்தரைத்தல் உத்தமம்.

பச்சைக்கல்: இதுவும் கிடைப்பது அரிது. வட இந்தியாவில் கிடைப்பதாகக் கூறப்படுகிறது. இதில் மருந்தரைத்தல் மிகவும் சாலச்சிறந்தது.

மஞ்சள் நீறுக்கல்: இதில் மருந்து வைத்து நோய்களுக்கு கொடுத்தால் விரைவில் நோய்கள் விலகும்.

வெள்ளைக்கல்: இது மருந்தின் வேகத்தையும், குணத்தையும் அழிக்கும். இது தேய்ந்து மருந்துடன் கலக்கும் ஆகையால் இக்கல்லில் கல்வம் செய்யக்கூடாது.

கல்வம் சுரண்டியின் குணம்

இது குழியம்மியில் இட்டு அரைக்கும் மருந்தை வழிக்கும் கருவியாகும்.

1. இரும்பினால் செய்யப்படும் சுரண்டி துருப்பிடிக்கும். இதனால் மருந்தின் குணம் கெடும்.

2. எஃகு வெள்ளி இவைகளினால் செய்யப்படும் சுரண்டி உத்தம குணத்தை உண்டாக்கும்.

3. மரம், மான்கொம்பு இவைகளினால் செய்யப்படும் சுரண்டி மத்திம குணத்தைக் கொடுக்கும்.

4. பனை ஓலையினால் செய்யப்படும் சுரண்டி சாலச் சிறந்ததென கருதப்படுகிறது.

அகல்: இது வட்டமான மண் தட்டு.

குப்பி: இது கழுத்து குறுகலாயும், அடி பரவலாயும் உள்ள மண் குடுவை. இதை ஜாடிகளிலும், பூநீற்றிலும் சிலர் செய்து உபயோகப்படுத்துவதுண்டு.

மூசை: இதுவே குகை என்று சொல்லப்படுவது. இதில் மண்மூசை, வச்சிர மூசை என இருவகையுண்டு.

1. மண்மூசை: இது களிமண், மணல், கரித்தூள், சாம்பல், தேங்காய் நார் இவைகளை சேர்த்து செய்தல்.

2. வச்சிரமூசை: இது களிமண், அயக்கிட்டம், சணல், தார், உமிக்கரி,கரித்தூள், சுண்ணாம்பு இவைகளைக் கொண்டு செய்யக்கூடியது.

சீலை: சீலை என்பது ஒரு சுத்தமான அழுத்தத்துணியில் மிருதுவாக அரைத்த புற்றுமண்ணை ஒரு பக்கத்தில் தடவி ஒட்ட உபயோகிப்பது. இதனால் குப்பி, அகல் இவைகளை சீலை செய்யலாம்.

புற்று மண்ணிற்கு பதில் கோதுமை மாவையும், உளுத்த மாவையும் உபயோகிக்கலாம்.

சுண்ணாம்பை தனியாகவாவது முட்டையின் வெள்ளைக்கருவைச் சேர்த்தாவது உபயோகிப்பதுண்டு. இவைகளை மருந்திற்குத் தக்கவாறு உபயோகப்படுத்த வேண்டும்.

எரு

எரு: இஃது இயற்கை எரு, செயற்கை எரு என இரு வகைப்படும்.

இயற்கை எரு: இது காட்டு எருவாகும். (வரட்டி) இதுவே சிறந்ததென கருதப்படுகிறது. இதன் எடை 70 கிராம் உடையதாக இருக்கும்.

செயற்கை எரு: இது தட்டி காயவைத்து எடுப்பதாகும். இதை 12 அங்குல விட்டமும், அரை அங்குலக் கனமும் உள்ளதாய் வட்டமாகத் தட்டி காயவைக்கவேண்டும்.

நாட்டு எரு நான்கு வகைப்படும்

1. பசுஞ்சாணத்தால் செய்த வரட்டி - உத்தமமாகக் கொள்ளலாம்.

2. எருமைச் சாணத்தால் செய்த வரட்டி - அதமமாகும்.

3. கலப்புச் சாணத்தால் செய்த வரட்டி - அதமமாகும்.

4. சாணத்துடன் வைக்கோல், சருகுகள், உமி சேர்த்து செய்யப்பட்ட வரட்டி மருந்தின் வீரியத்தை குறைக்கும்.

ஆட்டு சாணத்தினால் செய்யப்பட்ட வரட்டிகள் மருந்திற்கு அதிக வீரியத்தை கொடுக்கும் என்றும், அம்மருந்துகள் பிணிகளை விரைவில் நீக்கும் என்றும் கூறுவர்.

குறிப்பு: வரட்டிகள் செய்ய கெட்ட நாற்றமுள்ள சாணத்தை உபயோகித்தல் கூடாது.

விறகின் வகைகள்

1. ஆவாரை, சிற்றாமுட்டி: உடலில் ஏற்படும் வெப்பு முதலிய நோய்களை குணப்படுத்தும் உயர்ந்த தைலங்களுக்கு ஆகும்.

2. உசில், இலந்தை: கண், மூக்கு, செவி, பாதம் ஆகிய இடங்களுக்கு இடுகின்ற நெய்களுக்கும், குடிக்கின்ற தைலங்கலுக்கும் ஆகும்.

3. **இலுப்பை, புளி:** தடவிப் பூசுவதாகிய சூடுள்ள பிடித் தைல வகைகளுக்கு ஆகும்.

4. **வேம்பு, பூவரசு, அரசு:** வாத நோய்களுக்கான குடிநீர், தைலம் ஆகியவைகள் காய்ச்சுவதற்கு உதவும்.

5. **நுணா, வன்னி, மாவிலிங்கம்:** வாத நோய்களுக்கு ஆகும்.

6. **நெல்லி, வேம்பு, விளா:** கபசம்பந்தமான நோய்களுக்கு ஆகும்.

7. **உசில், வேல், கொன்றை, வேங்கை:** கபசம்பந்தமான நோய்களுக்கு ஆகும்.

8. **பனை, தென்னை, வேம்பு:** இரசம் சேர்ந்த மருந்துகள் செய்வதற்கு ஆகும்.

9. **வேல், வேங்கை:** இரும்பு சேர்ந்த மருந்துகள் செய்வதற்கு ஆகும்.

தீயினளவு

தீயின் அளவு நான்கு வகைப்படும். அவை: 1) தீபாக்கினி, 2) கமலாக்கினி, 3) கதலியாக்கினி, 4)காடாக்கினி.

1. **தீபாக்கினி:** விளக்கின் சுடரைப்போல் உள்ள தீயை தீபாக்கினி என்று கூறுவர். (1 விறகு-விறகின் கனம் இருவிரல்)

2. **கமலாக்கினி:** மலர்ந்த தாமரைப்பூவை போல் உள்ள தீயை கமலாக்கினி என்று கூறுவர். (2 விறகு)

3. **கதலியாக்கினி:** வாழைப்பூவைப்போல் உள்ள தீயை கதலியாக்கினி என்பர். (3 விறகு)

4. **காடாக்கினி:** மேற்கூறப்பெற்ற மூன்றிற்கும் மிகுதிப்பட்ட தீக்கு காடாக்கினி என்றும் கூறுவர். (4 விறகு)

புடம்

இது எருவின் உதவியால் எரிக்கப்படும் எரிப்புத் திட்டம். இஃது ஒன்பது வகைப்படும்.

1. காடைப்புடம்	- ஒரு எரு
2. கவுதாரிப்புடம்	- மூன்று எரு
3. குக்குடப்புடம்	- பத்து எரு
4. வராகப்புடம்	- ஐம்பது எரு
5. மணல் மறைவுப்புடம்	- தொண்ணூறு எரு
6. மயிற்புடம்	- நூறு எரு
7. கெஜப்புடம்	- ஆயிரம் எரு
8. பூமிப்புடம்	- ஆட்டின் எருவில் நான்கு விரற்கடை அளவு
9. கனப்புடம்	- 800 எரு

மேற்கூறப்பெற்ற புடங்களல்லாமல் கீழ்க்காணும் புடங்களும் உபயோகத்திலிருக்கின்றன.

1. உமிப்புடம்: உமியிற் புதைத்து வைத்து எடுத்தலும் உமியிற் புடமிட்டெடுத்தலும்.

2. தானியப்புடம்: முடித்த மருந்தை நெல்லுக்குள் குறிப்பிட்ட நாள் அளவு வைத்திருந்து எடுத்தலை தானியப் புடம் என்று கூறுவர்.

3. சூரியப்புடம்: இது வெய்யிலிற் காயவைத்தல்.

4. சந்திரப்புடம்: இது சந்திர வெளிச்சத்தில் வைத்தெடுத்தல்.

5. பருவப்புடம்: இது பவுர்ணமியன்று திறந்த வெளியில் வைத்து எடுத்தல்.

6. அமாவாசைப்புடம்: இது அமாவாசையன்று இருட்டில் திறந்த வெளியில் வைத்து எடுத்தல்.

7. பனிப்புடம்: இது பனியில் மருந்துகளை வைத்து எடுத்தல்.

8. மரப்புடம்: மரத்தைத் துளைத்து, அதற்குள், மருந்தை வைத்து குறிப்பிட்ட நாள் கழித்து எடுத்தல்.

ஊதுமுறைக்கு துருத்தி வகை

1. சுண்ணம் செய்வதற்கு ஒரு துருத்தியும்.

2. சத்து உருக்குவதற்கு இரண்டு துருத்திகளும்.

3. செம்பு, இரும்பு இவைகளை ஊதிச் சத்தெடுக்க நான்கு துருத்திகளும் வேண்டும் என்பர்.

செந்தூரம் செய்வதற்குரிய சிறப்புத் திங்கள்: ஆவணி, புரட்டாசி, மார்கழி, மாசி, சித்திரை ஆகிய மாதங்களே செந்தூரம் செய்வதற்குரிய மாதங்களாகும்.

சுண்ணம் செய்யும் காலம்: பங்குனி, சித்திரை.

செயநீர் எடுக்கும் காலம்: தை, மாசி, பங்குனி.

நினைவுகள் – அளவுகள்

நிறுத்தலளவை

1 உளுந்து சுமார்	1 கிரெயின் நிறையாகும் (65 மி.கிராம்)
4 யவம்	1 குன்றி (2கிரெயின்) (130மி.கிராம்)
1 மஞ்சாடி	4 கிரெயின் (260 மி. கிராம்)
6 குன்றி	1 மாஷம் (780மி. கிராம்)
3¾ குன்றி	1 பணவிடை (488 மி.கிராம்)
32 குன்றி	1 வராகனெடை (3.5கிராம்)
40 குன்றி	1 கழஞ்சு (4.4 கிராம்)
10 வராகனெடை	1 பலம் (35 கிராம்)
¼ பலம்	1 கஃசு அல்லது 1 கைசா (8 கிராம் 750 மிலி)
1 தோலா	1 ரூபாயெடை (12 கிராம்)
1 அவுன்ஸ்	2½ ரூபா நிறை (30 கிராம்)
3 தோலா	1 பலம் (35 கிராம்)
8 பலம்	1 சேர் (280 கிராம்)
40 பலம்	1 வீசை (1.4 கி. கிராம்)
50 பலம்	1 தூக்கு (1.7 கி.கிராம்)
2 தூக்கு	1 துலாம் (3.5 கி.கிராம்)
1 துலாம்	12½ சேர்

முகத்தலளவை

360 நெல்	1 சோடு
5 சோடு	1 ஆழாக்கு (168 மி.லிட்)
2 ஆழாக்கு	1 உழக்கு (336 மி.லிட்)
2 உழக்கு	1 உரி (672 மி.லிட்)
2 உரி	1 நாழி (1.3 லிட்.)
8 நாழி	1 குறுணி (5.3 லிட்.)
2 குறுணி	1 பதக்கு (10.7 லிட்)

2 பதக்கு	1 தூணி (21.5 லிட்)
3 தூணி	1 கலம் (64. 5 லிட்.)
1 தேக்கரண்டி	1 டிராம் (4 மி.லிட்)
1 குப்பி	24 அவு (700 மி.லிட்.)

வேறு முகத்தலளவை

1 தீர்த்தக்கரண்டி	1.33 மிலி.
1 நெய்க்கரண்டி	4.00 மிலி. (1 டிராம்)
1 உச்சிக்கரண்டி	16 மிலி. (1 மேஜைக்கரண்டி)
1 பாலாடை	30 மிலி. (1 அவுன்ஸ்)
1 எண்ணெய்க்கரண்டி	240 மிலி. (8 அவுன்ஸ்)
5 சேர்	1 சொம்பு

பண்டு வழக்கிலிருந்த மருத்துவ அளவுகள்

1 அணு	1 திலம் (0.003 கிராம்)
2 திலம்	1 காகினி (0.006 கிராம்)
4 காகினி	1விரிகி (நெல்) 024 கிராம்
2 விரிகி	1 விதளம் (½ குன்றி) (0.048கிராம்
2 குன்றி	1 மாஷம் (உளுந்து)
4 குஞ்சம்	1 பணவெடை
5 மாஷம்	1 தனகம்
3 தனகம்	1 சாணம்
4 சாணம்	1 நிட்கம்
2 சாணம்	1 வடகம் (முக்கழஞ்சு)
1/10 பலம்	12 பணவெடை
2 உரி	1 நா
2 குன்றி	½ பணவெடை
6 குன்றி	1 மாஷம்
12 மாஷம்	1 தோலா
3 தோலா	1 பலம் (10 வராகனெடை)
32 பலம்	1சுபம்
2 சுபம்	1 பாரம் (1 கலம்)

ஒரு கடி	ஐந்துவிரல்கள் கொள்ளும் அளவு
1 உழக்கு	கால்படி
1 கழஞ்சி	1 ¼ வராகனெடை
1 கரண்டி	1 பொட்டுக்கரண்டி
1 காசெடை	1 பைசா அளவு
1 குன்னி எடை	1 குண்டுமணியின் எடை
1 சிறங்கை	உள்ளங்கையில் கொள்ளும் அளவு
திரிகடி	மூன்றுவிரல் கொண்ட அளவு
துட்டிடை	1 தோலாவில் 1/48 (48ல்ஒன்று)
1 தூக்கு	144 ரூபாயின் எடை
1 நெல்லிடை	1 நெல்லின் எடை
1 பணவிடை	ஒரு வராகனெடையில் பத்தில் ஒருபாகம்
1 பிடி	ஒரு கைப்பிடியில் கொள்ளும் அளவு
1 மண்டலம்	48 நாட்கள் கொண்டது
1 வராகனெடை	32 குன்றிமணியெடை கொண்ட அளவு
வெருகடி	பூனையின் காலடி அளவு

மருந்து அளவு அட்டவணை

வயதிற்குத் தக்கபடி மருந்தின் அளவைக் கிரமப் படுத்திக் கொள்ளவேண்டும். ஏனென்றால் அளவு அதிகப்பட்டால் மருந்து விடமாகிச் சரீரத்தைக் கெடுக்கும்.

வாலிபருக்கு ஒருவேளைக்குக் கொடுக்கிற மருந்தின் அளவு 1 வராகனெடை அல்லது 60 உளுந்து நிறை.

வயது

1 ஆண்டுக்குட்பட்டால் 12 பங்கில் 1 பங்கு அல்லது உளுந்து நிறை.

2 ஆண்டுக்குட்பட்டால் 1/8 பங்கு அல்லது 8உளுந்தெடை

3 ஆண்டுக்குட்பட்டால் 6 பங்கில் 1 பங்கு அல்லது 15உளுந்தெடை

4 ஆண்டுக்குட்பட்டால் ¼ பங்கு அல்லது 15 உளுந்தெடை.

7 ஆண்டுக்குட்பட்டால் 3 பங்கில் 1 பங்கு அல்லது 30உளுந்தெடை.

14 ஆண்டுக்குட்பட்டால் 3 பங்கில் 2 பங்கு அல்லது 40உளுந்தெடை

20 ஆண்டுக்குட்பட்டால் 3 பங்கில் 2 பங்கு அல்லது 40உளுந்தெடை

21 முதல் 60 வரையில் முழுப்பிரமாணம் அல்லது 60உளுந்தெடை முறையே கொடுக்கவேண்டும்.

மருந்து செய்முறை மாத்திரைகள்

மாத்திரைகள்

1. அக்கர சஞ்சீவி மாத்திரை

1. அதிமதுரம்	25 கிராம்
2. கோஷ்டம்	25 கிராம்
3. சுக்கு	25 கிராம்
4. மிளகு	25 கிராம்
5. அ. திப்பிலி	,, ,,
6. சாதிக்காய்	,, ,,
7. வாய்விளங்கம்	,, ,,
8. விலாமிச்சம்வேர்	,, ,,
9. இலவங்கப்பட்டை	,, ,,
10. திப்பிலி மூலம்	,, ,,
11. நேர்வாளம் (சுத்தித்தது)	,, ,,
12. கடுக்காய்த்தோல்	,, ,,
13. நெல்லிக்காய்த்தோல்	,, ,,
14. தான்றிக்காய்த்தோல்	,, ,,
15. ஓமம்	,, ,,
16. மல்லி (தனியா)	,, ,,
17. கஸ்தூரி மஞ்சள்	,, ,,
18. பழம்புளி	,, ,,
19. பேரரத்தை	,, ,,
20. சிற்றரத்தை	,, ,,
21. மூக்கரட்டைவேர்	,, ,,
22. காக்கரட்டான்வேர் (வெள்ளை)	,, ,,
23. தூதுவேளைவேர்	,, ,,
24. இந்துப்பு	,, ,,
25. கருஞ்சீரகம்	,, ,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் சம்பைச் சரக்குகளை மட்டும் தனித்து இடித்து தூளாக்கி வடிகட்டி குழியம்மி யில் இட்டு அதனுடன் பொரித்த சீனாக்காரம், இந்துப்பு இரண்டையும் சேர்த்து தாய்ப்பாலில் ஆறு மணி நேரம் இடைவிடாது நன்கு நெகிழ அரைத்து மெழுகு பதத்தில் எடுத்து துவரை அளவாக மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: 1 முதல் 2 மாத்திரைகள் காலை மாலை (இருவேளைகள்)

அனுபானம்: தாய்ப்பாலில்.

தீரும்நோய்கள்: நாவறட்சி, சன்னி, சுரம், வலிப்பு முதலிய நோய்கள் குணமாவதுடன், அவரவர்கள் அனுபவத்திற்கு ஏற்ப குழந்தைகளுக்கு ஏற்படும் பல நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவும்.

2. அக்கினி மாத்திரை

1. பாவட்டைவேர்	35 கிராம்
2. முசுமுசுக்கைவேர்	,,
3. நரிப்பாகல் வேர்	,,
4. சிறுகீரைவேர்	,,
5. அவுரி வேர்	,,
6. ஆமணக்கு வேர்	,,
7. மிளகு	,,
8. அரத்தை	,,
9. சுக்கு	,,

மேற்கூறப்பட்ட மருந்துகளை பசுநீர் விட்டு 6 மணி நேரம் நன்கு நெகிழ மெழுகு பதம் வரை அரைத்து குன்றியள வுள்ள மாத்திரைகளாக உருட்டி வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சுக்கு, குடிநீர்.

தீரும் நோய்கள்: வாய்நீர் ஊறுதல், சுரம், சகலவிதமான கழிச்சல்.

பத்தியம்: புளிநீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

3. அங்குச மாத்திரை

1. இரசம் (சுத்தி செய்தது)	17½ கிராம்
2. இந்துப்பு	17½ கிராம்
3. தக்கோலம்	35 கிராம்
4. மிளகு	17½ கிராம்
5. ஏலம்	,,

இவைகளின் கூட்டுத்தொகைக்கு இருபங்கு நொச்சிச் சாறு விட்டு எட்டுநாள் அரைக்கவும். பின்னர் கரும்புச்சாறு விட்டு அரைக்கவும். பயறளவு மாத்திரை செய்து கொள்ளவும்.

குணம்: இம்மாத்திரை மிளகு நீரில் கொடுக்க சூலைநோய், அசீரண நோய் நீங்கும்.

பத்தியம்: உப்பு, புளி கூடாது.

முறிவு: வேலம்பட்டைக் குடிநீர் கொடுத்து முறிக்கவும். பின்னர் சீரகக் குடிநீர் ஐந்துநாள் கொடுக்கவும்.

4. அதிமதுர மாத்திரை

1. அதிமதுரம்	25 கிராம்
2. கோஷ்டம்,	,,
3. சுக்கு	,,
4. ஜாதிக்காய்	,,
5. கொடுக்காப்புளி	,,

6. விலாமிச்சம்வேர்	25 கிராம்
7. இலவங்கப்பட்டை	,,
8. திப்பிலி மூலம்	,,
9. கடுக்காய்த்தோல்	,,
10. ஓமம்	,,
11. மல்லி	,,
12. கஸ்தூரி மஞ்சள்	,,
13. பழம்புளி	,,
14. சீனாக்காரம்	,,
15. பேரரத்தை	,,
16. சிற்றரத்தை	,,
17. இந்துப்பு	,,
18. கருஞ்சீரகம்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் சம்பைச் சரக்குகளை மட்டும் தனித்து இடித்துத் தூளாக்கி வடிகட்டி குழியம்மியிலிட்டு அதனுடன் சீனாக்காரம், இந்துப்பு இரண்டையும் சேர்த்து தாய்ப்பாலில் ஆறுமணிநேரம் நன்றாக நெகிழ அரைத்து மெழுகு பதத்தில் துவரை அளவாக மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அனுபானம்: தாய்ப்பால்.

தீரும்நோய்கள்: நாவறட்சி, சன்னி, சுரம் மேலும் குழந்தைகட்கு ஏற்படும் பல நோய்கள் குணமாகும்.

அளவு: நாளொன்றுக்கு 1 முதல் 2 மாத்திரை (காலை, மாலை இருவேளை)

மேலே கூறப்பெற்ற மாத்திரையை ஏழு நாட்கள் கொடுக்கவேண்டும். இரண்டாவது வாரம் தலை முழுக்காட்ட வேண்டும். மேலும் நோயை நன்கறிந்து மருந்து கொடுத்தல் நன்று.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

5. அதிவிடய மாத்திரை

1. அதிவிடயம்	5 கிராம்
2. சாதிக்காய்	,,
3. சாதிப்பத்திரி	,,
4. அபினி	,,
5. கடுக்காய்த்தோல்	,,
6. தான்றிக்காய்த்தோல்	,,
7. மிளகு	,,
8. சீரகம்	,,
9. கருஞ்சீரகம்	,,
10. ஏலரிசி	10 கிராம்
11. மாதுளந்நீர்	250 கிராம்
12. அத்திப்பட்டை	250 கிராம்

மேற்கூறப்பெற்ற மாதுளந்துளிர், அத்திப்பட்டை ஆகிய இரண்டு தவிர மற்ற சரக்குகளை நன்றாக இடித்து வடிகட்டி எடுத்துக்கொள்ளவும். பின்னர் மாதுளந்துளிர், அத்திப்பட்டை ஆகிய இரண்டையும் குடிநீராக்கிக்கொண்டு மேலே கூறிய பொடியைக் கல்வத்திலிட்டு மேற்படி குடிநீரினால் நன்றாக நெகிழ அரைத்து அடையாகத் தட்டி ஒரு சட்டியில் வைத்து அடுப்பிலேற்றி சிறு தீயாக எரிக்கவும். வில்லை உலர்ந்து வரும்போது அரசிலை கொண்டு வில்லையைக் கவசஞ் செய்து அரசிலை கருக மீண்டும் எரிக்கவேண்டும். மேலும் வில்லையைக் குடிநீர் விட்டு அரைத்து அடை தட்டி அடுப்பிலேற்றி முன்போல் தீயெரித்து அரசிலை கருகியபிறகு மீண்டும் மேற்கூறியவாறே ஐந்து, ஏழு அல்லது பத்து முறைகள் செய்து கடைசியில் குடிநீர் விட்டு நன்றாயரைத்துக் குன்றிமணியளவு மாத்திரைகளாக உருட்டி நிழலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

அளவு: ஒன்று முதல் மூன்று மாத்திரைகள்.

அனுபானம்: எருமைத்தயிர் வடிகட்டின வெந்நீர் அல்லது தேன் இவைகளில் கொடுக்கலாம். உடல் வன்மைக்கேற்ப வேறு துணை மருந்துடனும் கொடுக்கலாம்.

தீரும் நோய்கள்: கழிச்சல், சுரம், கபம் குணமாகும்.

பத்தியம்: குழந்தைகட்கு மாத்திரை கொடுத்தால் தாய் புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும். பெரியவர்களானால் அரிசி கஞ்சி சாப்பிடவேண்டும்.

6. அமிர்த சஞ்சீவி மாத்திரை

1. சாத்திரபேதி	25 கிராம்
2. கோஷ்டம்	,,
3. ஏலரிசி	,,
4. இலவங்கம்	,,
5. சந்தனம்	,,
6. கடுகுரோகிணி	,,
7, நன்னாரிவேர்	,,
8. இலுப்பைப்பூ	,,
9. விலாமிச்சம்வேர்	,,
10. வெட்டிவேர்	,,
11. திப்பிலி	,,
12. அதிமதுரம்	,,
13. கோரைக்கிழங்கு	,,
14. திராட்சை	,,
15. பேரீச்சம்பழம்	,,

மேற்கூறிய சரக்குகளில் பேரீச்சம்பழம், திராட்சைப் பழம் இரண்டும் நீங்கலாக மற்றைய சரக்குகளனைத்தையும் நன்றாக இடித்து வடிகட்டிக் கல்வத்திலிட்டு மேற்கூறிய பழங்களைக் கொட்டை நீக்கிச் சேர்த்துக் கருப்பஞ்சாறு விட்டு நன்றாக நெகிழ அரைத்துக் கடலை அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: வேளைக்கு ஒருமாத்திரை வீதம் நாள் ஒன்றுக்கு இரண்டு மாத்திரைகள்.

அனுபானம்: தாய்ப்பால், வெந்நீர் இவைகளில் கொடுக்கலாம்.

தீரும் நோய்கள்: எட்டுவகை கணை, மாந்தம், சுரம், தாகம்.

7. அமுதாதி மாத்திரை

1. அதிமதுரம்	25 கிராம்
2. சண்பகப்பூ	,,
3. ஏலரிசி	,,
4. கோரோசனை	,,
5. சாத்திரபேதி	,,
6. வெட்டிவேர்	,,
7. கோஷ்டம்	,,
8. மாசிப்பத்திரி	,,
9. விலாமிச்சம்வேர்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளைச் சமனெடை எடுத்து நன்றாக இடித்து வடிகட்டிக்கொண்டு ஆதொண்டைச்சாறு விட்டு ஒரு சாமம் நன்றாக நெகிழ அரைத்துக் குன்றிமணி யளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: வேளைக்கு ஒரு மாத்திரையாக மூன்று தினங்கள் கொடுக்கலாம்.

அனுபானம்: தாய்ப்பால்.

தீரும்நோய்கள்: நீர்க்கணம், மாந்தம் எட்டுவகைக் கணை, நீர்ப்பாடு, கருக்கோளாறு, நாவறட்சி, சுரம், எரிவு, குடற்படுவன் முதலியன குணமாகும்.

8. அரிதார மாத்திரை

1. அரிதாரம் (சுத்தி செய்தது)	9 கிராம்
2. கற்சுண்ணம்	17½ கிராம்
3. சுக்கு	14 கிராம்
4. மிளகு	14 கிராம்
5. திப்பிலி	14 கிராம்
6. கடுக்காய்த்தோல்	7 கிராம்
7. நெல்லிக்காய்த்தோல்	7 கிராம்
8. தான்றிக்காய்த்தோல்	7 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் அரிதாரம், கற்சுண்ணம் நீங்கலாக மற்றைய சரக்குகளை இடித்துப் பொடிசெய்து வடிகட்டி எடுத்துக்கொண்டு அரிதாரம், கற்சுண்ணம் இரண்டையும் குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ அரைத்து பிறகு வடிகட்டிய தூளையும் சேர்த்து கடல்நீர் துளசிச்சாறு, சாதாப்பு இலைச்சாறு இம்மூன்றையும் ஒன்றன்பின் ஒன்றாக இட்டு ஒவ்வொரு சாற்றிலும் மூன்று நாட்கள் அரைத்து மெழுகு பதத்தில் வழித்து, பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி 10 நாட்கள் வெய்யிலில் உலர்த்தி பத்திரப்படுத்தவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நோய்க்குத் தக்கவாறு மாத்திரையைத் தக்க துணை மருந்துகளுடன் சேர்த்துக் கொடுக்க சுரநோய் குணம் அடையும்.

பத்தியம்: புகை, புளி, மோர், நெய் இவைகளை நீக்கி உணவு உட்கொள்ளல் வேண்டும்.

தீரும் நோய்கள்: குளிர்சுரம், வாதசுரம், கபசுரம்.

குறிப்பு: மேற்கூறியவாறல்லாது கண்ட உணவை உட்கொள்ளில் உடல் முக்குற்ற வேறுபாடுற்று சன்னியைத் தோற்றுவிக்கும்.

9. ஆனந்த பைரவ மாத்திரை

1. நாகம்	35 கிராம்
2. சாதிலிங்கம்	17½ கிராம்
3. வெங்காரம்	17½ கிராம்
4. மிளகு	35 கிராம்
5. அரிசி திப்பிலி	35 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் முதலில் நாகத்தை முறைப்படி சுத்தி செய்து புடமிட்டுப் பற்பமாக்கி எடுத்துக் குழியம்மியிலிட்டு பழச்சாறுவிட்டு மற்றையச் சரக்குகளையும் சேர்த்து நன்கு நெகிழ நான்கு மணி நேரம் அரைத்து சிறு பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வெய்யிலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை (காலை, மாலை இருவேளை.)

அனுபானம்: தேன், இஞ்சிச்சாறு.

தீரும்நோய்கள்: சகல சுரங்களும், சன்னி நோய்களும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

10. இந்திராணி மாத்திரை

1. புரசன் வேர்	17½ கிராம்
2. மிளகு	,,
3. கல்லிவேர்	,,
4. கழற்சிவேர்	,,
5. கடுகு	,,
6. கம்பிச்சாரம்	,,
7. பெருங்காயம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை கருங்காலிக் குடிநீர் விட்டு நன்கு நெகிழ மெழுகு பதம் வர அரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், துளசிச்சாறு, அவரையிலைச்சாறு, கல்லுப்பு, சர்க்கரை.

தீரும் நோய்கள்: உள்மூலம், பிறமூலம், பித்தசுரம், குன்மம், வாயு, பல்வலி, நீரடைப்பு, பருத்தசரீரம் முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

குறிப்பு: நோய்க்குத்தக்க அனுபானங்களை மாற்றிக் கொள்ளவேண்டும்.

11. இரச மாத்திரை

1. இரசம்	35 கிராம்
2. கெந்தகம்	,,
3. அப்பிரகம்	,,
4. நாவி	,,
5. இலவம்பிசின்	,,
6. சத்திச்சாரணைவேர்	,,
7. கடுக்காய்த்தோல்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் ஒன்று முதல் நான்கு வரையிலுள்ள மருந்துகளை முறைப்படி சுத்திசெய்து குழியம்மியிலிட்டு மற்றைய சரக்குகளையும் சேர்த்து பழச்சாறு, கஞ்சாக்குடிநீர் முறையே ஒவ்வொன்றும் மூன்று மணிநேரம் விட்டு அரைத்து மெழுகுபதத்தில் வழித்துக் குன்றிமணி பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

அளவு: ஒன்றுமுதல் இரண்டு மாத்திரை (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: மோர், தயிர், தேன்.

தீரும்நோய்கள்: நாட்பட்ட கிராணி, கழிச்சல் முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்க வேண்டும்.

குறிப்பு: ஐந்து ஆறு தினங்களில் நோய் குணமாகும்.

12. இலவங்காதி மாத்திரை

1. பச்சைக்கற்பூரம்	55 கிராம்
2. இலவங்கம்	,,
3. வால்மிளகு	,,
4. சிறுநாகப்பூ	,,
5. கடுகுரோகிணி	,,
6. ஏலரிசி	,,
7. சடாமாஞ்சில்	,,
8. சுக்கு	,,
9. சீரகம்	,,
10. சுத்தி செய்த நேர்வாளம்	55 கிராம்

மேற்கூறப்பெற்ற நேர்வாளம் நீங்கலாக மற்ற சரக்குகள் அனைத்தையும் நன்றாக இடித்துத் தூள்செய்து கல்வத்திலிட்டுப் பிறகு சுத்திசெய்த நேர்வாளத்தையும் அதனுடன் சேர்த்து பொற்றலைக் கரப்பான் சாறுவிட்டு நன்றாக நெகிழ ஒன்பது நாட்கள் அரைத்து மிளகளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் மூன்று மாத்திரைகள் வரை உடல் வன்மைக்கேற்ப கூட்டியும் குறைத்தும் கொடுக்கலாம்.

அனுபானம்: தேன், இஞ்சிச்சாறு, வெந்நீர், தாய்ப்பால்.

தீரும்நோய்கள்: நாட்பட்ட சுரம், மாந்தம், வாதபித்த கப ஆதிக்கத்தினால் ஏற்படும் சுரம், கணைச்சுரம், மலச்சிக்கல் ஆகியவை குணமாகும்.

குறிப்பு: பேதிமாத்திரையாகக் கொள்ளலாம்.

பேதி ஒருவேளை மிகுதிப்படுமானால் சுட்ட வசம்பைப் பொடித்து ஒரு சிட்டிகை அளவு தேனில் குழைத்துக் கொடுக்க பேதியை நிறுத்தும்.

13. இலிங்க மாத்திரை

1. மிளகு	21 கிராம்
2. சுக்கு	10½ கிராம்
3. நேர்வாளம்	3½ கிராம்
4. இலிங்கம்	10½ கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் வாளம், இலிங்கம் இரண்டையும் சுத்திசெய்து கொண்டும், மிளகு, சுக்கு இரண்டையும் தூள் செய்து கொண்டும், குழியம்மியிலிட்டு நொச்சியிலைச்சாறு விட்டு நன்கு நெகிழ ஆறுமணி நேரம் அரைத்து மெழுகு பதத்தில் வழித்து உளுந்து பருமனுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை (ஒரே வேளை-காலை)

அனுபானம்: தேன், சர்க்கரை, வெண்ணெய்.

தீரும்நோய்கள்: பழ மலக்கட்டைப் போக்கி சரீரத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

பத்தியம்: மாத்திரை சாப்பிட்ட நாளில் மட்டும் கஞ்சி சாப்பிடுவது நல்லது.

14. ஏலாதி மாத்திரை

1. கொழுஞ்சி வேர்	17½ கிராம்
2. குப்பைமேனி வேர்	,,
3. கருங்குன்றிவேர்	,,
4. நன்னாரிவேர்	,,
5. சவர்க்காரம் (சுத்தி செய்தது)	17½ கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளை நிழலில் உலர்த்தி இடித்துத் தூள்செய்து வடிகட்டி கருங்காலிக் குடிநீர்விட்டு மூன்றுமணி நேரம் நன்கு நெகிழ அரைத்து வைத்துக்கொண்டு,

1. சாதிக்காய்	7கிராம்
2. கடுக்காய்த்தோல்	3½ கிராம்
3. கோரைக்கிழங்கு	,,
4. வசம்பு	17½ கிராம்
5. வெள்ளைப்பூண்டு	7கிராம்
6. பெருங்காயம்	,,
7. அரத்தை	,,
8. அரிசித்திப்பிலி	7கிராம்

மேற்கூறிய மருந்துகளைப் பொற்றலைக் கரப்பான் சாறுவிட்டு நன்கு நெகிழ மெழுகு பதம் வரும் வரை அரைத்து முன்பு அரைத்து வைத்த மருந்துடன் ஒன்று சேர்த்து மறுபடியும் அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வெய்யிலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், முருங்கைப்பட்டைச்சாறு, சுக்கு, குடிநீர்.

தீரும் நோய்கள்: காசம், சன்னி, வாதசன்னி, பித்த சன்னி.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

15. கஞ்சா மாத்திரை

1. சுக்கு	35 கிராம்
2. அரிசி திப்பிலி	,,
3. ஓமம்	,,
4. சாதிக்காய்	,,
5. சீரகம்	,,
6. கடுக்காய்த்தோல்	,,
7. கஞ்சா	210 கிராம்
8. வெல்லம்	525 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் கஞ்சாவை நன்கு சுத்தி செய்து கொண்டு உலர்த்தி மற்றைய சரக்குகளையும் சேர்த்து இருப்புச் சட்டியிலிட்டு நல்லெண்ணெய் சிறிது சேர்த்து சிறுதீயில் பொன்வறுவலாக வறுத்து உரலிலிட்டு இடித்துத் தூள் செய்து வடிகட்டிக்கொண்டு வெல்லத்தைப் பாகாக்கி வடிகட்டிய தூளைச் சேர்த்து மெழுகு பதத்தில் கிண்டி சுண்டைக்காய் அளவு உள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்தவும்.

அளவு: இரண்டு மாத்திரை (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், தண்ணீர், மோர், பால், வெந்நீர்.

தீரும் நோய்கள்: கிராணி, மாந்தக்கடுப்பு, அதிசாரக் கழிச்சல், மலக்கிராணி முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கவும். உப்பை வறுத்துச் சேர்ததுக்கொள்ளவும்.

குறிப்பு: 1. காலை, மாலை இருவேளையும் பத்து தினங்கள் மருந்தை உட்கொள்ள மேற்கூறப்பட்ட நோய்கள் அனைத்தும் குணமாகும்.

2. கஞ்சாவை முறைப்படி சுத்திசெய்து கொள்ள வேண்டும்.

16. கட்டுவாதி மாத்திரை

1. சாதிக்காய்	10 கிராம்
2. சாதிப்பத்திரி	,,
3. இலவங்கம்	,,
4. ஏலரிசி	,,
5. அதிமதுரம்	,,
6. அதிவிடயம்	,,
7. அபினி	,,
8. கஞ்சா	,,
9. குரோசாணி ஓமம்	,,
10. கோரைக்கிழங்கு	10 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகள் எல்லாவற்றினையும் பசுவின்பாலில் பிட்டவியலாக வேகவைக்கவேண்டும். பின்னர் மேற்படி சரக்குகளை எடுத்து வாழைப்பூச் சாற்றிலும், மாதுளம்பழச்சாற்றிலும் கல்வத்திலிட்டு நன்றாக முறைப்படி நெகிழ அரைத்து மிளகளவாக உருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: நோய் வன்மைக்கேற்ப இரண்டு முதல் ஐந்து மாத்திரை கொடுக்கலாம்.

அனுபானம்: நாட்டுச்சர்க்கரை, தேன்.

தீரும்நோய்கள்: எல்லா வகையான கழிச்சலும் நீங்கும்.

குறிப்பு: அபினியை சுத்திசெய்து வைத்துக்கொண்டு மருந்து அரைக்கும்போது சேர்த்துக்கொள்ளவேண்டும்.

17. கண்டகோடாளி மாத்திரை

1. வெள்ளைப்பாடாணம்	35 கிராம்
2. அவுரியின் காய்க்குழித்தைலம்	70 கிராம்
3. சிப்பிச் சுண்ணம்	35 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் வெள்ளைப்பாடாணத்தை முதலில் முறைப்படி சுத்தி செய்து கொண்டு, சிப்பிச் சுண்ணத்திற்கு அவுரித்தைலம் விட்டு அரைத்து, அரைத்த விழுதை வெள்ளையின் மேல் அப்பிக் கவசம் செய்து (சீலைமண் செய்து) 50 எருவில் புடமிட்டு ஆறியபின் எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு வெள்ளையை நிறுத்தி அதன் எடையில் எட்டில் ஒன்று வெங்காரமும், பத்தில் ஒன்று சுத்தித்த நேர்வாளமும், பத்திலொன்று சவர்க்காரமும் சேர்த்து குழியம்மியிலிட்டு தாழை விழுதின் சாற்றினால் 6 மணிநேரம் நன்கு நெகிழ அரைத்து மூங்கில் அரிசி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக்கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை.

அனுபானம்: மோர், தயிர், காடி.

தீரும்நோய்கள்: 13 வகை சன்னி, அபானவாயு முதலியன குணமாகும்.

பத்தியம்: உப்பு, புளி நீக்கி பால் உணவு உட்கொள்ள வேண்டும்.

குறிப்பு: அவுரியின் சமூலத்தையும் சேர்த்து குழித்தைலம் எடுத்துக்கொள்வது சாலச்சிறந்ததாகும்.

18. கஸ்தூரி மாத்திரை

1. முந்திரிப்பழம்	7 கிராம்
2. பேரீச்சம்பழம்	,,
3. நன்னாரிவேர்	,,
4. பச்சைக்கற்பூரம்	,,
5. வெட்டிவேர்	,,
6. குங்குமப்பூ	,,
7. கஸ்தூரி	,,
8. மான்கொம்பு	,,
9. ருத்திராக்ஷம்	,,

10. சாஸ்திரபேதி	7 கிராம்
11. கோஷ்டம்	,,
12. சீரகம்	,,
13. இலுப்பைப்பூ	,,
14. விலாமிச்சம்வேர்	,,
15. கிராம்பு	,,
16. கோரோசனை	,,
17. அதிமதுரம்	,,
18. பவளம்	,,
19. தங்கரேக்கு	,,
20. முத்து	,,
21. சந்தனத்தூள்	,,
22. அக்கிரகாரம்	,,
23. இலவங்கப்பட்டை	,,
24. வெள்ளித்தூள்	7 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளைக் குழியம்மியிலிட்டு வெற்றிலைச்சாறு விட்டு நன்கு நெகிழ ஆறு மணி நேரம் அரைத்து மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை (காலை, மாலை இருவேளையும்)

அனுபானம்: தேன், வெந்நீர், குடிநீர், தாய்ப்பால்.

தீரும்நோய்கள்: சுரம், சன்னி, சளி, இருமல், குத்திருமல் முதலியன குணமாகும்.

பத்தியம்: குழந்தைகளுக்குக் கொடுத்தால் தாய் புளி நீக்கி ஆகாரம் உட்கொள்ள வேண்டும்.

குறிப்பு: தங்கரேக்கு, வெள்ளித்தூள் முதலியவற்றைப் பற்பமாக்கிச சேர்த்துக்கொள்ளுதல் நல்லது.

19. கபவாத சன்னி மாத்திரை

1. ஏலரிசி	10 கிராம்
2. இலவங்கம்	,,
3. கோரைக்கிழங்கு	,,
4. அதிமதுரம்	,,
5. வெட்டிவேர்	,,
6. கடுகு	,,
7. சுக்கு	,,
8. கொடிமுந்திரிப்பழம்	,,
9. கோரோசனை	,,
10. நன்னாரிவேர்	,,
11. நிலப்பனங்கிழங்கு	,,
12. தாளிசப்பத்திரி	,,
13. சடாமாஞ்சில்	,,
14. சந்தனத்தூள்	,,
15. இலுப்பைப்பூ	,,
16. தேவதாரம்	,,
17. திப்பிலி	,,
18. கடுகுரோகிணி	10 கிராம்

மேற்கண்ட பதினெட்டு சரக்குகளையும் சமனெடை எடுத்து இடித்து, வடிகட்டி அப்பொடியைக் குழியம்மியிலிட்டுச் செவ்விளநீர் விட்டு இரண்டு சாமம் இடைவிடாது நெகிழ அரைத்துப் பின்பு தாய்ப்பால் விட்டு ஆறுமணி நேரம் அரைத்து மெழுகு பதத்தில் வழித்தெடுத்து பெருங்குன்றிமணியளவு மாத்திரையாக உருட்டி நிழலிலுலர்த்தி பதினைந்து நாட்கள் கழித்து உட்கொள்ளவும்.

அளவு: வேளைக்கு ஒரு மாத்திரையாக நாளொன்றுக்கு இரண்டுவேளை சாப்பிடவும்.

அனுபானம்: தாய்ப்பாலிலோ அல்லது தேனிலோ தர விடாச்சுரமும், நாள்பட்ட சுரமும் குணமடையும். அம்மையார் கூந்தல் குடிநீரில் கொடுக்க மற்ற நோய்கள் குணமடையும்.

தீரும் நோய்கள்: நாட்பட்ட சுரம், விடாக்காய்ச்சல், பதின்மூன்று வகை சன்னி, விடாத்தோஷம், ஆமசுரம், கணைச்சுரம் முதலியன குணமடையும்.

20. கபாட மாத்திரை

1. சாதிலிங்கம்	100 கிராம்
2. அபின்	,,
3. வெங்காரம்	,,
4. அதிவிடயம்	,,
5. சாதிக்காய்	,,
6. மிளகு	,,
7. சுக்கு	,,
8. முள் இலவம்பிசின்	,,
9. பெருமரப்பட்டை	,,
10. காட்டாத்திப்பூ	,,

மேற்கூறப்பட்ட சரக்குகளில் கடைச்சரக்குகளை மட்டும் உரலிலிட்டு நன்றாக இடித்து வடிகட்டிப் பொடித்து எடுத்துக்கொண்டு ஏனைய மூன்று சரக்குகளாகிய சாதிலிங்கம், அபின், வெங்காரம் இவைகளை சுத்திசெய்து கொண்டு கல்வத்திலிட்டு நன்றாக நெகிழ அரைத்து அதனுடன் மேலே இடித்த பொடியை சேர்த்து,

வில்வவேர்
குடப்பாலைவேரின் பட்டை
கோரைக்கிழங்கு
காசாம்வேர்ப்பட்டை (காயாம்பூ பட்டை)
சிறுகாஞ்சோறிவேர்

ஆகிய சரக்குகளைத் தனித்தனியே குடிநீரிட்டு ஒவ்வொரு குடிநீரிலும் 3 மணி நேரம் நன்கு நெகிழ மேற்கூறிய மருந்தினை அரைத்து அடைதட்டி ஓட்டிலிட்டு அடுப்பிலேற்றி வெந்தயக்குடிநீர் 3 மணி நேரம் அடைக்குச் சுருக்கிட்டு எடுத்துக் கல்வத்திலிட்டு கஞ்சாவின் குடிநீர்விட்டு நன்றாக 3 மணி நேரம் அரைத்து வழித்து சிறு சுண்டைக்காய் அளவாக உருட்டி நிழலிலுலர்த்திக் கொள்ளவும்.

அளவு: வேளைக்கு ஒரு மாத்திரை (காலை, மாலை)

அனுபானம்: நோய்க்கேற்ற அனுபானம் அறிந்து நோயாளிகட்கு மாத்திரை கொடுத்தல் வேண்டும். தேன், வெந்நீர்.

தீரும்நோய்கள்: கிராணி, அதிசாரம், கழிச்சல் முதலிய நோய்கள் நீங்கும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

21. கருவாழை மாத்திரை

1. கருவாழை வேர்	17½ கிராம்
2. நொச்சிவேர்	,,
3. வாயுவிளங்கம்	,,
4. மிளகு	,,
5. வெள்ளுள்ளி	,,
6. சுக்கு	,,
7. பெருங்காயம்	,,
8. ஓமம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளைக் குழியம்மியிலிட்டு நீர்முள்ளிச்சாறு விட்டு 6 மணி நேரம் நன்கு நெகிழ மெழுகு பதம் வருமளவு அரைத்து மஞ்சாடி (குன்றி) அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வெய்யிலில் உலர்த்திப் பத்திரப் படுத்தவும்.

அளவு: ஒன்று முதல் நான்கு மாத்திரை (காலை,மாலை இருவேளை)

அனுபானம்: துளசிச்சாறு, காடி.

தீரும்நோய்கள்: வாதசுரம், கபாதிக்கத்தால் உண்டாகிய சுரம், இருமல், பித்தம், பித்தசுரம் முதலியவை எட்டு நாட்களில் குணமடையும்.

பத்தியம்: புளி நீக்கவேண்டும்.

22. கற்பூர மாத்திரை

1. பச்சைக்கற்பூரம்	10 கிராம்
2. சுத்திசெய்த கந்தகம்	,,
3. இந்துப்பு	,,
4. இலவங்கம்	,,
5. சாதிக்காய்	,,
6. சாதிப்பத்திரி	,,

மேற்கூறப்பெற்ற ஆறு சரக்குகளையும், கல்வத்தி லிட்டு எலுமிச்சம்பழச் சாற்றால் 3 மணிநேரம் அரைத்து மெழுகு பதத்தில் உளுந்தளவு மாத்திரையாக உருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: வேளைக்கு ஒரு மாத்திரை (கலை, மாலை இருவேளை0

அனுபானம்: இஞ்சிச்சாறு, சுக்கு, சர்க்கரை.

தீரும்நோய்கள்: ஊனைப்பற்றிய சுரம் 6 மணி நேரத்தில் குணமடையும்.

பத்தியம்: சிறுகுழந்தைகட்கு மாத்திரை கொடுத்தால் தாய், புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

23. காளிகாதேவி மாத்திரை

1. நீலிவேர்	17½ கிராம்
2. சாரணைவேர்	,,
3. கீழ்க்காய்நெல்லி வேர்	17½ கிராம்
4. வெள்ளருகுவேர்	,,
5. துளசிவேர்	,,
6. சாதிக்காய்	,,
7. கிராம்பு	,,
8. ஏலரிசி	,,
9. வால் மிளகு	,,

10. சிற்றரத்தை	17½ கிராம்
11. சுக்கு	,,
12. பெருங்காயம்	,,
13. திப்பிலி	,,

மேற்கூறப்பெற்ற ஐந்து வேர்களையும் பாலைச்சாறு விட்டு நன்கு நெகிழ 6 மணி நேரம் அரைத்துக்கொண்டு மற்றைய மருந்துகளைத் தூள்செய்து வடிகட்டி அதனுடன் சேர்த்து 6 மணி நேரம் அரைத்து சுண்டைக்காய் அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக்கொள்க.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: காடி, லேகியம், குடிநீர்.

தீரும்நோய்கள்: குடல்வாயு, உடற்குத்து, இடுப்புவலி, காமாலை, வாதசூலை, பித்த சன்னி, கண்டமாலை, பெருவயிறு, கெண்டை முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

24. குளிர்காய்ச்சலுக்கு மாத்திரை

1. சிறுகுறிஞ்சாவேர்	17½ கிராம்
2. சாரணைவேர்	,,
3. அமுக்கிராவேர்	,,
4. கவிழ்தும்பை வேர்	,,
5. பூண்டு	,,
6. பெருங்காயம்	,,
7. அரிசி திப்பிலி	,,
8. சீரகம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை சுத்தம்செய்து பூண்டின் தோல் போக்கி ஒன்றன்பின் ஒன்றாகக் குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ மெழுகு பதத்திற்கு வரும் வரையில அரைத்து பயறு அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வெய்யிலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் நான்கு மாத்திரை (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: வேப்பம்பட்டை, சுக்கு, திப்பிலி, அரத்தை இந்நான்கையும் சமனெடை எடுத்துக் குடிநீர் இட்டு இக்குடிநீரில் மேற்படி மாத்திரையை சாப்பிடவேண்டும்.

தீரும்நோய்கள்: குளிர் காய்ச்சல், உடற்கடுப்பு, சீதள சுரம், இருமல், நாவறட்சி, கணை முதலியன குணமாகும்.

பத்தியம்: புளிநீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

25. கோரோசனை மாத்திரை

1. மாசிக்காய்	10கிராம்
2. திப்பிலி	,,
3. கோரோசனை	,,
4. கோஷ்டம்	,,
5. கருஞ்சீரகம்	,,
6. அக்கிரகாரம்	,,

மேற்கூறப்பட்ட சரக்குகளை சமனெடை எடுத்து இடித்துத் தூளாக்கிக் கல்வத்திலிட்டு தாய்ப்பால் விட்டு நன்றாக நெகிழ அரைத்துக் குன்றிமணி அளவாக உருட்டி மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: வேளைக்கு ஒரு மாத்திரை (காலை, மாலை 5நாட்கள்)

அனுபானம்: தாய்ப்பால்.

தீரும்நோய்கள்: மாந்தம், சளி, தொண்டைக்கம்மல் ஆகியவை நீங்கும்.

பத்தியம்: தாய், புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

26. சத்தி மாத்திரை

1. சிறுகடுகு	9 கிராம்
2. நேர்வாளம் (சுத்திசெய்தது)	3¼ கிராம்
3. இலிங்கம்	,,
4. மனோசிலை	,,

மேற்கூறிய சரக்குகளைக் கல்வத்திலிட்டு கடலைப் புளிப்புச்சாறு 3 பங்கு விட்டு 10 நாட்கள் அரைக்கவும். அவ்வாறே பாகல் இலைச்சாறு 10 நாட்கள் அரைக்கவும். இருபது நாட்களுக்குப் பின் பயறளவுள்ள மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: இம்மாத்திரையை ஓமக் குடிநீருடன் கொடுக்க சன்னி போகும். முன்னியிலைக் குடிநீரும், வன்னியிலைக் குடிநீரும் மும்மூன்று நாள் கொடுக்கவும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

27. சன்னி காந்தலுக்கு மாத்திரை

1. கொடிவேலிவேர்	17½ கிராம்
2. குப்பைமேனி வேர்	,,
3. குமரிவேர்	,,
4. அமுக்கிராவேர்	,,
5. செங்கத்தாரிப்பட்டை	,,
6. பருத்திவேர்	,,
7. ரசகற்பூரம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளைக் குழியம்மியிலிட்டு 6மணி நேரம் (தாய்ப்பாலிட்டு) நன்கு நெகிழ அரைத்துத் திப்பிலியைப் போல் மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தாய்ப்பால், நொச்சிச்சாறு, புன்னைச்சாறு, தேன்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

தீரும்நோய்கள்: விசார சன்னி, சுகசன்னி, காந்தல் மற்றுமுள்ள சன்னிகள் தீரும்.

குறிப்பு: கஞ்சி, பால் உட்கொள்ளுவதே சாலச்சிறந்த தாகும். (தாய்ப்பால் கிடைக்காதபோது பசும்பால்விட்டு அரைக்கவும்.)

28. சன்னி சிலேட்டுமத்திற்கு சாதிலிங்க மாத்திரை

1. சாதிலிங்கம்	35 கிராம்
2. வேங்கைப்பட்டை	350 கிராம்
3. நவச்சாரம்	35 கிராம்
4. வசம்பு	,,
5. பெருங்காயம்	,,
6. இஞ்சிச்சாறு	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் வேங்கைப்பட்டையை எடுத்துக் குழித்தைலம் இறக்கிக்கொள்ளவும்.

இத்தைலத்தைக் கொண்டு நவச்சாரத்தை நன்கு நெகிழ அரைத்து இலிங்கத்திற்குக் கவசம் செய்து ஐந்து எருவில் புடமிட்டெடுக்க இலிங்கம் கட்டாகிவிடும். இக்கட்டை குழியம்மியிலிட்டு வசம்பு, பெருங்காயம் இரண்டையும் சேர்த்து இஞ்சிச்சாறு விட்டு நன்கு நெகிழ மெழுகு பதத்தில் அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை.

அனுபானம்: கிராம்புக் குடிநீர், மிளகுக்குடிநீர்.

தீரும்நோய்கள்: வாதசுரம், சன்னி, கபம், வாய்வு, குத்து, திரட்டு வாதம், காசசுரம், காமாலை, தாகம், வீக்கம் முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவும்.

29. சன்னி, நாவறட்சி, பித்தம், உடல்நோய், கிரிச்சரம் இதற்கு விஷ்ணு மாத்திரை

1. அரிநெல்லிவேர்	17½ கிராம்
2. கீழ்க்காய்நெல்லிவேர்	,,
3. சிறுதும்பைவேர்	,,
4. பெருந்தும்பைவேர்	,,
5. கவிழ்தும்பைவேர்	,,
6. நொச்சிவேர்	,,
7. சதகுப்பை	,,
8. ஓமம்	,,
9. சுக்கு	,,
10 சிறுதிப்பிலி	,,
11. மிளகு	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை ஒன்று சேர்த்து நன்கு நெகிழ மெழுகு பதத்தில் அரைத்து குன்றிமணியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக்கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை.

அனுபானம்: தாய்ப்பால், தண்ணீர், சுக்கு குடிநீர்.

தீரும்நோய்கள்: பால் உண்ணாத குழந்தைகளுக்கும், வாயு நோய்களுக்கும் உயர்ந்த மாத்திரையாகக் கொள்ளலாம்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

30. சாதிக்காய் மாத்திரை

1. சாதிக்காய்	17½ கிராம்
2. ஊமத்தை விதை	,,
3. வெளுச்சைப் பிசின்	,,
4. இலவங்கம்	,,
5. மாம்பருப்பு	,,
6. விளாம்பிசின்	,,
7. அதிவிடயம்	,,
8. பெருமரப்பட்டை	22 கிராம்
9. இந்துப்பு	25 கிராம்
10. அபின் (சுத்தி செய்யவும்)	9 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளைக் குழியம்மியிலிட்டு ஊமத்தம் சாறுவிட்டு நன்கு நெகிழ மெழுகுபதம் வரும் வரையில் அரைத்து கடலைப் பருமனுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டுவரை. (காலை, மாலை இரண்டுவேளையும்)

அனுபானம்: தேன், தயிர், மோர்.

தீரும்நோய்கள்: கடுப்புகள், வயிற்றுப்பொருமல், அதிசாரம், கிராணி, கழிச்சல் முதலியன நிவர்த்தியாகும்.

31. சித்தன் மாத்திரை

1. மடல் தளாகம்	35 கிராம்
2. எட்டிவிதை குழித்தைலம்	140 கிராம்
3. சிப்பிச்சுண்ணம்	35 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் மடல் தாளகத்தை முறைப்படி சுத்திசெய்து சிப்பி சுண்ணத்திற்கு எட்டிவிதைத் தைலம் விட்டு நன்கு நெகிழ அரைத்து தாளகத்திற்கு அங்கி பூட்டி சீலைமண் செய்து வெய்யிலில் நன்கு காய்ந்த பிறகு கோழிப் புடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும்.

இப்பற்பத்தை எடுத்து அரைத்து இதனுடன் வங்க பற்பம் ஒரு விராகன் சேர்த்து 36 மணி நேரம் கோழி முட்டையின் வெண்கருவிட்டு நன்கு நெகிழ அரைத்து மெழுகுபதத்தில் வழித்து குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை. (காலை,மாலை இருவேளை.)

அனுபானம்: அத்திவேர் குடிநீர், சுக்கு குடிநீர்.

தீரும்நோய்கள்: வாதத்தால் வந்த நோய்கள் யாவும் குணமடையும். விந்து கட்டி உடல் பலமடையும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கவும்.

32. சிராவண மாத்திரை

1. வெடியுப்பு	9 கிராம்
2. கல்லுப்பு	,,
3. வளையலுப்பு	,,
4. சீனாக்காரம்	,,
5. பூநீருப்பு	,,
6. கடுக்காய்த்தோல்	17½ கிராம்
7. அரிசித்திப்பிலி	,,
8. மிளகு	,,
9. இரசம்	9 கிராம்
10. கெந்தகம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளின் கூட்டுத்தொகைக்கு முக்கால் பங்கு கருநொச்சி இலைச்சாறுவிட்டு நன்கு நெகிழ இரண்டு வாரம் அரைத்து பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வெய்யிலில் உலர்த்தி பத்திரப்படுத்தவும்.

அளவு: ஒன்று முதல் நான்கு மாத்திரை (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: ஓமக்குடிநீர், இஞ்சிக்குடிநீர்.

தீரும்நோய்கள்: தனுர்வாயு, சூதகவாயு குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவும்.

குறிப்பு: 1. இம்மருந்திற்கு இலந்தைக் காய்ச்சாறும், மிளகுக் குடிநீரும் 6 நாட்கள் கொடுக்க முறிவாகும்.

2. இரசம், கெந்தகம் இரண்டையும் முறைப்படி சுத்திசெய்து சேர்த்துக்கொள்ளவேண்டும்.

33. சுக சன்னி மாத்திரை

1. செம்முள்ளிவேர்	17½ கிராம்
2. இரச பற்பம்	,,
3. காவாளை(கொழுஞ்சி)வேர்	,,
4. குன்றிவேர்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளைக் குழியம்மியிலிட்டு தாமரைச் சாற்றினால் நன்கு நெகிழ அரைத்து திப்பிலியைப் போலுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்க.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை.

அனுபானம்: தேன், இஞ்சிச்சாறு.

தீரும்நோய்கள்: வாதம், வாயு, மேகம், வாத சன்னி, ஆடுசுரம், பாடுசுரம், சூலைக்கட்டு முதலியன குணமாகும்.

பத்தியம்: புளிநீக்கி உணவு உட்கொள்ளவும்.

34. சுகபேதி மாத்திரை

1. சுத்தி செய்த நேர்வாளம்	35
2. நீர்வற்றிய தேங்காய்	

மேற்கூறப்பெற்ற சுத்தித்த வாளத்தை தேங்காயின் கண் திறந்து தேங்காய்க்குள் அடைத்து பத்துத் திங்கள் வைத்திருந்து அத்தேங்காயை உடைத்து சிரட்டையைப் போக்கி குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ மெழுகு பதத்தில் அரைத்து குன்றி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்தவும்.

அளவு: ஒரு மாத்திரை.

அனுபானம்: தண்ணீர்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

குறிப்பு: மேற்கூறப்பெற்ற மாத்திரையில் ஒன்று எடுத்து அதிகாலையில் தண்ணீருடன் குழப்பி வலது தோள் பட்டையில் பூசவும். சுகமாக பேதியாகும்.

35. சுப்பிரமணியர் மாத்திரை

1. அருகம்வேர்	17½ கிராம்
2. தூதுவளை வேர்	,,
3. அமுக்கரா வேர்	,,
4. தழுதாழை வேர்	,,
5. வெள்ளைப்பாடாணம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் முதலில் வெள்ளைப் பாடாணத்தை முறைப்படி சுத்தி செய்து குழியம்மியிலிட்டு மற்றைய மருந்துகளையும் ஒன்றுசேர்த்து நல்வேளைச்சாறு விட்டு நன்கு நெகிழ அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை. (காலை, மாலை இருவேளையும்)

அனுபானம்: தேன், சர்க்கரை, இஞ்சிச்சாறு.

தீரும் நோய்கள்: சாகும்போது கபம் அடைந்து இழுப்பதையும், நாக்கில் சுழன்று நிற்கும் கபத்தையும், பதினெட்டு வகை சன்னியையும் குணப்படுத்தும்.

பத்தியம்: புளி, புகை, உப்பு, வெங்காயம், பெருங்காயம், புலால், அவரை, துவரை, சீரகம் முதலியவற்றை நீக்கி உட்கொள்ளவேண்டும்.

36. சுரக்கோடாலி மாத்திரை

1. (சுத்திசெய்த) வெள்ளைப்பாடாணம்	10 கிராம்
2. (சுத்தி செய்த) இரசம்	10 கிராம்
3. (சுத்தி செய்த) கௌரி பாடாணம்	10 கிராம்
4. மிளகு	30 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளைக் கல்வத்திலிட்டு ஊமத்தஞ்சாறு, கொம்பு பாகற்காய்ச்சாறு விட்டு நன்றாக நெகிழ 12 மணி நேரம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரை செய்து வெய்யிலிற் காயவைத்து எடுத்துக்கொள்ளவும்.

அளவு: வேளைக்கு ஒருமாத்திரை.

அனுபானம்: மோர், காடி, இளநீர்.

தீரும்நோய்கள்: சுரங்கள், முறை சுரம் குணமடைவதுடன் கபத்தினால் அடங்கிய மூர்ச்சையும் மீட்பதற்கு உயர்ந்த மாத்திரையாகும்.

பத்தியம்: இச்சா பத்தியம்.

37. தண்ட மாத்திரை

1. இரசம்	4½ கிராம்
2. கெந்தகம்	,,
3. நேர்வாளம்	,,
4. திப்பிலி	,,

இவைகளின் கூட்டுத்தொகைக்கு மூன்று பங்கு வெற்றிலைச்சாறு விட்டு ஐந்து நாட்கள் அரைக்கவும். மாதுளைச்சாறு 3 பங்கு விட்டு ஐந்து நாட்கள் அரைக்கவும். பதினைந்து நாட்கள் அரைத்தபின்னர் அளவுப்படி மாத்திரை செய்து கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரைகள். (தினமும் காலையில் மட்டும் மூன்று நாட்களுக்கு மட்டும் கொடுக்கவும்.)

தீரும்நோய்கள்: ஓமக்குடிநீரில் கொடுக்க பைத்திய நோய், சன்னி இவை நீங்கும்.

முறிப்பு: உள்ளிச்சாறு கொடுக்கவும். பின்னர் 6 நாட்கள் இஞ்சிச்சாறு கொடுக்கவும்.

பத்தியம்: இச்சா பத்தியம்.

38. தும்பன மாத்திரை

1. வாலை ரசம்	9 கிராம்
2. இலிங்கம்	3 கிராம்
3. வெங்காரம்	17½ கிராம்
4. கிராம்பு	,,
5. கஞ்சா	,,
6. முருங்கை வித்து	,,
7. சாதிக்காய்	,,
8. கோரைக்கிழங்கு	,,
9. சாதிப்பத்திரி	,,
10. பூனைக்காலி வித்து	,,
11. சாரப்பருப்பு	,,
12. பூமிசர்க்கரைக் கிழங்கு	,,
13. நிலப்பனங்கிழங்கு	,,

மேற்கூறப்பெற்ற வாலை ரசம், ஜாதி லிங்கம் இரண்டையும் குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ அரைத்துக்

கொண்டு மற்றைய மருந்துகளையும் உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து துணியில் வடிகட்டி குழியம்மியில் அரைத்த மருந்தையும் ஒன்று சேர்த்து ஒரு முற்றின தேங்காயின் கண் திறந்து, உள்ளிருக்கும் நீரைப்போக்கி அதற்குள் மருந்தை வைத்து மூடி, தேங்காயைப் பசுவின் சாணிக்குள் வைத்து 10 எருவில் புடம்போட்டு சிரட்டைப்பிடித்து, எரியும்போது தேங்காயை வெளியில் தள்ளிவிடவேண்டும். நன்றாக ஆறியபின் சிரட்டையைப் போக்கி உள்ளிருக்கும் மருந்தை தேங்காயுடன் குழியம்மியிலிட்டு 9 மணி நேரம் முருங்கைப்பூச் சாற்றினால் நன்கு நெகிழ மெழுகு பதத்தில் அரைத்துக் கழற்சிக்காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டி உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: சர்க்கரை, பால்.

தீரும்நோய்கள்: விந்து தம்பனமாகும். மதுமேகம் முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கவும்.

39. திரிதோட மாத்திரை

1. கிரந்தி நாயகம் வேர்	17½ கிராம்
2. தைவேளை வேர்	,,
3. நிலப்பனங்கிழங்கு	,,
4. கருநொச்சி வேர்	,,
5. குமிரிவேர்	,,
6. சுக்கு	,,
7. சிறுதிப்பிலி	,,
8. வால்மிளகு	,,
9. சிற்றரத்தை	,,
10. பெருங்காயம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை வெள்ளாட்டு நீர்விட்டு நன்கு நெகிழ மெழுகு பதத்தில் அரைத்து மஞ்சாடி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி பத்திரப் படுத்தவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: இஞ்சிச்சாறு, தேன், பால்.

தீரும் நோய்கள்: குளிர்சுரம், சன்னி, குட்டம், கிரந்தி, பிரமேகம், சதையிலுள்ள நோய்கள் முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, உப்பு, கசப்பு முதலியவற்றை நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

40. தூதுவளை மாத்திரை

1. தூதுவளை வேர்	17½ கிராம்
2. பேய்ப்புடல் வேர்	,,
3. நல்லவேளை வேர்	,,
4. அரிசி திப்பிலி	,,
5. ஓமம்	,,
6. சுக்கு	,,
7. வால்மிளகு	,,
8. பெருங்காயம்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளை சுத்தித்து குழியம்மியிலிட்டு தூதுவளைக் குடிநீர்விட்டு 6 மணி நேரம் நன்கு நெகிழ மெழுகு பதம் வரும் வரை அரைத்து பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வெய்யிலில் உலர்த்தவும்.

அளவு: ஒன்று முதல் நான்கு மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: குளிர்சுரத்திற்கு சொல்லப்பட்ட குடிநீர், இஞ்சிச்சாறு.

தீரும் நோய்கள்: விட்டு விட்டு வரும் முறை சுரம், நாவறட்சி, கணை, கணைச்சுரம் முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

41. நமன் மாத்திரை

1. சிறுசின்னி வேர்	35 கிராம்
2. கொழிஞ்சிவேர்	,,
3. தொட்டால் சிணுங்கிவேர்	,,
4. நில ஆவாரை	,,
5. வால் மிளகு	,,
6. கடுக்காய்த்தோல்	,,
7. அரத்தை	,,
8. சுக்கு	,,
9. பெருங்காயம்	,,
10. பூண்டு (உரித்தது)	,,
11. கம்பிச்சாரம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை வெள்ளாட்டு நீரில் ஐந்துநாழிகை நன்கு நெகிழ மெழுகு பதம் வருமாறு அரைத்து துவரை அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வெய்யிலில் உலர்த்திக்கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: துளசிச்சாறு, பேய்ப்புடல்.

தீரும்நோய்கள்: பாண்டு, சோகை, நீரடைப்பு, பித்த நோய்கள், உள்சுரம், குளிர்சுரம் முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

42. பஞ்சீகரண மாத்திரை

1.	(சுத்தி செய்த) அரிதாரம்	52½ கிராம்
2.	,, சவ்வீரம்	44 கிராம்
3.	,, கௌரி	35 கிராம்
4.	,, வெள்ளைப்பாடாணம்	26 கிராம்
5.	,, இலிங்கம்	17½ கிராம்

மேற்கூறப்பெற்ற ஐந்து சரக்குகளையும் முறையே சுத்திசெய்து குகையில் வைத்து உருக்கி கல்வத்திலிட்டு பொற்றலைக்கரப்பான் சாறுவிட்டு நன்றாக நெகிழ 12 மணி நேரம் அரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: வேளைக்கு 1 மாத்திரை.

அனுபானம்: திரிகடுகு சூரணம், தேன் இவை யிரண்டுடன் 1 மாத்திரையை நன்றாக குழைத்து உட்கொள்ள வேண்டும்.

நீரும்நோய்கள்: வாயு, குன்மம், நெஞ்சடைப்பு, பிரமை, மூர்ச்சை, எலும்புருக்கி, வாந்தி, ஏப்பம், சுரம், தொண்டைக்கம்மல், விஷபாகம், காமாலை, சோகை, சன்னி, வலிப்பு முதலியன குணமாகும்.

குறிப்பு: நோய்களின் தன்மைக்கும் உடல் வன்மைக்கும் ஏற்ப மருந்தின் அளவையும் அனுபானங்களையும் மாற்றியும் கூட்டியும் குறைத்தும் கொடுக்கலாம். மேற்கூறப் பெற்ற மருந்துகளை கோழிமுட்டை வெண்கருவிட்டு அரைத்துப் புடம் போட்டு எடுத்து மாத்திரைகளாகச் செய்தும் உபயோகிக்கலாம்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்குக.

43. பச்சைக் கற்பூர மாத்திரை

1. பச்சைக்கற்பூரம்	20 கிராம்
2. இலவங்கப்பட்டை	,,
3. சாதிக்காய்	,,
4. (சுத்தி செய்த) நேர்வாளம்	60 கிராம்

மேற்கூறப்பெற்ற நான்கு சரக்குகளையும் ஒன்றாகக் கலந்து குமரிச்சாறு (சோற்றுக்கற்றாழை) விட்டு நன்றாக நெகிழ 12 மணி நேரம் அரைத்து உளுந்தளவாக உருட்டி மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: ஒருமாத்திரை.

அனுபானம்: சர்க்கரை, தேன், தாய்ப்பால்.

தீரும்நோய்கள்: சர்க்கரையுடன் சேர்த்துக் கொடுத்தால் மூன்றே முக்கால் நாழிகையில் பேதியாகும். சுரமும் குளிர் சுரமும் நீங்கும்.

44. பச்சைக்கற்பூர மாத்திரை (வேறு)

1. பச்சைக் கற்பூரம்	10 கிராம்
2. வீரம்	,,
3. பூரம்	,,
4. லிங்கம்	,,
5. இரசம்	,,
6. இரச சிந்தூரம்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளனைத்தையும் நன்றாகச் சுத்திசெய்து எடுத்துக் கல்வத்திலிட்டுத் தாய்ப்பாலால் பன்னிரண்டு மணி நேரம் நன்றாக நெகிழ அரைத்துக் குன்றிமணி அளவாக மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

தீரும்நோய்: சூலை, கிரந்தி, தோடம் ஆகிய நோய்கள் 7நாட்களிலும், சன்னி நோய் ஒரு நொடியிலும் குணமடையும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கவேண்டும்.

45. படர்தாமரை - சக்தி குன்ம மாத்திரை

1. நெருஞ்சில்வேர்	17½ கிராம்
2. கடுக்காய்த்தோல்	,,
3. தைவேளைவேர்	,,
4. தும்பைவேர்	,,

மேற்கூறப்பெற்ற வேர்களை கருங்காலிக் குடிநீர்விட்டு 6 மணி நேரம் நன்கு நெகிழ அரைத்து உலர்த்திவைத்துக் கொள்ளவும்.

1. சுக்கு	17½ கிராம்
2. அரிசி திப்பிலி	,,
3. வால் மிளகு	,,
4. அரத்தை	,,
5. மிளகு	,,
6. கோரோசனை	,,
7. கழற்சிக்கொழுந்து	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை இடித்துத் தூள்செய்து துணியில் வடிகட்டி குழியம்மியிலிட்டு பசுங்கன்று நீர்விட்டு ஆறுமணி நேரம் நன்கு நெகிழ மெழுகு பதத்தில் அரைத்து மேற்படி உலரவைத்த தூளையும் சேர்த்து நன்றாக அரைத்து உளுந்தளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வெய்யிலில் உலர்த்திக்கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய்.

தீரும்நோய்கள்: படர்தாமரை, பித்தசுரம், சத்தி குன்மம் முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவும்.

46. பரசு மாத்திரை

1. தாளகம்	½ பங்கு
2. நாபி	¼ பங்கு
3. இலவங்கம்	1 பங்கு
4. ஏலம்	1 பங்கு

இவைகளின் கூட்டுத்தொகைக்கு இரு பங்கு பச்சை மஞ்சள் கிழங்குச்சாறு விட்டு எட்டு நாட்கள் அரைக்கவும்.

இதனை பயறளவுள்ள மாத்திரை செய்து 15 நாட்கள் வெய்யிலில் காயவைக்கவும். தண்ணீரை அனுபானமாக்கிக் கொண்டு இம்மாத்திரையைக் கொடுக்கவும். வாயு நோய் நீங்கும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சர்க்கரை.

தீரும் நோய்கள்: வாயு நோய்கள் யாவும் குணமாகும்.

பத்தியம்: மோர், தயிர், புளிப்புப் பொருட்கள் ஆகாது. வெந்தயத்தால் மருந்தை முறிக்கவும். பின்னர் வேம்புக் குடிநீர் எட்டுநாள் குடிக்கவும்.

47. பாச மாத்திரை

1. மனோசிலை	9 கிராம்
2. இலிங்கம்	,,
3. மிளகு	,,
4. சுக்கு	,,
5. திப்பிலி	,,

இவைகளின் கூட்டுத்தொகைக்கு இருபங்கு அகத்தி யிலைச்சாறு விட்டு 8 நாட்கள் அரைக்கவும். பின்பு வில்வ இலைச்சாறு இருபங்கு விட்டு 8நாட்கள் அரைக்கவும். அளவோடு உருட்டி மாத்திரை செய்து எட்டு நாள் வெயிலில் காயவைக்கவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை.

தீரும்நோய்கள்: பல் வலியால் உண்டாகும் சுரத்திற்குக் கரும்புச் சாற்றில் கொடுக்கவும்.

பத்தியம்: புளி நீக்கி உண்ணவும். கிழங்கு வகைகள் கூடாது. சதகுப்பைக் குடிநீர் மூன்று நாட்கள் கொடுக்க முறிப்பாகும்.

48. பூபதி மாத்திரை

1. சந்தனம்	13. கல்நார்
2. நன்னாரி	14. திப்பிலி
3. புளியங்கொட்டைத்தோல்	15. இருவாட்சிவேர்
4. சாத்திரபேதி	16. சீரகம்
5. கோரைக்கிழங்கு	17. கருஞ்சீரகம்
6. தாமரைவளையம்	18. இலவங்கப்பட்டை
7. சிறுகீரைவேர்	19. ஏலரிசி
8. நாயுருவி வேர்	20. உருத்திராட்சவித்து
9. வல்லாரைக்கீரை	21. கோரோசனம்
10. சாதிக்காய்	22. பொன்னாங்காணிவேர்
11. சாதிப்பத்திரி	23. குப்பைமேனி வேர்
12. சண்பகப்பூ	24. மான்கொம்பு

மேற்கண்ட சரக்குகளை வகைக்கு 1 பலம் (35 கிராம்) முறைப்படி நன்றாக இடித்து தூள்செய்து வடிகட்டிக் குழியம்மியிலிட்டு வல்லாரைச்சாறு விட்டு 4 சாமமும், பொன்னாம்காணி சாறுவிட்டு 4 சாமமும் நன்கு மெழுகு பதத்திலரைத்து தேற்றான்விதை அளவாக உருட்டி மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: வேளைக்கு ஒரு மாத்திரை.

அனுபானம்: நோய்க்கேற்ற அனுபானங்களில் தரவேண்டும்.

தீரும்நோய்கள்: குழந்தைகட்கு ஏற்படும் எட்டு வகைக் கணைகளும் மாந்தமும் குணமாகும்.

பத்தியம்: தாய், புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

49. மதன காமேசுர மாத்திரை

1. மதனகாமப்பூ	35 கிராம்
2. கிராம்பு	,,
3. சாதிக்காய்	,,
4. மராட்டி மொக்கு	,,
5. தங்கபற்பம்	10 கிராம்
6. சாம்பிராணி பதக்கம்	35 கிராம்
7. ஆலம்பால்	,,
8. முருங்கவித்து	,,
9. அரசம்பட்டை	,,
10. அத்திவித்து	,,
11. ஆலம்பட்டை	,,
12. அதிமதுரம்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளைக் குழியம்மியிலிட்டு முருங்கைப்பூச் சாறுவிட்டு நன்கு நெகிழ அரைத்து சிறுசுண்டைக்காயளவுள்ள மாத்திரைகளாச உருட்டி உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பசும்பால்.

தீரும் நோய்கள்: தாது அதிகமாகவும், விந்து கட்டும். யானை பலமுண்டாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

50. மன்மத சிந்தாமணி மாத்திரை

1. வாலை ரசம்	7 கிராம்
2. பரங்கிப்பட்டை	,,
3. சிறுதிப்பிலி	,,
4. இலவங்கம்	,,
5. கரும்பு வெல்லம்	14 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகள் யாவற்றையும் குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ மெழுகு பதத்தில் அரைத்து முக்கால் விராகனெடை அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி உலர்த்திக்கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை. (காலை, மாலை இரண்டு வேளை)

அனுபானம்: சர்க்கரை, பால்.

தீரும் நோய்கள்: மேகவெள்ளை, கிரந்தி, அரையாப்பு சூலை, உடலில் உள்ள தோல் நோயும் குணமாகும்.

பத்தியம்:

1. உப்பு, புளி, புகை, போகம் கூடாது.

2. பால் உணவு உட்கொள்ளவேண்டும்.

3. 15 நாட்கள் மருந்து சாப்பிட்ட பிறகு மிளகு தேய்த்துத் தலைமுழுகி புளியை கட்டு உப்பை வறுத்து பத்தியத்தை முறித்துக்கொள்ளவேண்டும்.

4. வாய்வேக்காளம் இருந்தால் நாளடைவில் குணமாகும். நோயாளிகள் பயப்படக்கூடாது.

5. பால், நெய், தயிர், வெண்ணெய் அதிகமாக சேர்த்துக் கொள்ளவேண்டும்.

51. முக்கடுகாதி மாத்திரை

1. சுக்கு (தோல் சீவி சுத்தி செய்தது)	4 கிராம்
2. மிளகு	,,
3. திப்பிலி	,,
4. ஓமம்	,,
5. பூண்டு (உரித்தது)	,,
6. பெருங்காயம்	,,
7. கருஞ்சீரகம்	,,
8. வசம்பு	,,
9. கடுக்காய்த்தோல்	3 கிராம்
10. மூக்கரட்டைவேர்	15 கிராம்
11. பொடுதலைக் கொழுந்து	5 கிராம்
12. பெருந்தும்பைத்துளிர்	,,
13. வேலிப்பருத்தி வேர்	,,

மேற்கூறப்பெற்ற பத்து எண் வரையுள்ள சரக்குகளை இளவறுப்பாகப் புது மண் சட்டியிலிட்டு வறுத்து இடித்து வடிகட்டிய பொடியுடன் மற்றுமுள்ள மூன்று இலைகளையும் உரித்த பூண்டையும், சேர்த்து வேலிப்பருத்தி சாறுவிட்டு நன்றாக நெகிழ அரைத்து மெழுகு பதமானதும் சுண்டைக்காயளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: கால், அரை, முக்கால் ஒரு மாத்திரையாக கொடுக்கவேண்டும்.

அனுபானம்: வெந்நீர், தேன், தாய்ப்பால் இவைகளில் நோய்க்குத்தக்க அனுபானங்களில் கலக்கிக் கொடுக்க வேண்டும்.

தீரும் நோய்கள்: குழந்தைகட்கு ஏற்படும் மாந்தம், கட்டு மாந்தம், சுழி மாந்தம், வலி மாந்தம் முதலியன குணமாகும்.

பத்தியம்: குழந்தைகளின் தாய் புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

52. வச்சிராயுத மாத்திரை

1. கெந்தகம்	4½ கிராம்
2. இரசம்	9 கிராம்
3. இலிங்கம்	,,
4. சுக்கு	,,
5. திப்பிலி	,,
6. மிளகு	,,

இவைகளின் கூட்டுத்தொகைக்கு 3 பங்கு வெற்றிலைச் சாறுவிட்டு இரண்டு வாரம் அரைத்து பயறளவுள்ள மாத்திரைகளாக செய்துகொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் நான்கு மாத்திரைகள்.

அனுபானம்: இம்மாத்திரையை ஆலம்பாலில் கொடுக்க நாட்பட்ட சுரம், மேகம் முதலியவை நீங்கும்.

பத்தியம்: பெண் சேர்க்கை, கடுகு, எள், வெண்பூசணி, கரும்புச்சாறு கூடாது.

முறிவு: இதற்கு கடுக்காய்க் குடிநீர் முறிவாகும். பிறகு முருக்கம்வேர் குடிநீர் 10 நாள் உட்கொள்ளவும்.

53. வருணன் மாத்திரை

1. மதுக்கரை வேர்	17½ கிராம்
2. தேற்றான்	,,
3. கரு ஊமத்தன் வேர்	,,
4. அமுக்கறா வேர்	,,
5. சாதிலிங்கம்	,,
6. மிளகு	,,
7. சாதிக்காய்	,,
8. கிராம்பு	,,
9. ஏலரிசி	,,
10. வால்மிளகு	,,

11. சிற்றரத்தை	17½ கிராம்
12. உரித்த வெள்ளைப்பூண்டு	,,
13. பெருங்காயம்	,,
14. விளா ஓடு (விளாம்பழ ஓடு)	,,
15. நண்டு ஓடு	,,
16. அண்ட ஓடு	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை 6 மணி நேரம் அத்திப் பட்டைச்சாறுவிட்டு நன்றாக மெழுகு பதத்தில் அரைத்து நீர்வற்றிய பின் திப்பிலி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வெய்யிலில் உலர்த்திக்கொள்க.

அளவு: ஒன்றுமுதல் இரண்டு மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், வசம்புக் குடிநீர், மூங்கில் குடிநீர்.

தீரும் நோய்கள்: காசம், இருமல், உளைமாந்தை, பித்த சுரம், பைத்தியம், நச்சுக்கடிகள் முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

54. வருணன் மாத்திரை (வேறு)

1. மலைதாங்கி வேர்	17½ கிராம்
2. தாளகம்	,,
3. கருஞ்சீரகம்	,,
4. அபினி	,,
5. நாகதாளி	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ மெழுகு பதத்தில் அரைத்து குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக்கொள்க.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: சிறுநீர் அல்லது பசுவின் மூத்திரம், வெண்ணெய்.

தீரும் நோய்கள்: நச்சுக்குறிகள், கிரந்தி, உள்மூலம் முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

குறிப்பு: மேற்கூறப்பெற்ற மருந்துகளை முறைப்படி சுத்தி செய்துகொள்ள வேண்டும்.

55. வாயு மாத்திரை

1. தும்பை வேர்	17½ கிராம்
2. சுழற்சி வேர்	,,
3. பாகல் வேர்	,,
4. வெண்குவளை வேர்	,,
5. சிறுசின்னி வேர்	,,
6. வெள்ளைப்பூண்டு	,,
7. பெருங்காயம்	,,
8. ஓமம்	,,
9. வசம்பு	,,
10. சிறுதிப்பிலி	,,
11. மிளகு	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை ஒன்று சேர்த்து கடுக்காய் குடிநீர்விட்டு நன்கு நெகிழ மெழுகுபோல் அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை.

அனுபானம்: தாய்ப்பால், தண்ணீர், சுக்குக்குடிநீர்.

தீரும் நோய்கள்: பால் உண்ணாத குழந்தைகளுக்கும், வாயு நோய்களுக்கும் உயர்ந்த மாத்திரையாகும்.

பத்தியம்: புளி நீக்கவும்.

56. வாய்விளங்க மாத்திரை

1. வாய்விளங்கம்	15 கிராம்
2. ஆமை ஓட்டு கரி	,,
3. மிளகு	,,
4. பொடுதலைக்காய்	,,
5. வசம்பு	,,
6. அரிசி திப்பிலி	,,
7. கழற்சிப்பருப்பு	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகள் யாவற்றையும் நன்றாக இடித்துப் பொடித்து கல்வத்திலிட்டு பொடுதலைச்சாறு விட்டு நன்கு நெகிழ அரைத்து மெழுகு பதத்தில் வழித்து மணித்தக்காளியின் அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: வேளைக்கு ஒரு மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்:

1. சிறுவழுதலைக்குடிநீரில் வேளைக்கு ஒரு மாத்திரை கொடுக்க சுரம், இருமல் இவைகள் குணமாவதுடன், உடலிலுள்ள மற்ற நோய்களையும் போக்கும் குணமுடையது.

2. உத்தாமணிக்குடிநீரில் வேளைக்கு ஒரு மாத்திரை கொடுக்க வாந்தி, வயிற்றுப்பொருமல் குணமாகும்.

3. ஓமக்குடிநீரில் வேளைக்கு ஒரு மாத்திரை கொடுக்க கழிச்சல் குணமாகும்.

தீரும்நோய்கள்: சுரம், கழிச்சல், இருமல், வாந்தி, வயிற்றுப்பொருமல் குணமாகும். குழந்தைகளுக்கு நல்ல வளர்ச்சியைக் கொடுக்கும்.

57. விநாயகர் மாத்திரை

1. கருஊமத்தன் வேர்	17½ கிராம்
2. தும்பை வேர்	,,
3. துளசிவேர்	,,
4. சங்கன் வேர்	,,
5. வெள்ளைப்பூண்டு உரித்தது	,,
6. சதகுப்பை	,,
7. சிற்றரத்தை	,,
8. ஓமம்	,,
9. வசம்பு	,,
10. பெருங்காயம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளைத் தூள்செய்து ஒன்றன்பின் ஒன்றாகக் குழியம்மியிலிட்டு குப்பைமேனிச் சாற்றினால் 6 மணி நேரம் நன்கு நெகிழ மெழுகு பதமாக அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சர்க்கரை, இஞ்சிச்சாறு, வேப்பம் பட்டைக்குடிநீர்.

தீரும் நோய்கள்: சன்னி, முகவாத சன்னி, வாதசன்னி, வாந்தி, சுரம், விக்கல், பாண்டு, வறண்ட பித்தம் முதலியன நீங்கும்.

பத்தியம்: புளிநீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

58. வீர பத்திரன் மாத்திரை

1. அத்திவேர்	17½ கிராம்
2. இத்தி வேர்	,,
3. நொச்சி வேர்	,,
4. ஆதொண்டை வேர்	,,
5. சங்கன் வேர்	17½ கிராம்
6. வேலிப்பருத்தி வேர்	,,
7. துளசி வேர்	,,
8. தும்பை வேர்	,,
9. வெங்காரம்	,,
10. படிகாரம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் வெங்காரம், படிக்காரம் இரண்டையும் பாலில் சுத்திசெய்து எல்லா மருந்துகளையும் ஒன்றித்துக் குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ மெழுகு பதமாகுமாறு 6 மணி நேரம் அரைத்து மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: இஞ்சிச்சாறு, தேன், சுக்குக்குடிநீர்.

தீரும் நோய்கள்: மாறல் சுரம், கப இருமல், நீர்ப்பாண்டு இவை யாவும் நான்கு நாட்களில் குணமாகும்.

குறிப்பு: புளி, புகை போகம் நீக்கவும்.

59. வைரவன் மாத்திரை

1. நாயுருவி வேர்	17½ கிராம்
2. மாவிலிங்கம் வேர்	,,

3. கூவைக்கிழங்கு வேர்	17½ கிராம்
4, தைவேளைவேர்	,,
5. நொச்சி வேர்	,,
6. இலிங்கம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை சுத்தித்து குழியம்மியிலிட்டு நாய்வேளைச்சாறுவிட்டு 6 மணி நேரம் நன்கு நெகிழ மெழுகு பதம் வரும் வரை அரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வெய்யிலில் உலர்த்தி வர்ணக் கண்ணாடிப் புட்டியில் அடைத்து வைக்கவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு மாத்திரை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: இஞ்சிச்சாறு.

தீரும் நோய்கள்: குடல்வாயு, வாத சூலை முதலியன ஆறு நாழிகைகளில் குணமாகும்.

பத்தியம்: புளிநீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

செந்தூரங்கள்

1. அப்பிரகச் செந்தூரம்

1. அப்பிரகம்	35 கிராம்
2. பூநீர்	,,
3. வெங்காரம்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளை சுத்திசெய்து கொண்டு கல்வத்திலிட்டு வல்லாரைச் சாற்றினால் மூன்று நாட்கள் நன்றாக நெகிழ அரைத்து வில்லை செய்து காயவைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண் செய்து ஆயிரம் எருவில் புடமிட்டெடுக்கவும். இவ்வாறு மற்றும் இரண்டு முறை புடமிட்டெடுக்க மஞ்சள் நிறமாக இருக்கும்.

இதனுடன் 35 கிராம் வெங்காரம் சேர்த்து பொற்றலைக் கரப்பான் சாறுவிட்டு இரண்டு மணி நேரம் நன்றாக நெகிழ அரைத்துத் தாய்ப்பாலிட்டு அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து ஆயிரம் எருவில் புடமிட்டெடுக்கச் செந்தூரமாகும்.

அனுபானம்: நெய், சர்க்கரை, தேன்.

அளவு: 1 முதல் 2 குன்றி எடை. காலை, மாலை இருவேளை.

தீரும் நோய்கள்: இச்செந்தூரத்தை நெய்யுடன் உட்கொள்ள நீரிழிவு நோய் குணமாகும். தேனுடன் உட்கொள்ள பாண்டு நோய்கள் அனைத்தும் குணமாகும். சர்க்கரையில் உட்கொள்ள நீரிழிவு நோய்கள், பெருநோய்கள் குணமாகும். கடுக்காய்ச் சூரணத்துடன் உட்கொள்ள நரை, திரை நீங்கி உடலுறுதியாகும்.

பத்தியம்: புளி நீக்கவும். புகை போகம் கூடாது.

2. அப்பிரக செந்தூரம் (வேறு)

1. அப்பிரகம்	35 கிராம்
2. வெடியுப்பு	,,
3. வெண்ணெய்	,,
4. கெந்தகம்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளை சுத்தி செய்து குழி அம்மியிலிட்டு எருக்கம்பாலால் 12 சாமம் (36 மணி நேரம்) நன்றாக நெகிழ அரைத்து வில்லை தட்டி வெய்யிலில் காயவைத்து ஓட்டில் வைத்து மேல் ஓடு மூடி சீலைமண் செய்து கெசப்புடமிட்டெடுக்கவும். மறுமுறையும் மேற்கூறியவாறே புடமிட்டெடுக்க அது தும்பைப்பூ போன்று பற்பமாகும்.

இவ்வாறே பத்து முறை புடமிட்டெடுத்து குழியம்மியிலிட்டு தும்பைச்சாற்றால் பனிரெண்டு மணி நேரம் அரைத்து வில்லை செய்து வில்லை தெறிக்கக் காயவைத்து அகலில் வைத்து மூடி சீலைசெய்து கெசப்புடமிட்டெடுக்க சிறிது செந்நிறமாக இருக்கும்.

இச்செந்தூரத்தால் மேற்படி புடத்திலிட்ட மருந்தை பொன்னாவரை இலைச்சாற்றால் 24 மணி நேரம் அரைத்து முன்போலவே பத்துப் புடமிட வேண்டும். (1 புடம் 100 எரு)

பிறகு உதிர மரப்பட்டைச் சாற்றால் 3 மணி நேரமும் வேங்கை மரப்பட்டைச் சாற்றால் 3 மணி நேரமும் அரைத்து 100 எருவில் புடமிடவும்.

பத்து புடம் போட்டெடுக்க இது நன்றாக சிவந்த நிறத்துடனிருக்கும். மேற்படி புடத்திலிட்ட செந்தூரத்தில் உள்ள இரசமானது மடியும் வரை சாரச் செயநீர்விட்டு 18 மணிநேரம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டில் வைத்துச் சீலைசெய்து 100எருவில் புடமிட்டெடுக்க பொன்னிறமாக இருக்கும்.

மேலும் சாரச் செயநீரில் பத்து புடங்கள் போட்டெடுக்க அப்பிரக செந்தூரத்திலுள்ள குற்றங்கள் குணமாகும்.

இதனை சோதிக்க வேண்டுமானால் ஒரு மண்பானை எடுத்து (சுடாத மண்பானை) ஊசியால் பானை முழுவதும் சிறுசிறு துவாரங்கள் போட்டு சூலையில் வைத்து சுட்டெடுத்து அதில் தண்ணீரை விட்டு செந்தூரத்தில் பணவெடை போட்டு நன்றாக கலக்கிவிட்டால் துவாரங்கள் அடைபட்டு நீர்க்கசிவு ஏற்படாது. இதுவே செந்தூரத்திற்குரிய பரீட்சை ஆகும்.

அளவு: குன்றியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன், பால்.

தீரும் நோய்கள்: நீரிழிவு.

பத்தியம்: மது, புளி, போகம் இம்மூன்றையும் நீக்கிடல் நன்று.

பத்தியம்: இரசமது முடியமட்டும் என்று பாடலில் வந்து இருப்பதனால், இரசம் பலமொன்று சேர்த்துப் புடமிட்டால் மருந்து பல நோய்களையும் தீர்க்கவல்லதாய் அமையும்.

3. அயகாந்தச் செந்தூரம்

1. அரப்பொடி	9 கிராம்	6. உப்பு	17 கிராம்
2. கெந்தகம்	,,	7. சூடம்	9 கிராம்
3. இலிங்கம்	,,	8. படிக்காரம்	,,
4. வெங்காரம்	,,	9. முப்பு	,,
5. கம்பிச்சாரம்	9 கிராம்	10. காந்தம்	9 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளை குழியம்மியிலிட்டு பழச்சாற்றினால் 24 மணி நேரம் அரைத்து வில்லை செய்து காயவைத்து வராகப் புடம் முருக்கம்பூப்போல் சிவந்த சிந்தூரமாகும்.

அளவு: அரிசியெடை. காலை, மாலை இருவேளை.

அனுபானம்: தேன்.

தீரும் நோய்கள்: பாண்டு, சோகை முதலியவை குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

4. அயச்செந்தூரங்கள்

1. அயப்பொடி	35 கிராம்
2. வெங்காரம்	,,
3. பருத்திவேர்	,,
4. வீழிவேர்	,,

முற்கூறியவாறே நான்கு அல்லது ஐந்து புடங்கள் வைத்தெடுக்க உயர்ந்த சிந்தூரமாகும். புடங்களின் எண்ணிக்கை உயர உயர சிந்தூரத்தின் வீர்ய சக்தியும் மிகுதியாகி எளிதில் நோயை குணப்படுத்தும் வன்மையைப் பெறும்.

அளவு: 1 முதல் 3 அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன்.

தீரும்நோய்கள்: பெருநோய், கிரந்தி, வீக்கம், உள் வறட்சி, கடி, சூலை, மேகம், குன்மம் ஆகியவை குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவும்.

5. அயச்செந்தூரம் (வேறு)

1. அயம்	50 கிராம்
2. வீரம்	25 கிராம்
3. நாகம்(சிறுகண்)	25 கிராம்

இம்மூன்றையும் கல்வத்திலிட்டு படிகாரத் திராவகம் விட்டரைத்து மெழுகானபின் வில்லைதட்டி வெய்யிலில் நன்கு காயவைத்து காய்ந்தபின் வில்லையைப் பார்க்க உதிர்ந்திருக்கும்.

மறுபடியும் வில்லையைக் குழியம்மியிலிட்டு வெண்நாவல் பட்டைச்சாறு, பொற்றலைக் கரப்பான்சாறு, மேனிச்சாறு, திப்பிலி இலைச்சாறு, செருப்படைச்சாறு, மொந்தன் வாழைப்பூச்சாறு இவைகளை முறையே ½லிட்டர் சாறு வீதம் ஒன்றன்பின் ஒன்றாக விட்டு நன்கு நெகிழ அரைத்து வில்லை தட்டிக்காயவைத்து அகலில் வைத்து மேல் அகல் மூடி 7 சீலைமண் செய்து காய்ந்த பின் 1½ முழ உயரத்திற்கு எருவடுக்கி புடம்போட்டு ஆறினபின் பிரித்துப் பார்த்தால் உயர்ந்த செந்தூரமாக இருக்கும். இதைக் குழியம்மியிலிட்டு நன்கு அரைத்து சீசாவில் பத்திரப் படுத்தவும் மேற்கூறியபடி மூன்றுமுறை புடமிட்டு எடுக்கவும்.

அளவு: அரிசி எடை. *(காலை, மாலை இருவேளை)*

அனுபானம்: தேனிலும், நல்ல லேகியங்களிலும் வேளைக்கு அரிசியெடை வைத்துச் சாப்பிடவேண்டும்.

தீரும் நோய்கள்: நல்ல பசியை ஏற்படுத்தி நரம்புகளுக்கு வலுவைக் கொடுத்து தாதுவிருத்தியை அதிகப்படுத்துவதுடன் அனேக வியாதிகளையும், போக்கி மனதிற்கு உற்சாகத்தையும், திரேகத்திற்கு ஆரோக்கியத் தையும் தரும்.

குறிப்பு: அனேக வைத்தியர்கள் 100, 108 தடவைகள் புடம்போட்டு எடுத்த போதிலும் இச்செந்தூரத்தைப்போல் முடிக்கக் கூடியதும், செய்யக்கூடியதும், ஒரே முறையில் புடமிடக்கூடியதுமான இச்செந்தூரம் நல்ல பலனைத் தருகிறது.

6. அயகெந்திச் செந்தூரம்

1. நெல்லிக்காய் கெந்தகம்	450கிராம்
2. இரும்பு அரப்பொடி	150கிராம்

இரண்டையும் கல்வத்திலிட்டு கற்சுண்ணாம்பு தெளிநீர் விட்டு ஒருநாள் அரைத்து காயவைத்து ஒரு புதுச்சட்டியி லிட்டு வறுக்க ஒரு சாமத்தில் செந்தூரம் ஆகும். இதைச் சீசாவில் பதனஞ்செய்யவும்.

அளவு: ஒன்று முதல் இரண்டு குன்றி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: இஞ்சிச்சாறு, தேன், நெய் இம் மூன்றையும் சமமாகச் சேர்த்துச் சாப்பிடவேண்டும்.

தீரும் நோய்கள்: சூலை பதினெட்ட, கிராணி, சோகை, பாண்டு, சொறிசிரங்கு, புண், புரை எல்லாந்தீரும். பசும் பாலில் உட்கொள்ள பிரமேகம் போம்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

குறிப்பு: அரிசி, சீரகம் இரண்டையும் இடித்து குடிநீரிட்டு, இரவில் உணவு உட்கொண்டபின் ஆழாக்குக் குடிநீர் சாப்பிட நன்று.

7. அயவீரச் செந்தூரம்

1. இரும்புப்பொடி	50கிராம்
2. இரசம்	,,
3. கம்பிச்சாரம்	,,
4. வீரம்	,,
5. பூரம்	,,

இவை நான்கையும் கல்வத்திலிட்டு 4 சாமங்கள் நன்கு அரைக்கவும். பின்பு ஒரு புதுச்சட்டியில் வெற்றிலைச்சாறு உட்புறந்தடவி காயவைத்தபின் மருந்தை அதிலிட்டு அடுப்பிலேற்றி தீ எரிக்கும்போது தென்னங்குச்சியில் மருந்தை வறுக்கவேண்டும். அதன் புகை வெகு நெடியாக

இருக்கும். ஆகவே இம்மருந்தைத் தோட்டங்களில் செய்வது நல்லது. அந்த நெடி அடங்கின பிறகு பார்த்து வறுத்துக் கொண்டே வரவும். மாதுளம்பூ நிறம் வந்தால் இறக்கி ஆறியபின் நன்கு அரைத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: ஒன்று முதல் மூன்று அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: திரிகடுகு சூரணம், தேன்.

தீரும் நோய்கள்: சகலவிதமான வாதநோய்களும் குணமாகும்.

பத்தியம்: புளிநீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

8. அயத்தங்கச் செந்தூரம்

1. அயம்	17½ கிராம்
2. தங்கம்	,,
3. பூநாகம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகள் மூன்றையும் குழியம்மியிலிட்டு பேய்க்கரும்புச் சாற்றில் நன்கு நெகிழ அரைத்து வில்லைதட்டி, வெய்யிலில் காயவைத்து அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலை செய்து ஒரு பெரிய சட்டியில் பாதியளவு வரும்வரை உப்பைக்கொட்டி அதன்மேல் சீலைசெய்து வைத்துள்ள அகலை வைத்து மேலும் உப்பைக் கொட்டி மேல் சட்டி கொண்டு மூடி சீலைமண் செய்து அடுப்பிலேற்றி 12 மணி நேரம் முத்தீயிலிட்டு எரித்து எடுக்க உயர்ந்த செந்தூரமாக இருக்கும்.

அளவு: குன்றியளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன்.

தீரும் நோய்கள்: குன்மம், குளிர்சுரம், நீரிழிவு முதலியன குணமாகும்.

பத்தியம்: மருந்து சாப்பிடும் காலத்தில் சத்துள்ள உணவுப்பொருள்களை உட்கொள்ளவேண்டும்.

குறிப்பு: இம்மருந்து சாப்பிட்டு முடியும் காலம் வரை போகம் கூடாது.

9. அன்னபேதிச் செந்தூரம்

1. அன்னபேதி	175 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்தைக் குழியம்மியிலிட்டு நல்லவேளைச்சாறு விட்டு நன்கு நெகிழ அரைத்து அகலில் வழித்து வைத்து மேல் அகல் மூடி சீலை செய்து 20 எருவில் புடமிடச் செந்தூரமாகும்.

அளவு: குன்றியளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன்.

தீரும் நோய்கள்: சுரம், சோகை, காமாலை, பித்தம், முதலியன.

பத்தியம்: காரம், புளி நீக்கவும்.

10. ஆறுமுகச் செந்தூரம்

1. அயப்பொடி	280 கிராம்
2. ஊசிகாந்தம்	140 கிராம்
3. இலிங்கம்	3½ கிராம்
4. பூரம்	,,
5. கந்தகம்	,,
6. வீரம்	,,

மேற்கூறப்பெற்றவைகளை முறைப்படி சுத்திசெய்து கொண்டு குழியம்மியிலிட்டு சுண்ணாம்பு நீர் விட்டு நன்கு நெகிழ அரைத்து வெய்யிலில் உலர்த்தி முழப்புமிட்டெடுத்து மறுபடியும் குழி அம்மியிலிட்டு எலுமிச்சம்பழச்சாறும், மாதுளம்பழச்சாறும் 12 மணி நேரம் விட்டு நன்கு அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து முழப்புடமிட்டெடுக்க உயர்ந்த செந்தூரமாகும். இதை நன்றாக 12 மணி நேரம் நெகிழ அரைத்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: குன்றியளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன், திரிகடுகுப்பொடி.

தீரும் நோய்கள்: பித்தம், எரிச்சல், சன்னி சுரம், கட்டிகள், பாண்டு, சோகை, குன்மம், பிடிப்பு முதலியன தீரும்.

குறிப்பு: நோய்க்குத் தக்க அனுபானங்களை மாற்றிக் கொடுத்தால் இன்னும் பல நோய்கள் குணமடையும்.

11. ஆறுமுகச் செந்தூரம் (வேறு)

1. இரசம்	175 கிராம்
2. காந்தம்	245 கிராம்
3. கந்தகம்	315 கிராம்
4. வெங்காரம்	280 கிராம்
5. மதியுப்பு	140 கிராம்
6. அயப்பொடி	420 கிராம்

மேற்கூறப்பெற்றவைகளைச் சுத்திசெய்து புளிப்பு மாதுளைச்சாறுவிட்டு நன்றாக அரைத்து வில்லைதட்டி காயவைத்துக் குமரியின் (கற்றாழை) பட்டையை நீக்கி அதன் உள்ளிருக்கும் சோற்றையெடுத்து புதுச்சட்டியில் உள்வைத் தடுக்கி அதன்மேல் மேற்படி காய்ந்த மருந்து வில்லைகளை அடுக்கி அதற்கு மேலும் குமரியின் சோற்றை வைத்து மேல்சட்டி மூடிச்சீலை செய்து அடுப்பிலேற்றி 12 மணி நேரம் கமலாக்கினியாக எரித்து ஆறவிட்டுப் பிரித்து எடுக்கச் செந்தூரமாகும். இதைப்போலவே மறுபடியும் குமரிச்சாறு விட்டு எரித்து எடுக்க மிக உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: குன்றியளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், சர்க்கரை, திரிகடுகு சூரணம்.

தீரும் நோய்கள்: வெடிசூலை, பிடிசூலை, கபம், கபத்தால் உண்டாகும் நோய்கள் குணமாவதுடன் கிரந்திப்பத்து, வாதம், இரணம், பெருநோய், வெண்மேகம், கண்டமாலை, சோகை, பாண்டு முதலியன தீர்வதுடன், அரையாப்பு , மண்டைநோய், பௌத்திரம், குன்மம், சுவாசகாசம், நவமூலம், மேகநீர் முதலிய பல நோய்களும் குணமடையும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

குறிப்பு: உணவு உட்கொள்வதற்கு முன் மருந்து சாப்பிட வேண்டும்.

12. இரசவெள்ளிச் செந்தூரம்

1. வெள்ளி	17½ கிராம்
2. இரசம்	,,
3. கந்தகம்	280 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளை முறைப்படி சுத்தி செய்து எடுத்து வெள்ளியில் ஒருகுகை செய்து அதற்குள் இரசத்தை ஊற்றி குகையின் வாயை வெள்ளியைக்கொண்டு மூடி பற்ற வைத்துவிட வேண்டும்.

பிறகு கெந்தகத்தைக் குழியம்மியிலிட்டு கம்மாறு வெற்றிலைச் சாறுவிட்டு நன்கு நெகிழ அரைத்து வெள்ளிக் குடுவைக்குக் கவசம் செய்து வேறொரு குடுவைக்குள் வைத்து சில்லிட்டு சீலை செய்து உலர்த்தி வாலுகா யந்திரத்தில் வைத்து முறைப்படி முத்தீயிட்டு 24 மணி நேரம் எரித்து ஆறவிட்டெடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: குன்றியளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன்.

தீரும் நோய்கள்: உடல் பலக்குறைவு. சன்னி, சுரம், சர்ம நோய்கள் முதலியன குணமாகும்.

13. இரசசெந்தூரம்

1. இரசம்	35 கிராம்
2. வெங்காரம்	7 கிராம்
3. பூரம்	,,
4. கஸ்தூரி மஞ்சள்	,,
5. மரமஞ்சள்	7 கிராம்

மேற்கூறப்பெற்ற மூன்று சரக்குகளையும் முறைப்படி சுத்தி செய்து கொண்டு இரசத்தை மேலும் இலுப்பெண் ணெயில் சுத்திசெய்து ஒன்றன்பின் ஒன்றாக கல்வத்திலிட்டு

வெற்றிலைச்சாற்றினால் நான்கு சாமங்கள் நன்றாக நெகிழ அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண் செய்து மயில்ப் புடமிட்டெடுக்க செந்தூரமாகும்.

அளவு: 1 முதல் 3 அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: வெண்ணெய், சர்க்கரை, வெல்லம், திரிகடுகு சூரணம்.

தீரும் நோய்கள்: வெண்ணெயுடன் உட்கொள்ள மந்தாரகாசம், புண், புரை, மயக்கம், பித்தமேகம், காசநோய், வாதம், முடக்குவாதம் முதலியன நீங்கும். சர்க்கரையுடன் உட்கொண்டு வந்தால் சூலை நிவர்த்தியாகும். வெல்லத்துடன் உட்கொண்டால் சுகசன்னி தீரும். திரிகடுகுப் பொடியுடன் உட்கொண்டால் சூலை, அரையாப்பு, புற்றுநோய் முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கவும்.

14. இரசச்செந்தூரம் (வேறு)

1. இரசம்	35 கிராம்
2. கந்தகத்தைலம்	,,
3. நவபாஷாணத்தைலம்	,,
4. பேய்ச்சுரைத் தைலம்	,,

மேற்கூறப்பெற்றுள்ள சரக்குகளில் இரசத்தை முறைப்படி சுத்தி செய்து குழியம்மியிலிட்டு ஆறுமணி நேரத்திற்குக் குறைவில்லாமல் மேற்படி தைலங்களை ஒன்றன்பின் ஒன்றாக விட்டு நன்கு அரைத்தால் இரசம் மடிந்து வெண்ணெய்போல் ஆகிவிடும். மெழுகுபதம் வருமளவும் அரைத்து வைத்து மேல் அகல்மூடி சீலைசெய்து கோழிப்புடமிடச் செந்தூரமாகும்.

இச்செந்தூரத்தை வெள்ளியில் உருக்கி பத்திற்கு ஒன்று உருக்குமுகத்தில் கொடுக்க எட்டு மாற்றுடைய தங்கத்தை

ஒத்திருக்கும். இதுவே இம்மருந்து சிறப்புடையதா, சிறப்பற்றதா என்று தெரிந்துகொள்வதற்குக் கையாளும் உபயமாகும்.

அளவு: *1* முதல் *3* அரிசி எடை. (காலை,மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன், சர்க்கரை.

தீரும் நோய்கள்: விரைவாதம், பித்தகாங்கை, குன்மம், கபம், மயக்கம், கீல்வாயு, சூலை முதலிய நோய்களுக்குக் கொடுக்கலாம். நோயின் நிலைமைக்கேற்ற அனுபானத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கவேண்டும்.

15. இராமபாணச் செந்தூரம்

1. வீரம்	35 கிராம்
2. பூரம்	,,
3. இரசம்	,,
4. இலிங்கம்	35 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளைச் செய்துகொண்டு குழியம்மியிலிட்டு வெண்சாரணைச்சாறு, எருக்கம்பால் இவைகளிரண்டும் விட்டு நன்கு நெகிழ அரைத்து வில்லை தட்டி வெய்யிலில் உலரவைத்து அகலில் வைத்து, சீலை செய்து மண் பானைக்குள் வைத்து வேப்பம் விறகால் (ஓரேமரத்து விறகால்) 18 மணி நேரம் முத்தீயிட்டு எரித்து ஆறினபின் எடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: அரிசியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன் திரிகடுகுப்பொடி.

தீரும்நோய்கள்: வாதம், பாண்டு, பெருவயிறு, மூளைக்கோளாறு, மயக்கம், சன்னி, நரித்தலை வாதம், குத்தல் முதலியவை குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம், தள்ளி மருந்து உட்கொள்ளவேண்டும்.

குறிப்பு: வாலுகா யந்திரத்தில் வைத்து எரித்து எடுத்துக்கொள்ளவும்.

16. இலிங்கச் செந்தூரம்

1. இலிங்கம் 35 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்தை வில்வப் பழத்தினுள் வைத்து நன்கு சீலைசெய்து வெய்யிலில் நன்றாக உலர்த்தி, உலர்த்திய மருந்தை குக்குடப் புடமிட்டெடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: குன்றியளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், இஞ்சி ரசம், குடிநீர்.

தீரும் நோய்கள்: பித்தம், சுரம், மயக்கம், கைகால் வலி முதலியன நிவர்த்தியாகும்.

குறிப்பு: நோயிற்குத் தக்க குடிநீர்களில் மருந்தைக் கொடுக்க சாலச்சிறந்ததாகும்.

17. உப்புகட்டுச் செந்தூரம்

1. கடல் உப்பு 280 கிராம்

உப்பைக் குழியம்மியிலிட்டு புளியாரைச் சாறுவிட்டு 6மணி நேரம் நன்றாக அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து கோழிப்புடமிட்டெடுக்க செந்தூரமாகும்.

மேற்கூறியபடி 10முறை புடம்போட்டு எடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

இச்செந்தூரத்துடன் இரசம் 35 கிராம் கலந்து குப்பைமேனிச்சாறுவிட்டு நன்றாக நெகிழ அரைத்து குக்குடப் புடமிட்டெடுக்கவும்.

இச்செந்தூரத்தை வெள்ளி, செம்பு இவைகளில் பத்திற்கு ஒன்று உருக்கிக்கொடுக்க 7 மாற்று காணும். இதுவே உயர்ந்த செந்தூரம் என்று கூறலாம்.

இதை வெள்ளி எடைக்குச் சமனாகத் தங்கத்தைச் சேர்த்து உருக்கி முன்பு கூறிய அளவில் உருக்கு முகத்தில் கொடுக்க வெள்ளியானது சிவந்த தங்க நிறமாக மாறும்.

ஆகையால் மேற்கூறப்பெற்ற மருந்தை காயகற்பமாகக் கொள்ளலாம்.

அளவு: அரிசியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், சர்க்கரை.

தீரும்நோய்கள்: நீராம்பல், நீர்க்கட்டு, கல்லடைப்பு, நீரடைப்பு, சதை அடைப்பு, கல்லீரல், மண்ணீரல் வீக்கம் முதலியன குணமாகும். உடல் பலப்படும்.

குறிப்பு: நோயின் நிலைக்கேற்ப பத்தியம் கொள்ள வேண்டும்.

18. உப்புச் செந்தூரம்

சோற்றுப்பு 35 கிராம்

மேற்கூறப்பெற்ற உப்பை எடுத்துக் குழியம்மியிலிட்டு ஆகாசத்தாமரைச் சாறுவிட்டு பனிரெண்டு மணி நேரம் நன்கு அரைத்து வழித்து வில்லைதட்டிக் காயவைத்து எடுத்து அகலில் வைத்து மேல் அகல்மூடி நன்றாக இரண்டு சீலைமண் செய்து காயவைத்து குக்குடப்புடம் போட்டெடுத்து மறுமுறையும் மேற்கூறப்பெற்ற சாற்றைவிட்டு நன்கு அரைத்து முன்போல் புடம்போட வேண்டும். இவ்வாறு மூன்று முறை புடம் போட்டெடுக்கச் செந்தூரமாகும்.

அளவு: குன்றி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய்.

தீரும் நோய்கள்: கெண்டை ஏறுதல், சோகை, வீக்கம், பாண்டு, நீராம்பல், குடல்வாதம், இசிவு, குன்மவலி, பெருவயிறு குணமடையும்.

பெருவயிற்று நோய்க்கு நெய்யை அனுபானமாகக் கொள்ளுதல் வேண்டும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்குக.

குறிப்பு: பத்து நாட்கள் இம்மருந்தை உட்கொள்ள மேற்சொல்லப் பெற்ற நோய்கள் குணமாகும்.

19. கல்யாணச் செந்தூரம்

1. ரசம்	50 கிராம்
2. கெந்தகம்	,,
3. நவச்சாரம்	30 கிராம்

இவைகளை கல்வத்திலிட்டு செம்பருத்தி இலைச் சாற்றில் அரைத்து குப்பியில் நிரப்பி சீசா வாய்க்கு கல்காரக்கு போட்டு, 7 சீலைமண் செய்து காயவைத்து சட்டியில் நான்கு விரல் உயரம் மணல் கொட்டி அதன் மேல் குடுவையை வைத்து மறுபடியும் மணலால் மூடி, மற்றொரு சட்டியால் மூடி சட்டிக்கு 7 சீலைமண செய்து ஒரே ஜாதி விறகால் 48 மணி நேரம் தீயெரித்துப் பின் ஆறவைத்து சீசாவையுடைத்து மருந்தை எல்லாம் கல்வத்தில் இட்டு அரைத்தெடுத்து சீசாவில் பதனஞ்செய்யவும்.

அளவு: 2 குன்றி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், திரிகடுகு லேகியம்.

தீரும் நோய்கள்: அஷ்டகுன்மம், சூதகவாய்வு, சூதகக்கட்டி, காய்ச்சற்கட்டி, வயிற்றுவலி, வயிறு உப்பிசம் தீரும். நெய்யில் உட்கொண்டால் கண்டமாலை, பவுத்திரம், கிரந்தி நீங்கும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

20. களங்குச் செந்தூரம்

1. தாமிரக்களங்கு	35 கிராம்
2. கெந்தகம்	,,
3. வீரம்	,,
4. பூரம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் 2, 3, 4 ஆகியவைகளை முறைப்படி சுத்திசெய்து தாமிரக்களங்கையும் சேர்த்து சிவப்பு அகத்தப்பூச் சாறுவிட்டு நன்கு நெகிழ நான்கு மணிநேரம் அரைத்துக் குப்பியில் வைத்துக் குப்பியின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலை செய்து உலர்ந்த பின்,

ஒருசட்டியில் உப்பைப் பாதியளவு கொட்டி அதில் மேல் குப்பியை வைத்து குப்பியின் கழுத்தளவிற்கு மேலும் உப்பைக் கொட்டி மேல்சட்டி மூடி சீலைசெய்து அடுப்பிலேற்றி சருகு, குச்சி விறகு இவைகளினால் 18 மணி நேரம் முத்தீயிட்டு எரித்து எடுத்து குழியம்மியிலிட்டு 6 மணி நேரம் நன்றாக அரைத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: பணவெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், திரிகடுகு, சூரணம்.

தீரும் நோய்கள்: உடல் பலம் பெறும். மேலும் தீராத நோய்களை இம்மருந்தினால் தீர்க்கமுடியும. இச்செந்தூரம் கற்ப மருந்துகளில் ஒன்றாகும்.

குறிப்பு: வைத்தியர்கள் நோயிற்கு ஏற்ப மருந்தை அளவிட்டு அனுபானங்களை மாற்றிக்கொள்ளலாம்.

21. காடிகாரச் செந்தூரம்

1. இரசச் செந்தூரம்	7 கிராம்
2. இலிங்கம்	28 கிராம்
3. காடிக்காரம்	3½ கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளிரண்டையும் முறைப்படி சுத்திசெய்து குழியம்மியிலிட்டு இராசபேதி இலைச்சாறு சாதாப்பு இலைச்சாறு, குழந்தைப்பால் இம்மூன்றும் முறையே ஒன்றன்பின் ஒன்றாகவிட்டு நெகிழ 12 மணி நேரம் அரைத்து உலர்த்தி பத்திரப்படுத்தவும்.

அளவு: குன்றி அளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: குன்றியளவு கற்பூரமும், குன்றியளவு மருந்தும் சேர்த்துத் தேனில் கலந்து சாப்பிடவேண்டும்.

தீரும் நோய்கள்: வாந்தி பேதி, வயிறு உப்பல், சீதளம் முதலியவை குணமாகும்.

பத்தியம்: கஞ்சி சாப்பிடுவது நலம்.

22. காந்தச்சத்துச் செந்தூரம்

1. காந்தச்சத்து	35 கிராம்
2. அயச்சத்து	,,
3. தங்கம்	,,
4. வீரம்	,,
5. இரசம்	,,
6. கெந்தகம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் காந்தம், அயம் தங்கம், இம்மூன்றையும் ஒன்றாக உருக்கிக் கல்வத்திலிட்டுப் பொடியாக்கி மற்றைய மருந்துகளை சுத்திசெய்து மேற்படி பொடியுடன் கலந்து தாய்ப்பால் அல்லது பசும்பால் சேர்த்து இரண்டு நாட்கள் அதாவது 48 மணி நேரம் அரைத்து குப்பியில் வைத்து குப்பியின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலைசெய்து வாலுகா இயந்திரத்தில் பாதியளவு உப்பைக்கொட்டி அதன்மேல் குப்பியை வைத்து குப்பியின் கழுத்தளவு வரையிலும் மணலும், உப்பும் கலந்து கொட்டி., மேல்சட்டி மூடி சீலைசெய்து அடுப்பிலேற்றி மூன்றுநாட்கள் முத்தியிட்டு எரித்து எடுக்க முருக்கம்பூவைப் போன்று செந்தூரம் இருக்கும்.

அளவு: பணவெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சர்க்கரை.

தீரும் நோய்கள்: நரை, திரை மாறி உடல் வலிமை பெறும். பொன்னிறமான நிறம் உண்டாகும். சகலவிதமான வியாதிகளுக்கும் ஏற்றது. வியாதிக்கு ஏற்ற மருந்துடன் கொடுக்கவேண்டும். "கற்பமுறை."

பத்தியம்: புளி, புகை, போகம் கூடாது.

23. காந்தச் செந்தூரம்

1. காந்தம்	35 கிராம்
2. வெங்காரம்	,,
3. பூநீர்	,,
4. சீனாக்காரம்	,,
5. வழலை	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளைக் கல்வத்திலிட்டு நன்றாக நெகிழ அரைத்து அதனுடன் வேளைச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு இவைகளில் தனித்தனியே 9 மணி நேரத்திற்கு குறையாது நெகிழ அரைத்து வில்லை தட்டிக் காயவைக்கவும். மேலும் வில்லைகள் நன்றாகக் காய்ந்த பிறகு ஓட்டில் வைத்து மேலோடு கொண்டு மூடி சீலைமண் செய்து காய்ந்த பிறகு ஆயிரம் எருவில் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

மேற்கூறியவாறே 3 முறை புடமிட்டெடுக்க முருக்கம் பூவின் நிறத்தில் உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: 1 முதல் 3 குன்றி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன், சர்க்கரை.

தீரும் நோய்கள்: வீக்கம், சோகை, பாண்டு, பீனிசம், இசிவு, பெருநோய், அழலை, கிறுகிறுப்பு, வலி, விக்கல் முதலியன குணமாகும்.

இம்மருந்தைக் கற்பமாக உட்கொண்டுவரின் நரை, திரை மாறி உட்லுறுதியாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்குக.

24. காந்தச் செந்தூரம் (வேறு)

ஏழு ஊசிகளை பிடிக்கும் சுத்தமான காந்தத்தை கல்வத்திலிட்டு பழச்சாறுவிட்டு நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து இரவியில் காயவைத்து அதற்குத்தக்க அளவுள்ள அகலில் வைத்து மேல் அகல் மூடி ஏழு சீலைமண் செய்து சீலைமண் நன்றாகக் காய்ந்த பிறகு ஒருமுழம் உயரம் எரு அடுக்கிப்புடம் போட்டு ஆறியபின் எடுத்து கவசம் பிரித்து வில்லையையெடுத்துக் குழியம்மியில் மறுபடியும் பழச்சாறுவிட்டு அரைத்து முன்போலவே செய்து மூன்றுமுறை புடம் போடவும். பின்பு தாழமரத்தின் அடித்தண்டையெடுத்த (தாழை மோத்தை) அதை நன்றாக இடித்து சாறெடுத்துக்கொண்டு மேற்படி மருந்தை கல்வத்திலிட்டு தாழைச்சாற்றையும் சேர்த்து நான்கு சாமம் அரைத்து முன்போல் கவசம் செய்து 3 புடம் போடவும். ஆகமொத்தம் ஆறுபுடம் போட்டெடுத்துப் பார்த்தால் முருக்கன்பூ போன்று இருக்கும். அதையெடுத்து சீசாவில் பத்திரப்படுத்தவும்.

அளவு: பணவெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: இதை எடுத்து சுத்தமான பசுநெய்யில் மத்தித்து காலை, மாலை இருபதுநாள் உட்கொள்ளவும்.

தீரும்நோய்கள்: இதை சாப்பிட்டால் மேகம் இருபத்தொன்பதும், வாதம் ஒன்பதும் தீருவதுந் தவிர கண்பார்வை சுத்தமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

25. காளமேக நாராயணச் செந்தூரம்

1. ரசம்	50 கிராம்
2. நெல்லிக்காய் கெந்தகம்	50 கிராம்
3. கம்பிச்சாரம்	,,
4. படிக்காரம்	50 கிராம்

இவையெல்லாம் கல்வத்திலிட்டு 3 நாட்கள் கம்மாறு வெற்றிலைச்சாறுவிட்டு அரைத்து மண் குடுவைக்குள் வைத்து ஏழுசீலை செய்து பூரணச் சந்திரோதயத்தை எரித்து எடுப்பது போல எரித்து குடுவையை உடைத்துப் பார்க்க செவ்வல்லி மலர் போன்ற செந்தூரம் கிடைக்கும்.

அளவு: 1 முதல் 2 குன்றி எடை.

அனுபானம்: பசுவெண்ணெயில் காலை, மாலை 40நாள் உட்கொள்ளவும்.

தீரும் நோய்கள்: குஷ்டம், குறைநோய், கண்டமாலை, பவுத்திரம் ஆகியவை நீங்கும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

26. கெந்தகச் செந்தூரம்

1. கெந்தகம்	35 கிராம்
2. பூநீர்	,,
3. கம்பி நமச்சாரம்	3½ கிராம்
4. வீரம்	3½ கிராம்

மேற்கூறிய சரக்குகளை முறையே சுத்திசெய்து கொண்டு கெந்தகத்தைக் குழியம்மியிலிட்டு, கற்றாழைச்சாறு, தக்காளிச்சாறு, கருணைக்கிழங்குச்சாறு, கையாந்தகரைச்சாறு இவைகளில் முறையே ஒன்றன்பின் ஒன்றாக 15மணி நேரம் நெகிழ அரைக்கவும். அரைத்த விழுதுடன் பூநீர், காரம், வீரம் ஒவ்வொன்றும் வகைக்கு விராகனெடை சேர்த்து மறுமுறையும் நன்கு நெகிழ அரைத்து

வில்லைதட்டி காயவைக்கவும். காய்ந்த வில்லைகளை ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண் மூன்று செய்து குக்குடப் புடமிட்டெடுக்க கெந்தகம் பற்பமாகும்.

இப்பற்பத்துடன் மேற்கூறிய சாறுகளை விட்டு மறுமுறையும் அரைத்து வில்லைதட்டி மறுபுடம் போட்டு எடுக்கச் செந்தூரமாகும்.

அளவு: 1 முதல் 3 குன்றி எடை. (காலை,மாலை இருவேளை)

அனுபானம்: நோய்க்குத்தக்க அனுபானங்களில் கொடுக்கவும். நெய், சர்க்கரை.

தீரும் நோய்கள்: வீக்கம், கபாலசூலை, புண், புரைகள், திமிர்சூலை, உடற்கடுப்பு, கால்முடக்கம், கழலை ஆகியவை குணமடையும்.

சர்க்கரையுடன் உட்கொள்ள பெருநோய், தோலைப் பற்றிய நோய் ஆகியவை குணமடையும்.

பத்தியம்: புளி, புகை, போகம் கூடாது.

27. கௌரிச் செந்தூரம்

1. கௌரி பாடாணம்	35 கிராம்
2. வீரம் (சுத்திசெய்தது)	,,
3. பூரம்	,,
4. வெங்காரம்	,,
5. கம்பிச்சாரம்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் கௌரிப்பாடாணத்தை பசுவின்பாலில் முறையே சுத்திசெய்து மற்ற நான்கு சரக்குகளையும் முறைப்படி சுத்திசெய்து கல்வத்திலிட்டு பொன்னாவாரைச் சாறுவிட்டு மூன்று சாமம் நெகிழ அரைத்து அவற்றுடன் கஸ்தூரி ஒரு விராகனெடையும், சாரம் ஒரு

விராகனெடையும் சேர்த்து தாய்ப்பால் விட்டு இரண்டு சாமம் நெகிழ அரைத்து, சிறுவில்லைகளாகத் தட்டி வெய்யிலில் நன்றாகக் காயவைக்கவும். காய்ந்த வில்லைகள் கணீரென்று சப்தம் கேட்கும்போது வில்லைகளை ஓட்டிலிட்டு மூடிச் சீலைமண் செய்து மயில்ப்புடமிடச் செந்தூரமாகும்.

அளவு: *1 முதல் 2 அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)*

தீரும் நோய்கள்: காமாலை, சோகை, பாண்டு, வயிறெரிவு, பெரும்பாடு, வீக்கம், ஈழை, வாதம், சூலை, உடல் கடுப்புடன் கூடிய வலி ஆகியவை நீங்கும்.

28. சண்டமாருதச் செந்தூரம்

1. கந்தகம்	*9 கிராம்*
2. வீரம்	,,
3. இரசச்செந்தூரம்	,,
4. வன்னி கற்பம் (இலிங்கம்)	*28 கிராம்*
5. பூரம்	*35 கிராம்*

மேற்கூறப்பெற்ற மருந்துகளைச் சுத்திசெய்து குழியம்மியிலிட்டு, முட்டையின் வெண்கருவிட்டு நன்கு நெகிழ 12 மணி நேரம் அரைத்து உலர்ந்த பின்பு தாய்ப்பால் விட்டு 3 மணிநேரம் அரைத்து உலர்ந்தபின்பு தாய்ப்பால் விட்டு 3மணி நேரம் அரைத்து வில்லைதட்டி வெய்யிலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். பிறகு சித்திரமூலச் செடியை சமூலத்துடன் இடித்துத் தூள்செய்து 4 லிட்டர் எடுத்து ஒரு சட்டியில் பாதித்தூளைக்கொட்டி அதன்மேல் வில்லையை வைதது பாக்கித்தூளை மேலே கொட்டி மேல்சட்டி மூடி சீலை செய்து தீபாக்கினியாகவே 6 மணி நேரம் எரித்து எடுக்க உயர்ந்த செந்தூரமாக இருக்கும்.

அளவு: அரிசியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நோய்க்கேற்ற துணை மருந்துகளில் கொடுக்கவேண்டும்.

தீரும் நோய்கள்: வாதநோய்,புண், புரை, சுரம், சன்னி உதிரநோய், மலபந்தம், நச்சுப்பேதி (காலரா முதலியவை குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

29. சவர்க்காரச் செந்தூரம்

1. சவர்க்காரம்	35 கிராம்

ஒரு பலம் சவர்க்காரத்தை சுத்திசெய்து கல்வத்திலிட்டு முருங்கைவேர், அமுக்கிராவேர் இரண்டையும் இடித்துச் சாறுபிழிந்து சமனளவாக எடுத்து சவர்க்காரத்துடன் விட்டு நன்றாக பதினெட்டு மணிநேரம் நெகிழ அரைத்து சிறு வில்லகளை ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சிலைமண் செய்து குக்குடப் புடமிட்டெடுக்கச் செந்தூர மாகும்.

அனுபானம்: அரிசியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சர்க்கரை.

தீரும்நோய்கள்: வாதக்குடல் விருத்தி, சூலை, கபாதிக்கம், கீல்வீக்கம், குன்மம்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கவேண்டும்.

30. சவ்வீரச் செந்தூரம்

1. சவ்வீரம்	35 கிராம்
2. பூரம்	9 கிராம்
3. வெங்காரம்	3½ கிராம்
4. பூநீர்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளைச் சுத்திசெய்துகொண்டு சவ்வீரத்தைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறுவிட்டு

நன்றாக அரைத்து பிறகு அரைத்த விழுதுடன் மற்ற மூன்று சரக்குகளையும் சேர்த்து முருங்கைப்பூச்சாற்றினால் 12 மணி நேரம் நெகிழ அரைக்கவும். பிறகு அரைத்த விழுதை சிறு வில்லைகளாகத் தட்டிக் காயவைக்கவும். காய்ந்த வில்லைகளை ஓட்டில் வைத்து ஓடுமூடிச் சீலைமண் செய்து மயில் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

மறுமுறையும் மேற்கண்ட சாறுவிட்டரைத்து முன் கூறியதுபோல் புடமிட்டெடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: பணவெடை. (காலை, மாலை. இருவேளை)

அனுபானம்: நெய்.

தீரும் நோய்கள்: கழிச்சல், காசநோய், நச்சுக்கடிகள், வெள்ளை வெட்டை.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்குக.

குறிப்பு: மருத்துவர்கள் நோய்களின் நிதானங்கண்டு மருந்து கொடுத்து நோய்களை குணப்படுத்தவேண்டும்.

31. சிங்கிச் செந்தூரம்

1. மிருதார் சிங்கி	5கிராம்
2. அன்னபேதி	5கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகள் இரண்டையும் முறைப்படி சுத்திசெய்து குழியம்மியிலிட்டு மழைத் தண்ணீர் அல்லது பனிநீர் விட்டு நன்கு நெகிழ அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலைசெய்து 5எருவில் புடமிட்டெடுக்கச் செந்தூரமாகும்.

அளவு: குன்றியளவு (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், ஆவாரைச்சாறு, திரிகடுகுச் சூரணம்.

தீரும் நோய்கள்: தாது வலிமை பெற்று விந்து கட்டும், மேகம், புண், புரை, வாதபித்தம், மதிமயக்கம் முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் கூடாது.

32. சிடிகை அயச்செந்தூரம்

1. அயப்பொடி	350 கிராம்

மேற்கூறப்பெற்ற அயப்பொடிக்கு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு கல்வத்திலிட்டு 12 மணி நேரம் நன்றாக அரைத்து அத்துடன் முப்பு 35 கிராம் சேர்த்து அரைத்து வில்லைதட்டிக் காயவைத்துக் காய்ந்த வில்லைகளை ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலைசெய்து குக்குடப் புடம்போட செந்தூரமாகும்.

மேற்கூறியவற்றை பத்துமுறை புடமிட்டெடுக்க செந்தூரமாகும்.

அளவு: நெல்லெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பசும்பால், வெண்ணெய், தேன்.

தீரும் நோய்கள்: ஒரு மண்டலம், இச்செந்தூரத்தை உட்கொள்ள தேகம் பொன்மயமாகி உடல் திடமுறும்.

பத்தியம்: புளிநீக்கி உணவு உட்கொள்வது சாலச்சிறந்த தாகும்.

33. சீன, வீரவைப்புச் செந்தூரம்

1. வீரம்	35 கிராம்
2. பொன் அரிதாரம்	,,
3. பால் துத்தம்	,,
4. மிர்தார்சிங்கி	,,
5. கௌரிபாடாணம்	,,
6. அயப்பொடி	,,
7. செம்புப்பொடி	35 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் வீரத்தை முறைப்படி சுத்திசெய்துகொண்டு ஓர் அகலில் கரி நெருப்பை மூட்டி அதன்மேல் அகலை வைத்து வில்வப்பழத்தின் சாற்றால் 12மணி நேரம் சுருக்குக் கொடுக்க வீரமானது கட்டிவிடும்.

பிறகு மற்றைய ஆறு சரக்குகளையும் சுத்தம் செய்து குழி அம்மியிலிட்டு அறுவகைச் செயநீர்விட்டு 12 மணி நேரம் நன்கு நெகிழ அரைத்து இரண்டு செப்பு அகல்களை எடுத்து அதன் உட்புறத்தில் லேசாகத் தடவி, அரைத்த மீதி மருந்தை முன்பு தடவிய அகல் ஒன்றில் வைத்து அதன் மேல் கட்டிய வீரத்தை வைத்து வீரத்திற்கு மேலும் மேற்படி அரைத்த மருந்தை அப்பி வெய்யிலில் காயவைத்து வீரம் வைத்துள்ள சட்டியின் மேல் உள்ள மருந்து வெளுக்கும்போது மற்றைய சட்டியையும் அதன்மேல் கவிழ்த்து நன்றாக சீலை செய்து வெய்யிலில் உலர்த்தவேண்டும்.

பிறகு 4 லிட்டர் உப்புப் பிடிக்கக்கூடிய இரண்டு பெரிய சட்டியை எடுத்து அதில் 2 லிட்டர் கீழே பரப்பி, அதன்மேல் சீலை செய்த அகலை வைத்து மீதமுள்ள உப்பையும் கொட்டி, சட்டியை மூடி நன்கு சீலைசெய்து உலர்த்தி அடுப்பிலேற்றி கமலாக்கினியாக ஒரே சாதி விறகால் 3½நாட்கள் இரவு, பகல் இடைவிடாமல் எரித்து எடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: 1 முதல் 2 அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், சர்க்கரை.

தீரும் நோய்கள்: சகல நோய்களையும் குணமாக்கும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவும்.

34. சூதச் செந்தூரம்

இரசம் 35 கிராம்

இரசத்தை நன்றாகச் சுத்திசெய்துகொண்டு சிவகரத்தை இலையை வில்வப்பழம் அளவு அரைத்து அதனுள் வைத்துச் சீலை செய்து நன்றாக வெய்யிலில் காயவைத்து கோழிப்புடமிட்டெடுக்க இரசமானது சிறிது சாம்பல் நிறத்துடன் மடிந்து எடை குறையாமல் இருக்கும்.

1. இரசம்	35 கிராம்
2. வீரம்	8¾ கிராம்
3. துத்தம்	,,
4. துரிசு	,,
5. கெந்தகம்	,,
6. காந்தம்	,,
7. மனோசிலை	,,
8. வளையலுப்பு	,,
9. வெங்காரம்	,,
10. மதியுப்பு	,,
11. இந்துப்பு	,,
12. பூநீருப்பு	,,
13. கம்பிச்சாரம்	,,
14. பூரம்	,,
15. மடலிதாரம்	,,
16. சுடலுப்பு	,,
17. சீனாக்காரம்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளை நன்றாகச் சுத்திசெய்து கொண்டு குழியம்மியிலிட்டுப் பொற்றலைக் கரப்பான் சாறு விட்டு நன்றாக நெகிழ அரைத்து வெய்யிலில் நன்றாகக் காயவைத்து எடுத்து மறுமுறை குழியம்மியிலிட்டு நன்றாக அரைத்துத் தூள்செய்து காசிக்குப்பியில் போட்டு அதனுடன் மேற்படி இரசபற்பத்தையும் போட்டு குப்பியை மாக்கல்லினால் மூடி கெட்டியாக சீலைசெய்து காயவைத்து

ஒரு சட்டியில் மணலைக்கொட்டி நடுவே குப்பியை வைத்து மேலும் மணலைக்கொட்டி, மேல் சட்டியிட்டு மூடிச் சீலை செய்து வாலுகா இயந்திரத்தில் ஏற்றி 24 மணி நேரம் கமலாக்கினியாக எரித்து தீ ஆறின பின் குப்பியை எடுத்துப் பார்க்க குப்பி கறுத்திருக்கும். பிறகு குப்பியை உடைத்து எடுக்க உயர்ந்த செந்தூரமாக இருக்கும்.

இச்செந்தூரத்தை வெள்ளியில் கொடுக்க கருநிறத்தைப் பெற்றிருக்கும் ஓட்டில் வைத்து மூன்று முறை ஊதி எடுக்கப் பசுமையான எட்டு மாற்றுடையதாகும்.

பத்திற்கு ஒன்று தங்கம் கொடுத்து புமிட்டெடுக்க பசுந்தங்கமாகும். இதுவே இம்மருந்து சிறப்புடையதா, சிறப்பற்றதா என்று தெரிந்து கொள்வதற்குக் கையாளும் உபாயமாகும்.

அளவு: அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், சர்க்கரை, வெல்லம் இவைகளில் கொடுக்கலாம்.

தீரும் நோய்கள்: பெருநோய்கள் பலவும் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் முதலியவற்றை நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

35. தங்கச் செந்தூரம்

1. சுத்தத் தங்கம் அல்லது சுருள்தங்கம் 100 கிராம்

முதலில் சுருள்தங்கத்தை குழியம்மியிலிட்டு மாசிப் பத்திரி இலைச்சாறுவிட்டு 12 மணி நேரம் நன்றாக அரைத்து வில்லைதட்டி வெய்யிலில் நன்கு காயவைத்து 100 எருவில் புடமிட செந்தூரமாகும்.

மேற்கூறியபடி மேற்படி இலைச்சாறு கொண்டு பத்துமுறைகள் புடமிட்டெடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: வேளைக்கு அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், லேகியங்கள்.

தீரும்நோய்கள்: உடல் மேனி மின்னும், தாதுக்கள் வலிமையடையும், நச்சுக்கடிகள், நரை, திரை, மதுமேகம், மேகம், வாதம் 80 முதலியவைகளைக் குணப்படுத்துவதுடன் வேறு சில கடுமையான நோய்களையும் குணப்படுத்தும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

குறிப்பு: மேலே கூறியுள்ளதுபோல் செந்தூரத்தைப் பத்திற்கு ஒன்று வெள்ளியில் கொடுக்க தங்கநிறத்தை அடையும். இதனால் மருந்து நன்கு முடுவுற்றிருப்பதை அறிந்து கொள்க.

36. தங்க செந்தூரம் (வேறு)

1. தங்கக்காசு (அல்லது) சுருள் தங்கம்	10 கிராம்
2. வெங்காம்	10 கிராம்
3. கம்பிச்சாரம்	10 கிராம்

மேற்கூறப்பெற்ற மூன்று சரக்குகளையும் கல்வத்தி லிட்டு, குமட்டிச்சாறு, அவுரிச்சாறு, திருகுக்கள்ளிப்பால் இவைகளால் முறையே தனித்தனிச் சாற்றால் 6 மணி நேரத்துக்குக் குறையாது அரைத்து வில்லைதட்டி காய வைக்கவும். காய்ந்த வில்லைகளை ஓட்டிலிட்டு மேலோடு மூடிச்சீலைமண் மூன்று முறை மயில் புடமிட்டெடுக்கச் செந்தூரமாகும்.

அளவு: அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், லேகியம், வெந்நீர், தண்ணீர், சர்க்கரை.

தீரும் நோய்கள்: 1. பாண்டு, குட்டம், சூலை, மண்டை வலி, பீனிசங்கள், புண், வண்டுகடி, வாந்தி, குன்மம், சுரங்கள் ஆகியவை குணமாகும்.

2. கஸ்தூரியுடன் சேர்த்து உட்கொள்ள உடல் பொன்னிறத்தை அடையும்.

3. குங்குமப்பூவில் உட்கொள்ள உடல் ஒளிபெற்று விளங்கும்.

4. ஓராண்டு காலம் தொடர்ந்து உட்கொண்டுவரின் உடல்நரை, திரை, நீங்கி உடலுறுதியாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்குக.

37. தூங்கவைங்கச் செந்தூரம்

1. சுத்திசெய்த கருவங்கம்	35 கிராம்
2. கருள் தங்கம்	3½ கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் வங்கத்தை உருக்கி அதனுடன் தங்கத்தையும் சேர்த்து உருகவிட்டு இரண்டும் உறவாடி சேர்ந்து உருகும்போது வெண்சாரணை சமூலத்துடன் இடித்துத் தூளைத் தூவி வறுக்கத் தூளாகும். இவ்வாறு வறுக்கையில் சிவந்த நிறத்தையுடைய செந்தூரமாகிவிடும். இத்தூளைக் குழியம்மியிலிட்டு பொற்றலைக் கரப்பான், அந்திமந்தாரை இரண்டின் சாறுகளைவிட்டு ஆறுமணி நேரம் நன்கு நெகிழ அரைத்து ஒரே வில்லையாகத் தட்டி அகலில் வைத்து சீலைசெய்து 50 எருவில் புடமிட உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: நெல் அளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பசுநெய், பசுவெண்ணெய், தேன்.

தீரும் நோய்கள்: நீர்ச்சுருக்கு, வெள்ளை, வெட்டை, கருமேகம், செம்மேகம், மதுமேகம் போன்ற நோய்களைக் குணப்படுத்தி உடலுக்கு வன்மையைக் கொடுக்கும்.

பத்தியம்: புளி, புகை, மது, போகம் நீக்கவும்.

38. தாமிரக்குருச் செந்தூரம்

1. வெள்ளி	35 கிராம்
2. கெந்தகம்	,,
3. கம்பிச்சாரம்	,,
4. இரசம்	,,
5. கற்பூரம்	,,
6. மனோசிலை	,,
7. பொன் அரிதாரம்	,,
8. செம்பு (தாம்பிரம்)	,,
9. காரீயம்	,,
10. கௌரி பாடாணம்	,,
11. வெள்ளைப்பாடாணம்	,,
12. அயம்	,,
13. காந்தம்	,,
14. வீரம்	,,

மேற்கூறப்பெற்ற பதினான்கு சரக்குகளையும் தனித் தனியே சுத்திசெய்து சமஎடை குழியம்மியிலிட்டு குப்பைமேனி இலைச்சாறுவிட்டு 12 மணி நேரம் நன்றாக நெகிழ அரைத்து வில்லை தட்டி வெய்யிலில் நன்கு காயவைத்து இரண்டு அகல்கள் எடுத்து பொருத்துவாய் சரியாக இழைத்து அகலின் உட்புறத்தில் கம்மாறு வெற்றிலையின் சாறு எடுத்து அதற்கு பூசி உலர்ந்தவுடன் அதில் மேற்படி வில்லையை வைத்து மேல் அகல் மூடிச்சீலை செய்து காய்ந்த பிறகு ஒரு பானையில் இரண்டுபடி உப்பைக்கொட்டி அதன் மேல் மருந்து அகலை வைத்து, மேலும் இரண்டுபடி உப்பைக்கொட்டி மேல் பானை மூடிச் சீலைசெய்து காயவைத்து அடுப்பிலேற்றி கமலாக்கினியாக ஒரே மரத்தின் விறகால் 27 மணி நேரம் நன்றாக எரித்து ஆறியபின் எடுத்துப்பார்க்க கல்யாண முருங்கன் பூவைப் போன்ற நிறத்தில் உருகிக்கட்டி நிற்கும்.

இதைக் குழியம்மியிலிட்டு நன்றாக நெகிழ நான்கு மணிநேரம் அரைத்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: சீரகத்தின் அளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சர்க்கரை, நெய்.

தீரும் நோய்கள்: வாயு, வறட்சி, வலி, குன்மம், ஈளை, காசம், பெருநோய்கள் பலவும் தீரும்.

பத்தியம்: கருவாடு, மீன், பயறு, உளுந்து, மொச்சை, பூசணிக்காய், நல்லெண்ணெய், கடுகு, தயிர், மோர், பழஞ்சோறு, புளி, புகை, போகம் நீக்குக.

குறிப்பு: நோய்க்கு ஏற்றவாறு அனுபானங்களை மாற்றி அமைத்து மருந்து சாப்பிடவேண்டும்.

39.தாம்பிரச் செந்தூரம்

1. தாம்பிரம்	35 கிராம்
2. நாகம்	7 கிராம்
3. கெந்தகம்	10½ கிராம்

மேற்கூறப்பெற்ற மூன்று சரக்குகளில் தாம்பிரத்தை நன்கு சுத்தி செய்து வைத்துக்கொண்டு நாகம், கெந்தகம், இரண்டையும் கல்வத்திலிட்டு வேலிப்பருத்திவேர், கோரைக்கிழங்கு, தாளிவேர், முடக்கொற்றான் இலை ஆகியவைகளுடன் நன்கு விழுவதாக அரைத்து வைத்துக் கொள்ளவும். தாம்பிரத்தின் மேலே அரைத்த விழுதால் கவசஞ்செய்து ஓட்டிலிட்டு ஓடு மூடிச்சீலைமண் செய்து ஆயிரம் எருவில் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

இதே போன்று மற்றும் இரண்டு முறை புடமிட்டெடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: அரிசியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: சர்க்கரை, தேன்.

தீரும் நோய்கள்: வெல்லத்துடன் செந்தூரமுட்கொள்ள தனுர்வாதம், பாண்டு, சோரகை, பீனிசம், கண்டமாலை, அண்டப்புற்று, புண், புரை, தடிப்பு முதலியன குணமாகும்.

தேனுடன் உட்கொள்ள வீக்கத்துடன் கூடிய தடிப்பு, கெண்டைவலி, மேகம் முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகத்தைத் தவிர்க்கவும்.

40. தாம்பிரச் செந்தூரம் (வேறு)

1. தாம்பிரம்	35 கிராம்
2. தங்கம்	,,
3. இரசம்	,,
4. தாளகம்	,,
5. வீரம்	,,
6. இலிங்கம்	,,
7. நாகம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் தாம்பிரத்தை முறைப்படி சுத்திசெய்து எடுத்து அரத்தினால் ராவி பொடியாக்கி பழச்சாற்றில் 5 நாட்கள் ஊறப்போட்டு எடுத்துக் கழுவி குழியம்மியிலிட்டு மற்றைய மருந்துகளையும் முறைப்படி சுத்திசெய்து தாம்பிரத்துடன் சேர்த்து பழச்சாறு விட்டு 12 மணி நேரம் நன்கு நெகிழ அரைத்துக்கொண்டு 490கிராம் நெல்லிக்காய் கெந்தகத்தையும் சேர்த்து பழச்சாறு, பொடுதலைச்சாறு இரண்டும் தனித்தனியே ஆறுமணி நேரம் கொடுத்து நன்கு நெகிழ அரைத்து வெய்யிலில் காயவைத்து மறுபடியும் அரைத்து பொடியாக்கி குப்பியில் வைத்து குப்பி வாய்க்குச் சில்லிட்டு சீலை செய்து காயவைத்து வாலுகா யந்திரத்தில் வைத்து முறையே தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினி என்னும் முத்தீயிட்டு எரித்து ஆறவிட்டு பத்திரப்படுத்தவும்.

அளவு: பணவெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன்.

தீரும் நோய்கள்: குன்மம், குட்டம், மேகம், கிரந்தி, பீலிகை, மகோதரம், மூலம், கண்டமாலை, உள்மூலம், வெளிமூலம் முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

41. தாம்பிரச் செந்தூரம் (வேறு)

1. சுத்தி செய்த தாமிரத்தகடு	35 கிராம்
2. இரசம்	3½ கிராம்
3. வீரம்	,,
4. லிங்கம்	,,
5. தாளகம்	,,
6. நெல்லிக்காய் கெந்தகம்	,,

இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு மை போல் அரைத்து 3 பாகஞ் செய்து ஒரு பாகத்தை மேற்கூறிய தகட்டின்மேல் பூசி சற்று காயவைத்து அகலின் மேல் வைத்து அகல்மூடி 7 சீலைமண் செய்து காயவைத்து 10விராட்டியில் புடம் போட வேண்டியது. பின்பு தகட்டில் மேலிருக்கும் பக்கு மருந்தையுஞ் சேர்த்து பழச்சாறுவிட்டு அரைத்து முன்செய்தப் பிரகாரம் புடம்போட வேண்டியது. இப்படி 3 புடம் போட்டு எடுக்கக் களங்காய் விடும். பின்பு கல்வத்திலிட்டு கெந்தகத்திராவகம் விட்டு அரைத்து வட்டு செய்து காயவைத்து ஓர் அகலில் வைத்து மேல் அகல் மூடி 7சீலைமண் செய்து காயவைத்து 3 விராட்டியில் புடம்போடச் செந்தூரமாய்விடும். இதை கல்வத்திலிட்டு அரைத்து சீசாவில் பதனம் செய்யவும்.

அளவு: அரிசி எடை.

அனுபானம்: நெய் (10 நாள் சாப்பிடவும் அல்லது 40நாள் சாப்பிடவும்)

தீரும் நோய்கள்: 10 நாளில் கண்டமாலை, பௌத்திரம், மேகம், பாரிசவாயு இவைகள் நீங்கும். 40 நாளில் குட்டம் நீங்கும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

தாம்பிரம் சுத்தி செய்வது: செப்புத்தகட்டை எடுத்து உலை முகத்தில் பழுக்கக்காய்ச்சி எலுமிச்சம்பழச் சாற்றில் 32முறை தோய்க்க வேண்டியது. அப்படி தோய்க்கும்போது ஒவ்வொரு தடவைக்கும் புதிதாகவே பீங்கானில் சாற்றை விட்டுத் தோய்த்தத் தகட்டை அதில் நனைக்கவேண்டியது. ஒவ்வொரு முறையும் தோய்த்து பழச்சாற்றைக் கொட்டிவிட வேண்டியது. இப்படி 32 முறை தோய்ப்பதில் தகட்டில் களிம்பற்றுப்போம்.

42. தாம்பிரச் செந்தூரம் (வேறு)

கம்பி நமச்சாரம் 250 கிராம் எடுத்துக் கல்வத்திலிட்டு சன்னமாகயிடித்து செம்பு ராவினத்தூள் 50 கிராம் அதனுடன் சேர்த்து இவ்விரண்டையும் ஒரு பெரிய மூசையில் வைத்து மூசை வாய்க்கு பாளை ஒட்டால் சதுரமாக மூடி கவிழ்த்து உலைக்களத்தில் மூசை அழிய ஊதி எடுக்கவும். ஊதும்போது இதன் புகை எங்கும் பரவும். இதனால் வீட்டில் செய்யக்கூடாது. தோட்டங்களில் செய்யவும். இந்த செம்புக் களிம்பற்று சுத்தமாய் இருக்கும். இதைத் தகடு தட்டி நாலு விராகனெடை தாளகம் நிறுத்துக் கல்வத்திலிட்டு வாய்நீர் விட்டரைத்து தகட்டின் மேல் கவசம் செய்து காயவைத்து ஓர் அகலில் வைத்து மேலகல் மூடி 7 சீலைமண் செய்து பின்னும் காயவைத்து 10 விராட்டியில் புடம் போடவும். ஆறினபின் எடுத்து கல்வத்திலிட்டு நுணுக்கிப் பொடியாக்கவும். இதில் சேரும் சரக்கு நெல்லிக்காய் கெந்தகம் 18 கிராம், இரசம் 12கிராம், லிங்கம் 9 கிராம் சேர்த்து வெடியுப்பு திராவகம் விட்டு நாலு சாமம் அரைத்து வட்டு செய்து காயவைத்து ஒருபுது சட்டியிலிட்டு மேல்சட்டி மூடி 7 சீலைமண் செய்து காயவைத்து அடுப்பிலேற்றி தீபாக்கினி 4 சாமமும்,

கமலாக்கினி 4 சாமமும், காடாக்கினி 4 சாமும் எரித்து ஆறவைத்து, கவசம் பிரித்து வட்டைக் கல்வத்திலிட்டு நுணுக்கிப் பார்க்க முருக்கம்பூ நிறமாக இருக்கும். இதைச் சீசாவில் பதனம் செய்யவும்.

அளவு: குன்றிமணியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய். 10 நாள் அல்லது 20 நாள் சாப்பிடவும்.

தீரும் நோய்கள்: வாதம் 80, பித்தம் 40, மேகம் 21-ம் நீங்கும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

43. தாளகச் செந்தூரம் (வேறு)

1. சுண்ணாம்பு கல்லில் வைத்து கள் அல்லது பதனீர் விட்டு தாளித்து எடுத்த அரிதாரம் 100 கிராம், எலுமிச்சம்பழச் சாற்றில் வைத்து கொதிக்கவைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

2. சிலாசத்து	35 கிராம்
3. ஊதினை கடல் நுரை	25 கிராம்
4. சோடா உப்பு	25 கிராம்

இந்நான்கையும் கல்வத்திலிட்டு பொடித்துக் கொள்ளவும். பிறகு செம்பருத்தி இலையை இடித்துச் சாறுபிழிந்து அச்சாற்றை ஓர் புட்டியில் ஊற்றி மறுநாள் காலையில் பார்க்க அடியில் வண்டலும், மேலே தெளிவான சாறும் தங்கியிருக்கும். மேலே சொன்ன மருந்தை இத்தெளிவான சாறுவிட்டு 3 நாள் அமைத்த பிறகு நிலக்கடம்பு இலைச்சாறு எடுத்து 2 நாட்கள் நன்கு அரைத்து வில்லைதட்டி உலர்ந்தபின் ஓர் அகலில் வைத்து மேல் அகல் மூடி 7 சீலைமண் செய்து உலர்ந்தபின் ஒரு குண்டுசட்டியின்

அடியில் ஒரு துடப்பக்குச்சி நுழையும்படி நான்கு சிறு துவாரம் செய்து பிறகு அச்சட்டியில் பாதி அளவு மணலைக்கொட்டி அதன்மேல் இந்த அகலை வைத்து, மேலே நிறைய மணலைக்கொட்டி அதன்மேல் சட்டி மூடி 7சீலைமண் செய்து உலர்ந்தபின் தென்னம் ஓலையால் ஏழுநாள் இராப்பகல் தீயெரித்து ஆறவைத்துப் பார்க்க அற்புதமான செந்தூரம் முடிந்திருக்கும்.

அளவு: பணவெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பொற்றிலைக்கையான் சாறு, வெல்லம், ஆடாதொடை இலைச்சாறு, தென்னம்பட்டைச்சாறு, கடுக்காய்த்தூள், கரிசிலாங்கண்ணி சாறு, வெண்ணெய், செங்கழுநீர்ச்சாறு.

தீரும்நோய்கள்: பொற்றிலைகையான்சாறு வெல்லம், இவைகளில் 7 நாள் சாப்பிட்டால் காசம் நீங்கும். ஆடாதொடைச்சாற்றில் 7நாள் சாப்பிட்டால் உளமாந்தை எட்டும் நீங்கும். தென்னம்மட்டைச்சாற்றில் சிலேத்தும வாதம் நீங்கும். கடுக்காய்த்தூளில் 2 நாள் காலை, மாலை சாப்பிட சுவாசகாசம் தீரும். கரிசலாங்கண்ணிச் சாற்றில் சுரகாசம் நீங்கும். வெண்ணெயில் 3 அல்லது 7 நாள் சாப்பிட வாந்தி, விக்கல் நீங்கும். செங்கழுநீரினால் சகலவித சுரங்களும் நிவர்த்தி ஆகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

44. திரிமூர்த்திச் செந்தூரம்

1. இரசம்	50 கிராம்
2. கருவங்கம்	100 கிராம்
3. நாகம்	100 கிராம்

கருவங்கத்தையும், நாகத்தையும் உருக்கி கண் விட்டாடும் போது இரசத்தை தொந்தித்து ஆறினபின் கல்வத்திலிட்டு அரைத்து அதனுடன் 100 கிராம் தாளகமும்

100கிராம் நெல்லிக்காய் கெந்தகமும் சேர்த்து பனிக்குட நீரால் நான்கு சாமமரைத்து ஒரு தம்பிடி அளவாக வில்லைகள் செய்து இரண்டுநாள் இரவியில் காயவைத்து அகலில் வைத்து மேல் அகல்மூடி 7 சீலைமண் செய்து காயவைத்து 25 விராட்டியால் புடம்போடவும். நன்றாக சிவக்காதிருந்தால், மறுபடியும் கல்வத்திலிட்டுப் பனிக்குடநீரால் நான்கு சாமமரைத்து முன்போலவே வில்லைகள் செய்து இரவியில் காயவைத்து அகலில் வைத்து ஏழுசீலைமண் செய்து 25விராட்டியால் புடம் போடவும். பின்பு கல்வத்திலிட்டு நன்கு அரைத்து சீசாவில் பத்திரப்படுத்தவும்.

அளவு: குன்றியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், வெண்ணெய், தேன் 10 அல்லது 20 நாட்கள் உட்கொள்ளவும்.

தீரும் நோய்கள்: காசம், ஈளை, இருமல், இரைப்பு, கன்னப்புற்று, கண்டமாலை, பவுத்திரம், பக்கப்பிளவை, மேகக்குட்டம் போன்ற சகலமான பாண்டுகளும் நீங்கும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

45. திரிவங்கச் செந்தூரம்

1. கருவங்கம்	70கிராம்
2. வெள்வங்கம்	,,
3. சிறுகண் நாகம்	,,

மேற்கூறப்பெற்ற மூன்று சரக்குகளையும் முறைப்படி சுத்தி செய்து ஒன்று சேர்த்து உருக்கி சாரச் செயநீரில் சாய்க்க வெட்டையாகிவிடும். குறைந்தது பத்துமுறை சாய்க்க வேண்டும். வெட்டையாகிய திரிவங்கத்தைக் குழியம்மியிலிட்டு,

1. நெ. கந்தகம்	70கிராம்
2. மடல் அரிதாரம்	,,

3. மனோசிலை	70 கிராம்
4. துரிசு	,,
5. வீரம்	,,

ஆகியவைகளையும் சேர்த்து, அறுவகைச் செயநீர்விட்டு 12 மணி நேரம் நன்றாக அரைத்து நிழலிற் உலர்த்திப் பொடி செய்து குப்பியில் அடைத்து ஏழு சீலைசெய்து வாலுகா இயந்திரத்தில் 24 மணிநேரம் எரித்து எடுத்துப்பார்க்க உயர்ந்த செந்தூரமாக இருக்கும்.

அளவு: அரிசியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சர்க்கரை, நெய்.

தீரும் நோய்கள்: மேகம், கருமேகம், செம்மேகம், குறைநோய், குட்டம், குன்மம் முதலியன நிவர்த்தியாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

குறிப்பு: மருத்துவர்கள் இந்த மருந்தைக் கையாளும் போது நோயாளியின் உடல்நிலையறிந்து, நாள், அளவு, பத்தியம் முதலியவைகளைக் கணித்தறிந்து செய்யவேண்டும்.

46. துத்தச் செந்தூரம்

1. துத்தம்	35 கிராம்
2. பூரம்	3½ கிராம்
3. வெடியுப்பு	17½ கிராம்
4. அழிஞ்சிற்பட்டை	,,

மேற்கூறப்பெற்ற துத்தத்தைச் சிறுமண் குடுவையிலிட்டு அடுப்பேற்றித் தீயெரிக்க உருகிவரும். உருகிவரும் பொழுது வேங்கைத் தைலத்தைச் சுருக்குக் கொடுக்க துத்தமானது சுத்தியாகும்.

சுத்தியாகிய துத்தம், பூரம், வெடியுப்பு, அழிஞ்சிற் பட்டை இவைகளைத் தனித்தனியே கருமுள்ளி, செம்முள்ளி வெண்முள்ளி இவைகளின் சாறுவிட்டு மூன்று சாமம் நெகிழ அரைத்து அரைத்த விழுதை சிறுவில்லைகளாகத் தட்டிக் காயவைக்கவும் வில்லைகள் நன்றாகக் காய்ந்தபின் ஓட்டில் வைத்து மேலோடு மூடிச்சீலைமண் செய்து குக்குடப்புட மிட்டு எடுக்க பற்பமாகும்.

இப்பற்பத்துடன் வெங்காரம் 1 விராகனெடை சேர்த்து ஆடுதின்னாப்பிள்ளைச் சாறுவிட்டு நெகிழ அரைத்து முன் கூறியது போலவே புடமிட்டெடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: 1 முதல் 2 அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன், கருணை லேகியம்.

தீரும் நோய்கள்: நெய்யுடன் உட்கொள்ள சகல கழிச்சலும், குன்ம சூலையும் தீரும். தேனுடன் உட்கொள்ள வீக்கமுடன் கூடிய பாண்டுவகை, பிறவலி, ஈளை ஆகியவை தீரும். சர்க்கரையுடன் உட்கொள்ளத் துடிதுடிக்கும் வாதரோகங்களும் சன்னியும் தீரும். கருணை லேகியத்தில் உட்கொள்ள உள்மூலம், வெளிமூலம், இரத்தமூலம், சிழ்மூலம் ஆகியவை தீரும்.

பத்தியம்: புளி, புகை போகம் நீக்குக.

குறிப்பு: வேங்கைப்பட்டை வேர், குழித்தைலம் இறக்கிக் கொள்ளவும்.

47. துருசுச் செந்தூரம்

ஒருபலம் மயில் துத்தத்தை முன்பு கூறியவாறு சுத்தி செய்து கல்வத்திலிட்டு மாதுளங்காய்ச்சாறு, கொடிவேலிச் சாறு, கள்ளிப்பால் இவைகளைத் தனித்தனியாக விட்டு

நன்றாக அரைக்கவும். அதனுடன் வெங்காரம் 8 கிராம் அட்டுப்பு 8 கிராம் சேர்த்து 9 மணி நேரம் நெகிழ அரைத்து சிறுவில்லைகளாக்கி உலர வைக்கவும். உலர்ந்த வில்லைகளை ஓட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலைமண் நான்கு செய்து வாலையைத் தியானம் செய்து குக்குடப் புடமிட்டெடுக்கச் செந்தூரமாகும்.

அளவு: 1 முதல் 3 குன்றி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், சர்க்கரை.

தீரும் நோய்கள்: குழந்தை இல்லாத பேர்களுக்குக் கொடுக்க குழந்தை உண்டாகும். பெருநோய், சோகை, பாண்டு, குறைநோய், காசம் எண்வகைக் குன்மம் ஆகியவைகள் குணமாகும். உடல் பொன்னிறமாகும்.

சர்க்கரையுடன் கொள்ளும்போது வாத சிலேத்துமத்தால் உண்டாகிய சன்னி, சதையடைப்பு, பவுத்திரநோய் இவைகள் தீரும்.

திரிகடுகு சூரணத்துடன் உட்கொள்ள வலிப்பு, ஏங்கல், விக்கல் இவைகள் தீரும்.

குறிப்பு: இம்மருந்தை 30 நாட்கள் பவளத்தில் இட்டு வைக்க அப்பவளம் இளகி நிற்கும். எலுமிச்சங்காயில் இட்டு வைக்க எலுமிச்சங்காய் கருமை நிறமடையும், இதில் இருந்து மருந்து நன்கு முடிந்ததென்பதை அறிந்துகொள்க.

48. துருசுச் செந்தூரம் (வேறு)

1. துருசு	35 கிராம்
2. அரப்பொடி	,,
3. கெந்தகம்	,,
4. வீரம்	9 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளைக் குழியம்மியிலிட்டு நன்றாக நெகிழ 48 மணி நேரம் அரைத்து வில்லைதட்டி வெய்யிலில் உலர்த்தி அனலில் வைத்துக் கனமான புடமாகப் போட்டு எடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: குன்றியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: திரிகடுப்பொடி, தேன்.

தீரும்நோய்கள்: குன்மம் குணமடைவதுடன், கர்ப்பத்தில் உண்டாகும் தோஷம், கிராணி முதலியனவும் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கவும்.

குறிப்பு: நோய்க்குத்தக்க அனுபானத்துடன் உட் கொள்ள வேண்டும்.

49. நவபாஷாணச் செந்தூரம்

1. நெல்லிக்காய் கெந்தகம்	50 கிராம்
2. மடல் அரிதாரம்	,,
3. மனோசிலை	,,
4. பூரம்	,,
5. கௌரி பாடாணம்	,,
6. கருநாபி	,,
7. வெள்ளைப்பாடாணம்	,,
8. வீரம்	,,
9. இலிங்கம்	,,

மேற்கூறிய சரக்குகளைத் தனித்தனியாக ஒவ்வொரு மெல்லிய துணியில் கிழி கட்டிக்கொள்ளவும். ஒரு பானையில் ஐந்து படி தண்ணீர்விட்டு அதில் ஊதின கடல் நுரைச்சுண்ணம் ஒரு படி போட்டு நன்றாகக் கரைத்து ஆறுமணி நேரம் கழித்து வேறொரு பாண்டத்தில் தெளிவாக இருத்துக்கொண்டு அடியிற்கண்ட சரக்குகளை அதில் கரைக்கவும்.

1. கம்பிச்சாரம்	50 கிராம்
2. வளையல் உப்பு	,,
3. வெடியுப்பு	,,
4. நாயுருவி உப்பு	,,
5. குப்பைமேனி உப்பு	,,
6. சோடா உப்பு	,,
7. படிக்காரம்	,,
8. பூநீறு	,,
9. இந்துப்பு	,,
10. செம்முள்ளிக்கீரை உப்பு	50 கிராம்

மேற்படி தெளிவுடன் கரைத்த கரைசலை ஒரு சட்டியில் ஊற்றிக்கொண்டு, ஒரு குச்சியில் கட்டி வைத்துள்ள ஒன்பது சரக்குகளையும் துலாந்திரமாகக் கட்டி அச்சட்டியின் மேல் வைத்து மேல் சட்டிக் கவிழ்த்து சுண்டும்வரையில் சிறு தீயாய் எரிக்கவும்.

பிறகு அக்கிழிகளை அவிழ்த்து கோப்பையில் தனித் தனியே வைத்து காயவைக்கவும். பின்பு கெந்தகம் பத்து கிராம் எடுத்து கரண்டியில் வைத்து உருகும் சமயத்தில் 20 கிராம் ரசம் விட்டு இரும்புக்கோலால் கிண்டி ஆறவைத்துப் பார்க்க களங்காகும்.

மேற்படி களங்கைக் கல்வத்திலிட்டு காயவைத்துள்ள சரக்குகளை (கெந்தகம்) நீங்கலாக மீதியுள்ள எட்டு சரக்குகளையும், வகைக்குப் பத்து கிராம் எடுத்து களங்குடன் சேர்த்து நன்கு அரைத்து குடுவையில் அடைத்து குடுவை வாய்க்கு செங்கல் தேய்த்து அடைத்து ஏழு சீலைமண் செய்து காய்ந்தபிறகு முன்பு கூறிய பூரணச் சந்திரோதயச் செந்தூர முறைப்படி பானைக்குள் வைத்து மேல்பானை கவிழ்த்து ஏழு சீலை மண் செய்து அடுப்பேற்றி 24 மணிநேரம் தீயெரிக்கவும்.

தீயின் அளவு, தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினி யாக முறையே எரித்து ஆறவைத்து குடுவையைத் திறந்து பார்க்க சேந்தூரித்திருக்கும். இதைக் கல்வத்திலிட்டு நெகிழ

அரைத்து வைத்துக்கொள்ளவும். பிறகு இருபது கிராம் கெந்தகம் எடுத்து நாற்பது கிராம் ரசத்தை தொந்தித்து முன் போல களங்கு செய்து கொண்டு களங்குடன் மேற்கூறிய செந்தூரத்தையும் சேர்த்து நன்கு அரைத்துக்கொண்டு பாக்கி உள்ள பாடாண சரக்குகளையும் அத்துடன் சேர்ந்து அரைத்து குடுவைக்குள் கெந்தகத்தை கம்மாறு வெற்றிலைச்சாறு விட்டு அரைத்துப் பூசி அரைத்த மருந்தைக் குடுவைக்குள் வைத்து செங்கல் சில்லிட்டு வலுவாகச் சீலை செய்து காய்ந்த பின்பு முன்போலவே அடுப்பேற்றி முறைப்படி தீ கொடுத்து எரித்து எடுத்துக்கொள்ளவும்.

இதுவே உயர்ந்த நவபாஷாணச் செந்தூரம். இச்செந்தூரத்தின் நிறம் அருணன் போல் செந்தூரித்திருக்கும்.

அளவு: அரிசி எடை. நெய், தேன் இவைகளில் சாப்பிட வேண்டும்.

அனுபானம்: தேன், வெண்ணெய், நெய், சர்க்கரை.

தீரும் நோய்கள்: குறைநோய், குட்டம் போன்ற கொடிய சரும வியாதிகள் இம்மருந்தினால் குணம் அடையும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

குறிப்பு: மருந்து சாப்பிட்டவுடன் 50 குடம் தண்ணீருக்குக் குறையாமல் தலையில் ஊற்றும்படி சொல்லி குளிக்கவேண்டும்.

50. நாககூட்டுச் செந்தூரம்

1. நாகம்	140 கிராம்
2. கம்பிச்சாரம்	35 கிராம்
3. இலுப்பை நெய்	8 ஆழாக்கு

முதலில் நாகத்தை உலையில் வைத்து நன்கு உருக்கிக் கொண்டு உருக்கு முகத்தில் சாரத்தைச் சேர்த்து உருக்கி நெய்யில் சாய்க்கவேண்டும். இதுபோல் 15 தடவை உருக்கிச் சாய்க்க நாகம் சித்தியாகிவிடும்.

பிறகு நாய்த்துளசிச் சாறுவிட்டு நன்கு நெகிழ அரைத்து மேற்படி இலையால் கவசமிட்டு அகலில் வைத்து சீலை செய்து கோழிப்புடம் போடவேண்டும். இதேபோல் மேற்கூறிய மூலிகையினால் மூன்று புடங்கள் போட நாகத்தில் உள்ள ஊரல் போய் வெள்ளியைப்போல் இருக்கும். இதைக் குழியம்மியிலிட்டு தூள் செய்து கெந்தகத் தைலத்தினால் அரைத்து வெய்யிலில் நன்கு காயவைத்து, அரைத்துத் தூளாக்கி காசிக்குப்பியில் அடைத்து மாக்கல்லினால் மூடி ஏழுசீலை செய்து வாலுகா யந்திரத்தின் மத்தியில் வைத்து 12மணி நேரம் எரித்து எடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

வெள்ளி பத்துக்கு 1 பங்கு செந்தூரத்தை உருக்கு முகத்தில் கொடுக்க ஏழு மாற்றுடைய தங்கநிறம் காட்டும்.

இப்படியுள்ள செந்தூரம் நோயை நன்கு குணப் படுத்தும்.

அளவு: நெல் அளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன், வெண்ணெய்.

தீரும்நோய்கள்: மூலம், முளைமூலம், வெள்ளை, வெட்டை, நீர் எரிச்சல், நீர்க்குத்தல் முதலான வெட்டை சம்மந்தமான நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி, போகம் நீக்குக.

51. நாகச் செந்தூரம்

1. சிறுகண் நாகம்	35 கிராம்
2. புன்னைவேர்	,,
3. கருநொச்சிவேர்	35 கிராம்
4. வேம்பின் வேர்	,,
5. தும்பைவேர்	,,
6. வெங்காரம்	,,
7. பூரம்	,,

நாகத்தை ஒரு மண் குடுவையிலிட்டு அடுப்பேற்றி தீயெரிக்க உருகிவரும். உருகிவரும்போது இலுப்பெண் ணெய்யில் சுருக்குக் கொடுக்கவும். இவ்வாறு பத்து முறை செய்ய நாகம் சுத்தியாகும்.

சுத்திசெய்த நாகம், வெங்காரம், பூரம், மேற்கூறப் பெற்ற மூலிகைகளின் வேர் அனைத்தையும் கல்வத்திலிட்டு சிறுசின்னிச்சாறு விட்டு நன்றாக நெகிழ அரைத்து அதனுடன் முட்டை வெள்ளைக்கரு விட்டு அரைத்துச் சிறு வில்லை களாக்கிக் காயவைத்து வில்லைகளை ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலை மண் செய்து மயில் புடமிட்டெடுக்க கருநிறத்துடன் இருக்கும்.

இதை மறுமுறையும் முன்போலவே சிறுசின்னி இலைச்சாற்றாலரைத்துப் புடமிட்டெடுக்கச்செந்தூரமாகும்.

அளவு: குன்றி எடை. (காலை,மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன், கருணை லேகியம்.

தீரும் நோய்கள்: கவுசி, குன்மம், குறைநோய், வண்டுகடி, காசநோய், பீனிசம், பாண்டு, புற்று ஒன்பது வகை மூலம்.

பத்தியம்: புளிநீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

குறிப்பு: நோய்க்குத் தக்கவாறு அனுபானமறிந்து மருந்து கொடுக்கவேண்டும்.

52. நாபிச் செந்தூரம்

1. நாபி	35 கிராம்
2. சீனாக்காரம்	7 கிராம்
3. பூரம்	7 கிராம்
4. நாகம்	7 கிராம்

முதலில் நாபியை எடுத்து அமுரியில் சுத்திசெய்து கொள்க. பிறகு மேற்கூறப்பெற்ற மற்றைய சரக்குகளைச் சுத்தி செய்துகொண்டு கல்வத்திலிட்டு நெகிழ அரைத்து மாதுளை இலைச்சாற்றால் 9 மணிநேரம் நெகிழ மெழுகு பதமாக அரைத்து வில்லை தட்டிக் காயவைக்கவும். காய்ந்த வில்லையை ஓட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலைமண் மூன்று செய்து, சீலை காய்ந்த பிறகு மயில் புடமிட்டெடுக்கப் பற்பமாகும். இப்பற்பத்துடன் மறுமுறை மாதுளை இலைச்சாறு விட்டு நெகிழ அரைத்து முன்போல் புடமிட்டெடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: *1 அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)*

அனுபானம்: *சர்க்கரை, நெய்.*

தீரும் நோய்கள்: மேற்கூறப்பெற்ற செந்தூரத்தைச் சர்க்கரையில் கொள்ள விப்புருதி, நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, பாண்டு, வீக்கம் முதலியன குணமாவதுடன் உடற்காந்தலும் குணமாகும். இச்செந்தூரத்தை நெய்யில் உட்கொள்ள குட்டம், கிரந்தி, மேகம், சூலை, மண்டை வீக்கம், கரப்பான், குலைவாயு முதலியன குணமாகும். இதனைக் கரிசாலைச் சூரணத்துடன் உட்கொள்ள விந்துவைக் கட்டும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்குக.

53. பஞ்சசூதச் செந்தூரம்

1. வீரம்	35 கிராம்
2. இரசசெந்தூரம்	,,
3. இலிங்கம்	,,
4. பூரம்	,,
5. இரசம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை முறைப்படி சுத்தி செய்து குழியம்மியில் ஒன்றன்பின் ஒன்றாக இட்டு நன்கு

நெகிழ 12 மணி நேரம் அரைத்துப் பிறகு நெருஞ்சிச்சாறு விட்டு அரைத்து வில்லைதட்டி உலர்த்தி ஓட்டில் இட்டு கரி நெருப்பில் வைத்து முருங்கைப்பூச்சாறு, தாய்ப்பால் இரண்டும் முறையே 6 மணி நேரம் சுருக்குத்தாக்கி எடுத்துக் குழியம்மியிலிட்டு தாய்ப்பால் விட்டு ஒரு வாரம் நன்கு நெகிழ அரைத்து உலர்த்திக் கொள்க.

அளவு: குன்றிமணியளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன்.

தீரும்நோய்கள்: பிடிப்பு, பக்கவாதம், குத்தல், வாயு முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

குறிப்பு: மருந்தை 5 நாட்கள் இடைவெளி விட்டு மறுபடியும் மருந்து தரவேண்டும். மருத்துவர்கள் நோய்க் கேற்ற துணை மருந்துகளில் அவரவர் அனுபவத்திற்கேற்ப கொடுக்கலாம்.

54. பஞ்ச பாடாணச் செந்தூரம்

1. வெள்ளைப்பாடாணம்	17½ கிராம்
2. கெந்தகம்	,,
3. பூநீர்	,,
4. கம்பிச்சாரம்	,,
5. மடல் அரிதாரம்	,,
6. சவ்வீரம்	,,
7. மான் கொம்பு	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளை முறையே சுத்தி செய்து தனித்தனியே கல்வத்திலிட்டு கையாந்தகரைத் தைலம் விட்டு 18 மணிநேரம் மெழுகு பதமாகும் வரை அரைத்து வில்லை

தட்டிக் காயவைக்கவும். காய்ந்த வில்லைகளை ஓட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலைமண் செய்து புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

மறுமுறையும் இப்பற்பத்தைக் கையாந்தகரைத் தைலத்தால் நன்றாக அரைத்து மேற்கூறியவாறே கெசப்புட மிட்டு எடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: *1 முதல் 3 அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)*

அனுபானம்: தேன், வல்லாரைச் சூரணம்.

தீரும் நோய்கள்: கொடிய நோய்களாகிய பதினெட்டு வகைப் பெருநோயும் தீரும். இம்மருந்தைக் கற்பமாக உண்டுவரின் நரை, திரை நீங்கி உடலுறுதியாகும். சித்துநிலை அடையலாம்.

பத்தியம்: இம்மருந்தை உட்கொள்ளும்போது புளி, புகை, போகம் நீக்குதல் வேண்டும். பத்தியம் தவறினால் உடலுக்கு மிகக் கெடுதலை விளைவிக்கும்.

குறிப்பு: கையான் தைலம்: கையான்தகரைச் சமூலத்தினின்று குழித்தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

55. பவழச் நெந்தூரம்

நற்பவழம் 35 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்தைப் பொடிசெய்து பீங்கானில் போட்டு பழச்சாறும், கண்டங்கத்திரிச்சாறும் சேர்த்து ஊற்றி வெய்யிலில் வைத்து சாறு வற்றிய பிறகு உலர்த்திக் குழியம்மியில் இட்டு,

1. சீனாக்காரம் 35 கிராம்
2. இரசம் ..

3. காந்தம்	35 கிராம்
4. கந்தகம்	17½ கிராம்

இவைகளை முறைப்படி சுத்திசெய்து குழியம்மியிலிட்டு சிறுதேள் கொடுக்கும் சாறுவிட்டு நன்கு நெகிழ 12 மணி நேரம் அரைத்து சிறு சிறு வில்லைகளாகத் தட்டி வெய்யிலில் உலர்த்தவும்.

பிறகு கண்டங்கத்திரியும், சிறுதேள் கொடுக்கும். சமூலத்துடன் சமனெடை எடுத்து நன்கு நெகிழ அரைத்து ஒரு சட்டியில் பாதி அளவு பூசி அதன்மேல் வில்லைகளை வைத்து வில்லையின் மேல் மறுபாதி விழுதை வைத்து மேல்சட்டி மூடி சீலை செய்து வெய்யிலில் உலர்த்தவும்.

ஒரு முழ ஆழம், ஒரு முழ அகலம் ஒரு முழு நீளம் குழி ஒன்று தோண்டி அதற்குள் பாதியளவிற்கு எருவை அடுக்கி இடைவெளிகளில் உமியைக் கொண்டு அதன்மேல் கவசம் செய்து வைத்திருந்த சட்டியை வைத்து சட்டிக்கு மேல் குழிகளிலும் உமியைக் கொட்டிப் புடத்தைக் கொளுத்திவிட வேண்டும். மூன்று நாட்கள் கழித்துப்புடம் நன்றாக ஆறிய பிறகு புடத்தைப் பிரித்து சட்டியை வெளியில் எடுத்துப் பார்த்தால் பவழம் செந்தூரித்து இருக்கும்.

அளவு: ½ குன்றி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நோய்களுக்கேற்ற துணை மருந்துகளுடன் சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

தீரும் நோய்கள்: சுரம், இருமல், காசம், இரைப்பு முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி, போகம் நீக்கவும்.

56. பவழ வங்கச் செந்தூரம்

1. கருவங்கம்	35 கிராம்
2. நற்பவழம்	,,
3. சிலாசத்து	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளை முறைப்படி சுத்திசெய்து குழியம்மியிலிட்டு பழச்சாறுவிட்டு காலை, மாலை இருநேரமும் ஆறுமணி நேரம் நன்கு அரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலர்த்தி சீலை செய்து 50 எருவில் புடம்போட்டு ஆறினபின் எடுத்து நிறுத்து நூறில் ஒன்று கெந்தகம் சேர்த்து நன்கு நெகிழ 6 மணி நேரம் அரைத்து வில்லை தட்டிக்காயவைத்து 50 எருவில் புடமிட உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: குன்றியெடை.(காலை,மாலை, இருவேளை)

அனுபானம்: நெய், தேன், வெண்ணெய், அமிர்த சஞ்சீவி. (சீந்தில் குடிநீர் அல்லது சூரணம்)

தீரும் நோய்கள்: கழிச்சல், சீதம், இரத்தக் கழிச்சல், நீர் எரிச்சல், நீர்க்கடுப்பு, இலிங்கப்புற்று, மேகம், இருமல், இளைப்பு முதலியன குணமாகி கபத்தை போக்கி உடலைக் கற்பமாக்கும்.

பத்தியம்: புளி, புகை, போகம் தள்ளி மருந்து உட்கொள்ளுதல் சாலச் சிறந்ததாகும்.

57. பூரச் செந்தூரம்

1. பூரம்	17½ கிராம்
2. கந்தகம்	9 கிராம்
3. இரசம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகள் மூன்றையும் சுத்தி செய்து குழியம்மியிலிட்டு கம்மாறு வெற்றிலைச் சாறுவிட்டு நன்கு நெகிழ 12 மணி நேரம் அரைத்துக் குப்பியில் அடைத்து குப்பி

வாய்க்கு சில்லிட்டு சில்லின்மேல் ஒரு துவாரம் போட்டு சீலைமண் செய்து ஒரு சட்டியில் பாதியளவு மணல் கொட்டி அதன்மேல் மேற்படி குப்பியை வைத்து குப்பியின் கழுத்து அளவிற்கு மணலைக்கொட்டி துவாரத்திற்கு நேராக ஒரு அலகு போட்டு அடுப்பில் வைத்து தீபாக்கினியாக எரிக்கவேண்டும். அடுப்பு எரியும்போது அலகினால் அடிக்கடி உள் இருக்கும் மருந்தை கிண்டி வர வேண்டும். இவ்வாறு 12 மணி நேரம் எரித்து ஆறவைத்துக் குப்பியைப் பிரித்து எடுக்க பவழ நிறத்தைப் போன்று மருந்து செந்தூரிக்கும்.

அளவு: குன்றியளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன்.

தீரும் நோய்கள்: மேகச்சூடு, குடைச்சல், கௌவிப் பிடிக்கும் பிடிச்சூலை, இரணங்கள், பிடிப்பு முதலியவை குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

58. பூரணச் சந்திரோதய செந்தூரம்

1. இரசம்	50 கிராம்
2. வெள்வங்கம்	,,
3. கம்பிச்சாரம்	,,
4. வெள்ளைப்பாடாணம்	,,
5. நெ. கெந்தகம்	100 கிராம்

மேற்கூறிய சரக்குகள் யாவற்றையும் நன்கு சுத்தி செய்து கொண்டு, சுத்தித்த ரசத்தை மட்டும் குழி அம்மியில் ஊற்றி வைக்கவேண்டும்.

வாயகலமான இரும்புக்கரண்டியில் வெள்வங்கத்தைப் போட்டு உருக்கி வங்கம் உருகிக் கண்விட்டாடும்போது

மேற்படி குழி அம்மியில் உள்ள ரசத்துடன் சேர்த்துவிட வேண்டும் (இரசம் வெட்டையாகிவிடும்)

சிறிது நேரம் கழித்து குழியம்மியில் உள்ள ரச வங்கத்துடன் வெள்ளைப்பாடாணம், கம்பிச்சாரம், நெ.கந்தகம் இம்மூன்றையும் சேர்த்து ½ லிட்டர் குறை வில்லாமல் செம்முள்ளிச்சாறு விட்டு நன்குநெகிழ அரைத்து ஒரு குடுவைக்குள் வைத்து குடுவையின் வாய்க்குச் சில்லிட்டு சீலைசெய்து இரவியில் காயவைக்க வேண்டும்.

பின்பு 6 மரக்கால் பிடிக்கக்கூடிய பானையை அடுப்பில் வைத்து நான்கு விரற்கடை அளவு மணல் கொட்டி உப்புத்தூளும், செங்கல் தூளும் கலந்த 2 லிட்டர் கலவையை மணலின் மேல் கொட்டி, அதன் மத்தியில் மேற்படி மருந்துடன் காய்ந்த குடுவையை வைத்து குடுவையின் மேல் முன்போல் உப்பும் செங்கல் தூளும் சேர்த்து 2 லிட்டர் கொட்டி லேசாக அழுத்திவிட்டு அதன்மேல் பானையின் கழுத்தளவு வரை மணலைக் கொட்டவேண்டும்.

அடுப்பில் வைத்த பானையின் வாய்க்குச் சமமாக அதன்மேல் சிறிய பானை ஒன்றை கவிழ்த்து ஏழு சீலை மண் செய்யவேண்டும். சீலை காய்ந்தபிறகு ஒரே ஜாதி விறகால் 48 மணி நேரம் தீ எரிக்கவும். தீயின் நிதானம் தீபாக்கினி, கமலாக்கினி, கடாக்கினியாக முறையே எரிக்கவேண்டும். இவ்வாறு எரித்து ஆறிய பிறகு மணலை எடுத்தவிட்டு குடுவையின் கவசத்தை நீக்கிப்பார்க்க குடுவையினுள் தங்க சொரூபமாகவும், முருக்கம்பூவின் நிறத்தைப் போலவும் செந்தூரம் இருக்கும். இதைத்தனியாக எடுத்து ஒரு பீங்கானில் வைத்து மருந்தின் மேலுள்ள கரிகளை ஊதிவிட்டு மேற்படி மருந்தை பன்னிரண்டு மணி நேரம் நன்கு நெகிழ அரைத்து பாட்டிலில் அடைக்கவும்.

அளவு: அரிசி எடை, குன்றியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், பறங்கிப்பட்டை லேகியம், பறங்கிப்பட்டைச் சூரணம்.

தீரும் நோய்கள்: சுரம், மூலம், பௌத்திரம், சூலை, கன்னப்புற்று, கண்டமாலை, அரையாப்பு, தொடை வாளை, யோனிப்புற்று, லிங்கப்புற்று, விரைவாதம், மேகம் முதலியன குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

குறிப்பு: மேற்கூறிய மருந்தைக் குன்றியளவு பசு வெண்ணெயுடன் பத்து தினங்கள் காலை, மாலை சாப்பிடத் தாது விருத்தியாகும்.

59. மிருதார் சிங்கிச் செந்தூரம்

1. மிருதார் சிங்கி	100 கிராம்
2. வெங்காரம்	,,
3. படிகாரம்	,,

மேற்கூறப்பெற்ற மூன்று சரக்குகளையும் கல்வத்திலிட்டு கற்றாழையின் சாறுவிட்டு நன்றாக 6 மணி நேரம் அரைத்துப் பின்பு வெள்ளருகுச் சாற்றில் 9 மணி நேரம் அரைத்து பூரம் 100 கிராம் அதனுடன் சேர்த்து கருங்காலிக் குடிநீரில் 4 மணி நேரம் அரைத்து வில்லைதட்டி, வெய்யிலில் காயவைத்து அகலில் வைத்து மேல் அகல் கொண்டு மூடி, இரண்டு சீலை மண் செய்து காயவைத்து, சீலை உலர்ந்தபின் கெசபுடமிட்டெடுக்க சிவப்பு முருக்கம்பூ போல் தோற்றமளிக்கும்.

இப்பற்பத்தை மறுபடியும் கல்வத்திலிட்டு மேற்கூறப் பெற்ற இரண்டு சாறுகளையும் விட்டு நன்கு அரைத்து சிறுவில்லைகளாகத் தட்டி வெய்யிலில் காயவைத்துப் பிறகு அகலில் வைத்து சீலை செய்து காய்ந்தபின் மறுபுட மிட்டெடுக்கக் கல்யாண முருக்கம்பூ போன்ற சிவப்பு நிறத்துடன் செந்தூரமாகும்.

அளவு: 1 முதல் 3 அரிசி எடை. (காலை, மாலை, இருவேளை)

அனுபானம்: நோய்க்குத் தக்கவாறு தேன், நெய்.

தீரும் நோய்கள்: குறை நோய், குட்டம், வெடிப்பு, வீக்கம், வண்டுகடி.

பத்தியம்: புளி, புகை போகம் கூடாது.

60. முத்துச் செந்தூரம்

1. முத்து	35 கிராம்
2. நாகம்	,,
3. இரசம்	,,
4. வீரம்	,,
5. கெந்தகம்	70 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து கொண்டு குழியம்மியிலிட்டுத் தாய்ப்பால்விட்டு பன்னிரெண்டு மணி நேரம் நன்றாக அரைத்து வில்லை செய்து காயவைத்து அகலில் வைத்து அகல் கொண்டு மூடி சீலை செய்து குக்குடப்புடம் போட்டெடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், வெண்ணெய்.

தீரும் நோய்கள்: கிரந்தி, யோனிப்புற்று, லிங்கப்புற்று, கண்டமாலை, மூலநோய்கள், பிளவை, அரையாப்பு, பீனிசம், மூக்கில் சதை வளர்தல் முதலியன குணமாகும்.

பத்தியம்: காரம், புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

61. லோகச் செந்தூரம்

1. லோக பற்பம்	35 கிராம்
2. கெந்தகம்	,,
3. வீரம்	9 கிராம்

மேற்கூறப்பெற்றவைகளைக் குழியம்மியிலிட்டு சிப்பி செயநீர்விட்டு 6 மணி நேரம் நன்கு நெகிழ அரைத்து வில்லைதட்டி வெய்யிலில் காயவைத்து அகலில் வைத்து மேலகல்மூடி சிலைசெய்து கனபுடமிட்டெடுக்கச் செந்தூரிக்கும்.

அளவு: 1 முதல் 3 குன்றி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன்.

தீரும் நோய்கள்: பாண்டு, ஈக்கம், காமாலை, பித்தவாயு, குன்மவாயு, பெருவயிறு, பாரிசவாயு, நீராம்பல், முடக்குவாயு, முக்குற்ற வேறுபாடுகளால் உண்டாகும் ஆறுவித சூலைகள் முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் முதலியவற்றை நீக்கவும்.

62, வெடியுப்புச் செந்தூரம்

1. வெடியுப்பு	35 கிராம்
2. சீனாக்காரம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகள் இரண்டையும் முறைப்படி சுத்தம் செய்து குழியம்மியிலிட்டு வாய்நீர் (சிப்பிநீர்) கொண்டு நன்கு நெகிழ அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து ஓர் அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலை மண் செய்து உலர்ந்தபின் கவுதாரிப்புடமிடப் பற்பமாகும்.

இப்பற்பத்தின் அளவிற்கு இரசம் சேர்த்து வாய் நீரால் அரைக்க இரசம் மடிந்துவிடும். இதை வில்லை தட்டிக் காயவைத்து அகலில் வைத்து மேல் அகல்மூடி காடைப்புடமிடச் செந்தூரமாகும். இச்சுண்ணத்தைச் செம்பிலும், வெள்ளியிலும் கொடுக்க மாற்றாகும்.

அளவு: நெல் எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், வெண்ணெய், தேன்.

தீரும் நோய்கள்: இம்மருந்தினால் கோடி நோய் குணமாகும் என்று கூறியுள்ளார்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

வாய்நீர்: வாலைநீர், குமரிநீர், சிப்பிநீர், எச்சில் என்னும் பலபொருள் ஒருசொல் எனினும் சிப்பி நீர்விட்டு அரைப்பது சிறந்தது.

63. வெள்ளிச் செந்தூரம்

1. சரிகை வெள்ளி	35 கிராம்
2. வெங்காரம்	,,
3. கம்பிச்சாரம்	,,
4. அமுக்கரா வேர்	,,
5. வனமூலி	,,
6. வேளைவேர்	,,
7. வேலிப்பருத்திவேர்	,,

மேற்கூறப்பெற்ற சரிகை வெள்ளியை முறைப்படி பழச்சாற்றினால் சுத்திசெய்து மற்றைய சரக்குகளையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு வனமூலிச்சாற்றினால் நன்றாக நெகிழ அரைத்து வில்லை தட்டிக் காயவைக்கவும். காய்ந்த வில்லைகளை ஓட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலைமண் இரண்டு செய்து மயில் புடம் போட்டெடுக்க செந்தூரமாகும்.

அளவு: 1 முதல் 3 குன்றி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், சர்க்கரை, பால்.

தீரும் நோய்கள்: மேகம், சூலை, பக்கசூலை, மேல்மூச்சு, வலிப்பு, பெருவயிறு, வறட்சி, காந்தல், விப்புருதி, கழலை முதலியன குணமாகும்.

பத்தியம்: நோய்க்கு ஏற்றவாறு பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

64. வெள்வங்கச் செந்தூரம்

1. வெள்வங்கம்	35 கிராம்
2. பூரம்	3½ கிராம்
3. வெங்காரம்	3½ கிராம்

வெள்வங்கக் கட்டியை ஒரு மண் குடுவையிலிட்டு அடுப்பேற்றித் தீயெரிக்க உருகிவரும். உருகி வரும்போது மாதுளம் பூச்சாற்றைச் சுருக்குக் கொடுத்து கொடிவேலி வேரினால் வங்கத்தை வறுக்க வங்கமானது நீரி வெட்டையாகும்.

நீரிய வங்கத்தைக் கல்வத்திலிட்டு அத்துடன் முட்டையின் ஓடு, மாதுளம்பூச்சாறு, கொடிவேலிவேர், வெங்காரம் இவைகளைச் சேர்த்து நன்றாக மெழுகு பதமாகும் வரை அரைக்கவும். அரைத்த விழுதினைச் சிறு வில்லைகளாத் தட்டிக் காயவைக்கவும். காய்ந்த வில்லைகளை ஓட்டிலிட்டு மேலோடு மூடி இரண்டு முறை சீலைசெய்து கெசப்புடமிட்டெடுக்கப் பற்பமாகும். இதை மறுபடியும் முன்போலவே புடமிட்டெடுக்க உயர்ந்த செந்தூரமாகும்.

அளவு: 1 முதல் 3 அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: வெண்ணெய்.

தீரும் நோய்கள்: குன்மம், பித்தத்தாலாகிய நோய், எலும்புருக்கி, உடற்காந்தல்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்குக.

புதுமட்பாண்டத்தில் சமையல் செய்து உட்கொள்ளுதல் சாலச் சிறந்ததாகும்.

65. மகா நீலகண்ட செந்தூரம்

வீரம்	140 கிராம்
பூரம்	,,
ரசம்	,,
தாளகம்	,,
லிங்கம்	,,

மேற்கூறிய சரக்குகளைச் சுத்திசெய்து அத்துடன் அதிவிடயம் 35 கிராமைச் சேர்த்து, கரு ஊமத்தின் இலைச்சாற்றால் 24 மணி நேரம் அரைத்து வில்லைதட்டி உலர்த்தி ஒரு பெரிய அப்பிரகத் தகட்டின்மீது வில்லைகளைப் பரப்பி அதன் மேல் ஒரு பெரிய அப்பிரகத் தகட்டை வைத்து மூடி சுற்றிலும் மண் செய்து ஒரு சிறுபுடம் 1-2 எருவில் போடவும். சீலை இவ்விதமாகவே மறுபடியும் கற்றாலைச் சாற்றால் அரைத்து போடவும். இந்த செந்தூரம் கருப்பாகவே இருக்கும்.

இதனால் இத்துடன் இலிங்கம் 35 கிராம், இரச பற்பம் 35கிராம் இரண்டையும் சேர்த்து அரைத்து வைத்துக்கொண்டு பத்திரப்படுத்தவும்.

அளவு: குன்றிமணி எடை. சீனியில் காலை, மாலை கொடுக்கவும்.

தீரும் நோய்கள்: 64சுரங்களும், சன்னி 13ம், வாதக்கடுப்பு, காசம் 5-ம், சுவாசம் 5-ம் மேகம் 20-ம் யோனிப்புற்று, மேகவிரணம், லிங்கப்புற்று வாதம் 80-ம், சூலை 18-ம், கிரந்தி முதலிய நோய்களும் தீரும்.

பத்தியம்: நோய்களுக்குத்தக்க முறைகளைக் கடைபிடிக்க வேண்டும்.

66. வீரச்செந்தூரம்

வீரம், கந்தகம், அரப்பொடி இம்மூன்றையும் சம எடை எடுத்து எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து கவசமிட்டு அதன் மேல் உப்பை அரைத்து, கவசமிட்டு உலர்த்தி, ஓர் சட்டியில் 2விரற்கடை மணலைப் போட்டு அதன்மேல் வைத்து மணலால் மூடி 8 மணி நேரம் கமலாக்கினியாய் எரித்து எடுக்க செந்தூரமாகும்.

தீரும் நோய்கள்: சகல பலத்த நோய்களுக்கும் கொடுக்கலாம். வாய் பிடிக்காது.

67. மகாபாடாண செந்தூரம்

வெள்ளைப்பாடாணம்	35கிராம்
வீரம்	,,
மனோசிலை	,,
நாகம்	,,
கருநாகம்	,,
வெள்ளீயம்	,,
ரசம்	,,

தாளகம்	35 கிராம்
அரிதாரம்	,,
சீனாக்காரம்	,,
நவச்சாரம்	,,
மான்கொம்பு	,,
இரும்பை ராவினப்பொடி	,,
துருசு	,,
பொன்நிமிளை	,,
துத்தம்	,,
கற்பூரம்	,,

மேற்கூறிய சரக்குகளைச் சுத்தி செய்து கல்வத்தில் இட்டு முட்டை வெண்கருவில், எருக்கம்பால் சேர்த்து, கல்வத்தில் விட்டு 12 மணி நேரம் அரைத்து, பின் தாய்ப்பாலால் 4 மணி நேரமும், பொற்றிலை கையாந்தகரைச் சாற்றினால் 8 மணி நேரமும் நன்றாக அரைத்து உலர்த்தி, குகையிலிட்டு மேல்மூடி 30 வரட்டியில் புடம் போட்டு எடுத்துக்கொள்ளவும்.

பின்னர் எடுத்த செந்தூர எடைக்கு சமனாக நெல்லிக்காய் கந்தகம் சேர்த்து பொற்றிலை கையாந்தகரைச் சாற்றால் அரைத்து புடம்போட்டு எடுத்து செந்தூரத்தைப் பத்திரப்படுத்தவும்.

அளவு: குன்றிமணி எடை மருந்தை சர்க்கரையில் (காலை, மாலை) இருவேளை கொடுக்கவும்.

தீரும் நோய்கள்: வெட்டை, சுரம், சிரதோடம், தலைக்கனம், கபால வாயு, மேகசூலை, வலிப்பு, குன்மம், காமாலை, பாண்டு, சோபை, மார்புவலி, புழுவெட்டு, கண்நோய் முதலியன தீரும்.

38. லகு காடிக்கார செந்தூரம்

இலிங்கம்	ரச செந்தூரம்
காடிக்காரம்	

இம்மூன்று சரக்குகளையும் சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து காசிக்குப்பியில் இட்டு பளப்பக்கல்லால் மூடி உளுந்துமாவில் சீலை 1ம், களிமண்ணால் சீலை 2ம் செய்து உலர்த்தி ஓர் பானையில் 3 லிட்டர் நெல் போட்டு அதற்குள் சீலைசெய்த குப்பியை வைத்து நீர்விட்டு நெல்லை வேகவைக்கவும். பிறகு அக்குப்பியை எடுத்து உள்ளிருக்கும் சரக்குகளை எடுத்துச் சூரணித்து பத்திரப்படுத்தவும்.

அளவு: குன்றிமணி எடை. இருவேளை தேனில் கொடுக்கவும்.

தீரும் நோய்கள்: கண் சொருகல், பேதி, வயிற்று உப்புசம், சுரம், மாந்தம், சன்னி, இசிவு, வாயு குணமாகும்.

இஞ்சிச்சாறும், தேனும் சேர்த்து அதில் கொடுக்க உதிரச்சிக்கல், உதிரக்கட்டி, குன்மக்கட்டி முதலியன தீரும்.

69. சுவர்ண அப்பிரகச் செந்தூரம்

பளிங்கு அப்பிரகத்தை காய்ச்சிக் காய்ச்சி கழுதை மூத்திரத்தில் 6 தடவை தோய்த்து எடுத்து கல்வத்திலிட்டு நீராகாரக் காடியில் செம்பரத்தம் பூக்களைப் போட்டு 4 நாட்கள் வைத்து கசக்கி அந்த ஜலத்தால் அரைத்து ஒருமுழம் உயரம் எருவில் 6 புடமும், எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்து 1 புடமும் போட்டு எடுத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: பணவெடை.

தீரும் நோய்கள்: இளைப்பு நோய், நீரிழிவு, கபரோகங்கள் முதலிய கடும் ரோகங்கள் தீரும்.

70. இராஜ மண்டூரச் செந்தூரம்

மண்டூரம்	35 கிராம்
கந்தகம்	,,
ரசம்	,,

தாளகம்	35 கிராம்
நவச்சாரம்	,,
வெடியுப்பு	,,
கௌரிப்பாடாணம்	,,
சீனாக்காரம்	,,

மேற்படி சரக்குகளைச் சுத்திசெய்து எருக்கம் பாலால் 4 மணி நேரம் அரைத்து, பிறகு எலுமிச்சம்பழச்சாற்றால் 8மணி நேரம் அரைத்து குக்குடப் புடமிட்டு எடுக்கவும். இவ்வாறு 10புடம் போட்டு எடுத்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: பணவெடை.

தீரும் நோய்கள்: பாண்டு, சோகை, காமாலை மூன்று நோய்களும் தீரும்.

71. நாக செந்தூரம்

நாகம்	35 கிராம்
மனோசிலை	,,

சுத்தி செய்த நாகத்தை உருக்கி, உருக்குவாயில் மனோசிலையை கொடுத்து வெள்ளைக் கொழுஞ்சிவேரால் கிண்ட பற்பமாகும். அதை எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்து ஒரு வராகப்புடம் போட்டு அத்துடன்,

வீரம்	35 கிராம்
லிங்கம்	,,
இரசம்	17½ கிராம்

இம்மூன்று சரக்குகளையும் சேர்த்து பொற்றிலை கையாந்தகரைச் சாற்றால் அரைத்து 2-3 குக்குட புடங்கள் போட செந்தூரமாகும். இதை எடுத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: குன்றிமணி எடை. காலை, மாலை (இருவேளை) தேனில்.

தீரும் நோய்கள்: மூலம், குன்மம், இசிவு, இழுப்பு முதலிய நோய்கள் தீரும்.

72. தாளக செந்தூரம்

சுத்தி செய்த தாளகத்தை ஒரு புது சட்டியில் போட்டு அடுப்பின் மேல் வைத்து எரிக்கவும். எரிக்கும்போது முள்முருங்கை (கல்யாண முருங்கை) யின் குச்சியால் செந்தூரமாகும் வரையில் கிளறிக் கொடுக்கவும்.

அளவு: குன்றிமணி எடை. காலை, மாலை. (இருவேளை)

தீரும் நோய்கள்: மேகம், வெட்டை, பிரமேகம், ரத்த பித்தம், சுரம், காசம், கபரோகங்கள் முதலிய நோய்கள் தீரும்.

73. ரச வீரநாக செந்தூரம்

நாகம்	35 கிராம்
மனோசிலை	,,

சுத்தி செய்த நாகத்தை குகையிலிட்டு உருக்கி, உருக்கு வாயில் மனோசிலையை கொடுத்து வெண்கொழுஞ்சி வேரால் கிண்டினால் நீற்றுப்போகும். இதைக் கல்வத்தில் இட்டு,

இரசம்	35 கிராம்
வீரம்	,,

அத்துடன் சேர்த்து தாய்ப்பால் விட்டு மூன்று நாள் பனியில் வைத்து பிறகு எடைக்கு இரட்டிப்பு சுத்தி செய்த நெல்லிக்காய்க் கந்தகம் சேர்த்து பொற்றிலை கையாந்தகரைச் சாற்றால் அரைத்து வில்லைசெய்து உலர்த்தி ஓட்டிலிட்டு

சீலைமண் செய்து குக்குடப் புடங்கள் சிவப்பாகும் வரையில் போடவும். இதை எடுத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: குன்றிமணி எடை. காலை, மாலை (இருவேளை)

தீரும் நோய்கள்: பனை வெல்லம் - சகல மூல ரோகங்கள்.

கௌரி செங்கர்ணச் சூரணம்: வயிற்றில் எரிவு கண்டு சிறுநீர்க்கட்டி தேரை போல் இழைத்த ரோகத்திற்கும், மூலத்தில் எடுத்த சகல ரோகத்திற்கும் கொடுக்கலாம்.

பத்தியம்: சையோகம், புளி, தாம்பூலமாகாது.

பற்பங்கள் சுண்ணங்கள்

1. அப்பிரகப் பற்பம்

அப்பிரகம் 70 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்திற்கு 36 மணி நேரம் சுண்ண நீரினால் சுருக்கிட்டு எடுத்து, வெங்காரப்பொடி 5 பலம் நுணுக்கி அதனுள் மேற்படி அப்பிரகத்தை வைத்து சீலை செய்து 100 எருவில் புடமிட்டு எடுக்க அப்பிரகத்திலுள்ள மினு மினுப்பு அற்று சுத்தமாக இருக்கும். இதைக் குழியம்மியி லிட்டு எலுமிச்சம்பழச் சாற்றினால் நன்கு நெகிழ 36 மணி நேரம் அரைத்து வில்லைதட்டித் தெறிக்கக் காயவைத்து அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலை செய்து 40 எருவில் புடமிடப் பற்பமாகும். இதை மூன்று புடமிடவும்.

அளவு: அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய்.

தீரும் நோய்கள்: மதுமேகம், மேகம், காசம் முதலியன நிவர்த்தியாகும்.

2. அப்பிரக பற்பம் (வேறு)

1. அப்பிரகம்	35 கிராம்
2. வீரம்	,,
3. வெங்காரம்	,,
4. பூரம்	,,
5. கம்பிச்சாரம்	,,
6. நண்டு ஓடு	,,
7. முட்டை ஓடு	,,
8. கபால ஓடு	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை முறைப்படி சுத்தி செய்து குழியம்மியிலிட்டு காரமிட்ட நீரால் 9 மணி நேரம் நன்கு நெகிழ அரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலர்த்தி ஓட்டில் வைத்து மேல் ஓடு மூடி சீலை செய்து கெச புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

அளவு: ½ முதல் 1 அரிசியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், சர்க்கரை.

தீரும் நோய்கள்: சகலவிதமான சிறுநீர் நோயும், மதுமேக நோயும் குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

3. அயப்பற்பம்

1. இரும்புத்தூள் (சுத்தி செய்தது)	35 கிராம்
2. குருக்கத்திப்பூவின் சாறு	250 கிராம்

முதலில் இரும்புத்தூளை குழியம்மியிலிட்டு மேற்படி பூவின் சாற்றைவிட்டு, நன்கு நெகிழ இடைவிடாது மூன்று முதல் 5 நாட்கள் அரைத்து காசளவுள்ள வில்லைகளாகத் தட்டி வெய்யிலில் நன்கு உலர்த்தி, புளியிலையை அரைத்து, மூசை செய்து மூசைக்குள் உலர்ந்த வில்லைகளை வைத்து, மூசைக்கு மண்சீலை செய்து மண்சீலை நன்கு உலர்ந்தபின் 50 எருவில் புடமிடவும். புடம் நன்கு ஆறியபின் புடத்தைப் பிரித்து மருந்தை எடுக்கப் பற்பம் தும்பைப்பூவைப் போன்று வெண்மையாக இருக்கும்.

அளவு: ½ முதல் 1 நெல் எடை. (காலை, மாலை இருவேளை)

துணை மருந்து: சர்க்கரை, தேன், வெண்ணெய், நெய்.

தீரும் நோய்கள்: மேக நோய்கள், பாண்டு, குளிர் சுரம், எலும்புருக்கிச் சுரம், பழஞ்சுரம், மேகப்புண், ஊறல், கிரந்தி, இருமல், இரைப்பு, கட்டிகள் முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம், எள்நெய், கடுகு, மஞ்சள் நீக்கி உணவு உடகொள்ளவும்.

குறிப்பு: மஞ்சள் காமாலை நோயுற்றவருக்கு 5 நாட்கள் காலை, மாலை இருவேளையும் சரீர வன்மைக்கேற்ப ஒன்று முதல் மூன்று நெல் எடை தேன் அல்லது பனைவெல்லத்தில் பொதிந்துக் கொடுக்க மஞ்சள் நோய் ஆறாவது நாள் குணமாகிவிடும். மஞ்சள் நோயுற்றோருக்கு மருந்து கொடுக்கும்போது பால் உணவு (பால் சாதம்) தவிர்த்து வேறு எதுவும் உபயோகிக்கக் கூடாது.

புளி, புகை, போகம், எண்ணெய் நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

4. அய பற்பம் (வேறு)

அயப்பொடி 50 கிராம் எடுத்து 400 மில்லி எலுமிச்சம் பழச்சாறு விட்டு பனிரெண்டு தினங்கள் ஊறவைக்க வேண்டும்.

ஊறவைத்த அயப்பொடியை மறுநாள் எடுத்து சிறு தீயிட்டு சாறு சுண்டும் அளவிற்கு எரித்து பிறகு 400 மில்லி பழச்சாறு விட்டு ஊறவைக்கவேண்டும். இவ்வாறு பனிரெண்டு நாட்கள் ஊறவைத்து வேறு, வேறு சாறுகள் விட்டு 13ம் நாள் அயப்பொடியை நன்கு கழுவி குழியம்மியிலிட்டு 350 கிராம் ஆத்திப்பூவின் சாறுவிட்டு, நன்கு நெகிழ அரைக்க வேண்டும். இவ்வாறு மூன்று முறை சாறுவிட்டு 7நாட்கள் இடைவிடாது அரைத்து பிறகு தேள்கொடுக்கிலைச் சாறு மேற்கூறப்பெற்ற அளவின்படி விட்டு 7 நாட்கள் அரைத்து வில்லை தட்டி வெய்யிலில் நன்கு உலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடிச்சீலை செய்து, 100 எருவில் புடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும்.

அளவு: ½ முதல் 1 அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

துணை மருந்து: தேன், நெய், சர்க்கரை, பால், லேகியங்கள்.

தீரும் நோய்கள்: இம்மருந்தால் நீரிழிவு, சுரம், குளிர் சுரம், நளிர் சுரம், எலும்புருக்கிச் சுரம், வெள்ளை, சீழ் வடிதல், மேகப்புண், மதுமேகம், மதுமேகத்தினால் வரக்கூடிய கட்டிகள், சூலைநோய் முதலியவை குணமாகி பசியை அதிகரிக்கச் செய்து ஆண்மையைப் பெருக்கும்.

பத்தியம்: புளி, புகை, போகம் கூடாது. பாகல், பூசணி, கொள்ளு, சீனி, அவரை, எள்ளு, கள், வாயுப் பொருள்கள் ஆகாது.

குறிப்பு: செம்பு பற்பத்தைக் காட்டிலும் அயபற்பம் மிகவும் சிறந்ததாகும்.

5. கடல்நுரை பற்பம்

1. கடல்நுரை	35 கிராம்
2. கல்லுப்பு	,,
3. சவர்க்காரம்	,,
4. வீரம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை முறைப்படி சுத்தி செய்து குழியம்மியிலிட்டு நாய்வேளைச்சாற்றால் மைபோல அரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலர்த்தி ஓட்டில் வைத்து சீலை செய்து சீலை காய்ந்தபின் கெசப்புடத்தில் பாதி அளவு எரு அடுக்கிப் புடம்போட்டு எடுக்க பற்பமாகும்.

அளவு: அரிசி எடை. (காலை,மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய்.

தீரும் நோய்கள்: தேனில் மருந்தை உட்கொண்டால் கெண்டைவலி, வாய் நீரோட்டம், குன்மவலி முதலியன குணமாகும். நெய்யில் உட்கொள்ளும்போது பாண்டு, 6 வகை கபநோய்கள், மூலம், முளை, நீர்சுரப்பு முதலியன குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

6. கரியுப்பு பற்பம்

1. கரியுப்பு *35 கிராம்*

மேற்கூறப்பெற்ற மருந்தைக் குழியம்மியிலிட்டு குளிர் தாமரைச் சாறுவிட்டு அரைத்து வில்லை செய்து உலர்த்தி வில்லையின் மேல் மேற்படி இலையை அரைத்துப் பூசி மூன்று சீலை மண் செய்து உலர்த்தி மயில் புடமிட்டெடுக்கக் கட்டிப்போகும்.

கட்டிய கரியுப்பைக் குழியம்மியிலிட்டு மேற்கூறிய மூலிகையின் சாறுவிட்டு அரைத்து முன்போல் புடமிட் டெடுக்கப் பற்பமாகும்.

அளவு: நெல் எடை. *(காலை, மாலை இருவேளை)*

அனுபானம்: நெய், சர்க்கரை, தேன்.

தீரும் நோய்கள்: மகோதரம் *(பெருவயிறு)*, முறை சுரம், கெண்டை முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கவும்.

7. கவடி பற்பம்

1. பலகறை *35 கிராம்*

பிரம்மி இலையை ஒரு பானையில் நிரப்பிப் பூப்புடத் தைலம் இறக்கிக்கொள்ளவும். பின்னர் ஓர் அகலில் சுத்தம்

செய்த பலகறை ஒரு பங்கு, மேற்படி தைலம் ஒரு பங்கும் விட்டு நிரப்பி இரண்டு நாட்கள் வெய்யிலில் காய வைக்கவும். பிறகு மற்றோர் அகலால் மூடிச் சீலைசெய்து வெய்யிலிலுலர்த்திப் புடம் போடவும். வெண்மையான பற்பமாகும்.

அளவு: மிளகு அளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய்.

தீரும் நோய்கள்: உப்பிசம், எரிவு, கபம், அசதி முதலியவை தீரும். வாய் நீர் சுரப்பிக்கும், சன்னி நோய்க்கும் கொடுக்கலாம். வேப்பிலைச்சாறுடன் இப்பற்பத்தைக் கலந்து காதில் விட செவிநோய் தீரும்.

பத்தியம்: புளி, காரம் நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

8. கல்நார் பற்பம்

1. கல்நார் 70கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்தைச் சுண்ணநீரில் மூன்று தினங்கள் ஊறவைத்து எடுத்து சுண்ணநீர், நீர்நிரம்பிச் சாறு இவை இரண்டும் கொடுத்து 6 மணி நேரம் நன்கு நெகிழ அரைத்து 50 எருவில் புடமிட்டெடுக்கவும்.

பிறகு வெற்றிலை, வள்ளிக்கிழங்குச் சாறுகள் விட்டு நன்கு அரைத்து அகலில் வைத்து மேல் அகல்மூடி புடமிட்டு எடுக்கவும்.

இவ்வாறு மூன்று புடங்கள் போட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும்.

அளவு: குன்றி அளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: வெண்ணெய், நெய்.

தீரும் நோய்கள்: சிறுநீர் வெடிப்பு, அதிக வெப்பம், நரம்புத்தளர்ச்சி, உட்காங்கை, மூத்திரத்தில் எரிச்சல் முதலியன குணமாகி உடல் பலப்படும்.

பத்தியம்: புளி நீக்குதல் வேண்டும்.

9. கல்நார் பற்பம் (வேறு)

1. கல்நார்	35 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்தை முறைப்படி சுத்தி செய்து புங்கன் வேரை அரைத்து கவசம் செய்து குக்குடப்புட மிட்டெடுத்து அதனுடன்

1. வெங்காரம்	3½ கிராம்
2. அட்டுப்பு	17½ கிராம்

இவை இரண்டையும் சேர்த்து துரதுவளைச்சாறு விட்டு நன்கு நெகிழ அரைத்து வில்லைதட்டி வெய்யிலில் உலர்த்தி ஓட்டிலிட்டு ஓடு மூடி மூன்று சீலை செய்து மயில் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

அளவு: நெல் எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: வெண்ணெய், நெய், தேன். சர்க்கரை.

தீரும் நோய்கள்: தடிப்பு, வீக்கம், மண்டைவலி, கெண்டை, சோகை, மாலைக்கண் முதலியவைகட்கு நெய்யில் மருந்து உட்கொள்ள குணமாகும்.

சன்னி, ஈளை, பாண்டு, குடல்வாதம் முதலிய வற்றிற்குத் தேனில் மருந்து உட்கொள்ளவேண்டும்.

பிரமேகத்திற்குச் சர்க்கரையில் உட்கொள்ள குணமாகும்.

பத்தியம்: நோய்க்கேற்ப பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

10. கல்மதப் பற்பம்

1. கல்மதம்	35 கிராம்
2. வெடியுப்பு	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகள் இரண்டையும் சுத்தித்துக் குழியம்மியிலிட்டு திருகு கள்ளிப்பால், பருத்திச்சாறு முதலியவைகளைச் சேர்த்து நன்கு நெகிழ அரைத்து வில்லை செய்து வெய்யிலில் வைத்து நன்கு உலர்த்தி ஓட்டில் வைத்துச் சீலை செய்து, சீலை காய்ந்தவுடன் மயில் புடத்தில் போட நீறிப்போம்.

அளவு: அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: சர்க்கரை, நெய், தேன்.

தீரும் நோய்கள்: வளிக்குற்றத்தினால் ஏற்பட்ட (வாத குற்றம்), குளிர்சுரம், சன்னி போகும்.

நெய்யில் உட்கொண்டால் பித்த பாண்டு, சூலை, குணமாகும். தேனில் உட்கொண்டால் பித்தத்தினால் உண்டாகும் கபநோய் நீங்கும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவும்.

11. கற்பூர பற்பம்

1. கற்பூரம்	35 கிராம்
2. இரசம்	35 கிராம்
3. வெடியுப்பு	35 கிராம்
4. முப்பு	17½ கிராம்
5. ஐங்கோலம்	3½ கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளை முறைப்படி சுத்தி செய்து குழியம்மியிலிட்டு ஊமத்தஞ்சாறு, கடுக்காயின் சாறு, வெள்ளாட்டுப் பால்விட்டு,

1. சாரம்	3½ கிராம்
2. பூரம்	,,
3. வழலை	,,
4. வெங்காரம்	,,

இந்நான்கு மருந்துகளையும் அதனுடன் சேர்த்து 9மணி நேரம் அரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலர்த்திச் சீலை செய்து குக்குடப் புடமிடப் பற்பமாகும்.

அளவு: 1 முதல் 2 அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சர்க்கரை.

தீரும் நோய்கள்: காசநோய், கருங்குட்டம், விடக்கடி, அண்டவலி, விரைவலி, விரைவீக்கம், உள்வறட்சி, கோழை முதலியன குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

12. காசகுலாந்த பற்பம்

1. சுத்தி செய்த சரிகை வெள்ளி	13¼ கிராம்
2. முழுகெம்பு (கெம்பு நீலக்கல்)	13¼ கிராம்
3. நற்பவளம்	26½ கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளை சுத்திசெய்து குழியம்மியிலிட்டு சூரத்து பன்னீர் விட்டு நன்கு நெகிழ அரைத்து வில்லை தட்டி வெய்யிலில் காயவைத்து அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலைசெய்து புடமிட்டு எடுக்கவும். எடுத்த பற்பத்தின் அளவிற்கு பாதி அளவு அப்பிரக பற்பம் சேர்த்து சிவகரந்தைச் சாறுவிட்டு 24 மணி நேரம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து சிறுபுடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும்.

அளவு: அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், சர்க்கரை.

தீரும்நோய்கள்: காசம், இருமல் முதலியவை குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கவேண்டும்.

13. காசகுடோரி பற்பம்

1. நாயுருவிச் சாம்பல்	*2 லிட்டர்.*
2. சங்கிலைச் சாம்பல்	,,
3. செம்முள்ளிச்சாறு	*10 லிட்டர்*

மேற்கூறப்பெற்ற சாம்பல் இரண்டையும் செம்முள்ளிச் சாற்றில் நன்றாகக் கலக்கி ஒருநாள் வைத்திருந்து மறுநாள் தெளிவாக இறுத்து இரண்டாகப் பிரித்து, பாதித்தெளிவை ஒரு பாண்டத்திலிட்டு அடுப்பேற்றி உப்பாகும் வரை எரித்து உப்பை எடுத்து ஓர் அகலில் வைக்கவேண்டும்.

மேற்படி அகலை கரிநெருப்பின் மேல் வைத்து பாக்கியுள்ள தெளிவு நீரை உப்பிற்குச் சுருக்கிடவேண்டும். தெளிவு பூராவும் சுருக்கிட்டு எடுக்கப் பற்பமாகும்.

அளவு: குன்றி அளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய்.

தீரும் நோய்கள்: காசம், இருமல், இளைப்பு முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம், காரம் நீக்கவும்.

14. குங்கிலியப் பற்பம்

1. குங்கிலியம்	*35 கிராம்*
2. சவர்க்காரம்	,,
3. அட்டுப்பு	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகள் யாவற்றையும் குழியம்மியிலிட்டு சிறுசின்னி சாற்றால் அரைத்து வில்லை செய்து வெய்யிலில் மூன்று நாட்கள் உலர்த்தி ஓட்டிலிட்டு மேல் ஓடு மூடி சீலை செய்து சீலை காய்ந்தபிறகு மயில் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

அளவு: ஒன்று முதல் மூன்று நெல்லெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன், சர்க்கரை.

தீரும் நோய்கள்: வெள்ளை, வெட்டை, நீர்ச்சுருக்கு, நீர் எரிச்சல், மூத்திரத்தில் விந்து விழல், மூத்திரத்துடன் இரத்தம் வருதல் முதலியவை குணமாகி விந்து கட்டும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

குறிப்பு: பத்தியம் இருப்பவர்களுக்கு மட்டுமே மருந்து கொடுக்கவேண்டும். பத்தியம் தவறுபவர்களானால் மருந்து கொடுக்கக்கூடாது. மேலும் நோய்க்கு ஏற்றவாறு பத்தியம் கடைப்பிடிப்பதே சாலச்சிறந்த முறையாகும்.

15. கெந்தகப் பற்பம்

1. நெல்லிக்காய் கெந்தகம் 35 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்தை வெள்ளாட்டு நீரில் சுத்தி செய்து எடுத்துச் சிப்பி பற்பத்தை மேற்கூறிய நீரில் குழைத்து கெந்தகத்தின் மேல் பூசி அதன்மேல் கீழ்க்காய் நெல்லியை சமூலத்துடன் அரைத்துப் பூசி மூன்று சீலை செய்து நன்றாக வெய்யிலில் உலர்த்தி குக்குடப் புடமிடப் பற்பமாகும்.

அளவு: நெல்லெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், திப்பிலிச் சூரணம், தேன்.

தீரும் நோய்கள்: இம்மருந்தை நெய்யில் உட் கொண்டால் முளை மூலம், பவுத்திரம் குணமாகும்.

திப்பிலிச் சூரணத்தில் உட்கொண்டால் கொடிய நோய்கள் யாவும் குணமாகும்.

தேனில் உட்கொண்டால் உடற்கடுப்பு, வீக்கம், காசம், இருமல், உளமாந்தை, நீர்ச்சுரப்பு, புண், புரைகள் முதலியன குணமாகும்.

பத்தியம்: இச்சாப் பத்தியம்.

16. கொம்பரக்கு பற்பம்

1. கொம்பரக்கு	35 கிராம்
2. தாழையின் வேர்	,,
3. வெங்காரம்	,,

மேற்கூறப்பெற்ற மூன்று மருந்துகளையும் குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ மெழுகுபதத்தில் அரைத்து வில்லை தட்டி வெய்யிலில் உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலை செய்து உலர்த்தி மயில் புடமிட பற்பமாகும்.

அளவு: அரிசியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், சர்க்கரை.

தீரும் நோய்கள்: நெய்யில் மருந்தை உட்கொண்டால் வண்டுகடி, வீக்கம் குணமாகும். சர்க்கரையில் கொடுத்தால், விக்கல், ஏங்கல், நரம்புவலி முதலியன குணமாகும். இது நிற்க, நெஞ்சுவலி உடன் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் தவிர்க்கவேண்டும்.

17. சலாசத்துப் பற்பம்

1. சலாசத்து 200 கிராம் (ஒரே கட்டி)
2. நெல்லிக்காய் கெந்தகம் 500 கிராம்
3. கிளிஞ்சல் சுண்ணாம்பு 4 மரக்கால்

மேற்கூறிய சலாசத்துக் கட்டியை 3 நாள் சுண்ணாம்புத் தெளிவு நீரில் ஊறவைக்கவேண்டும். பிறகு கிளிஞ்சல் சுண்ணாம்பை இலேசாகத் தண்ணீர் தெளித்து நீற்று வைத்துக்கொண்டு ஒரு வாயகலமான பாத்திரத்தில் நெல்லிக்காய் கெந்தகத்தைப் போட்டு அடுப்பேற்றி தீயெரிக்கவும். நெல்லிக்காய் கெந்தகம் உருகி வந்ததும் மேலே நீற்றிவைத்துள்ள கிளிஞ்சல் சுண்ணாம்பு நீற்றினை 400கிராம் வரை கொஞ்சம் கொஞ்சமாக உருகிவரும் நெல்லிக்காய் கெந்தகத்தில் தூவி இடைவிடாது கிண்டி வரவும். பின்னர் நூறு எலுமிச்சம்பழத்திற்கு குறையாமல் சாறெடுத்து மேலே கிண்டிய நெல்லிக்காய் கெந்தகத்தில் விட்டு நன்றாகக் கிண்டி மயனமான பின் இறக்கி ஒரு வெள்ளைத்துணியில் நெல்லிக் கெந்தக மயனத்தை ½அங்குல கனம் தடவி சாலசத்துக் கட்டியின்மேல் கவசம் செய்து காயவைக்கவேண்டும். நன்றாகக் காய்ந்த பின்னர் பாக்கியுள்ள சுண்ணாம்பு நீற்றை வேறொரு வெள்ளைத் துணியில் பரத்தி அதன் நடுவே கவசம் செய்த சலாசத்துக் கட்டியை வைத்துப் பிறகு ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலைமண் செய்து 100 எருவிற் புடமிட சலாசத்து நன்கு பற்பமாகும். (இதைப்பிரித்து எடுக்கும்பொழுது பத்திரமாகப் பிரிக்க வேண்டும்.)

அளவு: 1 முதல் 2 அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: வெண்ணெய், நெய், தேன், சர்க்கரை, தண்ணீர் முதலியன.

தீரும் நோய்கள்: வெள்ளை, வெட்டை, நீர்ச்சுருக்கு முதலியன குணமாகும். மேலும் நோய்களுக்கு ஏற்ற அனுபானங்களில் கொடுக்க சகல நோய்களும் குணமாகும்.

பத்தியம்: புளி, காரம் நீக்கி உணவு உட்கொள்ளவும்.

18. சங்கு பற்பம்

1. சங்கு *140 கிராம்*

மேற்கூறப்பெற்ற சங்கை சுத்தி செய்துகொண்டு பின்னர் ஆகாசத்தாமரை இலையை அரைத்து கவசம் செய்து வெய்யிலில் நன்கு காயவைத்து 50 எருவில் புடமிட்டெடுக்க பற்பமாகும்.

அளவு: முத்தின் அளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானமும், தீரும் நோயும்: இப்பற்பத்தை நெய்யுடன் 3 நாள் கொடுக்க கண் இருளல், கண்புகைச்சல் நீங்கும். வெப்புநோய், பித்தநோய் சம நிலையை அடையும். துளசிச்சாற்றில் தர நெருப்பு போன்று காயும் சுரம், சன்னிநோய் தீரும். கபசன்னி நோய்க்குத் துளசிச்சாற்றில் கொடுக்கவும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவும்.

19. சவ்வீர பற்பம்

1. சவ்வீரம் *35 கிராம்*

2. சிப்பி பற்பம் *70 கிராம்*

சவ்வீரத்தை முறைப்படி சுத்தி செய்து சிப்பி பற்பத்தைச் சிற்றண்ட வெள்ளைக் கருவிட்டு நன்கு அரைத்து சீலையில் தடவி, சவ்வீரத்தின்மேல் சுற்றி வெய்யிலில் காயவைத்துக் குக்குடப் புடமிட்டெடுக்க பற்பமாகும்.

அளவு: அரிசியெடை. காலை, மாலை இருவேளை.

அனுபானம்: தேன், நெய், பால்.

தீரும் நோய்கள்: குறைநோய், வண்டுகடி, வாதம், சூலை, காசம், ஈளை, தீராத இடுப்புவலி முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் முதலியவற்றை நீக்க வேண்டும்.

20. சாதிலிங்க பற்பம்

1. சாதிலிங்கம்	*35 கிராம்*

மேற்கூறப்பெற்ற மருந்தை முறைப்படி சுத்திசெய்து குழியம்மியிலிட்டு கருப்புக் குன்றிமணி இலைச்சாறு விட்டு நன்கு நெகிழ அரைத்து அதனுடன் உப்புசேர்த்து நாதநீர் விட்டு அரைத்து

1. படிக்காரம்	*17½ கிராம்*
2. பூரம்	*,,*

இரண்டையும் அதனுடன் சேர்த்து விராலியிலைச்சாறு விட்டு மெழுகாகும்வரை அரைத்து வில்லைதட்டி வெய்யிலில் உலர்த்தி ஓட்டிலிட்டு மேல் ஓடு மூடி சீலை செய்து உலர்த்தி மயில் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

அளவு: *1* முதல் *2* அரிசி எடை. காலை, மாலை இருவேளை.

அனுபானம்: வெண்ணெய், நெய், தேன், சர்க்கரை.

தீரும்நோய்கள்: நெய்யில் உட்கொண்டால் எண்வகை குன்மங்களும் நீங்கும். தேனில் உட்கொண்டால் சுரம், வாய்நீர், விடாவலிப்பு, குடல்பிரட்டு, மசக்கை முதலியன குணமாகும். சர்க்கரையில் உட்கொண்டால் சன்னி, குறைநோய், காசநோய் முதலியன குணமாகும்.

பத்தியம்: இச்சாப் பத்தியம்.

21. சூத பற்பம்

1. இரசம்	35 கிராம்
2. புகை நீர் (வெடியுப்புத் தீ நீர்)	2 ¼ கிராம்

மேற்கூறப்பெற்ற இரசத்தை முறைப்படி சுத்தி செய்து ஒரு பீங்கானிலிட்டு புகைநீரை விட்டு வெய்யிலில் வைக்க இரசமானது பூத்து பிட்டுப் போலாகிவிடும்.

ஒரு கோழி முட்டையை எடுத்து சிறு துவாரம் விட்டு உள்ளிருக்கும் கருவைப் போக்கி மேற்படி பூத்த ரசத்தை அதனுள் வைத்து முட்டையைச் சீலைசெய்து காயவைத்து ஐந்து எருவில் புடமிட உயர்ந்த பற்பமாகும்.

அளவு: கால் முதல் அரை அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: கட்டிவெல்லம், கருப்பட்டி, வெண்ணெய்.

தீரும் நோய்கள்: குழி ரணங்கள், வாதம் இன்னும் தீராத நோய்களெல்லாம் 10 வேளை மருந்தில் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கவும்.

22. சூத பற்பம் (வேறு)

1. இரசம்	35 கிராம்

மேற்கூறிய மருந்தை முறைப்படி சுத்தி செய்து கொள்ளவேண்டும்.

பிறகு முல்லையின் வேரும், காரெள்ளுப் பிண்ணாக்கும் ஒன்றாகக் கூட்டி நன்கு நெகிழ வெண்கருவிட்டு அரைத்து இதனுள் இரசத்தை வைத்த மூடி சீலை செய்து காயவைத்த மயில் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

அளவு: அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: சர்க்கரை, நெய், வெண்ணெய்.

தீரும் நோய்கள்: புண், புரைகள், உதிரக்கட்டு, பதினெட்டு சூலை, வண்டுகடி, வாய்ப்புண் முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும். புகையும் போகமும் கைவிடவேண்டும்.

குறிப்பு: மருந்து சாப்பிடும் காலத்தில் குறைந்தது 1லிட்டர் பால் ஒவ்வொரு நாளும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

23. தங்க பற்பம்

1.தங்கம்	35கிராம்
2. கெந்தகம்	,,
3. இரசம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளைக் குழியம்மியிலிட்டு தங்கத்தையும் சேர்த்துப் பழச்சாறு, முள்ளிச்சாறு இரண்டையும் விட்டு நன்கு நெகிழ அரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலர்த்தி ஓட்டில் வைத்து மேல் ஓடு மூடி சீலை செய்து கெசப்புடமிட பற்பமாகும்.

அளவு: பணவெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், சர்க்கரை சத்துள்ள லேகியங்கள்.

தீரும்நோய்கள்: சன்னி, வாதம், சூலை, சுரம், ஈளை, காசம், மேகம், புண், புரை, சிலந்தி, குட்டம், குன்மம், வாயு, வெப்பத்தை உண்டாக்கும் வரட்சி, காந்தல், பித்தம் முதலியன குணமாகும்.

பத்தியம்: 1. அவ பத்தியமாக இருக்கவேண்டும்.

2. நோயின் நிலைமைக்கு ஏற்றார்போல் பத்தியம் கொள்ளல் சிறந்தது.

24. தாம்பிர பற்பம்

1. செம்புத்தகடு (அல்லது தாம்பிரத்துட்டு) 35 கிராம்

2. கெந்தகம் 17½ கிராம்

மேற்கூறிய தாம்பிரத்தை முறைப்படி சுத்திசெய்து கொண்டு கெந்தகத்தைக் குழியம்மியிலிட்டு அதனுடன் வேலிப்பருத்தி வேரும், நல்லவேளை வேரும் கூட்டி மெழுகுபோல் அரைத்து, மேற்படி தாம்பிரத்துட்டின்மேல் பூசி, சீலை செய்து உலர்த்தி கெசப்புடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாக நீறிப்போகும்.

வேலிப்பருத்திவேர், வேளைவேர் என்று பாட்டில் கூறியுள்ளது. ஆனால் வேருக்குப் பதிலாக வேரின் மேலுள்ள பட்டையைக் கெந்தகத்துடன் சேர்த்து அரைத்துக் கொள்ளலாம்.

அளவு: அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன்.

தீரும் நோய்கள்: கெண்டை, சோகை, நீர்ப்பாண்டு, உள்வறட்சி, நீராம்பல், சூலைக்கட்டு, குன்மம், கொடிய விடம், குட்டம், சூலை முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் தவிர்க்கவும்.

குறிப்பு: ஒரு புடம் என்று கூறப்பட்டு இருப்பினும் பற்பம் சரிவர முடிந்துள்ளதா என்பதை அறிந்து மேலும் இரு புடங்கள் போடவும்.

25. தாம்பிர பற்பம் (வேறு)

1. சுத்தி செய்த தாம்பிரம்	35 கிராம்
2. சுத்தி செய்த பற்பம்	,,

மேற்கூறப்பெற்ற இரண்டு மருந்துகளையும் குழியம்மியிலிட்டு வெள்ளெருக்கம் பாலில் ஊறவைத்து உலர வைத்து ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலைசெய்து கெசப்புடமிடப் பற்பமாகும். பற்பமானது மயில் கழுத்தின் வர்ணத்தைப் பெற்றிருக்கும்.

அளவு: பணவெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய்.

தீரும் நோய்கள்: இப்பற்பத்தை உட்கொள்வதினால் வேதனை தரும் குன்ம நோய்கள் எட்டு, பத்து நாட்களில் குணமாகும்.

பத்தியம்: நோயினது தன்மைகளுக்கு ஏற்றால்போல் பத்தியங்களை வகுத்துக்கொள்ளவேண்டும்.

26. துத்த பற்பம்

1. பால்துத்தம்	35 கிராம்
2. வெங்காரம்	,,
3. கம்பிச்சாரம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை முறைப்படி சுத்தி செய்து குழியம்மியிலிட்டு குப்பைமேனி, சிறுதும்பைச் சாறுகள் விட்டு நன்கு நெகிழ மெழுகு பதம் வரும்வரை அரைத்து வில்லைசெய்து வெய்யிலில் நன்கு உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி சீலை செய்து உலர்ந்தபின் குக்குடப்புடமிட பற்பமாகும்.

அளவு: அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய்.

தீரும் நோய்கள்: தேனில் மருந்தை உட்கொண்டால் உடல் கற்பமாகும். நெய்யில் மருந்தை உட்கொண்டால் பதினெட்டு வகைச்சூலை, புண், புரை, வீக்கம், பெருவயிறு, உள்மூலம், வெளிமூலம் முதலியன குணமாகும்.

பத்தியம்: இச்சாப் பத்தியம்.

27. துருசு பற்பம்

1. துருசு	35 கிராம்
2. வெங்காரம்	7 கிராம்
3. கம்பிச்சாரம்	,,
4. பூரம்	,,
5. பூ நீறு	21 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளைச் சுத்திசெய்து குழியம்மியிலிட்டு நிலப்பனங்கிழங்கின் சாறுகொண்டு நன்கு நெகிழ மெழுகு பதத்தில 9 மணி நேரம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அகலில் வைத்து மேல் அகல்மூடி சீலை செய்து குக்குடப்புடமிட்டு எடுக்கப் பற்பமாகும்.

அளவு: அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சர்க்கரை, திரிகடுகு சூரணம்.

தீரும் நோய்கள்: தேனில் உட்கொள்ளும்போது வாதம், சூலை குணமாகும். சர்க்கரையில் உட்கொள்ளும்போது நீரிழிவு குணமாகும். திரிகடுகு சூரணத்துடன் உட்கொள்ளும் போது பீனிசம் குணமாகும்.

பத்தியம்: இச்சாப் பத்தியம்.

28. நவநீத பற்பம்

கொக்கின் கால் எலும்பின் மேல்தோல்	35 கிராம்
ஆட்டின்பித்து அல்லது ஈரல்	,,
வெண்ணெய்	,,

இவற்றை (பகன்றை) கிலுகிலுப்பைச்சாறு 200 மில்லி விட்டு இரண்டு நாழிகை அரைத்து உருண்டை செய்து கொள்ளவும்.

பகன்றைப்பூ (கிலுகிலுப்பைப்பூ) புன் முருக்கு இலையையும் அரைத்து மூசை செய்து உலர்த்தி ஒரு இரவு பனியில் வைத்து வாய்மூடி சீலைமண் செய்து பாதி வரட்டியில் புடம் போடவும்.

அளவு: 1 முதல் 2 அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பால், தேன்.

தீரும் நோய்கள்: உடல் வைரம் போல் உறுதியாகும். மேகநீர்க்கட்டு, நீர்க்கட்டு, வெப்பநோய்கள் முதலியன குணமாகும்.

பத்தியம்: இச்சாப் பத்தியம்.

29. நாக பற்பம்

நாகம் 35 கிராம்

மேற்கூறப்பெற்ற நாகத்தை முறைப்படி சுத்தி செய்து கொண்டு,

1. குப்பைமேனிவேர்	35 கிராம்
2. சுண்டைவேர்	,,
3. வேளைவேர்	,,
4. காவாளைவேர்	,,

முதலிய வேர்களை சமனெடை எடுத்து அதனுடன் வெண்காரம் 7 கிராம் சேர்த்து நன்கு நெகிழ முட்டை வெண்கருவிட்டு அரைத்து நாகத்தின் மேல் அப்பி, சீலை செய்து காயவைத்து, குக்குடப் புடமிட்டெடுக்க நாகமானது கட்டிப்போகும். இதை மறுபடியும் குழியம்மியிலிட்டு

குப்பைமேனிச் சாறு விட்டு நன்கு நெகிழ அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து மறுபுடமிட பற்பமாகும்.

அளவு: அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன்.

தீரும் நோய்கள்: தலைவலி, கழிச்சல், குடல்வாயு, வண்டுகடி, மேகம், சுரம், சூலை, வீக்கம் முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும். புகையும் போகமும் தவிர்க்கவேண்டும்.

30. படிக்கார பற்பம்

1. படிக்காரம்	35 கிராம்
2. கல்மதம்	,,

மேற்கூறப்பெற்ற இரண்டு மருந்துகளையும் முறைப்படி சுத்தி செய்து குழியம்மியிலிட்டு குமரிச்சாறு விட்டு நன்கு நெகிழ 6 மணி நேரம் அரைத்து, வில்லை செய்து வெய்யிலில் நன்றாக உலர்த்தி அகலில் வைத்துச் சீலை செய்து 50 எருவில் புடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும்.

அளவு: ஒன்று முதல் மூன்று குன்றியளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், வெண்ணெய்.

தீரும் நோய்கள்: மேகம், நீர்ச்சுருக்கு, நீர் எரிச்சல், உடல் இளைத்தல், மூத்திரத்தில் விந்து விழல் முதலியன நீங்கும்.

பத்தியம்: புகை நீக்கவும்.

31. பவள பற்பம்

1. பவளம்	35 கிராம்
2. பொன் அரிதாரம்	,,
3. சிலாசத்து	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகள் மூன்றையும் முறைப்படி சுத்தி செய்து குழியம்மியிலிட்டு வெள்ளெருக்கம் பால் விட்டு ஆறுமணி நேரம் நன்கு அரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல் மூடி 7சீலை செய்து சீலை காய்ந்த பிறகு, அரை அடி உயரத்திற்கு கீழே மணல்கொட்டி மணலின்மேல் 50 எருவடுக்கி புடமிட வேண்டும். மணல் நன்றாக ஆறியபின் புடத்தைப் பிரித்து மருந்தை எடுத்து குழியம்மியிலிட்டு ஐந்து மணி நேரம் நன்கு அரைக்கவும்.

அளவு: அரிசியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், வெண்ணெய் மேலும் நோய்க்குத் தக்க அனுபானங்களில் தர குணமாகும்.

தீரும் நோய்கள்: சுவாசம், காசம், மேகம் முதலியன குணம் ஆகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவும். மேற்கூறியவாறு இரு புடமிட உயரிய பற்பமாகும்.

32. பவள பற்பம் (வேறு)

1. பூநீறு	2 லிட்டர்
2. பனிநீர் அல்லது சுத்தத்தண்ணீர்	8 லிட்டர்
3. வெங்காரம்	35 கிராம்
4. கம்பிச்சாரம்	,,
5. பூச்சூடம்	,,
6. பேரண்டச்சுண்ணம்	3½ கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் பூநீறு ஒரு படியை நான்குபடி தண்ணீரில் கரைத்து ஒருநாள் வைத்திருந்து தெளிவாக இறுத்துத் தெளிவு நீருடன் மற்றைய மருந்துகளைக் கரைத்து வைத்துக்கொள்ளவும்.

பொன் அரிதாரம் ஒருபலம் எடுத்து முறைப்படி சுத்தி செய்து அகலில் வைத்துக் கரிநெருப்பு உண்டாக்கி நெருப்பின் மேல் மேற்படி அகலை வைத்து மேற்படி செயநீர் கொண்டு சுருக்கிட அரிதாரம் வெண்மையான பற்பமாகும்.

1. அரிதார பற்பம்	26 கிராம்
2. சிலாசத்து	,,
3. வெண்சங்கு	,,
4. கலைமான் கொம்பு	,,
5. கல்மதம்	,,
6. நற்பவளம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் இரண்டு முதல் ஆறுவரை உள்ள மருந்துகளை முறைப்படி சுத்தி செய்து குழியம்மியிலிட்டு தாளக பற்பத்தையும் சேர்த்துக் கட்டித் தயிரின் தெளிவு நீரினால் நன்கு நெகிழ 6 மணி நேரம் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடு மூடி 7சீலை செய்து, சீலை காய்ந்த பிறகு 50 எருவில் புடமிட உயர்ந்த பற்பமாகும்.

அளவு: குன்றி அளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன்.

தீரும் நோய்கள்: காசம், இருமல், இளைப்பு, நெஞ்சுவலி, மேகம், நீர்ச்சுருக்கு, சுக்கு இருமல் முதலியன நிவர்த்தியாகும்.

பத்தியம்: இச்சாப் பத்தியம்.

33. பேரண்ட பற்பம்

1. நாய் மண்டை ஓடு

2. மனித மண்டை ஓடு

3. மாட்டு மண்டை ஓடு

4. கழுதை மண்டை ஓடு

5. பன்றி மண்டை ஓடு

மேற்கூறிய 5 மண்டை ஓட்டினையும் தனித்தனியே சுத்தம் செய்தெடுத்துக் கொண்டு ஒரு வாயகலமான பாத்திரத்தில் 8 லிட்டர் தண்ணீர் விட்டு அதில் 1 கிலோ சுண்ணாம்புக் கல்லினையும், 1 கிலோ சோடா உப்பும் போட்டு இதனுடன் மேற்கூறிய ஒவ்வொரு ஓட்டினையும் தனித்தனிப் பாத்திரத்தில் விட்டு கொதிக்க வைத்தெடுக்க சுத்தியாகும். சுத்திசெய்த 5 மண்டை ஓட்டினையும் சமனெடை எடுத்துக் குழியம்மியிலிட்டுத் தூளாக்கி அதனுடன் இஞ்சிச்சாறு விட்டு நான்கு தினம் நன்கு அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி சீலைசெய்து 100 எருவில் புடமிட்டெடுக்க வேண்டும். புடம் ஆறி கவசம் நீக்கி மருந்தை எடுத்து மருந்திற்கு போதுமான அளவு கழுதைப்பால் விட்டு மறுமுறையும் நன்கு அரைத்து வில்லை தட்டி ஓட்டில் வைத்து மோலோடு மூடி சீலை செய்து 100 எருவில் புடமிடப் பற்பமாகும்.

அளவு: 1 முதல் 3 முதல் நெல்லெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: கழுதைப்பால், இஞ்சிச்சாறு, சர்க்கரை.

தீரும் நோய்கள்: பைத்தியம், பிரம்மை, மூர்ச்சை, வலிப்பு முதலியவை குணமாகும்.

பத்தியம்: இச்சாப் பத்தியம்.

34. மனோசிலை பற்பம்

1. சுத்திசெய்த மனோசிலை	35 கிராம்
2. தண்ணீர்விட்டான் கிழங்கு	35 கிராம்
3. அட்டுப்பு	35 கிராம்
4. நண்டின் ஓடு	35 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளைக் குழியம்மியிலிட்டு சிவப்புப் பீர்க்கன் சாறுவிட்டு நன்கு நெகிழ 9 மணி நேரம் அரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலை செய்து மயில் புடமிட்டு எடுக்க பற்பமாகும்.

அளவு: அரிசியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், சர்க்கரை.

தீரும் நோய்கள்: அரை கடிகள், புண், புரை, கண்ட வீக்கம், பீனிசம், திரண்டவாயு, கெண்டைவலி, சுரோணித நட்டம், நீர்ப்பாய்ச்சல் முதலியன நிவர்த்தியாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

35. மிருதார்சிங்கி பற்பம்

1. மிருதார்சிங்கி	35 கிராம்
2.சவர்க்காரம்	7 கிராம்
3. வெங்காரம்	7 கிராம்

மிருதார்சிங்கியை கருங்காலிக் குடிநீரில் போட்டு மூன்று நாட்கள் கழித்து எடுத்துக் கழுவி குழியம்மியிலிட்டு மற்றைய இரண்டு மருந்துகளையும் சேர்த்துக் கொடிவேலிச் சாறுவிட்டு நன்கு நெகிழ 12 மணி நேரம் அரைத்து வில்லை செய்து வெய்யிலில் நன்கு உலர வைத்து ஓட்டிலிட்டு சீலை மண் செய்து நிழலில் உலர்த்தி மயில் புடமிட்டு எடுக்க மிருதார்சிங்கியானது கட்டி நீறும்.

அளவு: அரிசி எடை. (காலை,மாலை இருவேளை)

அனுபானம்: தேன்,சர்க்கரை, நெய்.

தீரும் நோய்கள்: தேனில் மருந்தை உட்கொண்டால் வாத நோய்கள் யாவும் குணமடையும். சர்க்கரையில் மருந்தை உட்கொண்டால் பித்த நோய்கள்,கபநோய்கள், வண்டுகடி, விஷம் முதலியன குணமாகும். நெய்யில் உட்கொண்டால் கபநோய்கள் தீரும்.

பத்தியம்: புளிநீக்கி உணவு உட்கொள்வது நலம்.

36. முத்து பற்பம்

1. நல்முத்து	3½ கிராம்
2. நற்பவளம்	,,
3. மனோசிலை	,,
4. வெங்காரம்	,,
5. தாம்பிரம்	,,
6. வெள்ளி	,,
7. தங்கம்	,,
8. செம்பு	,,
9. இரும்பு	,,
10. நாகம்	,,
11. காரீயம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை முறைப்படி சுத்தி செய்து வள்ளிச்சாற்றில் சுருக்கிட்டு சுத்தி செய்து குழியம்மியி லிட்டு வேளைச்சாறு, தும்பைச்சாறு இரண்டும் சமயெடை விட்டு நன்கு நெகிழ மெழுகு பதத்தில் அரைத்து உருட்டி வெய்யிலில் உலர்த்திச் சீலை செய்து குக்குடப்புடமிடப் பற்பமாகும். (குக்குடப்புடம் இரண்டு போட வேண்டும்) இதில்,

1. வெங்காரம்	3½ கிராம்
2. கம்பிச்சாரம்	,,
3. வீரம்	,,
4. கஸ்தூரி	,,

மேற்கூறப்பெற்ற நான்கு மருந்துகளுடன் புடமிட்டு எடுத்த பற்பத்தை சேர்த்துக் குழியம்மியிலிட்டு முருங்கைப்பூச் சாறு விட்டு 9 மணி நேரம் நன்கு நெகிழ அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலை செய்து மயில் புடமிட பற்பமாகும்.

அளவு: அரிசியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன், சர்க்கரை, குடிநீர், சூரணம்.

தீரும் நோய்கள்: வாதம், காமாலை, சோகை முதலியவைகளுக்கு நெய்யில் உட்கொள்ள வேண்டும். குறைநோய், வண்டுகடிக்குத் தேனில் உட்கொள்ள வேண்டும். குட்டம், கிரந்தி, பிரமேகம் முதலியவற்றிற்குச் சர்க்கரையில் உட்கொள்ள வேண்டும். மேலும் நோய்களுக்கு ஏற்ப அனுபானங்களில் கொடுக்க தீராத வியாதிகளும் குணமாகும்.

பத்தியம்: இச்சாப் பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

37. முத்துச்சிப்பி பற்பம்

முத்துச்சிப்பி	175 கிராம்

மேற்கூறப்பெற்ற சிப்பியை சுத்தி செய்து சட்டியில் அடுக்கி 50 எருவில் புடமிட்டெடுத்துக் குழியம்மியிலிட்டு, வெங்காரம், கம்பிச்சாரம், குமரிவேர் இவை வகைக்கு 35கிராம் சேர்த்து பொற்றலைக் கரப்பான் சாறுவிட்டு நன்கு நெகிழ அரைத்து வில்லை தட்டி வெய்யிலில் காயவைத்து ஓட்டிலிட்டு சீலைசெய்து 50 எருவில் புடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாக இருக்கும். பிறகு நிலப்பனங்கிழங்குச் சாறுவிட்டு அரைத்து மறுபுடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும்.

அளவு: குன்றியளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன்.

தீரும் நோய்கள்: கெண்டை, தவளைக்கட்டு, வாதசுரம், குரல் அடைப்பு, சீத சுரம் முதலியவை குணமாகும்.

பத்தியம்: புளிநீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

38. வங்க சிற்பி பற்பம்

1. காரீயம்	*35* கிராம்
2. மிர்தார்சிங்கி	,,
3. கெந்தகம்	,,
4. குப்பைமேனி	,,

மேற்கூறப்பெற்ற மூன்று மருந்துகளையும் முறைப்படி நன்கு சுத்திசெய்து அடுப்பில் ஒரு இரும்புச்சட்டி வைத்து காரீயத்தைப் போட்டு சிறுதீயிட்டு உருகும்போது மிர்தார் சிங்கியைத் தூள்செய்து கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக கிராசம் கொடுத்து எடுத்துக்கொண்டு கெந்தகத்திற்குக் குப்பைமேனிச்சாறு விட்டு நன்கு நெகிழ அரைத்து மேற்படி வங்கத்திற்குக் கவசம் செய்து சீலை செய்து அவிப்புடமிட்டு எடுத்துக்கொண்டு மறுமுறையும் கெந்தகமயனத்தை அப்பிப் புடமிட்டெடுக்க பற்பமாகும். முதல்முறை புடமிட் டெடுக்கும்போது மருந்து கருகி இருக்கும். இரண்டாவது முறை புடமிடும்போது தும்பைப்பூ போன்று வெளுத்து இருக்கும்.

அளவு: அரிசியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: சர்க்கரை, நெய்.

தீரும் நோய்கள்: சர்க்கரையில் மருந்தை உட்கொள்ளும் போது குட்டநோய் யாவும் குணமாவதுடன் தோல் சம்மந்தமான நோய்களும் குணமாகும். நெய்யில்

உட்கொள்ளும்போது சகலவிதமான கழிச்சலும், மேகமும் குணமாகும்

பத்தியம்: இச்சாப்பத்தியம்

39. வெள்ளி பற்பம்

1. சரிகை வெள்ளி 35 கிராம்

2. பொன் அரிதாரம் ,,

மேற்கூறப்பெற்ற பொன் அரிதாரத்தை சிறு செருப்படைச் சாறுவிட்டு நன்கு நெகிழ மெழுகு பதமாகும் வரை அரைத்து மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

வெள்ளியை குகையிலிட்டு உருகவைத்து நன்றாக உருகும்போது ஒவ்வொரு மாத்திரையாக வெள்ளிக்கு கிராசம் கொடுக்க வெள்ளி வெட்டையாகிவிடும்.

வெட்டையாகிய வெள்ளியின் எடைக்கு நற்பவளம் சேர்த்துக் குழியம்மியிலிட்டு சிறு செருப்படிச் சாறுவிட்டு 12மணி நேரம் நன்கு நெகிழ மெழுகு பதம் வரும்வரை அரைத்து வில்லைத் தட்டிக் காயவைத்து அகலிலிட்டு மேல் அகல் மூடி சீலைசெய்து 30 எருவில் புடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும்.

அளவு: குன்றியளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், தூதுவளைக்குடிநீர், நல்ல லேகியம்.

தீரும் நோய்கள்: இளைப்பு, காசம், மேகம், நீர் எரிச்சல், பெரும்பாடு முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

40. வெள்ளி பற்பம்

1. வெள்ளி பற்பம்	35 கிராம்
2. சுத்தி செய்த கெந்தகம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளைக் குழியம்மியிலிட்டு பழச்சாறு சிறு செருப்படிச்சாறு இரண்டும் விட்டு 12 மணி நேரம் நன்கு நெகிழ அரைத்து வில்லைதட்டி வெய்யிலில் உலர்த்திக் கெசப்புடம் போட்டு எடுத்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: பணவெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய், சர்க்கரை.

தீரும் நோய்கள்: நீராம்பல், பெருவயிறு, வாயு முதலியன குணமாகும்.

41. வெள்வங்க பற்பம்

1. வெள்வங்கம்	35 கிராம்
2. அண்டா ஓடு	,,
3. நண்டு ஓடு	,,
4. வெங்காரம்	,,
5. முப்பு	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் வங்கத்தை முறைப்படி சுத்தி செய்து எடுத்து ஒரு இரும்புச் சட்டியிலிட்டு தீ எரித்து உருகவைத்து, உருக்கு முகத்தில் அண்ட ஓடு, நண்டு ஓடு, வெங்காரம் ஆகியவற்றை ஒன்றன்பின் ஒன்றாக கிராசம் கொடுக்க வங்கம் மடிந்து தூளாகிவிடும். இத்தூளை குழியம்மியிலிட்டு குப்பைமேனிச் சாற்றால் நன்கு நெகிழ அரைத்து வில்லை தட்டி வெய்யிலில் காயவைத்து ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலை செய்து மயில்புடமிட்டு எடுக்க மல்லிகைப்பூ நிறத்தை ஒத்த பற்மாக இருக்கும்.

அளவு: நெல் எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: வெண்ணெய், தேன், பொற்றலைக் கையான் சூரணம்.

தீரும் நோய்கள்: காசநோய்கள், வண்டுக்கடி, பாண்டு காமாலை, புண், புரை, மேகம் முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்க வேண்டும்.

42. அயபற்பம்

அரப்பொடி	420 கிராம்
இலிங்கம்	35 கிராம்

இவைகளைச் சுத்திசெய்து கற்றாழைச் சாற்றால் 8மணி நேரம் அரைத்து வில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து வராகப் புடம் போடவும். அவ்விதம் 7 முறை புடம் போட்டு எடுத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: குன்றி எடை, வெண்ணெய் கொடுத்தவுடன் கருங்குருஞ்சாவும், வெந்தயமும், வெங்காயமும் சேர்ந்த கசாயம் அல்லது வேறு கஷாயங்களும் கொடுக்கத் தீரும்.

தீரும் நோய்கள்: கண்,கை, கால் எரிச்சல், பசியின்மை, கணச்சூடு, தேகவீக்கம், இளைப்பு, சோபை, பாண்டு, அன்னத்துவேசம், பித்தமயக்கம், பித்தவாயு முதலியன குணமாகும்.

43. வங்க பற்பம்

வங்கம்	350 கிராம்
வெடியுப்பு	35 கிராம்

இரண்டையும் சுத்திசெய்து பாத்திரத்திலிட்டு சேர்த்துக் கிண்ட தவிடு போலாகும். அத்துடன் வட்டத்துத்தி வேரை துண்டுகளாக்கி வறுத்தெடுக்க பற்பமாகும். இதை எடுத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: குன்றி எடை பாலில் இருவேளை.

தீரும் நோய்கள்: மேகம், நீரிழிவு, மேக ஊறல் முதலிய அநேக மேக வியாதிகளும் குணமாகும்.

44. காந்த பற்பம்

சிறியாநங்கையுடன் அமுரி சேர்த்து இடித்துச் சாறு எடுத்து அந்தச்சாற்றால் சுத்தி செய்த காந்தத்தை மூன்று நாட்கள் அரைத்து வில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து கஜபுடம் போட பற்பமாகும்.

அளவு: சுக்கை அரைத்து அதற்குள் பணவிடை பற்பம் வைத்துக்கொடுக்கவும்.

தீரும் நோய்கள்: பாண்டு, கிராணி, பிரமேகம், மூலம் முதலியன தீரும்.

45. கல்லுப்பு பற்பம்

ஒரு சட்டியில் வன்னி மரத்துப் பட்டைத்தூள் பாதி போட்டு அதன்மேல் கல்லுப்பை வைத்து அதன்மேல் மேற்படி பட்டைத்தூளைப் போட்டு மேல்மூடி சீலைமண் செய்து 10 எருவில் புடம்போட பற்பமாகும்.

அளவு: குன்றி எடை. வெல்லத்தில் இருவேளை.

தீரும் நோய்கள்: பாரிசவாயு, சூலை, மகோதரம், குன்மம், வாதம் முதலியன தீரும்.

46. கருவங்க பற்பம்

கருவங்கம் நாயுருவி சமூலம்

முதலில் நாயுருவி சமூலத்தை துண்டுகளாக்கி நிழலில் உலர்த்தி சூரணித்து வைத்துக்கொள்ளவும். பின் சுத்தி செய்த

காரீயத்தை இரும்பு வாணலியில் இட்டு உருக்கி, உருக்கு வாயில் நாயுருவி சூரணத்தைத் தூவிக்கொண்டே துளாவிக் கொண்டு இருக்கவேண்டும். இவ்வாறு செய்ய கருவங்கம் 4 முதல் 8 மணி நேரத்தில் வெட்டையாகும். இவ்வாறு துளாவிக்கொண்டே இருக்க பற்பமாகும். இதை எடுத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: குன்றி எடை.

தீரும் நோய்கள்: சகல மேக நோய்களும் தீரும்.

வேறுமுறை: இவ்வாறே சுத்தி செய்த காரீயத்தை வெங்காயத்தோலைப் போல் மெல்லிய தகடுகளாக்கி, கருநொச்சி இலையை அரைத்து ஒவ்வொரு தகடுகளுக்கும் கவசமிட்டு ஒரு சட்டியில் வைத்து மேல்மூடி சீலைமண் செய்து முழப்புடம் போட பற்பமாகும். இதை எடுத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: குன்றி எடை. நெய்யில் இருவேளை.

தீரும் நோய்கள்: மேகம், நீரிழிவு முதலியன தீரும்.

47. மண்டூரப் பற்பம்

மண்டூரம் காஞ்சோரி சுணங்கைச்சாறு

சுத்தி செய்த மண்டூரத்தை இரும்பு கடப்பாறையால் இடித்து தூளாக்கி வஸ்திரகாயஞ் செய்து காஞ்சோரி சுணங்கைச் சாற்றை விட்டு 12 மணிநேரம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி, ஓட்டிலிட்டு சீலைமண் செய்து கஜபுடம் போட பற்பமாகும்.

அளவு: குன்றி எடை. தேனில் இருவேளை.

தீரும் நோய்கள்: பாண்டு, சோபை, வீக்கம், இளைப்பு நோய், காசநோய் முதலியன தீரும்.

48. அஞ்சனக்கல் பற்பம்

அஞ்சனக்கல் சிறுகீரைச்சாறு

அஞ்சனக்கல்லை சிறுகீரைச்சாற்றால் 12 மணி நேரம் அரைத்து வில்லைதட்டி, உலர்த்தி, ஒவ்வொரு வில்லைக்கும் சிறுகீரையை அரைத்து கவசம்செய்து நிழலில் உலர்த்தவும். பின்னர் வில்லைகளை ஓட்டிலிட்டு மேல்மூடி சீலைமண் செய்து கஜபுடம் போட பற்பமாகும்.

அளவு: குன்றி எடை. தேனில் இருவேளை.

தீரும் நோய்கள்: மேக நோய்கள் 20ம் குணமாகும்.

49. கற்பூர சலாசத்து பற்பம்

கற்பூர சலாசத்து கோவையிலை

கோவையிலையை அரைத்து அதற்குள் சுத்தி செய்த கற்பூர சலாசத்தை வைத்து மூடி சீலைமண் செய்து சிறுபுடம் போட பற்பமாகும். இதை எடுத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: குன்றி எடை. நெய்யில் இருவேளை.

தீரும் நோய்கள்: பித்த வெட்டை, உஷ்ண ரோகங்கள், நீர்க்கடுப்பு, தேக எரிவு, கல்லடைப்பு முதலியன தீரும்.

50. சவ்வீர பற்பம்

வீரம் அப்பைக் கிழங்கு

அப்பைக்கிழங்கை அரைத்து அதற்குள் சுத்தி செய்த வீரத்தை வைத்து மூடி சீலைமண் செய்து 10 வரட்டியில் புடம் போட பற்பமாகும்.

அளவு: 2 மி. கி. தேனில் இருவேளை.

தீரும் நோய்கள்: சூலை, குன்மம், வாயு, சன்னி, குட்டம், மேகம் முதலியவைகள் தீரும்.

சுண்ணங்கள்

1. அப்பிரகச் சுண்ணம்

அப்பிரகம் 140 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்தை குழியம்மியிலிட்டுத் தூள் செய்து எழுத்தாணிப் பூண்டின் சாற்றை அதில் பிழிந்து வைக்கவேண்டும். சிறிது நேரத்தில் குழியம்மியிலிலுள்ள மருந்து நன்கு கொதிக்கும். அப்படியே ஒருநாள் வைத்திருந்து மறு மூன்று நாட்களும் மேற்படிச் சாற்றினால் மெழுகாகும் வரை அரைத்து வில்லை தட்டி வெய்யிலில் உலர்த்த வேண்டும். (வில்லைகள் காசளவாக இருக்கவேண்டும்.)

உலர்ந்த வில்லைகளைச் சட்டியில் அடுக்கி மேல் சட்டிகொண்டு மூடி 5 சீலை செய்து 50 எருவில் புடமிட்டு எடுக்க வேண்டும்.

இதை மறுபடியும் குழியம்மியிலிட்டு திருநீற்றுப் பச்சிலைச்சாறு விட்டு அரைத்து மேற்கூறியபடி மூன்று புடமிட்டு எடுக்க அப்பிரகம் சுண்ணமாகும்.

அளவு: அரிசியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: வெல்லம், நெய், தேன்.

தீரும் நோய்கள்: மதுமேகம், காசம், ஈளை, சுரமாந்தம், நீர்ச்சுருக்கு முதலியன குணமாகும்.

பத்தியம்: இச்சாபத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

2. தாம்பிரக் கண்ணம்

1. தாம்பிரக்காசு	70 கிராம்
2. கெந்தகம்	35 கிராம்

மேற்கூறப்பெற்ற தாம்பிரத்தை ஒரு சுடுவையில் போட்டு ஆடு தீண்டாப்பாலைச் சாறுவிட்டு சுடுவைக்குச் சில்லிட்டு சீலை செய்து ஐம்பது எருவில் புடமிட்டெடுக்க தாம்பிரம் களங்காக இருக்கும். இதை எடுத்துக் குழியம்மியிலிட்டு வெள்ளெருக்கன்பால் விட்டு நன்கு நெகிழ அரைத்து காசளவுள்ள வில்லைகளாகத் தட்டி வெய்யிலில் உலர்த்திக்கொள்ளவும்.

பின்பு கெந்தகப் பற்பத்திற்கு கோழி முட்டையின் வெண்கரு விட்டு நன்கு நெகிழ அரைத்து இரண்டு அகல்கள் செய்து உலர்த்தி அதனுள் மேற்படி தாம்பிரக்களங்கு வில்லைகளை வைத்து மேல் அகல் வைத்து மூடி சீலைசெய்து இருபத்தைந்து எருவில் புடமிட்டெடுக்க உயர்ந்த சுண்ணமாக இருக்கும்.

அளவு: அரை அரிசி முதல் இரண்டு அரிசி எடை காலை, மாலை இருவேளை. உடல் வன்மைக்கேற்ப அளவைக் கூட்டியும் குறைத்தும் கொடுக்கலாம்.

அனுபானம்: தேன், வெண்ணெய், நெய்.

தீரும் நோய்கள்: வாத பித்த, கபநோய்கள், குட்டநோய், நடுக்குவாதம், காக்கைவலி, குன்மநோய், தோல் சம்மந்தமான நோய்கள் குணமாகும்.

பத்தியம்: பால், நெய், மோர், அவல், பொரி, பாசிப்பயறு, பச்சிரிசிக் கஞ்சி இவற்றைத் தவிர்த்து வேறு ஏதும் சேர்க்கக்கூடாது.

(உப்பு, புளி, புகை, போகம், நல்லெண்ணெய், கடுகு, மஞ்சள் இவைகளை நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.)

3. முத்துச்சுண்ணம்

1. முத்து	35 கிராம்
2. வெடியுப்பு	,,
3. பூரம்	,,
4. வீரம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை சுத்தி செய்து கல்வத்திலிட்டு 12 மணி நேரம் வெடியுப்புச் செயநீர் விட்டு மெழுகுப்பதம் வரும் வரை அரைத்து வில்லைதட்டி வெய்யிலில் உலர்த்தி அகலில் வைத்து மேல் அகலிட்டுச் சீலைசெய்து 15 எருவில் புடமிட்டெடுக்க சுண்ணமாகும்.

அளவு: மேற்படிச் சுண்ணத்தில் 1 பணவெடை நிறுத்து எடுத்து அதை 96 வேளை மருந்தாக அளவிட்டுப் பிரித்து காலை, மாலை இருவேளை உட்கொள்ளவேண்டும்.

அனுபானம்: தேன், நெய், வெண்ணெய்.

தீரும் நோய்கள்: கண்கள் ஒளிபெறும் பகலில் நட்சத்திரம் தெரியக்கூடிய அளவிற்கு ஒளி கிடைக்கும். காய சித்தி ஏற்படும். இச்சுண்ணம் நிறம் குறைவு பட்டு இருந்தால் செங்கொடி வேலிப்பட்டையின் சாறுவிட்டு அரைத்து மறுபுடமிட்டு எடுக்க உயர்ந்த சுண்ணமாக இருக்கும்.

4. முப்புச் சுண்ணம்

1. வெங்காரச்சுண்ணம்	10 கிராம்
2. கற்பூரச் சுண்ணம்	,,
3. துருசுச் சுண்ணம்	,
4. வீரச்சுண்ணம்	,,
5. வெடியுப்புச் சுண்ணம்	,,

மேற்கூறப்பெற்ற ஐந்து மருந்துகளையும் கல்வத்தி லிட்டு பன்னீர் விட்டு நன்கு நெகிழ 6 மணி நேரம் அரைத்து வில்லைதட்டி வெய்யிலில் உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலை செய்து,

ஒரு பெரிய சட்டியின் அடியில் 2 லிட்டர் உப்பைக் கொட்டி அதன் மத்தியில் அகலை வைத்து மேலும் 2 லிட்டர் உப்பைக் கொட்டி மேல் சட்டி மூடி 7 சீலை செய்து காயவைத்து அடுப்பேற்றி 12 மணி நேரம் எரித்து ஆறவிட்டு ஆண்டவனை வணங்கி சட்டியைப் பிரித்துப் பார்த்தால் வில்லையானது தங்கத்தைப்போல் ஒளியுடன் கூடி உருகி கட்டி நிற்கும். இதை எடுத்துக் குழியம்மியிலிட்டு மேற்படி பன்னீர்விட்டு நன்கு அரைத்து வில்லை தட்டிக்காய வைத்து அகலிலிட்டு சீலை செய்து சீலை உலர்ந்தபின் 10 எருவில் புடம் போடவும். இவ்வாறு ஐந்துமுறை புடம்போட்டு எடுக்க உயர்ந்த கடுங்கராச் சுண்ணமாகும்.

அளவு: அரிசியெடை. *(காலையில் மட்டும்)*

அனுபானம்: வெண்ணெய், நெய், தேன்.

தீரும் நோய்கள்: புற்றுநோய் முதலிய கொடிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

குறிப்பு: புற்று நோய்க்கு சிறந்த மருந்தாகக் கொள்ளலாம்.

5. வங்கச் சுண்ணம்

1. கருவங்கம் (காரீயம்)	35 கிராம்
2. அரிசித்திப்பிலி	245 கிராம்

மேற்கூறப்பெற்ற கருவங்கத்தைச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி தீயெரிக்க உருகும். வங்கம் உருகிக் கண் விட்டாடும்போது அரிசித் திப்பிலியைக் கிராசம் கொடுத்து வறுக்க வங்கம் மடிந்து விடும்.

மடிந்த வங்கத்தை குழியம்மியிலிட்டு திருநீற்றுப் பச்சிலைச்சாறு பிழிந்து நான்கு சாமம் நன்றாக அரைத்து

வில்லை தட்டி உலர வைத்து எடுத்து அகலிலிட்டு சீலை செய்து உலர்த்தி 50 எருவில் புடம் போடவேண்டும். இவ்வாறு 5 முறை புடம்போட்டு எடுக்க கடுங்காரச் சுண்ணமாகும்.

அளவு: 1 முதல் 3 அரிசி எடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய், தேன்.

தீரும் நோய்கள்: இச்சுண்ணத்தை உடல் வன்மைக்குத் தக்கபடி தினமும் காலை, மாலை இரண்டு வேளையும் உட்கொண்டு வந்தால் 61 வகை மேகங்களும் குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

குறிப்பு: ஒரு வாரத்திற்கு ஒருமுறை மருந்தை நிறுத்தி மறுமுறையும் சாப்பிடுவது நலம்.

6. கல்லுப்புச் சுண்ணம்

கல் சுண்ணாம்பை நீற்றி ஒரு சட்டியில் போட்டு அமுக்கி பிறகு கல்லுப்பை ஒவ்வொன்றாய் அச்சுண்ணாம்புக்குள் வைத்து மறையும் படியாய் அதன்மேல் சுண்ணாம்புக்குள் போட்டு அகலால் மூடி சீலைமண் செய்து 50 வரட்டியில் புடம் சுண்ணமாகும். இது பலனை கொடுக்கும்.

7. சவுக்காரச் சுண்ணம்

சவுக்காரக் கட்டியை எலுமிச்சம்பழச் சாற்றில் தோய்த்துத் தோய்த்து வெய்யிலில் 9 நாட்கள் காயப்போட சவுக்காரத்திலுள்ள எண்ணெய் எல்லாம் கக்கி போகும். பிறகு அதைக் கல்வத்திலிட்டு அதற்கு சரி எடை

சீனாக்காரம்	நவச்சாரம்
வீரம்	பூரம்

இவைகளைச் சேர்த்து கால பைரவ ஜெயநீரால் அரைத்து வில்லை தட்டி வெய்யிலில் உலர்த்தி ஒட்டிவிட்டு சீலைமண் செய்து புடம் போட்டு எடுக்க சுண்ணமாகும்.

பயன்: இந்த சுண்ணத்தால் சகல சரக்குகளையும் கட்டலாம். இன்னும் அநேக மருந்துகளிலும் பயன்படும்.

8. கற்பூரச் சுண்ணம்

35 கிராம் காய்க்கு நாட்டுக் கற்பூரத்தை கல்வத்தில் இட்டு கற்பூரவள்ளி இலைச்சாறு விட்டு 4 மணி நேரம் அரைத்து வில்லை தட்டி நிழலில் உலர்த்தி ஒட்டிவிட்டு சீலைமண் செய்து 5 வரட்டியில் புடம்போட சுண்ணமாகும்.

பயன்: தாம்பூலத்துடன் சாப்பிட்டால் வச்சிர சரீரமாகும். சகலவித கபரோகங்கள், மலக்கட்டு, நீர்க்கட்டுத் தீரும்.

9. முத்துச் சுண்ணம்

35 கிராம் நல்ல முத்தை கல்வத்தில் இட்டு கோழி முட்டையின் மஞ்சள் கருவால் அரைத்து வில்லைத்தட்டி உலர்த்தி ஒட்டிவிட்டு சீலைமண் செய்து 10 வரட்டியில் புடம் போட சுண்ணமாகும்.

பயன்: வெற்றிலைக்குத் தடவி தாம்பூலம் தரிக்க பல் இறுகும். கபரோகங்கள், பிரமேகங்கள், நீரிழிவு முதலியன தீரும்.

தைல வகைகள்

1. அரக்குத் தைலம்

1. கொம்பரக்கு	1120 கிராம்
2. ஆற்றுநீர்	128 லிட்டர்

ஒரு மண்பாண்டத்தில் 32 பலம் கொம்பரக்கைப் போட்டு ஆற்றுநீர் 64 படியையும் ஊற்றி அடுப்பில் வைத்து சிற்றாமுட்டி விறகினால் 8 படியாகும் வரை எரித்து, எரித்த குடிநீரில்,

1. பசும்பால்	8 லிட்டர்
2. எள்நெய்	8 லிட்டர்
3. காடிநீர்	2 லிட்டர்
4. வடிகட்டிய தயிர் நீர்	,,
5. சந்தனம்	35 கிராம்
6. கஸ்தூரி மஞ்சள்	,,
7. கோஷ்டம்	,,
8. இலவங்கம்	,,
9. இலவங்கப்பத்திரி	,,
10. பச்சிலை	,,
11. அதிமதுரம்	35 கிராம்
12. சடாமாஞ்சில்	,,
13. பூலாங்கிழங்கு	,,
14. கடுகுரோகிணி	,,
15. மெருகன் கிழங்கு	,,
16. ஏலரிசி	,,
17. சதபுட்பி	,,
18. கிளியூரம்பட்டை	,,
19. பூச்சாந்துப்பட்டை	,,
20. சீரகம்	,,
21. கருஞ்சீரகம்	,,
22. செவ்வள்ளிக்கொடி	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் சந்தனத்திலிருந்து செவ்வள்ளிக் கொடி வரையில் உள்ள கடை மருந்துகளை உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து பசும்பால் விட்டு நன்கு நெகிழ அரைத்து எடுத்து

மேற்படி குடிநீர், பால், எள்நெய் இவைகளுடன் கற்கத்தையும் சேர்த்துக் கரைத்து அடுப்பிலேற்றி சிறுதீயிட்டு மெழுகு பக்குவம் வரும்வரை எரித்து வடிகட்டி 1 மாதம் நெல் புடத்தில் வைத்திருந்து பிறகு எடுத்து உபயோகப்படுத்த வேண்டும்.

குறிப்பு: இத்தைலத்தை 5 நாட்கள் விட்டு விட்டுக் காய்ச்சி 5-வது நாள் பதத்தில் இறக்கவேண்டும்.

தீரும் நோய்கள்: ஏழு தாதுக்களைப் பற்றிய சுரநோய், சரீரக்கடுப்பு, கபாலச்சூலை, காலைத் தலைவலி, மாலைத் தலைவலி, வியர்வையால் பிறக்கும் கற்றாழை நாற்றம், பல்லின் ஈறுகளில் உண்டாகும் வீக்கம், சுவாசகாச நோய்கள், உழலை நோய்கள், இரத்தப்பெருக்கு, ஐந்துவகை பாண்டு, குளிர் சுரம் முதலியன குணமாகும்.

2. ஆமணக்குத் தைலம்

1. ஆமணக்கு நெய்	2 லிட்டர்
2. மிளகு தக்காளிச்சாறு	2 லிட்டர்

இரண்டையும் பாத்திரத்தில் விட்டு வெந்தயம் 2 பலம் சுத்தப்படுத்தி எண்ணெயுடன் கலந்து அடுப்பேற்றி சிறு தீயிட்டு வெந்தயம் மொறு மொறுப்பாகும் பக்குவத்தில் தைலத்தைக் கடுகுடன் ஊற்றிப் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 கரண்டி. காலையில் ஒருவேளை மட்டும். மூன்று நாட்கள் முறையாக உட்கொள்ளவேண்டும்.

தீரும் நோய்: அண்டநோய் குணமாகும்.

பத்தியம்: உப்பு, புளி மற்றும் சுவையுள்ள பொருள் முதலியவற்றை நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

1. கஞ்சி சாப்பிடுவதே சாலச்சிறந்ததாகும்.

2. ஆறு நாட்களுக்குப் பத்தியமாக இருக்கவேண்டும்.

3. ஏழாவது நாளில்தான் பத்தியம் முறித்து எல்லாம் உட்கொள்ள வேண்டும்.

குறிப்பு: மேலும் நாட்பட்ட நோயானால் குணமாகாது.

3. ஆதொண்டைத் தைலம்

1. ஆதொண்டை வேர்ச்சாறு	1 லிட்டர்
2. எலுமிச்சம்பழச்சாறு	,,
3. நாரத்தம்பழச்சாறு	,,
4. இஞ்சிச்சாறு	,,
5. பச்சை மஞ்சள்சாறு	,,
6. வெங்காயச்சாறு	,,
7. சிற்றாமணக்கு எண்ணெய்	1 லிட்டர்

மேற்கூறப்பெற்ற ஆறுவகைச் சாறுகளையும் சிற்றாமணக்கு எண்ணெயும் சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு,

1. மிளகு	9 கிராம்
2. சீரகம்	,,
3. கருஞ்சீரகம்	,,
4. வசம்பு	,,
5. வெள்ளை வெங்காயம்	,,
6. பெருங்காயம்	,,

இவைகளைக் குப்பைமேனிச் சாற்றால் அரைத்து மேற்படி தைலத்துடன் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு,

தலை உச்சி நனையும் அளவிற்கு மூன்று நாட்கள் நன்றாகத் தேய்த்து நான்காவது நாள் வெந்நீரில் தலை

முழுகினால் ஒற்றைத்தலைவலி முதல் சகலவித வலியுடன் கூடி வருகிற தலைவலிகளும் குணமாகிவிடும்.

குறிப்பு: தைலம் தேய்த்துக்கொள்ளும் முதல் நாளிலிருந்து நான்காம் நாள் வரையில் புளி, புகை, போகம் நீக்கவேண்டும். மேலும் தலைவலி அதிகமாகவும் நீண்ட நாட்களாக தலைவலியினால் சிரமப்படுபவர்களும் தலைவலி முற்றிலும் குணமாகும் வரை கலவி கூடாது.

4. ஆயில் மரப்பட்டைத் தைலம்

ஆயில்மரப்பட்டை	1400 கிராம்

இதை நன்கு இடித்து ஒரு மண்பாத்திரத்தில் போட்டு 8படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி 4 படியாக வடித்த குடிநீரில்,

1. பசும்பால்	8 லிட்டர்
2. எண்ணெய்	4 லிட்டர்

இரண்டையும் சேர்த்து ஒரு பாண்டத்திலிட்டு

1. கோஷ்டம்	9 கிராம்
2. சிற்றாமுட்டிவேர்	,,
3. நன்னாரி வேர்	,,
4. கஸ்தூரி மஞ்சள்	,,
5. அதிமதுரம்	,,
6. பெருங்காயம்	,,
7. வெள்ளைப்பூண்டு	,,
8. தேவதாரு	,,
9. கல்மதம்	,,
10 சடாமாஞ்சில்	,,
11. சூரத்துக் கடுக்காய்த்தோல்	,,
12. வாய்விளங்கம்	,,
13. சோனகப்புல்	,,
14. மேதை	,,

ஆகிய இவைகளை வெள்ளைப்பசுவின் பால்விட்டு அரைத்து மேற்படி எண்ணெயுடன் கலந்து அடுப்பேற்றி தீபாக்கினியாக எரித்து மெழுகு பதத்தில் வடித்து தலைமுழுகி வரவும்.

தீரும் நோய்: பீனிச நோய் குணமாகும்.

குறிப்பு: இத்தைலத்திற்கு சிறுபூக்கா தைலம் என்ற மற்றொரு பெயரும் உண்டு.

5. இஞ்சித் தைலம்

1. இஞ்சிச்சாறு	2 லிட்டர்
2. முசுமுசுக்கைச்சாறு	,,
3. கையாந்தகரைச்சாறு	,,
4. பசும்பால்	,,
5. நல்லெண்ணெய்	,,

மேற்கூறப்பெற்றவைகளைத் தைலப் பாத்திரத்திலிட்டு

1. சந்தனக்கட்டை	87½ கிராம்
2. மிளகு	,,

இவை இரண்டையும் பசும்பால் விட்டு நன்கு நெகிழ அரைத்து மேற்படி எண்ணெயுடன் கலந்து சிறுதீயிட்டு மெழுகு பதம் வரும்வரை எரித்து வடிகட்டி

1. குங்குமப்பூ	3½ கிராம்
2. வெட்டிவேர்	17½ கிராம்
3. நல்ல சாம்பிராணி	3½ கிராம்

இம்மூன்றையும் பொடித்து வடித்த தைலத்தில் பத்திரப்படுத்தவும். இத்தைலத்தை வாரம் இருமுறை தேய்த்து தலைமுழுகி வரவும்.

தீரும் நோய்கள்: வாதத்தினாலேற்படும் உடற்கடுப்பு முதிர்ந்த செவிநோய், தலைநோய், பீனிசநோய், முகநோய், கபநோய் முதலியன சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும்.

6. இரசகற்பூத் தைலம்

1. கோரைக்கிழங்கின் சாறு	125 மிலி.
2. துளசிச்சாறு	,,
3. கடுகு இலைச்சாறு	,,
4. சிற்றாமணக்கு நெய்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை ஒன்றுசேர்த்து தைலப் பாத்திரத்திலிட்டு காய்ச்சிப் பதத்தில் கீழே இறக்கி வடிக்கவும்.

சுத்தி செய்த வாளம் 2 கிராம் குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ அரைத்து மேற்படி வடித்த தைலத்துடன் சேர்க்கவும். எட்டு நாட்கள் தைலத்தை வெய்யிலில் வைத்து எடுக்கவும்.

அளவு: தேக்கரண்டி வீதம் 3 நாட்கள் காலையில் மட்டும் உட்கொள்ளவும்.

தீரும் நோய்கள்: மாந்தத்தால் காணப்படும் முக்கல், விக்கல், உப்பிசம், உடல் இளைப்பு ஆகியவை நீங்கும்.

பத்தியம்: உப்பு, புளி நீக்கவும்.

7. உளுந்துத் தைலம்

1. குறிஞ்சி நிலத்தில் விளைந்த மணி போன்ற உளுந்து 2லிட்டர்.

2. ஆற்றுநீர் 8 லிட்டர்.

மேற்கூறப்பெற்ற உளுந்தை ஒரு பாத்திரத்திலிட்டு ஆற்றுநீர் விட்டு 1 படியாக வடித்த குடிநீருடன், வெள்ளாட்டுப்பால் 2 லிட்டார், எள்நெய் 2 லிட்டர் எல்லாவற்றையும் ஒரு பாத்திரத்திலிட்டு,

1. பூனைக்காலிப்பருப்பு	3½ கிராம்
2. சதபுட்பி (எருக்கு)	,,
3. அரத்தை	,,

4. சுக்கு	3½ கிராம்
5. மிளகு	,,
6. திப்பிலி	,,
7. வெட்பாலைப்பட்டை	,,
8. அதிமதுரம்	,,
9. இந்துப்பு	,,
10. வசம்பு	,,

இம்மருந்துகளை வெள்ளாட்டுப்பாலால் நன்கு நெகிழ அரைத்து எண்ணெயுடன் கலந்து அடுப்பேற்றிச் சிறுதீயிட்டு எரித்து மெழுகு பதத்தில் வடித்து 10 நாட்கள் நெற்புடமிட்டு எடுத்துக்கொள்ளவும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தை உடல்முழுவதுமாகத் தடவி பலமாகப் பிடித்தால் கபாலத்தில் ஏற்படும் நடுக்கம் கைகளில் ஏற்படும் நடுக்கம், செவிட்டு நோய், உள்நாக்கு நோய் ஆகியவை நீங்கும். இத்தைலத்தை ஓராண்டு தொடர்ந்து பிடித்தைலமாகப் பயன்படுத்தவேண்டும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

8. எட்டிவேர்த் தைலம்

1. எட்டிவேர்	560 கிராம்
2. தராவேர்	,,
3. செம்முள்ளிவேர்	,,
4. மாவிலங்குவேர்	,,
5. அவுரிவேர்	,,
6. முன்னை வேர்	,,
7. ஆயில்மரப்பட்டை	,,
8. தேவதாருப்பட்டை	,,
9. சரளத் தேவதாரு	,,
10. வெட்பாலை	,,
11. ஊமத்தம்வேர்	,,
12. சிற்றாமுட்டிவேர்	,,
13. பேராமுட்டிவேர்	,,

14. சதுரக்கள்ளிவேர்	560 கிராம்
15. கோட்டம்	,,
16. வேளைவேர்	,,
17. வெண்சாரணைவேர்	,,
18. முள்சங்குவேர்	,,
19. வேம்பு	,,
20. சரக்கொன்றை	,,
21. தேள்கொடுக்கு	,,
22. பெரும்புல்	,,
23. முருங்கை	,,
24. வெண்குன்றி	,,
25. கருங்குன்றி	,,
26. செங்குன்றி	,,
27. கோற்பாலை	,,
28. அமுக்கிரா	,,
29. கடம்பு	,,
30. அழிஞ்சில்	,,
31. அத்தி	,,
32. ஆதொண்டை	,,
33. கார்போகிவேர்	,,
34. ஆடாதொடை	,,
35. செம்மணித்தக்காளி	,,
36. புங்கு	,,
37. மிளகரனை	,,
38. வட்டத்திருப்பி	,,
39. முதியோர் கூந்தல்	,,
40. தண்ணீர்விட்டான்கிழங்கு	,,
41. நொச்சி	,,
42. பெருந்தும்மட்டி	,,
44. கழுதைப்பாலை	,,
45. நிலக்காளான்	,,

மேற்கூறப்பெற்ற 45 மருந்துகளையும் ஒரு பெரிய பாண்டத்தில் போட்டு (288 லிட்டர்) தண்ணீர் ஊற்றி

36லிட்டராகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி எடுத்துக்கொண்டு இதனுடன்,

1. சந்தனக்குடிநீர்	2 லிட்டர்
2. உளுந்துக்குடிநீர்	,,
3. கொள்ளுக்குடிநீர்	,,

இவைகளைச் சேர்த்து ஒரு பெரிய பாத்திரத்தில் விட்டு

1. எட்டிப்பழச்சாறு	2 லிட்டர்
2. எலுமிச்சம்பழச்சாறு	,,
3. முள்ளங்கிச்சாறு	,,
4. பசுமுன்னைச்சாறு	,,
5. விழுதிலைச்சாறு	,,
6. சங்கிலைச்சாறு	,,
7. உத்தாமணிச்சாறு	,,
8. நல்லவேளைச்சாறு	,,
9. கொடிவேலிச்சாறு	,,
10. பச்சை மஞ்சள் சாறு	,,
11. முருங்கைப்பட்டைச்சாறு	,,
12. கையாந்தகரைச்சாறு	,,
13. பாகல்சாறு	,,
14. வேம்புச்சாறு	,,
15. அவுரிச்சாறு	,,
16. நொச்சிச்சாறு	,,
17. ஊமத்தைச்சாறு	,,
18. பொடுதலைச்சாறு	,,
19. தராச்சாறு	,,
20. மேனிச்சாறு	,,
21. சிறுசெருப்படைச்சாறு	,,
22. அசுவகெந்தியிலைச்சாறு	,,
23. புளியிலைச்சாறு	,,
24. பேய்ப்பீர்க்கிலைச்சாறு	,,
25. ஆடாதொடைச்சாறு	,,
26. வெள்ளைச்சாரணைச்சாறு	,,

27. விட்ணுகரந்தியிலைச்சாறு	2 லிட்டர்
28. தழுதாழைச்சாறு	,,
29. தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு	,,
30. எருக்கம்பூச்சாறு	,,
31. எருக்கிலைச்சாறு	,,
32. சதுரக்கள்ளிச்சாறு	,,
33. வேலிக்கள்ளிச்சாறு	,,
34. இலைக்கள்ளிச்சாறு	,,
35. திருகுக்கள்ளிச்சாறு	,,

ஆகிய 35 வகைச்சாறுகளையும் அதனுடன் கலந்து 4வகைக் கள்ளிப்பாலும் (8 லிட்டர்)

1. நல்லெண்ணெய	8 லிட்டர்
2. புங்கெண்ணெய்	1 லிட்டர்
3. இலுப்பெண்ணெய்	,,
4. புன்னையெண்ணெய்	,,
5. ஆமணக்கெண்ணெய்	,,
6. மயில் எண்ணெய்	,,
7. வேப்பெண்ணெய்	,,
8. கோழிமுட்டைத்தைலம்	,,
9. முசுறுமுட்டைத்தைலம்	,,
10. பூநாகத் தைலம்	,,

ஆகிய எண்ணெய்களையும் சேர்த்து,

1. எட்டிவிதை	17½ கிராம்
2. ஓமம்	,,
3. இலுப்பெண்ணெய்	,,
4. கஸ்தூரி மஞ்சள்	,,
5. யானைத்திப்பிலி	,,
6. வசம்பு	,,
7. சுக்கு	,,
8. மிளகு	,,
9. திப்பிலி	,,
10. வாய்விளங்கம்	,,

11. அதிமதுரம்	17½ கிராம்
12. சீரகம்	,,
13. பெருஞ்சீரகம்	,,
14. கருஞ்சீரகம்	,,
15. வாலுழுவை அரிசி	,,
16. வெள்ளைப்பூண்டு	,,
17. கிச்சிலிக் கிழங்கு	,,
18. கடுக்காய்த்தோல்	,,
19. நெல்லிக்காய்த்தோல்	,,
20. தான்தோன்றிக்காய்த்தோல்	,,
21. திப்பிலி மூலம்	,,
22. கோட்டம்	,,
23. அகில்	,,
24. வெள்ளிலோத்ரம்	,,
25. ஆயில்மரப்பட்டை	,,
26. சணப்பு விதை	,,
27. சதகுப்பை	,,
28. குக்கில்	,,
29. கார்போக அரிசி	,,
30. கடுகுரோகிணி	,,
31. இங்குட்டம்	,,
32. அதிவிடையம்	,,
33. சன்னராட்டம்	,,
34. தேவதாரம்	,,
35. சரளத்தேவதாரம்	,,
36. வட்டத்திருப்பி	,,
37. இலவங்கம்	,,
38. மஞ்சிட்டி	,,
39. சடாமாஞ்சில்	,,
40. சன்னிநாயகம்	,,
41. செவ்வியம்	,,
42. கடுக்காய்ப்பூ	,,
43. மருட்கிழங்கு	,,
44. கடுகு	,,

45. பெருங்காயம்	17½ கிராம்
46. கண்டுபாரங்கி	,,
47. கஸ்தூரி	,,
48. இந்துப்பு	,,
49. கறியுப்பு	,,
50. வெடியுப்பு	,,
51. அட்டுப்பு	,,
52. வளையலுப்பு	,,
53. மண்ணுப்பு	,,
54. ஆண் மயிலின் எச்சம்	,,
55. பூநாகம்	,,
56. காக்கையின் பித்து	,,
57. பச்சைப்பாம்பின் பித்து	,,
58. சர்ப்பகண்டம்	,,

இதில் குறிப்பிட்ட 58 சரக்குகளையும் இடித்துத் தூள் செய்து எட்டிப்பழச்சாற்றில் அரைத்து எண்ணெயுடன் கலந்து அடுப்பேற்றி ஒரே சாதி விறகால் 5 நாட்கள் எரித்து 5-வது நாள் மணல் பருவத்தில் வடித்து தைல பாத்திரத்தில் விட்டு சீலைமண் செய்து நெற்புடத்தில் ஒரு மாதம் வைத்தெடுத்து கர்ம சாந்திகள் செய்து உபயோகிக்கவும்.

அளவு: துளிக்கணக்கில் நாசிக்கும், செவிக்கும் கொடுத்து கலிக்கம் தீட்டி, உடலில் பூசி நீராடவும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தை வெற்றிலையில் தடவி உள்ளுக்குக் கொடுத்து மேலுக்குத் துவலையும் இடலாம். இதனால் வாத கூட்டங்கள் யாவும் குணமாகும். மேலும் சன்னி, அமரகண்டம், குமரகண்டம், பிரமகண்டம், காக்கைவலி, முயல்வலி முதலியன குணமாகும்.

9. எலுமிச்சம்பழத் தைலம்

1. எலுமிச்சம்பழச்சாறு	8 லிட்டர்
2. நல்லெண்ணெய்	,,

இவை இரண்டையும் ஒரு பாத்திரத்திலிட்டு,

1. நெய்தற்கிழங்கு	9 கிராம்
2. சாதிக்காய்	,,
3. சந்தனம்	,,
4. மரமஞ்சள்	,,
5. கோட்டம்	,,
6. சீரகம்	,,
7. கருஞ்சீரகம்	,,
8. சுக்கு	,,
9. மிளகு	,,
10. திப்பிலி	,,
11. இந்துப்பு	,,
12. பெருங்காயம்	,,
13. ஓமம்	,,
14. யானைத்திப்பிலி	,,
15. வெட்டிவேர்	,,
16. கிரந்தி தகரம்	,,
17. பச்சை கற்பூரம்	,,
18. புளியவிதைத்தோல்	,,
19. குங்குமப்பூ	,,
20. தக்கோலம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளைப் பசும்பால்விட்டு நன்கு நெகிழ அரைத்து மேற்படி எண்ணெயுடன் கலந்து அடுப்பிலேற்றிச் சிறுதீயிட்டு மெழுகு பதத்தில் வடித்து 4நாட்களுக்கு ஒருமுறை தலைமுழுகி வரவேண்டும்.

தீரும் நோய்கள்: தலைவலி, பித்தத்தினால் உண்டாகும் நோய்கள் யாவும் குணம் அடையும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

10. கரப்பான் தைலம்

1. இரசகற்பூரம்	2 கிராம்
2. ஏலம்	,,
3. கற்பூம்	,,

4. பாதரசம்	2 கிராம்
5. கார்போக அரிசி	,,
6. மிருதார்சிங்கி	,,
7. நீரடி முத்துப்பருப்பு	,,
8. காட்டுச் சீரகம்	,,
9. கெந்தகம்	,,
10. துத்தம்	,,
11. துரிசு	,,
12. கஸ்தூரி மஞ்சள்	,,

மேற்கூறப்பெற்ற பன்னிரெண்டு மருந்துகளையும் குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ அரைத்து இதனுடன் தேங்காய்ப்பால் 2 லிட்டர் சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாகக் கொடுத்து எண்ணெய் கிளம்பி மருந்துகள் மெழுகு பதத்தில் வந்தவுடன் வடித்து வைக்கவும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தைக் கரப்பான் நோய் உள்ளவர்களுக்கு மேல்பூச்சாகக் கோழியிறகினால் தொடர்ச்சியாக 3 நாட்கள் தடவி நான்காவது நாள் உசிலம்பொடி கலந்த அரப்புத்தூள் தேய்த்து இளவெந்நீரில் குளிப்பிக்க மேற்கூறிய நோய்கள் குணமாகும்.

11. கருங்காலித் தைலம்

1. கருங்காலி	175 கிராம்
2. விளா	,,
3. ஆவாரம்பட்டை	,,
4. சரக்கொன்றைப்பட்டை	,,
5. சுரைவேர்	,,
6. கடப்பம்வேர்	,,
7. பலாசு விதை	,,
8. ஆட்டங்கொடி வேர்	,,

ஆகியவற்றை இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு 16 லிட்டர் தண்ணீர்விட்டுக் காய்ச்சி 2 லிட்டராக வற்ற வைத்து வடிகட்டிய குடிநீருடன்,

1. நெல்லிக்காய்ச்சாறு	2 லிட்டர்
2. நல்லெண்ணெய்	2 லிட்டர்

இவை இரண்டையும் மேற்படிக் குடிநீருடன் கலந்து ஒரு பாத்திரத்திலிட்டு அதிமதுரம் 2 பலம் (70 கிராம்) பசும்பாலை விட்டு அரைத்து இதில் கலந்து அடுப்பேற்றி சிறுதீயாக எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: துட்டெடை, (காலை, மாலை, இருவேளை) ஒருமண்டலம்.

தீரும் நோய்: இத்தைலத்தை ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் எலும்புருக்கி நோய் எளிதில் குணமடையும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

12. கழற்சித் தைலம்

1. கழற்சிக்கொடி, சமூலம்	700 கிராம்
2. தண்ணீர்	12 லிட்டர்
3. விளக்கெண்ணெய்	2 லிட்டர்

கழற்சிக்கொடி, வேர், பட்டை, இலை ஆகியவைகளை இடித்துத் தூள்செய்து ஒரு பாண்டத்திலிட்டு 12 லிட்டர் தண்ணீர்விட்டு 2 லிட்டர் ஆகக் காய்ச்சி வடிகட்டிய குடிநீருடன் கலந்து எண்ணெயையும் சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு,

1. ஏலம்	17½ கிராம்
2. பறங்கிச்சக்கை	,,
3. வால் மிளகு	,,
4. சன்னலவங்கப்பட்டை	,,

இந்நான்கையும் வறுத்து இடித்துத் தூள்செய்து வடிகட்டி மேற்படி எண்ணெயுடன் கலந்து அடுப்பிலேற்றி சிறுதீயாகக் கொடுத்துப் பதத்தில் இறக்கி வடிகட்டி,

1. சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு	17½ கிராம்
2. சுத்தி செய்த ரசக்கற்பூரம்	,,

இவை இரண்டையும் வடித்த தைலத்தைக் கொண்டு மைபோல் அரைத்து தைலத்தில் கலந்து வைத்துக் கொள்ளவும்.

குறிப்பு: இத்தைலம் எரிப்பதற்குக் கழற்சி வேரையே விறகாகக் கொண்டு எரிக்கவேண்டும்.

அளவு: 10 கிராம் முதல் 20 கிராம் வரை (காலையில் மட்டும்.)

தீரும்நோய்கள்: இத்தைலத்தை 3, 5, 7 நாட்களுக்குச் சாப்பிட்டு வந்தால் அடிக்குடலில் சுழலுகின்ற வாயுவும், விரைவீக்கமும் உடலில் எல்லா பாகங்களிலுமுள்ள வீக்கங்களும் ஞாயிறை கண்ட இருளைப்போல நீங்கிவிடும்.

பத்தியம்: இத்தைலம் உண்ணும் காலத்தில் பழம்புளி, அவரைப்பிஞ்சு, கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு முதலியவற்றைச் சேர்க்கவேண்டும். புகை, போகம் நீக்க வேண்டும்.

குறிப்பு: மேற்கூறப்பெற்ற தைலத்தை உட்கொள் பவர்கள் உப்பு, புளி இவை இரண்டையும் நீக்கி உணவு உட்கொண்டால் மேற்கூறிய நோய்கள் விரைவில் குணமாகும்.

13. காக்கைவலித் தைலம்

1. யானை நெருஞ்சில் வேர்	50 கிராம்
2. கழற்சிவேர்	,,
3. சித்திரமூலவேர் (சிகப்பு)	,,
4. கண்டு பாரங்கி வேர்	,,
5. அகில் வேர்	,,
6. தும்பைவேர்	,,
7. தில்லை வேர்	,,
8. எட்டிவேர்	,,
9. கருஊமத்தைவேர்	,,
10. கமுகு வேர் (பாக்கு)	,,

11. பிரண்டைவேர்	50 கிராம்
12. கருவேல் வேர்	,,
13. வெள்ளெருக்குவேர்	,,
14. இலைக்கள்ளி வேர்	,,
15. பாதிரிவேர்	,,
16. சங்கன்வேர் (முள்)	,,
17. இண்டன்வேர்	,,
18. வெண்சாரணைவேர்	,,
19. ஆடுதீண்டாப்பாளைவேர்	,,
20. கோழிமுட்டை மஞ்சள்கரு (அவித்து எடுத்தது)	100 கிராம்
21. முசுருமுட்டை	200 கிராம்
22. நழுதாழைவேர்	50 கிராம்
23. வெண்சங்கு வேர்	,,

மேற்கூறப்பெற்ற 23 சரக்குகளையும் ஒன்றிரண்டாக சிதைத்து நன்கு நசுக்கி ஒரு பீங்கான் பாத்திரத்திலிட்டு ஆடுதீண்டாப்பாளைச்சாறு ஒரு லிட்டர் விட்டு வெய்யிலில் வைத்து சாறு வற்றியபின் வெள்ளாட்டு நீர் 1 லிட்டர் விட்டு நன்கு ஊறவைத்து உலர்த்தி குழித்தைலம் எடுத்துக் கொள்ளவும்.

அளவு: 1 காசெடை முதல் 3 காசெடை (காலை, மாலை இருவேளை)

துணை மருந்து: கழுதைப்பால் வெள்ளாட்டுப்பால், தாய்ப்பால் ஏதேனும் ஒன்றில் கொடுக்கவும்.

பத்தியம்: உப்பு, புளி கூடாது. பால் சாதம் உட்கொள்ள வேண்டும்.

14. மகாவாத தைலம்

1. நல்லெண்ணெய்	4 லிட்டர்
2. வேப்பெண்ணெய்	2 லிட்டர்

3. புங்கெண்ணெய்	1 லிட்டர்
4. இலுப்பெண்ணெய்	,,
5. மரவெட்டி எண்ணெய்	,,
6. மயில் கொழுப்பு	,,
7. அண்டத்தைலம்	,,
8. கறுஞ்சீரக எண்ணெய்	,,
9. ஆலிவ் எண்ணெய்	,,
10. வாதாமடக்கி இலைச்சாறு	4 லிட்டர்
11. உறித்த பூண்டு	2 கிலோ
12. மயில் இறகு	½ கிலோ
13. வெள்ளை குங்கிலியம்	½ கிலோ

மேற்கூறப்பட்ட எண்ணெய்களுடன் வாதாமடக்கி இலைச்சாறினால், உறித்த பூண்டை நன்கு நெகிழ அரைத்து, வெள்ளை குங்கிலியத்தில் சேர்த்து, அடுப்பேற்றி, சிறுதீயிட்டு எரிக்கவேண்டும். எண்ணெய் மெழுகு பதம் வருவதற்கு முன் மயில் இறகை தைலத்துடன் சேர்க்க வேண்டும். பிறகு சிறுதீயிட்டு மணல் பருவம் வரும்வரை எரித்து வடித்துப் பத்திரப்படுத்தவும்.

தீரும்நோய்: இத்தைலத்தை இளம்பிள்ளை வாதம், பக்கவாதம், முடக்குவாதம், மற்றைய வாத நோய்களுக்கும், வாத வலிகளுக்கும் உடலில் தேய்த்து பிடித்து வந்தால் தீராத வாத நோய்களும் குணமடையும். மேலும் சந்த தாதுக்களில் உண்டாகிய திமிர் வாதத்தையும் குணமடையச் செய்யும்.

குறிப்பு: இத்தைலத்தை தொடர்ந்து இரு தினங்கள் தேய்த்து, மூன்றாவது நாள் வெந்நீரில் குளிக்கச்செய்ய நற்சுகத்தை அளிக்கும்.

15. காடித்தைலம்

1. புளித்தகாடி	8 லிட்டர்
2. எள்நெய்	2 லிட்டர்
3. தயிர்	1 லிட்டர்

இம்மூன்றையும் ஒரு பாத்திரத்திலிட்டு,

1. காட்டுமிளகு	3½ கிராம்
2. கஸ்தூரி மஞ்சள்	,,
3. கப்பு மஞ்சள்	,,
4. உயர்ந்த சந்தனம்	,,
5. சதகுப்பை	,,
6. கிச்சிலிக்கிழங்கு	,,
7. கோரைக்கிழங்கு	,,
8. அதிமதுரம்	,,
9. கடுகுரோகிணி	,,

ஆகிய ஒன்பது மருந்துகளையும் காடிநீரிட்டு நன்கு நெகிழ அரைத்து மேற்படி எண்ணெயுடன் கரைத்துப் பாண்டத்திலிட்டு அடுப்பேற்றிச் சிறுதீயிட்டு எரித்து தைலமாக முறைப்படி வடித்துப் பத்திரப்படுத்தவும். இத்தைலத்தை உடல் முழுவதும் பூசி துட்டெடை அளவு உள்ளுக்கு சாப்பிட்டு வரவும்.

தீரும்நோய்கள்: சீதசுரம், சீரணச்சுரம் முதலியன குணமாகும்.

16. காதுவலிக்குத் தைலம்

1. மரமஞ்சள்	3½ கிராம்
2. உரித்தபூண்டு	,,
3. சுக்கு	,,
4. வலம்புரிக்காய்	,,
5. கருஞ்சீரகம்	,,
6. நண்டிறைச்சி	,,
7. நத்தை ஓடு	,,
8. முசுடு முட்டை	,,
9. கருங்கோழி முட்டை	,,
10. கள்ளியின் சாறு	2 லிட்டர்
11. புனல் முருங்கைச்சாறு	,,
12. பசுவின்நெய்	500 மிலி.
13. வேப்பெண்ணெய்	,,

மேற்கூறப்பெற்ற பதின்மூன்று மருந்துகளையும் ஒருமித்துப் பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றித் தீயிட்டு மெழுகுபதத்தில் வடித்துக்கொள்ளவும்.

அளவு: 1 முதல் 5 துளிகள் (ஒருவேளை)

தீரும் நோய்கள்: இத்தைலத்தை 12 நாட்கள் இடைவிடாது தினமும் காலையில் காதை சுத்தப்படுத்தி தைலம்விட்டு பஞ்சுகொண்டு மூடுக. இவ்வாறு செய்து வந்தால் காது நோய்கள் யாவும் குணமாகும்.

17. கிரந்தி அரையாப்புக்குத் தைலம்

1. சங்கஞ்சாறு	2 லிட்டர்
2. பீச்சங்குச்சாறு	,,
3. கருநொச்சிச்சாறு	,,
4. பேயத்திச்சாறு	,,
5. வெள்ளறுகுச்சாறு	,,
6. சிறுசின்னிச்சாறு	,,
7. கிரந்திச்சாறு	,,
8. பூவரசம்பட்டைச்சாறு	,,
9. கொடிக்கள்ளிச்சாறு	,,
10. நீர்ப்பூண்டுச்சாறு	,,
11. விளக்கெண்ணெய்	,,

மேற்கூறப்பெற்ற சாறுகளையும், எண்ணெயையும் ஒன்றுகலந்து ஒரு பாத்திரத்திலிட்டு ஒருநாள் சூரியபுடத்தில் போட்டு மறுதினம் அடுப்பேற்றி சிறுதீயிட்டு எட்டில் ஒரு பாகமாகக் காய்ச்சி,

1. பங்கிப்பட்டை	17½ கிராம்
2. கருஞ்சீரகம்	,,
3. கார்போகம்	,,
4. கஸ்தூரி மஞ்சள்	,,
5. வசம்பு	,,
6. வெள்ளைப்பூண்டு	,,

இவைகளை நன்றாக இடித்துத் தூள்செய்து வடிகட்டி மேற்படி தைலத்துடன் சேர்த்து மெழுகுபதத்தில் வடித்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: 3 முதல் 5 கிராம் காலை, மாலை இருவேளை வீதம் மூன்று நாட்கள் சாப்பிட்டு ஆறுநாட்கள் பத்தியம் காக்கவேண்டும்.

தீரும் நோய்கள்: கிரந்தி, அரையாப்பு, சூலை, மேகம் முதலியன குணமாகும்.

பத்தியம்: நாற்பது நாளைக்கு கடுகு, வாழைக்காய், வாழையிலை, உப்பு, புளி, காரம் முதலியவற்றை நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும். கரப்பான் பொருள்களையும் உபயோகிக்கக் கூடாது. பெண் சேர்க்கைக் கூடாது.

18. கிளிஞ்சல் தைலம்

1. கும்பிடு கிளிஞ்சல் நீர்	2 லிட்டர்
2. காடி நீர்	,,
3. பசுவின் மோர்	,,
4. பசுவின் தயிர்	,,
5. எள் நெய்	,,
6. எருமைத்தயிர்	8 லிட்டர்

மேற்கூறப்பெற்றவைகளை ஒரு பாத்திரத்திலிட்டு

1. புங்கன்வேர்ப்பட்டை	140 கிராம்
2. சுக்கு	,,
3. கண்டங்கத்திரிவேர்	,,
4. சிறுவழுதுணைவேர்	,,
5. சிற்றாமல்லிவேர்	,,
6. பேராமல்லிவேர்	,,
7. நெருஞ்சில்வேர்	,,
8. வில்வவேர்	,,
9. பெருங்குமிழ்வேர்	,,

10. தழுதாழை வேர்	140 கிராம்
11. பாதிரிவேர்	,,
12. தண்ணீர்	8 லிட்டர்

இவைகளை சிறு துண்டுகளாக நறுக்கி 8 லிட்டர் தண்ணீரில் போட்டுச் சுண்டக்காய்ச்சி 2 படியாக வற்றவைத்து வடிகட்டிய நீரை மேற்படி பாத்திரத்திலுள்ள எண்ணை கலந்த மருந்துடன் கலந்து,

1. இந்துப்பு	70 கிராம்
2. வில்வவேர்	,,
3. தேவதாரம்	,,
4. சிவப்புக்கொடிவேலிவேர்	,,
5. திப்பிலி மூலம்	,,
6. திப்பிலி	,,

இவைகளை உரலிலிட்டு இடித்து நன்கு தூள்செய்து வடிகட்டி இத்தூளையும் மேற்படி எண்ணெயுடன் கலந்து பாத்திரத்தை அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து நீர்வற்றி, கடுகு திரளும் பக்குவத்தில் அதிவிடையத்தூள் 9 கிராம் சேர்த்துக் கிண்டி மெழுகுபதம் வருமளவும் எரித்து வடிகட்டி பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ தேக்கரண்டி. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: கிராணி நோய்கள் எல்லாம் தீயில் விழுந்து எரியும் சருகுகளைப் போன்று குணமாகும்.

19. கீழ்க்காய் நெல்லித்தைலம்

1. கீழ்க்காய் நெல்லியை நிழலிலுலர்த்தி இடித்த தூள்	400 கிராம்
2. ஆற்றுநீர்	16 லிட்டர்

கீழ்க்காய் நெல்லித்தூளை ஒரு பாத்திரத்திலிட்டு ஆற்றுநீர் 16 லிட்டர் விட்டு அடுப்பிலேற்றி தீயிட்டு எரித்து 1 படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்த நீரையும்,

1. புசும்பால்	2 லிட்டர்
2. மனோசிலை	,,

இவைகளைப் பாத்திரத்திலிட்டு,

சீரகம் 35 கிராம் பசும்பாலில் நன்கு நெகிழ அரைத்து அதனுடன் கலக்கி அடுப்பிலிட்டு சிறுதீயிட்டு எரித்து பதத்தில் இறக்கி வடித்துக்கொள்ளவும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தை முறைப்படி தலைமுழுகி வந்தால் வெளிப்படாத சுரம், காமாலை, உடலில் காணும் நடுக்கல், தலைச்சுற்றல், அக்கினி மாந்தம், கை, கால், கண் எரிச்சல், வேக்காளம், வெட்டைநோய், வாந்தி முதலியன குணமாகும்.

20. குடைச்சலுக்குத் தைலம்

1. மயிற்பீலி	70 கிராம்
2. மனோசிலை	35 கிராம்

மேற்கூறப்பெற்ற மயிற்பீலியை ஒரு சாடியிலிட்டு அடுப்பேற்றி சிறுதீயாகக் கொடுத்துக் கருக வறுத்துக்கொண்டு இதனுடன் மனோசிலையையும் சேர்த்து வறுத்து வேப்பெண்ணெய் 2 லிட்டர் அதனுடன் விட்டுவைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்: இத்தைலத்தை வலியுள்ள இடங்களில் பூசிப்பிடிக்கக் குடைச்சல் நிவர்த்தியாகும்.

21. குளிர்தாமரைத் தைலம்

1. நல்லெண்ணெய்	2 லிட்டர்
2. குளிர்தாமரைச்சாறு	,,

இரண்டையும் ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி சிறுதீயிட்டு எரித்து பதத்தில் இறக்கி,

1. பூலாங்கிழங்கு	17½ கிராம்
2. பச்சிலை	,,

இவையிரண்டையும் இடித்துத்தூள் செய்து தைலத்துடன் கலந்து வடித்து இறுத்து வைத்துக்கொண்டு தலைமுழுக வேண்டும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தை முறைப்படி தலைமுழுகி வந்தால் உடற்சூடு தணிந்து போகும். கண் எரிச்சல் நீங்கிக் குளிர்ச்சி ஆகும். உடல் பொன் நிறமாகும். நீர்க்கடுப்பு, மூலச்சூடு, சூலை முதலிய நோய்கள் குணமாகும்.

22. கையான் தைலம்

1. கையான் சாறு	4 லிட்டர்
2. நெல்லிக்காய்ச்சாறு	,,
3. எள்நெய்	,,
4. பசும்பால்	8 லிட்டர்

மேற்கூறப்பெற்றவைகளை ஒரு பாண்டத்திலிட்டு

1. சிற்றாமுட்டி வேர்	26 கிராம்
2. பேராமுட்டிவேர்	,,
3. அதிமதுரம்	,,
4. நாகமல்லி வேர்	,,
5. திராட்சை	,,
6. சதகுப்பை	,,
7. கோட்டம்	,,
8. சந்தனக்கட்டை	,,
9. மஞ்சள்	,,
10. பூலாங்கிழங்கு	,,
11. விலாமிச்சம்வேர்	,,
12. கொத்துமல்லி	,,
13. முசுமுசுக்கைவேர்	,,
14. சிற்றரத்தை	,,

15. இலவங்கப்பட்டை	26 கிராம்
16. இலவங்கப்பத்திரி	,,
17. ஏலம்	,,

ஆகிய மருந்துகளை பால் விட்டரைத்து மேற்கூறிய எண்ணெயுடன் கலந்த சாற்றில் கரைத்து அடுப்பேற்றி சிறுதீயிட்டு எரித்து மெழுகுபதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தை நான்கு நாட்களுக்கு ஒருமுறை தலைமுழுகி வந்தால் மேனி ஒளி உண்டாகும். பித்த நோய்கள் விலகும். கண்கள் பிரகாசமடைந்து, தலை நோய்களும் குணமடையும்.

23. கொழுக்கட்டை மரப்பட்டைத் தைலம்

1. கொழுக்கட்டை மரப்பட்டை	1750 கிராம்
2. மாம்பட்டை	,,
3. தண்ணீர்	32 லிட்டர்

மேற்கூறப்பெற்ற இரண்டு பட்டைகளையும் தனித்தனியே இடித்துத் தூள் செய்து மட்பாண்டத்தில் போட்டு 32 லிட்டர் தண்ணீர்விட்டு அடுப்பிலேற்றி வற்ற வைக்க சிவந்திருக்கும். இக்குடிநீரில்,

1. எள்நெய்	2 லிட்டர்
2. கொழுக்கட்டை மரப்பட்டை	35 கிராம்
3. மாம்பட்டை	,,

மேற்கூறிய பட்டைகள் இரண்டையும் மேற்படி குடிநீரில் நன்கு நெகிழ அரைத்து எண்ணெயுடன் கலந்து அடுப்பிலேற்றி சிறுதீயிட்டு மெழுகுபதத்தில் எரித்து வடித்துக்கொள்க. இவ்வாறு 20 லிட்டர் குடிநீரையும் 10முறை மடக்கி எரித்து, வடித்து ஒரு கலயத்தில் ஊற்றிப் பத்திரப்படுத்தவும்.

அளவு: அரைக்கரண்டி (சிறு கரண்டி) (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: இத்தைலத்தினால் எலும்புருக்கி நோய் குணமாகும். *(48 நாட்கள் உட்கொள்ளவேண்டும்.)*

பத்தியம்: புளி, புகை,மீன், கருவாடு, கறி முதலியவை களை நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

24. சஞ்சீவித் தைலம்

1. எருக்கிலைச்சாறு	775 கிராம்
2. எருக்கம்பால்	,,
3. காட்டுச் சதுரக்கள்ளிச்சாறு	,,
4. சதுரக்கள்ளிப்பால்	,,
5. பிரண்டைச்சாறு	,,
6. பற்பாடகக் குடிநீர்	,,
7. மெருகன் கிழங்கு குடிநீர்	,,
8. எள்நெய்	350 கிராம்
9. வெள்ளாட்டுப்பால்	1.575 கிராம்
10. சுத்தி செய்த சேங்கொட்டை	175 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகள் யாவற்றையும் தைல பாத்திரத்தில்விட்டு அடுப்பேற்றி தீபாக்கினியாக எரித்து மெழுகுபதத்தில் வடித்து வைத்துக்கொள்ளவும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தைச் சிறிது கையிலெடுத்து உடலிற் பூசுவதுடன் வெற்றிலையில் தோய்த்து உள்ளுக்கும் சாப்பிட்டால் வாதநோய், சன்னிநோய், கபநோய் முதலியன குணமாகும்.

25. சன்னி தோட வலிப்பிற்கு தைலம்

1. நல்லெண்ணெய்	2 லிட்டர்
2. ஆமணக்கு நெய்	,,
3. இலுப்பெண்ணெய்	,,
4. வேப்பெண்ணெய்	,,
5. புங்கெண்ணெய்	,,

மேற்கூறப்பெற்ற எண்ணெய்களை ஒரு பாத்திரத்திலிட்டு,

1. ஆதொண்டைவேர்	175 கிராம்
2. ஆதொண்டை இலை	,,
3. செப்பு நெருஞ்சில்	,,
4. தழுதாழை மூலம்	,,
5. காட்டாமணக்கு மூலம்	,,
6. திருகுக்கள்ளி மூலம்	,,
7. வேளை மூலம்	,,
8. குப்பைமேனி மூலம்	,,
9. மாவிலிங்க மூலம்	,,
10. ஆலி மூலம்	,,
11. நொச்சி மூலம்	,,
12. வேம்பு	,,
13. புங்கு மூலம்	,,
14. வெண்ணொச்சி மூலம்	,,
15. கொடிவேலி மூலம்	,,
16. கார்முருங்கை மூலம்	,,
17. சங்கு மூலம்	,,
18. ஊர் முருங்கை மூலம்	,,
19. காவேளை மூலம்	,,
20. மாம்பட்டை மூலம்	,,

மேற்கூறப்பெற்ற 20 மூலங்களையும் இடித்து ஒரு பாண்டத்திலிட்டு 8 லிட்டர் தண்ணீர்விட்டு 1லிட்டராகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி மேற்படி எண்ணெயுடன் கலந்து

1. அரத்தை	9 கிராம்
2. சுக்கு	,,
3. ஓமம்	,,
4. திப்பிலி மூலம்	,,
5. ஆனைத்திப்பிலி	,,
6. திப்பிலி	,,
7. காயம்	,,
8. கருஞ்சீரகம்	,,
9. சதகுப்பை	,,
10. கண்டத்திப்பிலி	,,

11. குரோசாணி ஓமம்	,,
12. வெள்ளைப்பூண்டு	,,
13. வெளிச்சிப்பிசின்	,,
14. வசம்பு	,,
15. தேக்கு	,,
16. இஞ்சி	,,
17. சடாமாஞ்சில்	,,
18. கிராம்பு	,,
19. குக்கில்	,,

இவைகளை அரைத்து மேற்படி எண்ணெயுடன் கலந்து அடுப்பிலிட்டு சிறுதீயிட்டு மெழுகுப்பதம் வரும்வரை எரித்து வடிகட்டி வைக்கவும்.

அளவு: காசெடை. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: இத்தைலத்தை உட்கொண்டு உடம்பில் பூசினால் (சூடு ஏறத் தேய்த்தால்) சன்னி, தோடம் ஏழுவகை, வலிப்புகள், அண்டவாதம், வாதம் முதலியன குணமாகும். இத்தைலத்தை 3 நாள் ஆறுவேளை உட்கொண்டு ஆறுநாட்கள் பத்தியத்துடன் இருந்து ஏழாம் நாள் தலைமுழுக வேண்டும்.

26. சித்திரமூலத் தைலம்

1. எள் நெய்	1 லிட்டர்
2. பசும்பால்	,,
3. சித்திரமூலப்பட்டை	35 கிராம்

மேற்கூறப்பெற்ற சித்திரமூலப் பட்டையைத் தண்ணீர் விட்டு நன்கு நெகிழ அரைத்து எள்நெய்யை பசும்பாலுடன் கலந்து ஒரு பாத்திரத்திலிட்டு தீயிட்டு மெழுகுபதத்தில் வடித்துகொள்ளவும்.

அளவு: காசெடை . காலை, மாலை இருவேளை.

தீரும் நோய்கள்: விப்புருதி, கண்டமாலை, சூடு, மேகம், புண், புரைகள், சிறங்கு, வாயு, சூலைக்குத்தல், செங்கிரந்தி, தடிப்பு முதலியன குணமாகும்.

27. சிற்றாமுட்டித் தைலம்

1. அமுக்கிராக்கிழங்கு	350 கிராம்.
2. சிற்றாமுட்டிவேர்	,,
3. கொம்பரக்கு	,,
4. செவ்வியம்	,,
5. பேய்ப்புடல்	,,
6. சடாமாஞ்சில்	,,
7. பேராமுட்டி	,,
8. சிற்றாமல்லி	,,
9. பேராமல்லி (நன்னாரி)	,,
10. கடுகுரோகிணி	,,
11. நெல்லிவேர்	,,
12. தண்ணீர்விட்டான் கிழங்கு	,,
13. பற்பாடகம்	,,
14. சீந்தில்	,,
15. சிறுகத்திரிவேர்	,,
16. சிறுதேக்கு	,,
17. விஷ்ணுகிரந்தி	,,
18. திப்பிலி மூலம்	,,
19. தாமரை வளையம்	,,
20. தேவதாரம்	,,
21. மஞ்சள்	,,
22. கஸ்தூரி மஞ்சள்	,,
23. சரளத்தேவதாரம்	,,
24. ஆற்றுநீர்	4 லிட்டர்
25. காடி நீர்	8 லிட்டர்

மேற்கூறப்பெற்ற 25 மருந்துகளையும் சிறு துண்டுகளாக நறுக்கி இடித்துத் தூள்செய்து ஒரு மண்பாண்டத்திலிட்டு ஆற்றுநீர், காடி இரண்டையும் ஊற்றி அடுப்பேற்றி சிறு தீயிட்டு 3 லிட்டர் அளவாக வற்றவைத்து வடிகட்டி எடுத்து இதனுடன் கொம்பரக்கு குடிநீர் 8 லிட்டர், எள்நெய் 8 லிட்டர் விட்டு,

1. சுக்கு	35 கிராம்
2. மிளகு	,,
3. திப்பிலி	,,
4. சடாமாஞ்சில்	,,
5. மாதுளம்பழத்தோல்	,,
6. கடுக்காய்த்தோல்	,,
7. நெல்லிக்காய்த்தோல்	,,
8. தான்றிக்காய்த்தோல்	,,
9. உளுந்து	,,
10. சிறுநாகப்பூ	,,
11. சிற்றரத்தை	,,
12. தக்கோலம்	,,
13. சந்தனக்கட்டை	,,
14. நாணல் தாது	,,
15. காட்டு மிளகு	,,
16. பச்சைக்கற்பூரம்	,,
17. விலாமிச்சை	,,
18. இலவங்கப்பட்டை	,,
19. இலவங்கப்பத்திரி	,,
20. சாதிக்காய்	,,
21. ஏலம்	,,
22. அதிமதுரம்	,,
23. மஞ்சிட்டி வேர்	,,
24. சிறுநன்னாரி	,,
25. அகிற்கட்டை	,,
26. காகோலி	,,
27. கஸ்தூரி	,,
28. குங்குமப்பூ	,,
29. அதிவிடையம்	,,
30. மெருகன் கிழங்கு	,,
31. மகாகோலி	,,
32. கீழ்க்காய் நெல்லி	,,
33. தாளிசப்பத்திரி	,,
34. கிரந்தி தகரம்	,,

35. சீரகம்	35 கிராம்
36. கருஞ்சீரகம்	,,
37. பாதரிவேர்	,,
38. வில்வவேர்	,,
39. பெருங்குமிழ்வேர்	,,
40. தழுதாழைவேர்	,,
41. வாகைவேர்	,,
42. கடுகுரோகிணி	,,
43. முசுமுசுக்கை வேர்	,,

மேற்கூறப்பெற்ற நாற்பத்து மூன்று மருந்துகளையும் வகைக்கு 35 கிராம் எடுத்து மேற்படி குடிநீர்விட்டு நன்கு நெகிழ அரைத்து எண்ணெயுடன் கலந்து அடுப்பேற்றி சிறுதீயிட்டு எரித்து பாகத்தில் வடித்து நெற்புடத்தில் 1 மாதம் வைத்தெடுத்து தலைமுழுகி வரவும்.

தீரும் நோய்கள்: உதிரச்சிக்கலினால் உண்டாகும் பலவித வாதநோய்கள், சன்னி, வளி, அழல், ஐய குற்றங்களினால் ஏற்படும் நோய்கள், சீரண சுரம் முதலியன குணமாகும்.

28. சிற்றாமுட்டித் தைலம் (வேறு)

சிற்றாமுட்டிவேர்	3,500 கிராம்
ஆற்றுநீர்	8 லிட்டர்

சிற்றாமுட்டி வேரைச் சிதைத்து ஒரு பாண்டத்திலிட்டு 8லிட்டர் தண்ணீர் விட்டுக் காய்ச்சி 4 லிட்டராக வற்றவைத்து அதனுடன்,

பசும்பால்	8 லிட்டர்
எள்நெய்	4 லிட்டர்
சிற்றாமுட்டிவேர்	350 கிராம்

மேற்கூறப்பெற்ற குடிநீருடன் பசும்பால், எள்நெய் இரண்டையும் கலந்து சிற்றாமுட்டி வேரை நன்கு நெகிழ மைபோல் பசும்பால் விட்டரைத்து எண்ணெயுடன் கலந்து ஒரு பாண்டத்திலிட்டு எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு: துட்டெடை. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: இத்தைலத்தை முறைப்படி உள்ளுக்கு சாப்பிட்டு தலையும் முழுகிவந்தால் கருப்பையைப் பற்றிய வாயுவும், மாதாந்தர ருதுகால குன்ம வலியும் குணமாகும். குறைந்தது 48 நாட்கள் மேற்கூறியவாறு உபயோகப் படுத்திவந்தால் மேலே குறிப்பிட்டுள்ள நோய்கள் அனைத்தும் குணமாகும்.

29. சிற்றாமுட்டி மூக்குத்தைலம்

1. சிற்றாமுட்டிவேர்	1400 கிராம்
2. ஆற்றுநீர்	64 லிட்டர்

சிற்றாமுட்டிவேரை நன்றாகப் பஞ்சுபோல் இடித்து ஒரு பாண்டத்திலிட்டு ஆற்றுநீரை விட்டு அடுப்பேற்றி 2லிட்டராக சுண்டக்காய்ச்சி வடித்த நீருடன் வடித்த சக்கையைத் துணியிலிட்டு நன்றாக கசக்கிப்பிழந்து மேற்படி நீருடன் சேர்த்து,

1. நல்லெண்ணெய்	2 லிட்டர்
2. பசும்பால்	,,

இத்துடன் 35 கிராம் சிற்றாமுட்டி வேரை பால்விட்டு நன்கு நெகிழ அரைத்து எண்ணெயுடன் கலந்து சிற்றாமுட்டி விறகினால் எரித்து மெழுகு பதத்தில் எடுத்து வடித்து முன்போலவே குடிநீரும் பாலும் சேர்த்துக் காய்ச்சவேண்டும். இவ்வாறு 7 முறை காய்ச்சி வடித்துக் கலசத்திலிட்டு வைத்துக்கொள்ளவும்.

அளவு: ஒரு துட்டெடை. (காலை, மாலை இருவேளை) 48 நாட்கள் உட்கொள்ளவேண்டும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தினால் தாகம், கர்ப்பாசய வாதம், சூதக வாதநோய், உட்சுரம், கை, கால் எரிவு, எலும்பைப் பற்றிய சுரம், பலக்குறைவு, முன்நீர்க்கோர்வை, பின்நீர்க்கோர்வை முதலிய பலவித நோய்களும் குணமாகும்.

இத்தைலத்தை உட்கொள்ளவும் செய்யலாம். தலையில் இட்டும் முழுகலாம். உடற்பகுதியிலும் தேய்த்துக் கொள்ளலாம்.

குறிப்பு: இத்தைலத்தை மேற்கூறியவாறு மடக்கி, மடக்கி 100 தடவை காய்ச்சி வடித்து உபயோகப்படுத்தலாம்.

30. சிறுகுமரித் தைலம்

கற்றாழைச் சோற்றை எடுத்து கடுக்காய்த்தூள் சேர்க்காமல் நீர் கக்கும்படி நன்றாகப் பிசைந்து, பிழிந்தெடுத்த கற்றாழைநீர் 8லிட்டர், எள்நெய் 2 லிட்டர், பசும்பால் 2லிட்டர் இம்மூன்றையும் ஒரு பாத்திரத்திலிட்டு,

1. கோட்டம்	9 கிராம்
2. மஞ்சிட்டி வேர்	,,
3. சந்தனம்	,,
4. ரசாஞ்சனம்	,,
5. சுக்கு	,,
6. மிளகு	,,
7. திப்பிலி	,,
8. புனுகுச்சட்டம்	,,
9. கடுக்காய்த்தோல்	,,
10. நெல்லிக்காய்த்தோல்	,,
11. தான்றிக்காய்த்தோல்	,,
12. சாதிக்காய்	,,
13, வெட்டிவேர்	,,
14. அதிமதுரம்	,,
15. சடாமாஞ்சில்	,,
16. விலாமிச்சம்வேர்	,,
17. கிரந்தி தகரம்	,,
18. கோரைக்கிழங்கு	,,
19. நன்னாரிவேர்	,,
20. செங்கழுநீர்க்கிழங்கு	,,
21. பூலாங்கிழங்கு	,,

22. தக்கோலம்	9 கிராம்
23. ஏலரிசி	,,
24. இலவங்கப்பட்டை	,,
25. இலவங்கப்பத்திரி	,,
26. சிறுநாகப்பூ	,,
27. பச்சை கற்பூரம்	,,

மேற்கூறப்பெற்றவைகளைப் பசும்பால் விட்டு நன்கு நெகிழ அரைத்து யாவற்றையும் பாத்திரத்தில் போட்டுக் கரைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துப் பதத்தில் வடித்து 15 நாட்கள் நெற்புடத்தில் வைத்து எடுத்துக்கொள்ளவும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தை முறைப்படி தலைமுழுகிவர கண்ணில் நீர் வடிதல், கண்வலி, மேக அழலை, தலைநோய் ஆகிய நோய்கள் யாவும் குணமாகும்.

31. சீந்தில் தைலம்

1. சீந்திற்சாறு	8 லிட்டர்
2. கற்றாழைச்சாறு	,,
3. நெல்லிக்காய்ச்சாறு	,,
4. வெட்டிவேர்ச்சாறு	,,
5. விலாமிச்சம்வேர்ச்சாறு	,,
6. நன்னாரிச்சாறு	,,
7. தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு	,,
8. தாழை விழுதுச்சாறு	,,
9. பொன்னாங்காணிச்சாறு	,,
10. முடக்கொத்தான்சாறு	,,
11. ஓரிதழ்த்தாமரைச்சாறு	,,
12. இளநீர்	,,
13. எள்நெய்	,,

மேற்கூறப்பெற்ற சாறுகளையும், எண்ணெயையும் ஒரு பாத்திரத்திலிட்டு,

1. வெட்டிவேர்	26 கிராம்
2. விலாமிச்சம்வேர்	,,

3. கிரந்திதகரம்	26 கிராம்
4. வெள்ளிலோத்திரம்	,,
5. ஏலரிசி	,,
6. இலவங்கப்பட்டை	,,
7. இலவங்கப்பத்திரி	,,
8. சுக்கு	,,
9. மிளகு	,,
10. திப்பிலி	,,
11. சீரகம்	,,
12. கருஞ்சீரகம்	,,
13. ஓமம்	,,
14. பெருங்காயம்	,,
15. இந்துப்பு	,,
16. சந்தனம்	,,
17. குங்குமப்பூ	,,
18. கிச்சிலிக்கிழங்கு	,,
19. நாணல் தாது	,,
20. அல்லிக்கிழங்கு	,,
21. நீலோற்பலக்கிழங்கு	,,
22. கற்பூரம்	,,
23. திராட்சைப்பழம்	,,
24. சடாமாஞ்சில்	,,
25. நீலாஞ்சனம்	,,
26. சிறுநாகப்பூ	,,
27. முசுமுசுக்கைவேர்	,,
28. சாதிப்பத்திரி	,,
29. சோனப்புல்	,,

ஆகியவற்றை வெய்யிலில் நன்றாக காயவைத்து உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து பசும்பால் விட்டு நன்கு நெகிழ அரைத்து தைலத்துடன் சேர்த்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து பருவத்தில் வடித்து ஒரு தைலப் பாத்திரத்திலிட்டு நெற்புடம் 15 நாட்கள் வைத்து எடுத்துக்கொள்ளவும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தை முறைப்படி தலைமுழுகி வந்தால் புருவம், நேத்திரம், தலை முதலிய இடங்களைப் பற்றிய நோய்களும், கை, கால் எரிவு, பைத்தியம் போன்ற நோய்களும் குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

32. சீரகத் தைலம்

1. சீரகம்	35 கிராம்
2. எள்நெய்	2 லிட்டர்

மேற்கூறப்பெற்றுள்ள சீரகத்தைச் சுத்தப்படுத்தி நல்லெண்ணெயில் போட்டு தைலப் பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரிக்கவேண்டும். சீரகம் யாவும் நன்றாக வெடித்து அடங்கிய பிறகு தைலத்தைக் கீழ் இறக்கி ஆறியபின் வடிகட்டி பத்திரப்படுத்தவும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தை வாரம் இரண்டு முறை தேய்த்து முழுகி வந்தால் தலைசுற்றல், கண்நோய்கள், வாந்தி, தலைவலி, மந்தம், அள்ளுநோய் முதலியன குணமாகும்.

குறிப்பு: அள்ளுநோய் வயிற்று மந்தத்தால் ஏற்பட்டு இரண்டு விலாவையும் பிடித்திழுத்து சுவாசம் வருவது.

33. சுக்குத்தைலம்

1. மாச்சுக்கு	2,800 கிராம்
2. எள்நெய்	4 லிட்டர்
3. பசுவின்பால்	,,
4. சிற்றரத்தை	9 கிராம்
5. சுக்கு	,,
6. மிளகு	,,
7. திப்பிலி	,,
8. கோரைக்கிழங்கு	,,
9. மஞ்சிட்டி வேர்	,,
10. கடுக்காய்த்தோல்	,,

11. நெல்லிக்காய்த்தோல்	9 கிராம்
12. தான்றிக்காய்த்தோல்	,,
13. அகிற்பட்டை	,,
14. தண்ணீர்விட்டான் கிழங்கு	,,
15. எருக்கன்பட்டை	,,
16. கடுகு ரோகிணி	,,
17. கோட்டம்	,,
18. கொடிவேலிவேர்	,,
19. தேவதாரு	,,
20. சந்தனம்	,,
21. வெள்ளைக்குங்கிலியம்	,,
22. செவ்வியம்	,,
23. ஆமணக்கின்வேர்	,,
24. வெள்ளத்திப்பட்டை	,,
25. பேரீச்சங்காய்(விதை போக்கி)	,,
26. திராட்சை	,,
27. இந்துப்பு	,,
28. கஸ்தூரி	1¾ கிராம்
29. குங்குமப்பூ	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் சுக்கின்மேல் தோலைப் போக்கி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு மட்பாண்டத்தில் இட்டு அதில் 32 லிட்டர் தண்ணீர்விட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி வடித்து வடிகட்டி ஒரு பாண்டத்திலிட்டு இதனுடன் நல்லெண்ணெயையும், பாலையும் சேர்த்து மற்றைய மருந்துகளில் உள்ள கஸ்தூரி, குங்குமப்பூ இரண்டையும் எடுத்துவிட்டுப் பாக்கியுள்ள 24 மருந்துகளையும் உரலிலிட்டு நன்றாக இடித்துத் தூள்செய்து வடிகட்டி எடுத்து மேற்படி தைலத்துடன் கலந்து சிறுதீயிட்டு கெட்டி மெழுகுபதத்தில் தைலத்தைக் காய்ச்சி வடிகட்டவேண்டும். வடித்த தைலத்தில் கஸ்தூரி, குங்குமப்பூ இரண்டையும் சேர்க்கவும். இவ்வாறு காய்ச்சி வடித்த தைலத்தை நெல்லுக்குள் ஒரு மாதம் புடம் வைத்து எடுத்தால் சுத்தியாகும்.

தீரும் நோய்கள்:

1. இத்தைலத்தை வாத நோயினால் பீடிக்கப்பட்ட வர்கள் ஒவ்வொரு நாளும் உடலில் நன்கு தேய்த்து வந்தால், மேகத்தினால் உண்டாகும் வாதங்கள் யாவும் குணமாகும்.

2. நாசிகளில் நசியம் செய்தால் பீனிச நோய்கள் யாவும் குணம் ஏற்படுவதுடன் விடாத் தலைவலியும் நிவர்த்தியாகும்.

3. வாயிலிட்டுக் கொப்பளித்தால் பற்களின் வேரைப் பற்றிய வாத நோய்களும், பல்லரணை, பல்வலி முதலியன யாவும் குணமாகும்.

4. காதுகளில் இரண்டு துளிவிட்டால் காது நோய்கள் யாவும் குணமாகும்.

5. தலையில் தினமும் தேய்த்து முழுகினால் கபால சம்பந்தமான நோய்கள் யாவும் குணமாவதுடன் கோழைக் கட்டுகளும், தலைநோய்களும் குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

34. சுத்தவல்லாதித் தைலம்

1. ஐந்தெண்ணெய்	2 லிட்டர்
2. சிற்றாமுட்டி	64 லிட்டர்
3. தண்ணீர்	16 லிட்டர்

மேற்கூறப்பெற்ற சிற்றாமுட்டி மூலத்தை ஒரு பாத்திரத்திலிட்டு 16 லிட்டர் தண்ணீர்விட்டு 2 லிட்டராகக் காய்ச்சி வடித்த குடிநீருடன் ஐந்தெண்ணெயைச் சேர்த்து,

1. கெந்தகம்	17½ கிராம்
2. அதிமதுரம்	,,
3. கோட்டம்	,,
4. சாதிக்காய்	,,

5. சாதிப்பத்திரி	17½ கிராம்
6. ஏலம்	,,
7. இலவங்கப்பட்டை	,,
8. அரத்தை	,,
9. சுக்கு	,,
10. அக்கிரகாரம்	,,
11. சடாமாஞ்சில்	,,
12. தாளிசபத்திரி	,,
13. வாய்விளங்கம்	,,
14. யானைத்திப்பிலி	,,
15. திப்பிலி	,,
16. கடுகுரோகிணி	,,
17. வால்மிளகு	,,
18. ஓமம்	,,
19. குங்குமப்பூ	,,
20. கருஞ்சீரகம்	,,
21. கடுக்காய்த்தோல்	,,
22. தான்றிக்காய்த்தோல்	,,
23. செண்பகப்பூ	,,
24. கொத்துமல்லி	,,
25. வாலுழுவை	,,
26. சிறுநாகப்பூ	,,
27. செவ்வியம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகள் 27-யும் இடித்துத் தூள்செய்து எண்ணெயில் போட்டு,

1. பழச்சாறு	2 லிட்டர்
2. பசுவின்பால்	,,

இரண்டும் சேர்த்து அடுப்பேற்றிச் சிறுதீயிட்டு மெழுகுப் பதத்தில் காய்ச்சி வடித்து புனுகு, கஸ்தூரி போட்டு பத்திரப்படுத்தவும்.

அளவு: காசெடை, (காலை, மாலை இருவேளை) மூன்றுநாள் ஆறுவேளை. ஒரு துளி நாசியிலும் விடவேண்டும்.

தீரும் நோய்கள்: முகவாதம், மண்டை வாதம், பித்தம், நீலகாசம், பீனிசம், வாயு, சூலை, சொறி முதலியன குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

குறிப்பு: ஏழாவது நாள் பாசிப்பருப்பு, உப்பு, புளி, சேர்க்கவேண்டும். எட்டாவது நாள் ஓமம் தேய்த்து வெந்நீரில் குளிக்கவேண்டும்.

35. தலைவலித் தைலம்

1. நல்லெண்ணெய்	2 லிட்டர்
2. பசும்பால்	,,
3. கம்பஞ்சோற்றுநீர்	,,
4. ஆதொண்டையிலைச்சாறு	,,
5. மிளகு	,,

மேற்கூறப்பெற்ற சாறுகளுடன் எண்ணெயைக் கலந்து ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி அதில் மிளகையும் கொட்டி தீயெரிக்கவேண்டும். மிளகு மிதக்கும் அளவு வரை தீயெரித்து இறக்கி வடித்துக்கொண்டு பின் மிளகைத் தனித்து எடுத்துக் குழியம்மியிலிட்டுத் தைலம்விட்டு நன்கு நெகிழ அரைத்து தைலத்துடன் கலந்து சூரிய உதயத்திற்கு முன்பு தலைமுழுகி உணவு உட்கொள்ளவேண்டும்.

தீரும் நோய்கள்: மண்டைக்குத்தல், கண்குத்தல் முதலியன குணமாகும். தீராத தலைவலிகள் யாவும் குணமாகும்.

36. தேற்றான் கொட்டைத் தைலம்

1. தேற்றான்கொட்டைத்தூள்	3500 கிராம்
2. ஆற்றுநீர்	16 லிட்டர்

தேற்றான் கொட்டைத்தூளை ஒரு பாத்திரத்திலிட்டு ஆற்றுநீரை ஊற்றி அடுப்பேற்றி சுண்டக்காய்ச்சி 2 லிட்டராக வற்றவைத்து வடிக்கட்டி தனிப்படுத்தி வேறு பாத்திரத்தில் விட்டு,

1. எள்நெய்	2 லிட்டர்
2. மரமஞ்சள்	3½ கிராம்
3. கப்புமஞ்சள்	,,
4. கடுக்காய்த்தோல்	,,
5. நெல்லிக்காய்	,,
6. தான்றிக்காய்	,,
7. தேற்றான்கொட்டை	,,
8. சந்தனக்கட்டை	,,
9. வில்வப்பழம்	,,
10. வெள்ளிலோத்ரம்	,,
11. காசுக்கட்டி	,,
12. விழாம்பழச்சதை	,,
13. பருத்திக்கொட்டைப் பருப்பு	,,
14. கிரந்தி தகரம்	,,
15. வாழைப்பூக்குருத்து	,,
16. கற்பூரச்சிலாசத்து	,,
17. காந்தக்கல்	,,
18. காவிக்கல்	,,
19. வட்டத்திருப்பி	,,
20. வெண்குன்றிப்பருப்பு	,,
21. மாங்கொட்டைப்பருப்பு	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் தூள்செய்ய வேண்டியவைகளைத் தூள்செய்து மற்றவைகளைக் கலந்து வெள்வேலம்பட்டைக் குடிநீர்விட்டு மைபோல் அரைத்து ஒரு பாத்திரத்தில் மேற்கூறப்பெற்றவைகள் யாவற்றையும் ஊற்றிக் கரைத்து அடுப்பிலேற்றி சிறுதீயிட்டு மெழுகுபதம் ஆகும்வரை எரித்து வடித்துத் தைலப் பாத்திரத்தில் விட்டுச் சீலைமண் செய்து நெற்புடத்தில் 9 நாட்கள் வைத்த தெடுக்கவும்.

அளவு: காசெடை. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: இத்தைலத்தை மேற்கூறியவாறு உள்ளுக்குச் சாப்பிட்டாலும், மேல்முழுவதும் பூசித்

தூவாலையினால் பிடித்தாலும் நான்கு நாட்களுக்கு ஒரு முறை தலைமுழுகி வந்தாலும், மேக அழலை, மேகவெட்டை, மேகநீர் முதலிய பற்பல மேக சம்மந்தமான நோய்கள் குணமாகும்.

37. நவச்சாரத் தைலம்

1. சுத்தி செய்த நவச்சாரம்	350 கிராம்
2. பந்தம்போடாத நல்லெண்ணெய்	2 லிட்டர்
3. நீர்முள்ளிச்சாறு	,,
4. பசும்பால்	,,
5. சுக்கு	10 கிராம்
6. மிளகு	,,
7. திப்பிலி	,,
8. கடுக்காய்த்தோல்	,,
9. நெல்லிவற்றல் தோல்	,,
10. தான்றிக்காய்த்தோல்	,,
11. தாளிசப்பத்திரி	,,
12. ஏலம்	2½ கிராம்
13. கிராம்பு	,,
14. கோட்டம்	,,
15. வாய்விளங்கம்	,,
16. அரத்தை	,,
17. சாதிக்காய்	,,
18. சாதிப்பத்திரி	,,
19. வால் மிளகு	5 கிராம்
20. ஓமம்	,,
21. சீரகம்	,,

மேற்கூறிய கடைச்சரக்குகளனைத்தும் பசுவின்பால் விட்டு கல்க்கமாக அரைத்து பின்னர் நீர்முள்ளிச்சாற்றால் மீண்டும் அரைத்து ஒரு தைல பாத்திரத்தில் நல்லெண்ணெயை விட்டு அரைத்த கல்கத்தையும் நவச்சாரத்தைத் தூள்செய்தும் மேற்படி நல்லெண்ணெயில் கலந்து அடுப்பிலேற்றி சிறு தீயாக எரித்து தைல பதத்தில் இறக்கி (மெழுகுபதம்) வடித்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: 1 முதல் 3 துட்டெடை. (காலை, மாலை இரண்டுவேளை)

தீரும் நோய்கள்: மகோதரம், நீராம்பல், எண்வகைக் குன்மம், பித்தம், உளமாந்தை, பாண்டு, சோகை, கரப்பான், பழமலம், புழு, கிருமி முதலான நோய்கள் யாவும் குணமாகும்.

குறிப்பு: சரீர வன்மைக்கேற்ப தைலத்தைக் கூடுத லாகவும் குறைத்தும் கொடுக்கலாம்.

38. நுணாத் தைலம்

1. ஆமணக்கு நெய்	2 லிட்டர்
2. நுணாயிலைச்சாறு	2 லிட்டர்
3. வெங்காயச்சாறு	2 லிட்டர்

மேற்கூறப்பெற்றவைகளை ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பி லேற்றிச் சிறுதீயிட்டுக் காய்ந்து வரும் நேரத்தில்,

1. வில்வக்கொழுந்து	2 பிடி
2. சீரகம்	7 கிராம்
3. பொறித்த வெங்காரம்	7 கிராம்
4. கடுக்காய்த்தோல்	7 கிராம்

இவைகளைத் தூள்செய்து மேற்படி தைலத்துடன் சேர்த்து பதத்தில் வடித்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: ஒரு சங்களவு. (காலையில் மட்டும்)

தீரும் நோய்கள்: மாந்தம், கணை முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: குழந்தையின் தாய், புளி, இறைச்சி, மீன், கருவாடு நீக்கிப் பத்தியமாய் இருக்கவேண்டும்.

39. நெய்சட்டிக் கீரைத்தைலம்

1. நெய்சட்டிக் கீரைச்சாறு	2 லிட்டர்
2. பசு நெய்	1 லிட்டர்
3. எள்நெய்	1 லிட்டர்

இம்மூன்றையும் பாத்திரத்திலிட்டு,

1. அதிமதுரம்	3½ கிராம்
2. சந்தனம்	,,
3. நன்னாரிவேர்	,,
4. வெட்டிவேர்	,,
5. விலாமிச்சைவேர்	,,
6. திப்பிலி மூலம்	,,
7. இலவங்கம்	,,
8. கடுகு ரோகிணி	,,
9. நெய்தற்கிழங்கு	,,

அளவு: சிறு தேக்கரண்டி. (காலை, மாலை இருவேளை)

தீரும்நோய்கள்: இத்தைலத்தை உள்ளுக்கும் சாப்பிடலாம். நான்கு தினங்களுக்கு ஒரு முறை தலை முழுகவும் செய்தால் கண் புகைச்சல், தேக எரிச்சல், ரண சுரம் முதலியன குணமாகும்.

40. பத்துவேர்த் தைலம்

1. கண்டங்கத்திரி வேர்	350 கிராம்
2. சிறுவழுதுணைவேர்	,,
3. சிற்றாமல்லி வேர்	,,
4. பேராமல்லி வேர்	,,
5. நெருஞ்சில்வேர்	,,
6. வில்வவேர்	,,
7. பெருங்குமிழ்வேர்	,,
8. தழுதாழை வேர்	,,
9. பாதிரிவேர்	,,
10. வாகை வேர்	,,

இவைகளை இடித்துத் தூள்செய்து ஒரு மண் பாண்டத்தில் போட்டு 32 லிட்டர் ஆற்றுநீர் விட்டு அடுப்பேற்றி 4 லிட்டராகக் காய்ச்சி வடித்துக்கொண்டு,

1. உளுந்தின் குடிநீர்	2 லிட்டர்
2. எள்நெய்	8 லிட்டர்

இவ்விரண்டையும் வடித்த நீருடன் சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு,

1. எட்டிவிதை	17½ கிராம்
2. விலாமிச்சைவேர்	,,
3. ஏலம்	,,
4. கோரைக்கிழங்கு	,,
5. சந்தனம்	,,
6. செஞ்சந்தனம்	,,
7. தேவதாரம்	,,
8. சரளத்தேவதாரம்	,,
9. கோட்டம்	,,
10. கடுக்காய்த்தோல்	,,
11. நெல்லிவற்றல்	,,
12. தான்றிக்காய்த்தோல்	,,
13. அதிமதுரம்	,,
14. வெட்பாலைப்பட்டை	,,
15. சதகுப்பை	,,
16. நீர்முள்ளி விதை	,,
17. மஞ்சிட்டி விதை	,,
18. மரமஞ்சள்	,,
19. கூகைநீறு	,,
20. சுக்கு	,,
21. மிளகு	,,
22. திப்பிலி	,,
23. இந்துப்பு	,,
24. சீரகம்	,,
25. கருஞ்சீரகம்	,,
26. ஓமம்	,,
27. பெருங்காயம்	,,

இச்சரக்குகள் 27ஐயும் மேற்படி குடிநீர் விட்டு மைபோல் அரைத்து அவ்வெண்ணெயிற் கலந்து அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து கெட்டி மெழுகு பதத்தில் இறக்கி வடித்து வைக்கவும்.

இத்தைலத்தை 8 நாட்களுக்கு ஒருமுறை சூரிய உதயத்திற்கு முன்பு தேய்த்துத் தலைமுழுக வேண்டும்.

நான்கு நாட்களுக்கு ஒருமுறை நசியம் செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு தலைமுழுகிவந்தால் பீனிச நோய் குணமாகும். தலைமுழுகிய தினத்தன்று புளிநீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

41, பீனிசத் தைலம்

1. நல்லெண்ணெய்	4 லிட்டர்
2. நொச்சிச்சாறு	,,
3. கரிப்பான் சாறு	,,
4. இந்துப்பு	17½ கிராம்
5. சிற்றரத்தை	,,
6. திப்பிலி	,,
7. ஆமணக்கின் வேர்	,,
8. பாலைமரத்தின்வேர்	,,
9. கிரந்தி தகரம்	,,
10. ஃக்கு	,,
11. கோட்டம்	,,
12. தேற்றாங்கொட்டை	,,
13. சதபுட்பி	,,
14. வாய் விளங்கம்	,,
15. அதிமதுரம்	,,

மேற்கூறப்பெற்ற 15 மருந்துகளையும் வெள்ளாட்டுப் பாலில் நன்றாக அரைத்து, சாறுகள், நல்லெண்ணெய் எல்லாவற்றையும் ஒரு பாண்டத்தில் விட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து கெட்டி மெழுகு பதத்தில் இறக்கி வடித்து வைக்கவும்.

இத்தைலத்தை 8 நாட்களுக்கு ஒருமுறை சூரிய உதயத்திற்கு முன்பு தேய்த்துத் தலைமுழுக வேண்டும்.

நான்கு நாட்களுக்கு ஒருமுறை நசியம் செய்து கொள்ளவேண்டும். இவ்வாறு தலைமுழுகி வந்தால் பீனிச நோய் குணமாகும். தலை முழுகிய தினத்தன்று புளிநீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

42. பெருங்குமரித் தைலம்

1. இளங்கற்றாழை மடல் சாறு	16 லிட்டர்
2. பசுவின்பால்	,,
3. எள்நெய்	,,
4. மொந்தன் வாழைக்கிழங்குச்சாறு	,,
5. கையான் சாறு	,,
6. நெல்லிக்காய்ச்சாறு	,,

மேற்கூறப்பெற்ற சாறுகளையும் எள் நெய்யையும் ஒரு பாத்திரத்தில் விட்டு,

1. சிறுதேக்கு	26 கிராம்
2. வெட்டிவேர்	,,
3. விலாமிச்சைவேர்	,,
4. சிறு நன்னாரி	,,
5. பெருநன்னாரி	,,
6. சந்தனம்	,,
7. செஞ்சந்தனம்	,,
8. தேவதாரு	,,
9. சரளத்தேவதாரு	,,
10. கறிமஞ்சள்	,,
11. மரமஞ்சள்	,,
12. கஸ்தூரி மஞ்சள்	,,
13. அரத்தை	,,
14. தாமரை வளையம்	,,
15. மஞ்சிட்டி வேர்	,,
16. அதிமதுரம்	,,

17. நீலோற்பலக்கிழங்கு	26 கிராம்
18. தக்கோலம்	,,
19. நீலாஞ்சனம்	,,
20. கோரைக்கிழங்கு	,,
21. கற்பூரம்	,,
22. கஸ்தூரி	,,
23. கடுக்காய்த்தோல்	,,
24. நெல்லிவற்றல்	,,
25. தான்றிக்காய்	,,
26. சாதிக்காய்	,,
27. புனுகுச்சட்டம்	,,
28. அதிவிடயம்	,,
29. கிச்சிலிக்கிழங்கு	,,
30. மாதுளம்பழத்தோல்	,,
31. பாக்குமரத்தின் பூமுடி	,,
32. ஏலரிசி	,,
33. இலவங்கப்பட்டை	,,
34. இலவங்கப்பத்திரி	,,
35. சிறுநாகப்பூ	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளைப் பசும்பால் விட்டு அரைத்து எண்ணெயுடன் கரைத்து அடுப்பேற்றி எரித்துப் பக்குவப் பதத்தில் வடித்து நெற்புடமிட்டு எடுத்துக் கொள்ளவும்.

தீரும்நோய்கள்: இத்தைலத்தை முறைப்படி நான்கு நாட்களுக்கு ஒருமுறை தலைமுழுகி வந்தால் கண் இமை நரம்பில் பரவிய வாதச் சலிப்பும், கண்ணோய்களும் குணமாகும்.

43. பெருமரப்பட்டைத் தைலம்

1. பெருமரப்பட்டை (இடித்தது)	350 கிராம்
2. தண்ணீர்	16 லிட்டர்

மேற்கூறப்பெற்ற இடித்த பெருமரப்பட்டையை ஒரு மட்பாண்டத்தில் போட்டு 16 லிட்டர் தண்ணீர் விட்டு அடுப்பிலேற்றி 4 லிட்டராகக் காய்ச்சிக் குடிநீராக வடித்து வைத்துக்கொள்ளவும்.

1. நல்லெண்ணெய்	2 லிட்டர்
2. புளியாரைச்சாறு	2 லிட்டர்
3. தயிர் (பாலேட்டுடன்)	8 லிட்டர்

இவைகளைக் குடிநீருடன் கலந்து ஒரு பாண்டத்திலிட்டு,

1. ஓமம்	4½ கிராம்
2. விலாமிச்சம்வேர்	,,
3. பெருங்காயம்	,,
4. திப்பிலி மூலம்	,,
5. வெட்பாலைப்பட்டை	,,
6. கழற்சிப்பருப்பு	,,
7. மரமஞ்சள்	,,
8. இலவங்கம்	,,
9. சுக்கு	,,
10. அதிவிடையம்	,,
11. கோட்டம்	,,
12. கோரைக்கிழங்கு	,,
13. வில்வப்பழச்சதை	,,
14. காட்டாத்திப்பூ	,,
15. பூனைக்காஞ்சொறிவேர்	,,
16. சடாமாஞ்சில்	,,
17. வட்டத்திருப்பி	,,

இம்மருந்துகளை உரலிலிட்டு நன்கு இடித்துத் தூள்செய்து வடிகட்டி மேற்படி எண்ணெயுடன் கலந்து அடுப்பிலேற்றி தீபாக்கினியாக எரித்து பாகத்தில் வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

அளவு: சிறுகரண்டி அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: சகலவித கிராணிப் போக்கும் குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

44. பேய்ப்பீர்க்குத் தைலம்

1. பேய்ப்பீர்க்குச்சாறு	2 லிட்டர்
2. கையான்தகரைச்சாறு	2 லிட்டர்
3. வெள்ளாட்டுப்பால்	,,
4. ஆமணக்கு நெய்	500 மிலி.
5. பசு நெய்	,,
6. எள்நெய்	1000 மிலி.

மேற்கூறப்பெற்றவைகளை ஒரு பாத்திரத்திலிட்டு

1. அதிமதுரம்	3½ கிராம்
2. கோட்டம்	,,
3. சந்தனம்	,,
4. மஞ்சிட்டிவேர்	,,
5. நன்னாரிவேர்	,,
6. விலாமிச்சம்வேர்	,,
7. கப்பு மஞ்சள்	,,
8. சதபுட்பி (எருக்கு)	,,
9. கடுக்காய்த்தோல்	,,
10. நெல்லிக்காய்த்தோல்	,,
11. தான்றிக்காய்த்தோல்	,,
12. இலவங்கப்பட்டை	,,
13. இலவங்கப்பத்திரி	,,
14. ஏலம்	,,

முதலிய மருந்துகளை வெள்ளாட்டுப் பாலால் நன்கு நெகிழ அரைத்து மேற்படி எண்ணெயுடன் கலந்து அடுப்பேற்றி சிறுதீயாக எரித்து மெழுகு பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு தலைமுழுகி வரவும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தை வாரம் இரண்டுமுறை தலையிலிட்டு முழுகிவந்தால் மண்டை நோய்களும், கண் நோய்களும் குணமாகும்.

பத்தியம்: தைலம் தேய்த்த அன்று புளி, புகை நீக்கி உணவு உட்கொள்ளவும்.

45. மருதோன்றித் தைலம்

1. தேங்காய் நெய்	10 லிட்டர்
2. மருதோன்றி இலைச்சாறு	5 லிட்டர்
3. மஞ்சள் கரிசாலைச்சார்	,,
4. பொடுதலைச்சாறு	,,
5. கீழ்க்காய் நெல்லிச்சாறு	,,
6. பசும்பால்	10 லிட்டர்
7. செம்பரத்தம் பூக்கள்	1000

மேற்கூறப்பெற்ற தேங்காய் நெய்யுடன் சாறுகளையும், பசும்பாலையும் விட்டு செம்பரத்தம் பூக்களையும் சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி தீயிட்டு நன்கு கொதிக்கும்போது

1. வெந்தயம்	1 கிலோ
2. கோட்டம்	15 கிராம்
3. மஞ்சிட்டி	10 கிராம்
4. சந்தனம்	15 கிராம்
5. திப்பிலி	10 கிராம்
6. புனுகுச்சட்டம்	10 கிராம்
7. வெட்டிவேர்	15 கிராம்
8. விலாமிச்சவேர்	,,
9. அதிமதுரம்	,,
10. சடாமாஞ்சில்	50 கிராம்
11. ரோஜா மொக்கு	25 கிராம்
12. செண்பக மொக்கு	,,
13. மகிழம்பூ	,,
14. அகில்கட்டை	15 கிராம்

15. கோரைக்கிழங்கு	25 கிராம்
16. கிரந்தி தகரம்	15 கிராம்
17. நன்னாரிவேர்	,,
18. தக்கோலம்	,,
19. இலவங்கப்பட்டை	,,
20. இலவங்கப்பத்திரி	,,
21. சிறுநாகப்பூ	,,
22. சாதிப்பத்திரி	,,
23. வாசனை கோஷ்டம்	,,
24. தேவதாரு	,,
25. வசம்பு	,,
26. அக்ரகாரம்	,,
27. ஏலரிசி	,,
28. கொத்துமல்லி	25 கிராம்
29. வாலுழுவை	15 கிராம்
30. வெள்ளை மிளகு	,,
31. வால்மிளகு	,,
32. சீரகம்	,,
33. கஸ்தூரி மஞ்சள்	,,
34. கார்போகி	25 கிராம்
35. மரமஞ்சள்	15 கிராம்
36. வெட்பாலை அரிசி	,,
37. சிற்றரத்தை	,,
38. இலவங்கம்	,,
39. கண்டுபாரங்கி	,,
40. யானைத்திப்பிலி	,,

மேற்கூறப்பெற்ற 40 சரக்குகளையும் பசுவின் பால் விட்டு கலக்கமாக நன்கு நெகிழ அரைத்து மேற்படி கொதி நிலையில் உள்ள தைலத்துடன் கலந்து முத்தீயிட்டு எரித்து தைல பதத்தில் இறக்கி (மணல் பருவம்) வடித்துவைத்துக் கொள்ளவும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தை முறைப்படி தலைமுழுகி வந்தால் உடற்சூடு தணிந்து, கண்கள் குளிர்ச்சி

அடைவது டன் இளநரை, முடி உதிர்தல், முடி நீளமாக வளர்ந்து பொடுகு இல்லாமல் ஆவது போன்ற குணங்களை கொடுத்து மூளைக்கு குளிர்ச்சியையும், சரீரத்திற்கு அழகையும், வனப்பையும் கொடுக்கக்கூடிய வல்லமை யுடைய உயர்ந்த தைலமாகும்.

முக்கியம்: இத்தைலத்தை பெண்கள் முடிவாரிக் கொள்வதற்கு தினமும் பயன்படுத்தி வந்தால் மேற்கூறப் பெற்ற பலன்களைப் பெறலாம்.

46. மணத்தக்காளித் தைலம்

1. செம்மணத் தக்காளிச்சாறு	500 மிலி.
2. எள் நெய்	,,
3. சுக்குத்தூள்	9 கிராம்
4. மிளகுத்தூள்	,,
5. திப்பிலித்தூள்	,,

மேற்கூறப்பெற்ற சாற்றையும், எண்ணெயையும் ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றித் துழாவிக் கிண்டி பாகமாகி வரும்போது சூரணங்களை அதில் தூவி மெழுகு பதத்தில் வடித்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: இரண்டு துட்டெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: ஆட்டுப்பால்.

தீரும் நோய்: இத்தைலத்தைக் காலையிலும், மாலையிலுமாக ஒரு மண்டலம் சாப்பிட்டால் சுவாச நோய் குணமாவதுடன் உடல் உறுதியாகும்.

47. மிளகுத்தைலம்

1. மிளகு	350 கிராம்
2. சிறுகத்தரிவேர்	,,
3. வில்வவேர்	,,
4. கீழ்க்காய் நெல்லிவேர்	,,

5. கண்டங்கத்திரி வேர்	350 கிராம்
6. புங்கன்வேர்	,,
7. ஊமத்தைவேர்	,,
8. சிறுகீரைவேர்	,,
9. நொச்சிவேர்	,,
10. சிற்றரத்தைவேர்	,,
11. தாழைவிழுது வேர்	,,
12. எள்நெய்	4 லிட்டர்
13. வெள்ளாட்டுப்பால்	8 லிட்டர்

மேற்கூறப்பெற்ற 11 வேர்களையும் உரலிலிட்டு நன்கு இடித்து சிதைத்து ஒரு மட்பாண்டத்தில் 48 லிட்டர் தண்ணீர்விட்டு நான்கில் ஒன்றாக வற்றவைத்து வற்றவைத்த தண்ணீர் 12 லிட்டரையும் வடிகட்டி எடுத்துத் தைலம் எரிக்கும் பாண்டத்தில் விட்டு அதனுடன் பாலையும், நல்லெண் ணெயையும் சேர்த்து,

1. கடுக்காய்த்தோல்	9 கிராம்
2. நெல்லிக்காய்த்தோல்	,,
3. மிளகு	,,
4. திப்பிலி	,,
5. அதிவிடையம்	,,
6. வட்டத்திருப்பி	,,
7. மயிலிறகு	,,
8. கோஷ்டம்	,,
9. சாதிக்காய்	,,
10. சுக்கு	,,
11. கற்பூரம்	,,
12. வெட்பாலை அரிசி	,,
13. கஞ்சாவிதை	,,
14. மஞ்சள்	,,
15. சித்திரமூலம்	,,
16. அதிமதுரம்	,,
17. வாய்விளங்கம்	,,
18. புளியங்கொட்டைத்தோல்	9 கிராம்

ஆக 18 மருந்துகளையும் மேற்கூறிய பால்விட்டு நன்கு நெகிழ அரைத்து எண்ணெயில் கலந்து அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து கெட்டி மெழுகு பதத்தில் இறக்கி வடித்து நெற்புடத்தில் ஏழு நாட்கள் வைத்து எடுத்து பத்திரப் படுத்தவும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தை வாரம் இருமுறை தலைமுழுகி வந்தால், நாட்பட்ட வாதநோய், தலைக்கனம், கபாலநோய், முகவாதம் போன்ற வாதநோய்களும், செவிட்டு நோய், புத்தி மந்தம் முதலியனவும் குணமாகும்.

1. முதியார் கூந்தல் வேர்	3½ கிலோ கிராம்
2. தண்ணீர்	16 லிட்டர்

முதியார் கூந்தல் வேரை நன்றாக இடித்து ஒரு மண்பாண்டத்தில் போட்டு 16 லிட்டர் தண்ணீர் விட்டு 2 லிட்டராகும் வரை எரித்து எடுத்து வடிகட்டி,

1. தயிர்த் தெளிவு	6 லிட்டர்
2. எள்நெய்	,,
3. காடி நீர்	,,
4. தாய்ப்பால்	2 லிட்டர்

இவைகள் யாவற்றையும் மேற்படி குடிநீருடன் சேர்த்து ஒரு பாண்டத்திலிட்டு,

1. திப்பிலி	35 கிராம்
2. திப்பிலி மூலம்	,,
3. சடாமாஞ்சில்	,,
4. அதிமதுரம்	,,
5. இந்துப்பு	,,
6. சிற்றாமுட்டி	,,
7. தேவதாரு	,,
8. கொடிவேலி	,,
9. சிற்றரத்தை	,,
10. மாவிலிங்கப்பட்டை	,,
11. சதபுட்பி (எருக்கு)	,,

12. சேங்கொட்டை	35 கிராம்
13. அம்மையார் கூந்தல்வேர்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளைத் தாய்ப்பாலால் அரைத்து மேற்படி எண்ணெயுடன் கலந்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும். இத்தைலத்தை பிடித்தைலமாக உடலில் தேய்த்துப் பிடித்துவிட வேண்டும்.

குறிப்பு: தாய்ப்பால் கிடைக்காதபோது பசும்பால் விட்டு அரைக்கவும்.

தீரும் நோய்கள்: நீங்காத தேகக்குடைச்சல், உதிர்வலி, திமிர்வாதம் முதலியன குணமாகும்.

49. மெருகன் செடி சமூலத் தைலம்

1. மெருகன் செடி சமூலம்	1.050 கிராம்
2. காடிநீர்	16 லிட்டர்

மெருகன் செடியை சமூலத்தை நறுக்கி இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு 16 லிட்டர் காடிநீர் விட்டு, அடுப்பேற்றி 4 லிட்டராக வற்றவைத்து வடிகட்டி,

1. வெள்ளாட்டுப்பால்	4 லிட்டர்
2. எள்நெய்	4 லிட்டர்

இவை இரண்டையும் மேற்படி வடிகட்டிய நீருடன் கலந்து ஒரு பாத்திரத்தில் விட்டு அடுப்பேற்றி

1. மெருகன்கிழங்கு	35 கிராம்
2. கடுகுரோகிணி	35 கிராம்

இவை இரண்டையும் மேற்படி பால்விட்டு அரைத்து எள்நெய்யுடன் கலந்து எரித்து வடிகட்டிக்கொள்ளவும்.

அளவு: துட்டெடை. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: இதனை உள்ளுக்கும் கொடுக்கலாம். இத்தைலத்தினால் சீதசுரம் குணமாகும்.

குறிப்பு: இத்தைலத்தைத் தினமும் தலையில் வைத்துக்கொண்டு முழுகலாம்.

50. மெருகன் கிழங்குத் தைலம்

1. மெருகன் கிழங்கு	1750 கிராம்
2. அமுக்கிரா கிழங்கு	420 கிராம்
3. பேராமுட்டி	,,
4. கோரைக்கிழங்கு	,,
5. தண்ணீர்விட்டான் கிழங்கு	,,
6. காடிநீர்	16 லிட்டர்

மேற்கூறப்பெற்ற ஐந்து கிழங்குகளையும் நன்கு இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டுக் காடிநீர் விட்டு அடுப்பேற்றி சிறுதீயிட்டு எரித்து 4 லிட்டர் அளவிற்கு வற்றவைத்து வடிகட்டி வேறொரு பாத்திரத்தில் விட்டு,

1. எள்நெய்	4 லிட்டர்
2. பசும்பால்	,,
3. அரக்குக்குடிநீர்	2 லிட்டர்
4. புளித்த தயிரின் நீர்	,,

ஆகிய இவைகளையும் மேற்படி பாத்திரத்தில் விட்டு,

1. இலவங்கப்பட்டை	7 கிராம்
2. இலவங்கப்பத்திரி	,,
3. தேவதாரம்	,,
4. சரளத்தேவதாரம்	,,
5. சிறுநாகப்பூ	,,
6. காட்டு மிளகு	,,
7. சிற்றரத்தை	,,
8. கிரந்தி தகரம்	,,
9. மரமஞ்சள்	,,
10. அகில்	,,

11. சந்தனம்	7 கிராம்
12. கடுகுரோகிணி	,,
13. விலாமிச்சை	,,
14. அதிமதுரம்	,,
15. கோரோசனம்	,,
16. மஞ்சிட்டி வேர்	,,
17. மருடகிழங்கு	,,

ஆகிய இம்மருந்துகளை மேற்கூறப்பெற்ற பாலால் அரைத்துத் தைலத்துடன் கலந்து அடுப்பேற்றி சிறு தீயிட்டு மெழுகுபதம் வரும்வரையில் எரித்து வடிகட்டி நெற்புடத்தில் 1 மாதம் வைத்து எடுத்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: துட்டெடை. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: வாதசுரம் முதலிய சகலவிதமான சுரங்களும் குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

குறிப்பு: இத்தைலத்தை விட்டுத் தலைமுழுகினாலும் உட்கொண்டாலும் மேற்கூறப்பெற்ற நோய்கள் குணமாகும்.

51. மேகம் 21-க்கும் தைலம்

1. விளக்கெண்ணெய்	4 லிட்டர்
2. இளநீர்	2 லிட்டர்
3. பசும்பால்	,,
4. காடிநீர்	,,
5. பொன்னாங்காணிச்சாறு	,,
6. ஆதொண்டை இலைச்சாறு	,,
7. வல்லாரைச்சாறு	,,
8. வில்வ இலைச்சாறு	,,
9. அறுகன் வேர்ச்சாறு	,,

10. திருகுக்கள்ளியை வாட்டிப் பிழிந்த நீர்	*2 லிட்டர்*
11. நீர்ப்பூண்டுச்சாறு	,,
12. சாணிப்பால்	*2 லிட்டர்*
13. வெந்தயம்	*3½ கிராம்*
14. சீரகம்	,,
15. கொத்துமல்லி	,,
16. சிறுநாகப்பூ	,,
17. கோட்டம்	,,
18. சாதிக்காய்	,,
19. இலவங்கம்	,,
20. ஏலம்	,,
21. அதிமதுரம்	,,
22. கூகைநீறு	,,
23. சீனாக்காரம்	,,
24. சர்க்கரை	,,

மேற்கூறப்பெற்ற 12 வரை உள்ள சாறுகளை எண்ணெயுடன் கலந்து பாத்திரத்தில் விட்டு அடுப்பேற்றி மற்றைய மருந்துகளையும் இடித்துப் பொடிசெய்து எண்ணெயுடன் கலந்து சிறுதீயிட்டு மெழுகுபதம் வரும்வரை எரித்து வடித்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: துட்டெடை. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: உடல்சூடு தீரும். உடல் பருக்கும். வாய்நாற்றம் முதலியன போகும். (ஒரு மண்டலம் மருந்து உட்கொள்ளவேண்டும்)

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

52. வல்லாரைத் தைலம்

1. கொடுப்பைக் கீரைச்சாறு	40 மில்லி
2. வல்லாரைக் கீரைச்சாறு	,,
3. புளியாரைக்கீரைச்சாறு	,,
4. கீழாநெல்லிச்சாறு	,,
5. துளசியிலைச்சாறு	,,
6. சிறுபுள்ளடிச்சாறு	,,
7. வரட்பூலாச்சாறு	,,
8. தகரயிலைச்சாறு	,,
9. ஓரிதழ் தாமரைச்சாறு	,,
10. புங்கிலைச்சாறு	,,
11. கோழி அவரைச்சாறு	,,
12. தூதுவளைச்சாறு	,,
13. அம்மான் பச்சரிசிச்சாறு	,,
14. துவரையிலைச்சாறு	,,
15. பீர்க்கிலைச்சாறு	,,
16. சூரையிலைச்சாறு	,,
17. வெண்ணொச்சியிலைச்சாறு	,,
18. அவரையிலைச்சாறு	,,
19. செந்நாயுருவிலைச்சாறு	,,
20. முட்காவேளைச்சாறு	,,
21. முத்திருக்கன்யிலைச்சாறு	,,
22. ஆடுதின்னாப்பாளைச்சாறு	,,
23. உத்தாமணியிலைச்சாறு	,,
24. மணத்தக்காளியிலைச்சாறு	,,
25. ஆடாதொடை இலைச்சாறு	,,
26. கருநொச்சி இலைச்சாறு	,,
27. நாய்வேளைச்சாறு	,,
28. சிறுசின்னியிலைச்சாறு	,,
29. வேப்பிலைச்சாறு	,,
30. காவட்டம்புல் சாறு	,,
31. களாப்பூண்டின் இலைச்சாறு	,,
32. நுணாத்தளிர் சாறு	,,

33. முதியார் கூந்தல் சாறு	40 மில்லி
34. சிறுகீரைச்சாறு	,,
35. முருங்கையிலைச்சாறு	,,
36. முசுமுசுக்கையிலைச்சாறு	,,
37. பொன்முசுட்டைச்சாறு	,,
38. அத்தியிலைச்சாறு	,,
39. நரிபயிற்றஞ்செடிச்சாறு	,,
40. நிலக்குமிழ்சாறு	,,
41. சுரையிலைச்சாறு	,,
42. விஷ்ணுகிரந்திச்சாறு	,,
43. சங்கங்குப்பியிலைச்சாறு	,,
44. ஆவாரையிலைச்சாறு	,,
45. பீச்சங்குயிலைச்சாறு	,,
46. தாளியிலைச்சாறு	,,
47. நாவல் தளிர்ச்சாறு	,,
48. கண்டங்கத்தரிச்சாறு	,,
49. வில்வயிலைச்சாறு	,,
50. சீந்தில்கொடிச்சாறு	,,
51. குட்டியிலைச்சாறு	,,
52. ஆமணக்கு நெய்	1 லிட்டர்

மேற்கூறப்பெற்ற சாறுகளையும், ஆமணக்கு நெய்யையும் ஒரு பாத்திரத்தில் விட்டு,

1. சீரகம்	35 கிராம்
2. கிராம்பு	,,
3. வசம்பு	,,
4. உரித்த பூண்டு	,,
5. திப்பிலி	,,
6. பற்பாடகம்	,,
7. கடுகு ரோகிணி	,,
8. மஞ்சள்	,,
9. பூந்திப்பழம்	,,
10. ஈருள்ளி	,,
11. ஆமையோடு	,,
12. கருஞ்சீரகம்	,,
13. கடல் நுரை	,,

இம்மருந்துகளை மேற்படி சாறுவிட்டு நன்கு நெகிழ அரைத்து 1 லிட்டர் எள்நெய்யுடன் கலந்து அடுப்பேற்றிச் சிறுதீயிட்டு மெழுகு பருவத்தில் வடித்து வைக்கவும்.

அளவு: துட்டெடை. (ஏழுநாட்கள் காலையில் மட்டும்)

தீரும் நோய்கள்: சிறு குழந்தைகட்கு ஏற்படும் மாந்தம் 7ம், கணையும் நீங்கும்.

பத்தியம்: தாய் இச்சாப்பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

53. வாத கேசரித்தைலம்

1. சதுரக்கள்ளிச்சாறு	2 லிட்டர்
2. நொச்சிச்சாறு	,,
3. தழுதாழைச்சாறு	,,
4. வெள்ளாட்டுப்பால்	,,
5. எருக்கம்பால்	,,
6. எள்நெய்	,,
7. ஆமணக்கு நெய்	,,
8. கடுக்காய்த்தோல்	13 ¼ கிராம்
9. காட்டு மிளகு	,,
10. உரித்த பூண்டு	,,
11. பெருங்காயம்	,,
12. கெந்தகம்	,,
13. கோஷ்டம்	,,
14. சுக்கு	,,
15. மிளகு	,,
16. திப்பிலி	,,
17. கடுகு	,,

மேற்கூறப்பெற்ற சாறுகள், பால், எள்நெய் முதலிய யாவற்றையும் தைலம் எரிக்கும் பாத்திரத்திலிட்டு மற்றைய பத்து மருந்துகளையும் வெள்ளாட்டுப் பால்விட்டு நன்கு நெகிழ அரைத்து மேற்படி எண்ணெயுடன் கலந்து சிறு

தீயிட்டு கெட்டி மெழுகு பதம் வரும்வரை எரித்து இறக்கி வடித்து வைத்துக்கொள்ளவும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தை வாதநோய் பீடிக்கப்பட்டவர்களின் உடலில் தேய்த்துப் பிடித்தால் தீராத வாத நோயும் குணமடையும். மேலும் சப்த தாதுக்களினால் உண்டாகிய திமிர் வாதமும் குணமடையும். எனவே இது வாதகேசரித் தைலம் என சிறப்புப்பெயர் பெற்றது.

54. வெண்ணொச்சித் தைலம்

1. வெண்ணொச்சி இலைச்சாறு	1 லிட்டர்
2. கரிசிலாங்கன்னிச்சாறு	,,
3. முள்சங்கிலைச்சாறு	,,
4. வெள்ளைச்சாரணைச்சாறு	,,
5. வேளைச்சாறு	,,
6. பேராமுட்டிச்சாறு	,,
7. தேள்கொடுக்கிலைச்சாறு	,,
8. பெரும்பாலைச்சாறு	,,
9. கண்டங்கத்திரிச்சாறு	,,
10. ஆடாதொடைச்சாறு	,,
11. பொடுதலைச்சாறு	,,
12. கீழ்க்காய்நெல்லிச்சாறு	,,
13. தூதுவளைச்சாறு	,,
14. எள் நெய்	,,
15. வெள்ளாட்டுப்பால்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளுடன் எண்ணெய், வெள்ளாட்டுப்பால் யாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு,

1. சுக்கு	1¾ கிராம்
2. மிளகு	,,
3. திப்பிலி	,,
4. சீரகம்	,,
5. ஏலரிசி	,,

6. காட்டு மிளகு	1 ¾ கிராம்
7. செவ்வியம்	,,
8. பெருங்காயம்	,,
9. ஓமம்	,,
10. அதிவிடையம்	,,
11. கண்டுபாரங்கி	,,
12. கோரைக்கிழங்கு	,,
13. யானைத்திப்பிலி	,,
14. வெட்பாலை அரிசி	,,
15. பெருமரப்பட்டை	,,
16. திப்பிலிக்கட்டை ,,	
17. வாய்விளங்கம்	,,
18. கடுகுரோகிணி	,,
19. கொடிவேலிப்பட்டை	,,
20. பெருங்குரும்பை	,,
21. வசம்பு	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகள் 21யும் வெள்ளாட்டுப் பாலினால் மைபோல் அரைத்து மேற்படி தைலத்தில் கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக்கொள்ளவும்.

அளவு: துட்டெடை. (காலை, மாலை இருவேளை மட்டும்)

தீரும் நோய்கள்: இத்தைலத்தை உள்ளுக்கும் சாப்பிட்டு தலையில் தேய்த்தும் வந்தால் ஐந்து வகை காசநோய்களும் குணமாகும்.

55. வெண்ணொச்சித் தைலம் (வேறு)

1. முதிர்ந்த நொச்சியிலைச்சாறு	1 ¼ லிட்டர்
2. கையாந்தகரைச்சாறு	,,
3. வெள்ளைப்பூண்டுச்சாறு	,,
4. இஞ்சிச்சாறு	,,
5. முருங்கை இலைச்சாறு	,,
6. பாகல் இலைச்சாறு	,,

7. சண்பகத்தழைச்சாறு	1 ¼ லிட்டர்
8. எருக்கிலைச்சாறு	,,
9. கத்தரிச்சாறு	,,
10. வாழைக்கிழங்குச்சாறு	,,
11. துளசிச்சாறு	,,
12. எள்நெய்	2 லிட்டர்

மேற்கூறப்பெற்றவைகளை ஒன்று சேர்த்து ஒரு பாத்திரத்தில் விட்டு,

1. அரத்தை	9 கிராம்
2. கோட்டம்	,,
3. மரமஞ்சள்	,,
4. அதிமதுரம்	,,
5. பெருங்காயம்	,,
6. தேவதாரு	,,
7. சுக்கு	,,
8. மிளகு	,,
9. திப்பிலி	,,
10. வாய்விளங்கம்	,,
11. கடுகு	,,
12. சித்திரமூலம்	,,

ஆகிய 12 மருந்துகளையும் மேற்படி சாறுவிட்டு நன்கு நெகிழ அரைத்து எண்ணெயுடன் கரைத்துக் காய்ச்சி முறைப்படி வடித்துப் பத்திரப்படுத்தவும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தை தலை முழுகி வந்தாலும், செவி நோய்களுக்குக் காதில் துளிக்கணக்கில் விட்டு வந்தாலும் நாட்பட்ட பீனிசம், தலைநோய் முதலியன குணமாகும்.

56. வேங்கைப்பட்டைத் தைலம்

1. வேங்கைப்பட்டை	70 கிராம்
2. சீந்தில்	,,
3. வில்வவேர்	,,
4. சிற்றாமுட்டிவேர்	,,
5. ஆற்றுநீர்	16 லிட்டர்

மேற்கூறப்பெற்ற வேர்களை ஒரு மண்பாண்டத்திலிட்டு 16 லிட்டர் ஆற்றுநீர் விட்டு அடுப்பேற்றிச் சிறுதீயிட்டு 4லிட்டராகக் காய்ச்சி வடித்த நீருடன்,

1. எள்நெய்	2 லிட்டர்
2. பசும்பால்	2 லிட்டர்

இவ்விரண்டையும் ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி,

1. சிற்றரத்தை	3½ கிராம்
2. சுக்கு	,,
3. அகில்	,,
4. ஏலம்	,,
5. நன்னாரி	,,
6. கிச்சிலிக்கிழங்கு	,,
7. அதிமதுரம்	,,
8. கடுக்காய்த்தோல்	,,
9. நெல்லிக்காய்த்தோல்	,,
10. தான்றிக்காய்த்தோல்	,,
11. மஞ்சள்	,,
12. மரமஞ்சள்	,,
13. தாமரை வளையம்	,,
14. செங்கழுநீர்க்கிழங்கு	,,
15. சாதிக்காய்	,,
16. சந்தனம்	,,
17. சிற்றாமுட்டிவேர்	,,
18. வெட்டிவேர்	,,
19. விலாமிச்சைவேர்	,,
20. கோரைக்கிழங்கு	,,

21. பெருங்கிச்சிலிக்கிழங்கு 3½ கிராம்
22. குங்குமப்பூ ,,
23. தேவதாரம் ,,
24. சடாமாஞ்சில் ,,
25. அமுக்கிராக்கிழங்கு ,,
26. தக்கோலம் ,,
27. சண்பகமொக்கு ,,
28. இலவங்கப்பட்டை ,,
29. புனுகுச்சட்டம் ,,

மேற்கூறப்பெற்ற இருபத்து ஒன்பது கடை மருந்துகளையும் உரலிலிட்டு இடித்து வடிகட்டி பசும்பால் விட்டு நன்கு நெகிழ அரைத்து எண்ணெயுடன் கரைத்து முறைப்படி எரித்து மெழுகுபதத்தில் வடித்துச் சூட்டுடன் வேறொரு தைலகடத்தில் பத்து தாழம்பூக்களின் இதழ்களைப் பரப்பி அதன்மேல் பச்சைக்கற்பூரத்தைத் தூவி தைலத்தை ஊற்றி கடத்திற்குச் சீலைசெய்து 15 நாட்கள் நெற்புடம் வைத்து எடுக்கவும்.

தீரும் நோய்கள்: இத்தைலத்தை முறைப்படி தலைமுழுகி வந்தால் கபால நோய்கள் யாவும் குணமாகும்.

மெழுகு வகைகள்

1. நந்தி மெழுகு

1. ஏலரிசி	3½ கிராம்
2. வால்மிளகு	,,
3. அதிவிடையம்	,,
4. கிராம்பு	,,

மேற்கூறப்பெற்ற நான்கு மருந்துகளையும் இள வறுப்பாக வறுத்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு,

சேங்கொட்டை 80 எடுத்து மூக்கை வெட்டி சாணிப்பாற் போட்டு வேகவைத்து சுத்தமாய்க் கழுவியெடுத்து வைத்துக் கொள்ளவும்.

எட்டிக்கொட்டை 20 எடுத்து மூக்கை வெட்டி சாணிப் பாலிற் போட்டு வேகவைத்து சுத்தமாய்க் கழுவியெடுத்து வைத்துக்கொள்ளவும்.

பின் இருப்புச்சட்டியில் 1500 மில்லி பசு நெய்யை ஊற்றி அடுப்பில் வைத்து சிறு தீயாக எரித்து சேங்கொட்டை, எட்டிக்கொட்டை இரண்டையும் நெய்யில் போட்டு கொட்டைகள் யாவும் இளகி மிதக்கும் பருவத்தில் கொட்டைகளை எடுத்தெறிந்துவிட்டு கருப்பட்டி 200 கிராம் நெய்யில் போட்டு பாகு காய்ச்சி மேற்கூறப்பெற்ற சூரணத்தைப் போட்டுக் கிண்டி வேகவைத்து 1 லிட்டர் தேன்விட்டுக் கிண்டி மெழுகு பதத்தில் இறக்கி ஆறியபின் எடுத்து வைக்கவும்.

அளவு: சுண்டைக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பனை வெல்லத்தில் பொதிந்து விழுங்கி பால் சாப்பிடவும்.

தீரும் நோய்கள்: கிரந்தி, மேகம், சொறி, சிரங்கு, மூலம், பவுத்திரம், சூதக வாயு, முடக்குச்சூலை, விஷநீர், விஷப் பாண்டு, விக்கல், பித்த குன்மம் முதலியன குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவேண்டும். பால், நெய் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

2. நந்தீசர் சண்டமாருத மெழுகு

1. பறங்கிப்பட்டை	140 கிராம்
2. கடுக்காய்த்தோல்	,,
3. சுக்கு	,,
4. மிளகு	,,
5. திப்பிலி	,,
6. கொடிவேலிவேர்ப்பட்டை	140 கிராம்
7. கசகசா	35 கிராம்
8. கார்போக அரிசி	17½ கிராம்
9. வெட்பாலை அரிசி	,,
10. சாதிக்காய்	9 கிராம்
11. சாதிப்பத்திரி	,,
12. ஏலம்	,,
13. கிராம்பு	,,
14. சிற்றரத்தை	,,
15. வால்மிளகு	,,
16. அதிமதுரம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டிக்கொள்ளவும்.

1. தாளகம்	35 கிராம்
2. வீரம்	,,
3. இலிங்கம்	,,
4. பூரம்	9 கிராம்
5. இரசச்செந்தூரம்	,,

இவைகளை முறைப்படி சுத்திசெய்து எடுத்துக் குழியம்மியிலிட்டு நன்றாக நெகிழ அரைத்துக் கொண்டு இதனுடன் மேற்படி சூரணத்தையும் சேர்த்துத் திரிபலாதிக் குடிநீரிட்டு நன்கு நெகிழ 12 மணி நேரம் அரைத்து ஈரம் உலர்ந்தபின் கோரோசனை 9 கிராம், குங்குமப்பூ 9 கிராம் சேர்த்துத் தேன் விட்டு 9 மணி நேரம் நன்றாக அரைத்து வழித்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: மிளகளவு. (காலை,மாலை இருவேளை)

அனுபானம்: பனை வெல்லம், சர்க்கரை.

தீரும் நோய்கள்: முடக்குவாதம்,திமிர்வாதம், பாண்டு, சூலைவாயு, குடல்வாயு, எரிவாயு, மேகவாயு, சூதகவாயு, ஈரல்வாயு, மண்டைவாயு, பாரிசவாயு முதல் சகல வாயு நோய்களும் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம், நல்லெண்ணெய், கடுகு, மஞ்சள் நீக்க வேண்டும். வெள்ளாட்டு வற்றல் சேர்த்துக் கொள்ளலாம்.

குறிப்பு: 5 நாட்கள் 10 வேளை மருந்து சாப்பிட்டால் நல்ல குணம் கிடைக்கும்.

3. நந்தீசர் சஞ்சீவி மெழுகு

1. பூரம்	9 கிராம்
2. இலிங்கம்	,,
3. வீரம்	3½ கிராம்
4. சுத்தித்த வாளம்	,,
5. கிராம்பு	,,
6. கோரோசனை	,,
7. கறிமஞ்சள்	,,
8. ஏலம்	,,
9. சுக்கு	,,

மேற்கூறப்பெற்ற பூரம், இலிங்கம், வீரம், நேர்வாளம் இவைகளைச் சுத்திசெய்து குழியம்மியிலிட்டுத் தூள்செய்து கொண்டு,

கிராம்பு,கறிமஞ்சள், சுக்கு, ஏலம் இவைகளை இடித்துத் தூள்செய்து வடிகட்டி மேற்படி மருந்துடன் குழியம்மியிலிட்டு சேர்த்து பனைவெல்லம் 350 கிராம் போட்டு இரண்டு சாமம் (6 மணி நேரம்) நன்கு நெகிழ மெழுகுபதம் வரும்வரை அரைத்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: உளுந்தளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பனை வெல்லம்.

தீரும் நோய்கள்: விஷப்பாண்டு, விஷநீர், சோகை, வீக்கங்கள், இளைப்பு, ஈளை, உப்பிசங்கள், வாயு முதலியன குணமாகும்.

பத்தியம்: கரப்பான், பொருள்கள், நல்லெண்ணெய், கடுகு, மஞ்சள், புளி, புகை, போகம் ஆகாது.

4.மார்க்கண்டன் மெழுகு

1. இலிங்கம்	3½ கிராம்
2. இரசம்	,,
3. வீரம்	,,
4. பூரம்	,,
5. சுக்கு	35 கிராம்
6. மிளகு	,,
7. திப்பிலி	,,
8. சுத்தித்த நேர்வாளம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் இலிங்கம், இரசம், வீரம், பூரம், நேர்வாளம் இவைகளை முறைப்படி சுத்தி செய்துகொண்டு சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றை இடித்துத் தூள்செய்து வடிகட்டி முன்கூறிய மருந்துகளைக்

குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ அரைத்துக்கொண்டு சூரணத்தையும் சேர்த்து பசுவின் நெய் விட்டு 12 மணி நேரம் நன்றாக மெழுகுபதம் வரும்வரை அரைத்து வழித்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: மிளகளவு. (காலையில் மட்டும்) ஒரு நாளைக்கு ஒருவேளை.

அனுபானம்: பனை வெல்லம்.

தீரும் நோய்கள்: வாத நோய்கள், சோகை, வீக்கம், அண்டவாயு, இளம்பிள்ளை வாதம், கிரந்தி, சொறி சிரங்கு, சூலை நோய்கள் முதலியன குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

5. இரசகெந்தி மெழுகு

1. இரசம்	35 கிராம்
2. கெந்தகம்	,,
3. பறங்கிச்சக்கை	,,
4. சேங்கொட்டை	,,
5. பூரம்	8¼ கிராம்
6. தாளகம்	3½ கிராம்
7. காந்தம்	,,
8. துருசு	,,
9. பால் துத்தம்	,,
10. மிருதார்சிங்கி	,,
11. சுக்கு	,,
12. ஓமம்	,,
13. மஞ்சள்	,,
14. திப்பிலி	,,
15. அரத்தை	,,
16. கோட்டம்	,,
17. வாலுழுவை அரிசி	,,

18. சோம்பு	3½ கிராம்
19. ஏலம்	,,
20. சாதிக்காய்	,,
21. மிளகு	,,
22. சீரகம்	,,
23. கார்போக அரிசி	,,
24. மாசிக்காய்	,,
25. தேசாவரம்	,,
26. வாய்விளங்கம்	,,
27. வசம்பு	,,
28. கிராம்பு	,,
29. கடுக்காய்	,,
30. கருஞ்சீரகம்	,,
31. காட்டுச்சீரகம்	,,
32. சிறுதேக்கு	,,
33. தாளிசப்பத்திரி	,,
34. பிரப்பங்கிழங்கு	,,
35. எட்டிவிதை	,,
36. தேற்றான்விதை	,,
37. நீர்முள்ளி	,,
38. எள்ளு	,,
39. கொள்ளு	,,
40. தேங்காய்க்கொப்பரை	,,
41. சின்னிவேர்	,,
42. சங்கம்வேர்	,,
43. அமுக்கிராக்கிழங்கு	,,
44. கொல்லன் கோவைக் கிழங்கு	,,
45. கொடிவேலிவேர்	,,
46. திராட்சை	,,
47. கோழிமுட்டை வெண்கரு (ஐந்துமுட்டை)	5
48. பனைவெல்லம்	350 கிராம்

மேற்கூறிய சரக்குகளில் இரசத்தைக் குழியம்மியிலிட்டு நன்றாக நெகிழ அரைக்கக் கருப்பு நிறங்கொடுக்கும். அப்பொழுது பூரம், தாளகம், காந்தம், துருசு, பால், துத்தம், மிருதார்சிங்கி இவைகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கூட்டி அரைத்து எல்லாச் சரக்குகளும் உறவான பின் எடுத்துவைத்துக் கொள்ளவும். பிறகு முட்டை வெண்கரு, பனைவெல்லம், தவிர மற்றைய சம்பை சரக்குகள் அனைத்தையும் இடித்துத் தூள்செய்து வடிகட்டி எடுத்துக்கொண்டு முன்பரைத்த மருந்தை குழி அம்மியிலிட்டு அதனுடன் சிறுகச்சிறுக இச்சூரணத்தைச் சேர்த்து நன்றாக அரைத்து எடுத்து உரலிலிட்டு பனைவெல்லம் சேர்த்து நன்றாக இடிக்க வேண்டும். வெல்லம் நன்றாக உறவானபின் முட்டையின் வெண்கருவிட்டு இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்தாற் போல் இடிக்கவேண்டும். மிகுந்த கடினமான பதத்தில் இருக்குமானால் 5 பலம் தேன்விட்டு இடித்து ஒரு சாடியில் போட்டு நன்றாக மூடிசீலைசெய்து கருங்குறுவை நெல் அல்லது பூமியில் குழிதோண்டி, அதற்குள் 90 நாட்கள் புதைத்து வைத்துப் பின்னர் எடுக்கவும்.

அளவு: ½ முதல் 1 தேற்றான்கொட்டை. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: குட்டம், கண்டமாலை, மேகசூலை, அரையாப்பு, இரந்தி, வெள்ளைத்தழும்புகள், மேகஊறல், படர்தாமரை, குழிப்புண்கள், தொடைவாழை போன்ற தோலைப்பற்றிய நோய்கள் குணமாகும்.

குறிப்பு: இம்மருந்தை தொடர்ந்து 48 நாட்கள் உட்கொள்ளுதல் கடினமாதலால் 10 நாட்கள் உட்கொண்டு இடையே 5 நாட்கள் கழித்து மீண்டும் விட்டு விட்டு 48 நாட்களும் சாப்பிட்டு வரவும். பத்தியத்தில் குற்றம் ஏற்படின் உடலுக்கு மிக்க கெடுதலை உண்டாக்கும்.

6. பஞ்ச நவலோக மெழுகு

1. கறியுப்பு	10 கிராம்
2. இந்துப்பு	,,
3. வெடியுப்பு	,,
4. கல்லுப்பு	,,
5. அமுரியுப்பு	,,
6. மூங்கிலுப்பு	,,
7. உவருப்பு	,,
8. வளையலுப்பு	,,
9. பாறையுப்பு	,,
10. அட்டுப்பு	,,
11. தும்மட்டிக்காய்ச்சாறு	1 லிட்டர்
12. பசும்பால்	,,
13. பூரம்	17½ கிராம்
14. வீரம்	35 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் முதல் பத்து உப்புகளையும் ஒரு சட்டியிலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயிட்டு தும்மட்டிக்காய்ச் சாறு, பால் இவை இரண்டையும் விட்டு குழம்புப் பதம் வரும்வரை துத்திவேரினால் கிண்டி சுத்தித்து வீரம், பூரம் இவை இரண்டையும் தூள்செய்து அக்குழம்புடன் சேர்த்துக் கிண்டி (புகைய விடாமல்) லேகிய பதம் வரும் சமயத்தில் எடுத்துக் குழியம்மியிலிட்டு சுத்தித்த வாளம் 7 கிராம் சேர்த்து திரிபலாதிக் குடிநீர் விட்டு 5 மணி நேரம் அரைத்து பிறகு தாய்ப்பால் விட்டு 24 மணி நேரம் அரைத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 மிளகளவு.

அனுபானம்: பனைவெல்லத்தில 5 நாட்கள் காலையில் மட்டும் கொடுக்கவேண்டும்.

தீரும் நோய்கள்: சூலை, மகோதரம், வலிகுன்மம், கிரந்தி, மேகம், நீர்க்கோர்வை, விஷவாதம், (யானைக்கால்)

அண்டவாதம், முடக்குவாதம், தமரகவாயு, எண்வகைக் குன்மம், சூதக வாயு, பாரிச வாயு முதலியன குணமாகும்.

பத்தியம்: வெந்நீர் சாதம் அல்லது அரிசிக்கஞ்சி கொடுக்கவேண்டும். உப்பை வறுத்து உபயோகிக்க வேண்டும். பசுவின்பால், பசுவின்மோர், துவரை, அவரைப் பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு முதலியவற்றை நோயின் வன்மையை உணர்ந்து சமயோசிதமாய்ச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பு: 1. சூலைநோய்க்குத் தேனிலும், 2. சன்னி நோய்க்கு இஞ்சிச்சாற்றிலும், 3. சுரத்திற்கு நிலவேம்புக் குடிநீரிலும், 4. தோஷத்திற்கு இஞ்சிச்சார், தேன் இவை இரண்டும் சேர்ந்த சுரசத்திலும், 5. கப நோய்களுக்கு சிற்றரத்தைக் குடிநீரிலும் கொடுக்கவேண்டும்.

7. பஞ்ச லவண மெழுகு

1. வெடியுப்பு	35 கிராம்
2. இந்துப்பு	,,
3. கல்லுப்பு	,,
4. வளையலுப்பு	,,
5. கறியுப்பு	,,

மேற்கூறப்பெற்ற உப்புகளை குழியம்மியிலிட்டு பிரண்டைச்சாறு, முருங்கப்பட்டைச்சாறு, மேனிச்சாறு, நொச்சிச்சாறு, குமரிச்சாறு இவைகளை தனித்தனியே விட்டு 6 மணிநேரம் நன்கு நெகிழ அரைத்து வில்லைதட்டி வெய்யிலில் உலர்த்தி காய்ந்தபின் அகலில் வைத்து மேலகல் மூடி சீலைசெய்து 10 எருவில் புடமிட்டெடுத்து குழியம்மியிலிட்டு இதன் எடைக்கு பால் பெருங்காயம் சேர்த்து 4 மணிநேரம் நன்கு நெகிழ மெழுகுபதம் வரும் வரை வேண்டிய அளவு தேன்விட்டு அரைத்துப் பத்திரப் படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 குன்றியளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: சூலை, கிராணி, குன்மம், வாத நோய்கள், குத்தல், குடைச்சல், வலி, அண்டவாயு, வயிற்றுப்புசம், குடல்வாதம் முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: நோயின் நன்மைக்கும், நேயாளியின் உடலின் வன்மைக்கும் ஏற்பப் பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

8. பஞ்ச சூத மெழுகு

1. வாலை ரசம்	10 கிராம்
2. இலிங்கம்	,,
3. பூரம்	,,
4. வீரம்	,,
5. இரசச்செந்தூரம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை முறைப்படி சுத்தி செய்து ஓட்டிலிட்டு உலையில வைத்து, சிறுதீயெரித்துச் சேங்கொட்டைத் தைலம், வெள்ளைப்பூண்டுத் தைலம், சிற்றண்டத்தைலம் இம்மூன்றையும் சமனெடையாகக் கலந்து 100 கிராம் எடைக்குக் குறைவின்றி 6 மணிநேரம் கருக்குக் கொடுத்துக் குழியம்மியிலிட்டு மேற்படி தைலத்தால் மெழுகுபதம் வரும்வரை 15 மணி நேரம் நன்கு அரைத்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 பயறளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தாய்ப்பால், பனைவெல்லம், சர்க்கரை.

தீரும் நோய்கள்: 1. குழந்தைகளுக்கு ஏற்படும் சுரம், இசிவு, மாந்தம், வயிற்று உப்புசம், கை, கால் பிடிப்பு, இளம்பிள்ளை வாதம் முதலிய கடுமையான நோய்கள் குணமாகும்.

2. முதியவர்களுக்கு ஏற்படும் பாரிச வாதம், முகவாதம், பிடிப்பு, குடைச்சல் முதலியநோய்கள் குணமாகும்.

குறிப்பு: 1. தாய்ப்பால் உண்ணும் குழந்தையாக இருப்பின் தாய் இச்சாப்பத்தியத்துடன் சீதளப் பொருள்களை நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

2. இதனை நீண்ட நாட்கள் உட்கொள்ளக்கூடாது. விட்டு விட்டு 5, 7, 9 நாட்கள் உண்ணவேண்டும். ஒரு முறை மருந்து உட்கொண்ட பிறகு மறுமுறை இடைவெளியிட்டு இரண்டாம் முறை உட்கொள்வது சாலச்சிறந்ததாகும்.

3. மருந்து செய்முறையில் பூண்டுத் தைலத்திற்குப் பதில் பூண்டுச்சாறு சேர்த்துக் கொள்ளவும்.

9. கஸ்தூரி மெழுகு

1. கஸ்தூரி	2½ கிராம்
2, கோரோசனை	,,
3. குங்குமப்பூ	,,
4. பச்சைக்கற்பூரம்	,,
5. இரசச்செந்தூரம்	,,
6. இலிங்கம்	,,
7. திப்பிலி	10 கிராம்
8. மிளகு	,,
9. கிராம்பு	,,
10. சிறுதேக்கு	,,
11. தாளிசபத்திரி	,,
12. அதிமதுரம்	,,
13. அக்ரகாரம்	,,
14. அரத்தை	,,
15. ஓமம்	,,

மேற்கூறப்பெற்றவற்றை மருந்துகளில் 7 முதல் 15 வரையிலுள்ள நன்கு தனித்தனியாக இடித்து வடிகட்டி மற்றைய ஆறு மருந்துகளையும் குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ அரைத்து அதனுடன் வடிகட்டிய சூரணத்தையும் சேர்த்து போதிய அளவு தேன்விட்டு மெழுகுபதம் வரும்வரை நன்கு நெகிழ அரைத்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 உளுந்து பிரமாணம். (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: சுரம், நீர்க்கோர்வை, தொண்டைக் கட்டு, அஸ்திசுரம் முதலிய நோய்கள் குணமாகும்.

குறிப்பு: வசதி இருப்பின் 1 கிராம் சுருள் தங்கம் சேர்த்து அரைத்துக்கொள்ளவும்.

10. வீர மெழுகு

1. வீரம்	2½ கிராம்
2. இரசம்	,,
3. பூரம்	,,
4. இலிங்கம்	,,
5. பளிங்குச் சாம்பிராணி	5 கிராம்
6. வெடியுப்பு	,,
7. கற்பூரம்	,,
8. பொரித்த வெங்காரம்	,,
9. நவச்சாரம்	,,
10. பச்சைக்கற்பூரம்	3 கிராம்
11. கோரோசனை	,,
12, குங்குமப்பூ	17½ கிராம்
13. குரோசாணி ஓமச்சூரணம்	50 கிராம்
14. தாளிசபத்திரி சூரணம்	70 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் 1 முதல் 4 வரையிலுள்ள மருந்துகளை முறைப்படி சுத்திசெய்து குழியம்மியிலிட்டு அரைத்துக்கொண்டு மற்றைய மருந்துகளையும் சேர்த்து தாய்ப்பால்விட்டு நன்கு நெகிழ 10 மணிநேரம் அரைத்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 குன்றியெடை. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பனைவெல்லத்தில் 7 அல்லது 10 நாட்களுக்கு ஒரு முறையாகக் கொடுக்கவேண்டும்.

தீரும் நோய்கள்: மேகவாயு, கை, கால் குடைச்சல், கைகால் பிடிப்பு, கீல்வாயு, மார்பு நோய், முழங்கால், கணுக்கால் வாதம், பாரிசவாதம், அண்டவாதம், குடல்வாதம், நரித்தலைவாதம், சூதகவாயு முதலிய கடும் நோய்கள் குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியத்தோடு புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

குறிப்பு: *1.* இம்மெழுகைக் கொடுப்பதற்கு முன் நோயாளியின் உடல் நிலைமைக்கேற்றவாறு பேதி மருந்துக் கொடுத்து பின்னர் இதனைக்கொடுக்கவேண்டும்.

2. மருத்துவர்கள் அவரவர்களின் அறிவுத் திறமையால் நோயின் வன்மைக்கேற்ப மருந்து கொடுக்கும் கால அளவை வரையறுத்துக் கொள்ளவேண்டும்.

3. மருந்தின் வேகம் அதிகமாக இருந்தால் பூநாகக்குடிநீர் இடையிடையேக் கொடுத்து வேகத்தை தணித்து கொள்ள வேண்டும்.

11. மேக சிந்தாமணி மெழுகு

1. கஸ்தூரி மஞ்சள்	*100* கிராம்
2. பூவரசம்பட்டை	,,
3. அழிஞ்சில் பட்டை	,,
4. சதுரக்கள்ளிப்பட்டை	,,
5. கொம்புக்கள்ளிப்பட்டை	,,
6. எருக்கம்பட்டை	*50* கிராம்
7. சிவனார்வேம்புச் சமூலம்	,,
8. கொடிவேலி வேர்ப்பட்டை	,,
9. கடுக்காய்த்தோல்	,,
10. கடுகுரோகிணி	,,
11. நில ஆவாரை	,,
12. வெள்ளைக்காக்கரட்டான் விதை	,,
13. கருஞ்சீரகம்	*15* கிராம்

14. கார்போக அரிசி	,,
15. வால்மிளகு	,,
16. முருங்கைவிதை	,,
17. காட்டுச்சீரகம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை இடித்துத் தூள்செய்து வடிகட்டி எடுத்துக்கொண்டு,

1. வீரம்	*5 கிராம்*
2. பூரம்	,,
3. இரசம்	,,
4. இலிங்கம்	,,
5. இரசச்செந்தூரம்	,,

ஆகிய ஐந்து மருந்துகளையும் முறைப்படி சுத்தி செய்து கல்வத்திலிட்டு தேன்விட்டு நன்கு நெகிழ நான்கு மணி நேரம் அரைத்து பிறகு சூரணத்தை சிறிது சிறிதாக சேர்த்து தேன்விட்டு மெழுகு பதம் வரும்வரை அரைத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் *1* சுண்டைக்காய். *(காலை, மாலை இருவேளை)*

அனுபானம்: பசும்பால்.

தீரும் நோய்கள்: கிரந்தி, வடுப்புண், அரையாப்பு, வெள்ளை, கருமேகம், குட்டம், நீர்ச்சுருக்கு, அண்டவாயு, குத்தல், எண்வகைக் குன்மம், சுவாசகாசம், வலி, இசிவு, கபால சூலை முதலிய நோய்கள் குணமாகும்.

12. மூசாம்பர மெழுகு

1. மூசாம்பரம்	*70 கிராம்*
2. பாலேந்திர போலம்	*40 கிராம்*
3. குங்குமப்பூ	*20 கிராம்*
4. பழைய வெல்லம்	*40 கிராம்*
5. பச்சைக்கற்பூரம்	*10 கிராம்*
6. பால் பெருங்காயம்	*20 கிராம்*

மேற்கூறப்பெற்ற மருந்துகளை குழியம்மியிலிட்டு தேன்விட்டு நன்கு நெகிழ மெழுகு பதம் வரும்வரை அரைத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: *1* முதல் *2* குன்றியெடை. *(காலை, மாலை இருவேளை)*

அனுபானம்: பனைவெல்லம், சோம்புக்குடிநீர்.

தீரும் நோய்கள்: பிரசவித்த பெண்களுக்கு உதிரச் சிக்கலைப் போக்கும். காலதாமத மாதவிடாய்க் கோளாறுகளை போக்கி சரீர சுகத்தைக் கொடுக்கும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

13. வாலை ரச மெழுகு

வாலை ரசம்	*100* கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்தை முறைப்படி சுத்திசெய்து எடுத்து ஒரு சிறிய சட்டியிலிட்டு கரி நெருப்பின் மேல் வைத்து வேப்பம் பழத்தை பிழிந்தெடுத்த சாறு 2 லிட்டர் சுருக்குக் கொடுத்து பின்னர் வேப்பிலையின் சாறு 2 லிட்டர் சுருக்குக் கொடுத்து சட்டி ஆறியபின் எடுத்து குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ மெழுகுபதம் வரும்வரை அரைத்து எடுத்து எடைபோட்டு மொத்த பெருங்காயம், சுத்திசெய்த சிவதை வேர்ச்சூரணம், சுக்குச்சூரணம், மிளகுச்சூரணம், திப்பிலிச் சூரணம் ஆகியவைகளை சேர்த்து 20 மணி நேரத்திற்கு குறைவில்லாமல் நன்கு நெகிழ மெழுகுபதம் வரும் வரை அரைத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் *1* குன்றிப்பிரமாணம். *(காலையில் மட்டும்*

அனுபானம்: பனை வெல்லம். *(மூன்றுநாட்கள் கொடுக்கவேண்டும்.)*

தீரும் நோய்கள்: இம்மெழுகினால் எந்தவித கடுமையான நோய்களாயினும் குணமாவது திண்ணம். இம்மருந்து முக்கியமாக பாரிசவாயு, முகவாதம், கீல்வாதம், கணுச்சூலை பிடிப்பு முதலியவைகளுக்குச் சிறந்தது.

குறிப்பு: இம்மருந்தினால் 4, 5 முறை பேதியாகும். பேதி அதிகமானால் மறுநாள் அளவைக் குறைத்துக்கொடுக்கவும். மருந்து அரைக்கும்போது அதிக கஷ்டமாக இருந்தால் பூண்டுச்சாறு சிறிதுவிட்டு அரைத்துக்கொள்ளவும்.

பத்தியம்: நோய்க்கேற்றவாறு புளிநீக்கி இச்சாப் பத்தியமாக இருக்கவேண்டும்.

14. மிருதார்சிங்கி மெழுகு

1. மிருதார் சிங்கி	17½ கிராம்
2. இலிங்கம்	,,
3. மடல் தாளகம்	,,
4. இரசச்செந்தூரம்	,,
5. இரசக்கற்பூரம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை முறைப்படி சுத்தி செய்து குழியம்மியிலிட்டு 12 மணி நேரம் நன்கு நெகிழ அரைத்து ஓட்டிலிட்டு, விளக்கெண்ணெய் விட்ட விளக்கு ஒன்றை ஏற்றி அதற்குமேல் ஓட்டை வைத்து ½ லிட்டர் வெள்ளைப்பூண்டின் சாறு சுருக்கிட்டுக் கிளறி மெழுகுப் பதமாக வரும்வரை எரித்து கீழிறக்கி ஆறவிட்டுச் சுரண்டி பத்திரபடுத்தவும்.

அளவு: ½ முதல் 1 குன்றிப் பிரமாணம், (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பனை வெல்லம்.

தீரும் நோய்கள்: கணுக்களில் உண்டாகின்ற சூலை, பிடிப்பு, சூதகவாயு, சூதக சன்னி, முறைசுரம் முதலியன குணமாகும். யானைக்கால் சுரத்திற்கும், வீக்கத்திற்கும் உயர்ந்த மெழுகாகக் கொள்ளலாம்.

பத்தியம்: கடுகு, நல்லெண்ணெய், மீன், கருவாடு, மோர் தவிர மற்றவைகள் ஆகும்.

குறிப்பு: நோயின் நிலைமைக்குத்தக்கவாறு பத்தியம் மேற்கொள்வது சாலச்சிறந்தது.



சூரணங்கள்

1. அதிமதுரச் சூரணம்

1. அதிமதுரம்	35 கிராம்
2. சீரகம்	,,
3. ஏலக்காய்	17½ கிராம்
4. கிராம்பு	,,
5. பொரித்த வெங்காரம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை இடித்து வடிகட்டி பத்திரப்படுத்தவும்.

அளவு: 2 முதல் 5 கிராம். (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பசு வெண்ணெய், நெய்.

தீரும் நோய்கள்: மேகம், உட்சூடு, தாகம் முதலியன குணமாகும்.

2. அக்கினிச் சூரணம்

1. கொடிவேலி வேர்ப்பட்டை	35 கிராம்
2. சுக்கு	,,
3. மிளகு	,,
4. திப்பிலி	,,
5. ஓமம்	,,
6. சிறுதேக்கு	,,
7. யானைத்திப்பிலி	,,
8. கோஷ்டம்	,,
9. இந்துப்பு	,,
10. பெருங்காயம்	9 கிராம்
11. வசம்பு	,,
12. கடுகு	18 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளை பொன் மேனியாக வறுத்து உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி, வடிகட்டிய தூளின் நிறைக்குச் சீனி சேர்த்துப் பத்திரப் படுத்தவும்.

அளவு: வெருகடி. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: வெந்நீர்.

தீரும் நோய்கள்: கிராணி, உதிரவாயு, முகவாயு, வாதம் முதலானவை குணமடையும்.

பத்தியம்: மருந்திற்கேற்ப பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

3. அட்டச்சூரணம்

1. பருத்திவிதைப்பருப்பு	17½ கிராம்
2. கழற்சிப்பருப்பு	,,
3. பெருங்காயம்	,,
4. சாதிப்பத்திரி	,,
5. கிராம்பு	,,
6. வளையலுப்பு	,,
7. இந்துப்பு	,,
8. கல்லுப்பு	,,
9. கருவேம்புப்பட்டை	,,
10. சுக்கு	,,
11. மிளகு	,,
12. திப்பிலி	,,
13. சீரகம்	,,
14. கருஞ்சீரகம்	,,
15. ஓமம்	,,
16. இலவங்கப்பத்திரி	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளைச் சுத்தப்படுத்தி இளவறுப்பாக (பொன்வறுவலாக) வறுத்து வெய்யிலில்

உலர்த்தி உரலிலிட்டு நன்றாக இடித்துத் தூள்செய்து வடிகட்டி பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடியளவு. (காலை,மாலை இருவேளை)

அனுபானமும், தீரும் நோய்களும்:

1. **உஷ்ணவாயுவுக்கு:** மருந்தை வாயிலிட்டு வெந்நீர், கழுநீர் உட்கொள்ளலாம். இல்லையேல் வெருகடியளவு பொடியைச் சோற்றில் தூவி நெய்விட்டுப் பிசைந்து ஐந்து உருண்டை சாப்பிட்டுப் பின் மற்றைய கறி உணவுகளை உட்கொள்ளவேண்டும்.

2. **பக்க வாயுவெனும் மூலவாயுவுக்கு:** ஒரு கழஞ்சு கோரைக்கிழங்கைக் குடிநீராக்கி எட்டில் ஒன்றாக வற்ற வைத்து அதில் சூரணத்தைச் சேர்த்து உட்கொள்ளவேண்டும்.

3. **பித்தவெட்டை வாயுவுக்கு:** பச்சரிசிக் கழுநீரில் இருவேளை உட்கொள்ள குணமாகும்.

பத்தியம்: நோயின் வன்மைக்கேற்ப பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

4. அதிவிடையச் சூரணம்

1. அதிவிடையம்	13¼ கிராம்
2. பெருங்காயம்	,,
3. சிறுநாகப்பூ	,,
4. திப்பிலி	,,
5. சாதிப்பத்திரி	,,
6. சாதிக்காய்	22 கிராம்
7. கண்டத்திப்பிலி	17½ கிராம்
8. வேர்க்கொம்பு	35 கிராம்
9. கடுகு	,,
10. வெள்ளுள்ளி	,,

11. நாய்க்கடுகு	74 கிராம்
12. திப்பிலி மூலம்	,,
13. அபின்	9 கிராம்
14. சீனி	175 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளை தனித்தனியே பொன்மேனியாக வறுத்து உரலிலிட்டுத் தூள்செய்து மெல்லிய துணிகொண்டு வடிகட்டிச் சீனி கலந்து புதிய மண்பாத்திரத்தில் வைக்கவும்.

அளவு: வெருகடியளவு. (காலை,மாலை இருவேளை)

அனுபானம்: 1. கோரைக்கிழங்கு குடிநீர், 2. தேன், 3.இஞ்சிச்சாறு, 4. சுக்கு, திப்பிலி இரண்டும் சேர்த்து இடித்த தூள், 5. பெருந்தும்பை, நொச்சில்,கருவேம்பு ஈர்க்கு, முருங்கை ஈர்க்கு,கொழுஞ்சிவேர், சாரணைவேர், கோரைக்கிழங்கு, மலை தாங்கி சமனெடை எடுத்து இடித்து மூன்றில் ஒரு பாகத்தை 4 லிட்டர் தண்ணீரில் சுண்டக்காய்ச்சி 250மில்லி எடுத்து அதில் மருந்தைப் போட்டுக் கொடுக்கலாம். 6.சுக்கு, வெள்ளுள்ளி, ஓமம், அதிவிடையம், வசம்பு சமனெடை எடுத்து துணியில் கட்டி மேற்கூறிய குடிநீரில் போட்டு அக்குடிநீரில் மருந்திட்டுக் கொடுக்கவேண்டும்.

தீரும் நோய்கள்: மூலக்கிராணி, உள்மூலம் முதலியன குணமாகும்.

பத்தியம்: காரம், புளி, புகை நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

5. அமுக்கிராச் சூரணம்

1. அமுக்கிராவேர்	105 கிராம்
2. சுக்கு	52½ கிராம்
3. ஏலம்	,,
4. கூகை நீறு	,,
5. இலவங்கம்	70 கிராம்

6. சிறு நாகப்பூ	70கிராம்
7. களா	70கிராம்
8. திப்பிலி	280கிராம்
9. மிளகு	140கிராம்
10. சீனி	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை வெய்யிலில் நன்றாக உலர்த்தி உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி எடுத்துக்கொண்டு சீனியையும் சேர்த்துக் கலந்து பத்திரப் படுத்தவும்.

அளவு: வெருகடியளவு. (காலை, மாலை இருவேளை ஒருமண்டலம்)

அனுபானம்: தேன், இஞ்சிச்சாறு, வெண்ணெய், சீனி, கோரைக்கிழங்குச் சூரணம்.

தீரும் நோய்கள்: மந்தம், வாயு, வலி, முக்குற்ற வேறுபாடுகளால் ஏற்படும் நோய்கள், உப்பிசம், நெஞ் செரிவு, சூரற்கம்மல், வாந்தி, ஈளை, இருமல், கிராணி, குன்மம், சீழ்க்கிராணி, இரத்தக்கிராணி முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

குறிப்பு: தேன், இஞ்சிச்சாறு, சீனி, கோரைக்கிழங்குச் சூரணம் முதலியவைகளுடன் சேர்த்து லேகியமாகவும் கிண்டிச்சாப்பிடலாம்.

6. ஆடாதொடைச் சூரணம்

1. ஆடாதொடை பூத்த கதிர்	175கிராம்
2. பேரரத்தை	35கிராம்
3. சிற்றரத்தை	,,
4. ஆடாதொடைவேர்பட்டை	70கிராம்

5. பூனைக்காஞ்சோறிவேர்	70 கிராம்
6. வாய்விளங்கம்	35 கிராம்
7. சிறுதேக்கு	,,
8. கோரைக்கிழங்கு	,,
9. இஞ்சி	,,
10. திப்பிலி	,,
11. சாம்பிராணிப்பதங்கம்	17½ கிராம்
12. கறிமஞ்சள்	35 கிராம்
13. மிளகு	,,
14. கோஷ்டம்	17½ கிராம்
15. காட்டாத்திப்பூ	,,
16. தூதுவளை இலை	,,
17. கண்டங்கத்திரி இலை	35 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் சாம்பிராணி பதங்கத்தைத் தவிர்த்து மற்றைய சரக்குகளை வெய்யிலில் உலர்த்தித் தனித்தனியாக இடித்து வடிகட்டி சாம்பிராணிப் பதங்கத்தைச் சேர்த்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 2 முதல் 5 கிராம். (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சர்க்கரை, பால்.

தீரும் நோய்கள்: சீதள சம்பந்தமான சுவாசகாச இருமல் முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளிநீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

7. ஆவாரம் விதைச் சூரணம்

1. ஆவாரம் விதை	70 கிராம்
2. ஒதியம்பட்டைத்தூள்	,,
3. துத்தி விதை	,,
4. பனை விதை	,,

5. நவதானியங்கள்	70 கிராம்
6. நாவற்கொட்டைப்பருப்பு	,,
7. சாதிக்காய்	,,
8. சாதிப்பத்திரி	,,
9. கிராம்பு	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை பொன்னிறமாக வறுத்து கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து வடிகட்டி பத்திரப் படுத்தவும்.

அளவு: 2 முதல் 5 கிராம். (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தண்ணீர்.

தீரும்நோய்கள்: நீரிழிவு, மேகம், நிர்ச்சுருக்கு முதலியன குணமாகும்.

பத்தியம்: மொச்சை, வாழைக்காய், புளி, எள்நெய், கடுகு, வெந்தயம் இவைகளை நீக்கி உணவு உட்கொள்ளவும்.

8. இஞ்சிச் சூரணம்

இஞ்சி 350 கிராம் எடுத்து மேல் தோல் நீக்கி சிறு சிறு துண்டுகளாக நறுக்கிப் பழச்சாற்றில் ஒருநாள் ஊறவைத்து எடுத்து மறுநாள் வெய்யிலில் உலர்த்தவேண்டும். சீரகம் 35கிராம் மேற்கூறியபடி பழச்சாற்றில் ஊறவைத்து எடுத்துக் கொண்டு இதனுடன்

மிளகு	35 கிராம்
தாளிசப்பத்திரி	35 கிராம்
திப்பிலி மூலம்	35 கிராம்
கிராம்பு	35 கிராம்
கோட்டம்	35கிராம்
வாய்விளங்கம்	35 கிராம்

முதலியவைகளையும் சேர்த்து இளவறுப்பாக வறுத்து உரலிலிட்டு இடித்துச் சூரணம் செய்து வடிகட்டி சம அளவு சர்க்கரை சேர்த்து பத்திரப் படுத்தவும்.

அளவு: வெருகடியளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: வெந்நீர், தண்ணீர்.

தீரும் நோய்கள்: பித்தம், வாயு, பசியின்மை, அன்னதேடம், பித்தவெட்டை, பொருமல், விம்மல், வாயுவொடு வாதம், சூலை, வயிற்றிலுள்ள நோய்கள் யாவும் நிச்சயம் குணமடையும்.

பத்தியம்: புளி, புகை, வாயு பதார்த்தங்களை நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

9. இலவங்காதிச் சூரணம்

1. இலவங்கம்	17½ கிராம்
2. இலவங்கப்பட்டை	,,
3. சதகுப்பை	,,
4. மகரப்பூ	,,
5. கருஞ்சீரகம்	,,
6. ஏலம்	,,
7. மல்லி	,,
8. தாளிசப்பத்திரி	,,
9. சிறுதேக்கு	,,
10. திப்பிலிமூலம்	,,
11. செவ்வியம்	,,
12. சடாமாஞ்சில்	,,
13. சாதிக்காய்	,,
14. சாதிப்பத்திரி	,,
15. ஓமம்	,,
16. கோஷ்டம்	,,
17. குரோசாணி ஓமம்	,,
18. வாய்விளங்கம்	,,
19. மாசிக்காய்	,,
20. அக்ரகாரம்	,,
21. சமுத்திரப்பழம்	,,

22. சிறுநாகப்பூ	17½ கிராம்
23. அரத்தை	,,
24. சுக்கு	,,
25. மிளகு	,,
26. திப்பிலி	,,
27. பொன்முசுட்டைவேர்	,,
28. விலாமிச்சம்வேர்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை வெய்யிலில் உலர்த்தி நன்றாக இடித்து வடிகட்டிய சூரணத்திற்கு சமனெடை சர்க்கரை கூட்டி பத்திரப்படுத்துக.

அளவு: 2 முதல் 5 கிராம் (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தண்ணீர்.

தீரும் நோய்கள்: சூதக வாயு, பேதி, சுரம், தாகம், கைகால் எரிச்சல், மார்படைப்பு, மயக்கம், மூலம், பெரும்பாடு, இருமல், இரைப்பு முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவும்.

10. ஏலாதிச்சூரணம்

1. ஏலம்	35 கிராம்
2. கிராம்பு	,,
3. மஞ்சள்	,,
4. அதிமதுரம்	,,
5. சுக்கு	,,
6. மிளகு	,,
7. திப்பிலிமூலம்	,,
8. செவ்வியம்	,,
9. சிற்றரத்தை	,,
10. சந்தனப்பொடி	,,
11. சாதிக்காய்	,,
12. சாதிப்பத்திரி	,,

13. இலவங்கப்பட்டை	35 கிராம்
14. தகரைவிதை	,,
15. வால்மிளகு	,,
16. முந்திரிப்பழம்	,,
17. பேரீச்சம்பழம்	,,
18. கொத்துமல்லி	,,
19. நெல்லிவற்றல்	,,
20. நெற்பொரி	,,
21. பருத்திவிதைப் பருப்பு	,,
22. மாதுளம்பழத்தோல்	,,
23. விளாம்பழத்தோல்	,,
24. வில்வப்பழத்தோல்	,,
25. நிலப்பனங்கிழங்கு	,,
26. அமுக்கிராக்கிழங்கு	,,
27. நன்னாரிவேர்	,,
28. கோரைக்கிழங்கு	,,
29. சீந்தில்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை வெய்யிலில் உலர்த்தி இடித்துத் தூள்செய்து வடிகட்டி மருந்தின் அளவுக்கு சமமாகச் சீனி கலந்து புது மண்கலயத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடியளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தாய்ப்பால், தேன், பழச்சாறு, மாதுளம் பழச்சாறு.

தீரும் நோய்கள்: எரிவுடன் இரத்தம் வருதல், தாகவறட்சி, சோபம், வாந்தி, பித்தம், தலைவலி, அஸ்திச்சுரம், வாயு, ஈளை, இருமல், உப்பிசம், நெஞ்செரிவு முதலியன குணமாகும்.

11. ஐங்காயச் சூரணம்

1. திப்பிலி	15 கிராம்
2. நாகேசுரம்	,,
3. செவ்வியம்	,,
4. சித்திரமூலம்	,,
5. சீரகம்	,,
6. கருஞ்சீரகம்	,,
7. ஓமம்	,,
8. நெல்லிவற்றல்	,,
9. அக்ரகாரம்	,,
10. தாளிசப்பத்திரி	,,
11. ஏலம்	,,
12. கிராம்பு	,,
13. லவங்கப்பட்டை	,,
14. லவங்கப்பத்திரி	,,
15. சாதிக்காய்	,,
16. மல்லி	,,
17. திப்பிலிமூலம்	,,
18. மாவிலை ஈர்க்கு	,,
19. கருவேப்பிலை ஈர்க்கு	,,
20. வேப்பிலை ஈர்க்கு	,,
21. நுணா ஈர்க்கு	,,
22. நெல்லி ஈர்க்கு	,,
23. கோட்டம்	,,
24. காட்டாத்திப்பூ	,,
25. கடுக்காய்ப்பூ	,,
26. மாசிக்காய்	,,
27. வெட்பாலை அரிசி	,,
28. பூவரசம்பட்டை	,,
29. மாதுளை ஓடு	,,
30. அதிமதுரம்	,,
31. வசம்பு	,,
32. இலவம்பிசின்	,,

33. அதிவிடையம்	45 கிராம்
34. கிச்சிலிக்கிழங்கு	,,
35. கஞ்சா	30 கிராம்
36. கருவேப்பிலை	15 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் கஞ்சாவை சுத்திசெய்து உலரவைத்து பொன்மேனியாக வறுத்தும், ஈர்க்கு வகைகளையும் தனித்தனியாக வாசனை காணும்வரை முன்போல் வறுத்தும் அதிவிடையம், வசம்பு இரண்டையும் சுட்டுச்சாம்பலாக்கியும் எடுத்து மற்றைய சரக்குகளுடன் சேர்த்து இடித்து வடிகட்டி எடுத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 2 முதல் 5 கிராம். (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சர்க்கரை.

தீரும் நோய்கள்: அசீரணபேதி, கிராணி, வயிற்றுப்புசம், அக்கினிமந்தம், உஷ்ணபேதி முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: நோயின் வன்மைக்கேற்ப கஞ்சி, புனற்பாகம், பொரிகஞ்சி போன்றவைகளையே கொடுக்கவேண்டும். காரம், புளி சேர்க்கக்கூடாது.

12. கபாடச் சூரணம்

1. சடைக்கஞ்சா	35 கிராம்
2. சாதிக்காய்	,,
3. சாதிப்பத்திரி	,,
4. கிராம்பு	,,
5. அதிவிடையம்	,,
6. குரோசாணி ஓமம்	,,
7. பெருமரப்பட்டை	,,
8. கோரைக்கிழங்கு	,,
9. சுக்கு	,,
10. மாதுளம்பழ ஓடு	,,
11. வெட்பாலை அரிசி	,,
12. அபின்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் சடைக்கற்களையும், அபினையும் முறைப்படி ஏழுமுறை சுத்தி செய்துகொண்டு மற்றைய மருந்துகளை இளவறுப்பாக வறுத்து யாவற்றையும் உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டிப் பத்திரப் படுத்தவும்.

அளவு: வெருகடியளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், பனைவெல்லம்.

தீரும் நோய்கள்: கிராணி, அதிசாரம், வயிற்றுளைச்சல், கழிச்சல், இரைச்சல், சிறுகுடல், பொருமல், தாகம், சோகம் முதலியன குணமாகும்.

13. கரிசலாங்கண்ணிச் சூரணம்

1. கரிசலாங்கண்ணி	105 கிராம்
2. கொட்டைக்கரந்தை இலை	,,
3. நொச்சியிலை	,,
4. கஞ்சா இலை	8¾ கிராம்
5. கடுக்காய்த்தோல்	35 கிராம்
6. திப்பிலி	17½ கிராம்
7. மிளகு	35 கிராம்
8. சீந்திற்கொடி	,,
9. சீரகம்	17½ கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் கஞ்சாயிலையை முறைப்படி சுத்திசெய்து யாவற்றையும் வெய்யிலில் நன்கு உலர்த்தி உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிக்கட்டி பத்திரப்படுத்தவும்.

அளவு: 2 முதல் 5 கிராம். (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சர்க்கரை.

தீரும் நோய்கள்: மேகவாயு, மேகவெட்டை, காமாலை முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம். புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

14. காசுக்கட்டிச் சூரணம்

1. காசுக்கட்டி	105 கிராம்
2. இலவங்கப்பட்டை	,,
3. கிராம்பு	70 கிராம்
4. சாதிக்காய்	35 கிராம்
5. பிஞ்சுக்கடுக்காய்	17½ கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளைதனித்தனியாக இடித்துத் தூள் செய்து வடிக்கட்டி எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு: 5 முதல் 10 குன்றி. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சர்க்கரை, நெய்.

தீரும் நோய்கள்: சீதபேதி, இரத்தபேதி குணமாகும்.

பத்தியம்: காரமில்லாமல் உணவு உட்கொள்ள வேண்டும்.

15. சுக்குடச் சூரணம் (கருங்கோழிச் சூரணம்)

1. கருங்கோழி	1
2. சுக்கு	43 கிராம்
3. மிளகு	,,
4. அரிசித்திப்பிலி	,,
5. உரித்த பூண்டு	,,
6. வளையலுப்பு	22½ கிராம்
7. இந்துப்பு	,,
8. கல்லுப்பு	,,
9. பருத்தி விதைப்பருப்பு	,,
10. கருப்பு எள்	125 மில்லி
11. கடுகு	,,
12. காய்ந்த கருவேப்பிலை	17½ கிராம்

13. அதிவிடையம்	13½ கிராம்
14. அதிமதுரம்	,,
15. அக்ரகாரம்	,,
16. ஓமம்	,,
17. குரோசாணி ஓமம்	,,
18. சீரகம்	,,
19. கருஞ்சீரகம்	,,
20. பெருங்காயம்	,,
21. வாய்விளங்கம்	,,
22. மஞ்சள்	,,
23. ஏலரிசி	,,
24. இலவங்கப்பட்டை	,,
25. இலவங்கப்பத்திரி	,,
26. விளாவரிசி	,,
27. வெட்பாலை அரிசி	,,
28. செவ்வியம்	,,
29. சீனாக்காரம்	,,
30. சவுக்காரம்	,,
31. வெந்தயம்	13½ கிராம்
32. சிற்றரத்தை	,,
33. தாளிசப்பத்திரி	,,
34. கருங்காலிப்பட்டை	,,
35. வெங்காரம்	,,
36. சாதிக்காய்	9 கிராம்
37. சாதிப்பத்திரி	,,
38. கிராம்பு	,,
39. அபின்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளை நன்கு சுத்தப்படுத்தி உலர்த்தி உரலிலிட்டு இடித்து வடிகட்டி வைத்துக்கொண்டு கோழியின் கால், தலைமுடி இவைகளைப் போக்கி வயிற்றைக் கிழித்துக் குடல், பித்தப்பை, கல்பை முதலியவற்றை நீக்கிக் கழுவி மேற்கூறப்பெற்ற மருந்து பொடியை கோழியின் வயிற்றில் வைத்து தைத்து, ஒரு

வாயகன்ற பெருஞ்சட்டியில் 4 லிட்டர் பிரம்மிச்சாறு விட்டு அதில் வைத்து மூடி அடுப்பில் வைத்து சிறு தீயாகக் கொடுத்து நீர் வற்றியவுடன் கோழியை எடுத்து எலும்புகளைப் போக்கி சூரணத்தையும், கோழியின் இறைச்சியையும், புதுசட்டியில் கருகாமல் பொன்மேனியாக வறுத்து எடுத்து இடித்து தூள்செய்து வடிகட்டி பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடியளவு ஒரு மண்டலம் சாப்பிட வேண்டும். (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன். (தேன் கிடைக்காத போது வெந்நீர்)

தீரும் நோய்கள்: எண்வகைக் குன்மம், வாயு, 18 வகைக் கிராணி, அதிசாரம், வயிற்றெரிச்சல், கழிச்சல், இரத்தமூலம், உப்புசம், விடப்பாண்டு முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்குவதுடன் கிழங்குகளையும் உட்கொள்ளக்கூடாது.

16. கும்மட்டிக்காய்ச் சூரணம்

1. பேய்க்குமட்டிக்காய்	10
2. கொடிவேலி வேர்ப்பட்டை	3½ கிராம்
3. வளையலுப்பு	,,
4. கல்லுப்பு	,,
5. பூநீறு உப்பு	,,
6. சாரணைவேர்	,,
7. சுக்கு	,,
8. மிளகு	,,
9. திப்பிலி	,,
10. செவ்வியம்	,,
11. கொத்தமல்லி	,,
12. பெருங்காயம்	,,
13. வாய்விளங்கம்	,,
14. ஓமம்	,,

15. சத்திச்சாரம்	3½ கிராம்
16. எவச்சாரம்	,,
17. புளியங்கொட்டைத்தோல் சாம்பல்	3½கிராம்
18. புளிநடலைக்கிழங்கு	13கிராம்
19. காட்டுக்கருணைக்கிழங்கு	,,

மேற்கூறிய மருந்துகள் யாவற்றையும் நன்றாகக் காயவைத்து உலர்த்தி உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி ஒரு மண் கலயத்தில் போட்டு,

1. தேங்காய்ப்பால்	2 லிட்டர்
2. நார்த்தம்பழச்சாறு	2 லிட்டர்
3. கோமூத்திரம்	,,

ஆகிய இம்மூன்றையும் கலயத்தில் உள்ள பொடியில் கொட்டி நன்றாக நீர்வற்றியபின் கருணைக்கிழங்கு சேர்த்து அரைத்து 3 விரல் அளவுள்ள உருண்டைகளாகச் செய்து கவசம் செய்து காயவைத்துச் சட்டியில் வைத்து மேற்சட்டி மூடி சீலை செய்து காட்டெருவில் கெசப்புடம் போட்டு புடம் ஆறி எடுத்துக் குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ அரைத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: திரிகடிப் பிரமாணம். (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பால், மோர்.

தீரும் நோய்கள்: எண்வகைக் குன்மம், ஐவகைச் சூலை, சலகுன்மம், உப்புசம், மகோதரம், நீராம்பல், பெருவயிறு முதலியன குணமாகும்.

17. கொடிவேலிச் சூரணம்

1. கொடிவேலி	35கிராம்
2. ஆடாதொடை	,,
3. வெள்ளறுகு	,,
4. சிவனார் வேம்பு	,,

5. சாரணைவேர்	35 கிராம்
6. நில ஆவாரை	,,
7. குப்பைமேனி வேர்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை வெய்யிலில் நன்றாக உலர்த்தி உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டிப் பத்திரப்படுத்தவும்.

அளவு: கால் பலம். (காலை, மாலை இருவேளை ஒரு மண்டலம்) சாப்பிடவேண்டும்.

அனுபானம்: தேன், சர்க்கரை.

தீரும் நோய்கள்: 18 வகை குட்டம். நவமூலம் முதலியன குணமாகும்.

பத்தியம்: இச்சாபத்தியம் மேற்கொள்ளவேண்டும். அளவு, வேளை ஒன்றுக்கு 17½ கிராம் உண்பது நலம்.

18. சந்தனாதிச் சூரணம்

1. கிச்சிலிக்கிழங்கு	35 கிராம்
2. கார்போக அரிசி	,,
3. நீரடி முத்து	,,
4. மைலாலக்கடி	,,
5. பூஞ்சாந்துப்பட்டை	,,
6. வெட்டிவேர்	,,
7. குருவிவேர்	,,
8. கஸ்தூரி மஞ்சள்	,,
9. கோரைக்கிழங்கு	,,
10. அகில்கட்டை	,,
11. தேவதாரு	,,
12. கிளியூரம் பட்டை	,,
13. பளிங்கு சாம்பிராணி	,,
14. கல்பாசி	,,
15. சந்தனத்தூள்	70 கிராம்
16. விலாமிச்சம்வேர்	70 கிராம்
17. வேப்பங்கொழுந்து	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை இடித்து வடிகட்டி பத்திரப்படுத்தவும்.

அளவு: மேசைக்கரண்டியளவு.

உபயோகம்: தினமும் குளிக்கும்போது மேற்படிச் சூரணத்தை எடுத்து தண்ணீர் அல்லது பழச்சாறு விட்டுக் குழைத்துச் சரீரம் எங்கும் நன்றாகத் தேய்த்து 5 அல்லது 10 நிமிடம் ஊறவிட்டு பின்பு தண்ணீர் விட்டுக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள்: சரீரத்தில் ஏற்படும் சொறி, சிரங்கு, நமைச்சல், தவளைச்சொறி, படை, கருமேகம் முதலியவை நீங்கி சரீரத்திற்கு நல்ல அழகைக்கொடுக்கும்.

19. சஞ்சீவிச் சூரணம்

சீந்தில் தண்டின் மேல்தோலை நறுக்கி உலரப்போட்டு இடித்து நன்றாகத் தூள்செய்து வடிகட்டி 1 லிட்டர் தூள் எடுத்து 1 லிட்டர் பசும்பால் விட்டு, பின்பு 500 கிராம் சீனி சேர்த்து அடுப்பேற்றி கிண்டி களியாக்கி இறக்கி வெய்யிலில் உலர்த்தி உரலில் இட்டு இடித்துத் தூள்செய்து,

1. சாதிக்காய்	35 கிராம்
2. சாதிப்பத்திரி	,,
3. வால்மிளகு	,,
4. ஏலம்	,,
5. கிராம்பு	,,
6. கசகசா	,,
7. தாளிசப்பத்திரி	,,
8. மாசிக்காய்	,,

முதலியவற்றைப் பொன்மேனியாக வறுத்துத் தூள் செய்து வடிகட்டி இரண்டையும் ஒன்றாகக் கலந்து மேலும் 210கிராம் சீனி சேர்த்து பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடியளவு. (காலை,மாலை இருவேளை ஒரு மண்டலம்)

அனுபானம்: நெய்.

தீரும் நோய்கள்: மேகநீர் இருபது, பிரமியநோய், அஸ்திசுரம், வெட்டை, மூலச்சூடு, பித்த நோய்கள், கண் எரிவு, கை கால் காந்தல் குணமாகி உடல் குளிர்ச்சி யடைவதுடன் சரீர ஊரல், கபால ரணம் முதலியன குணமாகும். பணவெடை அப்பிரகச்செந்தூரத்துடன் தேன் சேர்த்துண்ண நோய் விரைவில் குணமாகும்.

20. சிவதைச் சூரணம்

1. சிவதைச் சமூலம்	35 கிராம்
2. நெல்லிக்காய்த்தோல்	13¼ கிராம்
3. கடுக்காய்த்தோல்	,,
4. தான்றிக்காய்த்தோல்	,,
5. கொத்தமல்லி	,,
6. கடுகுரோகிணி	,,
7. கண்டத்திப்பிலி	,,
8. இந்துப்பு	,,
9. செவ்வியம்	,,
10. கோரைக்கிழங்கு	,,
11. சுக்கு	,,
12. மிளகு	,,
13. திப்பிலி	,,
14. சீரகம்	,,
15. கருஞ்சீரகம்	,,
16. சிறுநாகப்பூ	,,
17. அன்னபேதி	,,
18. விலாமிச்சம்வேர்	,,
19. தேவதாரம்	,,
20. இலவங்கப்பத்திரி	,,
21. கோட்டம்	9 கிராம்
22. சந்தனம்	,,
23. வெங்காரம்	,,

24. கஸ்தூரி மஞ்சள்	*9 கிராம்*
25. சடாமாஞ்சில்	*,,*
26. வாய்விளங்கம்	*,,*

மேற்கூறப்பெற்ற மருந்துகளை நன்றாக வெய்யிலில் ஏழுநாட்கள் உலர்த்திக் காய்ந்த பிறகு உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டித் தூளின் எடைக்குச் சீனி சேர்த்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடி. (காலை, மாலை இருவேளை. ஒருமண்டலம்)

அனுபானம்: தேன், இஞ்சிச்சாறு.

தீரும் நோய்கள்: வாயு, அபானவாயு, மலக்கட்டு, நீர்க்கட்டு, அழல் நோய்கள், இருமல், ஈளை, அரிப்பு, சூடு முதலியன குணமாகும்.

பத்தியம் : நோய்களின் வன்மைக்கு ஏற்றாற்போல் பத்தியம் கடைப்பிடிக்க வேண்டும்.

21. சுகபேதிச் சூரணம்

சிவதை வேரைப் பசும்பாலில் மிதக்கவிட்டு பால் வற்றுமளவிற்குச் சுண்டக்காய்ச்சி, நன்றாக வெய்யிலில் உலர்த்தி இடித்துத் தூள்செய்து சரியளவு சர்க்கரை சேர்த்துச் சேர்த்த அளவுக்கு அரைக்கால் பாகம் ஏலரிசித்தூள் சேர்த்து நன்கு உறவாடக் கலந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடி, ஆறுவேளை. (தினம் காலையில் ஒருவேளை)

அனுபானம்: வெந்நீர்.

தீரும் நோய்கள்: சீதக்கட்டு முதலியன கழிந்து உடல் நலமுறும்.

22. சுரக்கட்டிச் சூரணம்

1. கறிமஞ்சள்	25 கிராம்
2. மிளகு	,,
3. கரியுப்பு	,,
4. மஞ்சள் கடுக்காய்த்தோல்	,,
5. தும்மட்டிக்காய்	,,

(தோல் சீவி விதை போக்கியது)

மேற்கூறப்பெற்ற ஐந்து மருந்துகளையும் உலர்த்தி இடித்துத் தூள்செய்து வடிகட்டிப் பத்திரப்படுத்தவும்.

அளவு: 2 முதல் 5 கிராம் (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சர்க்கரை.

தீரும் நோய்: சுரத்தின் வேகத்தால் உண்டாகிய ஈரல்களின் வீக்கங்கள் நாளடைவில் குறைந்து, குணமாகும்.

பத்தியம்: புளிநீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

குறிப்பு: இச்சூரணத்தை உட்கொள்ளும்போது ஒருமுறை மலம் நன்றாகக் கழியும். அவ்வாறு ஆகாவிடில், மருந்தின் அளவைச் சிறிது அதிகப்படுத்த வேண்டும்.

23. சுவாச குடோரிச் சூரணம்

1. சுக்கு	35 கிராம்
2. மிளகு	,,
3. திப்பிலி	,,
4. சிற்றரத்தை	,,
5. அக்ரகாரம்	,,
6. வால்மிளகு	,,
7. கண்டத்திப்பிலி	,,
8. வெங்காரம்	,,
9. தாளிசப்பத்திரி	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை வெய்யிலில் உலர்த்தி உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி புதுக்கலயத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடியளவு (காலை, மாலை இருவேளை ஒரு மண்டலம்)

அனுபானம்: தேன், இஞ்சிச்சாறு, நெய்.

தீரும் நோய்கள்: 96 வகை சுவாசம், ஈளை, இருமல், காசம், வெட்டை முதலியன குணமாகும்.

குறிப்பு: மேற்கூறிய சூரணத்துடன் நோய்க்கேற்ற செந்தூரம் சேர்த்துச் சாப்பிட நோய் விரைவில் குணமாகும். தாளகச் செந்தூரம் சேர்த்துத் தேனில் உண்ண நலம் காணலாம்.

24. சூதகச் சூரணம்

1. முசுமுசுக்கைத்தூள்	250 மிலி
2. பொன்னாங்காணித்தூள்	,,
3. பொடுதலைத்தூள்	,,
4. பருத்திவிதைப் பருப்புத்தூள்	,,
5. சிறுபயறுத்தூள்	,,
6. சீரகத்தூள்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் முதலில் முசுமுசுக்கை சமூலம் கொண்டு வந்து நிழலில் உலர்த்தி பொன்மேனியாக வறுத்து உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி 250 கிராம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு பொன்னாங்காணி, பொடுதலை, பருத்தி விதை, சிறுபயறு முதலியவைகளையும் தூள் செய்து வகைக்கு 250 கிராம் தூள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

பிறகு சீரகத்தைச் சுத்தப்படுத்தி வெள்ளாட்டு நீரில் 3தினங்கள் ஊறவைத்து எடுத்து உலர்த்தி இடித்துத் தூள்செய்து 250 கிராம் தூள் எடுத்து மேற்படிச் சூரணத்துடன் எல்லாத் தூள்களையும் சேர்த்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடியளவு. (காலை, மாலை இருவேளை ஒருமண்டலம்)

அனுபானம்: பச்சரிசிக் கழுநீர், கோரைக்கிழங்கு, குடிநீர், இளவெந்நீர், புளிக்காத மோர், வெள்ளாட்டுப்பால்.

தீரும் நோய்கள்: சுக்கில வாயு, சுரோணித வாயு, மேல்நோக்கு வாயு, கிராணி, குன்மம், வயிற்றெரிச்சல், சீழும் இரத்தமும் திரண்டு உருண்ட வாயு, கருகெடுக்கும் சூதக வாயு, வலி, இழுப்பு, பக்கவாயு முதலியன குணமாகி கர்ப்பம் உண்டாகும்.

பத்தியம்: அரை மண்டலம் உப்பை நீக்கி மருந்தை உட்கொள்ளவேண்டும். அரை மண்டலம் சுத்தித்த உப்பைச் சிறிதளவு சேர்த்துக்கொள்ளலாம். வெள்ளாட்டுப்பால் சேர்க்கவேண்டும். போகம் தவிர்க்க வேண்டும்.

25. தசதீபாக்கினிச் சூரணம்

1. பெருங்காயம்	35 கிராம்
2. வசம்பு	70 கிராம்
3. வாய் விளங்கம்	95 கிராம்
4. இந்துப்பு	140 கிராம்
5. ஓமம்	175 கிராம்
6. கடுக்காய்த்தோல்	210 கிராம்
7. சித்திரமூல வேர்ப்பட்டை	245 கிராம்
8. கோட்டம்	280 கிராம்
9. திப்பிலி	315 கிராம்
10. சீரகம்	350 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளைச் சுத்தப்படுத்தி வெய்யிலில் உலர்த்தி பொன்மேனியாக வறுத்து இடித்து வடிகட்டி பத்திரப்படுத்தவும்.

அளவு: 2 முதல் 5 கிராம் (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சர்க்கரை.

தீரும் நோய்கள்: இருமல், பாண்டு, பேதி, அதிசாரபேதி, பசியின்மை, அசீரணம் போன்ற நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி, வாயுபதார்த்தங்கள், புளித்த தயிர், மோர் சேர்க்கக்கூடாது.

26. தாளிசப்பத்திரிச் சூரணம்

1. தாளிசப்பத்திரி	350 கிராம்
2. சுக்கு	35 கிராம்
3. மிளகு	,,
4. திப்பிலி	,,
5. நெல்லிவற்றல்	,,
6. கடுக்காய்த்தோல்	,,
7. தான்றிக்காய்	,,
8. கோஷ்டம்	,,
9. அக்ரகாரம்	,,
10. ஆனைத்திப்பிலி	,,
11. சீரகம்	,,
12. கொத்துமல்லி	,,
13. வாய்விளங்கம்	,,
14. கிராம்பு	,,
15. ஏலரிசி	,,
16. சாதிக்காய்	,,
17. சாதிப்பத்திரி	,,
18. சடாமாஞ்சில்	,,
19. சோம்பு	,,
20. வால்மிளகு	,,
21. இலவங்கப்பட்டை	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி, வடிகட்டிய தூளின் எடைக்குச் சீனி சேர்த்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடியளவு. (காலை, மாலை இருவேளை, ஒரு மண்டலம்)

அனுபானம்: வெந்நீர், தண்ணீர்.

தீரும் நோய்கள்: காசம், ஈளை, அஸ்திசுரம், அஸ்தி வெட்டை, நீர்க்காசம், நெஞ்சுப்புண், பித்தவெட்டை, பித்தப்பாண்டு, கிராணி, பசி இன்மை,ஒக்காளம், விம்மல், விக்கல், கக்கல், கைகால் எரிவு, காந்தல் முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி, புகை நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

27. திராட்சைச் சூரணம்

1. திராட்சை	35 கிராம்
2. பேரீச்சம்பழம்	,,
3. அதிமதுரம்	,,
4. முக்காவேளை	,,
5. நெற்பொரி	,,
6. கோரைக்கிழங்கு	,,
7. ஏலம்	,,
8. கிராம்பு	,,
9.கொத்துமல்லி	,,
10. மிளகு	,,
11. வேலிப்பருத்தி	,,
12. திப்பிலி	,,
13. கூகைநீறு	,,
14. இலவங்கப்பத்திரி	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை இடித்துத் தூள்செய்து வடிகட்டி, சர்க்கரை சேர்த்து பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடி அளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: நெய்.

தீரும் நோய்கள்: அந்திரவாயு, பாண்டு, தாகம், சுரம், மயக்கம், தூக்கம், 40 வகை பித்தம், பசியின்மை, உணவில் வெறுப்பு உண்டாதல். உஷ்ண நோய், கபநோய், அக்கினி மந்தவாயு, கை எரிவு, காந்தல் முதலானவை குணமாகும்.

28. நிலவேம்புச் சூரணம்

1. சீந்தில்கொடி	70 கிராம்
2. திப்பிலி மூலம்	,,
3. திப்பிலி	,,
4. கடுகுரோகிணி	,,
5. கடுக்காய்த்தோல்	,,
6. சுக்கு	,,
7. கிராம்பு	,,
8. நூறு வருடம் சென்ற வேப்பமரப்பட்டை	,,
9. சந்தனத்தூள்	,,
10. தான்றிக்காய்	35 கிராம்
11. நெல்லிவற்றல்	,,
12. சீந்தில்கொடி	,,
13. அதிமதுரம்	,,
14. சிறுதேக்கு	,,
15. வெட்பாலை அரிசி	,,
16. சிற்றாமுட்டி	,,
17. கிச்சிலிக்கிழங்கு	,,
18. குருவேர்	,,
19. குடசப்பாலை	,,
20. தாமரைக்கிழங்கு	70 கிராம்
21. அல்லிக்கிழங்கு	,,
22. வெண்தாமரைக்கிழங்கு	,,
23. ஓரிலைத்தாமரை	,,
24. மூவிலைத்தாமரை	,,
25. வெட்டிவேர்	,,
26. கிரந்திதகரம்	,,
27. சாதிப்பத்திரி	,,
28. மஞ்சள்	,,
29. மரமஞ்சள்	,,
30. அதிவிடையம்	,,
31. பற்பாடகம்	,,
32. பூநீறு	,,

மேற்கூறப்பெற்ற 32 சரக்குகளையும் வெய்யிலில் நன்கு உலர்த்தி உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி பத்திரப்படுத்தவும்.

அளவு: 2 முதல் 5 கிராம். (காலை,மாலை இருவேளை)

அனுபானம்: தேன், சர்க்கரை, வெந்நீர்.

தீரும் நோய்கள்: நாள்பட்ட வாதசுரம், பித்தசுரம், கபச்சுரம், தொந்த சுரம், அஸ்திச்சுரம், பலவித மாறல் சுரம், மார்புவலி, காமாலை முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

29. நிலவாகைச் சூரணம்

1. நிலவாகை	35 கிராம்
2. சுக்கு	,,
3. மிளகு	,,
4. வாய்விளங்கம்	,,
5. ஓமம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை வெய்யிலில் உலரப் போட்டு, உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி, வடிகட்டிய தூளின் நிறைக்குச் சர்க்கரை சேர்த்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடி அளவு. (காலை,மாலை இருவேளை)

அனுபானம்: வெந்நீர், நோய்க்கேற்ப அனுபானம் கொள்ளவேண்டும்.

தீரும் நோய்கள்: வாயு, பித்தம், உஷ்ணநோய், பொருமல், விம்மல், கபநோய், விக்கல், வாந்தி, உடம்பு, எரிவு, சுவாசகாசம், சொட்டு மூத்திரம், மலபந்தம், வயிறு விம்மல், இருமல், குன்மம், பெருவயிறு, வாயு, கர்ப்பவலி, கர்ப்பநோய், குடலில் உள்ள புழுக்கள் யாவும் போகும். மேலும் வயிற்றில் உள்ள நோய்கள் யாவும் குணமடையும்.

பத்தியம்: நோய்க்கேற்ப பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

30. நீர்பேதிச் சூரணம்

1. ரேவல் சின்னி	17½ கிராம்
2. சிறுநாகப்பூ	,,
3. இலவங்கப்பட்டை	,,
4. பறங்கிப்பட்டை	,,
5. ஏலரிசி	,,
6. சீரகம்	,,
7. வெடியுப்பு	,,
8.படிக்காரம்	,,
9. சீனாக்கற்கண்டு	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை வெய்யிலில் நன்கு உலர்த்தி சுத்தப்படுத்தி உரலிலிட்டு இடித்து வடிகட்டி பத்திரப்படுத்தவும்.

அளவு: 10 முதல் 15 கிராம்.

அனுபானம்: சூரணத்தைப் பசும்பாலில் கலக்கிச் சாப்பிட்டு பின்னர் 1 லிட்டர் பாலுடன் 1 லிட்டர் தண்ணீர் கலந்து காய்ச்சி இரண்டு மூன்று முறை உட்கொள்ளவும்.

தீரும் நோய்கள்: மேற்கூறியவாறு மூன்று நாட்கள் மருந்தை உட்கொண்டு வந்தால், சிறுநீர்ப்பையிலுண்டான கொதிப்பையும், அங்கு தங்கியுள்ள வண்டல்களையும் சுத்திகரித்து நீரை மிகுதியாகப் பெருக்கி அழுக்கை அகற்றி நன்மையைத் தரும்.

பத்தியம்: பால் சாதத்தைத் தவிர்த்து வேறு ஏதும் உட்கொள்ளக் கூடாது.

31. பஞ்ச தீபாக்கினிச் சூரணம்

1. சுக்கு	35 கிராம்
2. மிளகு	,,
3. திப்பிலி	,,

4. ஏலம்	35 கிராம்
5. சீரகம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளைப் பொன்மேனியாக வறுத்து உரலிலிட்டு நன்கு இடித்துத் தூள்செய்து வடிகட்டி வடிகட்டிய தூளின் எடைக்குச் சர்க்கரையைச் சேர்த்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடி. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன், நெய்.

தீரும் நோய்கள்: அழல்நோய், சூலைவாயு, பித்த வாயு, கபநோய், பொருமல், செரியாமாந்தம், மயக்கம் கிறு கிறுப்பு, அஸ்திசுரம், மூலாதாரவெட்டை, மூலவாயு முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி, கசப்பு, புகை நீக்கவும்.

32. பறங்கிப்பட்டைச் சூரணம்

1. பறங்கிப்பட்டை	175 கிராம்
2. அமுக்கிராவேர்	,,
3. புங்கம்வேர்	,,
4. பிரப்பங்கிழங்கு	,,
5. கொன்றைப்பட்டை	,,
6. சாரணைவேர்	,,
7. கொடிவேலிவேர்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை வெய்யிலில் நன்கு உலர்த்தி உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி ஒரு வாய் அகன்ற பெருஞ்சட்டியில் பசும்பால் 8 லிட்டர் விட்டு அதற்குமேல் வேடுகட்டி மேற்படிப் பொடியை அதன்மேல் வைத்து அடுப்பில் வைத்து பிட்டவிப்பதுபோல் அவித்து எடுத்து உலர்த்தி அதனுடன்

1. மல்லி	13 ¼ கிராம்
2. அதிமதுரம்	,,
3. ஓமம்	,,
4. குரோசாணி ஓமம்	,,

5. அதிவிடையம்	13 ¼ கிராம்
6. மிளகு	,,
7. வெந்தயம்	,,
8. சிற்றரத்தை	,,
9. அக்ரகாரம்	,,
10. திப்பிலி	,,
11. சாதிக்காய்	,,
12. சாதிப்பத்திரி	,,
13. இலவங்கம்	,,
14. சீரகம்	,,
15. கருஞ்சீரகம்	,,
16. சுக்கு	,,

முதலிய மருந்துகளையும் சேர்த்து இடித்துத் தூள் செய்து வடிகட்டி எடுத்து, சூரணத்தின் அளவில் பாதி சீனி கலந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடிப்பிரமாணம். (காலை, மாலை இருவேளை, ஒரு மண்டலம்)

அனுபானம்: தேன், பால், தண்ணீர்.

தீரும் நோய்கள்: கரப்பான், புண்கள், அக்கினி மந்தம், அதிசாரம் எனும் கிராணி, உப்புசங்கள், வயிற்று இரைச்சல் முதலியவை குணமாகி உடல் இறுகி பலப்படும்.

பத்தியம்: புளி, போகம், எள்நெய், கடுகு, முதலியவற்றை நீக்கி உண்க. பால் அதிகமாக உட்கொள்ள வேண்டும்.

33. பூநாகச் சூரணம்

1. பூநாகம்	35 கிராம்
2. சுக்கு	9 கிராம்
3. மிளகு	,,
4. திப்பிலி	,,
5. கடுக்காய்த்தோல்	4½ கிராம்
6. சீந்தில்கொடி	17½ கிராம்
7. நெல்லிவற்றல்	4½ கிராம்
8. தான்றிக்காய்	,,

9. சிற்றரத்தை	4½ கிராம்
10. கற்கடகசிங்கி	,,
11. மூங்கிலுப்பு	,,
12. தூதுவளைச்சமூலம்	35 கிராம்
13. சீனாக்கற்கண்டு	140 கிராம்

மேற்கூறப்பெற்ற 13 மருந்துகளையும் இடித்து வடிகட்டிக் கற்கண்டையும் தூள்செய்து இடித்துத் தூளுடன் சேர்த்து எடுத்து 9 கிராம் நற்பவள பற்பமும் சேர்த்துக் கலந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 2 முதல் 5 கிராம். (காலை,மாலை இருவேளை)

அனுபானம்: பசுவெண்ணெய், தேன்.

தீரும் நோய்கள்: காசம், பாண்டு, குன்மம், நீராம்பல், கிராணி, மூலம், சூதகவாயு, இரத்தகாசம், மேகசூலை, நீர்சுருக்கு முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

34. பேய்க்குமட்டிக்காய்ச் சூரணம்

பேய்க்குமட்டிக்காய் தோல்நீக்கி விதையை நீக்கி எஞ்சியதைப் பீங்கானில் போட்டு இந்துப்பு 44 கிராம் சேர்த்து வெய்யிலில் உலர்த்தி கல்வத்திலிட்டு நன்கு அரைத்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: 3 கிராம். (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பனை வெல்லம்.

தீரும் நோய்கள்: பெருவயிறு, மகோதரம், நீராம்பல், நீர்க்கோர்வை, கசிவு முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: நோய்க்கேற்ப பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

35. மல்லிச்சூரணம்

1. மல்லி	350 கிராம்
2. பறங்கிச்சக்கை	35 கிராம்

3. அதிமதுரம்	35 கிராம்
4. கருஞ்சீரகம்	,,
5. சீரகம்	,,
6. ஏலம்	,,
7. சன்ன லவங்கப்பட்டை	,,
8. கிராம்பு	,,
9. விதையில்லா திராட்சை	35 கிராம்
10. சாதிக்காய்	17½ கிராம்
11. சாதிப்பத்திரி	,,
12. மாசிக்காய்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை வெய்யிலில் உலர்த்தி பொன்மேனியாக வறுத்து இடித்து வடிகட்டி பத்திரப் படுத்தவும்.

அளவு: 2 முதல் 5 கிராம். (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: கற்கண்டுத்தூள், சர்க்கரை, தேன், பால்.

தீரும் நோய்கள்: தொண்டைப்புண், விக்கல், வாந்தி, காதடைப்பு, தொண்டைக்கம்மல், அதிக வியர்வை, மூத்திர எரிச்சல், கைகால் எரிச்சல், பசியின்மை முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: நோய்க்கு ஏற்றவாறு பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

36. மதன காமேசுரச் சூரணம்

1. சீந்தில் சர்க்கரை	44 கிராம்
2. அமுக்கிராவேர்	13¼ கிராம்
3. கண்டங்கத்திரி வேர்	,,
4. தூதுவளைவேர்	,,
5. கோரைக்கிழங்கு	,,
6. நிலப்பனங்கிழங்கு	,,
7. வில்வவேர்	,,
8. பாதிரிவேர்	,,
9. பொன்னாங்காணிவேர்	,,
10. நன்னாரி	,,

11. நத்தைச்சூரிவேர்	13¼ கிராம்
12. சிறுநெறிஞ்சில்	,,
13. கீழ்க்காய்நெல்லிவேர்	,,
14. சிறுகீரைவேர்	,,
15. மாதுளம்வேர்	,,
16. வெட்டிவேர்	,,
17. விலாமிச்சம்வேர்	,,
18. அம்மான் பச்சரிசி வேர்	,,
19. ஆவாரை வேர்ப்பட்டை	,,
20. நல்லத்திப்பட்டைவேர்	,,
21. கஞ்சா	,,
22. சாதிக்காய்	,,
23. சாதிப்பத்திரி	,,
24. கூகை நீறு	13½ கிராம்
25. இலவங்கம்	13½ கிராம்
26. ஏலம்	,,
27. முந்திரிப்பழம்	,,
28. கற்கண்டு	,,
29. சிற்றரத்தை	,,
30. கல்நார்	,,
31. கல்மதம்	,,
32. கொத்தமல்லி	,,
33. தாளிசப்பத்திரி	,,
34. மிளகு	,,
35. அரிசி திப்பிலி	,,
36. சுக்கு	,,
37. அதிமதுரம்	,,
38. சீரகம்	9 கிராம்
39. குரோசாணி ஓமம்	,,
40. நெல்லிவற்றல்	,,
41. இலவங்கப்பத்திரி	,,
42. சிறுநாகப்பூ	,,
43. தேவதாரம்	,,
44. விளா	,,

45. கோஷ்டம்	9 கிராம்
46. தக்கோலம்	,,
47. கஸ்தூரி மஞ்சள்	,,
48. வேளைவேர்	,,
49. திப்பிலிமூலம்	,,
50. வால்மிளகு	,,
51. கண்டத்திப்பிலி	,,
52. செவ்வியம்	,,
53. பூலாங்கிழங்கு	,,
54. அன்னபேதி	,,
55. சிவப்பு மாதுளை ஓடு	,,
56. அக்ரகாரம்	,,
57. வாய்விளங்கம்	,,
58. வால் மிளகு	,,
59. மகரப்பூ (வெந்தயம்)	9 கிராம்
60. அபின்	4½ கிராம்
61. குங்குமப்பூ	,,
62. கோரோசனை	,,
63. கஸ்தூரி	,,
64. நெற்பொரி	,,
65. பருத்திப்பருப்பு	,,
66. சீனி	350 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகள் முதல் 65யும் வெய்யிலில் 108 நாழிகை நன்கு உலர்த்தி உரலிலிட்டு இடித்துத் தூள் செய்து மெல்லிய துணிகொண்டு வடிகட்டிச் சீனி கலந்து புதுப் பாண்டத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடி அளவு. (காலை, மாலை இருவேளை) 1மண்டலம். (48 நாட்கள்)

அனுபானம்: தேன், நெய், பால், மாதுளம்பழச்சாறு, வாதசீதள நோய்களுக்கு இஞ்சிச்சாறு.

தீரும் நோய்கள்: மேகவெட்டை, தாதுநட்டம், வாதசீதளம், குடைச்சல், முடக்கம், பித்தம், வாந்தி, மலபந்தம், வாயு,

வாதம், குன்மம், மேகம், மூலக்கிராணி, பாண்டு, விஷபாகங்கள், குளிர்சுரங்கள் முதலியன குணம் அடையும். வீரிய விருத்தியாகும்.

பத்தியம்: சத்துள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும். நோய்களுக்கேற்ப பத்தியங்களை மேற்கொள்ள வேண்டும். இதை லேகிய பாகமாகவும் செய்து உட் கொள்ளலாம்.

37. முடித்தைலச் சூரணம்

1. சடாமாஞ்சில்	35 கிராம்
2. கோட்டம்	,,
3. பூலாங்கிழங்கு	,,
4. தேவதாரு	,,
5. செம்பூராம்பட்டை	35 கிராம்
6. செவ்வியம்	,,
7. கருஞ்சீரகம்	,,
8. சீரகம்	,,
9. நன்னாரி	,,
10. கொம்பரக்கு	,,
11. பச்சிலை	,,
12. கார்போக அரிசி	,,
13. சிறுநாகப்பூ	,,
14. கஸ்தூரி மஞ்சள்	,,
15. சண்முகப்பூ	,,
16. சிறுதேக்கு	,,
17. அகிற்கட்டை	,,
18. வெட்டிவேர்	,,
19. குருவிவேர்	,,
20. சந்தனத்தூள்	,,
21. சிற்றாமுட்டிவேர்	,,
22. சாம்பிராணி	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை வெய்யிலில் நன்கு உலர்த்தி உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வைத்துக் கொள்ளவும்.

உபயோகம்: 200 மில்லி எள் நெய்யில் 10 கிராம் சூரணத்தைப்போட்டு சீறுதீயில் காய்ச்சிச்சூரணம் சிவக்கும்

பதத்தில் எரித்து உடன் இறக்கி மறுபாத்திரத்தில் எண்ணெயை வடித்து ஆறவிட்டு நீராடி வரவும்.

தீரும் நோய்கள்: சீதள சம்பந்தமான கழுத்து நரம்புகளின் இழுப்பு, பிடரிவலி, தலைநோய், மண்டைக்குடைச்சல் முதலிய நோய்கள் குணமாகும்.

குறிப்பு: அவரவர்கள் உபயோகப்படுத்தும் எண்ணெயில் இட்டு காய்ச்சி வடித்துக்கொள்ளலாம்.

38. மேகாதிச் சூரணம்

1. முந்திரிப்பழம்	35 கிராம்
2. பேரீச்சம்பழம் (விதைநீக்கி)	,,
3. நெல்லிவற்றல்	,,
4. அதிமதுரம்	,,
5. ஏலம்	,,
6. கல்நார்	,,
7. திப்பிலி	,,
8. சிறுபீளைவேர்	,,
9. சந்தனம்	,,
10. கொத்துமல்லி	,,
11. வெள்ளரி வித்து	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை உலர்த்தி உரலிலிட்டு நன்கு இடித்துத் தூள்செய்து வடிகட்டி பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடியளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பச்சரிசிக் கழுவிய நீர்.

தீரும் நோய்கள்: நீர் எரிச்சல், நீர்க்குத்தல், மேகம் முதலியன குணமாகும்.

39. வச்சிரவல்லிச் சூரணம்

1. முற்றிய வச்சிரவல்லி (பிரண்டை)	320 கிராம்
2. திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி)	42½ கிராம்
3. கடுக்காய்த்தோல்	17½ கிராம்
4. தான்றிக்காய்த்தோல்	,,
5. கல்லுப்பு	,,

6. செவ்வியம்	17½ கிராம்
7. சிற்றரத்தை	,,
8. ஏலம்	,,
9. இலவங்கப்பட்டை	,,
10. வேளை இலை (கந்தபூதி)	,,
11. திப்பிலி மூலம்	17½கிராம்
12. சீரகம்	,,
13. பெருஞ்சீரகம்	,,
14. சீனாக்காரம்	,,
15. அக்ரகாரம்	,,
16. இந்துப்பு	,,
17. இலவங்கம்	,,
18. சாதிக்காய்	,,
19. சாதிப்பத்திரி	,,
20. அமுக்கிராவேர்	,,
21. கடுகுரோகிணி	8¾ கிராம்
22. வெங்காரம்	,,
23. கம்பி நவச்சாரம்	5கிராம்
24. கல்மதம்	,,
25. சீனி	320கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் பிரண்டையைச் சிறு துண்டுகளாக நறுக்கி உரலிலிட்டு இடித்துக் காயவைத்து மறுபடியும் நன்றாக இடித்துத் தூள் செய்து வடிகட்டி எடுத்து வைத்துக்கொண்டு மற்றைய மருந்துகளையும் இடித்துத் தூள் செய்து வடிகட்டி எடுத்து வச்சிரவல்லித்தூள் அளவே சீனி சேர்த்து மூன்றையும் கலந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடியளவு. (காலை,மாலை இருவேளை ஒரு மண்டலம்)

அனுபானம்: தேன், சர்க்கரை.

தீரும் நோய்கள்: குன்மம், அபான வாயு, உப்புசம், கபால வாயு, வெள்ளைக்கோழை, பித்தம், காசம், சூட்டினால் உண்டாகும் வெட்டை முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கி எண்ணெய், நெய், பால், மோர் முதலியவைகளை அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

40. வல்லாரைச் சூரணம்

வல்லாரை	2800 கிராம்

மேற்கூறப்பெற்ற மூலிகையை 1 லிட்டர் பாலில் வேகவைத்து வெயிலில் உலர்த்தித் தூள்செய்து தூளின் எடை 350 கிராமுக்கு,

1. கிராம்பு	35 கிராம்
2. ஏலம்	,,
3. சாதிக்காய்	,,
4. சாதிப்பத்திரி	,,
5. மாசிக்காய்	,,
6. தாளிசப்பத்திரி	,,
7. தான்றிக்காய்	,,
8. நெல்லிக்காய்	,,
9. கடுக்காய்	,,

மேற்கூறிய ஒன்பது மருந்துகளையும் இளவறுப்பாக வறுத்து இடித்துத் தூள்செய்து முதலில் கூறிய மூலிகைத் தூளுடன் ஒன்றுசேரக் கலந்து, கலந்த மருந்தின் எடைக்குச் சர்க்கரை சேர்த்து பத்திரப்படுத்தவும்.

அளவு: வெருகடி. (காலை, மாலை இருவேளை, ஒரு மண்டலம்)

அனுபானம்: தேன், நெய்.

தீரும் நோய்கள்: மேகம் (வெட்டை) கிரந்தி, பிரமியம், உஷ்ணநோய், சொட்டு நீர், எரிச்சல், கண்ணெரிவு, மதுமேகம், தந்திமேகம், காசம், பிரமேகம் முதலியன குணமாகி உடல் குளிர்ச்சியாகும்.

பத்தியம்: நோய்க்கேற்ப பத்தியம் மேற்கொள்வது சிறந்தது.

குறிப்பு: அப்பிரகச்செந்தூரம் சேர்த்து உண்ண மேகநோய் நீங்கும்.

லேகியங்கள்

1. அத்திப்பட்டை லேகியம்

1. அத்திப்பட்டை	350 கிராம்
2. அரசம்பட்டை	,,
3. தரணிப்பட்டை	,,
4. இலுப்பப்பட்டை	,,
5. மாம்பட்டை	,,
6. ஆவாரம்பட்டை	,,
7. பலாசம்பட்டை	,,
8. கிலுவைப்பட்டை	,,
9. முள் இலவங்கப்பட்டை	,,
10. மருதம்பட்டை	,,
11. ஆவாரை வேர்	175 கிராம்
12. நீர்ப்பூலா வேர்	,,
13. சங்கம்வேர்	,,
14. தூதுவளைவேர்	,,
15. கண்டங்கத்திரிவேர்	,,
16. நன்னாரிவேர்	,,
17. கடுக்காய்த்தோல்	10½ கிராம்
18. சாதிக்காய்	,,
19. ஏலம்	,,
20. இலவங்கப்பட்டை	,,
21. சுக்கு	,,
22. கிராம்பு	,,
23. கசகசா	,,
24. மிளகு	,,
25. சிறுநாகப்பூ	,,
26. சீரகம்	,,
27. சிறுதேக்கு	,,

மேற்கூறப்பெற்ற பட்டைகளையும், வேர்களையும் உரலில் இட்டு நன்கு இடித்து ஒரு பானையிலிட்டு 20 லிட்டர் தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாகக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்ளவும். பிறகு மற்றைய சரக்குகளை இடித்துச் சூரணம் செய்துகொண்டு, லேகியப் பாத்திரத்தில் மேற்படிக் குடிநீரை விட்டு 4 லிட்டர் பசும்பாலும் சேர்த்து அதனுடன் 500 கிராம் கற்கண்டுத் தூளைக்கரைத்து அடுப்பிலேற்றி சிறுதீயிட்டு பாகுபதம் வரும் வரை எரித்து மேற்படி சூரணத்தை அதில் தூவி லேகியப் பதத்திற்கு வரும்வரை கிளறி கீழே இறக்கிப் போதிய அளவு தேன்விட்டு நன்கு பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 கொட்டைப்பாக்கு பிரமாணம். (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: மேகம், சூலை, மயக்கம், சூதகவாயு, குன்மம், சூலைக்கட்டு, சரீரக்கடுப்பு, மூலக்கிராணி, வயிற்றுவலி, பித்தவெட்டை, வாய்நீர் ஊறல் போன்ற பல நோய்கள் குணமாகும்.

பத்தியம்: இச்சா பத்தியம்.

2. அமிர்தாதி லேகியம்

1. சீந்தில் சர்க்கரை	87½ கிராம்
2. பூமிச்சர்க்கரைக் கிழங்கு	,,
3. பறங்கிச்சக்கை	105 கிராம்
4. சுக்கு	17½ கிராம்
5. மிளகு	,,
6. திப்பிலி	,,
7. திப்பிலி மூலம்	,,
8. சிற்றரத்தை	,,
9. சிறுநாகப்பூ	,,
10. மகரப்பூ	,,
11. கடலிராஞ்சிப்பட்டை	,,

12. கிராம்பு	17½ கிராம்
13. கோட்டம்	,,
14. ஏலரிசி	,,
15. சிறுதேக்கு	,,
16. அதிமதுரம்	,,
17. சந்தனத்தூள்	,,
18. சீரகம்	,,
19. சடாமாஞ்சில்	,,
20. வால்மிளகு	,,
21. தாளிசப்பத்திரி	,,
22. அக்ரகாரம்	,,
23. சாதிப்பத்திரி	,,
24. கடுக்காய்ப்பூ	,,
25. குங்குமப்பூ	8¾ கிராம்
26. கோரோசனை	,,

மேற்கூறப்பெற்ற 26 மருந்துகளில் 24ஐ வெய்யிலில் உலர்த்தி நெய்விட்டு பொன்மேனியாக வறுத்து உரலில் இட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டிக் கொள்ளவும். பிறகு,

1. ஆவரம்பூ	175 கிராம்
2. ஆவாரம் இலை	,,
3. ஆவாரம்பட்டை	,,
4. ஆவாரங்காய்	,,
5. ஆவாரம்வேர்	,,

ஆகியவைகளை ஒன்றிரண்டாகச் சிதைத்து ஒரு மட்பாண்டத்திலிட்டு செவ்விளநீர் 20 லிட்டர் விட்டு அடுப்பிலேற்றி சிறு தீயாக எரித்து எட்டில் ஒன்றாகக் காய்ச்சி வடிகட்டி அதில் 1,400 கி.கிராம் குழவு சர்க்கரை சேர்த்து, லேகிய பாத்திரத்தில் இட்டு அடுப்பேற்றி சிறு தீயிட்டு எரித்து பாகு பதம் வரும் சமயத்தில் மேற்படி சூரணத்தைச் சிறிது சிறிதாகத் தூவிக் கிளறி லேகியபதத்தில் கீழிறக்கி போதிய அளவு, நெய், தேன் விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 கொட்டைப்பாக்கு பிரமாணம். (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: லேகியத்தை 20 முதல் 40 நாட்கள் உட்கொண்டு வந்தால், நீரிழிவு, பிரமேகம், மதுமேகம், தாகம், வறட்சி, மேககாங்கை முதலிய நோய்கள் குணமாகும்.

3. அமுக்கிரா லேகியம்

1. அமுக்கிரா	700 கிராம்
2. பால்	4 லிட்டர்
3. நெய்	2 லிட்டர்
4. சர்க்கரை	2 கிலோ
5. சீரகம்	9 கிராம்
6. திராட்சை	,,
7. பேரீச்சங்காய்	,,
8. சந்தனம்	,,
10. கோரைக்கிழங்கு	,,
11. கடுக்காய்ப்பூ	,,
12. கூகைநீர்	,,
13. சுக்கு	,,
14. மிளகு	,,
15. திப்பிலி	,,
16. விலாமிச்சம்வேர்	,,
17. கிராம்பு	,,
18. கண்டத்திப்பிலி	,,
19. செவ்வியம்	,,
20. சித்திரமூலம்	,,
21. இலவங்கப்பட்டை	,,
22. ஏலம்	,,
23. நாகேசுவரம்	,,
24. பச்சிலை	,,

இவைகளைச் சூரணம் செய்து, சர்க்கரையில் பாலை விட்டுத் தந்து பதம் வரக்காய்ச்சி மேற்கூறிய சரக்குகளின்

சூரணங்களைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுக்கிளறி லேகிய பதத்தில் நெய்விட்டுப் பிசைந்து வேண்டிய அளவுக்குத் தேனையும் சேர்த்து வைத்துக்கொள்க.

அளவு: சுண்டைக்காய் அளவு. (காலை,மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: காசம், சோகை, பாண்டு, காமாலை முதலான நோய்கள் குணமாகும்.

குறிப்பு: இதைச் சாப்பிடுவதால் தேக புஷ்டி ஏற்படும். கர்ப்பிணி முதல் சிறு குழந்தை வரை கொடுக்கலாம்.

பத்தியம்: இச்சா பத்தியம்.

4. ஆட்டுத்தலை லேகியம்

1. வெள்ளாட்டுத்தலை	3
2. ஏலரிசி	17½ கிராம்
3. சாதிக்காய்	,,
4. சாதிப்பத்திரி	,,
5. இலவங்கப்பட்டை	,,
6. குங்குமப்பூ	3½ கிராம்
7. சர்க்கரை	1,400 கிராம்
8. வெள்ளி ரேக்கு	50 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கப்பட்டை ஆகியவைகளை நன்கு இடித்துத் தூள்செய்து வடிகட்டி வைத்துக்கொள்ளவும். பிறகு ஆட்டுத்தலையின் தோலை உரித்து சிறு, சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு மட்பாண்டத்தில் போட்டு 20 லிட்டர் தண்ணீர் விட்டு, மாமிசம் குழையும் அளவிற்கு வேகவைத்து இறக்கி மூன்று முறை வடிகட்டி, வடிகட்டிய நீருடன் சர்க்கரை சேர்த்து அடுப்பில் வைத்துப் பாகுபதம் வரும்வரை சிறு தீயிட்டு எரித்து சூரணத்தை அதில் போட்டுக் கிளறி நெய்யையும், வெள்ளி ரேக்கையும் சேர்த்து தேன் விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: *1 முதல் 2 சுண்டைக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)*

தீரும் நோய்கள்: மூளைக்குப் பலத்தைக் கொடுத்து ஞாபகக் குறைவைப் போக்கி சரீரத்தை கொழுமையடைய செய்து தாதுவிருத்தியை உண்டாக்கும்.

பத்தியம்: லேகியம் உட்கொள்ளும்போது சத்துள்ள உணவுகளை உட்கொள்ளவேண்டும். போகத்தை நீக்க வேண்டும்.

5. இஞ்சி லேகியம்

இஞ்சியை ஓரளவாக எடுத்துக்கொண்டு சிறு சிறு வில்லைகளாக நறுக்கி நிழலில் உலர்த்தி பசு நெய்யில் இளவறுப்பாக வறுத்து நிறுத்துக்கொண்டு இஞ்சியின் அளவுக்குக் கால்பங்கு அதிமதுரம், மிளகு, இலவங்கம், சீரகம், ஏலரிசி, கோரைக்கிழங்கு, இந்துப்பு, மல்லி இவைகளையும் சேர்த்து உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி வைத்துக்கொண்டு, வடிகட்டிய தூளிற்குச் சமன் எடை சர்க்கரை எடுத்து ½ லிட்டர் பசும்பாலில் சர்க்கரையைக் கரைத்துப் பாகு செய்துகொண்டு, மேற்படி தூளைச் சிறிது சிறிதாகக் கொடுத்துக் கிண்டி போதிய அளவு தேனும், நெய்யும் கலந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: சுண்டைக்காய் பிரமாணம். (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: வாயு, பித்தம், வாந்தி, சூலை, வலி, பசியின்மை, குன்மம், பொருமல் முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: சரீர வன்மைக்கேற்ப உணவை மேற்கொள்ள வேண்டும்.

6. இடிவல்லாதி லேகியம்

1. வாலை ரசம்	17½ கிராம்
2. சுத்தி செய்த நெல்லிக்காய் கெந்தகம்	,,
3. லிங்கம்	,,
4. பறங்கிப்பட்டை	87½ கிராம்
5. அமுக்கிராக்கிழங்கு	,,
6. நிலப்பனங்கிழங்கு	44 கிராம்
7. பூமிச்சக்கரக்கிழங்கு	,,
8. சித்திர மூலவேர்ப்பட்டை	,,
9. விதைநீக்கிய பேரீச்சங்காய்	,,
10. கருஞ்சீரகம்	,,
11. மெருகன் கிழங்கு	,,
12. சுக்கு	9 கிராம்
13. மிளகு	,,
14. திப்பிலி	,,
15. அரத்தை	,,
16. கோட்டம்	,,
17. அதிமதுரம்	,,
18. ஓமம்	,,
19. குரோசாணி ஓமம்	,,
20. கசகசா	,,
21. ஏலரிசி	,,
22. இலவங்கம்	,,
23. சாதிக்காய்	,,
24. சாதிப்பத்திரி	,,
25. வாதுமைப்பருப்பு	,,
26. பூனைக்காலி வித்து	,,
27. சதகுப்பை	,,
28. பலிங்கு சாம்பிராணி	,,

350 கிராம் சேங்கொட்டையை மூக்கை வெட்டி ஒரு குடுவையில் போட்டு எருமைச் சாணத்தைக் கரைத்து வடித்துவிட்டு அதனோடு சிறிது புளியிலையையும் போட்டு நன்றாகக் கொதிவர எரித்து சேங்கொட்டைகளை மாத்திரம்

எடுத்துக்கொண்டு அவைகளைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு சட்டியில் போட்டு முழுகும் அளவிற்கு பசுநெய்யை விட்டுக் காய்ச்சி சேங்கொட்டை மிதந்த பிறகு நெய்யை வடித்துப் பத்திரப்படுத்துக.

420 கிராம் நீராடிமுத்தை ஒரு குடுவையில் போட்டு அதற்குமேல் 4 விரற்கடை தண்ணீர் இருக்கும்படி விட்டு அதனோடு சிறிது ஓமம் சேர்த்து நன்கு கொதிவர எரித்து நீரடிமுத்தை எடுத்து ஓட்டை நீக்கிப் பருப்பைக் குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ அரைத்துக்கொள்ளவும்.

கெந்தகத்தை ஒரு ஓட்டிலிட்டு உருகவிட்டு ரசத்தைக் கலக்கும்படிச் செய்து குழியம்மியிலிட்டு அதனோடு லிங்கத்தைச் சேர்த்து 6 மணி நேரம் நன்கு அரைத்து இரண்டாவது பிரிவில் கூறப்பட்டுள்ள சூரணத்துடன் கலந்து, மூன்றாவது பிரிவில் கூறப்படும் நெய்யை அதனுடன் கலந்து பின்னர் நீரடிமுத்து விழுதையும் சேர்த்து ஒரு கல்லுரலில் போட்டு 420 கிராம் பனைவெல்லத்தைச் சிறிது சிறிதாகப் போட்டு பூணில்லாத உலக்கையால் 6 மணி நேரம் நன்றாக இடித்து எடுத்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 சுண்டைக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை) உணவு உட்கொண்ட பிறகு மருந்து சாப்பிடவேண்டும்.

தீரும் நோய்கள்: குட்டம், திமிர் குட்டம், கண்ட மாலை, மேகசூலை, கிரந்தி, அரையாப்பு, கருப்பு, சிகப்புப் புள்ளிகள், மேக ஊரல், படர்தாமரை, பவுத்திரம், குழி ரணம், தொடைவாழை முதலியன குணமாகும்.

பத்தியம்: இச்சா பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

குறிப்பு: ஒரே முறையாக 48 நாட்கள் உட்கொள்ளுவது கடினமாக இருப்பின் 10 நாட்களுக்கு ஒரு முறையாக உட்கொண்டு பின்னர் எண்ணெய் நீராடி மேற்கொண்டும் சாப்பிடலாம்.

7. இடி, பூரணாதி லேகியம்

1. அதிமதுரம்	35 கிராம்
2. சந்தனத்தூள்	,,
3. வெட்டிவேர்	,,
4. திப்பிலி	,,
5. ஏலம்	,,
6. கிராம்பு	,,
7. மராட்டிமொக்கு	,,
8. சிறுநாகப்பூ	,,
9. சாதிக்காய்	,,
10. கஞ்சா (சுத்தி செய்தது)	17½ கிராம்
11. கடுக்காய்த்தோல்	35 கிராம்
12. பச்சைக்கற்பூரம்	3½ கிராம்
13. சர்க்கரை	500 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளைச் சுத்தப்படுத்தி வெய்யிலில் உலர்த்தி உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி எடுத்து வெல்லத்தைக் குழியம்மியிலிட்டு நன்கு இடித்து இடிக்கும்போது சூரணத்தைக் கொஞ்சம், கொஞ்சமாகச் சேர்த்து நன்றாக இடித்து மெழுகுப்பதம் ஆனவுடன் எடுத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: தேற்றாங்கொட்டை அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: வாத, பித்த, கபக்குற்றத்தினால் ஏற்படக் கூடிய பற்பல நோய்கள் குணப்படுவதோடு, கை, கால் பிடிப்பு, இரத்தமூலம், சீதபேதி, அசீரணபேதி, கிராணி முதலிய நோய்கள் குணமாகும்.

8. இம்பூரல் லேகியம்

1. இம்பூரல் வேர்ப்பட்டை 175கிராம், இப்பட்டையை அம்மியில் வைத்து பசும்பால் விட்டு நன்கு நெகிழ அரைத்து, 2 லிட்டர் பசும்பாலில் கரைத்து வடிகட்டி எடுத்த பாலில் 350 கிராம் கற்கண்டுத் தூளைக் கரைத்து

1. சிறுநாகப்பூ	17½ கிராம்
2. சாதிக்காய்	,,
3. சாதிப்பத்திரி	,,
4. கசகசா	,,
5. இலவங்கம்	,,
6. இலவங்கப்பத்திரி	,,
7. பாதாம்பருப்பு	,,
8. பிஸ்தாப்பருப்பு	,,
9. சாரப்பருப்பு	,,
10. அக்ரூட்டு	,,
11. நிலப்பனங்கிழங்கு	,,
12. பூனைக்காலி வித்து	,,
13. பூமிச்சக்கரை கிழங்கு	,,
14. முருங்கை வித்து	,,
15. முள்ளங்கி வித்து	,,

மேற்கூறப்பெற்ற பதினைந்து மருந்துகளையும், சூரணம் செய்து மேற்படி பாலை அடுப்பில் ஏற்றி சிறுதீயிட்டு, பாகுபதம் வரும்வரை கிண்டி சூரணத்தைச் சிறிது சிறிதாகத் தூவி லேகியப் பருவத்தில் இறக்கி, போதிய அளவு தேன், நெய், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ முதலியவைகளை இட்டு நன்கு பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 சுண்டைக்காய். (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: இரத்த வாந்தி, காசம், இருமல், மேகம் முதலிய நோய்களைக் குணப்படுத்தி விந்து பலம் ஏற்பட்டுத் தாது விருத்தியாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

9. இரத்தவிருத்தி லேகியம்

1. சுக்கு	35 கிராம்
2. மிளகு	,,
3. திப்பிலி	,,
4. கடுக்காய்த்தோல்	,,
5. தான்றிக்காய்	,,
6. நெல்லிவற்றல்	,,
7. சாதிக்காய்	17½ கிராம்
8. சாதிப்பத்திரி	,,
9. கிராம்பு	,,
10. குங்குமப்பூ	3½ கிராம்
11. பச்சைக்கற்பூரம்	,,
12. உளுந்து	140 கிராம்
13. சாலாமிசிரி	105 கிராம்
14. தண்ணீர்விட்டான்கிழங்கு	140 கிராம்
15. சீந்தில் சர்க்கரை	35 கிராம்
16. ஏலக்காய்	35 கிராம்
17. வாதுமைப்பருப்பு	70 கிராம்
18. பிஸ்தாப்பருப்பு	,,
19. அக்ரூட்டு பருப்பு	,,
20. பேரீச்சங்காய்	280 கிராம்
21. கருந்துளசி விதை	70 கிராம்
22. சிறுநெருஞ்சில்	,,
23. இலவங்கப்பட்டை	,,
24. சீமை அமுக்கிரா	,,
25. மூங்கிலுப்பு	35 கிராம்
26. கொப்பரைத்தேங்காய்	70 கிராம்
27. நீர்முள்ளிவிதை	35 கிராம்
28. கருவேலம்பிசின்	70 கிராம்
29. இலவம்பிசின்	,,
30. முருங்கைப்பிசின்	,,
31. பாதாம்பிசின்	35 கிராம்
32. முள்ளங்கி வித்து	,,

33. முருங்கைவித்து	,,
34. பூனைக்காலி	70 கிராம்
35. தேத்தாங்கொட்டை	,,
36. நிலப்பனங்கிழங்கு	35 கிராம்
37. வெந்தயம்	17½ கிராம்
38. பூமிச்சர்க்கரை கிழங்கு	70 கிராம்
39. கசகசா	,,
40. மல்லி	,,
41. கோட்டம்	35 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளைச் சுத்தம் செய்து வெய்யிலில் உலர்த்தி இடித்து சூரணம் செய்து எடுத்துக் கொள்ளவும். பிறகு 4 லிட்டர் பசும்பாலில் 1.100 கிராம் வெள்ளைக் கற்கண்டைச் சேர்த்து கரைந்து லேகிய பாத்திரத்தில் இட்டு அதனுடன்,

1. தென்னம்பாளையின் சாறு (வெடிக்காத பாளை)	500 மில்லி
2. வல்லாரைச்சாறு	250 மில்லி
3. பொற்றலைக்கரப்பான்சாறு	200 மில்லி
4. தாழை விழுதுச்சாறு	100 மில்லி
5. ஓரிதழ்த் தாமரையின் சாறு	200 மில்லி

இச்சாறுகளையும் சேர்த்து அடுப்பிலிட்டு சிறுதீயிட்டு பாகுபதத்தில் மேற்படி சூரணத்தைச் சிறுகச் சிறுகத் தூவி ஒரு லிட்டர் பசும் நெய்விட்டு நன்கு கிளறி லேகிய பதத்தில் இறக்கி வைத்து,

அளவு: 1 முதல் 2 தேத்தான் விதைப் பிரமாணம். (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: சரீரம் கொழுமை அடைந்து உடம்பில் உள்ள காங்கை தணியும். பசியை அதிகரிக்கச் செய்யும். விந்து பலப்பட்டு சரீரத்திற்கு அழகைக் கொடுக்கும். ரத்தத்தை அதிகப்படுத்தி போக சக்தியை உண்டாக்கும். மேலும் மதுமேகம், மேகம் போன்ற கொடிய நோய்களையும் குணப்படுத்தும்.

பத்தியம்: புளி, புகை, போகம் இவைகளை நீக்கி உணவு உட்கொள்ளவும்.

10. எள்ளு லேகியம்

200 மில்லி கேழ்வரகு மாவைத் தண்ணீர் விட்டுப் பிசைந்து வேகவைத்து அதற்குச் சமயெடை கழுவி உலர்த்தி எடுத்த எள்ளையும் சேர்த்து உரலில் இட்டு நன்கு இடித்து வைத்துக்கொள்ளவும். 1 லிட்டர் பசும்பாலில் 250 கிராம் கற்கண்டுத் தூளைக் கரைத்து அடுப்பில் ஏற்றி சிறுதீயிட்டுப் பாகுபதத்தில் மேற்படி சூரணத்தைத் தூவிக் கிளறி லேகிய பதத்தில் தேவையான அளவு தேன், நெய் இரண்டும் குணப்படுத்தி சேர்த்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 நெல்லிக்காய். (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: பெண்களுக்கு ஏற்படும் சூதகச் சிக்கலைக் குணப்படுத்துவதுடன் அதி மூத்திரத்தையும் சரீரத்தையும் வன்மை அடையச் செய்யும்.

11. ஓரிதழ்த்தாமரை லேகியம்

1. நிழலில் உலர்த்தியஓரிதழ்த்தாமரை	175 கிராம்
2. பழச்சாற்றில் ஊறவைத்து எடுத்த சீரகம்	175 கிராம்
3. நிழலில் உலர்த்தி எடுத்த மணத்தக்காளிக்கீரை	105 கிராம்
4. நிலப்பனங்கிழங்கு	,,
5. பூமிச்சக்கரைக்கிழங்கு	,,
6. பூனைக்காலி வித்து	,,
7. நிழலில் உலர்த்திய முருங்கைப்பூ	,,
8. முள்ளங்கி வித்து	70 கிராம்
9. முருங்கை வித்து	,,
10. தேத்தாங்கொட்டை	70 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளை இடித்து சூரணம் செய்து 2 லிட்டர் பசும்பாலில் 600 கிராம் கற்கண்டுத் தூளைத் தூவி அடுப்பில் ஏற்றி சிறு தீயிட்டுப் பாகு பதத்தில் மேற்படி சூரணத்தைத் தூவிக் கிளறி லேகிய பதத்தில் தேன், நெய் விட்டு பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 கொட்டைப்பாக்கு அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: விந்து நஷ்டம் (சொப்பன ஸ்கலிதம்) நிவர்த்தியாகி சரீரத்திலுள்ள துர்ப்பலத்தைப் போக்கி தாதுவை விருத்தி செய்து போக இச்சையை அதிகப்படுத்தும். சரீரம் பிரகாசமாக இருக்கும்.

12. கடுகு லேகியம்

கடுகு	3.500 கி. கிராம்

மேற்கூறப்பெற்ற கடுகை ஒரு பாண்டத்திலிட்டு 4லிட்டர் தண்ணீர் விட்டு அடுப்பிலேற்றி சிறுதீயிட்டு எட்டில் ஒன்றாகக் காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். பிறகு

1. ஓமம்	35 கிராம்
2. சுக்கு	,,
3. திப்பிலி	,,
4. கிராம்பு	,,
5. பெருங்காயம்	,,
6. மல்லி	,,
7. சீரகம்	,,
8. வாய்விளங்கம்	,,
9. மஞ்சள்	,,
10. அதிவிடையம்	,,

ஆகியவைகளை இடித்துச் சூரணம் செய்து எடுத்துக் கொண்டு பனை வெல்லத்தை லேகிய பாத்திரத்திலிட்டு மேற்படி குடிநீரிட்டு அடுப்பிலேற்றி சிறுதீயிட்டு பாகு

பதமாக்கி மேற்படி சூரணத்தைத் தூவிக் கிளறி லேகிய பதத்தில் இறக்கி போதிய அளவு தேனும், நல்லெண்ணெயும் சேர்த்துப் பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 சுண்டைக்காயளவு. (காலை,மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: மூலநோய்கள், வாயு, உதிரச்சிக்கல், புளியேப்பம், செரியாமை, பொருமல், குன்மவாயு, மலக்கட்டு, நீர்க்கட்டு முதலிய நோய்கள் குணமாகும்.

13. கடுக்காய் லேகியம்

மெல்லிய ஓடுடையதாயும் நன்றாகப் பழுத்ததாயு முள்ள வில்வப்பழங்கள் நான்கை எடுத்துடைத்து அதிலுள்ள சோற்றை மட்டிலும் எடுத்துக்கொள்ளவும். பிறகு வில்வ ஓட்டைக் கஷாயம் செய்து, அக்கஷாயத்தில் வில்வச் சோற்றை நன்றாகப் பிசைந்து பிறகு துணியில் வடிகட்டி வைக்கவும்.

1. கடுக்காய்த்தூள்	35 கிராம்
2. நெருஞ்சில்தூள்	,,
3. கொத்தமல்லித்தூள்	52½ கிராம்
4. நெல்லிக்காய்த்தூள்	17½ கிராம்
5. பெருஞ்சீரகத்தூள்	35 கிராம்
6. நிலாவாரைத்தூள்	100 கிராம்
7. விழுதியிலைத்தூள்	35 கிராம்
8. சுக்குத்தூள்	17½ கிராம்
9. ரோஜாமொட்டு	35 கிராம்
10. திராக்ஷை	35 கிராம்
11. கொன்றைப்பூவின் தூள்	35 கிராம்
12. அதிமதுரத்தூள்	8¾ கிராம்

இத்தூள்களை வில்வ விழுதில் கலந்துகொண்டு தேவையான அளவு சர்க்கரைப்பாகு தயாரித்து அதில் சூரணங்கலந்த வில்வ விழுதையும் சிறிது சிறிதாகப் போட்டு

கிளறி வேண்டிய அளவு நெய்கூட்டி லேகியம் செய்து கொள்ளவும். இரவு முடிந்து படுக்கைக்குப் போகுமுன் ஒரு கொட்டைப்பாக்களவு லேகியத்தைச்சாப்பிடவும். காலையில் சுலபமாக மலங்கழியும்.

14. கட்டுவாதி லேகியம்

1.சாதிக்காய்	35 கிராம்
2. அதிவிடையம்	,,
3. கற்கடசிங்கி	,,
4.கிராம்பு	,,
5. சுக்கு	,,
6. வால்மிளகு	,,
7. மாசிக்காய்	,,
8. சன்ன இலவங்கப்பட்டை	,,
9. மிளகு	,,
10. காடாத்திப்பூ	,,
11. குரோசாணி ஓமம்	,,
12. கசகசா	,,
13. வெல்லம்	,,

மேற்கூறப்பெற்ற 12 சரக்குகளையும் நெய்விட்டு பொன்மேனியாக வறுத்து இடித்துச் சூரணம் செய்து கொண்டு வெல்லத்தில் 2 லிட்டர் பால்விட்டு தந்து பதமாகக் காய்ச்சி மேற்படி சூரணத்தை இட்டுக் கிளறி தேன்விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 சுண்டைக்காயளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பால்.

தீரும்நோய்கள்: கிராணி, அதிசாரம், பேதி முதலிய நோய்கள் குணமாகும்.

15. கபாட லேகியம்

1. ஆலம்பட்டை	70 கிராம்
2. அத்திப்பட்டை	,,
3. நாவல்பட்டை	,,
4. மாம்பட்டை	,,
5. விடதாரி வேர்	,,
6. தென்னம்பூ	,,
7. ஆவாரம்பட்டை	,,
8. கருவேலம்பட்டை	,,
9. ஒதியம்பட்டை	,,
10. அரசம்பட்டை	,,
11. வெள்வேலம்பட்டை	,,
12. உரித்தவெள்ளைப்பூண்டு	280 கிராம்
13. வெல்லம்	175 கிராம்
14. சாதிக்காய்	7 கிராம்
15. ஓமம்	,,
16. அதிவிடையம்	,,
17. அபின்	,,

மேற்கூறப்பெற்ற பட்டைகளை இடித்து ஒரு மட்பாண்டத்திலிட்டு நான்கு படி தண்ணீர்விட்டு எட்டில் ஒன்றாகக் காய்ச்சி வடிகட்டி ஒரு பாத்திரத்திலிட்டுப் பூண்டை அதில் வேகவைத்துக் கடைந்து பனைவெல்லத்தைப் போட்டு பாகுபதம் வரும்வரை காய்ச்சி, அபினியைப் பாலில் கரைத்தும் மற்றவைகளைச் சூரணம் செய்தும் அதில் போட்டுக் கிண்டி போதிய அளவு நெய் தேன் இரண்டையும் விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 கழற்சிக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: மூலம், மூலக்கிராணி, உஷ்ணபேதி முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கி உணவு உட்கொள்ளவும். பாசிப்பருப்பு, கத்திரிப்பிஞ்சு, வெள்ளாட்டு

வற்றல், முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு,காராக்கருணை, மோர், தயிர், பால், நெய் முதலியவை சேர்த்துக்கொள்ளவும்.

16. கண்டங்கத்திரி லேகியம்

1. கண்டங்கத்திரிச்சாறு	200 மில்லி
2. கருந்துளசிச்சாறு	100 மில்லி
3. ஆடாதொடைச்சாறு	100 மில்லி
4. தூதுவளைச்சாறு	,,
5. சுக்கு	3½ கிராம்
6. மிளகு	,,
7. திப்பிலி	,,
8.கடுக்காய்த்தோல்	,,
9. நெல்லிவற்றல்	,,
10.கிராம்பு	,,
11. இலவங்கப்பட்டை	,,
12. ஏலம்	,,
13. சாதிப்பத்திரி	,,
14. சிற்றரத்தை	,,
15. பேரரத்தை	,,
16. அதிமதுரம்	,,
17. தாளிசப்பத்திரி	,,
18. சாதிக்காய்	,,

மேற்கூறப்பெற்ற 5 முதல் 18 வரையிலுள்ள சரக்குகளைச் சூரணம்செய்து, 500 கிராம் கற்கண்டை 2 லிட்டர் பசும்பாலில் கரைத்து மேற்படிச் சாறுகளையும், சேர்த்து, அடுப்பிலேற்றி சிறுதீயிட்டுப் பாகுபதத்தில் மேற்படி சூரணத்தைத் தூவி, லேகிய பதத்தில் கிளறி போதிய அளவு தேன் நெய்விட்டு, பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 சுண்டைக்காய். (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: கபநோய்கள் யாவும் குணமடையும்.

17. கரிப்பான் லேகியம்

1. கையாந்தகரைச்சாறு	200 மில்லி
2. குப்பைமேனிச்சாறு	,,
3. நீர் முள்ளிச்சாறு	,,
4. காட்டுமல்லிகைச்சாறு	,,
5. காட்டாமணக்குச்சாறு	,,
6. பிரம்மிச்சாறு	,,
7. ஆடாதொடைச்சாறு	,,
8. பொடுதலைச்சாறு	,,
9. முசுமுசுக்கைச்சாறு	,,
10. நொச்சிச்சாறு	,,
11. எலுமிச்சம்பழச்சாறு	,,

இவைகளை ஒன்றுபடக் கலந்து ஒரு புதுச்சட்டியில் ஊற்றி அடுப்பின் மேலேற்றி எரித்துக் குழம்பாகும்போது,

1. திப்பிலி	17½ கிராம்
2. சுக்கு	,,
3. மிளகு	,,
4. செவ்வியம்	3½ கிராம்
5. சாதிக்காய்	,,
6. கிராம்பு	,,
7. குரோசாணி ஓமம்	,,
8. அதிமதுரம்	,,
9. கோட்டம்	,,
10. ஓமம்	,,
11. கடுகுரோகிணி	,,
12. பெருங்காயம்	,,
13. சுத்தி செய்த இரும்புத்தூள்	35 கிராம்
14. கடுக்காய்த்தோல்	70 கிராம்
15. நெல்லிவற்றல்	,,
16. சுத்தி செய்த காந்தம்	14 கிராம்
17. சுத்தி செய்த கிட்டம்	35 கிராம்
18. பேய்ப்புடல்	,,

எல்லாவற்றையும் இடித்துத் தூளாக்கி வடிகட்டி மேற்கூறிய சாறுகளில் ஏதேனும் ஒரு சாற்றைவிட்டு நன்றாக அரைத்துக் காய்ச்சி குழம்பாக்கிய சாற்றில் குழப்பி, இளம்பதமாக இருக்கும்போது தேன் 2 லிட்டர் விட்டுக் கிளறி, அதன்பின் சர்க்கரை 105 கிராம் போட்டு லேகிய பதமாக்கி இறக்கவும்.

அளவு: கொட்டைப் பாக்களவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: தேன்.

தீரும் நோய்கள்: பித்தபாண்டு, காமாலை, குன்மம், பித்தம், விடப்பாண்டு முதலான நோய்கள் தீரும்.

பத்தியம்: கசப்புப் பதார்த்தங்களையும், புளிப்புப் பதார்த்தங்களையும் நீக்கவும்.

18. காயசித்தி லேகியம்

1. சாதிக்காய்	35 கிராம்
2. ஏலரிசி	,,
3. வால் மிளகு	,,
4. இலவங்கம்	,,
5. அக்ரகாரம்	,,
6. சித்திரமூலவேர்ப்பட்டை	,,
7. அதிமதுரம்	75 கிராம்
8. பறங்கிச்சக்கை	300 கிராம்
9. கொல்லங்கோவை	35 கிராம்
10. சிவனார்வேம்பு	,,
11. வெள்ளெருக்கு	,,
12. அவுரி	35 கிராம்
13. நிலவாகை	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை உரலிலிட்டு நன்கு இடித்துத் தூள்செய்து எடுத்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும். பிறகு எலுமிச்சம்பழம் 40 எடுத்து சாறு பிழிந்து

வடிகட்டி 700 கிராம் பனைவெல்லத்தைச் சாற்றில் கரைத்து வடிகட்டி அடுப்பிலிட்டுப் பாகாகச் செய்து அதில் மேற்படி தூளைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுக் கிண்டி நெய் 500கிராம், தேன் 250 கிராம் விட்டுக் கிண்டி கோரோசனை 1பணவெடையும், குங்குமப்பூ 1 பணவெடையும் சேர்த்துக் கிண்டி இறக்கிப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு: கழற்சிக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: இரத்தத்தைச் சுத்தப்படுத்தி எந்தவித நோயும் வரவிடாமல் தடுத்தாட்கொள்ளும்.

பத்தியம்: இச்சாபத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

19. குக்கில் லேகியம்

1. கெந்தகம்	175 கிராம்
2. குக்கில்	,,
3. சேங்கொட்டை	70 கிராம்
4. சீந்தில் சர்க்கரை	,,
5. கொடிவேலி	35 கிராம்
6. சுக்கு	,,
7. மிளகு	,,
8. திப்பிலி	,,
9. சீரகம்	,,
10. கருஞ்சீரகம்	,,
11. கடுக்காய்	,,
12. நெல்லிவற்றல்	,,
13. தான்றிக்காய்	,,
14. தக்கோலம்	,,
15. மல்லி	,,
16. கோட்டம்	,,
17. அதிமதுரம்	,,
18. குரோசாணி ஓமம்	,,
19. வாலுழுவை	,,

20. சிற்றரத்தை	35 கிராம்
21. தாளிசப்பத்திரி	,,
22. கிராம்பு	,,
23. சிறுதேக்கு	,,
24. சன்ன இலவங்கப்பட்டை	,,
25. சாதிக்காய்	,,
26. ஏலக்காய் வித்து	,,
27. வெட்பாலையரிசி	,,
28. வாய்விளங்கம்	,,
29. அமுக்கிராக்கிழங்கு	,,
30. பறங்கிச்சக்கை	,,
31. தாளிசப்பத்திரி	,,
32. சாதிப்பத்திரி	,,
33. லவங்கப்பத்திரி	,,
34. செவ்வியம்	,,
35. பிஞ்சுக்கடுக்காய்	,,
36. கடுக்காய்ப்பூ	,,
37. சிறுதேக்கு	,,
38. பூனைக்காலிவித்து	,,
39. கூகைநீர்	,,
40. அதிவிடையம்	,,
41. கோரைக்கிழங்கு	,,
42. வால்மிளகு	,,
43. ஆனைத்திப்பிலி	,,
44. நிலப்பனங்கிழங்கு	,,
45. சாரப்பருப்பு	,,
46. வாலை ரசம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் சேங்கொட்டை, கெந்தகம், இரசம் இவைகளை முறைப்படி சுத்திசெய்து குழியம்மியில் இரசத்தையும், கெந்தகத்தையும் இட்டு இரண்டும் உறவாகும்படி நன்கு நெகிழ இரண்டு மணிநேரம் அரைத்துப் பின்னர் மற்றைய சரக்குகளை நன்றாக இடித்துச் சூரணம் செய்து துணியில் வடிகட்டி மேற்படி கெந்தகத்துடன்

சேர்த்து இரண்டு நாட்கள் கலக்கும்படியாக நன்றாக அரைத்துச் சமனெடை பனைவெல்லம் கூட்டி உரலிலிட்டு பன்னிரண்டு மணி நேரத்திற்குக் குறைவில்லாமல் மருந்துகள் யாவும் உறவாகும்படி புரட்டிப் புரட்டி இடிக்கவும். லேகியப் பதம் ஆனவுடன் சேதப்படாமல் ஒரு சாடியில் பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 சுண்டைக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: திமிர் குட்டம், குழிப்புண்கள், சொறி, சிரங்கு, கண்டமாலை, பத்துகள், அரையாப்பு முதலிய மேக சம்பந்தமான நோய்கள் யாவும் குணமாகும்.

பத்தியம்: நல்லெண்ணெய் கடுகு, மஞ்சள், புளி, புகை, போகம் நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

குறிப்பு: நோயாளியின் சரீர வன்மைக்கும் நோயின் தன்மைக்கும் ஏற்ப மருந்தில் அளவைக் கூட்டியும் குறைத்தும் கொடுக்கலாம்.

20. குமரி லேகியம்

1. சோற்றுக்கற்றாழையின் சோறு	3,500 கிராம்
2. பசும்பால்	8 லிட்டர்

இவ்விரண்டையும் சேர்த்து சிறுதீயில் பால் சுண்டுமளவு எரித்து பிறகு வெய்யிலில் நன்கு உலர்த்தித் தூள்செய்து வடிகட்டிக்கொள்ளவும்.

1. சுக்கு	140 கிராம்
2. மிளகு	,,
3. திப்பிலி	,,
4. சாதிப்பத்திரி	,,
5. கிராம்பு	,,

6. ஏலம்	,,
7. வால் மிளகு	,,
8. நிலப்பனங்கிழங்கு	,,
9. வெள்ளரி விதை	,,
10. தாளிசப்பத்திரி	,,
11. இலவங்கப்பத்திரி	,,
12. சிறுநாகப்பூ	,,
13. பூனைக்காலி வித்து	,,
14. நீர்முள்ளிவித்து	,,
15. பூமிசர்க்கரைக் கிழங்கு	,,
16. சீனாக்கற்கண்டு	2.240 கி.கி.

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் 1 முதல் 15யும், வெய்யிலில் உலர்த்தி உரலிலிட்டு நன்றாக இடித்துச் சூரணம் செய்து மேற்படி தூளையும் ஒன்று சேர்த்து,

8 லிட்டர் பசும்பாலில் சீனாக்கற்கண்டைக் கரைத்து அடுப்பிலேற்றி சிறுதீயிட்டு பாகுபதத்தில் மேற்படி சூரணத்தைச் சிறிது சிறிதாகக் கிளறி லேகியப்பதத்தில் இறக்கித் தேன், நெய் விட்டுப் பிசைந்து அத்துடன்,

1. அயச்செந்தூரம்	5 கிராம்
2. தங்க பற்பம்	,,
3. இரசச்செந்தூரம்	,,

ஆகியவைகளையும் சேர்த்து நன்கு பிசைந்து பத்திரப் படுத்தவும்.

அளவு: புன்னைக்காய் அளவு (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: இருமல், காசம், குன்மம், அசீரணம், மேகம், சுரம், பித்த நோய்கள் முதலியன குணமாகித் தாது விருத்தியாகும்.

21. சஞ்சீவி லேகியம்

1. திப்பிலி	35 கிராம்
2. கஞ்சா	,,
3. மிளகு	,,
4. வெடியுப்பு	,,
5. ஓமம்	,,
6. வளையலுப்பு	,,
7. இந்துப்பு	,,
8. கல்லுப்பு	,,
9. சோற்றுப்பு	,,
10. வெங்காரம்	,,
11. நவச்சாரம்	,,
12. உழமண் உப்பு	,,
13. பெருங்காயம்	,,
14. கிராம்பு	,,
15. கோட்டம்	,,
16. சுக்கு	,,
17. உரித்த பூண்டு	350 கிராம்
18. பனைவெல்லம்	175 கிராம்
19. தேன்	350 கிராம்

மேற்கூறப்பெற்ற பதினாறு சரக்குகளையும் இடித்துச் சூரணம் செய்துகொண்டு உரித்த பூண்டைப் பசும்பால் விட்டு நன்கு நெகிழ அரைத்து வைத்துக்கொண்டு லேகியப் பாத்திரத்தில் பனைவெல்லத்தைத் தூள்செய்து போட்டு போதிய அளவு தண்ணீர்விட்டு அடுப்பிலேற்றி சிறுதீயிட்டு அரைத்த பூண்டை அதில் கரைத்து பாகுபதத்தில் மேற்படி சூரணத்தை விட்டுக்கிளறி லேகியபதம் ஆனவுடன் இறக்கி போதிய அளவு தேன் விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 சுண்டைக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: பெண்களுக்கு மாதவிலக்குக் காலங்களில் வலி, குன்ம வயிற்றுவலி, பித்த வாய்வு, மந்தம்,

அசீரணம் முதலியவைகளைப் போக்கிப் பசியை அதிகரிக்கச் செய்யும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

22. சந்தான லேகியம்

1. தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு	2 லிட்டர்
2. அமுக்கிராக்கிழங்குச்சாறு	,,
3. நிலப்பனங்கிழங்குச்சாறு	,,
4. கல்யாண பூசனிக்காய்ச்சாறு	,,
5. நெல்லிக்காய்ச்சாறு	,,
6. உளுந்து, பூனைக்காலி வித்து வகைக்கு 200கிராம் எடுத்து நன்கு இடித்து 8 லிட்டர் தண்ணீர்விட்டு எட்டில் ஒன்றாகக் குடிநீரிட்டு வடிகட்டி எடுத்த நீர்	1 லிட்டர்
7. 100 பேயன் வாழைப்பழத்தைப் பிழிந்தெடுத்த நீர்	1 லிட்டர்

ஆகியவைகளைத் தனித்து எடுத்து வைத்துக்கொண்டு

1. ஏலரிசி	70கிராம்
2. இலவங்கப்பத்திரி	,,
3. கிராம்பு	,,
4. அதிமதுரம்	,,
5. திராட்சை	,,
6. இலுப்பைப்பூ	,,
7. ஓரிதழ்த்தாமரை	,,
8. நீர்முள்ளிவிதை	,,
9. கொடிப்பாளை விதை	,,
10. சீந்தில் சர்க்கரை	,,
11. திப்பிலி	35கிராம்
12. சுக்கு	,,

மேற்கூறப்பெற்ற 12 சரக்குகளையும் சூரணம் செய்து ஒன்று கலந்து வைத்துக்கொள்ளவும்.

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் முதலில் உள்ள 7சாறுகளையும் லேகிய பாத்திரத்திலிட்டு 1500 கிராம் வெல்லத்தைக் கரைத்து அடுப்பேற்றிச் சிறுதீயிட்டு தந்து பதம் வரும் வரைக் காய்ச்சி அதனில் சூரணங்களைச் சிறிது சிறிதாகப் போட்டுக் கிளறி லேகியப்பதத்தில் வரும்போது நெய், தேன் இரண்டும் வேண்டிய அளவு விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 கழற்சிக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: தாது விருத்தியாகி குழந்தைப்பேறு ஏற்படும். மேலும், இரத்த பித்த நோய்கள், எலும்புருக்கி நோய், பெரும்பாடு, காமாலை, வறட்சி, இருமல், மேகம் முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: கோழிக்கறி, நல்லெண்ணெய் 6 மாத காலத்திற்கு சேர்க்கக்கூடாது.

23. சண்டமாருத லேகியம்

1. கடுக்காய்த்தூள்	500 கிராம்
2. மிளகு	35 கிராம்
3. இந்துப்பு	,,
4. திப்பிலி	175 கிராம்
5. திப்பிலி மூலம்	,,
6. செவ்வியம்	,,
7. சித்திரமூலம்	,,
8. அரத்தை	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளை 4 லிட்டர் காடியில் 3 நாட்கள் ஊறவைத்து வெய்யிலில் உலர்த்தி நன்கு தூள் செய்து வடிகட்டி எடுத்து 2 லிட்டர் பசுவின் மோர்விட்டு அடுப்பில் வைத்து சிறு தீயிட்டு மோர் சுண்டும் வரையில் காய்ச்சி உலர்த்தித் தூள்செய்து வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

1. பழச்சாறு	200 மில்லி
2. தூதுவளைச்சாறு	,,
3. நுணாச்சாறு	,,
4. மணித்தக்காளிச்சாறு	,,
5. ஆடாதொடைச்சாறு	500 மில்லி
6. பசும்பால்	1000 மில்லி
7. வெல்லம்	500 மில்லி

மேற்கூறப்பெற்ற சாறுகளையும், பாலையும் லேகிய பாத்திரத்திலிட்டு வெல்லத்தைக் கரைத்து அடுப்பிலேற்றிச் சிறுதீயிட்டு பாகுபதம் வரும்வரை எரித்து முன்பு இடித்து வடிகட்டி வைத்துள்ள சூரணத்தைச் சிறிது சிறிதாகத் தூவிக் கிண்டி லேகிய பதத்தில் இறக்கி போதிய அளவு தேன், நெய் இவைகளை விட்டு பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 சுண்டைக்காய் அளவு. (காலை, மாலை இரவேளை)

தீரும் நோய்கள்: காசம், கபம், இருமல் முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும். உப்பை வறுத்துச் சேர்த்துக் கொள்ளவும்.

24. சாலாமிசிரி லேகியம்

1. பாதாம் பருப்பு	140 கிராம்
2. ஏலம்	7 கிராம்
3. சாதிக்காய்	,,
4. இலவங்கம்	,,
5. சாதிப்பத்திரி	,,
6. வால்மிளகு	,,
7. கசகசா	70 கிராம்
8. சாலாமிசிரி	,,
9. நீர்முள்ளி வித்து	17½ கிராம்
10. பூனைக்காலி வித்து	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து பசும்பாலில் ஊறவைத்து எடுத்துப் பசும்பால் விட்டு அம்மியில் வைத்து நன்கு நெகிழ மைபோல் அரைத்து 4லிட்டர் பசும்பாலில் நன்கு கரைத்து கற்கண்டுத்தூள் 350 கிராம் சேர்த்து லேகிய பாத்திரத்தில் விட்டு அடுப்பேற்றி ஒரே சீறாக சிறு தீயிட்டு லேகியப்பதம் வரும்வரை கிளறி இறக்கிப் போதிய அளவு தேன், நெய் விட்டுப் பிசைந்து குங்குமப்பூ 2கிராம், கஸ்தூரி 1 கிராம் சேர்த்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 நெல்லிக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: இதனைத் தினமும் உட்கொண்டு வந்தால் தாது பலமடைந்து, விந்துகட்டி, போகத்தில் அளவு கடந்த சக்தியை உண்டாக்கும்.

25. சிவதை லேகியம்

1. சிவதைச்சூரணம்	350 கிராம்
2. கோரைக்கிழங்குச் சூரணம்	105 கிராம்
3. சுக்குச்சூரணம்	7 கிராம்
4. மிளகுச்சூரணம்	,,
5. திப்பிலிச் சூரணம்	,,
6. நெல்லிவற்றல் சூரணம்	,,
7. கடுக்காய்த்தோல் சூரணம்	,,
8. தான்றிக்காய் சூரணம்	,,
9. இந்துப்பு	,,
10. ஓம சூரணம்	,,
11. கடுகுரோகிணிச் சூரணம்	,,
12. வாய்விளங்கச் சூரணம்	,,
13. அதிவிடையச்சூரணம்	,,
14. மாசிக்காய்ச் சூரணம்	,,
15. பனைவெல்லம்	200 கிராம்

மேற்கூறிய பனைவெல்லத்தை லேகிய பாத்திரத்தில் இட்டு சிறிது தண்ணீர் சேர்த்து அடுப்பிலேற்றி சிறு தீயிட்டு பாகுபதத்தில் சூரணத்தை சிறிதாகத் தூவி கிளறி லேகிய பதத்தில் ஒரு லிட்டர் ஆமணக்கு நெய்யும், போதிய அளவு தேனும் விட்டு நன்கு பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் ஒரு நெல்லிக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: வாயு, வயிற்றுவலி, வாதம், குன்மம், அக்கினிமந்தம், முடி உதிர்தல், பித்தம், அண்டவாயு, மலக்கட்டு, நீர்க்கட்டு முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

26. சிற்றரத்தை லேகியம்

1. சிற்றரத்தை	1000 கிராம்
2. பேரரத்தை	500 கிராம்
3. கொடிவேலி வேர்ப்பட்டை	500 கிராம்
4. செவ்வியம்	1000 கிராம்
5. மிளகு	100 கிராம்
6. திப்பிலி	50 கிராம்
7. சிறுதேக்கு	,,
8. சிற்றாமுட்டி	,,
9. பேராமுட்டி	,,
10. இலவங்கப்பட்டை	,,
11. அகிற்பட்டை	,,
12. செம்முள்ளிவேர்	,,
13. ஆடாதொடைவேர்	,,
14. நெருஞ்சில்வேர்	,,
15. வெள்ளைச் சங்கங்குப்பி	,,
16. கருப்பு சங்கங்குப்பி	,,
17. பிரண்டைவேர்	,,
18. சிறுகாஞ்சூரிவேர்	,,

19. நீலிவேர்	50 கிராம்
20. முட்காவேளைவேர்	,,
21. சாட்டரணைவேர்	,,
22. நாரத்தம் இலை	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை உரலிலிட்டு நன்றாக இடித்துத் தூள்செய்து பானையில் போட்டு 40 லிட்டர் தண்ணீர்விட்டு அடுப்பில் வைத்து 4 லிட்டர் தண்ணீராக வற்றும்படி சுண்டக்காய்ச்சி வடித்து இறக்கி 3 கிலோ பழைய நல்ல வெல்லம் சேர்த்து அடுப்பிலிட்டுக் காய்ச்சி வைத்துக் கொள்ளவும்.

1. சுக்கு	175 கிராம்
2. மிளகு	,,
3. திப்பிலி	,,
4. யானைத்திப்பிலி	,,
5. திப்பிலி மூலம்	,,
6. அதிவிடையம்	,,
7. சிறுதேக்கு	,,
8. வாய்விளங்கம்	,,
9. இலவங்கம்	,,
10. கர்க்கடக சிங்கி	,,
11, மெருகன் கிழங்கு	,,
12. பூலாங்கிழங்கு	,,
13. சிறுநாகப்பூ	,,
14. தக்கோலம்	,,
15. கொத்தமல்லி	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை இடித்துத் தூள் செய்து வடிகட்டி எடுத்து மேற்படிப் பாகில் போட்டுக் கிண்டி லேகிய பதத்தில் இறக்கி,

1. இரசச்செந்தூரம்	35 கிராம்
2. லோகச்செந்தூரம்	,,
3. வெங்காரப்பொடி	20 கிராம்

பொடிசெய்து போட்டு தேன் 4 லிட்டர் விட்டு நன்கு செந்தூரங்களை உறவாகும்படி கிண்டி வைத்துக்கொள்ளவும்.

அளவு: கழற்சிக் கொட்டையளவு. (காலை,மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: இருபதுவகை கபநோய்கள், சுவாசகாசம், காசம், பசியின்மை, மலபந்தம், வாந்தி, மார்புவலி, விக்கல், தலைவலி, பீனிசம், வாயு நோய்கள், தோலைப்பற்றிய நோய்கள் ஆகியவற்றைக் குணப்படுத்தும்.

குறிப்பு: இதைக் கற்ப மருந்தாகவும் தொடர்ந்து இரண்டு மண்டலங்கள் உட்கொண்டு வந்தால் காயசித்தியாகும்.

27. தண்ணீர்விட்டான் கிழங்கு லேகியம்

1. தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு	6 லிட்டர்
2. குழிமீட்டான் கிழங்குச்சாறு	500 மில்லி
3. நெல்லிக்காய்ச்சாறு	,,
4. வெண்பூசணிக்காய்ச்சாறு	,,
5. கரும்புச்சாறு	,,
6. சுக்கு	3½ கிராம்
7. மிளகு	,,
8. திப்பிலி	,,
9. கடுக்காய்த்தோல்	,,
10. நெல்லிவற்றல்	,,
11. தான்றிக்காய்	,,
12. வெட்பாலை அரிசி	,,
13. கொத்தமல்லி	,,
14. ஏலம்	,,
15. இலவங்கம்	,,
16. இலவங்கப்பத்திரி	,,
17. சிறுநாகப்பூ	,,
18. சீரகம்	,,
19. விலாமிச்சம்வேர்	,,

20. அதிமதுரம்	3½ கிராம்
21. பேரீச்சங்காய்	,,
22. இந்துப்பு	,,
23. ஓமம்	,,
24. சிறுதேக்கு	,,
25. கோட்டம்	,,
26. சந்தனத்தூள்	,,
27. அரசம்விதை	,,
28. அத்தி விதை	,,
29. ஆலம்விதை	,,
30. நிலப்பனங்கிழங்கு	,,
31. சாதிக்காய்	,,
32. சாதிப்பத்திரி	,,
33. மஞ்சள்	,,
34. மரமஞ்சள்	,,

மேற்கூறப்பெற்ற 34 சரக்குகளையும் வெய்யிலில் உலர்த்தி உரலில் இட்டு இடித்து, தூள்செய்து வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

மேற்கூறப்பெற்ற சாறுகளை லேகியப் பாத்திரத்தில் இட்டு 250 கிராம் வெள்ளைக் கற்கண்டுத் தூளைக் கரைத்து, அடுப்பிலேற்றிச் சிறு தீயிட்டு பாகுபதம் வரும்வரை கிண்டி மேற்படி சூரணத்தைச் சிறிது சிறிதாகத் தூவி லேகியப்பதம் வரும்வரை கிளறி போதிய அளவு நெய், தேன், குங்குமப்பூ, கஸ்தூரி, கோரோசனை ஆகியவைகளைச் சேர்த்து நன்கு பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 கழற்சிக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: நீர்க்கட்டு, நீர் எரிச்சல், எலும்புருக்கி, மேகசுரம், உடல் வற்றல், நா உலர்தல், கைகால் எரிச்சல், மேககாங்கை முதலியவை நீங்கி சரீரம் வன்மையுறும். தாது இறுகும்.

28. திப்பிலி லேகியம்

1. திப்பிலி	280 கிராம்
2. மிளகு	35 கிராம்
3. சுக்கு	,,
4. வாய் விளங்கம்	,,
5. அரத்தை	,,
6. உலர்ந்த கையாந்தகரை	,,

மேற்கூறப்பெற்றவைகளை இடித்துத் தூள்செய்து வடிகட்டி லோகச்செந்தூரம் 35 கிராம் சேர்த்து 350 கிராம் நல்ல வெல்லத்தைப் பாகு செய்து அதில் சிறுகச் சிறுகப் போட்டுக் கிளறி லேகிய பதத்தில் இறக்கி தேன் 500 கிராம் விட்டு நன்கு நெகிழ அரைத்து எடுத்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: சுண்டைக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: வாயு, இளைப்பு, காசநோய் முதலியன குணமாகும்.

29. திரிபலாதி லேகியம்

1. கடுக்காய்த்தோல்	35 கிராம்
2. நெல்லிவற்றல்	,,
3. தான்றிக்காய்	,,
4. கடுகுரோகிணி	,,
5. வாய்விளங்கம்	,,
6. சிவதைவேர்	,,
7. ரேவல்சின்னிக்கிழங்கு	,,
8. ரோஜா மொக்கு	,,
9. நாட்டுநில ஆவாரை	,,
10. இலவங்கம்	9 கிராம்
11. ஏலரிசி	,,
12. சோம்பு	,,
13. மூக்கரட்டைவேர்	245 கிராம்
14. வெல்லம்	700 கிராம்

மேற்கூறப்பெற்ற 13 சரக்குகளையும் வெய்யிலில் உலர்த்தி உரலிலிட்டு இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு வெல்லத்தைப் பாகு செய்து அதில் மேற்படி சூரணத்தைப் போட்டுக் கிளறி வேண்டுமளவு தேன், நெய் இரண்டும் கலந்து பிசைந்து வைத்துக்கொள்க.

அளவு: *1 முதல் 2 தேத்தான் விதைப் பிரமாணம்.* *(காலை, மாலை இருவேளை)*

தீரும் நோய்கள்: வீக்கம், நீர்ச்சுரப்பு, சோகை, காமாலை, மகோதரம் முதலிய நோய்கள் குணமாகும்.

30. தும்மட்டிக்காய் லேகியம்

தும்மட்டிக்காய்ச்சாறு	1 லிட்டர்
பிரண்டைச்சாறு	,,
1. சுக்கு	5 கிராம்
2. மிளகு	,,
3. திப்பிலி	,,
4. சீரகம்	10 கிராம்
5. பூண்டு (உரித்தது)	250 கிராம்
6. கருஞ்சீரகம்	9 கிராம்
7. இந்துப்பு	,,
8. வளையலுப்பு	,,
9. மூங்கிலுப்பு	,,
10. கறியுப்பு	,,
11. சவட்டுப்பு	,,
12. பாறையுப்பு	,,
13. அமுரியுப்பு	,,
14. பனைவெல்லம்	500 கிராம்

மேற்கூறப்பெற்ற சாறுகள் இரண்டுடன் வெல்லத்தை கரைத்து வாணலிலிட்டு பாகுபதம் வருமளவும் கிண்டி உப்பு சேர்த்துக் கிண்டி பருவத்தில் தேன்விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: சுண்டைக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: எண்வகைக் குன்மம், குடலில் உள்ள வாயு, மகோதரம், பெருவயிறு, அக்கினி மந்தம், கபநோய் முதலியன குணமாகும்.

31. தேற்றான்கொட்டை லேகியம்

தேற்றான் விதை 500 கிராம்

இதைத் தண்ணீரில் ஒருநாள் ஊறவைத்து நன்கு தேய்த்துக் கழுவி மேல் தோலைப் போக்கிக் கழுவிக் காயவைத்து இதனுடன்,

1. சுக்கு	70 கிராம்
2. மிளகு	,,
3. திப்பிலி	,,
4. அரத்தை	,,
5. கடுக்காய்	,,
6. நெல்லிக்காய்	,,
7. தான்றிக்காய்	,,
8. சீரகம்	,,
9. அமுக்கிராக்கிழங்கு	,,

ஆகியவைகளை உரலிலிட்டு நன்கு இடித்துத் தூள்செய்து வடிகட்டி வைத்துக்கொண்டு,

பசும்பால் 4 லிட்டர் பனைவெல்லம் 1000 கிராம்

பாலில் பனைவெல்லத்தைக் கரைத்து வடிகட்டி சட்டியிலிட்டு அடுப்பிலேற்றி பாகுபதத்தில் மேற்கூறிய மருந்து தூளை சேர்த்துக் கிளறி பருவத்தில் போதிய அளவு தேன், நெய் இரண்டும் சேர்த்து கிண்டி பத்திரப்படுத்தவும்.

அளவு: கழற்சிக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பாக்களவு லேகியத்துடன் நாகபற்பம் ½குன்றியெடை வைத்து நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை 48நாட்கள் உட்கொள்ள மூலநோய் குணமாகும்.

32. நத்தை லேகியம்

1. சன்னலவங்கப்பட்டை	7கிராம்
2. சாதிப்பத்திரி	,,
3. சாதிக்காய்	,,
4. இலவங்கம்	,,
5. கசகசா	,,
6. ஏலரிசி	3½ கிராம்
7. கோரைக்கிழங்கு	14கிராம்
8. கிச்சிலிக்கிழங்கு	,,
9. நத்தை	350கிராம்
10. கற்கண்டுத்தூள்	175கிராம்

மேற்கூறப்பட்ட மருந்துகளில் நத்தையை (சதையை) அவித்து எடுத்து அம்மியில் வைத்து நன்கு நெகிழ அரைத்து எடுத்துக்கொண்டு, நத்தை அவித்த தண்ணீரில் கற்கண்டுத் தூளிட்டு அடுப்பேற்றிச் சிறுதீயிட்டு கொதி வந்தவுடன் அரைத்த நத்தையை அதில் கரைத்துப் பாகுபதத்தில் மற்றைய மருந்துகளை சூரணம் செய்து அதில் தூவிக்கிண்டி லேகிய பருவத்தில் இறக்கி சிறிது தேன்விட்டு, பச்சைக்கற்பூரம் சேர்த்து பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 புளியங்கொட்டை. (காலை,மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: நவமூலமும் குணமாகும். குறிப்பாக இரத்த மூலமும், சீழ் மூலமும், கிராணிக்கழிச்சல் முதலிய நோய்களும் 3 நாட்களில் குணமாகும்.

பத்தியம்: காரம், புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

33. நாரத்தங்காய் லேகியம்

1. நாரத்தம்பழச்சாறு	3 லிட்டர்
2. இஞ்சிச்சாறு	,,
3. மூக்கரைச்சாரணைவேர்	8 லிட்டர்
4. சுக்கு	17½ கிராம்
5. மிளகு	,,
6. திப்பிலி	,,
7. அதிமதுரம்	,,
8. ஏலம்	,,
9. தேசாவரம்	,,
10 கோட்டம்	,,
11. சிற்றரத்தை	,,
12. மல்லி	,,
13. தாளிசப்பத்திரி	,,
14. அதிவிடையம்	,,
15. அக்ரகாரம்	,,
16. வால்மிளகு	,,
17. சிறுநாகப்பூ	,,
18. சாதிக்காய்	,,
19. சாதிப்பத்திரி	,,
20 கிராம்பு	,,
21. நெல்லிவற்றல்	,,
22. கடுக்காய்த்தோல்	,,
23. தான்றிக்காய்	,,
24. குரோசாணி ஓமம்	,,
25. சந்தனத்தூள்	,,
26. கருஞ்சீரகம்	,,

மேற்கூறப்பெற்றவைகளில் 4 முதல் 26 வரையிலுள்ள வைகளை நன்கு இடித்துச் சூரணம் செய்துகொண்டு 750 கிராம் பனைவெல்லத்தை மேற்படி சாற்றில் கரைத்து லேகியப் பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி சிறுதீயிட்டு பாகுபதமாக்கி, சூரணத்தை அதில் தூவி லேகிய பதம் வரும்வரைக் கிளறி

போதிய அளவு நெய்விட்டுக் கிண்டி இறக்கி தேன்விட்டு பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 சுண்டைக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: நெஞ்செரிவு, பசியின்மை, வாந்தி, தாகம், வாதபித்த கிறுகிறுப்பு, வாயு, தலைவலி, அக்கினி மந்தம், மலக்கட்டு, காந்தல் இடைவிடாத ஏப்பம் முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி, புளித்தமோர் நீக்கி உணவு உட் கொள்ளவும்.

34. நெல்லிக்காய் லேகியம்

1. நெல்லிக்காய்ச்சாறு	4 லிட்டர்
2. இஞ்சிச்சாறு	500 மில்லி
3. இளநீர்	1 லிட்டர்
4. பசும்பால்	2 லிட்டர்
5. சிற்றாமுட்டிக்குடிநீர்	500 மில்லி
6. சுக்கு	35 கிராம்
7. கண்டத்திப்பிலி	,,
8. கருஞ்சீரகம்	,,
9. அதிமதுரம்	,,
10. சீரகம்	,,
11. சாதிக்காய்	,,
12. சாதிப்பத்திரி	,,
13. தான்றிக்காய்	,,
14. கடுக்காய்த்தூள்	,,
15. உலர்ந்த இலுப்பைப்பூ	7 கிராம்
16. மல்லி	,,
17. சன்ன இலவங்கப்பட்டை	,,
18. வெட்பாலை அரிசி	,,
19. கோட்டம்	,,

20. தாளிசப்பத்திரி	,,
21. சதகுப்பை	,,
22. இலவங்கப்பத்திரி	,,
23. அமுக்கிராக்கிழங்கு	,,
24. ஆடுதீண்டாப்பாலைவிதை	,,
25. சிறுதேக்கு	,,
26. ஆனைத்திப்பிலி	,,
27. கற்கடகசிங்கி	,,
28. கூகைநீர்	,,
29. குரோசாணி ஓமம்	,,
30. வளையல் உப்பு	,,
31. இந்துப்பு	,,
32. பெருங்காயம்	,,
33. பெருங்குறும்பை	3½ கிராம்
34. வலம்புரிக்காய்	,,
35. கஸ்தூரி மஞ்சள்	,,

மேற்கூறிய மருந்துகளில் 6 முதல் 35 வரையிலுள்ள வற்றை வெய்யிலில் உலர்த்தி நெய்விட்டுப் பொன்னிறமாக வறுத்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்ளவும். பிறகு லேகிய பாத்திரத்தில் ஒரு கிலோ கற்கண்டுத் தூளிட்டு மேற்படி சாறுகளைச் சேர்த்து அடுப்பிலேற்றி சிறு தீயிட்டு பாகுபதத்தில், மேற்படி சூரணத்தைத் தூவி லேகிய பதத்தில் இறக்கி, போதிய அளவு தேன், நெய் விட்டுப் பிசைந்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 சுண்டைக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: பித்தம், பித்தவாயு, இருமல், நாவறட்சி, உட்சூடு, அக்கினி மந்தம், கை, கால், உடம்பு எரிச்சல், காமாலை, சோகை, கிறுகிறுப்பு, நெஞ்சுத்துடிப்பு, அடைப்பு, நீர்த்தாரை எரிச்சல், மேகம், வெள்ளை, வெட்டை முதலிய நோய்கள் பகலவனைக் கண்ட பனிபோல் விலகும்.

35. பறங்கிப்பட்டை லேகியம்

1. கடுக்காய்த்தூள்	10¼ கிராம்
2. தான்றிக்காய்	,,
3. நெல்லிவற்றல்	,,
4. சுக்கு	,,
5. மிளகு	,,
6. திப்பிலி	,,
7. வாய்விளங்கம்	,,
8. சிற்றரத்தை	,,
9. சிறுதேக்கு	,,
10. இலவங்கப்பட்டை	,,
11. ஏலக்காய்	,,
12. இலவங்கப்பத்திரி	,,
13. ஓமம்	,,
14. குரோசாணி ஓமம்	,,
15. கொடிவேலி	,,
16. சடாமாஞ்சில்	,,
17. அதிமதுரம்	,,
18. கற்கடகசிங்கி	,,
19. நன்னாரிவேர்	,,
20. நிலப்பனங்கிழங்கு	,,
21. அமுக்கிராக்கிழங்கு	,,
22. பறங்கிப்பட்டை	245 கிராம்
23. சர்க்கரை	420 கிராம்
24. நெய்	,,
25. தேன்	,,

மேற்கூறப்பெற்ற 1 முதல் 22 சரக்குகளையும் வெய்யிலில் உலர்த்தி, சிறிது நெய்விட்டு பொன்மேனியாக வறுத்து, உரலிலிட்டு இடித்து வடிகட்டி வைத்துக்கொண்டு சர்க்கரையை லேகிய பாத்திரத்தில் இட்டு போதிய அளவு தண்ணீர்விட்டு, அடுப்பிலேற்றி சிறு தீயிட்டு, பாகுசெய்து பிறகு மேற்படி சூரணத்தைச் சிறிது சிறிதாகத் தூவி கிளறி

லேகியப்பருவத்தில் நெய்யையும் தேனையும் விட்டு நன்கு பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 தேத்தான் விதை அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: விந்து நட்டம், பிளவை, நீரிழிவு, கடிவிடம், சிரங்கு, மேக ஊறல், மேக காங்கை, தடிப்பு, மேகவாயு முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கி உணவு உட்கொள்ளவும்.

36. பிரண்டை லேகியம்

1. பிரண்டை	350 கிராம்
2. புளிநரளை	,,
3. மருள்வேர்	,,
4. நாயுருவி வேர்	,,
5. காட்டுக்கருணை	,,
6. கருணை	,,
7. சுக்கு	,,
8. ஏலம்	,,
9. கோட்டம்	,,
10. இலவங்கப்பட்டை	,,
11. இலவங்கப்பத்திரி	,,
12. சிறுநாகப்பூ	,,
13. சீரகம்	,,
14. கருஞ்சீரகம்	,,
15. வாய்விளங்கம்	,,
16. நிலப்பனம் கிழங்கு	,,
17. யானைத்திப்பிலி	,,
18. கோரைக்கிழங்கு	,,
19. நீர்பிரம்மி	,,
20. கடுக்காய்த்தோல்	250 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் 1 முதல் 6 வரையிலுள்ள வற்றை ஒன்று இரண்டாகச் சிதைத்து ஒரு பானையில் போட்டு 10 லிட்டர் தண்ணீர் ஊற்றி 8ல் ஒரு பங்காக காய்ச்சி வடிகட்டி வைக்கவும்.

பிறகு 8 முதல் 20 வரையுள்ள சரக்குகளை நெய்விட்டு பொன்மேனியாக வறுத்துச் சூரணம் செய்து வைத்துக் கொள்ளவும்.

மேற்கூறிய குடிநீரில் 750 கிராம் பனைவெல்லத்தைக் கரைத்து லேகிய பாத்திரத்திலிட்டு அடுப்பில் ஏற்றிச் சிறு தீயிட்டு பாகுபதம் வரும்வரை எரித்துச் சூரணத்தைச் சிறிது சிறிதாகத் தூவி, கிளறி, லேகிய பக்குவமாக இறக்கி 1 கிலோ தேன் விட்டு பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 3 முதல் 5 கிராம். (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: குன்மம், சூலை, மூலம், வயிற்றுக் கட்டிகள், பாண்டு, மகோதரம் முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: இச்சா பத்தியம்.

37. பூரணி லேகியம்

1. திப்பிலி மூலம்	14 கிராம்
2. சாதிக்காய்	,,
3. சண்பகப்பூ	,,
4. சுக்கு	,,
5. மிளகு	,,
6. திப்பிலி	,,
7. கற்கடகசிங்கி	,,
8. இலவங்கம்	,,
9. இந்துப்பு	,,
10. செவ்வல்லிக்கிழங்கு	,,
11. அதிமதுரம்	,,

12. சிறுதேக்கு	14 கிராம்
13. சிறுநாகப்பூ	,,
14. தேவதாரம்	,,
15. இலவங்கப்பத்திரி	,,

மேற்கூறிய 15 மருந்துகளையும் உரலிலிட்டு நன்கு இடித்துத் தூள்செய்து வடிகட்டி எடுத்து வைத்துக் கொள்ளவும்.

பின்பு முற்றின பூசணிக்காய் ஒன்றை எடுத்து அரிந்து விதையை எடுத்துவிட்டு தேங்காய்ப் பூப்போல் திருகி நீரைப் பிழிந்து எடுத்து, அதனுடன் 2 லிட்டர் பசும்பால் சேர்த்து சர்க்கரையைக் கரைத்து அடுப்பிலிட்டு சிறு தீயிட்டு பாகுபதத்தில் மேற்படி சூரணத்தைத் தூவி, லேகிய பதத்தில் தேன், நெய் விட்டுக் கிளறி இறக்கிப் பத்திரப்படுத்தவும்.

அளவு: கழற்சிக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: கபம், இருமல், எண்வகைக் குன்மம், காசநோய், இரத்தகுன்மம் முதலிய நோய்களைக் குணப்படுத்தும்.

பத்தியம்: புளியைத் தவிர்க்கவும். பால், நெய் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளவும்.

38. பெருங்காய லேகியம்

1. பெருங்காயம்	17½ கிராம்
2. இலவங்கம்	,,
3. வால்மிளகு	,,
4. சிற்றரத்தை	,,
5. கோட்டம்	,,
6. அதிமதுரம்	,,
7. இலவங்கப்பட்டை	,,
8. இலவங்கப்பத்திரி	,,

9. ஏலரிசி	17½ கிராம்
10. செவ்வியம்	,,
11. சிறுதேக்கு	,,
12. சடாமாஞ்சில்	,,
13. வாய்விளங்கம்	,,
14. கருஞ்சீரகம்	,,
15. சோம்பு	,,
16. சதகுப்பை	,,
17. நிலவாகை	,,
18. சுக்கு	9 கிராம்
19. மிளகு	,,
20. திப்பிலி	,,
21. தாளிசபத்திரி	,,
22. கசகசா	,,
23. பறங்கிப்பட்டை	35 கிராம்
24. ஓமம்	87½ கிராம்
25. சாதிக்காய்	9 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளைத் தனித்தனியாகப் பொன்வறுவலாக வறுத்து உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி வைத்துக்கொண்டு, பனைவெல்லம் 2 கிலோவில் தண்ணீர் விட்டுக் கொதிக்கவைத்து வெல்லம் நன்கு கரைந்தபின் வடித்து மறு பாண்டத்திலிட்டு சிறு தீயாக எரித்து தந்து பதத்தில் இடித்த தூளைச் சிறிது சிறிதாகத்தூவிக் கிண்டி போதிய அளவு தேன், நெய் இரண்டும் விட்டுக் கிளறி இறக்கிப் பத்திரப்படுத்தவும்.

அளவு: கழற்சிக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: பிரசவித்த பெண்களுக்கு உதிரச்சிக்கல் இருக்குமானால் அதனை வெளிப்படுத்தி சீதள சம்பந்தமான வியாதிகளனைத்தையும் அணுக விடாமல் தடுக்கும். இதனை உட்கொள்ளும் பெண்களின் பாலைப் பருகும் குழந்தைகட்கு சுரம், சன்னி, இசிவு, மாந்தம் முதலிய நோய்கள் வரவிடாது.

பத்தியம்: பிரசவித்த பெண்களுக்கு உதிரச்சிக்கல் இல்லை என்று தெரிந்த பிறகே உணவு உட்கொள்ளச் செய்யவேண்டும்.

39. பேரீச்சங்காய் லேகியம்

1. பேரீச்சங்காய் (விதை நீக்கியது)	1100 கிராம்
2. சாதிக்காய்	10½ கிராம்
3. சாதிப்பத்திரி	,,
4. கிராம்பு	,,
5. கசகசா	,,
6. ஏலம்	,,
7. வால்மிளகு	,,
8. தாளிசப்பத்திரி	,,
9. சிறுநாகப்பூ	,,
10. சீரகம்	,,
11. சுக்கு	,,
12. அரத்தை	,,
13. நிலப்பனங்கிழங்கு	17½ கிராம்
14. பூமிசர்க்கரைக்கிழங்கு	,,
15. பூனைக்காலி வித்து	,,
16. முருங்கை வித்து	,,
17. முள்ளங்கி வித்து	,,
18. நீர்முள்ளிவித்து	,,
19. பாதாம்பருப்பு	,,
20. பிஸ்தாப்பருப்பு	,,
21. சாரப்பருப்பு	,,
22. அக்ரூட்	,,
23. பேதானா	,,
24. பிந்தக் பருப்பு	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் 1 முதல் 18 வரையிலுள்ளவற்றை வெய்யிலில் நன்கு உலர்த்தி உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி எடுத்துக்கொண்டு, 19 முதல் 24 வரையிலுள்ள பருப்புகளைப் பசும்பால்விட்டு நன்கு நெகிழ அரைத்து 8 லிட்டர் பசும்பாலில் 3 கிலோ சீனாகற்கண்டும், அரைத்த பருப்பையும் கரைத்து அடுப்பிலேற்றிச் சிறுதீயிட்டு பாகுபதத்தில் மேற்படி சூரணத்தை சிறிது, சிறிதாகத் தூவிக்கிளறி லேகிய பருவத்தில் தேன், நெய்விட்டு பிசறி அதனுடன் கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் இம்மூன்றையும் சேர்த்து நன்றாகப் பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 சுண்டைக்காய். (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: பிரமேகம், மதுமேகம், பாண்டு, குட்டம், தினவு முதலியவை குணமாகும். விந்துவைக் கட்டச்செய்யும்.

40. மதன காமேசுர லேகியம்

1. சுக்கு	70 கிராம்
2. மிளகு	,,
3. திப்பிலி	,,
4. சோம்பு	,,
5. அதிமதுரம்	,,
6. கிராம்பு	,,
7. வால்மிளகு	,,
8. யானைத்திப்பிலி	,,
9. நீர்முள்ளிவிதை	,,
10. பூனைக்காலி வித்து	,,
11. இலவங்கப்பத்திரி	,,
12. கோட்டம்	,,
13. மல்லி	,,

14. தாளிசபத்திரி 70 கிராம்
15. கருஞ்சீரகம் ,,
16. திராட்சை ,,
17. நிலப்பனங்கிழங்கு ,,
18. தக்கோலம் ,,
19. கசகசா ,,
20. சிறுநாகப்பூ ,,
21. கடுக்காய்த்தோல் ,,
22. தான்றிக்காய்த்தோல் ,,
23. நெல்லிவற்றல் ,,
24. ஏலரிசி ,,
25. சாதிக்காய் ,,
26. சாதிப்பத்திரி ,,
27. இலவங்கப்பட்டை ,,
28. அமுக்கிராக்கிழங்கு ,,
29. செண்பகப்பூ ,,
30. பாதாம்பருப்பு ,,
31. பிஸ்தா பருப்பு ,,
32. சாரப்பருப்பு ,,
33. பிந்தக் பருப்பு ,,
34. முருங்கை வித்து ,,
35. முள்ளங்கிவித்து ,,
36. தேத்தாங்கொட்டை ,,
37. இலவம்பிசின் ,,
38. பாதம்பிசின் ,,
39. முருங்கைப்பிசின் ,,
40. பேரீச்சங்காய் (விதை நீக்கியது 70 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளை உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து வடிகட்டி எடுத்துக்கொள்ளவும்.

35 கிராம் கஞ்சாவை விதை நீக்கி 7 முறை தண்ணீர் விட்டு அலம்பி 2 லிட்டர் தண்ணீரும் ½ லிட்டர் நெய்யும் விட்டு நன்றாகக் காய்ச்சி தண்ணீர் வற்றியபின் நெய்யைத் தனிப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

2 கிலோ சீனாக்கற்கண்டில் 4 லிட்டர் பசும்பாலை விட்டு தந்து பதம் வரக்காய்ச்சி மேற்கூறப்பெற்ற சூரணத்தைச் சிறிது சிறிதாகப் போட்டுக் கிளறி மேற்படி நெய்யுடன் போதிய அளவு தேன் கலந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: கழற்சிக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை) உணவு உட்கொண்ட பிறகு மருந்து சாப்பிட வேண்டும். இரவில் மருந்து உட்கொண்ட பிறகு 200 மில்லி பசும்பால் அருந்த வேண்டும்.

தீரும் நோய்கள்: மேற்கூறியவாறு 48 நாட்கள் மருந்து உட்கொண்டால் ஈளை, இருமல், இளைப்பு, அக்கினிமந்தம், நெடுநாள் சுரம், மதுமேகம், மேகம், நீர் எரிச்சல் முதலிய நோய்கள் நீங்கி வீரிய விருத்தியையும், அழகையும் உண்டாக்கும்.

பத்தியம்: சத்துள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும்.

41. மதுமேக லேகியம்

1. எள்ளுப்பிண்ணாக்கு	17½ கிராம்
2. ஆவாரம்பட்டை	,,
3. பருத்திப்பருப்பு	42 கிராம்
4. வால்மிளகு	21 கிராம்
5. இலவங்கப்பட்டை	,,

6. மாசிக்காய்	10½ கிராம்
7. சிறுநாகப்பூ	,,
8. பறங்கிப்பட்டை	21 கிராம்
9. பசுவின்பால்	140 மிலி.
10. நல்லெண்ணெய்	,,
11. பழையவெல்லம்	262½ கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளைச் சூரணித்துப் போதிய அளவு பால்விட்டு அரைத்துக்கொள்க. பால் மிகுந்திருப்பின் அதனோடு தண்ணீர் கலந்து வெல்லத்தை அதில் கரைத்து வடிகட்டி தந்து பதம் வரும்வரை காய்ச்சி முன் சுத்தப் படுத்தியதைப் போட்டுக் கிளறி லேகிய பதத்தில் இறக்கி நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்துக.

அளவு: வேளைக்கு 5 கிராம் வீதம் தினம் இருவேளை சாப்பிடவும்.

தீரும் நோய்கள்: வெகு மூத்திரம், மதுமேகம், இந்திரிய நட்டம் முதலிய பிணிகள் தீரும்.

பத்தியம்: இச்சா பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

42. மன்மத சிந்தாமணி லேகியம்

1. சாம்பிராணி	70 கிராம்
2. சன்ன இலவங்கப்பட்டை	,,
3. பூனைக்ககாலி வித்து	,,
4. பூனைக்காலி மருந்து	,,
5. நிலப்பனங்கிழங்கு	,,
6. பூமிசர்க்கரைக்கிழங்கு	,,
7. முருங்கை வித்து	,,
8. முருங்கைப்பூ (நிழலில் உலர்த்தியது)	,,

9. நாகணம்	7 கிராம்
10. கஞ்சா	140 கிராம்

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் 1 முதல் 8 வரையிலுள்ள வற்றை இடித்துத் தூள்செய்து வடிகட்டி நாகணத்தைப் பசும் நெய்விட்டு பொன் மேனியாக வறுத்து இறுத்து வடிகட்டி, வடிகட்டிய சூரணத்துடன் சேர்த்துக்கொள்ளவும்.

கஞ்சாவைத் தண்ணீரில் நன்றாக கசக்கிக் கழுவி எடுத்து 4 லிட்டர் பசும்பாலில் போட்டுக் காய்ச்சி பிறைகுத்தி மறுநாள் கடைந்து வரும் வெண்ணெயை எடுத்து, காய்ச்சி நெய்யாக உருக்கி வைத்துக்கொள்ளவும்.

பின்பு 2 லிட்டர் பசும்பாலில் 1 கிலோ வெள்ளைக் கற்கண்டுத் தூளைக் கரைத்து லேகிய பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி சிறு தீயிட்டு பாகு பதத்தில் மேற்படி சூரணத்தைத் தூவிக் கிளறி லேகிய பதத்தில் இறக்கி முன்பு உருக்கி வைத்த நெய்யும், தேவையான அளவு தேனும் விட்டுப் பிசறி பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 கழற்சிக்காயளவு. (காலை,மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: நரம்புத் தளர்ச்சியைப் போக்கி, விந்துவை அதிகரிக்கச் செய்து போக உணர்ச்சியையும் ஊக்குவிக்கும்.

43. மிளகு லேகியம்

1. மிளகு	35 கிராம்
2. சாதிக்காய்	7 கிராம்
3. சாதிப்பத்திரி	,,
4. கசகசா	,,
5. கண்டத்திப்பிலி	,,

6. பால்பெருங்காயம்	7 கிராம்
7. இலவங்கம்	,,
8. இலவங்கப்பட்டை	,,
9. இந்துப்பு	,,
10. சிறுநாகப்பூ	,,
11. அதிமதுரம்	,,
12. ஏலம்	,,
13. வெள்ளைக்கற்கண்டு	350 கிராம்
14. பசும்பால்	1 லிட்டர்

மேற்கூறப்பெற்ற 12 சரக்குகளையும் இடித்துச் சூரணம் செய்துகொண்டு, கற்கண்டைத் தூள்செய்து, பாலில் கரைத்து லேகிய பாத்திரத்தில் இட்டு, அடுப்பிலேற்றி சிறுதீயிட்டு பாகுசெய்து, பிறகு மேற்படி சூரணத்தையும் கலந்து கிளறி லேகிய பதத்தில் இறக்கி போதிய அளவு நெய்யும், தேனும் விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 சுண்டைக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: அசீரணம், மந்தம், பேதி, உஷ்ணவாயு, பித்தவாயு, கபம், வயிற்றுவலி முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: வாயு பதார்த்தங்களை நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

44. முடக்கத்தான் லேகியம்

1. முடக்கத்தான் சாறு	300 மில்லி
2. சாரணைச்சாறு	200 மில்லி
3. முசுமுசுக்கைச்சாறு	,,

4. மிளகு, தக்காளிச்சாறு	200 மில்லி
5. சங்கிலைச்சாறு	,,
6. கழற்சிப்பருப்பு	,,
7. சுக்கு	17½ கிராம்
8. மிளகு	,,
9. திப்பிலி	,,
10, நெல்லி வற்றல்	,,
11. கடுக்காய்த்தோல்	,,
12. தான்றிக்காய்த்தோல்	,,
13. பனைவெல்லம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் 6 முதல் 12 வரையில் உள்ளவைகளை நன்கு இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு லேகிய பாத்திரத்தில் சாறுகளை விட்டு பனைவெல்லத்தைக் கரைத்து அடுப்பிலேற்றி சிறு தீயிட்டு பாகுபதம் வரும்வரை கிண்டி மேற்படி சூரணத்தைத் தூவி லேகிய பதத்தில் இறக்கி, போதிய அளவு தேனும், நெய்யும் விட்டு நன்கு பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 சுண்டைக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: புண்கள், சரீர எரிச்சல், சொறி, சிரங்கு, வயிற்றுவலி, மார்புகுத்து, மாரடைப்பு, நீர்குத்து, இருமல், மலக்கட்டு முதலிய நோய்களைக் குணப்படுத்தி பித்தத்தைச் சமப்படுத்தும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவும்.

45. முருங்கைப்பூ லேகியம்

1. முருங்கைப்பூ	2 லிட்டர்
2. பசும்பால்	1 லிட்டர்
3. தேங்காய்ப்பால்	½ லிட்டர்
4. பருத்தி விதைப்பால்	1 லிட்டர்
5. இளநீர்	,,
6. தென்னம்பூச்சாறு	½ லிட்டர்
7. சர்க்கரை	1400 கிராம்
1. கசகசா	17½ கிராம்
2. சுக்கு	,,
3. சீரகம்	,,
4. தேற்றாங்கொட்டை	,,
5. வால்மிளகு	,,
6. ஏலரிசி	,,
7. சாதிக்காய்	,,
8. சாதிப்பத்திரி	,,
9. மிளகு	,,
10. அதிமதுரம்	,,
11. இலவங்கப்பட்டை	,,
12. பூனைக்காலிவித்து	,,
13. இலவங்கம்	,,
14. பூமிச்சர்க்கரைக்கிழங்கு	,,
15. மராட்டி மொக்கு	,,
16. நிலப்பனங்கிழங்கு	,,
17. நெய்	200 கிராம்
18. தேன்	100 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் முதல் அங்கத்தில் கூறப்பெற்ற சரக்குகளில் சர்க்கரை நீங்கலாக மற்றவைகளை ஒரு பாண்டத்திலிட்டு சிறு தீயிட்டெரித்து முருங்கைப்பூ சிவந்து குழையும் பக்குவத்தில் கீழிறக்கி ஆறியபின் பிசைந்து வடிகட்டி, வடித்த நீருடன் சர்க்கரையைச் சேர்த்துக் காய்ச்சி தந்துபதத்தில் இரண்டாவது பிரிவில் கூறப்பட்டுள்ளவை களை இடித்துத் தூள்செய்து மேற்படி பாகுடன் கலந்து நெய், தேன் இரண்டையும் சேர்த்து இறக்கி பக்குவப்படுத்தவும்.

அளவு: கழற்சிக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: தாது நஷ்டத்தைப் போக்கி தாது பலத்தை அதிகரிக்கச் செய்து, வெப்பத்தை சமன்படுத்தி சரீரத்திற்குப் போதிய சக்தியை உண்டாக்கும்.

• ***பத்தியம்:*** சத்துள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும்.

46. மெருகன் கிழங்கு லேகியம்

1. மெருகன் கிழங்கு	525 கிராம்
2. சுக்கு	17½ கிராம்
3. மிளகு	,,
4. கடுக்காய்த்தோல்	,,
5. தான்றிக்காய்	,,
6. நெல்லிவற்றல்	,,
7. ஏலரிசி	,,
8. இலவங்கப்பட்டை	,,
9. இலவங்கப்பத்திரி	,,
10. விலாமிச்சம்வேர்	,,
11. அமுக்கிராக்கிழங்கு	,,
12. வாய்விளங்கம்	,,
13. கூகைநீர்	,,
14. கிராம்பு	,,
15. சிவதை வேர்	,,
16. பொன்முசுட்டைவேர்	,,
17. கோரைக்கிழங்கு	,,
18. கோரோசனை	700 கிராம்
19. பனைவெல்லம்	,,
20. பால்	2 லிட்டர்
21. ஆறுமாதக்காடி	8 லிட்டர்
22. நெய்	350 கிராம்
23. தேன்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் 2 முதல் 17 வரையிலுள்ள வைகளை நெய் விட்டு பொன்மேனியாக வறுத்து இடித்துத் தூள்செய்து வடிகட்டி வைத்துக்கொண்டு மெருகன் கிழங்கைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு பழகின மண்பாண்டத்திலிட்டுக் காடியை அதில் ஊற்றிச் சிறு தீயிலெரித்து எட்டில் ஒன்றாக சுண்டக்காய்ச்சி, கீழிறக்கி ஆறியபின் நன்றாக மத்திட்டுக் கடைந்து வடிகட்டி அதோடு பாலும், சர்க்கரையும் சேர்த்து தந்து பதம் வரும்வரைக் காய்ச்சி மற்றைய சூரணத்தைச் சிறிது சிறிதாகப்போட்டுக் கிளறி இறக்கும் தருவாயில் தேன், நெய் இரண்டும் விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 சுண்டைக்காய் பிரமாணம். (காலையில் மட்டும்)

தீரும் நோய்கள்: லேகியத்தை 48 நாட்கள் உட்கொள்ள சுரங்கள், காசம், மூலம், அதிசாரம், மலபந்தம், சுவையின்மை, மூர்ச்சை, பித்தம், வாந்தி, பித்தவாயு, சூலை, சூதகவாயு, சூதகவலி முதலிய நோய்கள் குணமாகி பசி தீபனத்தை உண்டாக்கும்.

பத்தியம்: நோய்க்கு ஏற்றவாறு பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

47. வண்டுகடி லேகியம்

1. கற்றாழை வேர்	35 கிராம்
2. நொச்சிவேர்	,,
3. கழற்சிவேர்	,,
4. குன்றிவேர்	,,
5. தூதுவளைவேர்	,,
6. சீரகம்	,,
7. சாதிக்காய்	,,
8. வால்மிளகு	,,
9. ஓமம்	,,

10. சதகுப்பை	35 கிராம்
11. கடுக்காய்	,,
12. விளாம்பழ ஒடு	,,
13. தாமரைப்பூ	,,
14. மிளகு	,,
15. கொல்லங்கோவை	,,
16. கொடிவேலி	,,
17. சிவனார்வேம்பு	,,
18. வெள்ளருகு	,,
19. அவுரி	,,
20. நிலவாகை	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளை உரலிலிட்டு நன்கு இடித்து வடிகட்டி 350 கிராம் பனைவெல்லத்தை தண்ணீர் விட்டுக் கரைத்து லேகிய பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி சிறு தீயிட்டு பாகு பதம் வரும் நேரத்தில் மேற்படி சூரணத்தை யிட்டுக் கிளறி லேகியப் பதத்தில் இறக்கி போதிய அளவு தேன்விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 சுண்டைக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: லேகியத்தை 48 நாட்கள் உட்கொண்டு வந்தால் 18 வகை குஷ்டம், வண்டுகடி, மூலக்கிராணி முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

48. வில்வாதி லேகியம்

1. வில்வவேர்	3.360 கி.கிராம்
2. வெட்டிவேர்	280 கிராம்
3. விலாமிச்சம்வேர்	560 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளை ஒரு பானையிலிட்டு 96லிட்டர் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து 8ல் 1 பாகமாக குடிநீராக்கிக்கொண்டு அதில், வெல்லம் 3.360 கி.கிராம் சேர்த்துப் பாகு செய்து வடிகட்டி எடுத்துக்கொள்ளவும் பிறகு,

1. மிளகு	70கிராம்
2. திப்பிலி	140கிராம்
3. சுக்கு	70கிராம்
4. திப்பிலி மூலம்	140 கிராம்
5. சிறுநாகப்பூ	,,
6. தாளிசப்பத்திரி	70கிராம்
7. சாதிக்காய்	,,
8. கருஞ்சீரகம்	,,
9. கிராம்பு	,,
10. பூலாங்கிழங்கு	,,
11. செவ்வியம்	,,
12. சித்திரமூலம்	,,
13. மூங்கிலுப்பு	,,
14. ஏலரிசி	,,
15. சந்தனத்தூள்	,,
16. இலவங்கப்பட்டை	,,
17. நன்னாரி	,,
18. சீந்தில்	,,
19. அதிமதுரம்	,,
20. இஞ்சி	140கிராம்
21. கருவேப்பிலை ஈர்க்கு	70கிராம்
22. விதைநீக்கிய பேரீச்சங்காய்	140கிராம்
23. மல்லி	70கிராம்
24. களிப்பாக்கு	,,

மேலே கூறப்பட்ட 24 மருந்துகளையும் உரலிலிட்டு நன்கு இடித்துத் தூள்செய்து வடிகட்டி எடுத்துத் தூளை மேற்படிப் பாகுடன் கலந்து லேகிய பக்குவத்தில் கிண்டி கீழே இறக்கி போதிய அளவு தேன், நெய் சேர்த்துப் பத்திரப் படுத்தவும்.

அளவு: கழற்சிக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: சுவாசம், பசியின்மை, விக்கல், அதிசாரம், வாந்தி, இருமல், பாண்டு, காமாலை முதலிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்: 1. புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும். 2. பால், தயிர், நெய், வெண்ணெய், பழங்கள், கீரைகள் அதிகமாக சேர்த்துக்கொள்ள வேண்டும்.

49. வெந்தய லேகியம்

1. வெந்தயம்	700 கிராம்
2. கசகசா	175 கிராம்
3. சாதிக்காய்	70 கிராம்
4. சாதிப்பத்திரி	35 கிராம்
5. ஏலரிசி	17½ கிராம்
6. குங்குமப்பூ	12 கிராம்
7. பச்சைக்கற்பூரம்	3 கிராம்
8. சர்க்கரை	2.100 கிராம்
9. பசும்பால்	2 லிட்டர்

மேற்கூறப்பெற்ற 1 முதல் 5 சரக்குகளையும் உரலிலிட்டுத் தூள்செய்து வடிகட்டி சர்க்கரையில் பால்விட்டு தந்து பதம் வரக்காய்ச்சி மேற்படி சூரணத்தை விட்டுக் கிண்டி 175கிராம் நெய்யும், 175 கிராம் தேனும் விட்டுப் பிசைந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு: சுண்டைக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: பால்.

தீரும்நோய்கள்: கணச்சூடு, மேக அழலை, கைகாலெரிச்சல், பித்தம் முதலியவை குணமாகும்.

50. வெள்ளைப்பூண்டு லேகியம்

1. உரித்த பூண்டு	250 கிராம்
2. பசும்பால்	2 லிட்டர்
3. இஞ்சிச்சாறு	200 மில்லி
4. சீரகம்	100 மில்லி
5. நெல்லிக்காய்ச்சாறு	200 மில்லி
6. கசப்பு நாரத்தைச்சாறு	200 மில்லி
7. திப்பிலி	10½ கிராம்
8. கிராம்பு	,,
9. ஏலம்	,,
10. சீரகம்	,,
11. மிளகு	,,
12. சாதிக்காய்	,,
13. சாதிப்பத்திரி	,,
14. கோட்டம்	,,
15. கடுக்காய்த்தோல்	,,
16. தாளிசப்பத்திரி	,,
17. சிறுநாகப்பூ	,,
18. அதிமதுரம்	,,
19. மல்லி	17½ கிராம்
20. பனைவெல்லம்	1.500 கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்து சரக்குகளில் 7 முதல் 19 வரையிலுள்ளவைகளை வெய்யிலில் உலர்த்தி நெய்விட்டு பொன்மேனியாக வறுத்து இடித்துச் சூரணம் செய்து கொள்ளவும்.

முதலில் உரித்த பூண்டைப் பசும்பாலில் வேகவைத்து (பால் சுண்டி வெந்தவுடன்) மத்திட்டு நன்கு கடைந்து மற்றைய சரக்குகளையும் சேர்த்து லேகிய பாத்திரத்திலிட்டு பனைவெல்லத்தையும் கரைத்து அடுப்பிலேற்றி சிறுதீயிட்டு பாகுபதத்தில் மேற்படி சூரணத்தைத் தூவி கிளறி லேகிய பதத்தில் இறக்கி போதிய அளவு தேன், நெய்விட்டுப் பிசறி பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 நெல்லிக்காயளவு. (தினமும் மூன்று வேளை ஆகாரத்திற்குப் பிறகு)

தீரும் நோய்கள்: கபம், வெள்ளோக்காளம், பேதி, வாதசூலை, மூர்ச்சை நோய், வயிற்றுப்புசம், மார்பு நோய், இடைவிடாத ஏப்பம் முதலியவைகளை குணமாகி பசியை அதிகரிக்கச் செய்யும்.

பத்தியம்: புளிநீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

51. பூரணாதி லேகியம்

1. சுத்தி செய்த கஞ்சா	50 கிராம்
2. சுக்கு	,,
3. மிளகு	,,
4. திப்பிலி	,,
5. ஓமம்	,,
6. சீரகம்	,,
7. குரோசாணி ஓமம்	,,
8. கடுக்காய்ப்பூ	,,
9. காட்டாத்திப்பூ	,,
10. சிறுநாகப்பூ	,,
11. சாதிக்காய்	,,
12. சாதிப்பத்திரி	,,
13. வால்மிளகு	,,
14. ஏலம்	,,
15. கிராம்பு	,,
16. மல்லி	,,
17. அதிவிடயம்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளை இளவறுப்பாய் வறுத்து, இடித்துத் தூள்செய்து, துணியில் வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

நாவற்பட்டை, அரசம்பட்டை, அத்திப்பட்டை, ஒதியம்பட்டை ஆகியவற்றை வகைக்கு 350 கிராம் எடுத்து

ஒன்றிரண்டாக்கி 4 லிட்டர் தண்ணீருடன் கலந்து அடுப்பிலேற்றி எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி வடிகட்டி அதனுடன் 750 கிராம் பனைவெல்லம் சேர்த்துப் பாகுசெய்து அதில் மேற்படி சூரணத்தைத் தூவி, தேவையான அளவு நெய், தேன் விட்டுக் கிண்டி பத்திரப்படுத்தவும்.

அளவு: சிறு சுண்டைக்காய் அளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: உஷ்ண வாயுவினால் உண்டாகும் பேதி, மூலக்கிராணி, பாண்டு நோயினால் ஏற்படும் பேதி.

சூதக பேதி போன்ற நோய்கள் குணமாகி, பசியும் தாதுவிருத்தியும் உண்டாகும்.

நோயாளியின் வன்மைக்கும் வயதிற்கும் ஏற்ப மருந்தைக் கூட்டியும் குறைத்தும் கொடுக்கலாம்.

52. மேக ராசாங்க லேகியம்

1. சங்கங்குப்பி வேர்	50 கிராம்
2. சங்கம் வேர்	,,
3. நீர்க்குமிழம் வேர்	,,
4. நிலக்குமிழம்வேர்	,,
5. கொடிவேலி வேர்	,,
6. நெருஞ்சில் வேர்	,,
7. பூவரசம்பட்டை	,,
8. செங்கத்தாரிப்பட்டை	,,
9. நிலப்பனங்கிழங்கு	40 கிராம்
10. அமுக்கிராக்கிழங்கு	,,
11. கொல்லங்கோவைக்கிழங்கு	40 கிராம்
12. சிவனார்வேம்பு சமூலம்	,,
13. வெள்ளருகு	,,

14. அவுரிவேர்	40 கிராம்
15. நில ஆவாரை	,,
16. பரங்கிப்பட்டை	,,
17. சுக்கு	25 கிராம்
18. மிளகு	,,
19. திப்பிலி	,,
20. ஓமம்	,,
21. கோட்டம்	,,
22. சிறுநாகப்பூ	,,
23. சிற்றரத்தை	,,
24. சன்ன இலவங்கப்பட்டை	,,
25. இலவங்கம்	,,
26. இலவங்கப்பத்திரி	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகள் அனைத்தையும் இடித்துத் தூள்செய்து துணியில் வடிகட்டி வைத்துக்கொண்டு லேகிய பாத்திரத்தில் 2 லிட்டர் பசும்பால் விட்டு 1500 கிராம் பனைவெல்லத்தை சேர்த்து பாகுபதத்தில் காய்ச்சி இடித்து வடிகட்டிய சூரணத்தைச் சேர்த்துக் கிண்டி போதிய அளவு தேன்விட்டு பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: சுண்டைக்காய். (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: சகலவிதமான மேக நோய்களும், அரிப்பு, தடிப்பு முதலியவைகளும் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கி உணவு உட்கொள்ளவும்.

முக்கியம்: இதில் இரசசெந்தூரம் 25 கிராம், கெந்தக பற்பம் 25 கிராம் சேர்த்தும் பயன்படுத்தலாம். நோயின் வன்மைக்கேற்ப உபயோகிக்கவும். வைத்தியர்களின் அனுபவத்தைப் பொருத்தது.

53. சேங்கொட்டை லேகியம்

1. சேங்கொட்டை (சுத்தி செய்தது)	350 கிராம்
2. பரங்கிப்பட்டை	,,
3. கொல்லங்கோவை	100 கிராம்
4. சிவனார்வேம்பு	,,
5. வெள்ளருகு	,,
6. சுக்கு	50 கிராம்
7. மிளகு	,,
8. திப்பிலி	,,
9. குரோசாணி ஓமம்	,,
10. மஞ்சள்	,,
11. மரமஞ்சள்	,,
12. சிற்றரத்தை	,,
13. மல்லி	,,
14. சித்திரமூலப்பட்டை	,,
15. தேவதாரப்பட்டை	,,
16. கிராம்பு	,,
17. சாதிக்காய்	,,
18. சாதிப்பத்திரி	,,
19. சீரகம்	,,
20. கடுக்காய்த்தோல்	,,
21. தான்றிக்காய்த்தோல்	,,
22. சிறுதேக்கு	,,
23. எள்ளு	,,
24. பேரீச்சங்காய் (விதை நீக்கியது)	100 கிராம்
25. குங்குமப்பூ	5 கிராம்
26. கோரோசனை	,,
27. பச்சைக்கற்பூரம்	2 கிராம்
28. நெய்	250 மில்லி
29. தேன்	,,
30. வெல்லம்	1 கிலோ

மேற்கூறிய சரக்குகளில் 1 முதல் 24 வரை உள்ள சரக்குகளையும் இளவறுவலாக வறுத்து நன்கு இடித்துத்

தூள்செய்து வடிகட்டி வெல்லத்தை லேகிய பாத்திரத்தி லிட்டு, பாகுபதத்தில் காய்ச்சி சூரணங்களைச் சேர்த்து தேவையான அளவு தேன், நெய் ஆகியவை விட்டு 25, 26, 27 ஆகிய சரக்குகளுடன் 50 கிராம் கெந்தக பற்பம் சேர்த்து. குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ அரைத்து லேகியத்துடன் பிசைந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: தேத்தாங்கொட்டை. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: சூலை 18, கிரந்தி 9, மேகம் 20, குஷ்டம்18, கண்டமாலை 18, மேகப்புண், பவுத்திரம், வாதம்.

பத்தியம்: இச்சா பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

54. சாரணை லேகியம்

1. மூக்கரைச்சாரணைவேர்சாறு	2 லிட்டர்
2. நாரத்தம்பழச்சாறு	,,
3. இஞ்சிச்சாறு	,,
4. சுக்கு	40 கிராம்
5. மிளகு	,,
6. திப்பிலி	,,
7. ஏலரிசி	,,
10. மல்லி	,,
11. கோஷ்டம்	,,
12. சிற்றரத்தை	,,
13. தாளிசபத்திரி	,,
14. அதிவிடையம்	20 கிராம்
15. அக்கிரகாரம்	,,
16. வால்மிளகு	,,
17. சிறுநாகப்பூ	,,
18. சாதிக்காய்	,,
19. சாதிப்பத்திரி	,,
20. கிராம்பு	,,

21. கடுக்காய்த்தோல்	20 கிராம்
22. தான்றிக்காய்த்தோல்	,,
23. நெல்லிவற்றல்	,,
24. குரோசாணி ஓமம்	,,
25. மலாக்காய் சந்தனம்	,,
26. கருஞ்சீரகம்	,,
27. சிவதைவேர் (சுத்திசெய்தது)	20 கிராம்
28. சர்க்கரை	2 கிலோ
29. தேன்	1 கிலோ
30. நெய்	½ கிலோ
31. குங்குமப்பூ	2 கிராம்
32. கோரோசனை	,,

மேற்கூறப்பெற்ற 4 முதல் 27 வரையில் உள்ள சரக்குகளை இளவறுப்பாக வறுத்து இடித்து தூள்செய்து துணியில் வடிகட்டி வைத்துக்கொண்டு ஒன்று முதல் மூன்று வரையில் உள்ள சாறுகளுடன் சர்க்கரையைச் சேர்த்து லேகிய பாத்திரத்திலிட்டு, காய்ச்சிப் பாகுபதத்தில் மேற்படி சூரணத்தை சிறுகச்சிறுகத் தூவி, போதிய அளவு தேன், நெய்விட்டுக் கிண்டி எடுத்து குங்குமப்பூ, கோரோசனை இரண்டையும் கலந்து பத்திரப்படுத்தவும்.

அளவு: புன்னைக்காயளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: வாந்தி, அரோசனம், பித்தம், நெஞ்செரிவு, தாபசுரம், வாதம், கிறுகிறுப்பு, தலைநோய், அக்கினி மந்தம், மலக்கட்டு, காந்தல் முதலியவை குணமாகி உடல் வலிமை உண்டாகும்.

55. ரோசாப்பூ லேகியம்

1. ரோசாமொட்டு	500 கிராம்
2. சுக்கு	50 கிராம்
3. மிளகு	,,

4. சீரகம்	50 கிராம்
5. ஏலரிசி	,,
6. கிராம்பு	,,
7. சாதிக்காய்	,,
8. சாதிப்பத்திரி	,,
9. லவங்கப்பத்திரி	,,
10. நில ஆவாரை	,,
11. குங்குமப்பூ	3 கிராம்
12. மூக்குறட்டை வேர்ச்சாறு	1 லிட்டர்
13. முடக்கொத்தான் இலைச்சாறு	1 லிட்டர்
14. ராசபேரி இலைச்சாறு	½ லிட்டர்

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் 2 முதல் 10 வரையிலுள்ள வற்றை உரலிலிட்டு இடித்துத் துணியில் வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

12 முதல் 14 வரையிலுள்ள சாறுகளை ஒன்றாகக்கூட்டி ரோசா மொட்டு இதழ்களை சேர்த்து 1500 கிராம் சீனாக் கல்கண்டைப் பொடி செய்து அதனுடன் சேர்த்து பாகுபதம் வரும்வரை காய்ச்சி மேற்படி சூரணத்தையும் சேர்த்துக் கிண்டி இறக்கி குங்குமப்பூ சேர்த்து பத்திரப்படுத்தவும்.

அளவு: புன்னைக்காய். (ஒரே வேளை) இரவு உணவு உட்கொண்ட பிறகு.

தீரும் நோய்கள்: மலச்சிக்கலைப் போக்கி தினமும் இரண்டுவேளை மலம் தாராளமாய்ப்போகும். உடலுக்கு மிகவும் நல்ல மருந்து.

56. வில்வாதி லேகியம் (வேறு முறை)

வில்வவேர், விளா, நாவல், வேம்பு, நெல்லி, தேற்றான், கடம்பு, சிற்றாமணக்கு, கோவை, கடுக்காய், வெற்றிலை, எலுமிச்சை, சிறுகன்பீளை, கமுகு, பருத்தி, பெருங்கொடி, அகில், குடசப்பாலை, கோரைக்கிழங்கு, சிறுகீரை,

பார்சோற்றி, பனை, செறுப்படை, ஆவாரை, கற்றாழை, அருகன், அத்தி, கொடிவேலி, தவசி முருங்கை, நொச்சி, மூங்கில், சொரபுன்னை, நாரத்தை, புன்னை, நாகமல்லி, விளாமிச்சை, எருக்கு, பெரண்டை, யானை நெருஞ்சில், நன்னாரி, முன்னை, அகத்தி, குப்பைமேனி, ஆடாதொடை, கீழாநெல்லி, மருது, குறுக்கத்தி, பலாசு, மலைதாங்கி, சிறுதேக்கு, வேலிப்பருத்தி, தேவதாறு, கற்பாலை.

மேற்கூறப்பட்ட சரக்குகளில் வில்வவேர் 1கிலோ, மற்றைய வேர்கள் ½கிலோ எடுத்து வெய்யிலில் உலர்த்தி ஒன்றிரண்டாக சிதைத்து 25 லிட்டர் தண்ணீரில் போட்டு முத்தீயிட்டு எரித்து எட்டில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டிய குடிநீரை எடுத்து அதனுடன், 1. கரும்புச்சாறு, 2. இளநீர், 3.பால், 4. நாரத்தம்பழச்சாறு, 5. எலுமிச்சம்பழச்சாறு, 6.கோவைச்சாறு, 7. கசப்பு நாரத்தை சாறு, 8. இஞ்சிச்சாறு, 9. தேன் ஆகிய ஒன்பதும் வகைக்கு 500 மில்லி சேர்த்து குப்பைமேனி, முசுமுசுக்கை, கரிசாலை, பொன்னாங்காணி, நாயுருவி, வாழைக்கிழங்கு, சிகைக்காய் கொழுந்து ஆகியவைகளின் சாறு வகைக்கு 250 மில்லி சேர்த்து,

இலவங்கம், மிளகு, திப்பிலி, ஏலம், தக்கோலம், பரங்கிப்பட்டை, அதிமதுரம், கோஷ்டம், இந்துப்பு, சந்தனம், களிப்பாக்கு, சாதிப்பத்திரி, வாய்விளங்கம், வால்மிளகு, ஓமம், சுக்கு, கடுக்காய்த்தோல், வசம்பு, அரத்தை, கண்டங்கத்திரி விதை, ஆடுதீண்டாப்பாளை விதை ஆகிய சரக்குகள் அனைத்தும் வகைக்கு 25 கிராம் எடுத்து உரலில் இட்டு இடித்து பொடிசெய்து சூரணத்தை தனிப்படுத்தி வைத்துக்கொள்ளவும்.

மேலே கூறப்பெற்ற குடிநீர், பழச்சாறு, இலைச்சாறு, தேன், திராட்சை இவைகளைச் சேர்த்து போதிய அளவு கற்கண்டும் சேர்த்து பாகுபதம் வரும்வரை கிண்டி மேற்படி சூரணத்தை தூவி லேகியபதமாக கிளறி வைத்துக் கொள்ளவும்.

குறிப்பு: சூரணத்தை தூவும்போது, முத்துபற்பம், பவள பற்பம், வெள்ளி பற்பம், தங்க பற்பம் ஆகியவை வகைக்கு 5 கிராம் சேர்த்து கிளறி போதிய அளவு தேன் விட்டு பிசைந்து பத்திரப்படுத்தவும்.

இந்த லேகியத்தை ஜாடியில் அடைத்து ஜாடியின் வாயை மூடி சீலைசெய்து இரண்டு மாதங்கள் (60 நாட்கள்) கருங்குறுவை நெல்லிற்குள் புடம் வைத்து எடுத்து உபயோகப் படுத்தவும்.

அளவு: நெல்லிக்காய் அளவு. காலை, மாலை இருவேளையும் உட்கொள்ளவும். 48நாட்கள் தொடர்ந்தாற் போல் உட்கொள்ளவேண்டும்.

தீரும் நோய்கள்: பித்தவலி, வாதவலி, நெஞ்சுவலி, நெஞ்சு எரிச்சல், வாந்தி, மயக்கம், குன்மம், வயிற்று புரட்டல், அதிசாரம், அசீரணம், இரைப்பு, மார்பு அடைப்பு, பெருவயிறு, எலும்புருக்கி நோய் முதலிய நோய்கள் குணமாகி தாதுபலத்தை உண்டாக்கி உடலை அழகுறச் செய்யும்.

பத்தியம்: இந்த லேகியத்தை உட்கொள்வதற்கு முன்பு சந்தநாதி தைலம் தேய்த்து தலைமுழுகி மறுநாள் பேதிக்கு சாப்பிட்டு மருந்தை ஆரம்பிக்கவேண்டும். மருந்து முடியும் வரை சந்தநாதி தைலத்தை தவிர்த்து மற்றைய தைலங்களை தேய்த்துக்கொள்ளக்கூடாது.

எள், வெள்ளைப்பூசனி, பரங்கி, கொள்ளு, அகத்தி, புகையிலை, கொத்தவரை, வரகு, பெண் சேர்க்கைக்கூடாது.

குறிப்பு: வேண்டிய அளவு, பசுநெய், லேகியத்தில் சேர்த்துக்கொள்ளலாம்.

57. திக்குவாய் நீங்க லேகியம்

புதியதேன்	750 கிராம்
பச்சை வசம்பு	210 கிராம்
ஏலரிசி	70 கிராம்
மிளகு	70 கிராம்

மேற்கூறப்பெற்றவைகளை குழி அம்மியிலிட்டு மஞ்சள், கரிசாலை சாறு விட்டு நன்கு நெகிழ 6 நாட்கள் அரைக்கவும். பிறகு வெள்ளைக் கரிசாலை சாறு விட்டு 6 நாட்கள் அரைக்கவும். செறுப்படைச்சாறு விட்டு 6 நாட்கள் அரைக்கவும். இவ்வாறு 18 நாட்கள் அரைத்த மைனத்தை வெய்யிலில் நன்கு உலர்த்தி இடித்துப் பொடிசெய்து துணியில் வடிகட்டி, வடிகட்டிய தூளை குழி அம்மியில் இட்டு போதிய அளவு தேன்விட்டு நன்கு நெகிழ அரைத்து எடுத்து ஜாடியில் பத்திரப்படுத்தவும்.

15 தினங்கள் கழித்து மேற்படி லேகியத்தை எடுத்து உபயோகப்படுத்தலாம்.

அளவு: காலையில் மட்டும் ஒருவேளை, 10 கிராம் எடுத்து சிறிது சிறிதாக நாக்கில் தேய்த்து சுவைத்து உட்கொள்ள செய்யவேண்டும். இவ்வாறு 48 நாட்கள் உட்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்: திக்குவாய் (தெற்று வாய்) குணமடையும். குரல் குயில்போல் மாறும்.

குறிப்பு: மருந்து உட்கொண்டவுடன் 25 முதல் 50 மில்லிக்கு குறைவு இல்லாமல் மிளகுக் குடிநீர் உட்கொள்ள வேண்டும்.

நெய்

1. அதிமதுர நெய்

1. அதிமதுரம்	140 கிராம்
2. புங்கம்பழம்	70 கிராம்
3. விலாமிச்சைவேர்	10½ கிராம்
4. ஏலக்காய்	,,
5. இலவங்கப்பத்திரி	,,
6. கோட்டம்	,,
7. செவ்வல்லிக்கிழங்கு	,,
8. கூகைநீர்	,,
9. திராட்சை	,,
10. வெட்டிவேர்	,,
11. பொன்னாங்காணிவேர்	,,
12. சீரகம்	,,
13. கொத்தமல்லி	,,
14. இலவங்கம்	,,
15. சிறுநாகப்பூ	,,
16. சந்தனம்	,,
17. நன்னாரிவேர்	,,
18. சிறுகீரைவேர்	,,
19. நெருஞ்சிவேர்	,,
20. தாமரை வளையம்	,,
21. சிற்றரத்தை	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளைச் சுத்தப்படுத்தி அம்மியிலிட்டு நன்கு நெகிழ தாய்ப்பால் விட்டு (தாய்ப்பால் கிடைக்காவிட்டால் பசும்பால்) அரைத்து 500 மில்லி பசும்பாலில் கரைத்து, 2 லிட்டர் பசுநெய் கலந்து ஒன்றாய்க் கூட்டி பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி சிறுதீயிட்டு எரித்து மெழுகு பக்குவத்தில் இறக்கிப் பத்திரப்படுத்தவும்.

அளவு: 2 முதல் 3 கிராம் (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: 5 முதல் 7 நாட்கள் கொடுத்தால் தலைநடுக்கம், கைநடுக்கம், பித்தநோய்கள், கணைச்சுரம், உள்சுரம் முதலியவை குணமாகும்.

பத்தியம்: புளிநீக்கி உணவு உட்கொள்ளவும்.

2. அருகம்வேர் நெய்

1. அருகம்புல்வேர் சாறு	8 லிட்டர்
2. பசுவின்நெய்	2 லிட்டர்
3. அதிமதுரம்	35 கிராம்
4. சீரகம்	17½ கிராம்
5. சாதிப்பத்திரி	,,
6. விலாமிச்சம்வேர்	,,
7. சிற்றாமுட்டிவேர்	,,
8. வில்வவேர்	,,
9. ஏலம்	9 கிராம்
10. இலவங்கம்	,,
11. மிளகு	,,
12. கோட்டம்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் 3 முதல் 12 வரையிலுள்ளவைகளைப் பசுவின் பால்விட்டு நன்கு நெகிழ அரைத்து, அருகவேர்ச்சாறு, நெய் இவற்றுடன் ஒன்றாய்க் கலந்து அடுப்பிலேற்றி சிறுதீயிட்டு 200 கிராம் கற்கண்டுத் தூள் சேர்த்து எரித்து பக்குவத்தில் இறக்கிவைத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 தேக்கரண்டி. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: உடம்பு எரிவு, மேகம், இரத்த பித்தம், நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல், தாகம், சில விடக்கடி முதலிய நோய்கள் குணமாகும்.

3. ஆடாதொடை நெய்

1. ஆடாதொடை இலைச்சாறு	2 லிட்டர்
2. ஆடாதொடை வேர்	7 கிராம்
3. ஆடாதொடைப்பட்டை	,,
4. கீழாநெல்லிவேர்	,,
5. காட்டுமல்லிகைவேர்	,,
6. வேளைவேர்	,,
7. குப்பைமேனி வேர்	,,
8. உத்தாமணி வேர்	,,
9. வழுதலை வேர்	,,
10. நத்தைச்சூரிவேர்	,,
11. சிறுகாஞ்சோறிவேர்	,,
12. தூதுவளைவேர்	,,
13. கண்டங்கத்திரிவேர்	,,
14. தும்பைவேர்	,,
15. கருந்துளசிவேர்	,,
16. வெள்ளைக்காக்கரட்டான்வேர்	,,
17. கோவைவேர்	,,
18. சதகுப்பை	,,
19. நில ஆவாரை	,,
20. மருள் கிழங்கு	,,
21. வசம்பு	,,
22. உரித்த பூண்டு	,,
23. கஸ்தூரி மஞ்சள்	,,
24. நெய்	2 லிட்டர்
25. நல்லெண்ணெய்	,,
26. ஆமணக்கு நெய்	,,
27. குங்கிலியம் (கருப்பு)	17½ கிராம்
28. பழச்சாறு	100 மில்லி

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் 2 முதல் 23 வரையி லுள்ளவைகளை மேற்படி சாறுவிட்டு நன்கு நெகிழ அம்மியில் அரைத்து நெய், எண்ணெய்களுடன் கலந்து பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயிட்டுக் காய்ச்சவும்.

கருப்புக் குங்கிலியத்தைப் பழச்சாறுவிட்டு அரைத்து நெய்யில் கலந்து எரித்து கடுகு மெழுகு பக்குவமாய் வரும் போது இறக்கிவைத்து ஆறியபின் பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 தேக்கரண்டி. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: இருமல், காசம், க்ஷயம், சுரம் முதலியன குணமாகும்.

குறிப்பு: நாள்பட்ட சுரம், உடல் எரிச்சல் முதலிய நோய்களுக்கு வெளிப்பிரயோகமாகவும் உபயோகிக்கலாம்.

4. கக்குவான் நெய்

1. ஆடுதீண்டாப்பாளைச்சாறு	1 லிட்டர்
2. தூதுவளைச்சாறு	,,
3. பசுவின் நெய்	,,
4. ஈத்தின்னி வெளவால் 10 (எண்ணிக்கை)	
5. கற்கடகசிங்கி	7 கிராம்
6. மிளகு	,,
7. கடுக்காய்த்தோல்	,,
8. சுக்கு	,,
9. நெல்லிவற்றல்	,,
10. சிறுதேக்கு	,,
11. கண்டங்கத்தரிவேர்	,,
12. மிளகரணைவேர்	,,
13. சிறுகாஞ்சொறிவேர்	,,

மேற்கூறப்பெற்ற 5 முதல் 13 வரையிலுள்ள சரக்குகளை மேற்சொன்ன சாறுகளிற் கலந்து அரைத்து விழுதாக்கி பிறகு ஈத்தின்னி வெளவாலை அரிந்து, குடல், தலை இவைகளைப் போக்கிச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி யாவற்றையும் ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி சிறு தீயிட்டு பக்குவமாய் எரித்து வடிகட்டிக்கொள்ளவும்.

அளவு: 1 முதல் 3 காசெடை. (காலை, மாலை இருவேளை உட்கொள்ளவேண்டும்.)

தீரும் நோய்கள்: கக்குவான் நோய் மூன்று தினங்களில் குணமாகும்.

குறிப்பு: கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ வகைக்கு ½ கிராம் மேற்படி நெய்யில் சேர்த்து உட்கொள்வது சாலச் சிறந்ததாகும்.

5. கடுக்காய் நெய்

1. கடுக்காய்த்தூள்	350 கிராம்
2. கீழ்க்காய்நெல்லி	700 கிராம்

இவை இரண்டையும் இடித்து ஒரு பானையிலிட்டு 2 லிட்டர் தண்ணீர் விட்டு எட்டொன்றாகக் காய்ச்சி வடிகட்டி,

3. பசுநெய்	2 லிட்டர்
4. பசுவின்பால்	4 லிட்டர்
5. செண்பகப்பூ	17½ கிராம்
6. ஏலம்	,,
7. சுத்திசெய்த சிவதைவேர்	,,
8. சுக்கு	,,
9. மஞ்சள்	,,
10. சீரகம்	,,
11. கடுகுரோகிணி	,,
12. கடுக்காய்த்தோல்	,,
13. திப்பிலி	,,

ஆகிய சரக்குகளை பசும்பால் விட்டரைத்து பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி சிறு தீயிட்டு பக்குவ பாகத்தில் காய்ச்சி வடித்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 3 கிராம். (காலையிலும், இரவு படுக்கைக்குப் போகும் போதும் உட்கொள்ளவேண்டும்.)

தீரும் நோய்கள்: உடம்பு வீக்கம், பித்தசோகை, உடல் எரிவு, அக்கினிமந்தம், மலக்கட்டு, நீர்க்கட்டு, இளைப்பு, பித்தம் முதலியவை நீங்கும்.

6. கருணைக்கிழங்கு நெய்

1. கருணைக்கிழங்கு	140 கிராம்
2. கொள்ளு	70 கிராம்
3. துவரை	70 கிராம்

மேற்கூறப்பெற்றவைகளை ஒரு பாண்டத்தில் இட்டு தண்ணீர்விட்டு எட்டொன்றாகக் காய்ச்சி வடிகட்டி எடுத்துக் கொண்டு மலைநெல், பாக்கு இவைகளை ஊறவைத்த தண்ணீரையும் சேர்த்து,

1. பசுவின் நெய்	500 மில்லி
2. கற்கண்டுத்தூள்	100 கிராம்

யாவற்றையும் ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி சிறு தீயிட்டு (கமலாக்கினியாக) பக்குவத்தில் காய்ச்சி வடித்து சூரிய புடத்தில் 10 தினங்கள் வைத்த எடுத்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: ¼ முதல் ½ தேக்கரண்டி. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: மூலமுளை, வெப்ப சம்பந்தப்பட்ட நோய்கள் யாவும் குணமாகி நோயாளியினுடைய உடல் மலைபோல் உறுதியடையும்.

பத்தியம்: காரம், புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

7. தண்ணீர்விட்டான் கிழங்கு நெய்

1. தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு	6 லிட்டர்
2. நெல்லிக்காய்ச்சாறு	1 லிட்டர்
3. குழிமீட்டான் கிழங்குச்சாறு	,,
4. வெண்பூசனிக்காய்ச்சாறு	,,
5. கரும்புச்சாறு	,,
6. இளநீர்	,,
7. பசுவின் பால்	,,
8. பசுவின் நெய்	4 லிட்டர்
9. சுக்கு	14½ கிராம்
10. மிளகு	,,
11. திப்பிலி	,,
12. கடுக்காய்த்தோல்	,,
13. தான்றிக்காய்த்தோல்	,,
14. நெல்லிவற்றல்	,,
15. வெட்பாலை அரிசி	,,
16. மல்லி	,,
17. ஏலம்	,,
18. இலவங்கம்	,,
19. இலவங்கபத்திரி	,,
20. சிறுநாகப்பூ	,,
21. சீரகம்	,,
22. விலாமிச்சம்வேர்	,,
23. அதிமதுரம்	,,
24. கூகைநீர்	,,
25. இந்துப்பு	,,
26. ஓமம்	,,
27. கோரைக்கிழங்கு	,,
28. சிறுதேக்கு	,,
29. கோட்டம்	,,
30. சந்தனத்தூள்	,,
31. திராட்சை	,,
32. பேரீச்சம்பழம்	,,

33. கல்கண்டு	35 கிராம்
34. குரோசாணி ஓமம்	14½ கிராம்
35. கொட்டிக்கிழங்கு	,,
36. செங்கழுநீர்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் 9முதல் 36 வரையிலுள்ள வைகளை பசுவின்பால் விட்டு அரைத்து மற்றைய சாறுகள், பசுவின்பால், பசுவின் நெய் ஆகிய எல்லாவற்றையும் ஒன்று கலந்து பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி சிறு தீயிட்டுக் காய்ச்சி பதத்தில் வடிக்கவும்.

அளவு: 1 முதல் 2 தேக்கரண்டியளவு. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: மூத்திரப்பாளை, நீரடைப்பு, நீர்க்கடுப்பு, மேகசுரம், கைகால் எரிவு, எலும்புருக்கி, வெட்டை, பிரமேகம், நரம்புத்தளர்ச்சி முதலிய நோய்கள் குணமாகி தாது பலப்படும்.

8. பிரம்மி நெய்

1. நீர்பிரம்மிச்சாறு	8 லிட்டர்
2. பச்சைவசம்புச்சாறு	2 லிட்டர்
3. பச்சை சிற்றரத்தைச்சாறு	,,
4. பச்சை நிலப்பனங்கிழங்குச்சாறு	2 லிட்டர்
5. பசுவின்பால்	8 லிட்டர்
6. பசுவின் நெய்	4 லிட்டர்
7. சுத்தி செய்த சிவதைவேர்	17½ கிராம்
8. திப்பிலி	,,
9. விளாங்காய் விதை	,,
10. சுக்கு	,,
11. நெல்லிவற்றல்	,,
12. கஸ்தூரி மஞ்சள்	,,
13. இந்துப்பு	,,
14. சீனாக்கற்கண்டுத்தூள்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் 7 முதல் 14 வரையி லுள்ளவைகளை பால்விட்டு நன்கு நெகிழ அரைத்து, மேற்படி சாறுகள், நெய், பால் ஆகியவற்றை ஒன்று சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயிட்டு காய்ச்சிப் பதத்தில் வடித்து வைக்கவும்.

அளவு: ½ முதல் 1 தேக்கரண்டி. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: வாயு, அக்கினிமந்தம், வலிப்பு, சூதகச்சன்னி, மறதி ஆகியவை குணமாகி நல்ல பசியை உண்டாக்கி கபத்தை அறுத்து, புத்தியை அதிகரிக்கச் செய்யும்.

பத்தியம்: கைப்பு, புளிப்பு நீங்கி உணவு உட் கொள்ளவும்.

குறிப்பு: பிரம்மி நெய்யை மூன்று நாட்கள் கொதிக்க வைத்து இறக்கி, நான்காம் நாள் காய்ச்சி பக்குவ பருவத்தில் இறக்கவேண்டும்.

9. பொன்னாங்காணி நெய்

1. பொன்னாங்காணிச்சாறு	2 லிட்டர்
2. பொற்றலைக்கரப்பான்சாறு	,,
3. பசுவின் நெய்	,,
4. அதிமதுரம்	70 கிராம்
5. ஏலரிசி	10 கிராம்
6. சீரகம்	,,
7. திப்பிலி	,,
8. மிளகு	,,
9. சுக்கு	,,
10. கோட்டம்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் 4 முதல் 10 வரையி லுள்ளவைகளைப் பசுவின்பால் விட்டு நன்கு நெகிழ அரைத்து, சாறுகள், நெய்யுடன் ஒன்றாய்க் கலந்து

பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயிட்டு கற்கண்டுத்தூள் 200 கிராம் சேர்த்து எரித்து கடுகு மெழுகு பதமாய் வரும் பக்குவத்தில் வடித்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: ½ முதல் 1 தேக்கரண்டி. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: உடலை வருத்துகின்ற வெப்ப நோய்கள், மூலச்சூடு, மேககாங்கை, கைகாலெரிவு, வாய் நாற்றம் முதலிய நோய்கள் குணமாகி கண் குளிர்ச்சி அடைந்து இரத்த விருத்தியை உண்டாக்கும்.

குறிப்பு: மேற்கூறப்பெற்ற நெய்யைச் சூரிய புடமிட்டெடுத்து உட்கொள்ள சாலச்சிறந்ததாகும்.

10. வல்லாரை நெய்

1. வல்லாரைச்சாறு	8 லிட்டர்
2. பசுவின்நெய்	4 லிட்டர்
3. பச்சை வசம்புச்சாறு	2 லிட்டர்
4. பச்சை சிற்றரத்தைச்சாறு	2 லிட்டர்
5. பசுவின் பால்	8 லிட்டர்

மேற்கூறப்பெற்றவைகளை ஒன்று சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு,

6. சுத்தித்த சிவதைவேர்	14 கிராம்
7. சுக்கு	,,
8. திப்பிலி	,,
9. நெல்லிவற்றல்	,,
10. விளாவித்து	,,
11. இந்துப்பு	,,
12. கற்கண்டு	,,
13. கஸ்தூரி மஞ்சள்	,,

இவைகளைச் சூரணித்துப் பசுவின் பால் விட்டு அரைத்து ஒன்றுகலந்த திரவத்தில் கலந்து எரித்துப் பக்குவ பாகத்தில் இறக்கி வடிகட்டிப் பத்திரப்படுத்தவும்.

அளவு: 10 முதல் 15 கிராம். (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: பித்தாதிக்கம், சூதகச்சன்னி, மேகசூலை, சொறிசிரங்கு, நாவுநோய், நீர்க்கடுப்பு, காமாலை, பாண்டு முதலிய நோய்கள் குணமாகும்.

11. தேத்தாங்கொட்டை நெய்

1. தேத்தாங்கொட்டை	500 கிராம்
2. சீரகம்	25 கிராம்
3. சாதிக்காய்	,,
4. சாதிப்பத்திரி	,,
5. கிராம்பு	,,
6. சிறுநாகப்பூ	,,
7. தாளிசப்பத்திரி	,,
8. அதிமதுரம்	,,
9. வாலுளுவை அரிசி	,,
10. கருஞ்சீரகம்	,,
11. ஏலரிசி	,,
12. வெங்கப்பட்டை	,,
13. சதகுப்பை	,,
14. சுக்கு	,,
15. சர்க்கரை (சீனி)	500 கிராம்
16. பசு வெண்ணெய்	1000 கிராம்

மேற்கூறப்பட்ட சரக்குகளில் முதலில் தேத்தாங் கொட்டையைத் தண்ணீரில் ஊறவைத்துக் கழுவி எடுத்து உலர்த்தி பசும்பால் (2 லிட்டரில்) மூன்று நாள் ஊறவைத்து எடுத்து மேற்படி பாலை விட்டு நன்கு நெகிழ அரைத்து, அரைத்த விழுதுடன் வெண்ணெயைச் சேர்த்துக் காய்ச்ச வேண்டும். காய்ச்சும்பொழுது விழுது பொன்னிறமாகும் சமயத்தில் மற்றைய சரக்குகளை இடித்து வடிகட்டிய சூரணத்தையும் சர்க்கரையையும் கலந்து கிண்டி எடுத்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: ஒரு தேக்கரண்டி. (காலை, மாலை) இருவேளை.

தீரும் நோய்கள்: பித்தவெட்டை, கைகால் எரிவு, இருமல், உடல்சூடு, நீர்க்கடுப்பு, மேககாங்கை, வெள்ளை, வெட்டை, மூலவியாதி முதலியவைகள் தீரும்.

பத்தியம்: புளி நீக்கி உணவு உட்கொள்ளவும்.

12. சேங்கொட்டை நெய்

நன்கு சுத்திசெய்த சேங்கொட்டை	200 கிராம்
நெய்	1 கிலோ

சேங்கொட்டையை இரண்டு இரண்டு துண்டுகளாக வெட்டி மேற்படி பசுநெய்யை அடுப்பில் ஒரு சட்டியில் ஊற்றி சூடானபிறகு வெட்டி வைத்திருக்கும் சேங் கொட்டைகளை நெய்யில் போட்டு வறுத்து மிதக்கும் பருவத்தில் அவைகளை எடுத்துவிட்டு நெய்யை வடித்து எடுத்துக்கொண்டு அதனுடன்

இரச செந்தூரம் (குப்பி எரிப்பு)	5 கிராம்
கெந்தக பற்பம்	,,

இவை இரண்டையும் கல்வத்திலிட்டு அரைத்து மேற்படி நெய்யுடன் கலந்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: 5 கிராம் (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: சர்க்கரை.

தீரும் நோய்கள்: கருங்கிரந்தி, நுணாப்பூ கிரந்தி, மேகம், மேகப்புண், மேகசூலை, அரிப்பு, தடிப்பு, படைகள் முதல் சகல மேக நோய்களும் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கவேண்டும்.

13. கெந்தக நெய்

1. சுத்தி செய்த நெல்லிக்காய் கெந்தகம்	200 கிராம்
2. சுத்தி செய்த மடல் அரிதாரம்	10 கிராம்
3. சுத்தி செய்த வீரம்	5 கிராம்
4. சுத்தி செய்த வெடியுப்பு	50 கிராம்
5. சுத்தி செய்த கம்பிச்சாரம்	25 கிராம்
6. பசு நெய்	2 லிட்டர்

மேற்கூறப்பெற்ற மருந்துகளை ஒன்றன்பின் ஒன்றாக குழி அம்மியில் இட்டு நன்கு நெகிழ அரைத்து அதன்பின் நெய்யைவிட்டு நன்கு அரைத்து எடுத்து 2 லிட்டர் பசும்பால் விட்டு கலக்கி அடுப்பிலிட்டு எரித்து காய்ச்சி, வடிகட்டி எடுத்து பத்திரப்படுத்தவும்.

அளவு: வேளை ஒன்றுக்கு 5 கிராம். (காலை, மாலை இருவேளை)

அனுபானம்: சர்க்கரை, தெள்ளுதவிடு.

தீரும் நோய்கள்: நோய்களுக்கு ஏற்ப துணை மருந்துகளுடன் சேர்த்துக் கொடுக்க சகலவிதமான மேக நோய்களும் குணமாகும்.

பத்தியம்: புளி, புகை, போகம் நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.

14. குமரி நெய்

1. சோற்றுக்கற்றாழைச்சாறு	6 லிட்டர்
2. பொன்னாங்காணிச்சாறு	3 லிட்டர்
3. சிறுகீரைச்சாறு	,,
4. தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு	3 லிட்டர்
5. தாமரைக்கிழங்குச்சாறு	,,
6. தூதுவளைச்சாறு	,,
7. மிளகுத்தக்காளிச்சாறு	,,

8. இளநீர்	3 லிட்டர்
9. பசுவின் பால்	5 லிட்டர்
10. பசுவின்நெய்	,,
11. ஏலரிசி	50 கிராம்
12. கிராம்பு	,,
13. சாஸ்திர பேதி	,,
14. அதிமதுரம்	,,
15. கடுக்காய்த்தோல்	,,
16. தான்றிக்காய்த்தோல்	,,
17. நெல்லிவற்றல்	,,
18. சிறுநாகப்பூ	,,
19. நறும்பிசின்	,,
20. சண்பகப்பூ	,,
21. கோஷ்டம்	,,
22. சடாமாஞ்சில்	,,
23. மரமஞ்சள்	,,
24. சந்தனத்தூள்	,,
25. மஞ்சிட்டி	,,
26. விலாமிச்சம்வேர்	,,
27. நன்னாரிவேர்	,,
28. வெட்டிவேர்	,,
29. கோரைக்கிழங்கு	,,
30. கோரோசனை	110 கிராம்
31. பச்சைக் கற்பூரம்	10 கிராம்
32. புனுகுச்சட்டம்	,,
33. குங்குமப்பூ	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளில் 11 முதல் 29 வரையில் உள்ளவைகளை உரலிலிட்டு இடித்துத் தூள்செய்து துணியில் வடிகட்டி எடுத்து மேற்படி சாறுகளுடன் சேர்த்து நெய், பால் யாவற்றையும் பாத்திரத்திலிட்டு அடுப்பிலிட்டு இளந்தீயாக ஒரே சாதி விறகால் எரித்து வடிகட்டி கோரோசனை, குங்குமப்பூ, புனுகுச்சட்டம், பச்சைக்கற்பூரம் ஆகியவை களையும் சேர்த்துப் பத்திரப்படுத்தவும்

அளவு: ஒரு தேக்கரண்டி. (காலை, மாலை இருவேளை) உணவு உட்கொள்வதற்குமுன்.

தீரும் நோய்கள்: கை, கால் எரிவு, உடம்பு எரிவு, வெள்ளை விழுதல், வெட்டை, மேகச்சூடு, மேகம், நீர் எரிச்சல், நீர்க்கடுப்பு, சகலவிதமான பித்த நோய்கள் யாவும் கதிரவனைக் கண்ட பனிபோல் நீங்கும்.

15. அரசவிதை நெய்

1. அரசவிதை	500 கிராம்
2. குமரிச்சாறு	8 லிட்டர்
3. பழச்சாறு	250 மில்லி
4. பசும்பால்	4 லிட்டர்
5. பசுவின் நெய்	2 லிட்டர்
6. சர்க்கரை	1500 கிராம்
7. ஏலரிசி	50 கிராம்
8. சீரகம்	,,
9. சுக்கு	,,
10. மிளகு	,,
11. திப்பிலி	,,
12. பறங்கிப்பட்டை	,,
13. அதிமதுரம்	,,
14. நெருஞ்சில் வித்து	,,
15. ஆனைத்திப்பிலி	,,
16. திராட்சைப்பழம்	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளில் 7 முதல் 16 வரையிலுள்ள வைகளை நன்கு இடித்துத் துணியில் வடிகட்டி எடுத்து வைக்கவும்.

ஒன்று முதல் 5 வரையிலுள்ள சாறுகளையும், பால், நெய் யாவற்றையும் ஒன்று சேர்த்து பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி கமலாக்கினியாக எரித்து மெழுகுபதத்தில் வடிகட்டிய நெய்யுடன் சர்க்கரை மற்ற சூரணம் யாவற்றையும் சேர்த்துக் கிண்டி பத்திரப்படுத்தவும்.

அளவு: ஒரு மா எடை. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: பிரமிய நோய் 20, வெள்ளை விழுதல், வெட்டை, நீர்க்கட்டு, நீர்க்கடுப்பு, மேகச்சூடு, கிரிச்சனம் முதலியவைகள் குணமாகி சரீரத்திற்கு அழகையும், வலிமையையும் கொடுக்கும்.

16. பூவந்திப்பட்டை நெய்

1. பூவந்திப்பட்டை	3 கிலோ
2. தண்ணீர்	32 லிட்டர்

பூவந்திப்பட்டையை ஒன்றிரண்டாக நசுக்கி தண்ணீரில் போட்டு 4 லிட்டராக சுண்டவைத்து வடிகட்டி எடுத்து 3 லிட்டர் நெய் சேர்த்து பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி

கஸ்தூரி மஞ்சள்	50 கிராம்
கடுக்காய்த்தோல்	,,
வன்னிவேர்ப்பட்டை	,,

இவைகளை பசும்பால் விட்டு நன்கு நெகிழ அரைத்து மேற்படி நெய்யுடன் சேர்த்து எரித்து மெழுகு பதத்தில் வடிகட்டி, கருஞ்சீரகம் 50 கிராம் இளவறுப்பாக வறுத்து, தூள் செய்து வடிகட்டிய நெய்யுடன் கலந்து வடிகட்டிப் பத்திரப்படுத்தவும்.

அளவு: ஒரு தேக்கரண்டி. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: சுவாசம், காசம், சுவாசகாசம், இருமல், எல்லாவிதமான கப நோய்களும் குணமாகும்.

17. வில்வாதி நெய்

பட்டை நீக்கிய வில்வவேர்	350 கிராம்
சந்தனக்கட்டை	175 கிராம்

மேற்கூறப்பெற்ற இரண்டு சரக்குகளையும் இழைத்த தூளை 10 லிட்டர் தண்ணீரில் இட்டு அடுப்பேற்றி இரண்டு லிட்டராக வற்ற வைத்து வடித்து எடுத்த நீருடன்,

ஆடாதொடைச்சாறு	200 மிலி.
முசுமுசுக்கைச்சாறு	,,
இஞ்சிச்சாறு	,,
பசுவின்பால்	250 மில்லி
பசுவின் நெய்	2 லிட்டர்
தண்ணீர்விட்டு இழைத்த மான்கொம்பு கற்கம்	50 கிராம்

இவைகளை ஒன்று சேர்த்து அடுப்பிலிட்டு

துத்திவேர்	25 கிராம்
தாளிசப்பத்திரி	5 கிராம்
திப்பிலி	,,
சீரகம்	,,
பாதிரி விதைப்பருப்பு	,,
மிளகு	,,
கோஷ்டம்	,,
கிராம்பு	,,
நெல்லிவற்றல்	,,
அக்கராகாரம்	,,
சிற்றரத்தை	,,
ஏலரிசி	,,
கோரோசனை	2½ கிராம்

இவைகளை நன்கு நெகிழ பால் விட்டு அரைத்து ஷி மருந்தில் கலந்து காய்ச்சி வடித்து சீனாக்கற்கண்டு 250 கிராம் அதில் பொடித்துப் போட்டு பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 தேக்கரண்டி. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: இருமல், விக்கல், சுவாசம், காசம், மேகம், பித்தம், வாந்தி முதலிய நோய்கள் குணமாவதுடன் இரத்தம் விருத்தியாகும்.

18. செங்கழுநீர்க்கிழங்கு நெய்

செங்கழுநீர்க் கிழங்குச்சாறு	2 லிட்டர்
இளநீர்	4 லிட்டர்
பசுவின் நெய்	,,
பசுவின் பால்	8 லிட்டர்
வல்லாரைச்சாறு	,,

மேற்கூறப்பட்டவைகளை ஒன்று சேர்த்து பாத்திரத்திலிட்டு,

அதிமதுரம்	10 கிராம்
கோஷ்டம்	,,
சிற்றரத்தை	,,
சுக்கு	,,
மிளகு	,,
திப்பிலி	,,
சீரகம்	,,
பச்சைக்கற்பூரம்	,,
கோரோசனை	,,
குங்குமப்பூ	,,

இவைகளை நன்கு நெகிழ பசுவின்பாலால் அரைத்து சேர்த்துக் காய்ச்சி வடித்த நெய்யுடன் 250 கிராம் சீனாக்கற்கண்டு பொடித்து அத்துடன் சேர்த்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 தேக்கரண்டி. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: ஈளை, இருமல், தொண்டைக்கம்மல், உடம்பு காந்தல், கைகால் எரிவு, கண் எரிச்சல் முதலியவை குணமாகி உடம்பு வன்மை பெறும். சரீரத்திற்கு அழகை உண்டாக்கும்.

19. வெண்பூசணி நெய்

1. வெண்பூசணிக்காய்ச்சாறு	500 மில்லி
2. நெல்லிக்காய்ச்சாறு	,,
3. குழிவிட்டான் கிழங்குச்சாறு	,,

4. கரும்புச்சாறு	500 மிலி
5. வல்லாரைச்சாறு	,,
6. வெடிக்காத தென்னம்பாளைச்சாறு	,,
7. தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு	,,
8. தாழை விழுதின் சாறு	,,
9. கசப்பு நாரத்தைப்பழச்சாறு	,,
10. பசுவின் நெய்	,,

மேற்கூறப்பட்டவைகளை ஒன்று சேர்த்து பாத்திரத்திலிட்டு,

1. சுக்கு	5 கிராம்
2. மிளகு	,,
3. திப்பிலி	,,
4.சீரகம்	,,
5.கடுக்காய்த்தோல்	,,
6. தான்றிக்காய்த்தோல்	,,
7. நெல்லிவற்றல்	,,
8. வெட்பாலை அரிசி	,,
9. ஏலரிசி	,,
10. மல்லி	,,
11. கிராம்பு	,,
12. லவங்கப்பத்திரி	,,
13. சிறுநாகப்பூ	,,
14. விலாமிச்சம்வேர்	,,
15. அதிமதுரம்	,,
16. கூகை நீர்	,,
17. திராட்சை	,,
18. பேரீச்சம்பழம்	,,
19. இந்துப்பு	,,
20. ஓமம்	,,
21. சிறுதேக்கு	,,
22. கோஷ்டம்	,,
23. சந்தனத்தூள்	,,
24. மருங்காலி	,,
25. பதிமுகம்	,,

26. கஸ்தூரி	5 கிராம்
27. கோரோசனை	,,
28. குங்குமப்பூ	,,

இவைகளை பசும்பால் விட்டு இல்லையேல் சூரத்துப் பன்னீர் விட்டு அரைத்து மேற்படி மருந்துடன் கலந்து கரைத்து பதத்தில் காய்ச்சி வடித்து 250 கிராம் சீனாக்கற்கண்டைச் சேர்த்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 தேக்கரண்டி. (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: நீர்க்கடுப்பு, நீர்க்குத்தல், பிரமேகம், மேகசுரம், கைகால் எரிச்சல், உடம்பு காந்தல், கண் எரிச்சல், வெள்ளை விழுதல், வெட்டை முதலிய நோய்கள் குணமாகி சரீரத்திற்கு வன்மையைக் கொடுத்து விந்து பலத்தை உண்டாக்கும்.

20. கொடிக்கள்ளி நெய்

பசுவின் நெய்	1500 மிலி
பசுவின் மோர்	,,
பசுவின் மூத்திரம்	,,
கொடிக்கள்ளிப்பால்	,,

இவைகளை ஒன்று சேர்த்து அத்துடன்

கோஷ்டம்	8 கிராம்
சுக்கு	,,
மிளகு	,,
திப்பிலி	,,
ஓமம்	,,
கடுக்காய்	,,
தான்றிக்காய்	,,
நெல்லிவற்றல்	,,
இந்துப்பு	,,
சீரகம்	,,

சவுக்காரம்	8 கிராம்
சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு	15 கிராம்
பெருங்காயம்	,,

இவைகளை அரைத்துப் போட்டு காய்ச்சி வடித்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 4 முதல் 8 கிராம் வீதம் 10 நாட்கள் சாப்பிட வேண்டும்.

தீரும் நோய்கள்: பாண்டு, காமாலை, வீக்கம், நீர்க்கோவை உதரரோகங்கள் குணமாகும்.

பத்தியம்: புளி, உப்பு, வாயு பதார்த்தங்கள் தள்ளவும்.

21. சதுரக்கள்ளி நெய்

பசுவின் நெய்	2000 மிலி
பசுவின் பால்	,,
சதுரக்கள்ளிப்பால்	500 மிலி
விஷ்ணுக்கிரந்தி	1000 மிலி
வட்டத்திருப்பி	,,
கொடிவேலி	,,

இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து அத்துடன்

வெள்ளைப்பூண்டு	18 கிராம்
வசம்பு	,,

இவைகளையும் சேர்த்து அரைத்துக் காய்ச்சி வடித்துப் பத்திரப்படுத்தவும்

அளவு: 4 கிராம்.

தீரும் நோய்கள்: உள்ளுக்குச் சாப்பிட்டு மேலிலும் தடவி வர கண்டமாலை அரையாப்பு, விப்புருதி, முலைக்குத்து கட்டிகள் தீரும்.

22. பொற்றலைக் கையாந்தகரை நெய்

பொற்றலைக் கையாந்தகரைச்சாறு	2 லிட்டர்
பொன்னாங்காணிச்சாறு	,,
பசுவின் நெய்	,,
பசுவின் பால்	,,
எலுமிச்சம்பழச்சாறு	1 லிட்டர்

இவைகளை ஒன்றாகக் கலந்து அத்துடன்

அதிமதுரம் 140 கிராம் பசுவின் பாலாலரைத்து கரைத்து எடுத்து வடித்து அதில்

சாதிக்காய்	8 கிராம்
சாதிப்பத்திரி	,,
கோரோசனை	,,
சீனாக்கற்கண்டு	35 கிராம்

இவைகளைச் சூரணித்து ஒன்றாகக் கலந்து பத்திரப் படுத்திக் கொள்ளவும்.

அளவு: 1 தேக்கரண்டி. (காலை,மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: மூலச்சூடு, உஷ்ணம், மேககாங்கை, கைகால் எரிவு, உடம்பு எரிச்சல், வாய் நாற்றம், பிரமியம் போன்ற நோய்கள் குணமாகும். கண்கள் குளிர்ச்சியாகும்.

23. புளியாரை நெய்

புளியாரைச்சாறு	2 லிட்டர்
தயிர் வடிகட்டிய தண்ணீர்	½ லிட்டர்
பசுவின்நெய்	1 லிட்டர்

மேற்கூறப்பட்டவைகளை ஒன்று சேர்த்து பாத்திரத்தி லிட்டு

பேரீச்சம்பழம்	10கிராம்
திராட்சை	,,
அதிவிடையம்	,,
வெட்பாலையரிசி	,,
முத்தக்காசு	,,
தேசாவரம்	,,
அதிமதுரம்	,,
கோஷ்டம்	,,
செவ்வியம்	,,
சாதிக்காய்	,,
சீரகம்	,,
வட்டத்திப்பிலி வேர்	,,
ஓமம்	,,
பட்டை நீக்கிய வில்வவேரின் சீவல்	,,

இவைகளை நன்கு நெகிழ அரைத்துக் கரைத்துக் காய்ச்சி வடித்து பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

அளவு: 1 தேக்கரண்டி (காலை, மாலை இருவேளை)

தீரும் நோய்கள்: கிராணி, வயிற்றுக்கடுப்பு, குன்மம், சோபை, வாய்க்கசப்பு, பசியின்மை, கைகால் அசதி, மேகசூடு குணமாகும்.

24. வெள்ளருகு நெய்

வெள்ளருகஞ்சாறு	2 லிட்டர்
பசுவின் பால்	4 லிட்டர்
பசுவின் நெய்	2 லிட்டர்

இவைகளைச் சேர்த்து அத்துடன்

விலாமிச்சம்வேர்	10கிராம்
ஏலம்	,,
மஞ்சிஷ்டி கிழங்கு	,,
செவ்வியம்	,,
செங்கழுநீர்க்கிழங்கு	,,

தாமரை வளையம்	10 கிராம்
முத்தக்காசு	,,
பேரீச்சம்பழம்	,,
கோஷ்டம்	,,
அதிமதுரம்	,,
கிராம்பு	,,
சன்ன லவங்கப்பட்டை	,,
நன்னாரிவேர்	,,

இவைகளை இளநீரால் அரைத்து கரைத்து அத்துடன் சீனி 35 கிராம் போட்டு காய்ச்சி வடித்து பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

அளவு: 5 முதல் 10 கிராம்.

தீரும் நோய்கள்: வாயிலிருந்து இரத்தம் விழுதல் குணமாகும். மூக்கில் நசியமிட மூக்கால் இரத்தம் வடிதலும், காதில்விட்டு அடைக்க காதில் இரத்தம் வடிதலும் குணமாகும்.

25. பூவரசு நெய்

பூவரசம்பட்டைச்சாறு	2 லிட்டர்
சிற்றாமணக்கெண்ணெய்	,,

இவ்விரண்டும் ஒன்று சேர்த்து அடுப்பேற்றி கடுகு திரள்பாகத்தில்

கசகசாப்பால்	2 லிட்டர்
நற்சீரகம்	15 கிராம்
கருஞ்சீரகம்	,,
கற்கோலரிசி	,,
ஏலரிசி	35கிராம்
கிராம்பு	,,
சடாமாஞ்சில்	,,
கரிசாலை	35 கிராம்

நுணாவேர்	35 கிராம்
சர்க்கரை	140 கிராம்

இவைகளில் சர்க்கரை நீங்கலாக மற்றவைகளைச் சூரணம் செய்தபின் சர்க்கரையுடன் கலந்து கிண்டி நெய் பாகம் பட்டவுடன் வடித்து பத்திரப்படுத்திக்கொள்ளவும்.

அளவு: சிறுகரண்டி. (காலை, மாலை 7 நாட்கள்)

தீரும் நோய்கள்: வாலக்கரப்பான் போகும். கடுகை மேலுக்குப் பூச செவ்வாப்பும், செங்கரப்பானும் நீங்கும்.

பத்தியம்: உபயோகிக்கும் காலத்தில் புளிப்பு, கைப்பு, இறைச்சி, மீன், எள், கொள், பாகல் இவைகளை நீக்க வேண்டும்.

வற்றல்

பிரண்டை வற்றல்

பிரண்டையைக் கொண்டுவந்து பிளந்துகொள்ளவும். பிறகு சீரகம், மிளகு, திப்பிலி, உப்பு இவைகளைப் பொடி செய்து திணித்து, தண்ணீர்விட்டு நன்கு ஊறவைத்துப் பின்பு வெய்யிலில் உலர்த்திட வற்றலாகும். இதனை விடியற் காலையில் முறைப்படி உட்கொண்டுவர குன்மம், சீரணக் குறைவால் ஏற்படும் நோய்கள் அகன்று உடல் வலிமையுறும்.

வடகம்

1. பிரண்டை வடகம்

பிரண்டையைத் துண்டு துண்டாக நறுக்கி மோரில் ஊறவைத்துப் பிறகு நைய இடித்து அதில் மிளகு, மல்லி, உப்பு, சீரகம், திப்பிலி, உளுந்து, எள், கொள்ளு முதலியவைகளையும் சேர்த்து நன்கு பிசைந்து வடகமாக உருட்டிக் காயவைத்துப் பின்னர் நெய்யில் வறுத்து உட்கொண்டுவர குன்மம், குன்மவலி ஆகிய நோய்கள் குணமாகிப் பசி அதிகமாக ஏற்பட்டு உடல் வன்மை பெற்று பொன்னிறமாகும்.

2. வாழை வடகம்

மொந்தன் வாழைப்பூவின் மேல்பட்டைகளை நீக்கி உட்குருத்தை இரண்டாகப் பிளந்து அதற்குள் கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, கஞ்சா, கறிவேப்பிலை வகைக்கு 10 கிராம் எடுத்து பொன்மேனியாக வறுத்துச் சூரணம் செய்து வைத்து நூல் கயிற்றால் கட்டி ஒரு பானையில் எருமைமோர் விட்டு அதற்குள் இதைத் துலாயந்திரமாகக் கட்டி மோரில்

மூழ்கும்படி விட்டு வேகவைத்து வெந்தபின் அரைத்துக் கழற்சிக் காயளவாக உருண்டை செய்து உலர்த்திக் கொள்ளவும். காலை, மாலை ஒவ்வொரு உருண்டை கொடுத்துவரப் பெரும்பாடு நீங்கும்.

குறிப்பு: கஞ்சாவைக் கொதிக்கும் நீரில் 15 நிமிடம் போட்டு பிறகு வடிகட்டி கஞ்சாவை உலர்த்திச் சேர்த்துக் கொள்ளவும்.

3. இம்பூரல் வடகம்

இம்பூரல் சமூலம் ஒரு பங்கு, மிளகு ஒரு பங்கு, கற்கண்டு இரண்டு பங்கு இவை யாவற்றையும் ஒன்றுசேர்த்து இடித்து பிறகு மைபோல அரைத்துச் சுண்டைக்காயளவுள்ள வடகம் செய்து வேளைக்கு ஒரு வடகமாக இரண்டு மூன்று நாட்கள் கொடுக்க இரத்த பித்த நோய்கள் இருமல் தீரும்.

குடிநீர்

1. வாதசுரக் குடிநீர்

1. பெருங்காஞ்சொறி வேர்	5கிராம்
2. திப்பிலிமூலம்	,,
3. நிலவேம்பு	,,
4. சித்திரமூலம்	,,
5. சங்கன்வேர்	,,
6. வெள்ளருகு	,,
7. முருக்கன் வித்து	,,
8. கழற்சி வேர்	,,
9. கண்டங்கத்திரிவேர்	,,
10. பேராமுட்டி	,,
11. சிற்றரத்தை	,,
12. மாவிலங்கைவேர்	,,
13. பேரரத்தை	,,
14. சிறுகாஞ்சோறிவேர்	,,
15. சதகுப்பை	,,
16. விஷ்ணுகிரந்தி	,,
17. சிறுதேக்கு	,,
18. திரிகடுகு	,,
19. செவ்வியம்	,,
20. கோட்டம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை நன்றாக இடித்து ஒரு மட்பாண்டத்திலிட்டு 2 லிட்டர் தண்ணீர் விட்டு 2 மணி நேரம் ஊறவைத்து பின் அடுப்பிலேற்றி எட்டில் ஒன்றாகக் காய்ச்சி இறக்கி வடித்துக்கொண்டு நோய்க்கு ஏற்ற மருந்துகளுடன் சேர்த்து இருவேளை உட்கொள்ள வாத சுரங்களும், நடுக்குவாதமும் குணமாகும்.

2. பித்த சுரக்குடிநீர்

1. விலாமிச்சம்வேர்	10கிராம்
2. சிறுகாஞ்சொறிவேர்	,,
3. வில்வவேர்	,,
4. பாதிரிவேர்	,,
5. அதிமதுரம்	,,
6. கோஷ்டம்	,,
7. நன்னாரி	,,
8. நிலஆவாரை	,,
9. சீரகம்	,,
10. மல்லி	,,
11. தும்பைவேர்	,,
12. பேரீச்சங்காய் (விதை நீக்கியது)	10கிராம்
13. நெல்லிவற்றல்	,,
14. சுக்கு	,,
15. கோரைக்கிழங்கு	,,
16. சீந்தில்கொடி	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளைச் சுத்தப்படுத்தி உரலிலிட்டு நன்றாக இடித்துத் தூள்செய்து மூன்றுபாகம் செய்து ஒரு பாகத்தை மட்பாண்டத்திலிட்டு 1 லிட்டர் தண்ணீர் விட்டு ½ மணி நேரம் ஊறவைத்து முன்பு காய்ச்சியது போல் காய்ச்சி வடித்துக் கோரோசனை மாத்திரையைக் குடிநீருடன் இழைத்துக் கொடுக்க 21 வகை பித்த சுரங்களும் குணமாகும்.

3. கப சுரக்குடிநீர்

1. சுக்கு	10கிராம்
2. திப்பிலி	,,
3. இலவங்கம்	,,
4. சிறுகாஞ்சொறி	,,
5. அக்ரகாரம்	,,
6. முள்ளிவேர்	,,
7. கடுக்காய்த்தோல்	,,

8. ஆடாதொடை	10 கிராம்
9. கற்பூரவல்லி	,,
10. கோட்டம்	,,
11. சீந்தில்கொடி	,,
12. சிறுதேக்கு	,,
13. நிலவேம்பு	,,
14. வட்டத்திருப்பி	,,
15. முத்தக்காசு	,,

மேற்கூறப்பெற்றவைகளைச் சுத்தம்செய்து இடித்துத் தூள்செய்து மூன்று பாகம் செய்து ஒரு பாகத்தை மட்பாண்டத்திலிட்டு 1 லிட்டர் தண்ணீர்விட்டு ½ மணி நேரம் ஊறவைத்து முன்பு காய்ச்சியதுபோல் காய்ச்சி வடித்து சந்திரோதய மாத்திரை அல்லது கோரோசனை மாத்திரையைப் பொடித்துத் தக்க அளவில் தேன் சேர்த்துக் குழைத்து காலை, மாலை இருவேளையும் குடிநீருடன் கொடுக்க, கபசுரங்கள் அனைத்தும் குணமாகும்.

4. நிலவேம்புக் குடிநீர்

1. நிலவேம்பு	35 கிராம்
2. வெட்டிவேர்	10 கிராம்
3. விலாமிச்சம்வேர்	,,
4. சந்தனத்தூள்	,,
5. பேய்ப்புடல்	,,
6. கோரைக்கிழங்கு	,,
7. சுக்கு	,,
8. மிளகு	,,
9. பற்பாடகம்	,,
10. சிற்றரத்தை	,,
11. சீந்தில்கொடி	,,
12. கோட்டம்	,,
13. கண்டங்கத்திரிவேர்	,,
14. அதிமதுரம்	,,

மேற்கூறப்பெற்றவைகளை முன்பு காய்ச்சி வடித்தது போல் வடித்து இரண்டு மூன்றுவேளை கொடுக்க எத்தகைய பழைய சுரமானாலும் குணமாகும்.

5. நெருஞ்சில் குடிநீர்

1. நெருஞ்சில்	35 கிராம்
2. நெல்லிவற்றல்	10 கிராம்
3. நீர்முள்ளி சமூலம்	,,
4. பறங்கிச்சக்கை	,,
5. மணித்தக்காளி வற்றல்	,,
6. சரக்கொன்றைப்புளி	,,
7. சோம்பு	,,
8. வெள்ளரிவிதை	,,
9. சுரைக்கொடி	,,
10. கடுக்காய்த்தோல்	,,
11. தான்றிக்காய்	,,

மேற்கூறப்பெற்றவைகளை முன்போல் குடிநீரிட்டு வடித்து நாள் ஒன்றிற்கு இரண்டு மூன்று வேளை கொடுக்க நீரடைப்பு, சொட்டு மூத்திரம், சுரவெப்பம், பிரமேக வெள்ளை, நீர்க்கடுப்பு, மூத்திரக்கட்டு, சதையடைப்பு, கல்லடைப்பு முதலிய நோய்கள் குணமாகி நீர் தாராளமாகப் போகும்.

பற்று

1. வலிகளுக்குப் பற்று

வெடியுப்பு, மஞ்சள், கொடிவேலி இம்மூன்றையும் ஓர் நிறையாக எடுத்துப் போதிய அளவு வேலிப்பருத்திச்சாறு விட்டு நன்கு நெகிழ அரைத்துக் குழம்பாக்கிச் சுட வைத்து பொறுக்கத்தக்க சூட்டோடு நெற்றி, கழுத்து, மார்பு, கன்னம், தோள்பட்டை, முதுகு இவைகளின்மேல் பற்றிடுக. அவ்விடங்களைப்பற்றிய வலிகள் குணமாகும்.

2. வீக்கங்களுக்குப் பற்று

கரு ஊமத்தையிலையைப் பசு மூத்திரத்தில் அறைத்து குழம்பாக்கிச் சுடவைத்துப் பொறுக்கத்தக்க சூட்டோடு வீக்கங்களின் மேல் பற்றிட வீக்கங்கள் குணமாகும்.

3. சுளுக்கிற்குப் பற்று

வெல்லம், கோதுமை, மஞ்சள், நெற்கறி இவைகளை வடித்த கஞ்சியை விட்டு நன்கு நெகிழ அரைத்து பற்றிட சுளுக்கு குணமாகும்.

4. நீர்க்கோர்வைக்குப் பற்று

நுனி மஞ்சள், சாம்பிராணி, குங்குமப்பூ, கோரோசனை, சூடம், விட்சிப்பூ ஆகியவைகளை நொச்சிச்சாறு விட்டு நன்கு நெகிழ அரைத்து லேசாகச் சுடவைத்து நெற்றி, பிரடி, மார்பு, முதுகு இவைகளில் பற்றிட நீர்க்கோர்வை குணமாகும்.

5. விடவீக்கங்களுக்குப் பற்று

1. பெருமருந்துக்கொடி
2. நெல்லிக்காய்
3. மஞ்சள்
4. குப்பைமேனி
5. சுக்கு
6. புழுங்கல் அரிசி
7. வெள்ளெருக்கம்பட்டை

ஆகிய மருந்துகளைச் சமனெடை எடுத்துத் தண்ணீர் விட்டரைத்து விட வீக்கங்களின் மேல் பற்றிட வீக்கங்கள் குணமாகும்.

6. கிரந்தி நோயிற்குப் பற்று

ஆடுதீண்டாப்பாளை மஞ்சள் இவ்விரண்டையும் நன்கு அரைத்து வேப்பெண்ணெயில் குழப்பிச் சிறிது சூடுபடுத்தித் துணியில் தடவிப் பற்றிடக் கிரந்தி நோய் குணமாகும்.

கண் மை

7. கண்ணிலிடும் மை

1. மிளகு
2. திப்பிலி
3. துவரம்பருப்பு
4. ஏலரிசி

இவைகளை ஓரளவாகச் சேர்த்து வெற்றிலைச்சாறு, கொசுத்தேன் இரண்டும் விட்டு நன்கு அரைத்து அதனை அடையாகச் செய்து, வெய்யிலில் உலரவைத்து எடுத்துக் கொண்டு தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணிலிட தலைவலி, மண்டைக்குத்தல், கபாலசன்னி, சரீர காங்கை முதலியன குணமாகும்.

8. கண் மை (வேறு)

1. பொன்னாங்காணி வேர்
2. முசுமுசுக்கைவேர்
3. சீந்தில்வேர்
4. மயில் துத்தம்

இந்நான்கையும் சமனெடையாகச் சுருக்கி ஒரு செப்புத் தகட்டில் வைத்து நெய்யையும் சேர்த்து நன்றாகக் குழைத்துச் சிமிழில் அடைத்து வைத்துக்கொண்டு கண்களில் மையைத் தடவிவரக் கண் சம்பந்தப்பட்ட நோய்கள் யாவும் குணமாகும்.

9. நசியம்

மூக்குத்துளி: தும்பைப்பூவின் சாறு, நொச்சிக் கொழுந்தின் சாறு இவைகளில் வெடியுப்பு, இந்துப்பு, மிளகு, சீரகம், ஓமம் இவற்றைச் சமனெடையாகச் சேர்த்து அரைத்து மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொண்டு அம்மாத்திரையைத் துளசிச்சாற்றில் உரைத்துப் பஞ்சில் நனைத்து மூக்கில் பிழிந்திட, சிரசு சம்பந்தப்பட்ட நோய்கள் யாவும் குணமாகும்.

10 ஆவி பிடித்தல்

தண்ணீரை நன்றாகக் கொதிக்க வைத்து அதில் மஞ்சள் பொடியைத்தூவி அதிலிருந்து வரும் ஆவியை வேது பிடித்தால் சீதள நோய் நீங்கும். மேற்சொல்லியபடி நொச்சியிலையைக் கொதிக்க வைத்து, அதில் பழுக்கக் காய்ச்சிய செங்கல்லைப் போட்டுக் கொதி அடங்கி அதில் இருந்து வரும் ஆவியை முறைப்படி வேது பிடித்தாலும் சுரம் முதலினகுணமாகும்.

கட்டுகள்

1. இரசக்கட்டு

நண்டின் கொழுப்பிலும், நண்டின் சாற்றிலும் இரசம் கட்டும்.

2. மயில்துத்தக்கட்டு

குரங்கின் மலத்தில் மயில் துத்தம் கட்டும்.

3. ஈயக்கட்டு

ஊர்க்குருவியின் முட்டைக்கருவினால் ஈயம் கட்டும்

4. நாகக்கட்டு

அண்டங்காக்கையின் முட்டைக் கருவினால் நாகம் கட்டும்.

5. தாளகக்கட்டு

மீன் நெய்யினால் தாளகம் கட்டும்.

6. சாரக்கட்டு

கோழியின் மலத்தில் சாரம் கட்டும்.

7. பூநீர்

பூநீர்	½ லிட்டர்
கல் சுண்ணாம்பு	,,
அமுரி நீர்	2 லிட்டர்
வெள்ளைப்பாடாணம்	35 கிராம்

அமுரி நீரில் (சிறுநீரில்) பூநீர், கற்சுண்ணாம்பு இவை இரண்டையும் சேர்த்து கரைத்து தெளியவைத்து இறுத்து ஓர் பானையில் இட்டு வெள்ளைப்பாடாணத்தைத் தோலாந்திர மாகக் கட்டித் தொங்கவிட்டு எரித்து எடுத்துக்கொள்ளவும். அத்துடன்,

வெடியுப்புச்சுண்ணம்	சீனாக்காரம்
நவச்சாரம்	வெங்காரம்
பூநீர்	கற்பூரம்
சிப்பிசதை	

இவைகளை தத்தக அளவு எடுத்து எல்லாவற்றையும் சேர்த்து அரைத்து, வெள்ளைப்பாடாணத்திற்கு கவசஞ் செய்து, பிறகு ஓர் சட்டியில் 8 லிட்டர் உப்பு அல்லது கற்சுண்ணாம்பு போட்டு அதற்குள் வைத்து மேல்சட்டி மூடி சீலை மண் செய்து 4 மணி நேரம் எரித்து எடுத்து பத்திரப் படுத்தவும்.

தீரும் நோய்கள்: நோய்களுக்குத் தக்க அனுபானத்தில் உரைத்துக் கொடுக்க சன்னி, சுரம், சகல கடூர ரோகங்கள் தீரும்.

8. தாளகக்கட்டு

தாளகம்	35 கிராம்
கிளிஞ்சல்	தேவையான அளவு
அப்பிரகம்	,,
பறட்டைக்கீரைச்சாறு	,,

சுத்தி செய்த தாளகத்தை ரேக்குபோல் லேசாகக் கிழித்து வைத்துக்கொள்ளவேண்டும். கிளிஞ்சலில் அப்பிரகத்தை

வைத்து அதற்குமேல் மேற்படி தாளகத்தை வைத்து, பறட்டைக்கீரைச்சாறு விட்டு, அதன்மேல் அப்பிரகம் வைத்து கிளிஞ்சலால் மூடி சீலைமண் செய்து, 10 எருவை அடுக்கித் தீமூட்டி புகை ஆறின உடனே குறட்டால் மேல் எருவை நீக்கி கிளிஞ்சல்களை மீண்டும் நடுவில் வைத்து நெருப்பு எருவால் மூடிவிடவும். சற்று நேரமான பின் கிளிஞ்சளை நீக்கிப் பார்க்க உருகிச் செம்பு போலிருக்குமாகில் எடுத்து ஆறினபின் அப்பிரகத்தை நீக்கிப்பத்திரப்படுத்தவும்.

தீரும் நோய்கள்: நோய்களுக்குத் தக்க அனுபானத்தில் உரைத்துக் கொடுக்கச் சகல சுரங்கள், சகல கபரோகங்கள் முதலியன தீரும்.

9. குருமருந்து

குருமருந்தின் பெருமையைச் சுருங்கச் சொல்லின் இரசம், கள்ளிப்பால், எள் இம்மூன்று சரக்குகளையும் முற்றின தேங்காயில் அடைத்து முறைப்படி அமைத்துக் கொள்க. அம்மருந்து அடைத்துள்ள தேங்காயின் வாயை அரக்கினால் மூடி சேற்று மண்ணில் சில மாதங்கள் புதைத்து, பிறகு எடுத்து வெள்ளை முள் முருக்கன் தைலத்தை விட்டு இரசத்தை மட்டும் நன்கு அரைத்துக் குக்குடப் புடமிட்டெடுக்க உயர்ந்த சுண்ணமாக முடிந்துவிடும். இந்த இரசச் சுண்ணம் வாதப்போக்கிற்கும் வைத்திய முறைக்கும் பயன்படும். மேற்கூறப்பெற்ற இரசமே செயாசம் ஆகும்.

10. குளிகை

மேற்கூறப்பெற்ற செய இரசத்தை நத்தையின் உள்தசையில் பொருந்துமாறு திணித்து எருக்கிலை, முருக்கிலை, வெட்பாலை இலை இவைகளைக்கொண்டு செய்முறை தவறாமல் இரத்தின உப இரசங்களைப்பெய்து அதனை உருக்கிட அது குளிகை என்ற பெருமையுடைய பெயரைப்பெறும். இக்குளிகையின் பெருமையை யாராலும்

அளவிட்டுரைக்க இயலாது. இதனையே சாரணைகள் ஏற்றி சுகனக் குளிகையாக முறைப்படி செய்யவேண்டும்.

11. மருந்து உட்கொள்ளும் காலத்தில் ஆகாத பொருள்கள்

உப்பு, புளி, கடுகு, எள்ளின் நெய், கஞ்சா, பெருங்காயம், கொள்ளு, உளுந்து, தினை, சோளம், அகத்தி, புகையிலை, அபினி, காரம் இவைகள் அனைத்தும் மருந்து சாப்பிடும்போது உணவில் சேர்க்கக்கூடாதவை. ஆனாலும் இவற்றிற்குச் சமமானவைகளாக இருப்பவைகளை உட்கொள்ளலாம். பெண்கள் சுகபோகம் கூடாது. மேலும் பாகற்காய், வாழைக்காய், பறங்கிக்காய், பூசணிக்காய் முதலியவைகளையும் சேர்க்கக்கூடாது.

12. படிக்கார நீர்

படிக்காரம்	50 கிராம்
கடுக்காய்த்தோல்	10 கிராம்
தண்ணீர்	10 லிட்டர்

படிக்காரத்தைத் தண்ணீரில் சேர்த்து, கடுக்காய்த்தோலை ஒன்றிரண்டாய்ச் சிதைத்து அதனுடன் சேர்த்து, அடுப்பி லிட்டுக் கொதிநிலை வரும்வரை எரித்து, மிதமான சூடாகும் வரை வைக்கவும்.

உபயோகம்: இந்நீரை வாய் கொப்பளிக்கவும், ரணங்களைக் கழுவவும் தேவையான அளவு உபயோகப் படுத்திக் கொள்ளவும்.

தீரும் நோய்கள்: வாய்ப்புண், ரணங்கள், லிங்கப் புண்கள், யோனிப்புண்கள் முதலியன.

13. ஓமத் தீநீர்

ஓமம்	500 கிராம்
சுக்கு	10 கிராம்
தண்ணீர்	15 லிட்டர்

சுத்தம் செய்த ஓமத்தை 12 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து, பிறகு வாலையிலிட்டு எரித்து வடியக்கூடிய நீராவியைக் குளிரச் செய்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 15 முதல் 30 மில்லி.

தீரும் நோய்கள்: அதிசாரம், அசீரணம், பேதி, வாந்தி, வாயில் நீர் ஊறல், குமட்டல் முதலியவை குணமாகும்.

14. சோம்புத் தீநீர்

சோம்பு	500 கிராம்
சுக்கு	10 கிராம்
மிளகு	5 கிராம்
தண்ணீர்	10 லிட்டர்

நன்கு சுத்தம் செய்த சோம்பை 12 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்துப் பிறகு வாலையிலிட்டு எரித்து வெளிவரும் நீராவியைக் குளிரச் செய்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 25 முதல் 50 மில்லி.

தீரும் நோய்கள்: வயிற்றுவலி, அசீரணம், நீரெரிச்சல், வயிற்று உப்பிசம் முதலியவைகளைக் குணப்படுத்தி அதிகப்படியான நீரை வெளியேற்றும்.

15. சுக்குத் தீநீர்

சுக்கு	500 கிராம்
மிளகு	10 கிராம்
திப்பிலி	,,
ஓமம்	,,
இந்துப்பு	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து 15 லிட்டர் தண்ணீரில் 12 மணி நேரம் ஊறவைத்து வாலையிலிட்டு எரித்து நீராவியைக் குளிரச்செய்து பத்திரப்படுத்தவும்.

அளவு: 10 முதல் 30 மில்லி.

தீரும் நோய்கள்: வயிற்றுவலி, வயிற்று உப்பிசம், அதிசாரம், அசீரணம், பேதி, காலரா முதலியன.

குறிப்பு: மேற்கூறப்பட்ட சரக்குகளைத் தண்ணீரில் ஊறவைக்கும் முன்பு ஒன்றிரண்டாகச் சிதைத்து ஊறவைப்பது சாலச் சிறந்ததாகும்.

நீர்க்குறி - நெய்க்குறி

சிறுநீரின் இலக்கணம்

அறுவகைச் சுவையுள்ள உணவினை ஒன்றுக்கொன்று வேறுபாடின்றிப் பசிக்கேற்ற அளவும், காலா காலத்தில் உண்டு உறங்க வேண்டும். விடியற்காலையில் சிறுநீரைப் பீங்கான் பாத்திரத்தில் ஆவி போகாதவாறு பெய்து ஒன்றரை மணி நேரத்திற்குள் அதன் நிறக்குறியை எண்ணெய்விட்டுப் பார்க்கும்போது காணப்படும் குறிகளைக் கவனிக்கவேண்டும். அதிலிருந்து நோய்கள் தீரும், தீராது என்று அறிந்துகொள்வது வைத்தியர்களின் கடமையாகும்.

சிறுநீரின் பொதுக்குணம்

சிறுநீரின் நிறம், எடை, மணம், நுரை, குறைதல் என ஐந்து வகைகளாகப் பிரித்துள்ளனர்.

சிறுநீரின் நிறம்

சிறுநீரானது மஞ்சள், சிவப்பு, பச்சை, கருப்பு, வெண்மை என்னும் ஐந்து நிறமுள்ளதாக இருக்கும். மஞ்சள் நிறம் ஆறுவகைகளாகவும், சிவப்பு நிறம் நான்கு வகைகளாகவும், பச்சை நிறம் ஐந்து வகைகளாகவும், கறுப்பு நிறம் நான்கு வகைகளாகவும், வெண்மை நிறம் இரண்டு வகைகளாகவும் பிரிக்கப்பட்டு இருக்கின்றன.

1. மஞ்சள் நிற நீரின் வகைகள்

அ. மழை நீரினால் நனைந்து ஊறிய வைக்கோலிலிருந்து ஒழுகுகின்ற நீரின் நிறமாய் இருக்குமாயின் அந்நீர் சீரணக் குறைவால் உண்டானதாகும்.

ஆ. துரிஞ்சிப்பழ நிறத்தைப் பொருந்துமானால் அது சீரணப் பக்குவத்தால் உண்டானதென்று அறிய வேண்டும்.

இ. சிவப்பும், மஞ்சளும் கலந்த நிறத்தை அடையுமானால் மிகுந்த வெப்பத்தால் விளைந்ததெனக் கொள்ளல் வேண்டும்.

ஈ. காட்டு நாரத்தம் பழத்தோலின் நிறமாய் வெளிப்படுமானால் அது சூட்டைக் கொடுப்பதற்கு உண்டான சிறுநீராகும்.

உ. கொதிக்கின்ற தீயின் நிறத்தைப் பொருத்தி இறங்குமானால் அந்நீர் மிகுந்த வெப்பத்தை அடைந்ததென உணரவேண்டும்.

ஊ. மஞ்சள் நிறமும் அதில் அரைத்த குங்குமப்பூ நிறமும் வரிவரியாகப் பொருத்தி இருக்குமானால் வெப்பத்தின் உச்சத்தை அடைந்ததாகக் கருதப்படும்.

2. சிவப்புநிற நீரின் வகைகள்

அ. செம்மையும், கருமையும் பொருந்திய நிறத்தைக் காட்டும் நீர் இரத்தம் பொங்குதலால் உண்டாகின்ற நீராகும்.

ஆ. அதிக செந்நிறமுள்ள முள்முருக்கன் பூவின் நிறத்தைப் பொருந்துமானால் அதிக இரத்தக் கொதிப்பிலிருந்து இறங்குகின்ற நீராகும்.

இ. கருப்பும் அதில் சிறிது செம்மையும் கலந்த நிறமும் உண்டாயிருக்குமானால் அது இரத்தம் பொங்கிய குறியைக் கூறும் நீராகும்.

ஈ. கருப்பும் அதில் சிறிது செம்மையும் கலந்த நிறமும் இவைகளை அன்றித் தனித்த சிவப்பு நிறமும் உண்டாயிருக்குமானால், அதுவும் இரத்தம் பொங்கிய குறியைக் கூறும் நீராகும்.

3. பச்சைநிற நீரின் வகைகள்

அ. சிறுநீர் கறுப்பு நிறத்தையும் சிறிது பச்சை நிறத்தையும் கலந்ததானால் சீதளத்தினால் வருகின்ற நீராகும்.

ஆ. நச்சினால் ஏற்பட்ட சீதளம் அதிகரித்தால், நீர் ஆகாய நிறத்தை ஒத்திருக்கும்.

இ. சிறுநீரில் நீலநிறம் காணப்படுமானால் (நீலச்சாயல்) அது மிகுந்த சீதளத்தினால் உண்டானதென்று அறியவேண்டும். இந்நீரினால் குழந்தைகளுக்கும், வயோதிகர்களுக்கும் வாதநோய் உண்டாகும்.

ஈ. சிறுநீர் நீல நிறத்துடன் தடித்து இருக்குமானால் அது வாத பித்த கபங்களுக்குக் கெடுதியை உண்டாக்குவதாகும்.

உ. இலைப்பச்சையின் நிறத்தை ஒத்திருக்குமானால் வாத பித்த கபங்கள் கேடடைவதற்கு உண்டாகும் கொடிய நீராகும்.

4. கருப்பு நிற நீரின் வகைகள்

அ. குங்குமப்பூ நிறத்துள் கருமை நிறம் தோன்றுமானால் அந்த நீர் காமாலை நோயை உண்டாக்கும். இல்லாவிடில் பித்த நோய்களை உண்டாக்கச் செய்யும்.

ஆ. சிறுநீரானது முன்பு சொல்லப்பட்ட குங்குமப்பூ நிறத்துடன் கருமை கலந்த செம்மையும் சேர்ந்திருந்தால் அது இரத்தக் கெடுதியினால் உண்டாகின்ற நீராகும்.

இ. சிறுநீரில் கருமையும், சிறிது பச்சை நிறமும் கலந்திருந்தால் அது இரத்தத்திலுள்ள அழுக்குகளைத் தெரிவிப்பதாகும்.

ஈ. கருமை நிறமும் வெண்மை நிறமும் சேர்ந்து உண்டானநிறமுடையதுபோல் தோன்றின் அந்நீர் சிலேத்துமவாத தோஷங்கள் அதிகமானதைக் குறிக்கும். இது நெடுங்காலத்திற்கு முன் வெப்ப உற்பத்தியினால் உண்டானது என்று கூறுவர். இதனால் சுர நோயால் பீடிக்கப்பட்டவர்களும், வயோதிகர்களும் பாதிக்கப்படுவார்கள். கபத்தைத் தரக்கூடிய உணவுகளை அதிகமாக உண்பதால் இக்கொடிய நீர் உண்டாகும்.

5. வெண்மை நிற நீரின் வகைகள்

அ. சிறுநீர் வெண்மையாகவும், தெளிந்தும் இருந்தால் சுத்த சீதளத்தால் உண்டானதாகும். இந்நீரானது மருந்துகளுக்கு அடங்காது. இந்நீருள்ள நோயாளி கடலின் அலையில் சிக்கியவனைப் போல பிழைப்பது அரிதாகும்.

ஆ. சிறுநீர் மிகவும் வெளுத்தாலும் அதில் சளியைப் போல் விழுமானாலும் கபத்தின் மிகுந்த கொதிப்பால் வருகின்ற நீராகும். இது பாலின் நிறத்தை அடைந்தால் எலும்பை மிகுதியாக உருக்கிய நீராகும். முடிவில் இது எலும்புருக்கி நோயை உண்டாக்கும். இந்நீரில் சீழ்கலந்த கெட்ட நாற்றம் வீசுமானால் கர்ப்பப் பையினுள்ளும் கொப்புள் இடத்தினுள்ளும் ஆண்குறித் துளையினுள்ளும் புண் இருப்பதைக் காட்டும். அவ்வாறு புண் இல்லையானால் கல்லடைப்பு நோய் உண்டாகும் என்று அறிந்து கொள்ளலாம்.

6. நோயினால் ஏற்படக்கூடிய நீர் நிற வேற்றுமைகள்

கபம்-சந்நிபாதம்: விந்தைப் போன்று இறங்கும் சிறுநீர், கோழைநோய், சன்னிநோய் இரண்டையுங் குறிக்கும்.

உப்பு: சிறுநீர் விட்ட இடத்தில் உப்பு உறையும். அப்படி உறையாவிட்டால் அந்நீர் கெடுதியை விளைவிக்கும். சிறுநீர் மோரைப்போலவும், பாலைப் போலவும் தனித்தனியாக இறங்கினால் கொடிய வெப்பத்தால் உண்டான கூற்றுவனைப் போன்றதாகும்.

வெப்பம்: நீர் கெட்டுப்போன புலாலைக் கழுவின நீரின் நிறத்தையொக்குமானால், குண்டிக்காயின் வன்மை கெட்டுப்போனதாலுண்டாகும். இக்குறைவு கோழையும் குருதியும் கொதிப்படைந்ததனால் ஆகும். தடிப்பாயிருக்கும் சிறுநீரும், நெய்ப்பசை ஒத்திருக்கும். சிறுநீரும் மிகக்கொடிய தன்மையைக் காட்டும்.

குண்டிக்காய் துர்பலம்: நீரானது கெட்டுப்போன தசையைக் கழுவிய நீரின் நிறமுண்டாயிருக்குமானால் குண்டிக்காயினது வன்மைக்குறைவால் (பலவீனத்தால்) உண்டான நீராம். அந்த வன்மைக் குறைவானது கோழையுங் குருதியும் இரத்தமும் கொதிப்படைந்ததினால் பல நாட்களாக மெல்ல மெல்ல மறைந்துண்டானதாகும்.

சிறுநீரின் நிற இலக்கணம்

வாதநோய்: சிறுநீர் வெண்மையாயும், உதிரத்தின் நிறத்தையும் அடைந்தால் வாத நோயைத் தரும்.

பித்தநோய்: சிறுநீர் பழுத்த பொம்மன் மாசுப்பரத்தின் நிறத்தையும், கனமுள்ள சவ்வீரத்தின் ஒளியின் நிறத்தையும், எள்நெய்யின் நிறத்தையும் அடைந்தால் பித்த நோயைத் தருமென்று "சித்த சாரணவம்" என்னும் நூல் கூறுகின்றது.

கபநோய்: சிறுநீரில் வெண்ணிறமும், நுரையும், குமிழியும் இருக்குமானாலும் அல்லது அது சுத்தநீரைப் போலிருக்குமானாலும் நெய்யைப் போன்று இருப்பினும் அதில் பல நிறங்கள் கலந்து தோன்றினாலும் கபநோய் உண்டாகும்.

தொந்தநோய்: தொந்த நிறத்துடன் இழியும் சிறுநீரில் கருமை நிறமும் காணப்படும் என்று கூறுவர்.

பித்தக்காமாலை: சிறுநீர் மஞ்சள் நிறமாயும் தள்ளப்பட்ட உதிரத்தினை ஒத்ததாக இருக்குமானால் பித்தக் காமாலை நோயால் பிறந்தனவென்று "சித்தியவித்தியாதரம்" என்னும் நூல் கூறுகிறது.

மேகநோய்: சிறுநீரில் உதிரம் காணப்பட்டால் மேகநோய் அல்லது மகாநோய் உண்டாகும் என்று "நித்திய நாரதீயம்" என்னும் நூல் கூறுகிறது.

சுரநோய்: சுரநோயில், நீர் மஞ்சள் நிறமாக இருக்கும்.

அசாத்திய நீர் நிறம்

சுரநோயோ, மேகநோயோ தாக்கியிருக்கும் காலத்தில் சிறுநீர் மிகப் பெருக்கமாக இறங்குமானால் உயிரைப் போக்கும்.

நிறை இலக்கணம்: கனம் இன்றியும் தெளிவுடனும் இருக்கும் சீதள நிலைபெற்று கபத்தை இளக்கலா லுண்டாகியது. இந்நீர் நீர்ப்பையிலும், இந்திரியப் பையிலும், வன்மைக் குறைவால் உண்டானதென்று கொள்ளவேண்டும். நீர் தடித்து இறங்கினால் வாத, பித்த, கபங்களின் கெடுதலைக் காட்டும். இதனால் வீக்கம், கட்டிகள் உண்டாகும். இவை நாளுக்குநாள் குறைந்தால் நலனாகும். இல்லையேல் கொடிய வெப்பப் பிணிகள் பீடிக்கும்.

இயற்கை நீர்: மிக்கதடிப்பும், மிகத் தெளிவுமில்லாத நீர் சுகத்தைக் கொடுக்கும். உடலியற்கை நீராகும். இது மிகவும் நன்று.

மண இலக்கணம்: சீதளம் குறைந்த உடல் பெற்றவர் களுக்கு நீர்ப்பெருக்கத்துக்குள்ள நாற்றமுடன், அப்பெருக் கத்தின் நிறம், கனத்தைப் பொறுத்துச் சிறுநீர் இறங்கும்.

நீர்ப்பை நாளப்புண் நீர்: சிறுநீரிலிருந்து கொடிய மணம் வீசினால் மூத்திரப்பை மூத்திர தாளம் இவற்றில் புண் உள்ளதென்று உணரவேண்டும். அல்லது வாத, பித்த கெடுதலே என்று உணரவேண்டும். சிறுநீரில் புளிப்பு மணம் மிகுதியாக இருக்குமானால் அது உஷ்ணப்பிணி சம்பந்தப்பட்டதாகும். அந்த உஷ்ண நோயாளியை தீயினின்று உண்டாகும் நீர்போல சீதளத்தில் கொண்டு விடும்.

இரத்த மிகுதியால் உண்டாகும் நீர்: சிறுநீர் இரத்தமணம் வீசினால், இரத்த மிகுதியினால் உண்டாகியது என்று அறியவேண்டிது அல்லது இரத்த விருத்தியால் ஏற்பட்ட நோய்களின் கூட்டத்தைச் சார்ந்தது என மருத்துவநூல் ஆராய்ச்சியாளர்களின் கொள்கையாகும்.

பித்த விகர்ப்ப நீர்: கருமை நிற மானினிடத்து உண்டாகும் மணம் வீசினால் அந்நீர் பித்தத்தின் மாறுபாட்டால் விளைந்ததாகும்.

உடற்பசை நீர்: சிறுநீரில் புலால் நாற்றம் வீசுமானால் அது உடற்பசைக் கேட்டினாலாகும். இக்கேடு அப்பொழுது இல்லையானாலும், அது உண்டாவதற்குத்தக்க சமயம் என்று அறியவேண்டும். இந்நீர் மிக்க கெடுதலை உண்டாக்கு மென்று மருத்துவ நூல்கள் கூறுகின்றன.

நுரை இலக்கணம்: உடலுறுதிக்காக இருக்கும் பசை இளகினால் வாயு சிறுநீரில் சம்பந்தப்பட்டு, சிறுநீர் நுரையுடன் இழியும்.

காமாலை நீர்: நுரை பொருந்திய அந்நீர் மஞ்சள், கருமை, சிவப்பு நிறங்களைக் காட்டினால் காமாலை நோயை உண்டாக்கும் என்று கூறுவர்.

வளி, அழல், ஐயம் ஆகிய மூன்றும் குறையும் நீர்: சிறுநீர் நுரை குறைந்து இழிந்தால், வாத, பித்த, கபங்களின் வன்மை குறைந்து வருவதைக்காட்டும்.

பாண்டு நோயைக் காட்டும் சிறுநீர்: மிக்க அளவில் நீர்ப்பொருள்கள் அடங்கிய உணவை உட்கொண்ட போதிலும், சிறுநீர் இயற்கை அளவிற்குக் குறைவாக இருக்குமானால் பாண்டு நோயைக் காட்டுவதாகும். இந்நோயால் தவிர்க்க முடியாத பேதியும் அயர்வும் ஏற்படும்.

நெய்க்குறி

1. எள்நெய் விட்டுப் பார்க்கும் முறை

ஐக்குறி கொடுலட வானிழல் அமர்ந்தோர்
கைக்குறி தெரிந்தநங் கடவுளைத் துதித்தே
மெய்க்குறி நிறந்தொனி வீழிநா விருமலம்
கைக்குறி முழுவதூஉங் கற்றார் தம்மினும்
பொய்க்குறி மெய்க்குறி புகலும் எவர்க்கு
நெய்க்குறி யதனையிந் நீள்நிலத் துரைப்போம்.

சிறுநீரின் நிறத்தின் குறியால் நோயைக் கண்டுரிடிப்பா தற்காகக் கூறிய விதி: சிறுநீரில் ஒரு சிறுதுளி எண்ணெயை நடுவில் விட்டு, காற்றினால் எண்ணெய்த் துளி ஆடாதபடி வெய்யிலில் வைத்து, அந்த எண்ணெய்த்துளி போகின்ற வழியைக் கண்டு அத்துளி தெரிவிக்கும் குறிகளிலிருந்து நோயை வைத்தியர்கள் உணரவேண்டும்.

2. சிறுநீரில் எண்ணெய்விட்டுப் பார்க்கும் நீர்க்குறிப்புச் சக்கரம்

1. சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி கோதுமையின் வடிவத்தைப்பெற்றிருக்குமானால், அந்நீர் வாயு நோயைக் காட்டும்.

இதனால் உடம்பு பெருக்கும், முகம், விழி, மலம் கருத்திருக்கும். பல் வெளுத்திருக்கும், புருவம் தொங்கும், வாய் புளிக்கும், சரீரம் குளிர்ந்திருக்கும், கைகால் உளைச்சலுடன் குடல் புரட்டலாகி மலம் கட்டும், சுரம் காயும், வியர்வை தட்டும், கிராணி, மகோதரம், நீர்க்கோர்த்தல், சூலை, கிருமி, அண்டவாதம், மூலம் முதலிய நோய்கள் இருக்குமானால் வாதநோய் எனக்கொள்ள வேண்டும்.

இந்நோயைத் தக்க மருத்துவத்தில் குணப்படுத்தி விடலாம்.



2. சிறுநீரில் எண்ணெய்த்துளி விட்டுப் பார்க்கும்போது மோதிரத்தைப் போல் வட்டவளைவாக இருக்குமானால் அந்நீர் பித்த நோயைக் காட்டும்.

இதனால் உஷ்ணவாயு, சுரம், பைத்தியம், சோகை, உடம்பு காந்தல், புத்தி மயக்கம், சஞ்சலம், தாகம், பெரும்பாடு, இரத்தப் பிரமேகம், கிறுகிறுப்பு முதலிய நோய்கள் ஏற்படும்.



3. சிறுநீரில் எண்ணெய்த்துளி விட்டுப் பார்க்கும்போது மேலே கொடுக்கப்பட்டுள்ள சக்கரத்தின்படி இருக்குமானால் அந்நீர் கபநோயைக் குறிப்பதாகும். இதனால் சரீரம், நாவு, முகம், கண், மலம், சிறுநீர் இவைகள் வெளுத்திருக்கும். வெப்பு, க்ஷயம், ஈளை, இருமல், மந்தாரகாசம், ஜன்னி, விஷதோஷம், விக்கல், கால், கை முடக்கல், கரப்பான், இரணம், சூலை, காமாலை, பாண்டு, சோகை, சுரம் முதலிய நோய்களை உண்டாக்கும்.

4. மேலே கொடுக்கப்பட்டுள்ள சக்கரத்தின்படி நீரில் காணப்பட்டால் அந்நீர் வாதத்தில் வாதம் எனக்கொள்ளலாம்.

இதனால் உடல் நேர்ந்து வீங்கி வாடும், ஆயாசிக்கும், பதறும், நித்திரை பிடியாது, சாப்பாடு செல்லாது, கால், கை, திமிர் முதலிய நோய்களைப் பிறப்பிக்கும்.



5. மேலே கொடுக்கப்பட்டுள்ள வடிவத்தில் சிறுநீர் காணப்படுமானால் அந்நீர் வாதத்தில் பித்தம் எனக்கொள்ள வேண்டும்.

இதனால் வயிறு விம்மி வாய்வு தோன்றும், போக சக்தியை அதிகமாகத் தூண்டும், குழறும், புத்தி பேதிக்கும், உடம்பு குளிரும், கை கால் வீக்கம் உண்டாகும்.

6.மேலே கொடுக்கப்பட்டுள்ள சக்கரத்தைப் போன்று சிறுநீரில் காணப்படுமானால் வாதத்தில் கபம் எனக்கொள்ள வேண்டும்.

சரீரத்தில் வீக்கம், கபால நோய், குணமாறாட்டம், சரீரம் வெளுத்து உணவு உட்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டு பிதற்றல் உண்டாகும்.

மருத்துவம்: இந்நோயுற்றவர்களுக்கு வீரசெந்தூரம் மூன்று நாட்கள் கொடுத்து இச்சாபத்தியம் மேற் கொண்டால் மேற்கூறப்பெற்ற நோய்கள் குணமாகும்.



7. மேலே கொடுக்கப்பட்டுள்ள சக்கரத்தின் வடிவம் போன்று நீரில் காணப்பட்டால் பித்தத்தில் வாதம் என அறியவும்.

இக்குறி காணப்படுமானால் கழுத்து, கை, கால், நோயுண்டாகி சரீரம் வாடி பதறும், சுரம் உண்டாகும். புத்தி குறையும், கோபம் அதிகமாகும்.

மருத்துவம்: மேலே கூறப்பட்டுள்ள நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சித்தாதி எண்ணெய் மூன்று நாட்கள் தொடர்ந்தாற்போல் கொடுக்க பூரண குணம் உண்டாகும்.



8. மேலே கொடுக்கப்பட்டுள்ள சக்கரத்தின் வடிவம் நீரில் காணப்படுமானால் பைத்தியம், கிறுகிறுப்பு, வாயில் நீர் ஊறல், இளைப்பு, மாறாட்டம், வீக்கம் முதலிய நோய்களுண்டாகும்.

மருத்துவம்: மேலே கூறப்பெற்றுள்ள நோய்கள் பீடிக்கப்பட்டால் அயவீரச்செந்தூரம், வீரச்செந்தூரம், சண்டமாருதம் போன்ற மருந்துகளில் சரீர வன்மைக்கேற்ப அளவிட்டுக் கொடுக்க நான்கைந்து தினங்களில் குணமேற்படும்.



9. இவ்வீதக் குறி கண்டால் பித்தத்தில் கபம் என அறியவும்.

இதனால் வாய் பிதற்றல், வாய்க்குழறல், கோழை, வாய்நீர் ஊறல், வாந்தி, கழுத்துவலி முதலிய நோய்களைத் தோற்றுவிக்கும்.

மருத்துவம்: மேலே கூறப்பெற்றுள்ள நோய்களுக்கு இரசச்செந்தூரம், தங்கலிங்கச் செந்தூரம் போன்ற மருந்துகளை அளவிட்டுத் தக்க அனுபானங்களில் கொடுக்கக் குணமாகும்.

10. இவ்வீதக் குறி சிறுநீரில் காணப்படுமானால் கபத்தில் வாதம் எனக்கொள்ள வேண்டும்.

இதனால் கை கால் நரம்பு முதலியவற்றில் வலி உண்டாகிச் சுரம் ஏற்பட்டு மேல்விழி கீழாகவும், கீழ்விழி மேலாகவும் மிரள மிரள விழிக்கும். வாய் குழறிப்பேசும்.

மருத்துவம்: இந்நோயுற்றவர்களுக்குச் சண்டமாருதம், வீரம், வீரச்செந்தூரம், இரசச்செந்தூரம் போன்ற மருந்துகளைத் தக்க துணை மருந்துகளுடன் கொடுக்கக் குணமேற்படும்.

11. இவ்விதக்குறி சிறுநீரில் ஏற்படுமானால் கபத்தில் பித்தம் எனக்கொள்ளல் வேண்டும்.

இதனால் வாய் கசந்து பலவித பலவித சுவையைத் தரும். தைரியம் குன்றும், கோபம் அதிகரிக்கும். கண்ணில் அழுக்கு சேர்ந்து, நீர்வடியும், குரல் வேறுபடும்.

மருத்துவம்: இந்நோய்களுற்றவர்களுக்கு இலிங்க செந்தூரம் ஐந்தாறு நாட்கள் நோய்க்கேற்ற துணை மருந்துகளுடன் சேர்த்துக் கொடுக்கப் பூரண குணமேற்படும்.

12. இவ்விதக்குறி காணப்பட்டால் கபத்தில் கபம் என அறியலாம்.

இதனால் உடம்பில் அதிக வேதனையை உண்டாக்கும். விழி இரண்டும் வட்டமிடும். மனம் பதறும்.

மருத்துவம்: இந்நோய்க்கு வீரக்கட்டு, தாளகக்கட்டு, இலிங்கக்கட்டு இம்மூன்றையும் சேர்த்து இழைத்து மூன்று நாட்கள் உட்கொள்ளக் குணமாகும்.



13. இவ்விதக்குறி ஏற்பட்டால் திரிதோஷம் என்பார்கள்.

இதனால் சுரம் காயும், உடம்பு சீதளம் ஆகும். சற்று நேரத்தில் மயக்கமும் உண்டாகும். பிறகு சன்னி கண்டு உடம்பெல்லாம் நோகும்.

மருத்துவம்: மேற்கூறிய நோய்க்குச் சரீர வன்மைக் கேற்ப சித்தாதி எண்ணெயைத் தக்க துணை மருந்துடன் கொடுக்க மேற்கூறப்பெற்றுள்ள நோய்கள் குணமாகும்.

14. இவ்விதக்குறி சிறுநீரில் காணப்பட்டால் வாத, பித்த, கபம் என அறியவும்.

சுரம் காயும், பின்பு சரீரம், சீதளம் ஆகி சன்னி நோய் காணும்.

மருத்துவம்: நோய்க்கேற்ற துணை மருந்துடன் சண்டமாருதம் போன்ற மருந்துகளைச் சரீர வன்மைக்கேற்ப அளவிட்டுக் கொடுக்கக் குணமாகும்.

15. இவ்விதக்குறி காணப்பட்டால் கப வாத கபம் என அறியவும்.

இதனால் சுரம் காயும், சரீரத்தில் வியர்வை உண்டாகும். சற்று நேரம் சரீரம் உணர்ச்சியற்று இருக்கும்.

மருத்துவம்: இதற்குப் பூரணச் சந்திரோதய செந்தூரத்தை நோய்க்கேற்ற துணை மருந்துகளில் ஐந்து நாட்கள் கொடுக்கக் குணமாகும்.



16. இவ்விதக்குறி சிறுநீரில் காணப்பட்டால் இதனைப் பித்தத்தில் பித்தவாதம் எனக்கொள்ளவும்.

இதனால் சுரம் காயும், சரீரம் எல்லாம் பச்சைப் புண்ணாக வலி ஏற்படும். கோபம் அதிகரிக்கும், சன்னி காணும்.

மருத்துவம்: இதற்கும் சித்தாதி எண்ணெயை இடைவிடாது மூன்று தினங்கள் கொடுக்கக் குணமாகும்.

17. இவ்விதக்குறி கண்டால் இதையும் முக்குற்ற நோய் என்பார்கள். (கபத்தில் கபவாதம்)

இதனால் சுரம் காய்ந்து உடல் கனத்து நரம்பெல்லாம் பிகுவாய்த் தோன்றி வலிப்பை உண்டாக்கும். பிறகு சன்னி காணும்.

மருத்துவம்: நோய்க்கேற்ற துணை மருந்துடன் திருமால் சக்கர மாத்திரையை ஏழுநாட்கள் கொடுக்கக் குணமேற்படும்.



18. இவ்விதக் குறி கண்டால் "அசாத்தியம்" எனக்கொள்ள வேண்டும்.

இதற்குச் சிகிச்சை செய்தால் பயன் அளிக்காது.



19. இவ்விதக்குறி கண்டால் "அசாத்தியம்" எனக்கொள்ள வேண்டும்.

இதற்குச் சிகிச்சை செய்தால் பயன் அளிக்காது.



20. இவ்விதக்குறி கண்டால் "அசாத்தியம்" எனக்கொள்ள வேண்டும்.

இதற்குச் சிகிச்சை செய்தால் பயன் அளிக்காது.



21. இவ்விதக்குறி கண்டால் பித்தவாதப் பித்தம் என அறியவும்.

மருத்துவம்: இதற்குச் சித்தாதி எண்ணெய் மூன்று தினங்கள் கொடுத்துப் பிறகு 10 நாட்களுக்கு இரசச் செந்தூரம் கொடுக்கக் குணமாகும்.

22. இவ்விதக்குறி கண்டால் கப வாத பித்தம் என அறியவும்.

மேற்கூறப்பெற்ற மருந்தையே கொடுக்கலாம்.





23, 24, 25 படங்களிலுள்ள தோற்றங்கள் சிறுநீரில் காணப்படுமானால் சிகிச்சை செய்தாலும் பயனடைவது சந்தேகம் என்பதை அறியவேண்டும்.

26. பதுமை போல் கண்டால் சிகிச்சை செய்த போதிலும் பயன் கிடையாது.

27. கிளிப்பிள்ளையைப் போல் கண்டால் எவ்விதச் சிகிச்சை செய்தபோதிலும் பயன்படுவது சந்தேகம்தான்.

28. நந்தியாவட்டை மொக்கைப்போலும், அல்லி மலரைப்போலும் குறிகள் கண்டால் அந்த நோயாளிக்குப் பயமில்லை. இக்குறிகளைப் பற்றிச் சற்றேனும் சந்தேகப்பட வேண்டியதில்லை. சாத்தியா சாத்தியம், இதற்குத் தக்கபடி சிகிச்சை செய்தால் குணமடையலாம்.

29. எண்ணெய்த் துளியால் ஆலிலை, தாமரையிலை, நாமம் இவ்விதக்குறிகள் கண்டால் அசாத்தியம், நோயாளி குணப்படுவது சந்தேகம்தான்.

30. எண்ணெயைச் சிறுநீரில் விட்டவுடன் எண்ணெயானது மேற்கிளம்பாது. அடியில் நின்று விடுமாகில் அசாத்தியம். நோயாளி பிழைப்பதும், நோய் நீங்குவதும் சந்தேகம்தான்.

31. சிறுநீரில் விட்ட எண்ணெயானது மேல் நோக்காது நீரில் கலந்து கண்ணுக்குப் புலப்படாது மறைந்து விடுமாகில் அசாத்தியம். நோயுந்தீராது, நோயாளியும் பிழைக்க மாட்டான்.

32. சிறுநீரில் விட்ட எண்ணெயானது சரேலென்று பொங்கிக் காணாது மறையுமாகில் நோயாளிக்கு வெள்ளை நோய் இருக்கவேண்டும். சாத்தியம். தக்க சிகிச்சையால் குணப்படும். வெள்ளை நோயில்லாவிடில் அசாத்தியம். நோய் குணப்படாது. நோயாளியும் பிழைப்பது சந்தேகம்தான்.

33. சிறுநீரில் விட்ட எண்ணெயானது சிதறிப் பல துளிகளாய் ஒன்றோடொன்று சேராது பரவுமாகில் அசாத்தியம். நோய் குணப்படாது. நோயாளியும் குணப்படுவது சந்தேகம்தான். இது உண்மை.

நஞ்சு முறிவு

தாது வகுப்பு I

1. இரச நஞ்சு

இரச நஞ்சின் குறிகுணம்:

இரசத்தின் நஞ்சு வாயில் சிவந்த புண்களை உண்டாக்கும். ஈறுகள் சுரக்கும், வாயில் நீர் வடியும், வாய், தொண்டை இவைகள் வேக்காளம் ஏற்பட்டு வாய் நாற்றம் ஏற்படும். பசியை மந்திக்கச் செய்யும். வாயின்மேல் பட்டை பட்டையாகத் தேமல் போல படரும். பாதங்களில் வெடிப்பு ஏற்பட்டு நீர் வடியும், விக்கல், நீர் அடைப்பு, இரத்தபேதி முதலியவை ஏற்பட்டுக் காது கேட்காது, கண் தெரியாது, சொறி, சிரங்கு, புண், செம்படை போல் சரீரத்தில் படை உண்டாதல், நடுக்கல் முதலிய குணங்களை உண்டாக்கும்.

மேலும் வாய் பிதற்றல், துணியைக்கிழித்தல், கல்லாலடித்தல், வியர்வை அதிகமாகப் பெருகுதல் முதலியவை உண்டாகும்.

சுத்தி செய்யப்படாததும், நன்கு முடிக்கப் பெறாததுமான மருந்துகளை அளவுக்கு மீறி உட்கொண்டால் மேற்கூறப்பெற்ற குணங்களை உண்டாக்கும்.

இரச நஞ்சிற்கு முறிவு:

1. வெள்ளை முட்சங்கிலைச்சாறு அல்லது மிதி பாகல் இலைச்சாறு இவைகளில் ஏதாவது ஒன்றை வேளைக்கு 100மில்லி வீதம் காலை, மாலை இருவேளை 5 நாட்களுக்குக் கொடுக்கக் குணமாகும்.

2. அவுரிவேர்ப்பட்டையுடன் மிளகு சேர்த்து வெந்நீர் விட்டு அரைத்துச் சுண்டைக்காய் அளவு காலை, மாலை இருவேளை 5 நாட்கள் கொடுக்க இரச நஞ்சு முறியும்.

"இந்த இரத தோடத்துக் கவிழ்தம்
குண்டி யைப் பிடித்தா
லிசையுஞ் சாயப் பட்டை யொடிப்
பினிய வெல்லத்து டன் கொள்ளத்
தந்தங் கிட்டி னாற்கோவைத் தண்டுச்
சாறு நாக்கிலிடத்
தானே தீரும் நெஞ்சு வற்றித்
தளர வுள்ளே வெதும்பிடினும்
பந்து அடம்புங் கைகாலும் பற்றி
மிகவே யெரிந்திடினும்
பகரு முணர்வும் நினைவற்றும்
பதறிக் கிடந்தால் மூதண்ட
கந்தந் தனையே யாந்தரைத்துக்
கனவான்பால் வெள்ளாட்டுப்பால்
கனத்த பருத்திக் கொட்டைப்பால்
கண்டா லரைத்துக் கொள்வீரே."

1. குண்டியைப் பிடித்தால், சாயப்பட்டையைப் பொடித்து வெல்லத்துடனே கலந்து கொடுக்கவும்.

2. பல் கிட்டினால் கோவைத் தண்டுச் சாற்றை நாக்கில் பிழியத் தீரும்.

3. நெஞ்சு வற்றி, உள்வெதும்பி மேல் எரிவு எடுத்துக் கை, கால் மண்டியெரிந்து நினைவில்லாமற் கிடந்தால் அறுகங்கிழங்கை ஆய்ந்து எடுத்து அரைத்து, வெள்ளாட்டுப் பால், பசுவின்பால், பருத்திக்கொட்டைப்பால், மோர் இவைகளுள் ஏதாவதொன்றில் கரைத்து வடிகட்டிக் கொடுக்கவும்.

2. வீர நஞ்சு

வீர நஞ்சின் குறிகுணம்:

வீரமானது தண்ணீரில் விரைவில் கரையக்கூடியது. ஆகையால் இதை உட்கொண்டவுடன் இரத்தத்தில் கலந்து உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியது. ஆகையால் இதை உட்கொண்டவுடன் வாயில் ஓர் வகை களிம்புச் சுவையும், நீர் வடிதலும், நீர் ஊறுதலும் ஏற்பட்டு வாயில் புண் உண்டாகி உதடுகள் தடித்து, வாந்தி, பேதி, இரத்தபேதி முதலியவை ஏற்பட்டு உடம்பிலுள்ள தோல் வெடித்து நீர் வடியும். அதிகத் தாகத்தை ஏற்படுத்தி விக்கல், மூர்ச்சை, மயக்கம் முதலியன ஏற்பட்டு மரணத்தையும் உண்டாக்கும்.

வீர நஞ்சின் முறிவு:

1. பொதுவாக வீரத்தை உட்கொண்டவர்களுக்கு உடனடியாகக் கோழிமுட்டை வெள்ளைக்கருவும், தேநீரும் கலந்து அடிக்கடி கொடுக்கவேண்டும். பசும்பால், இளநீர் இவைகளிலும் கலந்து கொடுக்கலாம். இவ்வாறு இரண்டு மூன்று தினங்கள் தொடர்ந்து கொடுக்கவேண்டும்.

2. மூன்று தினங்களுக்குப் பிறகு சிறு நெருஞ்சிற் சாற்றைக் காலை மாலை இருவேளையும் 100 மில்லி வீதம் 10 தினங்கள் கொடுக்கவேண்டும். பசும்பாலில் கலந்தும் கொடுக்கலாம்.

3. அவுரி வேர்ப்பட்டையுடன் மிளகு சேர்த்து அரைத்து 5 தினங்கள் சுண்டைக்காய் அளவு காலை, மாலை இருவேளையும் கொடுக்கக் குணம் ஏற்படும்.

அண்டத்தின் வெண்கருவை யாவின்பா லிற்கலந்
துண்டுவர வீர னுரமகலுங் - கண்டறிவாய்
ஏணற் கொடியே யிளநீ ரருந்திடினு
மாணப் பெருமை வழுத்து. (கருவூ. தண்டகம்)

3. பூர நஞ்சு

பூர நஞ்சின் குறிகுணம்:

பூரமானது வீரத்தைப்போல் அவ்வளவு சீக்கிரம் நீரில் கரையாது. இது தற்கொலை செய்து கொள்வதற்குக் கையாளப்படுவது இல்லை. இதை உட்கொள்ள வேண்டிய அளவிற்கு அதிகப்பட்டால் பல்லீறு, நாக்கு, வாய், தாடையின் உட்பக்கம் புண்ணாகி வாய் திறக்க முடியாமல் நாவிலிருந்து நீர்வடிந்து எதையும் உட்கொள்ள முடியாது. மேலும் முகம் வீங்கி மாறுபட்ட தோற்றத்தைக் கொடுப்பதுடன் இரத்தபேதியும் ஏற்படும்.

பூர நஞ்சின் முறிவு:

வெண்பா

பகருவாய் பூரத்தைப் பாங்குடன்றின் றோர்கட்
கிகலரிய குல்லையின்சா றீக - தகவுடைய
ஏரண்ட நெய்யா மெழிலவுரி வேராகும்
சீர்கொண்ட பாகலிலை தேர்

1. துளசிச்சாற்றையேனும், சிற்றாமணக்கு நெய்யையேனும் பாகலிலைச் சாற்றையேனும் கொடுக்க வேண்டிய முறைப்படி 3 அல்லது 5 நாட்கள் கொடுக்க நஞ்சு முறியும். மேலும் அவுரிவேர்ப்பட்டையை வெந்நீர் விட்டரைத்து வேளைக்குச் சுண்டைக்காய் அளவு காலை, மாலை இருவேளை கொடுத்துவர குணம் ஏற்படும்.

2. நிலப்பனங்கிழங்கு, வல்லாரைவேர், பொன்னாங்காணிவேர், சிறுதேக்கு, தென்னங்குரும்பை வகைக்கு 35 கிராம் எடுத்து சிதைத்து இரண்டு லிட்டர் தண்ணீர் விட்டு எட்டொன்றாகக் காய்ச்சி 5 நாட்கள் காலை, மாலை இருவேளையும் 50 மில்லி அளவு உட்கொண்டுவர பூர நஞ்சின் வீரியம் குறையும்.

4. இலிங்க நஞ்சு

இதனால் வாய், உண்ணாக்கு, குரல்வளை, மார்பு, பெருங்குடல், சிறுகுடல் இவைகள் வெந்து புண்ணாகிக் காரம் பட வொட்டாது. வாயில் துர்நாற்றத்தையும், வயிற்றில் எரிச்சலையும், பசியின்மையையும் உண்டு பண்ணும்.

இலிங்க நஞ்சின் முறிவு:

1. சாதிக்காய்	17½ கிராம்
2. வால்மிளகு	,,
3. அவுரிவேர்ப்பட்டை	,,
4. கற்கண்டு	,,
5. செம்பருத்திவேர்ப்பட்டை	17½ கிராம்

மேற்கூறப்பெற்ற மருந்துகளை உரலில் இட்டுச் சிதைத்துக் குடுவையில் இட்டு 2 லிட்டர் தண்ணீர் விட்டு எட்டொன்றாகக் காய்ச்சி காலை, மாலை இருவேளை வீதம் 15 தினங்கள் உட்கொள்ளப் பூரண குணம் ஏற்படும்.

5. கெந்தக நஞ்சு

கெந்தகத்தைச் சரியாகச் சுத்தி செய்யாவிடினும், சரியாகப் பற்ப செந்தூரங்கள் முடிக்காமல் உபயோகப்படுத்தி வந்தால் நாளடைவில் நச்சுத்தன்மை உண்டாக்கும்.

இதனால் கண்கள் மஞ்சளாகப் பூத்திருத்தல், முகம் வெளுத்தல், உடம்பு மஞ்சளாகி நிறம் குன்றல், பற்கள் கறுத்துப் இருத்தல், இடைவிடாமல் வியர்த்தல், சிறுநீர் மஞ்சளாகப் போதல், வாயில் புகை நாற்றம் உண்டாகுதல், வயிற்றுவலி, வயிற்றுப்புசம் முதலிய குணங்களை உண்டாக்கும்.

கெந்தக நஞ்சின் முறிவு:

1. ஆவாரம்வேர்	35 கிராம்
2. தைவேளைவேர்	,,

3. அவுரிவேர்	70 கிராம்
4. சுக்கு	17½ கிராம்
5. மிளகு	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளைச் சிதைத்துக் குடுவையிலிட்டு 2 லிட்டர் தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாகக்காய்ச்சி வடிகட்டிக் காலை, மாலை இருவேளை மூன்று நாட்கள் கொடுக்க கெந்தகத்தால் ஏற்பட்ட குற்றம் நீங்கும்.

வாரப்பா யிளநீரில் வண்டா மரைவிதையை
நேரப்பா யரைத்துவடி நீருண்பாய் - கார்ப்பான
நன்மிளகு நீலியின்வேர் நற்சீர கஞ்சமனாம்
மன்னீரிற் காய்ச்சியதை மாட்டு

1. தாமரைவித்தை இளநீரில் அரைத்து வடித்து உண்ண நஞ்சு முறிவாகும்.

2. மிளகு, அவுரிவேர், சீரகம் இவைகளைச் சமனெடை எடுத்துக் குடிநீரிட்டுக் கொடுக்கக் கந்தக நஞ்சு முறியும்.

6. தாளக நஞ்சு

தாளக நஞ்சினால் நகக்கண்களில் இரத்தம் கட்டிப் புண்ணாகி சீழ்வடிதல், வயிற்றில் எரிச்சல், மூக்கிலிருந்து இரத்தம் ஒழுகல், வாய்சுவை கேடடைதல், தலையில் அரிப்பு ஏற்பட்டு முடி செம்பட்டையாதல், மேற்சுவாசத்தை உண்டாக்குதல், வாயில் நீர் வடிதல், வாந்தியை உண்டாக்கல், அடிவயிற்றில் வீக்கம், தீராத்தலைவலி, விக்கல் முதலிய குறிகுணங்களை விளைவிக்கும்.

தாளக நஞ்சின் முறிவு:

1. அவுரிவேர்ப்பட்டை	70 கிராம்
2. வெட்டிவேர்	35 கிராம்
3. சீரகம்	17½ கிராம்
4. மிளகு	,,
5. தென்னங்குரும்பை	,,

6. சீனாக்காரம்	17½ கிராம்
7. கறியுப்பு	,,

மேற்கூறப்பெற்ற சரக்குகளை அளவுப்படி குடிநீரிட்டுக் கொடுக்கத் தாளகத்தினால் ஏற்பட்ட நஞ்சு தீரும்.

காலை, மாலை இருவேளையும் 50 மில்லி குடிநீர் வீதம் 48 நாட்கள் கொடுக்கவேண்டும்.

7. வெள்ளைப் பாஷாண நஞ்சு

இதைத் தற்கொலை செய்து கொள்வதற்காகவே அதிகமாகக் கையாளுகிறார்கள். ஏனெனில் இது சிறு அளவிலேயே மரணத்தை விளைவிக்கக்கூடியது.

இதனால் இரத்த முறிவு ஏற்பட்டு உடலில் சிரங்கு, கொப்புளங்கள் உண்டாகும். கை, கால், விரல்கள் மடங்கி விகாரத்தைக் கொடுக்கும். முக வீக்கம் ஏற்பட்டு மூக்கு பூதத்தின் மூக்கைப்போல் காட்சியளிக்கும். மேல்வாய், உதடு, நாக்கு இவைகள் தடிப்பு ஏற்பட்டு "நா" பேசுவதற்கு இயலாது. வாயிலிருந்து நீர்வடியும், வயிற்றில் எரிச்சல், வாந்தி, பேதி இவைகளில் இரத்தம் காணல், நீரடைப்பு, அதிக நீர்வேட்கை, மூச்சுத்திணறல், வியர்த்தல், வாய் பிதற்றல், அறிவு மங்கல், தலைநோய் மயக்கம் முதலியவை ஏற்பட்டு சரீரம் வீங்கி மரணத்தை உண்டாக்கும். இதற்கு உடனடியாகப் பரிகாரம் செய்யாவிடில் மரணத்தை உண்டாக்கும்.

இது நாள்பட்ட நஞ்சாகில் சீக்கிரத்தில் கொல்லாது. தேகம் முழுவதும் தினவெடுத்தல், நமைச்சல், சொறிபோலப் பக்கு வீழ்தல், காமாலை, மயக்கம், தலைவலி, அசீரணம், அதிசாரபேதி முதலிய குணங்கள் உண்டாகும்.

வெள்ளைப்பாஷாண நஞ்சின் முறிவு:

1. இதற்கு உடனடியாக முட்டையின் வெள்ளைக்கரு தேநீர் இவை இரண்டையும் நன்கு அடித்து அடிக்கடி கொடுக்கவேண்டும்.

2. அவுரிவேர், முசுமுசுக்கைவேர், ஏலக்காய், படிக்காரம் இவை வகைக்கு 10 கிராம் எடுத்துச் சிதைத்து 2 லிட்டர் தண்ணீர் விட்டு எட்டொன்றாகக் காய்ச்சி ½ மணி நேரத்திற்கு ஒருமுறை 100 மில்லி அளவு 5 தினங்களுக்குக் கொடுக்க வேண்டும். முட்டையின் வெள்ளைக்கருவும், தேநீரும் நன்கு அடித்துக்கொடுக்க வேண்டும். பிறகு 15 தினங்களுக்குத் தினம் மூன்று வேளை மேற்கூறிய குடிநீரையே கொடுத்துவர வேண்டும்.

உணவு: தாய்ப்பாலைத் தவிர்த்து எந்தவித உணவும், (குணமடையும்வரை) கொடுக்கக்கூடாது.

(வேறு)

"கேளப்பா வாந்தியுடன் பித்த மீறில்
கிருபையுடன் மிளகுநீர் குடிக்கத் தீரும்
வேளப்பா பாஷாணந் தின்ற பேர்க்கு
விதமாக மிளகொருசேர் தன்னை வாங்கி

நாளப்பா அரைத்தரைத்தே யுள்ளுக் கீய
நன்மையுள்ள பாஷாணம் வீறு கெட்டுத்
தாளப்பா மலத்துடனே மலமாய்ப் போகுந்
தயவான மாற்றறிந்து தனதாய் நில்லே"

8. கௌரி பாஷாண நஞ்சு

கௌரி பாஷாணத்தின் குறிகுணம்:

இது வெள்ளைப்பாஷாணத்தின் இனத்தைச் சேர்ந்தது. வெள்ளைப் பாஷாணத்தைப் போல் உடனடியாக விஷமிக்காவிட்டாலும், சில மணி நேரங்களில் விஷமிக்கும், வெள்ளைப் பாஷாணத்தின் நச்சுத்தன்மையையே பெற்றிருக்கும்.

கௌரிபாஷாணத்தின் முறிவு:

முள்ளைவேர்பட்டை 9 கிராம், கரியுப்பு 9கிராம், பனங்கற்கண்டு 9 கிராம் சேர்த்துக் குடிநீரிட்டுக் கொடுக்க நச்சுத்தன்மை போகும்.

இதற்கும் வெள்ளைப்பாஷாணத்திற்கும் மேற்கண்ட நச்சு முறிவையே பயன்படுத்த வேண்டும்.

9. மிருதார் சிங்கி

நஞ்சுக் குறிகுணம்:

வாயில் புண், தொண்டை வறட்சி, நாவெடிப்பு, சரீரத்தில் சொறிப்புண் ஆகியவைகள் உண்டாகும்.

முறிவு:

புங்கன்வேர்ப்பட்டை அல்லது அவுரிவேர்ப் பட்டை ஏதாவது ஒன்றை நீரிலரைத்து உட்கொண்டால் மிருதார்சிங்கியினால் உண்டாகும் நச்சுத்தன்மை நிவர்த்தியாகும்.

10. அப்பிரகம்

அப்பிரகத்தை நன்கு சுத்திசெய்து மருந்துகள் செய்யாவிடின் இதனின் நஞ்சு காசநோய் உள்ளவர்களைப் போல் இருமல், ஈளையைத்துப்புதல், சுவாசம் தடைப்பட்டு மார்பில் ஓர்வித வலியை ஏற்படுத்தி, உப்புச நோயை உண்டாக்கி மரணத்திற்கும் ஏதுவாக்கும்.

முறிவு:

வெற்றிலைச்சாற்றையும், இஞ்சிச்சாற்றையும் காலை, மாலை இருவேளை 50 மில்லி முதல் 100 மில்லி உட்கொள்ளக் குணம் ஏற்படும்.

11. கண்ணாடி

நஞ்சுக்குறிகுணம்:

தற்கொலை செய்து கொள்வதற்காகக் கண்ணாடி, மாணிக்கம், வைரம் ஆகியவைகளைத் தூள்செய்து உட்கொள்வதுண்டு.

இவைகளை உட்கொண்டவுடன் வயிற்றில் புரளும் போது அறுத்து இரணத்தை உண்டாக்கி வயிற்றுவலி, மலத்தில் இரத்தம் கலந்து விழல் முதலிய குணங்களுடன் மரணத்தை உண்டாக்கும்.

முறிவு:

இதற்கு வாழைப்பழம் முதலிய பசையும், வழவழப்பு முள்ள பொருள்களைக் கொடுத்தும், விளக்கெண்ணெயைக் கொடுத்தும் வயிற்றைக் கழிக்க வேண்டும்.

தாது வகுப்பு II

1. நெய்

நஞ்சுக்குறிகுணம்:

வயிற்று மந்தம், வயிற்றுப்புசம், புளியேப்பம், பேதி, ஆசன அடைப்பு முதலியவை உண்டாகும்.

முறிவு: நெய்யை அளவிற்கு மீறி உண்டவர்க்குப் பசுவின்பால் குடித்தால் நஞ்சின் வேகம் தணியும்.

2. நெய், தேன்

நஞ்சுக்குறிகுணம்:

நெய்யையும், தேனையும் ஒரே அளவாகச் சேர்த்துக் குடித்தால் வயிற்றுவலி, வாந்தி, உடல் கொதிப்பு, நீர் எரிச்சல், வாயில் நீர் சுரத்தல் முதலிய குணங்களை உண்டாக்கிக் கடைசியில் வாத நோயை வருவிக்கும்.

முறிவு: நெய்யும், தேனும் அளவாகக் கலந்து உட்கொள்ளும் நஞ்சிற்குக் கரியைத் தண்ணீர் விட்டரைத்து உண்ண மேற்படி நஞ்சு வேகம் தணியும்.

3. குன்றிமணி

நஞ்சுக்குறிகுணம்:

இதன் பருப்பு அதிகப்படியான நச்சுத்தன்மை பொருந்தியது.

வாந்தி, வயிற்றுக்கடுப்பு, மயக்கம், உடல் அழற்சி, வயிற்றெரிச்சல், பேதி, மந்தம் முதலியவற்றை விளைவித்து மரணத்தை உண்டாக்கும்.

முறிவு: 1. வெங்காரத்தைப் பொரித்து நான்கு கிராம் தண்ணீரில் கரைத்து உண்ணக் குணமாகும்.

2. விடத்தாரி வேரை அரைத்து ஒரு சுண்டைக்காய் அளவு வெந்நீரில் கரைத்து உட்கொள்ள குன்றிமணியின் நச்சுத் தீரும்.

4. நெல் வேர்

நஞ்சுக்குறிகுணம்:

இதனால் வாந்தி, வயிற்று உப்புசம், பசிமந்தம், பேதி, சுவையின்மை முதலியன ஏற்படும்.

நெல்வேரை அரைத்து எண்ணெயுடன் சேர்த்து உட்கொண்டால் மரணத்தையும் விளைவிக்கும்.

முறிவு: 1. பேய்ப்பீர்க்குக் குடிநீர் உட்கொள்ளக் குணமாகும்.

2. எலுமிச்சம்வேர் , விலாமிச்சம்வேர் இரண்டும் சமனெடை எடுத்து குடிநீரிட்டு உட்கொள்ளக் குணமாகும்.

3. நெல் வேருடன் எண்ணெய் சேர்த்து உட்கொண்டவர்க்கு எருக்கிலைச் சாற்றைக் கொடுத்தால் நஞ்சின் வேகம் தணியும்.

5. நேர்வாளம்

நஞ்சுக்குறிகுணம்:

வாய் குமட்டல், வாந்தியும், பேதியும் அதிகமாதல், வயிற்றில் புண் உண்டாகுதல், வாயில் நீர் ஊறல், கண் சொருகுதல், மயக்கம், இளைப்பு, கெண்டைச்சதையில் ஓர் வித வலிப்பு உண்டாகுதல், வாய் கசத்தல், அடிக்கடி மூர்ச்சை உண்டாகுதல் முதலியன ஏற்பட்டு மரணத்தையும் விளைவிக்கும்.

முறிவு: நேர்வாளத்தை உட்கொண்டவர்களுக்கு உடனடியாக முறிவு செய்யாவிடில் மரணம் ஏற்படும். ஆகையால் உடனடியாக எருமைச் சாணத்தைத் தண்ணீரில் கரைத்து வடிகட்டிய நீரில் சிறிது தேன்விட்டுக் கொடுக்க வேண்டும்.

வாந்தியும், பேதியும் நிற்கும்வரை மணிக்கு ஒருமுறை கொடுத்துவர வேண்டும்.

வசம்பு சுட்ட சாம்பலையும், புளிக்கோதின் சாம்பலையும் வகைக்கு 7 கிராம் எடுத்து 1 லிட்டர் தண்ணீர் விட்டு எட்டொன்றாகக் காய்ச்சி எரித்து எடுத்துக்கொண்டு மணிக்கு ஒருதடவை, பேதியும், வாந்தியும் நிற்கும்வரை கொடுக்கவேண்டும்.

6. மஞ்சள் அலரி

நஞ்சுக்குறிகுணம்:

இதனால் வாந்தி, பேதி, வாயில் நுரை தள்ளல், வயிற்றுக்கடுப்பு, மயக்கம், பற்கிட்டிக் கொள்ளுதலாகிய குறிகுணங்களை விளைவித்து விஷமித்த சில மணி நேரத்திற்குள் மரணத்தை உண்டாக்கும்.

அலரி வேரை அரைத்து நல்லெண்ணெயில் குழைத்துச் சாப்பிட்டுக் குளிர்ந்த நீரில் குளித்துவிட்டால் 30 நிமிடங்களில் மரணத்தை உண்டாக்கும்.

முறிவு: 1. அலரி வேரை நல்லெண்ணெயில் குழைத்துச் சாப்பிட்ட விஷத்திற்கு கடுக்காய் 9 கிராம் எடுத்து குடிநீரிட்டுக் கொடுக்கக் குணம் ஏற்படும்.

2. சோற்று உப்பை நீரில் கரையாத அளவு வரையில் நன்கு கரைத்து உடனடியாகக் கொடுத்தால் வாந்தியை உண்டாக்கும். வயிற்றிலுள்ள நச்சுப் பொருள்கள் வெளிவரும்.

மேற்படி உப்பு நீரை அடிக்கடி கொடுத்து உள்ளிருக்கும் விஷத்தன்மைகளைப் போக்கிப் பிறகு படிக்காரச் செந்தூரத்தை 2 கிராம் எடுத்து கடுக்காய்க் குடிநீருடன் மணிக்கொரு தடவை கொடுக்க அலரியின் வீறு தணியும்.

7. அபின்

நஞ்சுக்குறிகுணம்:

இது போஸ்த்தக்காயின் (கசகசா காய்) பால். இதை அளவிற்கு மீறி உட்கொண்டால் ஒருவிதக் களிப்பை உண்டாக்கிப் பிறகு சரீரம் உணர்ச்சியற்றுப் போய் தலை சுற்றல், சோம்பல், மந்தம், மலக்கட்டு, வருத்தமாய் மூச்சு விடல், மூச்சுத்தடை, முகம் வெளுத்தல், வியர்வை விடல், கண்மணி குறுகல், சிலசமயம் விரிதல், சிலவேளை வாந்தி, இழுப்பு, முகமும் வாயும் கோணிச் சித்தப்பிரமை போல் ஏற்பட்டுச் சிலவேளை மரணத்தையும் உண்டாக்கும்.

முறிவு: அபினியைத் தின்ற நஞ்சுக்கு நெய்யையாவது, வெங்காயத்தையாவது, பழச்சாற்றையாவது, சுக்குத்தூளை யாவது, சுக்குக்குடிநீரையாவது உட்கொள்ள விஷவேகம் தணியும்.

8. கஞ்சா

நஞ்சுக்குறிகுணம்:

இது ஒரு மயக்கத்தைக் கொடுக்கக்கூடிய பொருள், இதன் இலை, மொக்கு, கட்டை முதலிய எல்லாப் பாகங்களுக்கும் போதை கொடுக்கும் தன்மை உண்டு.

இதைத் தற்கொலை செய்யும் பொருட்டும், கர்ப்பத்தை அழிக்கும் பொருட்டும், தாது விருத்தியுண்டாவதற்கும், பெரும்பாடு, வயிற்றுக்கடுப்பு, பேதி, அதிசாரம் முதலிய வற்றிற்கும் கையாளுவார்கள்.

அப்படிக் கையாளுவதில் அளவிற்கு அதிகமாக உபயோகப்படுத்தினால் ஆகாயத்தில் பறப்பது போன்ற மயக்கம், ஆடுதல், பாடுதல், சிலவேளை யாருடனும் பேசாமல் பிரமை பிடித்தவன்போல இருத்தல், கண்மணி விசாலித்தல், அடிவயிற்றிலும், மார்பிலும் வலியும் எரிச்சலும் உண்டாதல், மாரடைப்பு, வாயும், நெஞ்சும் உலர்தல், கண்எரிதல், வாந்தி இவைகள் உண்டாகி மரணத்தையும் ஏற்படுத்தும்.

முறிவு:

1. எலுமிச்சம்பழச்சாறு
2. வாழைப்பட்டைச்சாறு
3. சுக்குக் குடிநீர்

மேற்கூறப்பட்ட மூன்றில் ஏதாவது ஒன்றை நஞ்சின் வன்மைக்குத் தக்க அளவு உட்கொண்டால் உடனடியாக நஞ்சின் வேகம் தணிந்து குணம் உண்டாகும்.

சீவ வகுப்பு

இது உயிருள்ள அஃறிணை, உயர்திணை என்னும் இருவகைப் பிராணிகளின் கடியால் உண்டாகும் நஞ்சாம்.

நச்சுயிர்களின் எண்ணிக்கை

1. நல்லபாம்பு (இதில் ராஜா ஒன்று)	8
2. விரியன் பாம்பு	16
3. வழலைப்பாம்பு	4
4. மூக்கன்	2
5. சுருட்டை	4
6. சாரை	5
7. கொம்பேறி மூக்கன்	2
8. கருநாகம், பரநாகம், கன்னெஞ்சன், ஊமை, கண்ணெரியன் என்னும் நாகம்	5
9. பச்சைப்பாம்பு	1
10. சவட்டுப்பாம்பு	2
11. மண்ணுளிப்பாம்பு	1
12. புடையன் பாம்பு	16
13. மன்றெலி	16
14. இருதலை மணியன்	1
15. துன்பம் விளைவிக்கும் எலி	16
16. நஞ்செலி	1
17. சுண்டெலி	1
18. செய்யான்	6
19. ஆறுகால் பூச்சி	4
20. சிலந்திப்பூச்சி	4
21. புலிமுகப்பூச்சி	1
22. பல்லி	16
23. பூரான்	8
24. வண்டு	120
25. ஓந்தி	10
26. செவ்வட்டை	8

27. அரணை	4
28. தேள்	12
29. நட்டுவாக்களி	4
30. தவளை	10
31. அட்டை	6
32. முதலை	3
33. புலி	5
34. பூனை	5
35. பேய்நரி	1
36. பேய் நாய்	1
37. பேய் கீரிப்பிள்ளை	1
38. நாய்	1
39. நரி	1
ஆகமொத்தம்	330

மேற்கூறிய முந்நூற்று முப்பது அன்றியில் தண்ணீரில் வாழும் உயிர்கள் கணக்கில் அடங்காமல் உள்ளன.

விஷப்பாம்பின் எண்ணிக்கை 64 வகைப்படும்

அவை :

1. படம் எடுத்தாடும் பாம்பு	8
2. விஷப்பற்கள் கொண்டு சீறிப்பாய்ந்து தீண்டும் விரியன்	8
3. சாடிக்கடிக்கும் விரியன்	4
4. புடையன் பாம்பு	6
5. மண்ணுளிப்பாம்பு	6
6. சாரைப்பாம்பு	3
7. சுருட்டைப்பாம்பு	4
8. கூழைப்பாம்பு	2
9. கொம்பேறி மூக்கன் பாம்பு	2
10. சாணாக மூக்கன் பாம்பு	2
11. வழலைப்பாம்பு	6
12. தண்ணீர்ப்பாம்பு	6

13. பச்சைப்பாம்பு	2
14. இருதலை மணியன்	1
15. மலைப்பாம்பு	5
16. பூநாகம்	1
ஆக மொத்தம்	64

மேற்கூறிய வகைகளின்றிச் சில விஷங்கள் பல உள்ளன.

நல்ல பாம்பின் பிறப்பு

நாகப்பாம்புகள் ஆனித்திங்களில் புணர்ந்து, ஆடி ஆவணித் திங்களில் வயிறுளைந்து, கார்த்திகை மாதத்தில் வெள்ளெருக்கன் பூவின் நிறத்தையுடைய 248 முட்டைகளை இட்டு ஏழு நாட்கள் அடைகாக்கும். அம்முட்டைகளில் ஆண்கரு முட்டைகள் முகிழ்விரியாத எருக்கன் மொக்கைப் போன்றும், பெண் கருமூட்டைகள் வாகை அரும்பைப் போன்றும் இருவகையாக இருக்கும்.

மேற்கூறப்பெற்ற முட்டைகளையீன்ற தாய்ப்பாம்பு ஏழுநாட்களில் 228 முட்டைகளை உட்கொண்டு விடும். 4முட்டைகள் உடைந்துவிடும். மற்றைய 16 முட்டைகளும் குஞ்சு பொரித்துக் குட்டிகளாக உலவும். அக்குட்டிகளுக்கு உளை போன்ற 24 கால்கள் இருக்கும். இவைகள் பிறந்த 28நாட்களில் படம் எடுத்தாடி விஷத்தைப் பெற்றுக்கொண்டு தனித்தனியே பிரிந்துவிடும். 60-ஆம் நாளில் சட்டை உரிக்கும் என்றும் ஆறு மாதங்களில் வயிறு, நஞ்சு, வால் இவை ஒளி பொருந்தியதாக இருக்குமென்றும், வாயின் கீழ்வரிசையில் காளி, காளாத்திரி என இரண்டு பற்களும், மேல் வரிசையில் எமன், எமதூதன் என்ற இரண்டு பற்களும் உண்டென்றும், சித்தர், ஆரூட நூல் முதலியன கூறுகின்றன.

கடிவாய் மணத்திலிருந்து இன்ன பாம்பு கடித்ததென அறிதல்

பாம்புகடித்து பல் அழுந்திய இடத்தை நுகர்ந்து பார்த்தால்

1. தாழை மலரின் மணம் கமழின் – நல்ல பாம்பு
2. பாதிரிப்பூ மணம் கமழின் – வழலைப்பாம்பு

3. புளியம்பூ மணம் கமழின் – விரியன் பாம்பு
4. மல்லிகைப்பூ மணம் கமழின் –மண்டலிப்பாம்பு
5. மிளகு, சுக்கு இவைகளின் மணம் கமழின்–சிறியபாம்பு

மேற்கூறியவாறு பாம்பின் கடிவாயிலிருந்து இன்ன பாம்பு கடித்தது என அறியலாம். எந்தவித மணமும் வீசாவிடின் பாம்புக் கடியல்ல என்று உணர்ந்து மற்ற ஜெந்துக்களின் கடி என்று ஆராய்ந்து அறியவேண்டும்.

பாம்புக்கடியால் தீயகுணத்தை உண்டாக்கும் இடங்கள்

அரசமரம், ஆலமரம், ஆற்றுத்திட்டு, ஏரிக்கரை, கிணறு, சந்தை கூடுமிடம், சுனைக்கரை, தேரடி, நதிக்கரை, நந்தவனம், நாணற்புதர், நீர் வற்றிய தாமரைத் தடாகம், பாழடைந்த கோவில், வீடு, ஊர், புதுமனை, புற்று, பிரப்பம்புதர், புளியமரம், புன்னை மரம், மயானம், முகத்து பாரம், முச்சந்தி, முருங்கைமரம், மூங்கிற்புதர், யாகசாலை, கோவில்கள் முதலிய இடங்களில் எந்தச் சாதிப் பாம்பாகிலும் காலை அல்லது மாலைப்பொழுதில் கடித்தால் அதனால் ஏற்படக்கூடிய விஷம் தீராது. மரணத்தையே விளைவிக்கும்.

பாம்புக்கடியால் தீயகுணத்தை உண்டாக்கும் அவையவங்களும், நேரமும்

1. பஞ்சேந்திரியம், தலை, நெற்றி, புருவ மையம், தாடை, உதடு, தாழ்வாய்க்கட்டை, தோள், நெஞ்சு, அக்குள், மார்பு, அடிமார்பு, உள்ளங்கை, வயிறு, தொப்புள், ஆண்குறி, பெண்குறி, குதம், உள்ளங்கால் இவ்விடங்களில் கடித்தால் மரணத்தை உண்டாக்கும்.

2. நேரம்: அயர்ந்து நித்திரை செய்கின்ற காலம், இடி அல்லது மின்னல் உண்டாக்கும் காலம், பாம்பு அடைகாக்கும் சமயம், சூரியோதய காலம் இச்சமயங்களில் கடிக்க விஷம் எளிதில் தீராவாம்.

தீராத விஷக் குறிகுணம்

பாம்புக்கடி விஷத்தால், தலைமயிர் உதிர்தல், மூர்ச்சை, மேல்சுவாசம், மார்பு கனத்தல், குத்தல், வாந்தி, விக்கல், இருமல், தாகம், உடல்சோர்தல், கண்சிவத்தல், கண் கறுத்தல், தொண்டை அடைப்பு, முதுகும், ஆண்குறியும் கோணுதல், முகம் சில்லிட்டுக் கறுத்தல், வாயில் நுரை தள்ளல், கால்கள் தளர்தல், நவத் துவாரங்களிலும் இரத்தம் வருதல், சரீரத்தில் உள்ள அவையவங்களில், காலும், கையும் கறுத்தல் பிறர் முகம் தெரியாவிட்டாலும் மரணம் நிச்சயம்.

பாம்பு கடித்தவுடன் படத்தை விரித்தாடினாலும், நிலத்தில் விழுந்து புரண்டாலும், கடித்த இடத்தில் ஆடி அசைவற்றுக் கிடந்தாலும் விஷம் தீராது.

நாகங்களில் ஆண் பெண் அறிதல்

பெண் நாகத்திற்குக் கடைக்கண் கவர்ந்திருக்கும். கண் புடைத்திருக்கும். முட்டையின் மீது அடைகாக்கும். விடக்கூடிய மூச்சு உளுந்து வாடை வீசும். படம் ஓர்புறம் ஒதுங்கி நிற்கும். மனிதர்களைக் கண்டால் மருண்டு ஓட்டம் பிடிக்கும்.

ஆண் நாகத்திற்குக் கடைக்கண் கருத்திருக்கும், கடி, விஷம் கொடியது. படங்களின் இரண்டருகும் சரியாக இருக்கும். இரேகை ஒத்திருக்கும்.

பாம்பு கடிப்பதற்குரிய காலங்கள்

பாம்புகளுக்குப் பசி ஏற்பட்ட போது அவைகள் இரைக்காக வெளிச்செல்லும் வாரங்களிலும், இடி மின்னல் இவைகளின் அதிர்ச்சி, ஒளி இவற்றினால் கோபம் மேலிட்டிருக்கும் சமயங்களிலும் மனிதர் எதிர்ப்பட்டால் கடிக்கும்.

பாழடைந்த கோயில், மனை, புதர்கள், இருண்ட காடுகள், மரப்பொந்துகள், மலைகள், புற்றுகள் ஆகிய இடங்களில் தங்கியிருக்கும். அதுபோது அவற்றிற்குத் தொந்தரவு கொடுத்தாலும் கடிக்கும்.

விஷப்பற்கடிகளை அறிதல்

பாம்புகளுக்கு விஷப்பற்கள் நான்கு உண்டு. அவைகளில் மேல் வரிசையில் இரண்டும், கீழ்வரிசையில் இரண்டும் அமைந்திருக்கும். மேல் வரிசையில் உள்ள பற்களுக்கு (1) கானி, (2) காளாஸ்திரி என்றும் கீழ் வரிசையில் உற்ற பற்களுக்கு (3) நீலி, (4) நீலகண்டி என்றும் கூறுவர். இப்பற்கள் நான்கும் தூண்டில் முள் போன்று வளைந்து துவாரங்கள் உள்ளவாய் இருக்கும். பாம்பு ஒருவரைக் கடித்தால் விஷம் உள்ள பல்லினது துவாரத்தின் வழியாய் விஷம் சென்று இரத்த நாளத்தில் சேர்ந்து உடல் முற்றும் பரவி உடலை மயக்கி மரணத்தை உண்டாக்கும்.

மேற்குறிப்பிட்ட நான்கு பற்களின் கடிகள் இருக்குமானால் 96 நாழிகைக்குள் மரணம் ஏற்பட்டுவிடும். எந்தவித மருந்துகளும், மந்திரங்களும் பலிதமாகாது.

பற்கடி விஷங்களில் தீரக்கூடியதும், தீராத குறிகளும்

1. ஒரு பற்கடியின் விஷம் தோலைப் பற்றி நிற்கும். இதற்குக் கால்கடி என்று பெயர். இந்நஞ்சை மூலிகைகளின் பரிகாரத்தினால் முறிப்படுத்தி விடலாம்.

2. இரண்டு பற்கடி விஷம் எலும்பைப் பற்றி நிற்கும். இதற்கு அரைகடி என்று பெயர். இந்நஞ்சை மருந்துகளினால் முறிப்படுத்தி விடலாம்.

3. மூன்று பற்கடி விஷம் எலும்பைப் பற்றி எரும். இதற்கு முக்கால் கடி என்று பெயர். இந்நஞ்சு மூலிகைகளினாலும், விஷ ராஜாங்கமையினாலும் குணம் ஏற்படும்.

4. நான்கு பற்கடி விஷம் மூளையைப் பற்றி ஏறும். இதையே முழுக்கடி என்று கூறுவர்.

இந்நஞ்சு மணி, மந்திர, மருந்துகளினால் நீங்குவது கடினம்.

மண்டலி

மண்டலியில் பதினாறு வகையுண்டு

பொதுக்கடி குணம்: வாய்நீர் உவர்ப்புத் தன்மை யுடையதாக இருக்கும். தலைசுற்றும், உடல் நடுங்கும், தோள்பட்டைகளில் அதிகவலி உண்டாகும். உடல் முழுமையும் அதிகக் குடைச்சல் உண்டாகும். உடம்பு பூராவும் சில்லிட்டிருக்கும், மயிர்க்கால்களில் நீராகவாவது ரத்தமாகவாவது வெளிப்படும். காது கேளாது, மூக்கு நாற்றமறியாதபடி கெட்டுப்போகும், விழி சோறும். இவைகளே மண்டலி பதினாறின் பொதுக்கடி குணங்களாகும்.

மருத்துவம்: நிலக்கடம்புவேர், அவுரிவேர், பேய்த் தும்மட்டிவேர், சித்திரமூலவேர், கொடிக்கள்ளிவேர் என்னும் இவற்றுள் எதையாவது ஒன்றை வேளைக்கு 7 கிராம் எடுத்து தேங்காய்ப்பாலில் அரைத்து மேற்படி 18 வகை மண்டலிக் கடிகளுக்கும் இரண்டு வேளை கொடுக்கக் குணமாகும்.

குறிப்பு: மேற்கூறப்பெற்ற மருந்துடன் 10 மிளகு சேர்த்து அரைத்துக் கொடுக்க விரைவில் குணம் ஏற்படும்.

எலி

எலியில் பதினெட்டு வகையுண்டு

இதன் கடியால் நடுக்கலுடன் கூடிய சுரம் காயும், ஆயாசம் காணும், சுரம் விட்டு விட்டுக் காயும், தலைக்கனம், மூட்டுக்களில் வலி, வீக்கம் ஏற்படும். இதை ஆரம்பத்தி

லேயே கவனிக்காவிடில் இருமல், இரைப்பு, காசம் போன்ற நோய்களை வருவித்துத் தொண்டையில் சளிகட்டி எலியைப் போன்று குறு, குறுவென்னும் சப்தத்தையும் விளைவிக்கும்.

இந்நோய்க்கேற்ற மருத்துவம் செய்யாவிடில் உடல் இளைத்து சரீரம் கருத்துக் கடைசியில் மரணத்தை உண்டு பண்ணும்.

மருத்துவம்:

1. பதினெட்டு வகை எலிக்கடிக்கும் உருத்திராட்சக்காயைப் பசுவின் பாலில் அறைத்துக் கலக்கிக் கொடுக்கக் குணமாகும்.

2. திப்பிலி, மிளகு, புங்கன்வேர், சீந்தில் இலை இவற்றைத் தனி எடை எடுத்துச் சம கற்றாழைச் சாற்றில் அரைத்து விஷத்தின் வன்மைக்கேற்ப அளவிட்டு உட் கொள்ளக் குணமாகும்.

3. பாவட்டை இலையையும் அதன் பட்டையையும் சம அளவாக எடுத்துத் தூளாக்கிக் கொட்டைப் பாக்களவு நெய்யில் உட்கொள்ள குணமாகும்.

4. அவுரி அமுக்கிரா அல்லது அழிஞ்சிற்பட்டை இவைகளில் ஏதாவது ஒன்றை அரைத்து எலுமிச்சங்காய் அளவு வெந்நீரில் அல்லது பாலில் கலக்கிக் கொடுக்க தீரும். மூன்று நாட்கள் காலை, மாலை இருவேளையும் கொடுக்கவேண்டும்.

5. பலாசு இலை அல்லது பட்டையைக் கொட்டைப் பாக்கு அளவு அரைத்து வெண்ணெயில் கலந்து உட்கொள்ள விஷத்தால் உண்டாகிய ஈளை இருமல் தீரும்.

6. எலிக்கடி விஷத்திற்கு அப்பிரக பற்பத்தை இலைக்கள்ளிச்சாற்றில் மூன்று நாட்கள் கொடுக்கக் குணமாகும்.

7. கொல்லங் கோவைக்கிழங்கை 20 கிராம் எடுத்து வெள்ளாட்டுப்பாலில் நெகிழ அரைத்து மூன்று நாட்கள் காலையில் மட்டும் கொடுக்கக் குணமாகும்.

பத்தியம்: உப்பு, புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

குறிப்பு: பச்சைக் கிழங்காக இருத்தலே நலம்.

மூக்குரும்பு, பெருச்சாளி, அணில்

பொதுக்குணங்கள்: இவைகள் கடித்திட்டால், மரண முண்டாகாதெனினும் கொப்புளங்கள், வீக்கம், தடிப்பு, இருமல், புண், வாய் பேசக்கூடாமை, பேதி, உடல் இளைத்தல் ஆகிய குணங்களை உண்டாக்கும்.

மருத்துவம்: 1. இவ்வினங்களைப் போக்க அவுரி வேரை குடிநீர் விட்டுக் கொடுக்கக் குணமாகும்.

2. அப்பிரக பற்பத்தை மலை வேப்பிலைச்சாறு, அவுரிவேர்க் குடிநீர் அல்லது சீயக்காய், குடிநீர் இவைகள் ஏதாவது ஒன்றில் கொடுக்கக் குணமாகும்.

செய்யான்கடி

பொதுக்குறிகுணம்: விறுவிறுப்பு இருக்கும், வீக்கம் உண்டாகும், காய்ச்சல் வரும், சரீரத்தின் நிறம் கருத்துக் காணும், கண்கள் சிவக்கும், கை, கால் முழுமையும் கடுக்கும், மூர்ச்சையும் உண்டாகும்.

மருத்துவம்: 1. எருக்கம் [illegible] அரைத்துச் சுண்டைக்காய் அளவு பனை [illegible] வில் வைத்து உட்கொள்ள [illegible]

2. கடிவாயில் எட்டி விதையை அரைத்துக் கொதிக்க வைத்துப் பூச குணமாகும்.

3. அப்பிரக பற்பத்தை அரிசி எடையளவு பொற்றலைக் கரப்பான் சாற்றில் காலை, மாலை இருவேளை 5 நாட்கள் கொடுக்கச் சகலவிதமான செய்யான் கடிகளும் குணமாகும்.

பத்தியம்: நல்லெண்ணெய்,கடுகு, மஞ்சள், புளிநீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

பூரான்கடி

பூரானில் கரும்பூரான், வெண்பூரான், செம்பூரான், மண்பூரான், காட்டுப்பூரான், சிறுபூரான், (செவிப்பூரான்) பெரும்பூரான், சாணிப்பூரான், சடைப்பூரான் என ஒன்பது வகை உண்டு.

மருத்துவம்: 1. பூரான் கடிக்குப் பூரானின் நிறத்துடன் சரீரத்தில் தடிப்பு ஏற்பட்டால் ஆகாச கருடன் கிழங்கைச் சிறுசின்னி இலையின் சாற்றில் அரைத்து சுண்டைக்காய் அளவு காலை, மாலை இருவேளை 5 நாட்கள் உட்கொள்ளக் குணமாகும்.

2. மிளகை 10 வீதம் காலை, மாலை இருவேளை ஏழு நாட்கள் உட்கொள்ளப் பூரண குணமடையும்.

3. பூரான் கடித்தவுடன் கொட்டைப்பாக்களவு பனைவெல்லத்தை வெற்றிலையில் வைத்து மென்று தின்னக் குணம் ஏற்படும்.

மேற்கூறப்பெற்ற பத்தியத்தையே கொள்ளவேண்டும்.

சிலந்திப்பூச்சி

இதில் 37 வகைகள் உண்டெனக் கூறுவர்

1.வாதப்பிணியின் குணத்தை உண்டாக்கக் கூடியது ஏழுவகைச் சிலந்தி.

2. பித்தப்பிணியின் குணத்தை உண்டாக்கக் கூடியது ஏழுவகைச் சிலந்தி.

3. கபப்பிணியின் குணத்தை உண்டாக்கக் கூடியது ஏழுவகைச் சிலந்தி.

4. தொந்தப்பிணியின் குணத்தை உண்டாக்கக் கூடியது ஏழுவகைச் சிலந்தி.

5. இவைகள் நீங்க வேறு 9 வகை சிலந்திகள் உண்டு என்றும் கூறுவர்.

வாதச்சிலந்திப் பூச்சிகளின் பொதுக்குணம்

இவைகள் வெண்மை, செம்மை நிறத்தையும் ஆசனத்தில் மெல்லிய நூலை உள்ளனவாகவும் இருக்கும். இவை கடிப்பதால் வாதநோயின் குணங்களை உண்டாக்கும்.

பித்த சிலந்திப் பூச்சிகளின் பொதுக்குணம்

இவை கருமையும், செம்மையும், பசுமையும் கலந்த நிறத்துடன் வாயில் அனலையும், ஆசனத்தில் தாமரை நூலைப்போல் உள்ளனவாகவும் இருக்கும்.

இவைகள் கடிப்பதால் பித்தப் பிணியின் குணங்களைப் பிறப்பிக்கும்.

கபச்சிலந்திப் பூச்சிகளின் பொதுக்குணம்

இவை வெண்மை நிறத்தையும், வயிற்றின் பாகம் நீல நிறத்தையும், ஆசனத்தில் சிறந்த நூலையும் உள்ளனவாக இருக்கும்.

இவை கடிப்பதால் கபநோயின் குணங்களைத் தோற்றுவிக்கும்.

தொந்த தோஷச் சிலந்திப் பூச்சிகளின் பொதுக்குணம்

இவை ஆசனத்தில் பற்பல நிறமுடைய நூலை யுடையனவாக இருக்கும். கடித்தால் தீ சுட்டதைப்போல் எரிச்சலையும், முக்குற்றக் குணங்களையும் உண்டாக்கும்.

மற்றைய ஒன்பது வகை சிலந்திப்பூச்சிகளின் விஷமும் இவை புணரும் காலத்தில் தெறிக்கின்ற சுக்கிலம் பட்டவிடம் எல்லாம் விரைவில் கொப்புளங்களை உண்டாக்கும்.

சிலந்திப் பூச்சிகளிடமிருந்து உண்டாகும் விஷம் எண்வகைப்படும்

1. மூச்சு: இதன் மூச்சு நமது உடலில் பட்டால் சுரம், தாகம் இவைகளை உண்டாக்கும்.

2. பல்: இதன் பல்பட்ட இடத்தில் ரணத்தையும், உடல் வீக்கம், வியர்வை, தாகம், எரிச்சல் முதலிய குணங்களையும் உண்டாக்கும்.

3. மலம்: சிலந்தியின் மலம் பட்ட இடத்தில் இலுப்பைப் பழ நிறத்தையுடைய புண்ணும், அதில் துர்வாடையும், எரிச்சலும் தினவும் உண்டாகும்.

4. மூத்திரம்: மூத்திரம் பட்ட இடத்தில் புண் உண்டாகும். இதன் நடுப்பாகம் கருத்தும், உயர்ந்தும், சுற்றிலும் வாடியும், மலர்ந்தும் இருக்கும். கெட்ட நாற்றமும், எரிச்சலும் இடைவிடாதிருக்கும்.

5. சுக்கிலம் பட்ட இடத்தில் குத்தலும், தினவும் உண்டாகும். கடினமான கொப்புளங்கள் உண்டாகிக் குத்தல் காணும்.

6. இதன் வாய்பட்ட இடத்தில் சிவந்த புண்கள் உண்டாகிக் குத்தலும், வலியும் இருக்கும்.

7. இதன் வாய் நீர்பட்ட இடத்தில் புங்கன் பூவையொத்த புண்கள் உண்டாகி அதன் ஓரத்தில் பூச்சி ஊறுவது போன்றுள்ள உணர்ச்சியும், எரிச்சலும், குத்தலும் உண்டாகும்.

8. இதன் பரிசம்பட்ட மாத்திரத்தில் முற்கூறிய சகல குணங்களும் எளிதில் உண்டாகும்.

சிலந்திப் பூச்சியின் கடிக்கு உடனடியாக தக்க சிகிச்சை செய்யாவிடில் சரீரத்திற்குப் பலவித கெடுதிகளை உண்டாக்கும்.

இப்பூச்சிகளின் விஷம் ஏறினால் கடிவாயில் எழுகின்ற புண்களில் கொப்புளங்களாகவும், வட்டமாகவும், கருமை, செம்மை, வெண்மை, பசுமை, நீல நிறங்களாகவும், மிருதுவாகவும் சில கடினமாகவும் இருக்கும்.

மருத்துவம்:

1. மேற்கூறப்பெற்ற எந்தவகைப் பூச்சி கடித்தாலும் சுண்ணாம்பையும், புளியையும் ஒரே அளவாகச் சேர்த்துக் கடிவாயில் உடனடியாக வைத்துத் தேய்க்கக் குணமாகும்.

2. பூவரசம் பழுப்பு, ஆவாரயிலை, தாளியிலை இவைகளில் ஏதாவது ஒன்றைக் காடிநீர் விட்டு அரைத்தாவது அல்லது அவித்தாவது கடிவாயில் வைத்துக்கட்ட மூன்று தினங்களில் குணம் ஏற்படும்.

3. புலிநகக் கொன்றையின் விதைகளில் 10 எடுத்து காலை, மாலை இருவேளையும் வெற்றிலையில் வைத்து மென்று தின்னச்சொல்ல மூன்று தினங்களில் குணம் ஏற்படும்.

4. அவுரிவேர் 35 கிராம், மிளகு 9 கிராம் இரண்டையும் நசுக்கி 1 லிட்டர் தண்ணீர் விட்டு எட்டொன்றாகக் காய்ச்சி வடிகட்டி நாளொன்றுக்கு மூன்று வேளை வீதம் மூன்று தினங்களுக்குக் கொடுக்கக் குணம் ஏற்படும்.

5. மிளகை வேளைக்கு 10 வீதம் காலை, மாலை இருவேளையாக 15 தினங்களுக்கு இடைவிடாது உட் கொண்டு வந்தால் பூரண குணம் கிடைக்கும்.

ஓணான்கடி

ஓணான் கடியில் மூன்றாம் பிறையை ஒத்த காயம் ஏற்படும். கடிவாய் வீக்கமுற்றுக் குத்தல், நமைச்சல், வலி முதலியவை ஏற்பட்டுக் களைப்பும், பேதியும் உண்டாகும்.

மருத்துவம்: இதற்கு மூங்கில் குருத்துச்சாறு 100 மில்லி எடுத்து அதில் 9 கிராம் மிளகுப்பொடி கலந்து காலை, மாலை இருவேளை 5நாட்கள் கொடுக்க விஷம் நீங்கிக் குணம் ஏற்படும்.

காயத்திற்கு ஊமத்தன் இலை அல்லது இலைக்கள்ளி இலை ஏதாவது ஒன்றை அனலில் வாட்டி வைத்துக்கட்டக் குணமாகும்.

தவளைக்கடி

தவளைக்கடியினால் அதிகப்படியான சோம்பல், தினவு, நித்திரை, சரீரம் முழுவதும் சொறி முதலியன உண்டாகும்.

மருத்துவம்: அகத்திக்கீரைச் சாற்றில் 10 கிராம் மிளகுத் தூள் சேர்த்து காலை, மாலை இருவேளை வீதம் மூன்று தினங்கள் உட்கொள்ளக் குணமாகும்.

பத்தியம்: புளி, உப்பு நல்லெண்ணெய், கடுகு, மஞ்சள் சேர்க்கக்கூடாது.

பல்லிக்கடி

பல்லியானது கடித்தால் சரீரத்தில் வியர்வை, வீக்கம், கடிவாயில் எரிச்சல் ஏற்பட்டு சிறு சிறு கொப்புளங்கள் உண்டாகிச் சங்கடத்தை உண்டாக்கும்.

இதில் ஏற்படும் நீர், பட்ட இடமெல்லாம் கொப்புளங்களை உண்டாக்கும்.

மருத்துவம்: இதன் கடி விஷம் நீங்கப் பாகலிலைச் சாறும், பசுவின்பாலும், சமன் சேர்த்து 3 நாட்கள் உட்கொள்ளக் குணமாகும்.

கடிவாயில் நிலவேம்பு இலையை அறைத்துச் சிறிது சூடுபடுத்தித் தடவி வர வேண்டும்.

வண்டுகடி

இவற்றில் நீர் வண்டு, மாவண்டு, சிதள் வண்டு, சொறி வண்டு என 120 வகை உண்டு. இது கடித்தால் பலவிதக் குறிகுணங்கள் உண்டாயினும் பொதுவாக வீக்கம், தினவு, வலி, உடல் தடிப்பு, கருநிற, செந்நிறப் படைகள் போன்றும் உண்டாகி நுரையுடன் கூடிய பேதியையும் உண்டாக்கும்.

மருத்துவம்:

1. வண்டுகொல்லி மரப்பட்டையை அரைத்துச் சுண்டைக்காய் அளவு எடுத்துத் தயிரில் கலந்து காலை, மாலை இருவேளை 3 நாட்கள் கொடுக்கக் குணமாகும்.

2. ஆடு தீண்டாப்பாலை வேரை அரைத்து சுண்டைக் காய் அளவு பாலில் கலந்து கொடுக்கக் குணமாகும்.

3. கடிவாயிலும், தழும்புகளிலும் வண்டுகொல்லி இலையைக் காடிவிட்டு அரைத்து மேலே பூசி வரக் குணமாகும்.

4. தவளைக்கடியில் கூறியுள்ள அகத்தி இலைச் சூரணத்தை 5 தினங்கள் காலை, மாலை இருவேளை உட்கொள்ளக் குணமாகும்.

பத்தியம்: நல்லெண்ணெய், கடுகு, மஞ்சள், புளிநீக்கி உணவு உட்கொள்ளவும்.

மீன்கடி

விஷமீன்கள் கடித்தால் புண் ஏற்பட்ட, வீங்கி வலி உண்டாகும்.

மருத்துவம்:

1. நிலவேம்பு	10 கிராம்
2. மிளகு	3½ கிராம்
3. பூண்டுப்பல்	2 கிராம்

இவை மூன்றையும் நன்கு நெகிழ அரைத்து மூன்று பாகம் செய்து நாளொன்றுக்கு மூன்று வேளை வீதம் மூன்று நாட்கள் கொடுக்கக் குணமாகும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

அரணை நக்கலும், அதற்குரிய மருத்துவமும்

அரணை நக்கினால் உடல் முழுவதும் நடுக்கல், வாயில் வெண்மையான நுரை தள்ளல், உடல் முழுவதும் எரிச்சல், நாக்குத் தடித்தல், வாய் குழறிப் பேசுதல் முதலியவை ஏற்பட்டுப் பல்கிட்டிவிடும்.

மருத்துவம்:

1. சுக்கு, வசம்பு, மிளகு மூன்றையும் தனித்தனியே சுட்டுச்சாம்பலாக்கி மூன்று சாம்பலும் ஒரே அளவாக எடுத்துச் சேர்த்து தேக்கரண்டி அளவு காலை, மாலை இருவேளையும் மூன்று நாட்கள் கொடுக்கக் குணமாகும்.

2. அவுரி வேரை முறைப்படி குடிநீரிட்டு கொடுக்கக் குணமாகும்.

3. சாரணைவேரை இடித்துப் பிடிந்த சாற்றை உடலில் பூசினாலும், பனங்குருத்தை வாயில் வைத்து மென்று சாற்றை விழுங்கினாலும் அரணை நக்கலால் உண்டாகும் குற்றங்களெல்லாம் குணமடையும்.

குரங்குக்கடி

குரங்கைப்போல் சேட்டை செய்தல், ஆடல், பாடல், தாவல், குதித்தல், கூச்சலிடல், சுரமடித்தல் முதலியவை உண்டாகும்.

மருத்துவம்:

1. குரங்கு கடித்தவுடன் இஞ்சியின் மேல் தோலைச்சீவி, அரைத்து நீரில் கலக்கி வடிகட்டி 100 மில்லி காலை, மாலை இருவேளை மூன்று தினங்கள் கொடுக்கக் குரங்குக்கடி நஞ்சு விலகும்.

2. நிலப்பனையின் இலை, கொள்ளுக்காய் வேளை, எருக்கம்பூ, இலவமரத்தின் வேர் இவைகளை நன்றாக இடித்து இருப்புச் சட்டியிலிட்டு வேப்பெண்ணெய்விட்டு வதக்கிக் கடிவாயில் ஒற்றடம் கொடுக்கக் குணமாகும்.

பூனைக்கடி

பூனைக்கடியினால் இரைப்பு, மூர்ச்சை, கோழை கட்டுதல், சுரம் அடித்தல், பூனை போல் கத்தல், சிறல் முதலியவைகள் உண்டாகும். இக்கடிக்கு உடனடியாக மருத்துவம் செய்யாவிடில் சில காலங்கழித்து ஈளை, இருமல், காசம் போன்ற நோய்கள் உண்டாகும்.

குடிப்பதற்கு வைத்திருக்கும் காய்ச்சிய பாலைப் பூனை குடித்தப்பிறகு மீதமுள்ள பாலைக் குழந்தைகள் குடித்தால் ஈளை இருமல் உண்டாகும். உட்கொள்வதற்கு வைத்திருக்கும் உணவுப் பொருள்களைப் பூனை உட் கொண்டு அதை நாம் உட்கொண்டாலும் மேற்கூறிய நோய்கள் உண்டாகும்.

மருத்துவம்: குப்பைமேனிவேர், பட்டை இவை களைப் பசும்பால் விட்டு நன்கு நெகிழ அரைத்து

புன்னைக்காயளவு காலை, மாலை இருவேளையாக மூன்று நாட்கள் உட்கொள்ள குணமாகும்.

பத்தியம்:

இச்சாப்பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

மேற்கூறியவாறு மூன்று முறை மருந்து உட்கொள்ள குணமேற்படும். மருந்து முடிந்தவுடன் பத்தியத்தை முறித்துக் கொள்வதே சாலச்சிறந்ததாகும்.

அவுரி வேர்ப்பட்டையைக் காடி அல்லது பழச்சாறு விட்டு அரைத்து கடிவாயில் தடவிவர பூனைக்கடி நஞ்சு தீரும்.

நாய்க்கடி

நாய்க்கடியினால் வாயினின்று தண்ணீர் மோர் போல வழியும். கூச்சலிடுகிற சப்தம், வியர்வை விட்டு விட்டுத் தெளிவாக வெளிப்படல் மயக்கம், வாயில் நுரை தள்ளல் போன்ற குணங்கள் ஏற்பட்டு கடைசியில் நாய்க் குரைத்தாற்போல் கத்தல் போன்றவைகள் ஏற்படும்.

மருத்துவம்:

பலகரைப் பற்பத்துடன் நாயுருவி இலைச்சாற்றை வேளைக்கு 200 மில்லியாக நாலொன்றுக்கு இரண்டுவேளை வீதம் மூன்று நாட்கள் கொடுக்கக் குணம் ஆகும்.

பத்தியம்:

மருந்து உட்கொள்ளும் மூன்று நாட்களும் உப்பில்லாப் பத்தியம் வைத்து மறு பத்தியமாக மூன்று நாட்களும் வறுத்த உப்பைக் கூட்டி ஏழாவது நாள் ஓமம் தேய்த்து வெந்நீரில் குளிக்கச் செய்யவேண்டும்.

கடிவாயிலும் மற்ற பாகங்களிலும் நாயுருவி வேரை அரைத்துப் பூசவேண்டும்.

2. நாய் கடித்தவுடன் தும்பைச்சாறு 100 மில்லி சேர்த்து மூன்று நாட்களுக்கு காலையில் மட்டும் ஒரே வேளை கொடுத்து மேற்கூறப்பெற்ற பத்தியத்தை மேற்கொள்ள வேண்டும்.

வெறிநாய்க் கடிக்கு மருந்து

1. கற்றாழை உப்பு, நாயுருவி உப்பு இரண்டையும் சமமாக எடுத்துக் குழியம்மியிலிட்டு நன்கு அரைத்து மூன்று நாட்களுக்குக் கடிவாயில் வைத்துக் கட்ட விஷம் நீங்கும்.

2. பேயத்தி வேர், ஆலம் வேர், வேப்பிலை இம்மூன்றையும் வகைக்கு 35 கிராம் எடுத்து நன்றாக இடித்துச் சூரணமாக்கி 2 லிட்டர் கழுநீரில் கலந்து கொதிக்க வைத்துக் குழம்புப்பதனமானதும் எடுத்து ஏழுநாட்கள் காலை, மாலை இருவேளை உட்கொள்ள வேண்டும்.

மேலும் விஷ உபாதைக்குத் தக்கவாறு பேதி மருந்தைச் சாப்பிடவும். இவ்விதம் செய்ய மிகுதியான அளவு கூலங் கிட்டும்.

தேள் கடி

தேள் பன்னிரண்டு வகைப்படும்

அவற்றில் நட்டுவாக்களி, சித்திரத்தேள், சினைத்தேள் ஆகியவை அதிக விஷமுள்ளதாக இருக்கும்.

சில தேள்களுக்கு இரண்டு வால்கள் உண்டு. ஒவ்வொரு வாலிலும் கொடுக்குகள் தனிப்பட இருக்கும்.

தேள் கொட்டினால் கொட்டிய இடத்தில் வீக்கம், வியர்வை, சிவத்தல், எரிச்சல், கடுத்தல், விறுவிறுத்தல், வலித்தல், கடிவாயிலிருந்து மேலேறுவது போல ஒரு

பெருந்துன்பத்தையும் உண்டுபண்ணும். இதனால் உடலில் வியர்வை, மயக்கம், குரக்குவலி, வாந்தி, மூர்ச்சை, உடல் சில்லிடுதல், மாரடைத்தல் என்னும் பல குறிகுணங் களுண்டாகும்.

மருத்துவம்:

1. காட்டாமணக்கின் (ஆதொளை) கொழுந்தை 5 அல்லது 6 எடுத்து வெற்றிலையில் வைத்து மென்று விழுங்க கடிவாயிற்கு விஷம் இறங்கிவிடும்.

மேற்படி கொழுந்தும் சிறிது சுண்ணாம்பும் சேர்த்து கசக்கிக் கொட்டுவாயில் வைத்துச் சிறிது அனல் காண்பிக்க கொட்டுவாயை விட்டு விஷம் இறங்கிவிடும்.

2. கடல்நீரை 5 அல்லது 6 முறை வடிகட்டி ஒரு பாட்டிலில் வைத்துக்கொண்டு தேள் கொட்டியவுடன் கொட்டிய பாகம் வலப்புறமாக இருந்தால் இடது காதிலும் இடதுபுறமாக இருந்தால் வலது காதிலும் இரண்டு மூன்று துளிகள் விட்டு கண்களிலும் இரண்டு துளி விட தேள் விஷம் உடனடியாகக் குணமாகும்.

3. கொல்லன் கோவைக்கிழங்கை அரைத்து புன்னைக்காய் அளவு உள்ளுக்குக் கொடுக்கக் குணமாகும்.

4. வெள்ளைப்பாஷாணத்தைக் கொட்டு வாயில் வைத்து சிறிது தண்ணீர் விட உடன் விஷத்தை இறக்கி விடும்.

நட்டுவாக்களி கடிக்கு மருந்து

1. வேலிப்பருத்தி, ஆடுதீண்டாப்பாளை இவை இரண்டையும் தூள்செய்து வைத்துக்கொண்டு (சமனெடை) வெருகடியளவு வெந்நீரில் உட்கொள்ளத்தீரும்.

2. எட்டிவேர்ப் பட்டையைக் கழற்சிக்காய் பிரமாணம் அரைத்து வெந்நீரில் கரைத்துக் கொடுக்கக் குணமாகும்.

தீராத விஷங்களெல்லாம் தீருவதற்கு விஷக்குழம்பு

1. கருநாவி	9 கிராம்
2. வெண்காரம்	17½ கிராம்
3. இந்துப்பு	,,
4. நீர்விடம்	,,
5. கருஞ்சீரகம்	,,
6. கெந்தகம்	,,
7. இரசம்	,,
8. மனோசிலை	,,
9. நேர்வாளம்	,,

மேற்கூறப்பெற்ற மருந்துகளை முறைப்படி சுத்தி செய்து குழியம்மியிலிட்டுக் கம்பிச்சாரம் 9 கிராம் சேர்த்து உத்தாமணிச்சாற்றாலும், தேங்காய்ப் பாலாலும் தனித்தனியே 6 மணி நேரம் அரைத்து மைபோல் ஆனபின் சிரட்டையுக் கரியும், பனைவெல்லமும் போதிய அளவு சேர்த்து மெழுகு பதத்தில் அரைத்து வழித்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: குன்றி எடை.

அனுபானம்: பனைவெல்லம், சர்க்கரை.

தீரும் நோய்கள்: பாம்புகடி, செவ்வட்டைக்கடி, பூரான்கடி, வண்டுகடி, ஓந்தி, தவளை முதலிய விடங்களையும், சில்விடங்களையும் குணப்படுத்தும்.

விஷ ராஜாங்க மை

1. மகிழம்வித்து	100 மில்லி
2. அழிஞ்சில் வித்து	,,
3. சுத்தித்த நேர்வாளப்பருப்பு	,,

4. வெண்குன்றிப்பருப்பு	100 மில்லி
5. நீர்விடம்	50 கிராம்
6. பால்துத்தம்	,,
7. துருசு	,,
8. வங்காளப்பச்சை	,,
9. பொன்னரிதாரம்	50 கிராம்
10. இரசம்	,,
11. கௌரிபாடாணம்	,,
12. வெள்ளைப்பாடாணம்	,,
13. தேன்மெழுகு	,,
14. ஜாதிலிங்கம்	,,
15. கருநாவி	,,
16. கோழித்தலை கந்தகம்	,,
17. தவளைப்பாடாணம்	,,
18. குன்றிமணிப் பருப்பு	100 மில்லி
19. தில்லம் வித்து	,,

மேற்கூறப்பெற்ற வித்துகளையும், பாடாணங்களையும் முறைப்படி சுத்திசெய்து எடுத்து ஒன்றன்பின் ஒன்றாகக் குழியம்மியிலிட்டு போதிய அளவு பழச்சாறு விட்டு 15 நாட்கள் அரைத்து, அஞ்சன மைபோல் ஆக்கி வழித்து வாய் குறுகிய ஒரு பீங்கான் பாத்திரத்தில் இட்டு தேனடையைக் கொண்டு மூடி 48 நாட்கள் பத்திரப்படுத்தவும். பிறகு மருந்தை எடுத்து பாட்டிலில் பத்திரப்படுத்தவும்.

அளவு: பணவெடை.

அனுபானம்: பனைவெல்லம்.

தீரும் நோய்கள்: சகலவிதமான பாம்பு கடிகள், பொல்லாதெனக் கூறப்படும் விரியன் பாம்புக்கடிக்கும், பூரான்கடி, வண்டுகடி, நீர்வண்டுகடி, செவ்வட்டைக்கடி, எலிக்கடி, பூனைக்கடி, வெறிநாய்க்கடி, நரிக்கடி போன்ற சர்வ விடக்கடிகளும் அக்கடிகளால் ஏற்படும் பெருநோய்களும் குணமாகும்.

பத்தியம்: இச்சா பத்தியம் மேற்கொள்ளவேண்டும்.

குறிப்பு: விடம் தலைக்கேறி மயக்கமுற்றவர்களுக்குத் தலை உச்சியைக் கீறி பணவெடை அளவு மருந்தை வைத்து நன்றாகத் தேய்க்க விடம் நீங்கி மூர்ச்சை உண்டாகும்.

சிவானந்த குருவின் தாள்கள்
சிந்தையில் சிரத்திற் கொண்டு
அவாவுற, உலக மெல்லாம்
அறிந்துணர்ந் துய்தி கொள்ள
தவாநலச் செளரி ராசன்
தமிழிலே யாத்த திந்தச்
சுவானு பவத்தின் சித்த
மருத்துவச் சுடரென் றாலே.

இந்நூல் தொகுப்பிற்கு அடிப்படையாகிய நூல்கள்

1. சரபேந்திர வைத்திய நூல்கள்
2. வைத்திய ராஜசிந்தாமணி - 2 பாகங்கள்
3. திருக்குறள்
4. தேரையர் சேகரப்பா
5. தேரையர் தைல வர்க்க சுருக்கம்
6. தேரையர் நீர்க்குறி, நெய்க்குறி
7. அகத்தியர் - 12,000
8. சீவரட்சாமிர்தம்
9. யூகி சிந்தாமணி
10. தெட்சணாமூர்த்தி திருமந்திரம்
11. யூகி முனி வைத்திய வாத காவியம்
12. பலதிரட்டு சூத்திரம்
13. கருவூரார் பலதிரட்டு - 200

14 வைத்திய சிந்தாமணி

15. திருவள்ளவர் நவரத்தின சிந்தாமணி
16. பதினெண்சித்தர் இராஜ வைத்திய போதினி
17. அனுபவ வைத்திய பிரம்ம ரகசியம்
18. அனுபவ வைத்திய சிவரகசியம்
19. அகத்தியர் வைசூரி நூல்
20. பதார்த்தகுண சிந்தாமணி
21. வைத்திய அட்டவணை என்னும்தலைப்பி லுள்ள ஓலைச்சுவடிகள்-200
22. சிமிட்டு ரத்தினச் சுருக்கம்.
23. நஞ்சு நூல்
24. அகத்தியர் விஷ வைத்திய சிந்தாமணி

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்

மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்.